முரசொலி

பொங்கல் மலர், 1956.

2860



Santhi Arts

ஆசிரியர்







ரூ-2/

சித்திரைத்திங்களில்
சிந்தைமணக்கவரும் செந்தமிழ்ப் பூக்காடு!



சிவகாமி பிக்சர்ஸ்
தயாரிக்கும்

புதுமைப்பித்தன்



சூழ்ச்சி, ஆணவம், சுழன்றடிக்கும் அதிகாரச் சூறுவளி –
அனைத்தையும் சூழ்ந்தெதிர்க்கும் வீரனின் வரலாறு!

கதை வசனம்
மு.கருணாநிதி

டைரக்ஷன்
T.R.ராமண்ணா

35606

★

நேயர்களுக்கு எமது
பொங்கல் வாழ்த்துக்கள்.

★



ARR

நைஸ் சீவல்

H.O.செட்டிப்புதுத் தெரு, கும்பகோணம்

சலவைக்கு புகழ் பெற்றது...

பவர் லைட் சோப்



உரிமையாளர்: N.S.பண்டரியா பிள்ளை.

பவர் லைட் சோப் பாக்டரி,
கும்பகோணம்

சேகர்ஸ் கலா தியேட்டர்ஸ் அளிக்கும் திரை ஓவியம்

"தீர்ப்பு"

(JUDGEMENT)

தமிழ்
கன்னடம்



கதை-வசனம் பேரை S.G.நடராஜ்

விபரங்களுக்கு: 67, ஐகிரியா காலனி, சென்னை-24.

சிந்தை—அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடச் செய்யும் சந்தனக் காடு



நறுமண உலகின் மூவேந்தர்கள்

K.T.R

சேரன்
சோழன்
பாண்டியன்

ஜவ்வாஜி பத்திகள்

K.T.R

வாசனை திரவியசாலை ...விஜயபுரம்... தஞ்சை ஜில்லா

வின்சன் பிராசஸ்

ஐஸர்

ஆப்டோன் கலர் பிளாக் செய்பவர்கள்

187, மவுண்ட் ரோடு. மதராஸ்-2

எழிலோவியமாக உங்கள் இல்லம் விளங்க எங்கள் இதய பூர்வமான இன்பநாள் வாழ்த்துக்கள்!

PHONE: 3085.


SVA
TRADE MARK

எஸ்.வி. அம்பாள் & கோ

உரிமையாளர்
எஸ்.எஸ்.பி.லிங்கம்.

ஸ்பிரிட்
&
வர்ண வியாபாரி

319 / 322 ராசப்ப செட்டி தெரு..... சென்னை 3


இப்படை தோற்கின்
எப்படை ஜெயிக்கும்?
விசல்லப்பன்

பொங்கலோ பொங்கல்!

என் அருமருந்தன்ன அண்ணனின் வாழ்த்துடன் ஆரம்ப மாகும், "முரசொலி" பொங்கல் மலர் இதோ உங்கள் கரங்களை அலங்கரிக்கிறது.

வாழை, மா, பலா, எனும் முக்கனி. இயல், இசை, கூத்து எனும் முத்தமிழ். புவி, வில், கயல் எனும் முக்கொடி. முறையே; உண்ண, உணர, உணர்ச்சிபெறப் பயன்பட்ட பழைய தமிழகத்துச் சொத்துக்களாம்!

முகப்பிலே நீங்கள் காணும் ஓவியம், அன்றொரு நாள் அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையோடு தென்புலத்து மன்னர்கள் அரசோச்சிய காலையில் அவர்தம் கோட்டை முகப்பிலே கொட்டு முரசோடு பட்டொளி சிந்திப் பறந்திருந்த கொடிகளைச் சித்தரிக்கிறது.

வாழை, மா, பலா குலுங்கும் வளமிகு கனிமரச் சோலை களின் ஓரம் பேரறிஞர் பனுவல் யாத்து இயலை ஓம்பினர்! நயன அசைவால், நளின நெளிவால், பேரழகிகள் அளிக் கும் நாடகத் தமிழுக்கு—எழிலிசை சேர்க்கும் குழலோசைக் குமரர்கள், குழலிசை அருகமைத்து அந்த மழலை இனிமையைக் குழல் மூலம் கொட்ட முயன்றனர்! இத்தகு இன்பக் காட் சிகள், இயற்கை வளங்கள், இனப் பெருமை சொல்லும் கொடிகள் — தென்னகத்திற்குப் பொலிவும் வலிவும் தந்து புகழ்ச் சிந்து பாடின என்பதையே முகப்போவியமாகத் தரு கிறது "முரசொலி!"

கனிமரச் சோலைகள், கடற் பொங்கலுக்கும், காற்றுப் பொங்க லுக்கும் இரையாகி, இயற்கைப் பொலிவிழந்து கிடக்கும் பல பகுதிகளை இந்தப் பொங்கல் நாளிலே நாம் மறந்தோமில்லை! புயலும் பெரு வெள்ளமும், பழமுதிர் சோலைகளில் மட்டுமல்ல; பாட்டாளிகளின் நெஞ்சிலும், அவர்தம் கண்களிலும்! அந்த வெள்ளமும் புயலும் விளைத்த நாசங்கள் துடைக்கப்படுவதற்கு முன்பு, பொங்கல் திருநாள் வந்துற்றது; வறண்ட நாவில் ஒரு துளி தேன் விழுந்திடும் பான்மை போல!

முக்கனிச் சோலைகளை மட்டுமின்றி—முத்தமிழின் பெருமையை யும் அழித்திடும் புயலொன்று தமிழகத்திலே வீசியது! அந்தப் புயல் வீசி ஆண்டு பல ஆயிடினும் வாடை ஓய்ந்தபாடில்லை! வாட்டம் தவிர்ந்த நிலையில்லை! ஆரியப் புயல் அதன் பேர்! முக்கொடி கண்டோரை முப்புரிக் கொடியோர் முழந்தாளிட்டு வணங்கிட வைத்த பெரும் புயல் அது!

அந்தப் புயல் நிவாரணப் பணியிலேதான் முப்பதாண்டுக்கு மேலாகத் திராவிடர் இயக்கம் இடையருது ஈடுபட்டு நிற்கிறது. அந்த ஏற்றமிகு பணிக்குப் பயன்படும் கருவிகளிலே "முரசொலி" யும் ஒன்று என நீங்கள் எண்ணும்போது புதிய ஊக்கம் சூழ்கிறது, பூரிப்பு மலர்கிறது. அதன் விளைவுதான் இந்தப் பொங்கல் மலர்! சென்ற ஆண்டு மலர் கண்டு மகிழ்ந்தீர்கள்! நானே அந்த மகிழ்ச்சியிலே பங்கு கொள்ள இயலாது மருத்துவ மனையிலே தூக்கு மேடைக் கைதி போலத் துடித்துக் கொண்டிருந்தேன். இந்த ஆண்டு—இதோ...இப்போதே, என்னருமைச் சகோதரர்களே! உங்கள் மத்தியிலே அமர்ந்து பொங்கல் விருந்து உண்ணு கிறேன்.



தமிழோடு பிறந்தேன்—திராவிடரோடு பிறந்தேன்—திராவிட தேசத்திலே பிறந்தேன்—என்று பெருமை கொள்ளும் விடுதலை வீரர்களுக்கு மத்தியிலே உலவுவதும், உழைத்திடுவதும் யாருக்கும் கிடைக்க வொண்ணாப் பேறன்றோ! வாழ்த்து விருந்துகளே இந்த நன்னாளில் அளிக்கும் உங்கட்கு, அறிஞர் பல்லோர் தந்திடும் கருத்து விருந்தினைப் பரிமாறுகிறேன் மலர் மூலமாக! முத்தான தமிழிலே சத்தான கருத்துக்களே அள்ளி அள்ளித் தந்திருக்கின்றனர் அருமை நண்பர்கள்! அதோடு ஒன்று; தென்னவன் காதை, பரதாயணம், கிரேக்கப் பெரியார், அரும்பு—எனும் நான்கு எழுத்துக் குவியல்களே உங்களுக்குப் படைத்திருக்கிறேன். அவைகளிலே அரும்பு, அனைவருக்கும் மனநிறைவூட்டும் கற்பனைச் சித்திரம். கிரேக்கப் பெரியாரும், ஏறத்தாழ அப்படித்தான்! எதிர்ப்புக் குரல் எங்கேயோ ஒரு மூலையில் கிளம்பலாம்! பரதாயணம், தென்னவன் காதை யிரண்டும்—பதை பதைப்பூட்டும் பக்தர்களுக்கு; பண்டிதர்களுக்கு! ராமகாதையை மாற்றிவிட்டான் என்பர்! அவர் கட்கு ஆச்சாரியாரின் 'மணிவாசகத்'தை நினைவு படுத்துவது ஏற்புடைத்து என நம்புகின்றேன்.

"சீதையை ராமன், கையினால் தூக்கிக் சென்றான் என்று வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. கையால் தொடாமல் பூமியோடு பெயர்த்துச் சென்றான் என்று கம்பர் கூறுகிறார். வடக்கே அனைவரும் பக்தியோடு படிக்கும் துளசி ராமாயணத்தில், ராவணன் வரும்போது உண்மை சீதை மறைந்து மாயா சீதை தோன்றவே, ராவணன் மாயா சீதையைத்தான் தூக்கிச் சென்றான் என்று கூறப்படுகிறது. **காலத்துக்குத் தக்கபடி ஜனங்களின் உணர்ச்சி பாவத்திற்கு தக்கவாறு விஷயங்களே மாற்ற வேண்டியதுதான் கவிஞனின் சக்தி.**"

(கம்பர் விழாவில் ராஜாஜி பேச்சு—சுதேசமித்திரன்—நவம்பர் 7, 1955.)

ஆச்சாரியாரின் கருத்துப்படி, காலத்துக்குத் தக்கவாறு, மக்களின் உணர்ச்சி பாவத்திற்குத் தக்கவாறு, விஷயங்களே மாற்றியிருக்கிறேன். இனி யாரும் வெகுண்டெழத் தேவையில்லை என்பதற்கு மேற்காட்டிய உரையே சாலுமென எண்ணுகிறேன். இனி, நீங்கள் மலர் சுவைத்து, மதுமாந்தி மகிழும் வண்டாக மாறலாம்! ஆனால் வண்டு நிலை என்றுங் கொண்டுவிடாமல், கற்கண்டு நிகர் தமிழ்காக்க.....வடவர் சொற்கண்டு வாழும் திராவிடம் மீட்க..... படைகொண்டு நிற்கும் விடுதலை இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வீரர் வரிசையிலே உங்கள் பெயரையும் பொன்னெழுத்துக்களால் பொறிப்பதற்கு இந்தப் பொங்கல் நன்னாளிலே உறுதி எடுத்துக்கொள்வீர்களாக!

திருநாள் எடுக்கும் அனைவருக்கும், தேன் மணக்கும் இந்த மலரையும், நெஞ்சார்ந்த வாழ்த்தையும்—உரிமை யாக்குகிறேன்; **முரசொலி அலுவலகத்தில் புன்முறுவல் பூத்தவாறு சலியா துழைத்திடும் அன்புச் சகோதரர்கள் அனைவரின் சார்பாக!**

வாழ்க தமிழ்!
வளர்க **இன** உணர்ச்சி!

அன்பன்,

COMPLIMENTARY





மேலோ தீரா

தமிழகத்துக்குக் களிப்பூட்டி, கருத்தூட்டும் பொங்கற் புதுநாள் விழாவில், தமிழரின் பண்பாடு மிளிரும் வகையில், கருத்துப் பொங்கலிட்டு வழங்கும் கவர்ச்சிகரமான ஏடுகளை இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்தி வருகின்றனர், மக்களும் மகிழ்ச்சிப் பெருக்குடன் அவ்விருந்தினைப் பெற்றுச் சுவையும் பயனும் மிகுதியும் பெறுகின்றனர். ''முரசொலி'' இம்முயற்சியில், மிக்க வளர்ச்சி காட்டி, கவர்ச்சியுடன் சென்ற ஆண்டிலே திகழ்ந்தது கண்டு பெரு மகிழ்வெய்திய நம் இயக்கத் தோழர்கள், பிற இயக்கத்தார்—குறிப்பாக நமது கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்து, அப் புதைகுழி மீதே தமது ஆதிக்க பீடத்தை அமைத்துக் கொண்டு அரசோச்ச வேண்டும் என்று இன்னமும் எண்ணிக் கொண்டு கிடப்போர் நடத்திக் காட்டும் எழிலேடுகளைக் காட்டிலும் எவ்வகையிலும் ஏற்றமுடையதாக நம் ஏடு அமைந்திருப்பது கண்டனர்; களித்தனர்.

இம்முறையும் அவர்கட்கு ஓர் நல் விருந்தாக ''முரசொலி'' கிடைக்கிறது.

அதிலே காணக் கிடக்கும் கருத்தோவியங்களைக் கண்டு மகிழ்வதுடன், அதன் பயனை உள்ளத்துக்கு ஏற்படும் உவகையை, மன உறுதிப் பாட்டிற்கும், கொள்கை மேம்பாட்டினுக்கும், தாயக விடுதலைக்கும் பயன்படுத்தித் திராவிட மக்கள் பெரிதும் பயன்பெற வேண்டுமென்று விழைகிறேன்.





வீடம் எழுக!

எல்லாப் பண்டிகைகளும், நம்மைப் பிற இனத்தாரின் எடுபிடி களாக்குவதற்கே பெரிதும் பயன்பட்டு வருவது கண்டு பேராசிரியர் பலரும், சிந்தனையாளர்களும், சீர்திருத்தச் செம்மல்களும், தமிழருக்கே உரித்தானதும், தனிச் சிறப்பளிப்பதுமான இப் பொங்கற் புதுநாள் மாண்பினை மக்கள் அறிந்திடச் செய்துள்ளனர்.

நமது இயக்கத் தோழர்கள் வெளியிடும் மலர்கள், இந்தச் சீரிய பணியினை மேலும் செம்மைப் படுத்தும் முயற்சியேயாகும்.

பொங்கற் புதுநாளன்று, பொலிவு கண்டு, நலிவுகளை நீக்கிக் கொள்ள முடியாது போயினும் ஓரளவுக்கு மறந்து, மகிழ்ந்திருக்கி றீர்.

இந்த மகிழ்ச்சி நிலைத்து, வளர்ந்து, நாட்டுக்கு நல்லதோர் விழாக் கோலம் கிடைத்திடத் தக்க பணியாற்றும் உள்ளப் பாங்கை அனைவ ருக்கும் தருவதாக இருத்தல் வேண்டும் என விழைகிறேன். அந்த மகிழ்ச்சியை இவ்விழா நாளன்று உம்முடன் கலந்துண்ணும் வாய்ப் பினைப் பெறுவது பற்றிப் பெருமிதமடைகிறேன்.

இன்பம் பொங்குக! எங்கும் இன்பம் நிலவுக!

எழில் திராவிடம் எழுக!

அன்பன்,

அண்ணாதுரை.




G.H.HAO

அந்தோ.....இவர்கள் !



1. அரசாங்க வேகத்தைக் குறிக்கும் பிரசாத். 2. உறுமீன் (பதவி) வருமளவும் காத்திருக்கும காகபட்டர்! 3. தேபரின் காலைக் கட்டிப் போட்டிருக்கும் நேரு! 4. சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை சுப்ரமணியம்! 5. மார்க்ஸ் என்னும் மயிலாடக் கண்ட வான்கோழி வினோபா! 6. பரமாத்ம ராமமூர்த்தி; கருடாழ்வார் ஜீவா.



முதல் மேடைப் பேச்சு

"நாம் மேடை ஏறிப் பேசவேண்டும், அதனைப் பலர் கேட்க வேண்டும்" என்ற ஆர்வம், பொதுவாக எல்லோர்க்கும், குறிப்பாக மாணவர்க்கு இயல்பாகவே இருக்கும். அத்தகைய ஆர்வம் நான் உயர் நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நுழைந்த போதும் பொங்கிப் பொங்கி உள்ளத்தில் அலை மோதிக் கொண்டிருந்தது என்றாலும் மூன்றாவது ஆனர்சு வகுப்பில் படிக்கும் காலம் வரையில் மேடை ஏறிப் பேசும் ஆற்றலை நான் பெறவில்லை.

உயர் நிலைப் பள்ளி வகுப்புகளில் படிக்கும் போது மேடைப் சொற்பொழிவு ஆற்றுவதற்கான வாய்ப்புகள் இருந்தன; ஆர்வமும் கரை புரண்டு ஓடிற்று; ஆனால் அச்சம் குறுக்கே அணைபோட்டுத் தடுத்து விட்டது; ஆர்வம் வெற்றி பெற முடியவில்லை.

நான் ஆறாம் படிவத்தில் படித்துக் கொண்டிருந்த போது நானும், எனது இள வலும் பிற நண்பர்களோடு சேர்ந்து 'திருவள்ளுவர் இளைஞர்த் தமிழ்க் கழகம்' என்ற ஒரு அமைப்பை நிறுவினோம். அதற்கு நான் செயலாளனாக இருந்தேன். அதன் சார்பாக நடைபெறும் பொதுக் கூட்டங்களில் மிக்க அச்சத்தோடும், நடுக்கத்தோடும் தட்டுத் தடுமாறி நன்றியுரை தான் நவில முடிந்ததே தவிர, மேடைப் பேச்சு ஆற்றலைப் பெற முடியவில்லை.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 1939-இல் இடை நிலை வகுப்பில் சேரும் போது, பல்கலைக் கழகத்தில் பொதுவுடமைக் கட்சி மாணவர்களும், காங்கிரசு மாணவர்களுமே மிகுத்திருந்தனர். பொதுவுடமைக் கட்சி மாணவர்கள்தான் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

என்னைப் பொறுத்த வரையில் நான் தன் மதிப்பு இயக்கக் கொள்கைகள் முழுவதையும், நீதிக் கட்சியின் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவனாக இருந்த போதிலும், வெள்ளையர்க்கு ஆதரவு தந்து கொண்டிருந்த நீதிக் கட்சியின் போக்கு எனக்கு ஏற்றதாகப்படவில்லை. அந்த வகையில் காங்கிரசுக் கொள்கையே ஏற்றதாகப்பட்டது. ஆர்வம் அரசியலிலே நன்கு படிந்திருந்தாலும், மேடை ஏறிப் பேசும் ஆற்றலை அப்பொழுதும் பெற முடியவில்லை.

அப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'தமிழ்ப் பேரவை' என்ற பெயரில் விவாத அரங்கு ஒன்று இருந்து வந்தது. அது சனிக்கிழமை தோறும் கூடி, ஏதேனும் ஒரு பொருள் பற்றி விவாதம் நடத்தும். பொருளை எடுத்து மொழிபவர், எதிர்த்து மொழிபவர், வழி மொழிபவர், தொடர்ந்து ஒட்டியும், வெட்டியும் மொழிபவர் என்ற முறையில் மாணவர்கள் பங்கு கொள்வார். நான் இடை நிலை வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும் போது, வாத அரங்குகளில் கலந்து கொள்பவர் பெரும்பாலும் வைதீகத் கருத்துக்களைப் பரப்பு வோராகவே இருக்க, ஒரே ஒருவர் மட்டும் தன் மதிப்பு இயக்கக் கருத்துக்களை வெளி யிடுபவராகக் காணப்பட்டார். அவர்தான் தோழர் க. அன்பழகன் ஆவார்கள். எல்லோரும் அவரை எதிர்த்தே வாதாடுவார்கள். அவரை ஆதரித்துப் பேசுவதற்கு அப்பொழுது ஒருவரும் கிடைப்பதில்லை. ஒப்புக்காகச் சிலர், தோழர் அன்பழகன் அவர்கள் எடுத்துக் கொண்ட பொருளை ஆதரித்துப் பேச மன்றம் ஏறுவார்கள். அவர்களும் முன் மொழிந்த தோழர் அன்பழகன் அவர்களின் கருத்துக்களை மறுத்தே பேசுவார்கள். மற்றவர்கள் பேசும் போது பெருத்த ஆரவாரமும் கையொலியும் எழும்பும். தோழர் அன்பழகன் அவர்கள் பேசும் போது நான்கு ஐந்து பேர்கள்தான் கையொலி செய்வார்கள் அப்படிக் கையொலி செய்பவர்கள் நானும்


மற்றும் சில நண்பர்களு மாகத் தானிருப்போம். தோழர் அன்பழகன் அவர் கள் உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் காலத்திலிருந்தே பேசும் கலையில் தேர்ச்சி பெற்றவராக வளர்ந்து வந் திருந்த காரணத்தாலும், தன் மதிப்பியக்க உணர்ச்சியோடு பேசிய காரணத்தாலும் அவ ருடைய பேச்சே மற்ற எல் லோருடைய பேச்சுக்களைக் காட்டிலும் சிறந்ததாக இருந் தது. எனினும் அவருக்குப் பெருத்த ஆதரவு மட்டும் கிடைப்பதில்லை.

தன் மதிப்பியக்கக் கருத் துக்களிலே ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த நானும் தோழர் அன்பழகன் அவர் களும் நளடைவில் அறிமுக மாகிக் கொண்டோம். தமக்கு ஆதரவாக நானும் மேடை ஏறிப் பேசவேண்டும் என்பதை நண்பர் அடிக்கடி வற்புறுத்துவார். நானும் அடிக்கடி ஆர்வம் கொள்வ துண்டு; ஆனல் அடுத்த நொடியே அச்சம் என்னைத் தடுத்து நிறுத்திவிடும். தோழர் அன்பழகன் அவர்கள் தனி ஒருவராக இருந்தே துவக்க ஆண்டுகளில் தன் மதிப்பியக் கத்துக்காகப் போராடி வந் தார்.

இடை நிலைப் படிப்பு முடிந்ததும் நானும், தோழர் அன்பழகன் அவர்களும் மூன் றாம் ஆனர்சு வகுப்பில் ஒரே பிரிவில் சேர்ந்தோம். இருவரும் நெருங்கிய நண் பர்களானோம். அந்த ஆண்டும் தோழர் அன்பழகன் அவர்களைத் தவிர சிறந்த பேச்சாளர் யாரும் தன் மதிப்பி யக்கத்திற்கு ஏற்பட வில்லை. எதிர்ப்போ பெரிதாக வளர்ந்தி ருந்தது. நாமும் பேச்சாள ராக மாறினால், இருவரும் சேர்ந்து எதிர்ப்பைச்சமாளிக் கலாமே!" என்ற எண்ணம் என் உள்ளத்தில் அடிக்கடி ஆர்வத்தால் தோன்றி அச்சத் தால் மறைந்து கொண்டே இருந்தது. இறுதியாக எப் படியும் பேசித் தீரவது என்று முடிவு செய்து கொண்டேன். நண்பர்கள் சிலரும் எனக்கு ஊக்கம் ஊட்டினர்.

ஒருபொழுது, 'மதம் மக் கள் முன்னேற்றத்திற்கு முட் டுக் கட்டை' எனும் பொருள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தோழர் அன்பழகன் அவர்கள் எடுத்து மொழியவும் மற் றொரு தீவிர உள்ளம் படைத்தவர் எதிர்த்து மொழி யவும் ஏற்பாடு செய்யப் பட் டிருந்தது. நான், விவாதத் திற்கு எடுத்துக் கொண்டே பொருளை ஒட்டிப் பேசலாம் என்று எனக்குள்ளே முடிவு செய்து கொண்டு, அதற்கான வகையில், நான்கு நாட் களுக்கு முன்பிருந்தே, என்னை நானே ஆயத்தப்படுத் திக் கொள்ளும் முயற்சியில் இறங்கினேன். 'மதம் முன் னேற்றத்திற்கு முட்டுக் கட்டை' என்பதற்கான காரணங்களை வரிசைப் படுத் திக் கொண்டு, அவற்றைச் சொற்பொழிவு வடிவில் தாளில் எழுதிக் கொண் டேன். பொருளை ஒட்டியும், வெட்டியும் தொடர்ந்து பேசு பவர்கள் ஐந்து நிமிடநேரந் தான் பேசவேண்டும் என்பது பேரவையின் விதி. எனவே நான் ஐந்து நிமிடத்திற்கு ஆகும் வகையில் சொற் பொழிவைத் தயார் செய்து கொண்டேன். பிறகு அதனை அப்படியே மனப்பாடம் செய்தேன். நான் இருந்த அறையின் சன்னல்களையும், கதவையும் மூடிவிட்டு, அறைக்குள்ளேயே இருந்து இரண்டு மூன்று தடவை சொற் பொழிவாற்றிப் பார்த் துக் கொண்டேன். அண்ணா மலை நகரை அடுத்து ஆள்நட மாட்டம் மிகவாக இல்லாத சாலை ஒன்று உண்டு; அதனைத் 'தத்துவஞானிகள் சாலை' என்று அழைப்பர். விவாதம் நடை பெறுவதற்கு முதல் நாள் மாலை, நான் அந்தச் சாலைப் பக்கம் சென்று, அங் குள்ள வயல் வெளிகளைப் பார்த்துக்கொண்டு, உரத்த குரலில் ஒருமுறை சொற் பொழிவாற்றிப் பார்த்துக் கொண்டேன். மறு நாள் விவாத அரங்கில் எப்படியும் சொற்பொழிவாற்றிவிடலாம் என்ற உறுதியோடும், உள் ளக் களிப்போடும் அதற்கு வந்து சேர்ந்தேன்.

மறுநாள் காலை அண்ணா மலை நகரிலுள்ள 'கோகலே மண்டபத்தில், தமிழ்ப் பேர வைக்கூட்டம் துவங்கப் பெற்றது. நான் சொற்பொழி வாற்ற இருக்கும் எண் ணத்தை ஒருசிலநெருங் கிய நண்பர்களிடத்தில் மட்டும் சொல்லி, அவர் களையும் உடன் அழைத் துக் கொண்டு கூட்டத் திற்குச் சென்றிருந் தேன். என்னை நானே உறுதிப்படுத்திக் கொண்டு உட்கார்ந்தி தேன். தோழர்



அன்பழகன் அவர்கள் பொருளை எடுத்து மொழிந்தார். வேறொருவர் அதனை எதிர்த்து மொழிந்தார். இருதரப்பினரையும் இருவர் வழிமொழிந்தனர். தொடர்ந்து ஒட்டியும் வெட்டியும் பேச விரும்புவோர் எழுந்து நின்றால், பேரவைத் தலைவர் ஒவ்வொருவராகக் கூப்பிட வேண்டும் என்பது தான் விதி.

"ஒட்டியும் வெட்டியும் பேச விரும்புவோர் வரலாம்" என்று தலைவர் கூறினர்: நான் தொடை நடுக்கத்தோடும் மெல்ல எழுந்தேன். அதற்குள் வேறொருவர் எழுந்து நின்று விட்டதாலும், தலைவரின் கண் பார்வை அவர் மீது விழுந்ததாலும் தலைவர் அவரைக் கூப்பிட்டு விட்டார். அவர் மேடை மீது ஏறிப் பேச்சைத் துவக்கினர். அச்சவுள்ளத்தோடு எழுந்த நான் அமைதியுள்ளத்தோடு உட்கார்ந்து கொண்டேன். அடுத்து அடுத்து வேறு யாராவது போய்ப் பேசட்டும்; பிறகு போய்க் கொள்ளலாம் என்ற உணர்வோடு இருந்தேன். பேச வேண்டியவர்களெல்லாம் பேசியாகி விட்டது. 'இன்னும் யாரேனும் பேச விரும்புகிறீர்களா?" என்று தலைவர் கேட்டார். என்னை எடுத்திருக்கும்படி ஆர்வம் தூண்டிற்று; அச்சமோ எழுந்திருக்க வேண்டாம் என்று தடுத்து உட்கார வைத்தது. இத்தகைய மனப் போராட்டத்திற்கிடையே நான் தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருந்தேன். தலைவர், மேற்கொண்டு விவாதத்தில் கலந்து கொள்வதற்கு யாரும் இல்லை என்ற எண்ணத்துடன் விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார். பிறகு எதிர்த்து மொழிந்த வரும், எடுத்து மொழிந்தவரும் பேச, வாக் கெடுப்பு நடத்தப் பட்டுக் கூட்டம் முடிவு எய்தியது. நான் எடுத்த முயற்சியில் வெற்றி காணமுடியாமல், தோல்வி மனப்பான்மையோடு அறைக்குத் திரும்பினேன். "பேசுவதற்குப் பெரு முயற்சி எடுத்தும் பேசு முடியாமற் போய்விட்டோமே!" என்று மிக மிக வருந்தினேன். நண்பர்கள் சிலர் என்னைக் கேலியும் செய்தனர். நான் என் நிலை குறித்து வெட்கப்பட்டேன்; வேதனையுற்றேன். ஆனால் மறுவாரத்தில் எப்படியும் பேசி விடுவேன் என்று நண்பர்களிடம் வாக்குறுதி யளித்தேன்.

மறு வாரம், தமிழ்ப் பேரவையில், "கட்டாயம் என்பது தேவை இல்லை" என்ற பொருள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனித உரிமைகளையும்—ஒழுக்கங்களையும் காப்பாற்றக் "கட்டாயம் என்பது தேவை" என்னும் பொருளில் பேசத் தீர்மானித்துக் கொண்டேன். முன்புபோலவே, ஆற்றயிருந்த சொற்பொழியை எழுதி, அறையிலும், வயல் வெளியிலும் நின்று, இரண்டு மூன்று தடவை சொற்பொழி வாற்றிப் பார்த்துக் கொண்டேன்.

தமிழ்ப் பேரவை கூடும்நாள் வந்தது. "எப்படியும் இன்று மேடை ஏறிப் பேசிவிடவேண்டும்" என்று உள்ளத்திற் குள்ளே உறுதி செய்து கொண்டு, மனங்குலையாமல் போர்க்களத்திற்குச் செல்லும் போர்வீரனைப்போல் 'கோகலே மண்டபம்' சென்றேன். வழக்கம்போல் எடுத்து மொழிபவர், எதிர்த்து மொழிபவர், வழி மொழிபவர் ஆகிய எல்லோரும் பேசிவிட்டனர். தொடர்ந்து ஒட்டியும் வெட்டியும் பேசுவோரை எழுந்து நிற்கும் படியாகத் தலைவர் கேட்டுக் கொண்டார். அதுவரையில் நான் பிடித்துவைத்துக் கொண்டிருந்த உறுதியெல்லாம் அந்த நொடியிலேயே பஞ்சாய்ப் பறந்து போய்விட்டன. "எப்படிப் பலர் முன்னிலையில் மேடை ஏறிப் பேசுவது?" என்று எண்ணிக்கொண்டேன்; உள்ளமும் உடலும் உடனே நடுக்கங் கொண்டு விட்டன. அச்சம் என் தொண்டையைப் பிடிக்க என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. வேறு சிலர் ஒருவர்பின் ஒருவராகச் சென்று பேசினர். எனது நண்பர்கள் பக்கத்திலும், பின்னாலும் இருந்துகொண்டு, "எழுந்திரு! எழுந்திரு! போ! போ!" என்று முதுகிலும் விலாவிலும் குத்திக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் கேலிச் சிரிப்போடு என்னைப் பார்க்க ஆரம்பித்தனர். இவற்றையெல்லாம் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. "எது ஆனாலும் ஆகட்டும்; எப்படியும் பேசிப் பார்த்துவிடுவோம்" என்று உள்ளத்தை உறுதிப் படுத்திக்கொண்டு திடீரென்று எழுந்து நின்றேன். தலைவரும் என்னைப் பார்த்து விட்டார்; உடனே மேடைக்குப் வரும்படி அழைத்துவிட்டார். நான் விறு விறு என்று நடந்து சென்று, அரங்கம் ஏறி, "கட்டாயம் என்பது தேவை" என்று பேசிடும் எதிர்த் தரப்புப் பக்கம் நின்று, தூய தனித் தமிழ் நடையில், மட மட வென்று, எதிரே யார் யார் வீற்றிருக்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப் படாமல், உள்ளத்தில் தீர்மானித்திருந்ததை அப்படியே கொட்டிவிட்டு, இறங்கி வந்து உட்கார்ந்து கொண்டேன். நான் பேசும்போது இடையிடையே கைபொலிகள் எழும்பின; அவை எனக்கு ஆதரவாக எழும்பினவா; அல்

ஆது எதிர்த்து எழும்பினவா என்பதைப் பற்றிக்கூட கவலைப் படாமல், தயங்காமல், தாழ்த்தாமல், தடுமாறுமல், துவளாமல் பேசிக் கொண்டேயிருந்து விட்டேன். ''ஏதோ ஒரு பெருஞ் செயலைச் செய்து முடித்து விட்டோம்'' என்ற பெருமித உணர்வில் சிறிது நேரம் அமிழ்ந்து கிடந்தேன்; என்னைச் சுற்றிலும் என்ன நடந்தது என்பதைச் சிறிது நேரம் வரையில் என்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

கூட்டம் முடிந்தவுடன் எனது நெருங்கிய நண்பர்களும், பிறரும் என்னைச் சூழ்ந்து கொண்டு ''இப்படிப் பேசுவீர்கள் என்று நாங்கள் எதிர் பார்க்கவில்லையே!''—''ஏன் இவ்வளவு நாட்களாகப் பேசாமல் இருந்தீர்கள்?''—''பேசும் ஆற்றலை வைத்துக் கொண்டு பேசாமலிருந்த நாள் வரையில் இருந்ததேன்?''—''நீங்கள் தொடர்ந்து பேசினால் என்ன?''—''பேசப் பேசப் உங்கள் பேச்சுத் திறன் எவ்வளவோ சிறப்படையுமே!'' என்பன போன்ற ஊக்கமளிக்கும் மொழிகளையும், ஆக்கம் பயக்கும் உரைகளையும் சொல்லி என்னைப் பலபடப் பாராட்டிக் கூறினர். அந்தப் பாராட்டுரைகள் எனக்குச் சிறிதளவு வெட்கத்தையும் கூச்சத்தையும் ஊட்டினாலும், பெருமளவு மனமகிழ்ச்சியூட்டுவனவாக அமைந்திருந்தன. நண்பர்கள் அப்பொழுது அளித்த ஊக்கந்தான் என்னைத் தொடர்ந்து மேடை ஏறத் துண்டிற்று. அத்தகைய ஊக்கமும், பாராட்டுரைகளும் கிடைக்காமல் போயிருக்குமேயானால், நான் மேடை ஏறும் பயிற்சியையும், பண்பையும், பழக்கத்தையுப் பின்னால் பெற்றிருக்கவே மாட்டேன். மாணவ நண்பர்களும், தமிழ்ப் பேராசிரியர் கா. சுப்பிரமணியனாரும், அறிஞர் அ. சிதம்பரனாரும் அவ்வப்போது அளித்து வந்த ஊக்கந்தான், நானும் தோழர் அன்பழகன், அவர்களும் பல பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெற்றிப் பரிசுகளைப் பெறவும் ஆன வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தது.

அறிஞர் அண்ணா அவர்களின் ''திராவிட நாடு'' இதழும், அறிஞர் அண்ணாவோடு 1943-ல் அண்ணாமலை நகரில் மாணவர்களாகிய நாங்கள் நடத்திய உரையாடலும் எங்களைத் திராவிட இயக்கத்தின்பால் முழுக்க முழுக்கக் கொண்டு வந்து சேர்த்தன.

1941-42-இல் நானும் தோழர் அன்பழகன் அவர்களும் இருவராக இருந்தோம்; 1942-43-இல் சிலராக ஆயினோம்; 1943—44-இல் பலராக வளர்ந்தோம். தோழர்கள் இளம் வழுதி, மதியழகன், வில்லாளன், அரங்கண்ணல் போன்றவர்கள் திராவிட மாணவ இயக்கப் பரம்பரை தொடர்ந்து அண்ணாமலை நகரில் வளர்ப்பவராயினர்.

நானே சென்று விருப்பிக் கேட்டுக் கொண்டு முதன் முதல் கலந்து கொண்ட பொதுக் கூட்டம் 1943-இல் பட்டுக்கோட்டையில் நடைபெற்ற ''திராவிடநாடு'' வளர்ச்சி நிதியளிப்புக் கூட்டமாகும். அதில் அண்ணா அவர்களும், அ. பொன்னம்பலனார் அவர்களும் கலந்து கொண்டார்கள்.


வெளியூர்த் தோழர்கள் வர வழைக்கச் சென்று கலந்து கொண்ட முதல் பொதுக்கூட்டம் 1944-இல் திருவாரூரில் நடைபெற்ற 'முரசொலி'மன்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டமாகும். அதில் நண்பர் க. அன்பழகன் அவர்களும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தை முன்னின்று கூட்டியவர் நண்பர் மு. கருணாநிதி அவர்கள் ஆவார்.

நான் முதன் முதல் தலைமை தாங்கிய மாநாடு குடந்தையில் 1944-இல் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாடாகும்.

மேடை ஏறிப் பேச வேண்டும் என்ற ஆர்வத்தை நான் கொள்ளுவதற்கு அடிப்படையாக அமைந்த பேச்சுகள் மூவரைச் சார்ந்தனவாகும். நான் முதலில் கேட்ட பட்டுக்கோட்டைத் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்களுடைய பேச்சும், பிறகு கேட்ட தோழர், ப. சீவானந்தம் (தன் மதிப்பு இயக்கத்தில் இருந்த போது) அவர்களது பேச்சும், பிறகு கேட்ட அறிஞர் அண்ணா அவர்களது பேச்சும் ஆகும்.

மேடை ஏறிப் பேச வேண்டும் என்று எடுத்துக் கொண்ட முயற்சிகளை ஓரளவுக்கு வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது என்றாலும், குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளும் முயற்சிகளில் என்னால் போதுமான அளவுக்கு இன்னமும் வெற்றி காண முடியவில்லை என்று தான் சொல்ல வேண்டும்?

★



காமராசர்...


திராவிடர் இயக்கம் உண்டாக்கிய நெருப்பிலே..
முதன் மந்திரி
அண்ணா
சி.என்.அண்ணாதுரை
சுருட்டு பற்ற வைத்து..
பதவி நெருப்பிலே பஸ்பம் செய்து..
ஒய்யாரமாகத் திரிந்த உழைப்பாளர் கட்சியை..
யாருக்கும் கிடைக்காத பட்ட மாம் 'பச்சைத் தமிழ' னென்கிற விருது பெற்று..
குடியாத்தம் தேர்தலிலே சாகசத் தால் பெரியாரைச் சாய்த்து..


புராணம்!
பி.சி.ஜி. குறித்து ஆச்சாரி யாருக்கு எதிராக பிரசுரம் வெளியிட்டீர்...
BCG
கொடி எரிப்பு; வடக்கெல்லை மறியல்-போராட்டங்களை அறிக்கை வெடியால் அடக்கி...
கரையாளர் குழுவை அடக்கி; தமிழ்நாட்டு அரசியலில் தன்னிகரற்று விளங்குவதாக நினைத்துக் கொண்டிருக்கும் காமராசர்..
நகரசபைத் தேர்தலில் வெற்றியை அறுவடை செய்ய நேருவை அழைத்து வந்து...
செல்லப்பன்
சிறு பார்ப்பன அடிமை
வடநாட்டின் எடுபிடி!

வாளெடுப்போம் வாடி!

கவிஞர் வாணிதாசன்







கரையோரப் பாறையிலே கொந்தளிக்கும் நீலக்
கருங்கடலின் வெள்ளலைகள் வந்து வந்து மோதி
நுரைக்கர்டாய் ஆக்குதடி! உரிமைப்போர் ஆட்டம்,
நூறுமுறை சொன்னலும் ஆண்களுக்கோ நெஞ்சில்
உரமேறக் காணேமே! விலாவொடிந்து போச்சோ!
ஒண்டொடியே திராவிடத்தை, நம்நாட்டை மீட்கத்
திரைமறைவில் இருப்பதுவோ? இதுதானே வீரம்?
திரண்டெழுந்து நாமெல்லாம் வாளெடுப்போம் வாடி!

உள்நுழையாப் பெருங்காட்டு மரஉச்சிக் கொம்பில்
ஒண்டவரும் குயிலோடு கூண்டுள்ள காக்கை
கொள்ளாது போராடி வட்டமிட்டுக் கொத்தும்
கூண்டுரிமை குயிலுக்கோ? உரிமைப்போ ராட்டம்!
எள்ளாரோ பிறநாட்டார்? இங்குள்ள மக்கட்
கெத்தனைதான் சொன்னலும் உரமேறக் காணேம்!
கள்ளொத்த விழியாளே! தாய்நாட்டை மீட்கத்
தயங்காதே; வரிந்துகட்டி வாளெடுப்போம் வாடி!

தாய்நாடாம் கடல்நோக்கிப் பாய்ந்துவரும் ஆறு
தடைக்கல்லைப் பெயர்த்துருட்டி ஓடிவரக் கண்டோம்;
வாய்பொத்திக் கிடப்பதுவோ? நம்நாட்டை ஆள
நமக்கின்றி மற்றவர்க்கிங் கேதுரிமை சொல்லேன்;
பாய்புலிகள் தமிழ்நாட்டார்; ஆனலும் இன்றே
படித்திடித்துச் சொன்னலும் உரமேறக் காணேம்.
மாய்ந்தாலும் தமிழ்மீட்க மாய்வதுவே மேலாம்!
வரிந்துகட்டி நாமெல்லாம் வாளெடுப்போம் வாடி!

வானத்துப் பரிதியினைக் கார்மேகக் கூட்டம்
வழிமறிக்கக் கிழித்தெறிந்து வருஞ்சுடரைக் கண்டோம்;
தேனெனத்த மொழியாளே! செந்தமிழ்த்தாய் நாடு
தீந்தமிழர்க் கேசொந்தம்! பிறர்க்கென்ன வேலை?
சீனத்தைச் சாவகத்தை ஈழத்தைக் கண்டும்
இங்குள்ள திராவிடர்கோ உரமேறக் காணேம்!
மானென்று நமையெல்லாம் சொல்லுகின்ற மக்கள்
மறப் புலியைக் காணட்டும் வாளெடுப்போம் வாடி!

★ ★


மத்தியமம்
கருணாநிதி

[பொதுக் கூட்டம்—மக்கள் கூடியிருக்கிறார்கள். அறிவியக்கத்தைச் சேர்ந்த ஒரு தோழர், பாகவதர் உடையுடனும்—இன்னொரு தோழர் சீடன் வடிவிலும் நின்றுகொண்டு, பரதாயணக் காலட்சேபத்தை நடத்துகிறார்கள்.....இடையிடையேபாடிக் கொண்டு! கேட்ட மக்கள் பயன் பெறுகிறார்கள். இதில் பிற்பகுதிதான் கற்பனை! முற்பகுதி-வால்மீகி ராமாயண உண்மை!]

குறிப்பு :

[காலட்சேப நடையில் இழுத்தாற் போல படிக்கின் இனிமை பயக்கும்.]

பாகவதர் : அகோ வாரும் பிள்ளாய் சிஷ்யா! முன்னொரு காலத்திலே ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் இந்த உலகத்திலே ராஜரீகம் செய்து வந்தார்கள்...

சிஷ்யன் : ஆமாம்...

பாக : உலகமென்றால்...

சிஷ் : உருண்டை வடிவமாக...சதா சர்வ காலமும் சுற்றிக் கொண்டே யிருக்கும் !

பாக : அட முட்டாளே! அது இப்போதுள்ள உலகமடா! முன்பெல்லாம் உலகமென்றால், கன்யாகுமரி முனையிலேயிருந்து இமயமலைத் தொடரிலேயுள்ள கைலாச மலையின் அடிவாரம் வரையிலே வியாபித்துப் பரந்து கிடந்ததாக்கும்!

சிஷ் : ஆமாம்...ஆமாம் !

பாக : அப்படிப் பரவிக் கிடந்த உலகத்திலே... அயோத்யாபுரிப்பட்டணத்தை தசரத மகாராஜா ஆண்டு வந்தார்!

சிஷ் : ஆமாம்!...

பாக : யார் ஆண்டு வந்தா?

சிஷ் : தசரத மகாராஜா!...

பாக : அந்த மகாராஜாவின் அரண்மனையிலே... அறுபதினாயிரம்...(சிஷ்யனிடம் திரும்ப)

சிஷ் : போர் வீரர்கள் இருந்தார்கள்!

பாக : (திகைத்து) போர் வீரர்களா?...அடப் பாவி!...போர் வீரர்கள் இல்லையடா!...

சிஷ் : அங்!...(சமாளித்து)...கூடிக்கவும் ஸ்வாமி: அறுபதினாயிரம் பொன் நாணயங்கள்!

பாக : அட புத்தி கெட்டவனே...பொறுடா பொறு!...நீ சொல்வதும் உண்மைதான்—பொன் நாணயங்கள்தான்—அவர்கள் உடம்பெல்லாம் பொன்தான்!...தங்க நிறந்தான்! நீ சொல்லியபடி போர் வீரர்கள்தான்!... ஆனால் அவர்கள் போரிடும் இடமே வேறு!... தசரதனோடு பஞ்சனையிலே போரிடும் பாவையர்கள்! அறுபதினாயிரம் பத்தினிமார்கள்!...

சிஷ் : அய்யோடா! ஆமாம்!

பாக : அந்த அறுபதினாயிரம் பேருக்கும் பிள்ளை குட்டிகள் கிடையாது!...

சிஷ் : அய்யோ பாவம்...

பாக : பிள்ளைகள் இருந்திருந்தால்...

சிஷ் : அயோத்தியில் பஞ்சம் வந்திருக்கும்!

பாக : ங்!...முந்திரி கொட்டை! பிள்ளைகள் இருந்திருந்தால் தசரதன் சந்தோஷமாக இருந்திருப்பான்!...தசரதனுக்கு அறுபதாயிரம் உற்சவ விக்ரகங்களே அல்லாமல் மூன்று பேர் மூல விக்கிரகங்கள்! அவர்கள் கௌசல்யா—சுமித்ரை—கைகேயி,...என்னும் நாமதேய முடையவர்கள்!...அவர்களும் மலடிகளாகவே இருந்தார்கள்!...அதற்காக தசரதன் புத்திர காமேஷ்டி யாகம் செய்தான்!...அந்த யாகத்திலே குதிரை வெட்டப்பட்டது—வெட்டப்பட்ட குதிரையை அணைத்துக் கொண்டு மூல மனைவியர் மூன்று பேரும் தூங்கினார்கள்!

சிஷ் : ஆமாம் !

பாக : யாகத்திலே அவிர்ப்பாகம் வரவழைக்கப் பட்டது!

சிஷ் : ஆமாம்.

பாக : அதை அந்த மூன்று மனைவிகளும் சாப்பிட்டு விட்டு, யாகத்திற்கு வந்திருந்த ரிஷிகளோடு இந்திர போகத்தை அனுபவித்தார்கள்.

சிஷ் : ஆமாம் !

பாக : அதனால் என்ன ஆயிற்று?

சிஷ் : கற்பு போயிற்று!

பாக : இல்லையடா! கரு உருவாயிற்று!...

சிஷ் : ஆமாம்!...

பாக : அகோ வாரும் பிள்ளாய் சிஷ்யா! இப்படியாகத்தானே, வால்மீகி ராமாயணத்து சுலோகத்தின்படி யாகம் நடைபெற்று, மூன்று பட்ட மகிஷிகளும் நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள்!

சிஷ் : ஆமாம்!

பாக : அந்தப் பிள்ளைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, யானை யேற்றம்—குதிரையேற்றம்—முதலிய எல்லா வித்தைகளையும் கற்றுக் கொண்டார்கள்!

சிஷ் : ஆமாம்!...

பாக : அந்த தசரதனுகப் பட்டவனுக்கு...மூத்த பிள்ளை ராமன் மீதுதான் மோகம்...அன்பு எல் லாம்!...அதனல் அவனுக்கு ராஜ்ய பட்டா பிஷேகம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்து தேதி குறிக்க வசிஷ்ட முனிவரை வரவழைத் தான்—

சிஷ் : ஆமாம்!

பாக : இப்படியாகத்தானே வசிஷ்ட முனிவர் வந் ததும், அவரைப் பார்த்து தசரதன், "அகோ வாரும், அன்பார்ந்த முனிபுங்கவரே! அடி யேன் ஒரு விண்ணப்பம் செய்து கொள் கிறேன். அதாகப்பட்டது, நமது ராமச்சந்திர னுக்கு அயோத்தி யுவராஜா பட்டாபிஷேகத் தை செய்து முடித்துவிடலாமென நினைக் கிறேன்" என்பதாகச் சொல்லி நின்ருன்— உடனே வசிஷ்ட முனிவர், தனது நரைத்த தாடியைத் தடவியபடி சொல்வதாவது; "கேளும் தசரத மகாராஜனே! முன்னெரு காலத்தில் கேகயன் மகள் கைகேயியை நீ விவாகம் செய்து கொள்ளப் போகும் போது நடந்ததை மறந்து விட்டாய் என்று நினைக் கிறேன்–வயதான உனக்குப் பாரியாளாக வர கைகேயி இணங்கவில்லை. கிழவருக்கு எப் படி இந்தக் கிளியைக் கொடுப்பது என்று கேகய ராஜன் மறுத்து விட்டான். உடனே நீர், கைகேயியின் சௌந்தர்ய ரூப லாவண்யத் திலே மயங்கி தேன் குடித்த வண்டு போல இருந்த காரணத்தால், கைகேயிக்கு அயோத் தியையே காணிக்கையாகத் தருகிறேன் என்று வாக்களித்து, அந்த க்ஷணமே, அவ ளுக்கு ஆரிய தர்ம சாஸ்திரவிரமப்படி * 'கன்யா சுல்கம்' என்ற பெயரால் அயோத்தி யைத் தாரை வார்த்துக் கொடுத்து, இந்த தேசத்திலே நீ கைகேயியின் பிரதிநிதியாக இருந்து ஆள்வதென்றும், கைகேயிக்குப் பிறக் கும் குழந்தைக்கே அயோத்தி சொந்தமென் றும், அப்படி அவளுக்குப் புத்திர பாக்யம் கிட்டாவிட்டால், அவளுடைய சகோதரன் **யுதாஜித்து ராஜகுமாரனுக்கே** அயோத்தி ஸ்வாதீனமாகுமென்றும் ஒப்பந்தம் செய்து கொடுத்து, கைகேயியை மணந்துகொண்டிருக் கிறுய்!...அதை மறந்துவிடாதே மகராஜனே!" என்று பழைய சம்பவத்தை ஞாபகப்படுத்தி நின்ருர் ரிஷி சிரேஷ்டர்!

சிஷ்: ஆமாம்!

பாக : அதைக் கேட்ட தசரதன் கலகல வென நகைத்து, "என்ன சுவாமி! தாங்களே இப் படிச் சொல்லுகிறீர்கள்? ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்து என்று பழமொழியே இருக்கிறது. அதன் பிரகாரந் தான் நான் கைகேயியை மணந்து கொண் டேன்!" என்ருன்.

அதைக்கேட்ட வசிஷ்ட மாமுனிவர், "ஆயி ரம் பொய் சொல்லலாம்; ஆனல் ஆரிய தர்மப் படி அயோத்தியை கைகேயிக்கு சுவாதீனப் படுத்தி விட்டாயே நீ; அதை அவளிடமிருந்து பறிப்பதுபோல் அல்லவா இருக்கிறது இந்த முயற்சி?" என்று வியாக்யானம் செய்தார் முனிவர்!

சிஷ் : ஆமாம்!

பாக : "எது எப்படியானலும் சரி; என் மகன் ராமன்தான் நாடாள வேண்டும்!...வசிஷ்ட மகரிஷியே! வாக்குறுதிகளைப் பற்றி கவலைப் பட்டுப் பயனில்லை. தாங்கள் பட்டாபிஷேகத் திற்கு சுப லக்னம் பார்த்துக் கொடுங்கள்! இதுதான் நல்ல சமயம். பரதன் அவனுடைய மாட்டன் வீட்டுக்குப் போயிருக்கிருன்.., அவன் திரும்பி வருவதற்குள், ராஜ்யத்தை ராமனிடத்திலே ஒப்படைத்து விடுகிறேன்... பிறகு ராமன் பாடு! பரதன் பாடு! பார்த்துக் கொள்ளட்டும் நமக்கென்ன" என்று தசரதன் கண்டிப்பாக மொழிந்ததைத் கண்ட வசிஷ்ட மகா முனிவரும் பட்டாபிஷேகத்திற்கான சுப யோக சுப தின மொன்றைக் குறித்துக் கொடுத்து விட்டு, ராமனையும் அழைத்து வரச் சொல்லி ஆசீர்வாதம் செய்தார்!

சிஷ் : ஆமாம்!

பாக : இந்த விஷயம் அரண்மனையிலேயுள்ள எல் லோருக்கும் தெரிந்து விட்டது!...ஆனல் கைகேயிக்கு மாத்திரம் தெரிவிக்கப்படவில்லை.

சிஷ் : ஆமாம்...

பாக : காரணம் என்ன வென்ருல்..

சிஷ் : ஆமாம்!

பாக : என்னடா ஆமாம்...

சிஷ் : காரணம் என்ன வென்ருல்...

பாக : (கோபமாக) என்னை சொல்லு!

சிஷ் : கைகேயிக்குத் தெரிந்தால், தசரதன் மீது கோர்ட்டிலே கேஸ் போட்டு விட்டு, பட்டாபி ஷேகத்தை நிறுத்த 'ஸ்டே ஆர்டர்' வாங்கி விடுவாள்!

பாக : அடே அதெல்லாம் இந்தக் காலம்!...அந்தக் காலத்திலே கோர்ட் ஏது?...

---

* வான்மீகி ராமாயணம்—அயோதியா காண்டம் 107-ம் சருக்கம், 3-வது சுலோகம்.

சிஷ் : அப்படியானால் இராவணனுக்கு "ஏரோப் ளேன்" ஏது ஸ்வாமி!

பாக : ஏய்...அவசரக்காரா! அதற்குள் ஆரண்ய காண்டத்துக்கு வராதே!

சிஷ் : செத்தாலும் ஆரண்யத்துக்குப் போக மாட் டேன் சாமி!...

பாக : அகோ வாரும் பிள்ளாய் சிஷ்யா!...இப்படி யாகத்தானே, பரதனுக்கும் கைகேயிக்கும் தெரியாமல் ராமனின் பட்டாபிஷேகத்திற் கான காரியங்களை யெல்லாம் தசரதன் கவ னித்துக் கொண்டிருந்தான்...

சிஷ் : ஆமாம்!

பாக : எப்படியோ கூனி யென்னும் தோழி மூல மாக கைகேயிக்கு சேதி எட்டி விட்டது!

சிஷ் : ஆமாம்!

பாக : சேதி கேள்விப்பட்ட கைகேயி, சீறும் பாம் பாளை! அடுக்குமா இந்த அக்கிரமம் என்று ஆத்திரப் பட்டாள்! இதை எப்படித் தடுப் பது என்று கூனியிடம் யோசனை கேட்டாள்!

சிஷ், ஆமாம்!

பாக : உடனே கூனியாகப்பட்டவள், கைகேயி யைப் பார்த்து "கவலைப்படாதே பெண்ணே! உன்னைக் கல்யாணம் செய்யும் போது, தசரத ராஜன் இந்த அயோத்தியை உனக்குக் 'கன் யா சுல்க'மாக அளித்திருக்கிறார். அதை அடிப்படையாக வைத்து போர்க் கொடியை உயர்த்து" என்று யுக்தி கூறினாள்!

சிஷ் : ஆமாம்!

பாக : அது கேட்டு கைகேயி, "வேண்டாமடி! என் னுடைய நாயகன் தசரத ராஜனுக்கு தேச முழுவதும் சத்தியகீர்த்தி, உத்தமன், சிரேஷ் டன், என்றெல்லாம் புகழும், பெயரும் இருக் கிறது! அவன் அயோத்தியை முன்பே எனக் களித்து விட்டு, இப்போது பறித்துக் கொள்ள சூழ்ச்சி செய்கிறான் என்று நான் கூறுவேனே யானால், தசரத மகாராஜாவைப் பற்றி உலக முழுவதும் தகாத முறையிலே பேசுவார்கள்! வாக்கு மறந்தவர், வஞ்சகர், சூழ்ச்சிக்காரர், காம போதையில் ராஜ்யத்தை அளித்து விட்டு இப்போது கபட நாடகம் ஆடி பிடுங்கிக் கொண்டவர் என்றெல்லாம், என் கணவருக் குக் களங்கம் ஏற்பட நான் காரணமாயிருக்க மாட்டேன்" என்று சொல்லி அழுதாள்.

சிஷ் : ஆமாம்!

பாக : உடனே கூனி, அப்படியானால் ராமனே நாடாளட்டும்! என்றாள் சிரித்துக்கொண்டே!

அது கேட்டு கைகேயி, "அதற்கும் சம்மதிக்க மாட்டேன். அந்தத் துஷ்டனுடைய ஆட்சி யிலே, என் கதியும் என் மகன் கதியும் என்ன ஆவது!" என்று பிரலாபித்து விட்டு, மீண்டும் சொல்கிறதாவது: "கேளடி கூனி! கேகயத் தில் இந்தக் கிழவன் அளித்த 'கன்யா சுல்க'த் தை, மக்களிடம் ஞாபகப் படுத்தி, அவருக்கு அபகீர்த்தி உண்டாக்காமல், அந்தப் பழியை யும் பாவத்தையும் நானே ஏற்றுத் கொண்டு அவருக்கு வரும் தீயபெயரை நான் பெற்று தியாகம் செய்யப் போகிறேன்." என்றாள்! அது கேட்ட கூனி அதிசயத்தால் நிமிர்ந்து நின்று "எப்படியடி யம்மா?" என்றாள்!

"கேளடி கூனி! முன்பொரு முறை மன் னர், இரண்டு வரங்கள் அளித்திருக்கிறார், அதன்படி நான் எது வேண்டுமானாலும் கேட் டுப் பெறலாம்! அப்படி வரத்தைக் கேட்டு, பரதனுக்கு நாடும், ராமனுக்கு காடும் வாங் கித் தரபோகிறேன்...இதிலே ஏதாவது பழி வந்தால், என் பர்தாவிற்காக அதை நான் ஏற் றுக் கொள்கிறேன்" என்று கைகேயி சபதம் செய்வது போலப் பேசினாள்!...

சிஷ் : ஆமாம்!

பாக : இராஜ்ய பட்டாபிஷேகத்திற்கான காரியங் களை யெல்லாம் பார்த்து விட்டு, வழக்கம் போல தன் இளம் மனைவி கைகேயியிடம் காமக் களியாட்டத்தில் ஈடுபடுவதற்கான முஸ்தீபுகளோடு முதிய மகாராஜா தசரதர் பராக்! பராக்!!

சிஷ் : பராக்! பராக்!!

பாக : * கைகேயி மாளிகையிலே வாசனைத்திரவி யங்கள், பான விசேஷங்கள், வழக்கம் போல் எல்லாம் அந்தந்த இடத்தில் வைக்கப்பட் டிருந்தன. தசரத மகாராஜனுடைய பிரகிருதி வேகம் அதிகரித்தது! ராமனுக்குப் பட்டங் கட்டி விட்டு, வனவாசம் செல்ல வேண்டு மென்று தீர்மானித்திருந்த அந்தக் கிழ மகா ராஜனுக்கு உள்ள முழுதும் காதல் வேகம் பொங்கிட, கைகேயி! கைகேயி! என அழைத் தான்—கைகேயி, எந்த மேலைமையிலே இருக் கிறாள்!

சிஷ் : ஒரே ஆத்திரமாக...

பாக : ஆமாம்! தசரதன் வந்ததுதான் தாமதம்! ஒரு கூடை நெருப்பை அள்ளி அவன் தலை யிலே கொட்டினாள்! குய்யோ முறையோ வெனக் கத்தினாள்! மாரடித்தாள்! புலம் பினாள்! ஒப்பாரி வைத்தாள்!

சிஷ் : ஆமாம்.

.....

* ஆச்சாரியார் எழுதிய சக்ரவர்த்தித் திருமகனில்'!

பாக : இப்படியெல்லாம் அவள் எதுவும் செய்ய வில்லை. கேகயன் மகள், கேட்ட வரம் இரண்டு! ஒன்று, ராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும்! மற்றொன்று பரதன் நாடாள வேண்டும்!

சிஷ் : ஆமாம்!

பாக : வரம் கேட்டதும் தசரதன் என்ன செய்தான்?

சிஷ் : கொடுத்தான்.

பாக : கொடுக்கவில்லை...சூழ்ச்சி அம்பலமாகி விட்டதே என்று நினைத்தான். அவள் காலிலே விழுந்தான். இருதயம் வெடித்து விட்டது!... இறந்து விட்டான்!...இப்போது கைகேயி என்ன ஆனாள் தெரியுமா?

சிஷ் : விதவையானாள்!

பாக : அது மட்டுமல்ல; 'கன்யா சுல்க' முறைப்படி அயோத்திக்கு அவள் அரசியாகி விட்டாள்! இனி அவள் இட்டதுதான் சட்டம்! இராமனைக் கூப்பிட்டாள்! 'காட்டுக்குப்போ'! என்று கட்டளை யிட்டாள்! இராமனும், சீதையும், இலக்குமணப் பெருமாளும், காட்டுக்குப் போனார்கள்! கைகேயி, சொல்லாமலே நாட்டு மக்களுக்கு விஷயம் தெரிந்து விட்டது! ராமன் நாட்டைப் பறிக்க சூழ்ச்சி செய்தான் என்ற சங்கதி, கேகய ராஜன் மூலமாக உலகமெங்கும் தெரிந்து விட்டது!...பாட்டன் வீட்டுக்குப் போன பரதன் ஓடோடியும் வந்தான்!


சிஷ் : ஆமாம்!

பாக : விஷயமனைத்தும் தெரிந்தது அவனுக்கு!...

சிஷ் : ஆமாம்!

பாக : தேசத்திலே உள்ள சில பிரமுகர்கள், பரதன் நாடாளுவது நியாயம்–ஆனால் ராமன் காட்டுக்கு விரட்டப்பட்டது என்னமோ அநியாயம் என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர்! இதைக் கண்ட கைகேயிக்குக் கொஞ்சம் பயம் பிறந்தது! பரதன்மீது அயோத்தியில் உள்ளவர்களுக்கு நல்ல எண்ணம் ஏற்பட வேண்டுமென்று நினைத்தாள். அதற்காக ஒரு தந்திரம் செய்தாள்! பரதனைக் கூப்பிட்டு, "என் செல்வச் சிரஞ்சீவி பரதா! நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன் கவனமாகக் கேள்! உன் தந்தை எனக்குக் கொடுத்த நாட்டை அபகரித்து உன் அண்ணனுக்கு கொடுக்கப் பார்த்தார்! அப்பாவுக்கு பழிவரக் கூடாதென்று நானே பழியைச் சுமந்து கொண்டு உன்னை நாட்டுக்கு உரியவனாக ஆக்கி விட்டேன். ஆனால்–நாட்டிலே சிலர், ராமன் காடேகியதைப் பற்றி வருந்தி, உன்னைத் தூஷிப்பதாகத் தெரிகிறது. அதனால், நீ நல்ல பெயர் வாங்க, ஒரு நாடகம் நடத்த வேண்டும்!" என்றாள்!

இவை யாரைக் குறிக்கின்றன?



[விடை அடுத்த பக்கம்.]

முன் பக்க விடை!

1. பிரகாசா
2. காமராசர்
3. எல். எஸ். கரையாளர்

சிஷ் : ஆமாம்!

பாக : அது என்ன நாடகம்? எப்படிப்பட்ட நாடகம்?

சிஷ் : "த்ரீ டி" நாடகம்!

பாக : த்ரீடி நாடகமில்லேயடா! திருடி நாடகம்!

சிஷ் : திருடி நாடகமா?

பாக : ஆமாம்...ராமன் காட்டுக்குப் போகும்போது ஒரு விலே உயர்ந்த பொருளேத் திருடிக் கொண்டு போய் விட்டான்!... அது என்ன பொருள் தெரியுமோ?...

சிஷ் : சீதை!...

பாக : சே! சீதையை ராமன் எப்படா திருடினான்? சீதைதான் அவன் மனேவியாயிற்றே....அவன் போகும்போது திருடிக் கொண்டு போன பொருள் விலே உயர்ந்த மாணிக்கம்! அதைக் கொடுத்தால் அயோத்தியாபுரிப் பட்டணத்தைப் போல ஆறு பட்டணங்களே விலேக்கு வாங்கலாம்! அந்த மாணிக்கத்தை ராமன் திருடிக் கொண்டு போய் விட்டான்!

சிஷ் : ஆமாம்!

பாக : மாணிக்கக் கல் திருட்டுப்போன சங்கதி, கைகேயிக்கு அறிவிக்கப்பட்டது! அது நிஜமாகக் காணமற் போயிருக்குமென்று கைகேயி ஆராய்ச்சி நடத்த ஆரம்பித்தாள்!

சிஷ் : ஆமாம்!

பாக : அப்படி ஆராய்ச்சி நடத்தியதில்...பார் புகழும் அந்த மாணிக்கக் கல்லே, ராமன் தனது பாதரட்சையிலே மறைத்து எடுத்துக்கொண்டு போய் விட்டான் என்று புலன் கிடைத்து விட்டது கைகேயிக்கு!

சிஷ் : ஆமாம்!

பாக : அப்போதுதான் பரதன், கேகய நாட்டிலிருந்து வந்து சேர்ந்தான்–அவனிடம் கைகேயி சொல்லுவாள்: "தம்பீ! பரதா! ஈரேழு லோகத்திலும் காண முடியாத ஈடு இணையற்ற மாணிக்கக் கல்லே, உன் அண்ணன் பாதுகையிலே மறைத்துக் கொண்டு போய் விட்டானும்! மாணிக்கக் கல் இல்லாத அயோத்தி, சூரியனில்லா வானம் போன்றது! கண் இல்லா முகம் போன்றது! எப்படியும் அந்தக் கல்லேத் திரும்பக் கொண்டு வர வேண்டும்" என்ருள்.

சிஷ் : ஆமாம்!

பாக : அதற்கு என்ன வழி யென்று தெரியாமல் பரதன் விழித்து, திகைத்து, நின்ருன்.

சிஷ் : ஆமாம்!

பாக : அப்போது கைகேயி சொல்கிருள்: "பரதா! பயப்படாதே! சூழ்ச்சியை சூழ்ச்சியால்வெல்ல வேண்டும்! நீ இப்போதே, "ராமன் காட்டுக்குப் போவது கூடாது! அவன்தான் நாடாள வேண்டும்" என்று கதறு! நான் சமாதானப்படுத்துவேன்–கேட்காதே! மந்திரி பிரதானிகளே யெல்லாம் கூப்பிட்டுக் கொண்டு ராமனேத் திரும்ப அழைத்து வருவதாகப் புறப்படு! புலம்பலே நிறுத்தாதே! அண்ணலே! அண்ணலே! என்று அழு! அவன் பாதங்களேத் தொழு! நானிருக்கும் வரையில் அவன் நாட்டுக்குத் திரும்பி வரப் பயப்படுவான்! ஒரு வேளே, அப்படியே அவன் திரும்பி வந்துவிடுவான் போல் ஜாடை தெரிந்தால் அதற்கு இடங் கொடுக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்!...அவனுக்கு நேராகவே என்னேத் திட்டு! மந்திரி பிரதானிகள் எல்லாம் உன்னுடைய சகோதர பாசத்தை மெச்சுகிற அளவுக்கு நாடகத்தை நடத்து!

"அண்ணு, நீ தந்தை சொல் மறவாத தனயன்! தந்தையின் வாக்குப்படி தரணியை வெறுத்து விட்டு, இப்படித் தவக்கோலம் பூண்டுவிட்ட, நீயல்லவா உத்தமன்! நீயல்லவா தெய்வம்!" இப்படிப் புகழ்ந்து பேசியே அவனே வரையும் மயக்கு! "திரும்பி வருகிறேன்" என்று ராமன் சொல்வதற்கு அவனுக்கு சந்தர்ப்பமே கொடுக்காமல், ஜாக்கிரதையாகப் பேசு! ஒன்று மறந்து விடாதே பரதா! ராமனின் பாதுகையிலே பதுக்கி வைத்திருக்கும் நம்மு மாணிக்கக் கல்! அதைக் கவர்ந்து வரவே இவ்வளவு ஏற்பாடும்! "நீ ஆளாவிட்டாலும், உன் பாதுகை நாட்டை ஆளட்டும்" என்று கெஞ்சிக் கூத்தாடி, அதை எப்படியாவது பிடுங்கிக் கொண்டு வந்து விடு! மந்திரி பிரதானிகளுக்கு மத்தியிலே, ராமன், மாணிக்கக் கல்லே எடுத்துக் கொள்ள முடியாது! விழிப்பான்! திகைப்பான்!!

"வேண்டாமடா தம்பி, பாதுகையைத் தொடாதே, பாபம்!" என்பான்!

"பாதுகையா இது? பார் புகழ் தெய்வத் திருவடியண்ணு!" என்று கூறி, நீயாகவே அவைகளைக் கழற்றி எடுத்துக் கொண்டு வந்து விடு மகனே!" என்பதாகக் கைகேயி கூறவும், பரதனும் நாடகத்தை நடத்தப் பரவசத்தோடு புறப்பட்டான்!

சிஷ் : ஆமாம்!

பாக : அன்னையின் சொற்படியே, ராமனே, லக்ஷ்மணனே தன்னைக் கொன்று விடாமல் இருப்பதற்காக, பாதுகாப்பாக ரதகஜ துரகபதாதிகளை அழைத்துக் கொண்டு, பரதன் ராமனிடம் சென்றான்!—

தந்திரமாகவும், சாகசமாகவும், அழுதும், புலம்பியும்—அண்ணனிடத்திலே அவனுக்கு அழியாத பாசமிருப்பதாகக் காட்டிக் கொண்டான்! அதை அண்ணன் ராமனும் நம்பவில்லை—ஆனாலும் எதிரேயுள்ள மந்திரி பிரதானிகளுக்காக இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள்!

சிஷ் : ஆமாம்!

பாக : அப்படி ஒருவரை யொருவர் தழுவிக் கொள்ளும் போது என்ன நடந்தது தெரியுமோ?

சிஷ் : மறைத்திருந்த புலி நகத்தால் குத்திக் கொன்று விட்டான்!

பாக : அடே முட்டாள்! அது சிவாஜி கதையடா?

சிஷ் : ஆமாம்!

பாக : இருவரும் தழுவிக் கொண்டதைக் கண்ட அரண்மனைவாசிகள் ஆனந்த பாஷ்பம் பொழிந்தனர்!—

சிஷ் : ஆமாம்!

பாக : உடனே பரதன், ராமனைப் பார்த்து, "அண்ணு! நீதான் தந்தை சொல் தட்டக் கூடாதென்று ஆரண்யம் வந்துவிட்டாய்!...உனக்குப் பதிலாக உன் பாதுகைகளைக் கொடு! அவைகளுக்குப் பட்டங் கட்டி, அதன் பிரதிநிதியாக நான் ஆளுகிறேன்" என்று, ராமனுடைய காலிலேயிருந்த பாதுகைகளைக் கழற்றிக் கொண்டான்!

சிஷ் : ஆமாம்!

பாக : ராமனும் வேறு வழியின்றி, மாணிக்கக் கல் மறைத்திருந்த பாதுகைகளைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

சிஷ் : ஆமாம்!

பாக : அப்படி ராமன், பாதுகைகளைக் கொடுத்திலும் ஒரு சூழ்ச்சியிருந்ததை பரதன் உணர முடியவில்லை. கைகேயியும் உணர முடியவில்லை!

சிஷ் : ஆமாம்! உணர முடியவில்லை!

பாக : பாதுகையிலே மாணிக்கக் கல்! மண்டலங்களை விலை கேட்கக் கூடிய மதிப்பு வாய்ந்த மாணிக்கக் கல்! அதனால் அவைகளைத் தலையிலே வைத்து தூக்கிக் கொண்டு போனான் பரதன்!

சிஷ் : ஆமாம்!...

பாக: அதன் பிறகு, சில வருஷம் கழித்து கைகேயி, இறந்துவிடவே, அதைக் கேள்விப்பட்ட ராமன்—விபீஷண, சுக்ரீவர்களுடைய படைகளுடனே, அயோத்தி நோக்கி படை எடுத்தான்!

சிஷ் : ஆமாம்!

பாக : தனக்குரிய நாட்டில் ராமன் படை எடுப்பது அநியாயம் என்று பரதன் வாதிட்டான்—

சிஷ் : ஆமாம்!

பாக : பதினாலு ஆண்டு, என் பாதுகை நாட்டை ஆண்டிருப்பதால்...ஆளும் அனுபவ பாத்தியதை எனக்கே உரியது என்று ராமன் பதில் கொடுத்தான்...

"பன்னிரண்டு ஆண்டுக்கு மேல் போனாலே பாத்தியதை வந்துவிடுகிறது; அதுவும் பதினாலு ஆண்டு என்றால், பாத்தியதை வந்தது நியாயந்தானே" என அண்டமா முனிவரெல்லாம் அபிப்பிராயம் தெரிவித்தனர்!

சிஷ் : ஆமாம்!

பாக : உடனே, பரதன் நாட்டை விட்டு வெளியேறி, நந்திக்கிராமம் என்னும் ஊரிலே நீக்குண்டம் வளர்க்கச் சொல்லி, அதிலே குதித்து உயிர் விட்டான்!

சிஷ் : ஆமாம்!

பாக : அந்த மாணிக்கக் கல்லும் அவன் மடியிலேயே இருந்து, நெருப்பிலே கருகி, வெடித்துச் சிதறிப் போயிற்று!


சிஷ் : ஆமாம்!

பாக : இந்தப் பரதாயணத்தைப் படித்தவர்கள், படிக்கப் பக்கமிருந்து கேட்டவர்கள்-கேட்டவர்கள் சொல்லிக் கேட்டவர்கள் அனைவருமே...

சிஷ் : மோக்ஷத்திற்குப் போவார்கள்!

பாக : இல்லையடா இல்லை!...படித்தவர்களும் கேட்டவர்களும் மோட்சத்திற்கும் போக மாட்டார்கள்—மோசத்திற்கும் போக மாட்டார்கள்...! பகுத்தறிவு பெறுவார்கள்!...

சிஷ் : நமப் பகுத்தறிவு பதே! பரதாயணம் முற்றிற்று!.....



கோயில் - இரு கோணங்கள்!

1

காட்சி—1 [வீடு]

[மகன் கூடத்தில் மேசையின் எதிரில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறான். தாய் வருகிறாள்.]

தாய்: கோவிலுக்குப் போக வேண்டாமா தம்பி?

மகன்: படித்துக் கொண்டிருக்கிறேனம்மா.

தாய்: கோவிலைவிட முக்கியமா, படிப்பு?

மக: சிக்கலான கேள்வி! ஏனம்மா, படிப்பைவிட கோவிலா முக்கியம்?

தாய்: கோணல் புத்தி! கடவுள் அருளால் கல்வி வரும்! கல்வியால் கடவுள் அருள் கிடைக்குமா?


மக: கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் என்று சொல்லுகிறார்கள் தமிழ்ச் சான்றோர்கள். கடவுள் அருளால் கல்வி வருவது உண்மையானால், கல்விச் சாலைகள் எதற்கு? நான் கஷ்டப்பட்டு படிப்பது எதற்கு?

தாய்: கல்வியால் கடவுள் அருள் கிடைக்குமானால் கட்டியிருக்கும் கோவில்கள் எதற்கு?

மக: என் கேள்வியும் அதுதானம்மா!

தாய்: (திகைப்பு) அப்படியானால் கோவிலுக்குப் போகமாட்டாயா?

மக: போகிறேனம்மா. கோவிலுக்கு அப்பா போகிற வழக்கமாயிற்றே!



தாய் : அவர் 'எக்சிபிஷனு'க்குப் போயிருக்கிறார்.

மக : கோவிலைவிட 'எக்சிபிஷன்' முக்கிய மென்று அப்பா நினைக்கிறார். அது சரிதானே அம்மா?

தாய் : தப்பு. அவருக்கு நாளாவட்டத்தில் கோவில் நினைவு குறைந்து கொண்டு வருகிறது.

மக : காரணம் ?

தாய் : ஏழ்மைதான் !

மக : ஆமாம் அம்மா; பணக்காரருக்குத்தான் கோவில், கும்பாபிஷேகம், தேர், திருவிழா எல்லாம். அப்படியிருக்கும்போது...?

தாய் : இப்போது கோவிலுக்குப் போகமாட்டேன் என்கிறாயா ?

மக : போகிறேனம்மா. அப்பா கோவிலுக்குப் போகாவிட்டால் நீங்கள் போவீர்களே அம்மா ?

தாய் : பெண்கள் போகிற மாதிரியாகவா இருக்கிறது, இன்றைய கோவில்கள் !



மக : உண்மை !...விபப்பு ! தாய் நுழையத் தகுதியற்ற கோவிலில் இந்தச் சேய் நுழையலாமா, அம்மா ?

தாய் : அப்படியானால் இப்போது கோவிலுக்குப் போக மாட்டாயே...

மக : போகிறேனம்மா.

தாய் : அபிஷேக ஆராதனைக்குரிய சாமான்கள் எல்லாம் இதோ ! இந்தா பணம். (பணத்தை நீட்டுகிறாள்.)

மக : (பணத்தை வாங்காமல்) பரமன் பூசனைக்குப் பணம் எதற்கம்மா ?

தாய் : கோவிலில் நுழைய டிக்கட் ! மூலவரை நெருங்க டிக்கட் !

மக : 'ஷோ' கொட்டகை மாதிரி ! டிக்கட் வாங்கா விட்டால் ?

தாய் : கதவின் தாழ் கடுகளவும் நகராது.

மக : அன்புதானே அம்மா சிவம் ! அதற்கு அடைக்கும் கதவு ஏன் ? அகற்றும் தாழ் எதற்கு ?

தாய் : பெரியவர்கள் ஏற்பாட்டில் பிழை சொல்லலாமா தம்பி ?

மக : அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ?–நீங்கள் சொல்லும் பெரியோர்களை நோக்கித்தானம்மா திருவள்ளுவர் கேட்கிறார் இப்படி.

தாய் : கோவில் வருமானத்திற்காக அப்படி வைத்திருக்கிறார்கள்.

மக : நல்ல கூட்டுக் கம்பெனி ! இன்னும் என்ன அம்மா செலவு ?

தாய் : அபிஷேகம் ! சாத்துபடி ஆனபின்பு, அய்யர் அர்ச்சனை என்று வருவார். தட்சணை கொடுக்க வேண்டும். அதன் பிறகு உன் பெயர், குலம்–கோத்திரம், நட்சத்திரம் எல்லாம் கேட்பார்.

மக : வகுப்புவாத விலாசம் ! எதற்கம்மா ?

தாய் : தமிழிலே கேட்டுக் கொண்டு போய், சிவ பெருமானிடம் இன்ன விலாசத்தாரை நல்லபடி வைக்க வேண்டும் என்று சமஸ்கிருதத்திலே...

மக : 'ரெகமண்டேஷ'னு ? ஏனம்மா தமிழிலே சொன்னால் சங்கரனுக்கு விளங்காதா ? தென்னாடுடைய சிவனே போற்றி என்றாரே மாணிக்கவாசகர் ; சிவபெருமான் திராவிட நாட்டு ஆசாமிதானே அம்மா !

தாய் : அதெல்லாம் தமிழிலே சொல்லக் கூடாது என்று சொல்லுகிறார்கள்.

மக : எந்த மடப் பயல் ! தமிழை அருளிச் செய்து, தமிழர் கட்டிய திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் தென்னாடுடைய சிவ பெருமானுக்கு தமிழ் நஞ்சமானால், செந்தமிழுக்கு ஏற்பட்டுள்ள அவமதிப்பு கொஞ்சமா அம்மா ! தாய் மொழியை தலை கவிழ்க்க நிருவப் பட்டதே சங்கரன் கோவில் என்றால், எந்த நாய் அணுகும் அந்த நச்சுப் பொய்கையை !

தாய் : அப்படியானால் இப்போது கோவிலுக்குப் போகமாட்டாயா ?

மக : போக வேண்டுமா ?

தாய் : (கோபமாக) என்ன–போக வேண்டுமா ?

மக : போகிறேனம்மா. நான் கோவிலுக்குப் போய் திரும்பி வர எவ்வளவு நேரமம்மா பிடிக்கும் ?

தாய் : அபிஷேகம், சாத்துபடி, ஆராதனை, வேத பாராயணம், பிரசாத விநியோகம், பெரிய மேளம்–சின்ன மேளம், சாமி–அம்மன் திருப்பள்ளி, திருக்கடைக் காப்பு, பண்டாரத்தின் தேவாரப் பண்ணோடு கோவில் கதவடைப்பு !

மக : தமிழுக்கு என்ன அவமதிப்பு ! போகவா அம்மா ?

தாய்: (கோபமாக) என்ன–போகவா அம்மா!

[மகன் கோவிலுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு போகிறான்.]

*

காட்சி-2 [கோவில்]

(கோவிலின் எதிரில் நூற்றுக் கணக்கான ஆண், பெண் பிச்சைக்காரர்கள் இரு வரிசையாக உட்கார்ந்து கோவிலுக்கு வருவார் போவாரை நோக்கிக் கெஞ்சி அழுகிறார்கள்.)

1. கால் இல்லாதவன் அய்யா!
2. இரண்டு காலும் இல்லாதவனய்யா!
3. கையில்லாதவனய்யா!
4. இரண்டு கையுமில்லாத முண்டம் அய்யா.
5. கண் தெரியாத கபோதி அய்யா!
6. இரண்டு கண்ணும் தெரியாதவன் அய்யா!
7. புண்ணு புடிச்சவன் அய்யா!
8. புண்ணு வெடிச்சு புழுவு நெளியுதய்யா!
9. புள்ளைத்தாச்சி அய்யா!
10. பச்சைப் பிள்ளைக்கு பால் இல்லை அய்யா!

(பணக்காரக் குடும்பம் சில பிச்சைக்காரர்கள் நீட்டிய கைகளை 'சீச்சீ' என்று விலக்கிக் கொண்டு கோவிலுக்குள் போகிறார்கள், பூசனைத்தட்டுகளோடு அவர்கள் ஏறிவந்த கார்கள், முழக்கத்தோடு ஒரு புறம் குழுவுகின்றன.)

மகன்: (இக் காட்சியைக் கண்டு) பணக்காரரின் நடிப்பு! பஞ்சைகளின் துடிப்பு! பசி பசி என்று ஏந்திய கைப்பந்தலின் கீழ் குனிந்து போகிறார்கள், கொடிய நெஞ்சம் படைத்தவர்கள். ஏங்கித் துடிக்கும் ஏழைகளைக் கண்டும் இரக்கங் காட்டாதே; என் தரகர்களின் நன்மை கருதி என் கோவிலுக்கே தட்டு எடுத்துக் கொண்டு வா என்று கூறுகிறதா இதிலுள்ள சிற்பச் சிலை? இரக்கமே உருவாயமைந்தவன் எல்லாம் வல்ல எம்பெருமானென்றால், ஏழைகளைக் கண்டும் இரக்கமில்லாமல் உள்ளே செல்லும் இவர்கள் உள்ளத்தை அவன் அருளா அண்டும்? இல்லை; இருள்தான் மண்டும்!

(இதற்குள் அவன் அருகில் அழுகின்ற பிள்ளையைக்காட்டி அலறுகின்றாள் ஒருத்தி.)


ஒருத்தி: பச்சைக் குழந்தைக்கு உதட்டில் பால் பட்டு பத்துநாளிருக்குமய்யா!

[மகன் பால் செம்பை எடுத்து அவளிடம் கொடுக்கிறான். பழத்தில் இரண்டைப் பிய்த்து அவளிடம் கொடுக்கிறான். அதைக் கண்ட பிச்சைக்காரர்கள் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். அனைவருக்கும் எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறான். கால் இல்லாதவர்களும் கண் இல்லாதவர்களும் இவனை அணுகும் முயற்சியில் தடுமாறி விழுந்து அலறுகின்றார்கள். பதறி ஓடி அவர்களை எல்லாம் தாங்கி நிறுத்திக் கையிலிருந்த பணத்தையெல்லாம் பங்கிட்டு விடுகிறான். மீந்திருந்த தட்டையும் வெறுங்கையோடு இருந்த கிழவனிடம் கொடுத்து விடுகிறான். கிழிந்த துணி போர்த்திய ஒரு கிழவிக்கு அவள் கெஞ்சியது கேட்டுத் தன் மேலாடையைப் போர்த்துகின்றான். கையை மெய்யில் போர்த்திய மற்றொரு கிழவனுக்கு தன் சட்டையை கழற்றிப் போடுகிறான். இடையில் கட்டியிருந்த எட்டு முழ வேஷ்டியில் பாதியை ஒரு பச்சைக் குழந்தையின் பரிதாபங் கண்டு கிழிக்க முயலுகையில், பிச்சைக்காரர்கள் இரக்கத்தால வேண்டாம் என்று தடுக்கிறார்கள். ஓர் அர்ச்சகன் கோவிலுக்குள்ளேயிருந்து வெளியே வருகிறான்]

அர்ச்சகன்: நோக்கு இதுதானே கோவில்?

மகன்: ஆம், நடமாடும் கோவில்.

அர்ச்: கொண்டு வந்ததை கோவிலுக்குண்ணே கொடுக்கணும்?



மகன்: (பாட்டு)

படம் ஆடு அக்கோவில் பரமர்க்கு ஒன்று ஈயில்
நடம் ஆடு அக்கோவில் நம்பர்க்கு அஃது ஆகா
நடம் ஆடு அக்கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படம் ஆடு அக்கோவில் பரமர்க்கு அஃது ஆமே.

நடமாடும் கோவில்களாகிய இந்த ஏழைகளுக்கு ஒன்று கொடுத்தால், படம் ஆடு கோவிலில் எழுந்தருளியிருக்கிற பரமர்க்கு கொடுத்தது மாதிரி. அதை விட்டு கோவிலிலுள்ள சிலைக்கு ஒன்று செலவிட்டால், அது இந்த ஏழை மக்களை ஏமாற்றிய மாதிரி.

அர்ச்: சுயமரியாதைக்காரர்கள் பேசும் பேச்சு! நடராஜமூர்த்தியை நசுக்க நல்ல தந்திரம்!

மகன்: நான் சொன்னது திருமூலர் திருமந்திரம்.

(ஏழைகளை மற்றொரு தரம் பார்க்கிறான். அவர்கள் ஆசையோடு ஒவ்வொன்றை அருந்தி மகிழக் கண்டு தன் முகத்தில் மகிழ்ச்சி காட்டிச் செல்லுகிறான்.)

காட்சி 3 — [வீடு]

தாய: இதென்ன அலங்கோலம்! யார் உன்னை இப்படி வருந்தச் செய்தார்?

மக: சிவபெருமான் தன் திருமேனி காட்டி என்னைத் திருந்தச் செய்தாரம்மா. யாரும் வருந்தச் செய்யவில்லை.

தாய்: சிரிப்பு வருகிறது. திருமேனி காட்டுவதாவது; நீ பார்ப்பதாவது!

மக: உண்மையம்மா. இரக்கமே அவர் திருமேனி. என் இதயம் அதுவாயிற்று.

தாய்: எங்கே தம்பி?

மக: கோவிலில்தானம்மா.

தாய்: எந்தக் கோவிலில்?

மக: நீங்கள் சொன்ன படமாடும் கோவிலின் பாதையில் வருந்தும் நடமாடுங்கோவில்களில்!

தாய்: அப்படி என்றால்...?

மக: அல்லலடையும் அனைதைப் பிச்சைக்காரர்கள்.

தாய்: கோவிலுக்குப் போகவில்லை...?

மக: ஆலயம் என்னை அழைக்க வில்லையே; எம்பெருமான் என் நெஞ்சத்தை இழுக்க வில்லையே; அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பார்கள். எழுத்தறிவித்தவன் இறைவன் என்பார்கள். இயல்புடைய இந்த மூன்று தெய்வங்களும் என் மனத்தை துறந்ததே இல்லை; நான் அவர்களை மறந்ததே இல்லை. கோவில் என்னை கூப்பிட வில்லை தாயே!

தாய்: கொண்டுபோன சாமான்கள் எங்கே? குட்டை எங்கே; சட்டை எங்கே; என்னடா கூத்தாடுகின்றாய்!


மக: சொன்னேனே அம்மா. பாலுக்கு அழும் பிள்ளைக்குரியது நீங்கள் தந்த பால்—பசியால் துடிக்கும் பஞ்சைகளுக்குரியதல்லவா நீங்கள் தந்த பழம்—எண்ணெய் அறியாமல் ஈரும் பேனும் பிடித்த தலைகளுக்குரிபதல்லவா நீங்கள் கொடுத்த எண்ணெய்-தேனும் கரும்பும், நீங்கள் கொடுத்த செவ்விளநீரும் கூனுங் குருடுமாய் பஞ்சப் படுகுழியில் பதைப்பவர்களுக்கு அளித்தேன்! அவர்கள் பசி தீர்வதைக் கண்டு களித்தேனம்மா!

தாய்: களிப்பு!

மக: அதுதானம்மா ஆண்டவன் அருளின் துளிப்பு!

தாய்: சாமான்கள், சாமான்கள் இருந்த தட்டு, சட்டை, குட்டை, சாமிக்கு தந்த பணம்—எல்லாம்..

மக: அவை இல்லாதவர்களுக்கே சொந்தமம்மா. எல்லாம் வல்ல ஏகனுக்கு அவற்றால் என்ன



பிரயோஜனமம்மா. கேர்வி லீல் காணும் கொல்லன் கை வேலைக்கும் தாயினும் சிறந்த தயாபரனுக்கும் சம்பந்தம் ஏதம்மா!

எட்டுத் திசையும் பதினாறு கோணமும்
எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை
மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பர்
கருத்தில் வையார்
பட்டப் பகலை இரவென்று கூறிடும்
பாதகரே.

(தாய் வியப்போடும், ஆத்திரத்தோடும் மகனைப் பார்க்கிறாள். மகன் அச்சத்தோடும் மகிழ்ச்சியோடும் அன்னை முகம் பார்க்கிறான்.)

*

2

காட்சி-1

[பெண்களின் அழுகுரல் கேட்கிறது. அங்கொரு மரத்தடியில் ஆறுமுகன் உட்கார்ந்து ஏடு திருப்புகிறான். ஆனைமுத்து வருகிறான்.]


ஆனைமுத்து: ஐயா, என்ன அழுகுரல்? வீதி உற்சவத்தில் வேத பாராயணமா?

ஆறுமுகன்: கொலைக்களத்திலே! கோதைபாரின் நிலாம்புரி ராகம்!

ஆனை: யாரோ இறந்து விட்டார்கள் போலிருக்கிறது.

ஆறு: பூ! சைவக் கழுமரத்திலே, சமணப் பழங்களின் சதையைத் தின்னப் பருந்தும் தெரிந்து வட்டமிடுகின்றன--ஊர் நரிகளும் தெரிந்து ஊளையிடுகின்றன. நீர் மதுரை ஆசாமியாயிருந்தும் வர்த்தமானந் தெரியவில்லை.

ஆனை: நான் மதுரையல்ல. தொண்டைநாடு. மிளகு முதலிய பண்டம் வாங்கச் சேரநாடு செல்லுகின்றேன்.



ஐயா கழுமரத்தில் சமணரா? - ஏன் ஐயா, மதிக்கத் தக்க மதுரையில் சதிக்கும் இடமா? மதுரை மன்னன் ஆட்சியில் மத வாதிகளின் சூழ்ச்சியா? என்ன நடந்தது ஐயா?

ஆறு: நீர் பலநாடும் சுற்றுபவர். உள்ளதை உம்மிடம் சொல்லத் தான் வேண்டும்.



இந்தப் பாண்டிய நாட்டு மன்னர் இருக்கிறாரே, அவர் சமணப் படுகுழியில் வீழ்ந்து கிடந்தார்...சரியா அது?

ஆனை: அது மடமை. நடுவு நிலைமை அல்லவா அரசனுக்கு உடைமை! எந்த மதத்திலும் சேராதிருப்பதே மன்னன் கடமை!

ஆறு: அரசர் சமணர்! தீர்ந்ததா? ஆதிக்கம்—சமணர்களுக்கே! தீர்ந்தது! அதனால்—இந்த நாட்டில் பெரும்பான்மை ஜனங்கள் சமணர்களானார்கள்! ஆனால் நல்ல வேளையாக அரசர் மனைவி மங்கையர்க்கரசி, மந்திரி குலச்சிறை இருவரும் ஒன்று. சைவ மதத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனை: தீர்ந்தது! தீர்ந்தது தமிழரின் செம்மை நெறி! கூன் பாண்டியன் கொள்கை வேறு—மங்கையர்க்கரசியார் மதம் வேறு. கற்பின் இலக்கணத்தைக் கடலுலகுக்குக் காட்டிய மதுரை அரசியல் மஞ்சத்தில், எதிர்ப்பான இரண்டு உள்ளங்கள்! பிறகு?

ஆறு: சமணரைத் தொலைக்க வேண்டும். சர்க்காரைச் சரிக்கட்ட வேண்டும்! இது அமைச்சர், அம்மையார் இருவரின் அந்தரங்கம்.

ஆனை: பெரிய இடத்தில் களங்கம்!

ஆறு: இப்படி இருக்கையில் சம்பந்தர் தம் கூட்டத்தோடு மதுரைக்கு எழுந்தருளினார். மந்திரியும் மங்கையர்க்கரசியாரும் மகிழ்ந்தருளினார்கள்.

ஆனை: இருக்காதா? கழுத்தரியும் சிறுத் தொண்டர்களுக்குக் கத்தி ஒன்று கிடைத்தால் மகிழாமலா இருப்பார்கள்!

ஆறு: அரசியும் அமைச்சரும், வந்த சம்பந்தரை தனியாக ஓர் மடத்தில் குடியேற்றினார்கள்.

ஆனை : ஆம்! கோள்மூட்டும் விழாவுக்குக் கொடி யேற்றினர்கள்.

ஆறு : சம்பந்தரின் மதுரை விஜயம் கண்ட சமணர் களுக்கு ஒரே பயம்...

ஆனை : படுக்கை அறையில் மூட்டைப் பூச்சி கண்ட மாதிரி.

ஆறு : ஏன் பயம், என்று கேளும்.

ஆனை : கேட்பானேன்? அஞ்சாத வஞ்சப் பிறவி யல்லவா மூட்டைப் பூச்சி.

ஆறு : 'வந்து விட்டானே சம்பந்தன். எங்களை வஞ்சித்து கெடுத்து விடுவானே'—என்று கூக்குரல் இட்டார்கள் சமணர், கூன்பாண்டிய னிடம் தற்கு அந்த ஒரு ஞானமுமில்லாத கூன்பாண்டியன் திருஞானசம்பந்தர் மடத்தில் தீ வைக்கும்படி சொன்னன்.

ஆனை : சொன்னால்?

ஆறு : தி வைத்தார்கள்!

ஆனை : வைத்தவர்கள்?

ஆறு : சமணர்.

ஆனை : நம்புகிறீரா? "கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே" என்ற கொள்கை யுடைய சமணர் இப்படிச் செய்திருப் பார்களா?

ஆறு : கொல்லா விரத மட்டுமல்ல; எல்லா விரத மும் சமணர்க்கு ஏட்டளவில்தான்.

ஆனை : தீ இட்டதால் செத்தவர்கள் எத்தனை பேர்?

ஆறு : யாரும் சாகவில்லை!

ஆனை : மடத்துக்கு?

ஆறு : அழிவு ஒன்றும் இல்லை. ஏனென்றால் அரச னால் இடப்பட்ட தீ அரசனிடமே திரும்பிச் சென்று அவன் அடிவயிற்றில் கொடிய வெம்பு நோய் ஆகி விட்டது.

ஆனை : அரசர் பிழைத்தாரா?

ஆறு : சாகவில்லை. சமணரை அழைத்தார். தாங் காத நோயை தணிக்கச் சொன்னர். அவர் களால் முடியவில்லை. இதுதான் சமயம் என்று மந்திரியும் மங்கையர்க்கரசியும் சம்பந்தரிடம் ஓடி இந்த நோய் தீர்க்கும் போட்டிப் பந்தயத் தில் கலந்து கொள்ள அழைத்தார்கள்.

ஆனை : இதுதான் சமயம் என்று அவர் ஒத்துக் கொண்டிருப்பார்.

ஆறு : அதுதான் இல்லை. சம்பந்தர் நேரே கோவி லுக்கு ஓடினர். பதிகம் பாடினர்.

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதம் இல்லி அமணொரொடு தோரை
வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே!

சமணரை அழிக்க உத்திரவு கொடுக்கிறீரா, கோவிற் கடவுளே—என்று கேட்டார்.

ஆனை : உத்திரவு கிடைத்ததா?

ஆறு : ஓ! உள்ளத்தில் புகுந்து உத்திரவு கொடுத்திருப்பார்.

ஆனை : அன்பர் கேட்கிறார், சமணரை அழிக்கவா என்று. அன்பு கொடுத்ததாம் 'உத்தரவு; அழி அழி' என்று. நற்றமிழ் நாடு நாணி யிருக்குமே—முத்தமிழ் சான்றோர் வெட்கித் தலை குனிந்திருப்பார்களே ஐயா—பிறகு?

ஆறு : சமணரால் தீர்க்க முடியாத அரசர் நோயை சம்பந்தர் தீர்த்தார். இது மட்டுமல்ல; ஏடெழுதி தீயில் இடுவது—ஏடெழுதி ஆற்றில் இட்டு எதிரேரச் செய்வது ஆகிய பந்தயங் களிலும் சம்பந்தர்க்குச் சரியான வெற்றி. சமணர்க்கோ சகிக்க முடியாத தண்டனை.

ஆனை : விவரம்?

ஆறு : எண்ணாயிரம் சமணர் கழுவேற்றப்பட வேண்டும்.

ஆனை : ஆ!

ஆறு : அவர்களின் ஏந்திழைமார் கூந்தல் விரித்து கோ வென்று அழுவதுதான், அதோ அந்த சுருதி கூட்டாத வேதப் பாராயணக் குரல்கள்!

ஆனை : இந்தப் படு கொலைக்கு சம்பந்தர் ஒப்பினர் அல்லவா?

ஆறு : அந்தச் சுவருக்கு அப்பால் எண்ணாயிரம் கழு மரத்தின் கொழு முனை கிழித்த சமணர் உடம்பின் குருதி வெள்ளம் சம்பந்தர் திரு வுள்ளம்! இம்மதம் அவர் சம்மதந்தானே!

ஆனை : கோவில்!—அரசன்!—மதம்! இந்த முத்தலைச் சூலம் இழைத்த பச்சைப் படு கொலை பழந்தமிழ் இலக்கியத்தில் ஓர் நச்சுப் பொய்கையைச் சேர்த்து விட்டது. இந்த நிலையை விட்டுவைக்கும் நாள் ஒவ்வொன்றும் தமிழ் நாடு கெட்டுப் போகும் நாள்—என்று தமிழர் உணரும் நாள் எந் நாளோ? சமணத் துறவிகள் மேல் இந்தச் சாதாரணங்கள் சாற் றும் குற்றம் சைவ மடத்தில் தீ வைத்தார் என்பது. இது உண்மையானால் மாண்டவர் எத்தனை பேர்? ஒருவரும் இல்லையே!

சமணரின் நோக்கம் சரி! இல்லை என்றால் அது பொறுத்துக் கொள்ள முடியாததா—

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு.

வள்ளுவர் காட்டிய இப்பாதை மண் மூடிப் போனதா? இல்லை; மத வெறியரின் கண் மூடிப் போனதா? ஆளவந்தாரை வசப்

படுத்துவது; தம் அநியாய மதத்தை நிசப் படுத்துவது; அதன் பின் ஏழைகளுக்குக் கெடுதலே - ஏமாந்தால் படுகொலை. இந்த எத் தர்களுக்கு பக்தர் – ஜீவன்முக்தர் – உலகப் பிரசித்தர் என்று பெயர்! ஐயா, காவலர் சமணர் எவர்க்கும் கருணை காட்டவில்லையா?

ஆறு : கருணை காட்டினார், சமணர்க்கு அல்ல; சமணர் இரத்தத்துக்கு அலையும் பருந்துக்கும்–நாய்க்கும்–நரிக்கும்!

ஆனை : தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டதா?

ஆறு : சிரிப்பு வருகிறது. இன்னும் நிறைவேற்றப் படவில்லை என்றால் நிருத்தி விடுவீரோ?

ஆனை : உள்ளத்தைக் கிளரும் கேள்வி! உலகின் ஒரு மூலையில் ஓர் தமிழனின் ஒரு துளி ரத்தம் சிந்தினால் என்றால், உரையில் உருவித் தூக்கிய உலகத் தமிழரின் வாள் ஓடிந்து போகவில்லை–ஆனால் மத மயக்கத்தால் அவை ஓய்ந்து கிடப்பது உண்மைதானய்யா. மெய் யாய்ச் சொல்லுவேன், வீரத் தமிழர் வீறு கொண்டு கிளம்பும் நாள் தூரத்தில் இல்லை.

ஐயோ! மதம்–மக்களை அதம் செய்யும் மதம் இதம் செய்கின்றதாமே!

சைவச் சர்க்கார் சாய்த்த சமணர் தலை இதோ எண்ணாயிரம்!

வைணவம் உடைத்த மண்டைகள் எண் ணற்ற ஆயிரம்!

சங்கரர் சர்க்கார் புத்தருக்கிழைத்ததைப புகலவும் வாய் நடுங்கும்! புத்த மதத்தாரை கண்ட இடத்தில் வெட்ட வேண்டும்; பார்த்தும் வெட்டாமல் விட்டுப் போவாரை வெட்டிப் புதைக்க வேண்டும். சங்கர சர்க்காரின் சட் டம் இது. உருண்ட தலை ஒன்றல்ல; ஒரு கோடி!

இதோ, இந்து மதம்; முஸ்லிம் மதம்; இவைகளுக்குப் பரிந்து பாடுபடும் அறிஞர் களோ பலப் பலர்! இவர்கள் பெருக்கிய போரினால் தெருவில் ஓடிய ரத்த வெள்ளம் ஏரி அல்ல; இந்து மகா சமுத்திரம்!

'மதத்தின் பேரால் நாட்டைக் கொலைக் களமாக்கி விட்டார்கள்' என்றார் ஓர் அறிஞர். 'மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்' என்றார் மற்றொரு பேரறிஞர்.

அண்ணல் காந்தியால் யாருக்குத் தீமை? அகிலத்தின் தந்தையை விட்டதா கோட்சே மதம்!

படுகொலை! மதப் படுகொலை! சாகின்றார் எண்ணாயிரம் தமிழர்கள்!

ஆறு : இல்லை! செத்து விட்டார்கள், போய்ப்பாரும்.

[ஆனைமுத்து ஓடுகிறான்.]

*

காட்சி-2

[எண்ணாயிரம் சமணர்கள் கழுவேற்றப்பட்டு இருக்கிறார்கள். எதிரில் ஏந்திழையார் குப்புற விழுந்து கிடக்கிறார்கள்.]

ஆனை : ஆ!

(ஆனைமுத்து முகத்தில் கைபொத்திக் கொண்டு மல்லாந்து விழுகிறான்.)

(முற்றிற்று)

★



பார்...பார்...
பஞ்சாங்கக்காரன் காட்டும் மோட்சமல்ல;
பாட்டாளியின் உலகம் பார்!...

புகைப்படம்: வி. குப்புராஜ், கொடுமுடி



"அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்—செகுத்து உண்ணுமை நன்று,"

என்பது திருக்குறளில் ஒரு குறள்.

இது "புலால் உண்ணுமை" என்ற தலைப்பில் வந்த ஒன்று. இத் தலைப்பும் கூட "அருளுடைமை" "தவம்" என்ற இரு தலைப்புகளுக்கிடையில் அமைந்து ஒரு தனிச் சிறப்பைப் பெற்றிருக்கிறது.

அறம் என்பது 'கடமை' என்றுரைக்கும். கடமையில் தலையாயது நல்லதைச் செய்து அல்லாததைத் தவிர்ப்பதே! ஆதலின் இக்குறள் 'நன்று' எனறு கூறி நல்லது ஒன்றைச் செய்யத் தூண்டுகிறது.

நல்லது, கெட்டது என்பது எழுத்தில், பேச்சில், எண்ணத்தில், செயலில் மட்டுமல்ல; உண்ணும் பொருளிலும் உண்டு என்று உணர்த்துகிறது இக்குறள்.

'உண்ணுமை நன்று' என்பதிலிருந்து உண்ணக்கூடாத பொருள்களில் புலாலும் ஒன்று என்பது வள்ளுவர் கருத்து என அறியவேண்டியிருக்கிறது.

'உண்பது தீது' என்று கூறாமல் 'உண்ணுமை நல்லது' என்று கூறியிருப்பது தமிழ்ப் பண்பும், தமிழர் நெறியும் ஆகும் என்பதனை இக்குறள் நன்கு அறிவிக்கிறது.

புலாலுண்ணுமை மட்டுமல்ல; உயிரைப் போக்காமையும் நல்லது என்பது இக்குறளின் கருத்து. இதனை 'உயிர் செகுத்து' என்ற சொற்கள் அறிவிக்கின்றன.

தன் ஊனைப் பெருக்குவதற்காகப் பிற ஊனைத் தின்பதும், தன் உயிரை வளர்ப்பதற்காகப் பிற உயிர்களை அழிப்பதும் மக்கட் பண்புடையவர் செயல் அல்ல என்பதை இக்குறள் கூறாமற் கூறுகிறது.

தொல்லைகளைக் கண்டு ஈ, எறும்புகளைக் கொல்லுவதை விட, பயங்கொண்டு பாம்பு, தேள்களைக் கொல்லுவதை விட, "உண்ணவேண்டும்" என்ற ஆசை கொண்டு உயிர்களைக் கொல்லுவது கொடுமையினுங் கொடுமையாகும் எனபது இக்குறளின் கருத்து. இதனை "உயிர் செகுத்து உண்ணுமை" என்ற சொற்றொடர் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

கொன்று உண்ணும் மக்களைக் கண்டும் வள்ளுவர் வருந்தாமல், 'துன்பம் நேரும், பாவம் வரும், நரகம் கிடைக்கும்" என்று அச்சுறுத்தியுங் கூறாமல், "கொன்று உண்ணுதிரு! அது நல்லது" என்று மட்டும் கூறியிருப்பது புண்பட்ட நெஞ்சத்தை உண்டாக்க விரும்பாத அவரது பண்பட்ட உள்ளத்தையே நமக்குக் காட்டுகிறது.

'கொல்லத்தான் கூடாது; கொன்றதை உண்ணலாம்" என்ற கொள்கையினரின் வாதத்தை வள்ளுவர் மறுத்து, "கொல்லுவதும் தீது; அதை உண்பதும் தீது" என்ற தமது கருத்தை இக்குறள் மூலம் விளக்கிக் கொண்டிருக்கிறார்.

"கொல்லாமையும், உண்ணுமையும் நல்லது" என்பதோடு இக்குறள் நின்றுவிடவில்லை. இவ்வாறு செய்வதால் பெரும் பலன் உண்டு என்பதையும் இக்குறள் அறிவிக்கிறது.

"வேள்விகளைச் செய்வதால், விரும்பியவைகளைப் பெறலாம்" என்பது ஒரு நம்பிக்கை. அத்தகைய பெரும் பேறுகளை ஊன் உண்ணுமையாற் பெற முடியும் என்பது வள்ளுவர் நம்பிக்கை என்பதை இக்குறளால் அறிய முடிகிறது.

அது எவ்'அளவு' நல்லது என்பதை காட்ட ஒன்று, பத்து, நூறு என உயர்த்திப் பின் ஆயிரம் வேள்விகளைச் செய்து பெறுகின்ற பெரும் பேறுகளை "புலால் உண்ணுமை"

என்ற ஒன்றினால் மட்டும் பெற முடியும் என அளவைக் கணக்கில் இக் குறளில் அளந்து காட்டுவதைக் கண்டு மகிழுங்கள்.

இவ் 'அளவு' கூறியும் வள்ளுவரது உள்ளம் அமைதி பெறவில்லை. "ஒன்றின் உயிரைக் கொன்று அதன் ஊனை உண்ணுமைக்கு ஆயிரம் வேள்வியும் ஈடு ஆகா" என எண்ணுகிறார். எண்ணிப் பிறகு "அதனினும் இது நல்லது" என்று கூறியிருக்கிறார். இவ் உண்மையை வேட்டலின் என்ற சொல்லே அறிவித்துக் கொண்டிருக்கிறது.

இந்த ஆயிரம் வேள்விகளையும் வேள்வி என்று பொதுவாகக் கூறிவிடாமல் "நெய்யை ஊற்றிச் செய்யப்படும் வேள்விகள்" என்று குறிப்பிட்டிருப்பது பெரிதும் நயம் உடையதாகக் காணப் படுகிறது. இதனை 'அவி சொரிந்து' என்ற இரு சொற்கள் மெய்ப்பிக்கின்றன.

உயிரை வதை செய்து செய்யப்படும் வேள்விகளை ஊன் உண்ணுமைக்கு ஒப்பிட்டுக் கூற வள்ளுவரது உள்ளம் ஒப்பவில்லை என்



வள்ளுவர் அச்சுறுத்திக கூறவில்லை !...

பதை இக் குறள் வெளிப் படையாகவே காட்டி விடுகிறது.

"வேள்வி வேட்டலைவிட புலால் உண்ணுமை உயர்ந்தது" என்று இக்குறள் கூறுவது எதன் பொருட்டு?— என எண்ணிப் பார்க்கும் பொழுது வேள்வியில் தன் நல விருப்பும், புலால் உண்ணுமையில் தன் நல மறுப்பும் கலந்திருப்பதன் பொருட்டு-எனத் தோன்றுகிறது.


வட மொழி எதை நல்லது! சிறந்தது! உயர்ந்தது!—எனறு இன்னும் கூறிக் கொண்டிருக்கிறதோ, அதைத் தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஏற்கவில்லை என்பதை இக் குறள் இன்றும் கூறிக் கொண்டிருக்கிறது.


உயிர்களைக் கொன்று, அதன் ஊன் முதலியவைகளை வேள்வித் தீயிற் கொட்டி விண்ணவரை மகிழ்வித்து வேண்டியவைகளைப் பெறலாம் என்பது வேதங்களின் கருத்து. அவ் விதமாயின் புலாலுண்ணும் தேவர்களைவிட உண்ணுதிருக்கும் மக்கள் நல்லவர்கள் என்பது இக் குறளின் கருத்து!

குறளை மறுபடியும் படியுங்கள்: "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செருத்து உண்ணுமை நன்று"


பிற குறள்களிலும் இவ் வாறே புதை பொருள்கள் பல புதைந்து கிடக்கின்றன. ஆதலின் குறளை மேற் போக்காகப் படிப்பதைவிட ஊன்றிப் படிப்பது நல்லது. படித்து மகிழ்வதைவிட அதன்படி நடந்து மகிழ்வது மிகவும் நல்லது.

வாழட்டும் அன்புள்ளம்!
வளரட்டும் அறநெறி!





" உழைக்க உடலெடுத்த மனிதருக்கு—கஞ்சிக்
குடமெடுத்துச் செல்கின்றாரே!....."



செங்குருதிச் சேறுதனைச் சுட்டுச் செங்கல்லாக்கி
பொங்கலுக்கு அடுப்பெடுக்கப் புறப்பட்டான் பாட்டாளி!



ஒரே மொழி பேசும் மக்கள் வாழும் நிலப் பரப்பு இரண்டு நாடாகப் பிரிக்கப் பட்டால் அதனுல் இடையூறு ஏற்படுவ தில்லே. இரண்டு நாடுகளுக் கும் இரு வேறு ஆட்சி அமை கின் ற து. பொருளாதாரம் முதலியவற்றில் சார்ந்து வாழ வேண்டிய காரணம் இருந் தால் அந்த இரண்டு நாடு களும் உறவு கொண்டு வாழ் கின்றன. இல்லையானுல் பகை கொண்டு வாழ்கின்றன.

ஆனுல் வேறு வேறு மொழி பேசும் மக்கள் வாழும் நிலப் பகுதிகளே ஒரு நாடாகச் சேர்த்து அமைக்கும்போது இடையூறு ஏற்படுகின்றது. நாட்டின் ஆட்சியில் மொழி ஒன்றுக இருக்க முடிவதில்லே. இரண்டு மூன்று மொழிகளே யுடைய ஆட்சியாக அமைக்க வேண்டி வருகின்றது. அந்த நாட்டுச் சட்ட சபையில் இரண்டு மூன்று மொழிகளுக்கு இடம் தர நேர்கின் றது. கல்விக் கூடங் களிலும் அலுவல கங்களிலும் பல மொழி அறிவு தே வையாகின்றது. இத னுல் எவ்வளவோ முயற்சியும் காலமும் பொரு ளும் வீணுகின்றன என்றேகூற லாம். இதைத் தடுக்கவோ வழி இல்லே. இன்று இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழி பேசுவோர் வாழ்வதால் இத்தகைய சிக்கல் ஏற்பட்டுள் ளதைக் காணலாம்.

ஒரே மொழி பேசுவோர் மொழியின் காரணமாக ஒன்று சேர்ந்து வாழ்வார்கள் என்று எண்ணுவதற்கும் இல்லே. அவர்களுக்குள் வேறு காரணத் தால் பகைமை ஏற்பட்டு இரு வேறு நாடாகப்பிரிந்து வாழ்வ தையும் காணுகின்ருேம். கிழக்கு வங்காளமும் மேற்கு வங்காளமும் மொழி ஒற்றுமை இருந்த போதிலும் வெவ்வேறு அரசியலேக் கொண்டு பிரிந்து அமைந்துள்ளன. வேறு வேறு மொழி பேசுவோர் எந்தக் காரணத்தாலோ உறவு கொண்டு ஒரு நாடாக அமைந்து வாழ்வதும் உண்டு.



மொழியால் வரும் சிக்கலேயும் கடந்த பெரிய உறவு இருப் பதே அதற்குக் காரணம் ஆகும்.

ஆகவே பகைக்கும் உறவுக் கும் மொழி காரணம் அல்ல என்று புறக்கணிக்கலாமோ என்ருல் அது கூடாது. பிரிந்து வாழ்ந்தாலும் மொழி வேண் டும்; சேர்ந்து வாழ்ந்தாலும் மொழி வேண்டும். தனி மனி தர் வாழ்வே ஆனுலும், நாட்டு மக்களின் ஆட்சி ஆனுலும் மொழி இன்றியமையாதது ஆகின்றது. மொழிக்கு முதல் இடம் இல்லேயானுலும் இரண் டாவது இடமாவது கொடுத்தே ஆக வேண்டும். அதனுல் தான் ஒரு சின்ன நாடாக இருந்தாலும் இரண்டு மொழி பேசுவோர் உள்ள நாட்டில் அந்த இரண்டு மொழிக்கும் உரிமைவேண்டியிருக்கின்றது. ஏழெட்டு மொழி பேசுவோர் சேர்ந்து வாழும் நாட்டில் ஏழெட்டு மொழிக் கும் இடம்தர வேண் டியிருக்கிறது. அவ் வாறு இடம் தர மறுத்தால் என்ன ஆகும்? ஏழெட்டு மொழிகளில் நாள டைவில் ஒவ்வொரு மொழியாய்ச் செத்

துப்போகும். இரண்டு மூன்று மொழியாய் நிற்கும். காலப் போக்கில் அவற்றிலும் ஒவ் வொன்றுய்ச் செத்துக் கடைசி யில் ஒரு மொழி நிற்கும். அல் லது வேறு எந்தக் காரணத்தா லோ உறவு கொண்டு சேர்ந்து ஒன்றுக அமைந்த மக்கள் இப் போது மொழியின் காரண மாகப் பிரிந்து வேறு வேறு நாடாகப் பிரிந்து போக முயல் வார்கள். இந்த இரண்டில் ஒன்றுதான் நடக்க முடியும். சர்வாதிகார ஆட்சியாக இருந் தால் முன்னது நடக்கும். உரிமை குறைந்த மக்களாட்சி யாக இருந்தால் பின்னது நடக் கும். இந்த இரண்டும் நடக் காமல் இருக்க வேண்டுமானல் அது மொழி உரிமை பெற்ற மக்களாட்சியாக இருக்க வேண் டும். இந்திய அரசியலில் உள்ள சிலர் இந்த உண்மை களே உணர்ந்தோ அல்லது உணராமலோ நெறி தவறிப் போய்க் கொண்டிருக்கின் றனர். வெவ்வேறு மொழி வழங்கும் நிலப்பகுதிகள் இருப் பதை அறிந்தும், நாடு முழு தும் ஒரே மொழி ஆட்சி மொழி யாக இருக்க வேண்டு மென்று விரும்பிக் கூறுகின்ருர்கள். கல்வி நிலையங்களிலும் அலுவ லகங்களிலும் ஒரே மொழி செல்வாக்குப் பெற வேண்டு மென்று கூறி வருகின்றனர். ஆங்கில ஆட்சியின் போது ஒரே மொழி ஆட்சி புரிந்தது போல் இனியும் நாடு முழு தும் ஆட்சிமொழி ஒன் ருக இருக்க வேண்டு மென்று கனக் காணு கின்ருர்கள். ஆங்கில ஆட்சி அன்னிய ஆட்சி; மக்களாட்சி அல்ல. ஆங் கில ஆட்சியின்போது மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமையும் இல்லை. ஆகையால் அன்று நடந் தது இன்றும் நடக்கும் என்று எதிர்பார்ப்பது



.....தாய் தன் மக்களோடு பேசுவதற்கும் தடை.....

வீண் கனவு ஆகும். கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்ற போக்கு ஆகாது. ஒன்று மொழி உரிமை அளித்து மக்களாட்சியைக் காக்க வேண்டும். அல்லது, மொழி உரிமையைப் பறித்து ஆட்சி முறையை மாற்ற வேண்டும். இந்த இரண்டிற் கும் இடைப்பட்டது என்று ஒன்று இல்லை.

மாகாணங்களில் மொழி பற்றிய எண்ணமும் கிளர்ச்சி யும் போராட்டமும் அடிக்கடி தலை எடுக்கின்றனவே என்று சிலர் உளம் நொந்து வருந்து கின்றனர். வருந்திப் பயன் இல்லை. செயல் முறையில் இறங்க வேண்டும். அரசியல்



...அரசியல் சட்டத்தைத் திருத்தி மக்களாட்சி முறை இல்லாமல் மாற்றிவிட வேண்டும்...

சட்டத்தைத் திருத்தி மக்க ளாட்சி முறை இல்லாமல் மாற்றிவிட வேண்டும். அது மட்டும் செய்தால் போதாது; மேலும் இன்னென்று செய்ய வேண்டும். மக்களின் மூளை யோடு நெருங்கித் தொடர்புள் ளது தாய் மொழி. குழந்தைப் பருவம் முதல் இறுதி மூச்சு வரையில் மூளையோடு நெருங் கிய தொடர்புள்ளது மொழி. ஆகையால் அவர்களின் மூளை யில் மாகாண மொழி இடம் பெறுமல் செய்ய வேண்டும். இவ்வாறு மூளையிலே கிள்ளி எறிந்தால்தான் இவர்களின் எண்ணம் நிறைவேறும்,

மக்களின் மூளையில் தாய் மொழி இடம் பெறுமல் செய் வது எப்படி? அந்தந்த மாகாண மக்கள் தம் தம் மொழிகளைப் பள்ளிக்கூடங் களில் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்ய வேண்டும். மாகாண மொழியில் கடிதங் களோ விளம்பரங்களோ எழு தாதபடி தடுக்க வேண்டும். பாட்டுக்களும் படங்களும் பர வாமல் தடுக்க வேண்டும். மாகாண மொழிப் பத்திரிகை களை சட்ட விரோதமாக்க வேண்டும். மாகாண மொழி யில் பொதுக் கூட்டங்கள் நடக்காமல் தடுக்க வேண்டும். நாளடைவில் தெருவில் நான்குபேர்சேர்ந்து அந்த மொழியில் பேசுவதும் அரசியல் குற்றமாக்கப் பட வேண்டும். வீட் டிற்குள் தாய் தன் மக்க ளோடு அந்த மொழியில் பேசுவதையும் தடுத்தே ஆக வேண்டும்.

★



★

கவியிற் பொருந்திய கருத்தெனவே
கரியிடைத் திருந்திய வைரத்தைப்
புவியின் கருவிற் சென்றந்தோ—கொணர்
மனிதர் வாழ்வைக் கொன்றிடவோ ?


ஆழ்கடல் மடியின் அமைதியிலே
அழகொளி தவழும் முத்துகளோ
வாழ்வின் மூச்சை யடக்கியந்தோ—எடுத்தே
வாழ்வோர் மூச்சும் அடங்கிடவோ ?

உழைப்பால் முற்றிய நெற்கதிரை
உதிரம் வளர்த்த பொற் பயிரை
களையா தறுக்க வாரீரே—நம்
கவலை யறுக்கச் சேரீரே !

நரம்பால் நெய்தார் சேலையினை
நல்ல இரத்தக் கோலமுடன் !
விரும்பி யுழைத்த மக்களவர்—சாண்
உடையு மின்றி வெட்கிடவோ ?

வீர உழைப்பால் பயிரிட்டோம்
விளங்கிட உரமதாய் உயிரிட்டோம்
சோரத் தனத்தால் அறுத்திடுவோர்—தம்
செல்வ வாழ்வை ஒறுத்திடுவோம் !

★





(1) தளுக்காக பல்டி அடிக்கும் ராமசாமி படையாச்சி. (2) எல்லா சார்புடையோரையும் சாகசமாய் சமாளிப்பதாக நினைத்து கம்பியில் நடனமாடும் காமராசர். (3) ரஷ்யாவுடன் தொடர்பு கொள்ள துணிவு கொண்டிருக்கும் நேரு. (4) தூதுவர் பதவியை விடாமல் கவ்விக்கொண்டு வெளிநாடுகளில் சுற்றும் விஜய லட்சுமி. (5) பபூன் சுப்பிரமணியம். (6) வடநாட்டோரின் எதிர்ப்பு காரணமாக, இந்தியாவுக்கு அப்பால் தூக்கி எறியப்படும் கிருஷ்ணமேனன்.


அறிவியல்



ஆர்க்கிமிடிஸ்

துவக்க விழா!

★ முறையான விஞ்ஞானத்துக்கு துவக்க விழா நடத்தியவர் சிராகஸ் நாட்டு விஞ்ஞானி **ஆர்க்கிமிடிஸ்.** நீரியல் சக்திகளைக் கருவிகளில் பயன்படுத்தும் முறைகளைக் கண்டறிந்து வரையறுத்த கணித மேதை அவர்! ஆர்க்கிமிடிஸின் தத்துவம் உலகப் பிரசித்தி பெற்றது. கிரிஸ்து பிறப்பதற்குமுன் வாழ்ந்த இப் பெரியார் விஞ்ஞானிகளின் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.



மைக்கேல் பாரடே

மின்சார மயம்!

★ காந்த சக்தியிலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கான டைனமோவைக் கண்டுபிடித்தவர் **பாரடே.** அதற்குப்பின்தான் மின்சார சகாப்தமே உருவாகியது! மின்சார சக்தியின் உதவியால் நாம் பெற்றிருக்கும் இன்பங்கள் அத்தனைக்கும் அவருக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.



டால்டன்


அணுவை உடைக்காதே

★ மூலப் பொருட்களின் பிரிக்க முடியாத அதன் குணங்களே கொண்ட மிகச் சிறிய பகுதிதான் அணு என்று அணுவிற்கு இலக்கணம் வகுத்துக் கூறியவர் **டால்டன்.** "நான் கண்டு பிடித்த அணுவை வீணுக்காதே!" என்று உத்திரவும் போட்டார். அணுவை உடைக்க முடியாது என்பது அவருடைய திடமான நம்பிக்கை. அணுவைப் பற்றி அவர் சொன்ன பிறகு விஞ்ஞான உண்மைகள் புது விளக்கம் பெற்றன!

அன்பளிப்பு
திருமதி கி. வா. ஜ.
'சாந்தமலை'
சென்னை - 600 028.

குரங்கின் சந்ததி மனிதன்!

★ கோபம் வரத்தானே செய்யும்! அவருடைய தத்துவத்திற்கு அவரே எடுத்துக் காட்டு என்று கேலி பேசியோரும் உண்டு. ஆனல் அவர் கூறியதை யாரும் மறுக்க முடியாத வகையில் வாழ்நாள் முழுவதும் சேகரித்த ஆதாரங்களைக் கொட்டினர். இன்று டார்வினின் தத்துவம் விஞ்ஞான உண்மையாகி, புரியாத எல்வளவோ விஷயங்களுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது!



டார்வின்

இன்பம் தந்த ஏந்தல்!

★ மனிதனுக்கான வசதிக்குரிய கிராமபோன், சினிமா, மின்சார பல்ப், டெலிபோன் ஆகிய பல சாதனங்களை அமைத்துக் கொடுத்தவர் எடிசன். மனிதன் அழிந்தாலும் அவன் உருவம் அழியாமல் சினிமாவிலும், குரல் அழியாமல் ரிகார்டுகளிலும் வைத்துக் காப்பாற்றும் தந்திரம் கண்டவர் எடிஸன். அவருடைய வாழ்க்கை ஒரு சுவைமிகு காவியம்.



எடிஸன்

செடி சிரிக்கும்; அழும்!

★ செடி சிரிக்கிறது, அழுகிறது—அதற்கு உயிரிருப்பதால்! இதை அவர் சொன்னபோது எல்லோரும் சிரித்தார்கள்; அவர் சொன்னவைகளை அவர் நிரூபித்தபோது எல்லோரும் வியந்தார்கள்! ரேடியோ அலைகளைப் பற்றி ஆராய்ந்து அதற்கு அஸ்திவாரமிட்டவரும் அவரே. பொருமைக்கு மத்தியில், புல்லர்களின் எதிர்ப்புக்கிடையில் உண்மையொளி பரப்பியவர் ஜகதீஸ் சந்திர போஸ்!



ஜெகதீஸ் சந்திரபோஸ்



மார்க்கோனி

காற்றினிலே வரும் கீதம் !

★ உலகில் யார் எங்கு பேசினாலும், எங்கு வேண்டு மானாலும் கேட்கலாம் என்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நாம் சொல்லியிருந்தால் பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் நமக்கொரு இடம் 'ரிஸர்வ்' செய்திருப்பார்கள் ! ஆனால் காலத்தையும் தூரத்தையும் வெல்லும் 'ரேடியோ' வை மார்க்கோனி கண்டு பிடித்தார்—அதிலும் அதன் தத்துவத்தைப் பத்தொன்பதாம் வயதி லேயே கண்டு விட்டார்—என்பதை எண்ணும் போது விபக்கிறோம் ! அந்த மேதையின் அருஞ் செயலை வாழ்த்துகிறோம்.



கலீலியோ

பாதிரிகளே எதிர்த்த பாபி !

★ ஆண்டவனைத் தரிசிக்க ஆலயத்திற்குச் சென்ற கலீலியோ ஆடிக் கொண்டிருக்கும் விளக்கைப் பார்த்தார். கர்த்தரின் கருணை பெறச் சென்ற இடத்தில் இயற்கையின் இரகசியம் ஒன்றை அறிந்தார். அதிலிருந்து பெண்டுலத்தின் விதி கள் நமக்குக் கிடைத்தன. வானில் உலவும் கோள்கள் கர்த்தரின் விளையாட்டுக் கருவிகளல்ல என்று, அவர் அமைத்த டெலிஸ்கோப்பின் வழி யாகக் கண்டறிந்து கூறிய உண்மை பாதிரிகளை பயப்பட வைத்தது. அதற்காக அவர் பட்ட அல்லல்கள், அப்பப்பா ! இன்று அவர் வாழ ராய்ச்சியின் பிதா—விஞ்ஞானி !




அலெக்சாண்டர் பிளமிங்

என் கடன் பணி செய்து கிடப்பதே !


★ நிறையத் தோன்றி குறைந்த கால அளவில் மறைந்து போகின்ற வைகளைக் காளானுக்கு ஒப்பிடு வது வழக்கம். இவ்வாறு அலட்சியப்படுத்தப் பட்ட காளானிலிருந்துதான் டாக்டர் பிளமிங் பெனிஸிலின் என்ற ஒப்பற்ற உயிர் காக்கும் மருந்தைக் கண்டு பிடித்தார். அதிலிருந்து மருத்து வத் துறையில் 'ஆன்டிபயோடிக்ஸ்' என்ற ஒரு புது சகாப்தமே ஆரம்பமாகியது ! ஆரோமைசின், ஸ்ட்ரெபடோமைசின், குளோரோ மைசிடன் போன்ற அற்புத மருந்துகள் பெனிஸிலினின் வாரிசுகளே !

[தொகுப்பு: பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.]



நோயின்மீது புதுப் போர்!


★ ஒளிவிடும் புதிய பொருளான ரேடியத்தைக் கண்டவர் இவர். ரேடியம் புற்று நோய் போன்ற பொல்லாத நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது. அணு ஆராய்ச்சியிலும் அதன் பங்கு மிகப் பெரிது! ரேடியம் காணும் முயற்சியில் கணவரின் ஒத்துழைப்போடு வெற்றி கண்ட இவர், அந்த உழைப்பாலேயே உடல் மெலிந்து உயிரும் நீத்தார். இந்த அம்மையாரின் வாழ்க்கையை பெண்ணுலகம் போற்றிப் பேண வேண்டிய தொன்றாகும்!



மாடம் க்யூரி

ஏன் உடைக்க முடியாது?

★ டால்டனின் உத்திரவு முடிவானதல்ல; அணுவை உடைத்து அதிலிருந்து சக்தியை வெளிப்படுத்தலாம் என்று சொன்ன சிந்தனை மேதை ஐன்ஸ்டீன். அதிலிருந்து சக்தியும் பொருளும் வெவ்வேறல்ல; ஒன்றே—என்னும் உண்மை வெளிப்பட்டது. நாம் வாழ்கின்ற காலம் அணு சகாப்தம் மட்டுமல்ல; ஐன்ஸ்டீன் சகாப்தமும் கூட.



ஐன்ஸ்டீன்

உடைத்தே விட்டேன்!

★ ஐன்ஸ்டீன் சொன்னதை நடைமுறையில் செய்து காட்டி டால்டனின் ஆணையை மீறியவர் ஓப்பன் ஹீமர்! அணுவைச் சிதைத்து அதிலிருந்து சக்தியை வெளிப்படுத்திய இளம் விஞ்ஞானி அவர். நாகசாகி, ஹீரோஷீமா என்ற ஜப்பானிய நகரங்களில் வெடித்த அணு குண்டுகள் இவர் பெற்றெடுத்த செல்வங்கள்தான். இப்படியெல்லாம் அமெரிக்க வெற்றிக்கு உதவிய இவரைக் கம்யூனிஸ்ட் அனுதாபி என்று கூறி, அணு சக்திக் கமிஷனிலிருந்து அமெரிக்க சர்க்கார் விலக்கி விட்டது!



ஓப்பன் ஹீமர்

[படங்கள்: வைத்திலிங்கம், திருவாரூர்.]



அம்மையாரைப் பற்றி!



நம்முடைய இயக்கத்தின் பழைய கால நிகழ்ச்சிகளைப் பற்றி ஏதாவது எழுதுங்கள் என்று ''முரசொலி'' ஆசிரியர் கேட்டார். எல்லா நிகழ்ச்சிகளையும் எடுத்துச் சொல்லுவதானால் இந்த ஏடு போதாது. எழுபதைக் கடந்து எண்பதை நெருங்கிக் கொண்டிருக்கும் என்னால் இந்தத் தள்ளாத வயதில் அவைகளை யெல்லாம் முறையாக நினைவுக்குக் கொண்டுவந்து எழுதவும் இயலாது. எனவே நானும் பெண்ணினத்தைச் சேர்ந்தவனாக இருப்பதால் என்னைப்போலவே இந்த இயக்கத்துக்காகப் பாடுபட்டு—ஆனால் இப்போது நம்முடன் இல்லாத—நமது ஒரே அன்னையாரான நாகம்மையார் அவர்களைப் பற்றி சில சொல்லலாமென எண்ணுகிறேன்.

1921-ம் ஆண்டில், திருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் மாகாணக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அப்போது நான் மாகாணக் கமிட்டி உறுப்பினர். அந்தக் கூட்டத்தில் திரு. வி. க., டாக்டர் வரதராஜலு நாயுடு, தண்டபாணிப் பிள்ளை, ஆச்சாரியார்—ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியாரும் அவரோடு அன்னை நாகம்மையாரும் வந்திருந்தனர். அங்குதான் அம்மையார் அவர்களை முதன் முறையாகப் பார்த்தேன். அது முதல் அவர்கள் மறையும் வரை — பெரியாரை விட்டுப் பிரிந்ததையே நான் கண்டதில்லை.

கள்ளுக்கடை மறியல் செய்வதென்று காங்கிரசில் தீர்மானம் அமுலுக்கு வந்தபோது அம்மையார் தலைமையாக நின்று மறியலை தீவிரமாக நடத்தினார்கள். மறியல் வெற்றிகரமாக நடந்து வந்ததைக் கண்டு, அப்போது வைஸ்ராயாக இருந்த லார்டு இர்வின் பிரபு காந்தியாரை அழைத்து, எப்படியாவது அந்த மறியலைக் கைவிட வேண்டுமென்று கேட்டபோது, காந்தியார், ''மறியலை நிறுத்தும் அதிகாரம் என்னிடம் இல்லை; அதற்கு ஈரோட்டிலுள்ள ஈ. வெ. ரா. நாகம்மையார் அவர்களைத்தான் கேட்கவேண்டும்'' என்று கூறினார். அந்த மறியலில் பெரியார், ஆச்சாரியார் எல்லோரும் கலந்துகொண்டனர். என்றாலும் அம்மையாருக்குத்தான் பெருமையளித்தார் காந்தியார்.

பிறகு வைக்கத்தில் தீண்டாமை ஒழிப்புகாக சத்தியாக்கிரகம் நடத்தச்செல்லும் போது அம்மையார் என்னையும் அழைத்தார்கள். அதற்கு நான் ''இதைப்பற்றி காங்கிரசில் தீர்மானம் ஒன்றும் போடவில்லை. ஆனாலும் உங்களுக்குத் துணையாக வேண்டுமானால் வருகிறேன்'' என்றேன். உடனே அவர்கள், ''நான் என் கணவன் துணையுடன் செல்கிறேன். வேறு துணை வேண்டியதில்லை'' என்று கூறிவிட்டு வைக்கத்துக்குச் சென்றார்கள். போராட்டத்தில் வெற்றியும் பெற்றார்கள்.

இன்று நம்முடைய கொள்கைகள் நாடெங்கும் பரவி, இதைப் பற்றித் தெரியாதவரே இல்லையென்கிற நிலைமையிருக்கிறது. இயக்கத்தில் பணியாற்றவும் 'நீமுந்தி;நான்முந்தி' என்று ஏராளமான தோழர்கள் இன்று நிரம்பியிருக்கிறார்கள். ஆனால் ஆரம்பக் காலத்தில் இயக்கத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர்தான்

முதாட்டி
இராமாமிர்த்தம்மையார்

இருந்தார்கள். இயக்கத்துக் கென்று நிதியோ, பண வச தியோ கிடையாது. அவரவர் களும் சொந்த வேலைகளை விட்டு இயக்கமே உயிர் என்று முன் வந்தவர்கள். அப்பேர்ப் பட்டவர்களை எப்போதானலும் அன்போடு வரவேற்று, உப சரித்து, ஆதரித்து வந்தவர்கள் அம்மையார்தான். அம்மை யார் மட்டும் இல்லாமலிருந் தால் அப்போது இயக்கத்துக்கு ஆளே கிடைத்திருக்காது; இப் போது இந்த அளவுக்கு வளர்ச் சியும் வந்திருக்காது-என்பது என்னுடைய உறுதியான எண் ணம.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானல், அழகிரிசாமியை (உள்ளுக்குள்) அய்யா வுக்குப் பிடிக்காது. அழகிரி இல்லையானல் இந்த இயக்கமே இருக் காது என்பது அம்மை யாரின் அசைக்க முடி யாத நம்பிக்கை. ஆனல் அடிக்கடி அய் யாவுக்கும் அழகிரிக் கும் வருத்தம் உண் டாகும். அம்மாதிரி நேரங்களிலெல்லாம் அம்மையார் அழகிரி யை அழைத்து 'தந்தை கோபித் தால் தாயிடத்தில் மகன் இருக் கவேண்டியதுதானே முறை' என்றுகூறி ஆறுதல் சொல்லு வார்கள். எல்லோரிடத்திலும் இதைப் போலவே இதமான வார்த்தைகளைச் சொல்லி சமா தானப்படுத்துவார்கள். அன்று பணியாற்றிய யாவருமே அம் மையாரின் அன்புக்குக் கட்டுப் பட்டுதான் இருந்து வந்தார் கள்.

அந்தக் காலத்தில் கழகத் திற்கென்று அமைபபு முறை இல்லை. அதனல் எந்த விஷ யத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமானலும் இயக்கத்தி லுள்ள முக்கியமானவர்கள் ஈரோடு சென்று வரவேண்டும், சொந்தச் செலவில். காங்கிர சுக்கு இருந்ததுபோல் இந்த இயக்கத்துக்கு வெளியார் பண உதவியும் கிடையாது. ஆகவே இப்படிப்பட்ட நெருக்கடிகளுக் கிடையிலும் இயக்கம் வளர்ந்த தென்றல் அதற்கு அம்மை யாரின் அன்பு கலந்த உற்சாக மூட்டும் மொழிகளைத் தவிர வேறு எதுதான் காரணமா யிருக்க முடியும்! ஆனல் அம் மையார் எந்தக் காலத்திலும் மேடையேறிப் பேசியதுமில்லை; எந்தப் பத்திரிகையிலும் எழு



"காந்தியாரின் பாராட்டுக் கடிதத்தை நான் தினம் தோறும் பூஜை செய்தேன்..."

தியதுமில்லை. இயக்கத்தையே வாழ்வாகக் கருதி அவ்வளவு அக்கரையோடு பணியாற்றி வந்தார்கள்.

ஒரு சமயம் காரைக்குடி யில் தோழர் முருகப்பா அவர் கள் முயற்சியால் ஒரு சுயமரி யாதை மாநாடு நடைபெற் றது. அதற்கு மறைந்த தோழர் ஆர். கே. சண்முகம் அவர் கள் தலைமை தாங்கினர்கள். தன்னுடைய தலைமையுரையில், 'தகப்பன் சொத்தில் பெண் களுக்கும் உரிமையிருக்க வேண்டும்' என்று பேசினர் கள். அத்துடன் அந்த மாநாட் டில் அதே மாதிரி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றினேம். இவ்வளவு காலத்துக்குப் பிறகு இப்போது அது சட்ட மாக நிறைவேற்றப்பட்டிருக் கிறது. கால தாமதமாக ஆனலும் இது வெற்றி பெற்றது குறித்து எனக்கு நிரம்ப மகிழ்ச்சி. அந்த மாநாடு முடிவு பெற்றபின் தோழர் முருகப்பா வீட்டில் ஒரு கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதில் நான், அன்னை நாகம்மையார், தோழர்கள் அழகிரிசாமி, எஸ். வி. லிங்கம், ராமநாதன், சிதம்பரனர், குருசாமி ஆகி யோர் கலந்து கொண் டோம். இந்தக் கமிட்டி யில் அழகிரி பெரியார் மீது நம்பிக்கையில் லாத் தீர்மானம் கொண்டு வந்தார். அந்த நேரத்தில், அந் தக் கூட்டத்தில் அம் மையாரும் கலந்து கொள்ளலாமா என்று நான் சந்தேகப்பட்டுக் கொண்டு இருந்தேன். கூட்ட நிகழ்ச்சிகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அம் மையாரோ, பேசாமல் சிரித்துக் கொண் டே உட்கார்ந்திருந்தார்கள். கடை சியில் அழகிரி எழுந்து "தீர் மானத்தை ஆதரிக்கிறீர் களா?" என்று கேட்டவுடன், அம்மையார், "தகப்பன்மீது நம்பிக்கையில்லை யென்று சொல்ல உங்களுக்கு வெட்க மாக இல்லையா?" என்று வேகமாகக் கேட்டார்கள். உடனே அழகிரி சும்மா இருந்து விட்டார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறவில்லை. ஆனல் காலத்தின் மாற்றம்— பிள்ளைகள்மீது நம்பிக்கை யில்லை யென்று நம்முடைய தந்தை கூறும்படி நேரிட்டது.

பின்பு, தோழர் குருசாமி அவரிடம் பணி யாற்றிக் கொண்டிருந்த நேரம். (முன்பு) ஒரு நாள் பெரியார் என்னிடம் 'குருசாமிக்கு ஒரு படித்த பெண் வேண்டும்' என்று கேட்டார். நான் ''பி. ஏ. படித்த பெண் இருக்கிறது ஆனால் குருசாமிக்கு சொத்து ஒன்றுமில்லையே. எதை நம்பி அவருக்குப் பெண் தேடுவேன்''என்றேன். அப்பொழுது தோழர் எஸ். ராமநாதனே ஆசிரியராகக் கொண்டு பெரியார் ''ரிவோல்ட்'' என்று ஒரு ஆங்கில வாரப்பத்திரிகைநடத்தி வந்தார். அந்தப் பத்திரிகையையும், அதோடு தன் சொத்தில் கொஞ்சமும் குருசாமிக்குத் தருவதாகப் பெரியார் சொன்னதால், நானும் சரியென்று குஞ்சிதத்தை மணம் செய்வித்தேன். ஆனால் அதன் பிறகு கொஞ்ச நாட்களில் குருசாமியை வேலையிலிருந்து விலக்கி விட்டார் பெரியார். அன்னை நாகம்மையார் எவ்வளவோ சமாதானம் கூறியும் கேட்கவில்லையாம். உடனே அம்மையார் எனக்குத் தெரிவித்தார்கள். நான் சென்று ''என்ன இப்படிச் சொன்ன வாக்குத் தவறிவிட்டீர்களே? இப்போது அவர்கள் கதி என்ன ஆவது?'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''சரியாக நடக்கவில்லை. எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் போ என்று சொல்லி விட்டேன்'' என்று சொன்னார்.



''ஈரோட்டுக்குத்தான் போக வேண்டும்....''

''பரவாயில்லை. இரண்டு பேரும் பி. ஏ. படித்தவர்கள். எப்படியும் பிழைக்காமலா போய்விடுவார்கள்!'' என்று கோபமாகக் கூறிவிட்டு நான் ஊருக்கு வந்து விட்டேன். குருசாமி விலகியது பற்றி அம்மையாருக்கு நிறைய வருத்தம். யார் என்ன செய்ய முடியும்? ஆனால் காலத்தின் மாற்றத்தைப் பாருங்கள்—இன்று நான்தான் அய்யாவுக்கு எதிரி. அவர்களோ...?

இப்படித்தான் முன்பு தேவதாசி முறை ஒழிப்பு சம்மந்தமாய் நான் தீவிரமாய்ப் பணியாற்றியதைப் பாராட்டி காந்தியார் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். நான் அந்தக் கடிதத்தை வைத்து தினந்தோறும் பூஜை செய்து வந்தேன். காங்கிரசை விட்டுவிலகியபின்பு —அந்தக் கடிதம் என்ன, காந்தியாரே நினைவிலிருந்து நீங்கிவிட்டார். என்ன செய்வது?

அன்னை நாகம்மையார் மறைந்த செய்தி தந்தி மூலம் மாயவரம் தோழர் நடராசனுக்குக் கிடைத்தது. உடனே அலறிக்கொண்டு என்னிடம் ஓடி வந்தார். இருவரும் தேம்பித் தேம்பி அழுதோம். என்ன பயன்? எங்களைத் தேற்ற அன்னை நாகம்மையாரா இருக்கிறார்கள்?

''ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியேனம்மா'' என்றபடி—எத்தனை பேர் சேர்ந்தாலும் ஒரு அன்னை நாகம்மையாருக்கு ஈடாக முடியுமா? அவர்களின் அன்பு தவழும் முகமும், ஆதரவு நிரம்பிய கரங்களும் நம்மை எனறும் இந்த இயக்கப் பணியிலிருந்து வழுவாதிருக்க உதவுமே! அது போதும்.

அன்னை நாகம்மையார் புகழ் நீடு வாழ்க!

அவர்கள் தொண்டு வெற்றி பெறுக!!



செருப்பு ஜாக்கிரதை!



அடஞ்செய்தாய் நீஎன் றடித்தேன்—பின்னர்
அழுகின்ற கண்கண்டு நெஞ்சந் துடித்தேன்
குடங்கையில் கன்னத்தைச் சேர்த்துத்—துயில்வாய்
குறுநெற்றி எழில்காட்டும் மேலாக வேர்த்து

கண்ணீர் வழிந்துலருங் கன்னம்—நெஞ்சைக்
கலக்குவதை யறியாய்நீ கண்ணயர்ந்த பின்னும்
தண்ணீர் நிறைந்தகுளத் தோரம்—நின்று
தாவிக்கு தித்துவிளை யாடினையிந் நேரம்

துள்ளித் திரிந்துவிளை யாடி—கெட்ட
துட்டத்த னம்புரியும் சிறுவரொடு கூடிப்
பள்ளிக்குப் போகாமல் நின்றாய்—கண்ட
பலகாரப் பொருளைநீ வாங்கியே தின்றாய்

பாடம் படிக்கின்ற வேளை—விட்டாற்
பயனுண்டோ ஆசானுக் கென்சொல்வாய் நாளை ?
ஓடும் படிக்கான செல்வம்—அன்றும்
ஓதித் தெளிந்துணரும் நிலையான கல்வி

சட்டையை அழுக்காக்கி விட்டாய்—நோய்க்குச்
சாருமிடம் நீதந்து மேனிநலங் கெட்டாய்
பட்டம்விட் டாடுகிற போது—செய்தாய்
பக்கத்து வீட்டுக்கு ழந்தையொடு வாது

சினந்தேன்நீ உண்ணுகிற போது—சோற்றைச்
சிதறினாய் வீடெங்கும் என்றறிந்த போது
மனம்போன போக்கிலுனை வைதேன்—பிள்ளை
மனநிலையை அறியாதிக் குற்றங்கள் செய்தேன்

குற்றம் பொறுப்பாய்என் கண்ணே—எனநான்
கூறுவதை அறியாய்நீ புரியாய்என் கண்ணே
செற்றம் தவிர்ந்தேன்என் கண்ணே—நாளை
செல்லமாய் உன்னோடு விளையாடு வேனே.



1956

"நீ எனக்கும், உனக்கு நானும்—இனி
நேருக்கு நேர் தித்திக்கும் பாலும், தேனும்!"

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

ஓவியம் :

முரசொலி செல்லப்பன்



நாயுடு நாயக்கர் நாடார்

எஸ்.வி.லிங்கம்


நாயுடு, நாயக்கர், நாடார். இவர்களைப் பற்றி ஓர் குறிப்பு எழுதுங்கள் என்று "முரசொலி"யின் மாப்பிள்ளை தம்பி ஓர் கடிதம் எழுதியது. எதிர் காலத் தலைவர்களிடம் எனக்கு பயமும், ஆசையும் அதிகம். ஆதலால் இக்குறிப்பை உடனே எழுதி அனுப்புகிறேன்

நாயுடு, நாயக்கர், நாடார் நம் நாட்டின் மாபெரும் தலைவர்களான பி. வரதராஜுலு நாயுடு எம். எல். ஏ. அவர்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள், கே. காமராஜ நாடார் எம். எல். ஏ. அவர்கள், இவர்களையே குறிக்கும்.

நாற்பது வருடங்களுக்குமுன் நான் பெங்களூர் சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் பட்டாளத்து சிப்பாயாக இருந்தேன். பட்டாளத்திற்கு ஆள் சேர்ப்பதற்காக ஒரு பிரிவு மதுரைக்கு வந்தது. அதில் நான் போனேன் தேசபக்தர்களைப்பற்றி எனக்கு ஆசை அதிகம். அன்று நமது டாக்டர் பி. வரதராஜலு நாயுடு அவர்களுக்குத் தென்னாட்டுத் திலகர் என்று பெயர், தமிழ் நாட்டில், தமிழில் பேசி—தூங்கிக் கிடந்த தமிழர்களை முதன் முறையாக தட்டி எழுப்பிய பெருமை அவரையே சாரும். இன்று தமிழ்நாட்டில் உள்ள அத்தனை தேச பக்தர்களும் டாக்டர் நாயுடுவினால் சிருஷ்டிக்கப்பட்டவர்களே யாவர். ராஜதுரோக குற்றம் சாட்டப்பட்டு மதுரை கோர்ட்டில் வழக்கு நடந்தது. அவ்வழக்கிற்கு வக்கீலாக வந்தவர்தான் சி. ராஜகோபாலாச்சாரியார் பி. ஏ. பி. எல். அவர்கள் அதாவது இன்று ராஜாஜி என்று அழைக்கப்படுபவர்!

இதற்கு மூன்று ஆண்டு கழித்து பெல்காம் என்ற ஊரில் அ. இ. காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது. அதற்கு தமிழ் நாட்டிலிருந்து செல்லும் பிரதிநிதிகள் பெங்களூர் வழியாகச் சென்றார்கள். பகலில் பங்களூரில் தங்கி இரவு மெயிலில் புறப்பட வேண்டும். இவ்விதம் வரும் தேச பக்தர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கொடுத்தோம், எல்லாத் தலைவர்களும் தங்கிச் சென்றார்கள். அவர்களில் நாயுடு. நாயக்கர், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பி. ஏ. பி. எல். இவர்கள் குறிப்பிடக் கூடியவர்கள். பலிஜா நாயுடு மாளிகையில் டாக்டர் நாயுடு அவர்களைக் கண்டு பேசினேன். அவரது 'பிரபஞ்ச மித்திரன்' என்ற பத்திரிகைக்கு நான் ஒரு சந்தாதாரர் என்றும் சொல்லிக் கொண்டேன். 'பட்டாளத்திலிருந்து கொண்டு நீ தைரியமாக இதை யெல்லாம் செய்கிறாயே' என்று என்னைப் பாராட்டிப் பேசினார். அரசியலில் எனது முதல் தலைவர் நாயுடு அவர்களே ஆவார்.

அடுத்த மூன்று வருடத்தில் பட்டாளத்தை விட்டு விலகி



நேராக சேலம் வந்து நாயுடு அவர்களின் விடுதியில் தங்கி அவரின் மாணக்கர்கள் சிலரில் ஒருவனானேன். நாமக்கல் கவி ராமலிங்கம் பிள்ளை அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். நாமக்கல், மோகனூர், கரூர் இப்பகுதிகளில் பிரச்சாரத்தில் நான் ஈடுபட்டேன். இக்காலத்தில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களை நான் சந்தித்தேன்.

1920—25 இந்த ஆண்டுகள் தமிழ்நாட்டில் தேச விடுதலை ஆர்வமும், சமூக விடுதலை ஆர்வமும், தலைகாட்டும் காலமாகும். சமுதாயத்தில் ஒரு சின்னக் கூட்டமாக உள்ள ஐயர்மார் மீது விரோதமாக ஓர் இயக்கம் ஆரம்பமாகி விட்டது. இது காங்கிரஸ் கட்சியிலும் மறைமுகமாக நிலவியது. இக்காலத்தில் காந்தி அடிகள் வடக்கே "நிலவரி மறுப்புப் போர்" துவக்கினார்கள்.

இதைப்போல் நமது நாட்டிலும் ஓர் கிளர்ச்சி நடத்த வேண்டுமென்பது இங்குள்ள தீவிர காந்திபக்தர்களின் ஆசை! மாயவரம் தாலுக்கா, ஆயர்பாடி என்ற ஊரில் இதற்கென ஓர் மநாட்டை நடத்தினேன் எல்லா ஊர்களிலுமுள்ள சில காங்கிரஸ்காரர்கள் எனக்கு ஊக்கமளித்தார்கள். மகாநாட்டிற்குத் தலைவராக நாயுடு அவர்களைப் போட்டேன். இம்மநாட்டைக் கண்டு பயந்து 144 தடை உத்திரவு போட்டது. நாயுடு அவர்கள் தலைமை வகிக்க வர மறுத்து விட்டார் எங்களுக்கு எப்படியாவது மநாட்டை நடத்திவிட வேண்டுமென்பது. அவர் வராவிட்டால் என்ன? ராஜகோபாலாச்சாரியாரைத் தலைவராகப் போட்டு மநாட்டை நடத்தி விட்டோம். இம்மநாட்டிற்கு நமது மாகாண இன்றைய முதல் மந்திரி, கனம். காமராஜ் அவர்களும் வந்திருந்தார்.

குருகுலப் போராட்டம் என்று ஓர் கிளர்ச்சி நடந்தது. காங்கிரஸ் கட்சியிலிருந்து பண உதவி பெற்று இக்குருகுலம் ஆரம்பிக்கப் பட்டது. பிராமண சாதியில் ஆடு, மாடு தின்னும் சிறந்த தேச பக்தரான வ. வே. சு. ஐயரே இதை நடத்தி வந்தார். இதில் படிக்கும் பிராமணரல்லாத மாணவர்கள் இழிவு செய்யப் பட்டார்கள் என்பது நாயுடு அவர்களின் கட்சி, பிராமண மாணவர்கள் அல்லாத மாணவர்களுடன் சமமாக உட்கார கூடாது என்பது பிராமண வாதம். இதை நாயுடு அவர்கள் ஆரம்பித்தார் என்றால் அன்று நாட்டின் நிலைமை அதுவேயாகும். காங்கிரசில் ஐயர் கூட்டம் நாயுடு அவர்களை வெறுத்தது. இவர் பயந்து விட்டார். தூங்கிக் கிடந்த தமிழ்நாட்டில் தேச விடுதலைப் போராட்டத்திற்கு ஆயிரக் கணக்கான மக்கள் சிறை சென்று தங்கள் தேச பக்தியை நிரூபித்தது போலவே சமூக இழிவு போக்கவேண்டும் என்ற தங்கள் ஆவலை வெளிப்படுத்தினார்கள். ஆனால் பிந்தியது தோற்றது, இதற்கு உதாரணம்தான் நாயுடுவும், நாயக்கரும், நாயுடு பயந்தார் என்றதும் தமிழ்நாட்டு மக்கள் இருதயத்திலிருந்து நாயுடு அவர்கள் அகற்றப் பட்டார். இதை உடனே பெரியார் ஈடு செய்ய வெளி வந்தார் தமிழ் நாட்டின் மக்களின் தலைவராக பெரியார் ஆனார்.

"தனக்கும் தன் சகாக்களுக்கும் வேற்றுமை காணுதை நிலை ஏற்படுத்திக் கொள்பவனே தலைவனுவான்."

"அபிப்பிராய பேதமுள்ள சகாக்களை கூடுமானவரை திருத்தி அல்லது சிறிது தன்னை திருத்திக் கொள்பவனே தலைவனுவான்."

"தனது சுயநலம் ஒன்றை மட்டும் கருதாது, தனது லக்ஷியம் ஈடேற தன் நிலையைக்கூட விட்டுக் கொடுக்கத் துணிபவனே தலைவனுவான்."

"சுய நலமும், பயந்தாங் கொள்ளிகளையும் நம்பியவன் தலைவனாக நீண்ட நாள் இருக்க முடியாது."

இம்மாதிரியான தவறுகளை காந்தி அடிகளும் ஜின்னா அவர்களும் செய்யவில்லை. வங்கச் சிங்கம் சி. ஆர். தாஸ் மூரண்படுகிறார் என்றால் காந்தி அடிகள் உடனே அங்கு சென்றார். தாசை தன்னவர் ஆக்கிக் கொண்டார். அதே போன்று பாஞ்சாலத்து நான் குடும்பத்தை ஜின்னா அலக்ஷியப் படுத்தவில்லை. ஆதலால் தான் அவ்விருவர்களும் வெற்றி பெற்றார்கள். ஜின்னாவுக்கு பாகிஸ்தான் பிரிவுக்கு நல்ல ஆதரங்களை எடுத்துக் காட்டிய நமது பெரியாரோ, கஷ்டங்களை ஏற்க மறுக்கும் சகாக்களை வைத்திருந்ததினால் திராவிட நாடு கிடைக்கவில்லை. விடுதலை பெற்ற திராவிட நாட்டின் தனிப் பெருந்தலைவராக திகழ வேண்டிய பெரியார் அவர்கள் "விடுதலை" தினசரி ஏட்டின் தலைவராக மட்டும் இருக்க நேர்ந்தது குறித்து வருந்துகிறேன்.

ஒரு கட்சி ஆரம்பித்த இரண்டாண்டுக்குள் ஓர் மும் முனைப் போராட்டத்தை நடத்தக் கூடிய ஆற்றல் தி. மு. க. வின் தலைவரான அண்ணாதுரை அவர்களுக்கு எப்படிக் கிட்டியது. கொஞ்ச காலத்தில் ஓர் கருணாநிதியையும். ஓர் சம்பத்தையும் (சம்பத் குமார ராகுவரத திருவேங்கிட கிருஷ்ண ராமானுஜ தாஸானுக் தாஸன்) சேனைவீரர்கள் என்பதை கண்டு பிடிக்க அறிஞர் அண்ணாதுரை இருபது ஆண்டு ஒரே நிலையில் இருந்தார். ஐயர்மார்கள் பத்தாண்டு இடைவெளியில், நாயுடு, நாயக்கர் இவ்விருதலைவர்களையும் மோதவிட்டார்கள். இவர்கள் ஐயர்மார் கை பொம்மைகளாக சில காலம் இருந்ததினால் ஏற்

பட்ட பலன்தான் இம் மாகாணத்திற்கு முதன் மந்தியாக ஓர் பிராமணர் (ஆச்சாரியர்) வர இடமேற்பட்டது.

நாயுடுவால் நாட்டிற்கு அறிமுகப் படுத்தப்பட்ட ஆச்சாரியார், நாயுடுவை பிரமண கூட்டுறவுடன் உட்காரவைத்து விட்டார். நாயுடு குருகுல போராட்டத்திற்கு பின்பும் பிராமண எதிப்புக் கொடியை கீழே எறியாமல் இருந்திருந்தால் ஆச்சாரியார் முதன் மந்திரியாக வந்திருக்க முடியாது. தனது போர் முழக்கத்திற்கு பாலிஷ் கொடுக்க எண்ணியதால் நாயுடுவின் உண்மைத் தொண்டர்கள் பரிதாபப்பட்டு அவரை விட்டுப் பிரிந்தார்கள் ஆச்சாரியாரால் மறைக்கப் பட்ட நாயுடு அவர்கள் காமராசர் சலுகையால் மீண்டும் மக்கள் முன் நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சேலத்தில் நாயுடுவையும், திருவண்ணாமலையில் பெரியார் இராமசாமியையும் ஆச்சாரியார் சாக அடித்தார் என்றாலும் இவ்விருவருக்கும் தீங்கிழைத்த ஆச்சாரியாரை வீழ்த்த ஒருவர் வர மீண்டும் பல வருடங்கள் ஆயின. சிறந்த தேச பக்தர்களான நாயுடுவும், நாயக்கரும் எதில் எதில் தவறினார்கள் என்பதை நீண்ட நாட்களாக காமராசர் அவர்கள் கவனித்து வந்தார். ஆச்சாரியார் சூழ்ச்சி, நாயுடுவை சாக அடித்ததைப் போலவே பெரியாரை சுலபத்தில் சாக அடிக்க முடியவில்லை. 30 - ஆண்டுகள் பொறுத்திருக்க நேரிட்டது.


"தனது சகா ஊழியர்களில், தன்னைப்போல செல்வாக்குப் பெற்று வருபவர்களைக் கண்டு மகிழ்ச்சி அடைபவனே தலைவன் ஆவான்." இம் மகிழ்ச்சியுடன் நில்லாது தனது நிலை, தனது சிஷ்யர்கள் அடையும் போது, தான் இன்மும் புது பலத்தைப் பெற்று, தன்னைப் போல் வளர்ந்த தன் சகாக்களையும் ஒன்று சேர்த்துச் செல்பவனே தலைவனுவான்."

அவர்களால் எப்படி முடிந்தது. தனது சகாக்கள் என்றால் உண்மையிலேயே இவரே சகாவாகிவிடுகிறார். இத்தகைய பலம் கொண்ட படை மட்டும், கிரிப்ஸ் திட்ட காலத்தில் இங்கு உருவாகி இருந்தால் இன்று திராவிட நாட்டுத் தனிப் பெருந் தலைவராக பெரியார் வீற்றிருப்பார். நிதி திரட்டி ஓர் 20 ஆயிரம் ரூபாயில் கார் பெறுவதற்குப் பதில், ரஷ்ய நாட்டின் பிரதமர் புல்கானின் அவர்கள் 'ஓ! பெரியாரே! முன்னமேயே உங்கள் நண்பர் நாங்கள்தான். எங்கள் நாட்டு மக்களின் அன்பு காணிக்கையாக இந்த விமானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். பல வருடங்கள் ஆகின்றன தாங்கள் ரஷ்யாவிற்கு வந்து, மீண்டும் வர பணிவன்புடன் பிராத்திக்கிறேன், என்று கூறி இருப்பார். இம்மாதிரியான வாய்ப்பு அவருக்குக் கிடைக்கச் செய்யும் தி. மு. க. தன் தூய தொண்டால். நாயுடுவின் பிறந்ததின விழாவுக்கு கனம் கே. காமராசர் தலைமை வகிக்க தகுதி உள்ளவர். ஏனெனில் தன் பழைய தலைவர்களான இருவரை, ஏமாற்றிய வரை வீட்டுக்கு அனுப்பியவராவார். இந்த மூன்று பெரியவர்களை நாடு என்றும் மறந்து விடாது. இம்மூவரும் பிராமணது வேசிகள் என்று பெயர் எடுத்தவர்கள்; ஆனால் இவர்களுக்கு பிராமண நண்பர் உண்டு. இவர்களின் பிராமண நண்பர்கள் இதுவரை அவர்கள் சமுகத்திற்கு வேண்டியவைகளை செய்துகொள்ள தவறியது கிடையாது. ஆனால் இவர்கள் பலத்தில் நம் சமூகத்திற்கு தீங்கிழைக்க தவரவில்லை. முந்திய இரு தலைவர்கள் தவறியதை காமராசர் செய்யாததினால் இவர் நமது மாகாண முதன் மந்திரியானர்.

மாகாணப் பிரிவினை, இவருடைய டெல்லி செல்வாக்கிற்கு சோதனை காலமாகும். இம் மாகாண பிராமணியமும், வெளி நாட்டு அம்பாஸிட்டர்களாக உள்ள மலையாளிகளின் கூட்டுறவும் ஒன்றுகக் சேர்ந்து, இன்று காமராஜரை நெருக்குகிறது. இச் சோதனை காலத்தில் அவர் தவற மாட்டார் என நம்புகிறேன்.

நாயுடு, நாயக்கர், இவர்கள் தங்களின் இறுதி காலத்தில் தங்கள் பிராமண நண்பர்களால் வீழ்த்தப்பட்டு மறித்ததைப் போல, காமராஜர் தனது நிலைமைப் பார்த்து கொள்ளத் தவறக் கூடாது! முந்தியவர் என்தோ, நீண்ட நாள் தேசபக்தர் என்பதோ மட்டும் ஓர் தலைவருக்குப் போதுமான தல்லதான், யாருக்காக பாடுபடுவதாக சொல்கிறாரோ, அவர்களின் அவ்வப் போதைய நிலை என்ன? என்பதையும், அவர்கள் எந்ததிக்கில் செலுத்தப் பட்டால் நாடு விடுதலை பெற்று விமோசனம் பெறும் என்பதையும் சிந்திக்கவும். சிந்தித்து, அதற்குத் தக்க வழியை அவர்களுக்கு காட்டவும் தலைவன் தவறக் கூடாது. இப் பழைய கதைகளை, ஏன் ஞாபகமூட்டுகிறேன் என்றால் எதிர்கால திராவிட இளைஞர்கட்கு ஓர் எடுத்துக் காட்டாக இது இருக்கு மென்பதற்காகவே.

★


தயாராகிறது!
கே.ஆர்.ராமசாமி
நடிக்கும்
காயகம் பிக்சர்ஸ்
தயாரிப்பு
குறிக்கோட்டம்
அதிகர் அண்ணை
கீட்டியது
Anand



என்.வி.நடராசன்

இந்தியத் துணைக் கண்டத்தை பிரிட்டிஷார் ஆண்டு வந்த சமயம், ஜனநாயகத்தின் உயர்வையும், ஆட்சி முறையிலே ஜனநாயகம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய அவசியத்தையும் தேசீயத் தலைவர்கள் நாள் தவறாது நாட்டிலே எடுத்துக் கூறி வந்தனர்! வெள்ளையர் தம் பிடிப்பை விட்டுக் கொடுத்து வெளியேறினால், அதற்குப் பிறகு ஜனநாயகம் என்ற சொல்லுக்கே—காங்கிரஸ் ஆட்சிதான் ஒரு "மாதிரி" (மாடல்) ஆக இருக்கும் என்றும் கூறினர்!

இந்தியாவிற்கு மட்டுமென்ன; உலகிற்கே ஜனநாயகத்தின் முழுஉருவைக்காட்டப் போவதை காங்கிரசார் ஆட்சி பீட மேறிய அடுத்த நிமிடமே காணலாம்—என்று கூட சில தலைவர்கள் செப்பினர்!

ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள அந்தப் பெரிய மனிதர்களிடமிருந்து ஜனநாயகப் பண்பை சாதாரண அளவுக்குக்கூட காண இயலவில்லை! அந்தப் பெரிய புள்ளிகளிடம் மட்டுமென்ன; அவர்களின் ஆட்சி முறையிலும் அதே "லட்சணம் தான்!"

இன்னும் சொல்லப்போனால் ஆராயிரம் மைல்களுக் கப்பாலிருந்து வந்த வெள்ளையர்களின் ஆட்சி முறையிலாவது குறைந்த பட்ச ஜனநாயகம் நடைமுறையிலிருந்து வந்தது. ஆனால் காங்கிரஸ் 'பிரபுக்கள்' ஆட்சி பீட மேறியவுடன், அந்தச் சாதாரண ஜனநாயகத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து விட்டனர்.

1947-ம்ஆண்டு வரை இந்தியத்துணைக் கண்டத்திலுள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓரளவு அளிக்கப் பட்டிருந்த அரசியல் உரிமையும், அனைத்திந்திய ஒற்றுமை—ஏக இந்தியா என்றபெயரால்பாதிக்கப் பட்டுள்ளது. இன்னும் வெளிப் படையாகச் சொல்ல வேண்டுமானால் கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனநாயகம் என்ற போர்வையில் சர்வாதிகார ஆட்சி—ஏகாதிபத்திய ஆணவம்—கட்சி ஆதிக்கம் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது.

பிரிட்டனில், ஆளும் கட்சியினர்—எதிர் கட்சி ஒன்று அமைவதில் ஆர்வம் காட்டுகின்றனர். அக்கட்சிகளுக்கு அளிக்க வேண்டிய மரியாதைக்கு குறுக்கே நிற்பது கிடையாது. கன்சர்வேடிவ் கட்சி நாட்டை ஆளும் போது தொழிற்கட்சி எதிர்க்கட்சியாகவும், அதுபோலவே தொழிற் கட்சியினர் ஆட்சி பீடத்திலமரும்போது கன்சர்வேடிவ் கட்சியினர் எதிர் கட்சியினராகவும் இருந்து பணியாற்ற வசதிகள் தரப்படுகின்றன. எதிர்க்கட்சி ஒன்று இருந்தால்தான் ஜனநாயகத்தின் சிறப்பை பயன்படுத்த முடியும். ஆகவே மேல் நாடுகளில் ஆளும் கட்சியினரே, எதிர்க்கட்சி அமைவதற்குக் கூடுமான அளவுஉதவி புரிகின்றனர். அதனால் அந்நாடுகளில் ஜனநாயகம் தலை நிமிர்ந்து நிற்கிறது.

ஆனால் ஜனநாயகத்தைப் பற்றி கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்புவரை ஓயாமற் பேசி வந்த காங்கிரசார் இன்று ஜனநாயகத்தை சித்திரவதை செய்யும் விபரீதச் செயலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

உதாரணமாக, சென்னை மாநிலத்தை எடுத்துக் கொண்டால் தேர்தல் காலங்களில் தேசீய முகாமினரும் குறிப்பாக அமைச்சர்களும் கையாளும் முறைகளை, நாகரீகம் ஓரளவாவது தெரிந்த எவரும் கண்டிக்கத்தான் செய்வர்.

அண்மையில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களில் ஆளும் வர்க்கத்தினர் நடந்து கொண்ட விதத்தை—அவர்களின் போக்கினைக்கொண்டே திட்ட வட்டமாகக் குற்றம் சாட்டுகிறோம்.

நேற்றுவரை எதிர்க்கட்சியாக இருந்தவர்களோ—காங்கிரஸ் என்றால் என்ன என்பதைப் பற்றி புரிந்து கொள்ளவும் மனமில்லாதவர்களோ — தேசீய இயக்கத்தினர் என்றாலே மகா மட்டம் என்று கருதிக்கொண்டிருந்தவர்களோ — நாட்டுப் பணிக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லாதவர்களிடமெல்லாம் நாட்டையாளும் அமைச்சர்கள்—ஏன், முதலமைச்சர் உட்பட தஞ்சமடைந்திருக்கிறார்கள்!

கதரா, கட்ட வேண்டாம்—காங்கிரசின் முக்கிய கொள்கைகளைப் பற்றியா, கவலைப்பட வேண்டாம்—காங்கிரசில் நீண்ட காலமாக இருப்போர் எதிர்ப்பார்கள் என்ற அச்சமா, விடுங்கள் அதை, நான் இருக்கிறேன் எதிர்ப்பவர்களை மட்டந்தட்ட—ஆகவே சும்மா கையெழுத்து போடுங்கள், சேர்மன் ஆகுங்கள்-என்று பேரம் பேசினர் தேசீய முகாமினர்—அமைச்சர்கள்!

அதாவது கொள்கையைப் பற்றி காங்கிரஸ்காரர்களுக்கு, நாட்டை ஆளும் அமைச்சர்களுக்கு அக்கரை கிடையாது. எந்த வகையிலோ கிடைத்த அதிகாரம் தங்களின் பிடிப்பிலிருந்து போய்விடக் கூடாது; அதற்காக தங்கள் கட்சியின் கொள்கையை—கண்ணியத்தைக் கூட விலை பேசிட—அதுவும் நேற்று வரை தங்கள் கட்சியை நையாண்டி செய்து வந்தவர்களிடமே விலைபேசிட முனைகின்றனர் என்றால் இந்த ''உத்தமப் புதல்வர்''களிடம் ஜனநாயகம் என்னபாடு படுகிறது என்பதை நாம் மேலும் விளக்கத் தேவையில்லை யென்றே எண்ணுகிறோம்,

பிரிட்டன் போன்ற நாடுகளில், கன்சர்வேடிவ், தொழிற் கட்சி ஆகிய இரு முக்கிய கட்சியினரும் நாட்டை முறையே அதிகப்படியான வாக்குகளையும், இடங்களையும் கைப்பற்றியவர்கள் — மக்களின் எண்ணத்திற்கு நம்பிக்கையானவர்கள்—என்ற தீர்ப்புக் கேற்ப ஆண்டு வருகின்றனர். ஆனால் அந்த இரு கட்சியினரும் கொள்கையை விலை பேசி எந்தப்பாடு பட்டாகிலும் கட்சியின் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என்று எண்ணியது கிடையாது. பிரிட்டனின் நல் வாழ்வைத்தான் அவ்விரு கட்சியினரும் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனரேயல்லாது, தங்களின் ஆதிக்கமும், ஜபர்தஸ்தும் மட்டும்தான் பெரிது என்ற மட்டமான எண்ணம் அந்நாட்டுத் தலைவர்களிடம்-முக்கிய கட்சிகளிடம் இன்றுகூட எதிர் பார்க்க முடியாது. ஆதலாலேதான் அங்கெல்லாம் ஜனநாயகம் வளர்கிறது—மக்களின் வாழ்வும் மலர்ந்திருக்கிறது.


ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திலேயோ காங்கிரசார் தங்கள் ஆட்சியில் கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனநாயகம் என்ற பெரிய தத்துவத்திற்கு புதிய அகராதியைக் கண்டு பிடிக்கும் விசித்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

விடுதலையடைந்த நாடுகளிலெல்லாம் வலம் வந்து அந்தந்த நாட்டில் இயங்கி வரும் ஜனநாயகம்—சமதர்மம், பொதுவுடமை ஆகிய பூங்காவிலே அமர்ந்து அகில உலக அரசியல் பிரச்னைகளைப் பற்றி ஓயாமல் பேசிவரும் நேரு பண்டிதரிலிருந்து மாநிலங்களில் தர்பார் நடத்தி வரும் அமைச்சர்கள் வரை ஜனநாயகப் போர்வையில் ஏகாதிபத்தியக் கூத்தாடுகின்றனர்!

''ஆண்டால் காங்கிரஸ் தான் இந்நாட்டை ஆளவேண்டும்; இல்லையெனில் அந்நியர்கள் ஆள வேண்டும்'' என்ற வெறித் தன்மையில் இன்றைய தேசீய முகாமை வளர்த்து வருகின்றார்களேயல்லாது, இந்நாட்டிற்குரிய மக்கள்—மாற்றுக் கட்சியினர்—ஜனநாயக முறையை அளவு கோலாக வைத்து ஆள வழி வகுப்போம் என்ற பெரும் புத்தி—இன்றைய ஆளவந்தாரிடம் அமையாதது வருந்தத்தக்கதாகும்.

எனவே, ஜனநாயகப் போர்வையில் ஏகாதிபத்திய தர்பார் நடத்தி வரும் காங்கிரசின் கோரப்பிடியிலிருந்து நம் நாட்டையும் மக்களையும் மீட்டு நல் வாழ்வு அளிக்க நாமெல்லாம் ஒன்றுபடுவோம். மேலும் தொடர்ந்துபணியாற்றுவோம். அடுத்துவர இருக்கும் பொதுத் தேர்தலில் இத் தீய சக்தியினை கூடுமான அளவு தகர்த்தெறிய முற்போக்கு எண்ணம் கொண்ட—ஆனால் திட்ட வட்டமான உறுதியான கொள்கையும் மனவளமும் பெற்ற அனைவரும் ஒன்றுபடுவோம். திராவிடத்தை, திராவிடத்தின் மொழிவழிப் பகுதிகளான தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய ஒவ்வொரு மாநிலமும் எல்லா உரிமைகளும் பெற்று, உலக நாடுகளிடையேயும், இந்தியத் துணைக் கண்டத்தின் வட பகுதி மாநிலங்களிடையேயும், நேசப்பான்மையில் நீடூழி வாழ பணியாற்றுவோம். இந்த உறுதியை திராவிடர் திருநாளன்று எடுப்போமாக—நம் பணியை இனிது முடிப்போமாக!

★



மந்திரி வீட்டில் மாட்டுப் பொங்கல்!


கிரேக்கப் பொறியாளர்
பின்னணி
* சாக்ரடீஸ் கிரேக்கம் தந்த தத்துவாசிரியன்; ஏதென்ஸ் அளித்த ஒப்பற்ற அறிவுப் புதையல்!
* அவன் தயாரித்த பிளேட்டோ இன்றைய அரசியல் கருத்துக்கள் பலவற்றிற்குத் தந்தையாக இருக்கிறான்.
* மார்க்சும், ஏஞ்சல்சும் தயாரித்து, லெனின்—ஸ்டாலின் போன்றோரால் புடம்போட்டு எடுக்கப்பட்ட பொன்னான பொதுவுடமைத் தத்துவம் பிளேட்டோ என்னும் சிந்தனை உலைக்கூடத்தில் தயாரானதுதான்!
* ஹெகெல் என்னும் ஜெர்மன் நாட்டு தத்துவஞானி பிளேட்டோவின் உலைக்கூடத்தைப் பயன் படுத்தித்தான் புளித்துப் போன நாஜிசக் கருத்துக் களுக்கு 'ஜாடை' காட்டினான். அந்தக் கட்டாறியைக் கொண்டு தவறான வழியில் பயன்படுத்தி தலை கொய்யப் புறப்பட்டனர், இட்லர்—முஸோலினி போன்ற புல்லர்கள்!
இதுபோன்ற நல்லனவற் றிற்கும் தீயனவற்றிற்கும் மூலப்பொருள் உதவியவன் பிளேட்டோ; அந்தப் பிளேட் டோவைத் தயாரித்ததோ சாக்ரடீஸ்!
வரலாறு கூறுகிறபடி சாக்ரடீஸ் 'சாவுக்குப் பயப் படாத முதல் மனிதன்'

மட்டுமல்ல ; இது போன்ற பல தகுதிகளுக்கும் அவன் உரிமையாளன் !

அவன் பேச்சுகளிலே சில நம் கருத்துகளுக் குப் புறம்பானவையென்று சிலர் கூறலாம். ஆனல் அறிவியக்கம் தூசு நிகர் இந்தக் கார ணங்களைக் கொண்டு அவனை ஒதுக்கி விடத் தயாராக இல்லை.

அன்பர் ஆச்சாரியார் 'சோக்ரதார்' என் னும் நூலிலே சாக்ரடீசை சங்கராச்சாரியார் போன்ற ஆஸ்தீகப் பழமாக்கி யிருக்கிறார்.

நானே அறிவுலக ஜோதியாக அவன் நட மாடியதை இந்தச் சிறு நாடக மூலம் இங்கே சித்தரித்திருக்கிறேன்.

சபையர் எனும் பேராசிரியர் ஜனநாயகத் தின் தொட்டிலாகிய ஏதென்சில், சாக்ரடீஸ் போன்ற பெரியார் ஒருவர் சாகடிக்கப்பட்டது வியப்பாக இருக்கிறது என்று கூறுகிறார். இதில் ஏதாவது திரை மறைவான அரசியல் சூது இருக்குமோ என்றும் ஐயப்படுகிறார்.

இந்தப் பிண்ணணியோடு இனி படிக்கத் துவங்குங்கள் !

★ ★ ★

குறிப்பு :

[குள்ள உருவம் – திடகாத்திரமான தேக அமைப்பு – சுழன்று கொண்டேயிருக்கும் ஒளி விளக்கு போன்ற கண்கள் – தட்டையான மூக்கு – துடிப்பு நிறைந்த அகன்ற புருவங்கள் – தடித்த உதடுகள் – சிறிய தாடி – போர்வைபோல் உடல் முழுதும் மறைத்திருக்கும் பட்டும் பஞ்சும் கலந்த சாதா ரணமான ஒரே உடை – இவன் தான் கிரேக்கம் தந்த கீர்த்தி வாய்ந்த அறி ஞன் சாக்ரடீஸ். ஏதன்ஸ் நக ரத்து மூலை முடுக்குகளிலே, சந்து பொந்துகளிலே, போ வோர் வருவோரை நிறுத்தி வைத்துத் தர்க்கவாதம் புரி யும் இலட்சியவாதி. அவனுடைய வீட்டு வாயிலிலே முதற் காட்சி ஆரம்பமாகி றது!]



முகவுரை

காட்சி-1.

சாக்ரடீசின் வீட்டு வாயில் :

[தெருவில் மக்கள் அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். சாக்ரடீஸ், சப்தமிட்டு அவர்களை அழைக்கிறான்.]

சாக்ரடீஸ் : ஏற்றமிகு ஏதன்சு நகரத்து எழில் மிக்க வாலிபர்களே! நாற்ற மெடுத்த சமூதாயத்தில், நறுமணம் கமழ்விக்க, – இதோ, சாக்ரடீஸ் அழைக்கிறேன்; ஓடி வாருங்கள்! பச்சை ரத்தம் பாய்ந்தோட கச்சை கட்டிக் களம் செல்லும் காளையரே! உங்களைத்தான் கூவி அழைக்கிறேன்.....கூட்டம் கூட்டமாகச் சூழ்ந்து வாருங்கள்! வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்! தீட்டிய வாளும், தினவெடுத்த தோள்களிலே தூக்கிய ஈட்டியும் மாத்திரம் போதாது தீரர்களே! இதோ, நான் தரும் ஆயுதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! அறிவாயுதம்! அறிவாயுதம்! இருட்டு மேனியும் குருட்டு மதியும் கொண்ட மடமைப் பைசாசத்தை ஒரே கொடியில் ஒழித்துக் கட்டும் புதிய போர்க்கருவி! புறங்காணு வீரர்களின் அகங் காட்டும் புரட்சிக் கருவி! புலிநிகர் பருவ இளைஞர்களே! என்னோடு புறப்படுங்கள்!... பகைவன் நம் நாட்டுக்குள்ளே புகுந்து விட்டான் – படை எதுவுமின்றி!... பாமரரின் உள்ளத்தைக் கொள்ளை அடித்து விட்டான்... அறியாமை அந்தகாரத்திலே ஏதன்சு நகரத்தை மூழ்க அடித்து விட்டான்... மூட நம்பிக்கை எனும் அந்தப் பகைவன்! எழில் மிகுந்த ஏதன்சு அறிவுப் பொழிலாக மாற, ஆற்றல் நிறை தோழர்களே, அணிவகுத்துப் புறப்படுங்கள்!

[வாலிபர்கள், போர்வீரர்கள் சூழ்ந்து நின்று சாக்ரடீசின் உபதேசத்தைக் கேட்கின்றனர். சாக்ரடீசின் மனைவி **எக்ஸேந்திபி** *என்பவள் கணவனின் போக்கிலே கசப்பு கொண்டு வீட்டு வாயிற் படியிலிருந்தபடியே வெறுப்புடன் பார்த்து நிற்கிறாள்... சாக்ரடீசின் நண்பன், வயதான தோழன்* **கிரிட்டோ** *வருகிறான். அவனைக் கண்டதும்...]*

சாக்ர : கிரிட்டோ! வந்து விட்டாயா? வா வா!... இதோ வயதான காலத்திலே வாலிபர்களை நல்வழிக்கு அழைத்துச் செல்லும் கடமையிலே விரைந்து நடக்கிறேன் நான்!... எனக்கு வாய்த்த இளம் மனைவி, இரண்டாந்தாரம்... எக்ஸேந்திபி, எத்துணை ஆத்திரத்தோடு என்னைத் தடுக்கிறாள் பார்! பார்; பார்; அவள் கனல் பொழியும் விழிகளைப் பார்! விழிகளா அவைகள்?... பயங்கரமான மின்னலப்பா; மின்னல்!...

எக்ஸேந்திபி : (கோபமாக) ஆமாம்; மின்னல் தான்!... இந்தக் கிண்ணரக் கிழவருக்கு மனைவியின் கண்கள் மின்னலாகத்தான் தெரியும்...

சாக்: என் செய்வது... நானோர் கற்பனைக் கவியாக இருந்தால், உன் பருத்த இடையைப் பார்த்து ஆகா, மின்னல் இடை என்பேன்!... கிரிட்டோ!... சாக்ரடீஸ்தான் பொய் சொல்ல மாட்டானே; உண்மை சொல்கிறேன்.. மின்னலின் ஒளியை, என் மனைவியின் கண்களில் காண்பதால்!...இல்லையா நண்பா!...

எக்ஸ் : போதும்! போதும்!... வீதியிலே போகிறவர் வருகிறவர்களோடு இருக்கட்டும், உமது விவாதங்களும், விளக்கங்களும், விளக்கெண்ணெய் தத்துவங்களும்! உமது முதல் மனைவி மிர்டோ, அவளைப் பிடித்த நல்ல காலம் செத்து விட்டாள்!... நானிருக்கிறேன் இப்படிக் கஷ்டப்பட... குடும்பம்-குடும்பத்திலே மனைவி-மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற கவலை வேண்டாமா மனிதனுக்கு!

சாக் : *[சூழ்ந்துள்ள இளைஞர்களைக் காட்டி...]* இதோ, இந்தப் பிள்ளைகளுக்கும் சேர்த்துத் தான் நான் பாடுபடுகிறேன்... அன்புள்ளவளே!... சூரியன், பூமிக்கும், அதைச் சுற்றியிருக்கும் கடலுக்கும், அவைகளிலே வாழுகின்ற எல்லா உயிர்களுக்கும் கடமையைச் செய்து வருகிறான்!...

எக்ஸ் : இப்படி விண்ணைப் பற்றியும், மண்ணைப் பற்றியும் பேசிக்கொண்டு, உம்மை நம்பிவந்த பெண்ணை நட்டாற்றில் விட்டுவிடும்... (தனக்குத்தானே கோபமாக) அடி எக்ஸேந்திபி! உனக்கு ஏண்டி இந்த வம்பு!...

எப்படியாவது கெட்டுத் தொலை!... ஒழிந்துபோ!... இந்த தரித்திரம் பிடித்த வீட்டைவிட சுடுகாடு எவ்வளவோ மேல்!... இந்த தர்க்கவாதியைக் கட்டிக்கொண்டு அழுவதை விட, கழுத்தில் ஒரு சுருக்குக்கயிற்றைக் கட்டிக் கொண்டு சாகலாம்!... சாகலாம்!... சாகலாம்!...

[பேரிரைச்சல் போட்டபடி உள்ளே போகிறாள். அவள் போனதும் சாக்ரடீஸ் சிரித்துக்கொண்டே, மற்றவர்களைப் பார்த்து...]

சாக் : அப்பாடா, இடி இடித்து ஓய்ந்தது!... மின்னல் வரும்போதே தெரியும், இப்படி இடி இடிக்குமென்று!...

இளைஞர்களே!... இலட்சிய வாதிகளுக்கு இப்படி எத்தனையோ இடையூறுகள்!... வீட்டிலே, இதுபோல!... நாட்டிலோ, கேட்கத் தரமில்லை!... அரசியல்வாதி அனிடஸ் தன் அக்கிரமங்களைச் சுட்டிக்காட்டும் சூழ்நிலை எதுவுமே முளைக்கக்கூடாது எனக் கருதுகிறான். கற்பனை உலகத்தை சிருஷ்டித்து களிப்படை

யும் மெலிடஸ், கற்களிலே உலோகங்களிலே சிலைகளை வடித்துக் காட்டி, சிறப்படையும் லகன்-இவர்களெல்லாம் எனதுஅறிவுப் பிரச்சாரத்தால், அஸ்திவாரமே ஆட்டங் கொடுக்கிறதென ஆத்திரப்படுகிறார்கள்!... கிரேக்கத்தின் கீர்த்தி, புவனமறியாததல்ல! அதற்காக இங்கு விழுந்திருக்கும் கீறல்களை மறைத்திட முயல்வது, புண்ணுக்கு புணுகு தடவும் வேலையைப் போன்றது!... அதனால்தான் தோழர்களே! சிந்திக்கக் கற்றுக்கொள்ளுங்கள் எனச் சிரந்தாழ்ந்தி உங்களை அழைக்கிறேன். அறிவு! அகிலத்தின் எந்த மூலையிலிருந்தாலும் அதைத் தேடிப் பெறுவதற்காக உங்களை அழைக்கிறேன்... "உன்னையே நீ அறிவாய்!" இந்த உபதேசத்தின் உண்மையை உணர்வதற்காக என் உயிரினுமினியவர்களே! உங்களை எல்லாம் அழைக்கிறேன்...

[அப்போது எக்ஸேந்திபி ஒரு பாத்திரத்திலே தண்ணீரைக் கொண்டுவந்து, சாக்ரடீஸின் தலையில் கொட்டுகிறாள்.]

கிரிட்டோ : ஆ! என்ன இது? என்ன இது?...

சாக் : பதறுதே கிரிட்டோ!... ஒன்றுமில்லை!... முதலில் மின்னல் மண்டாய்! பிறகு இடி இடித்தது!... மழையும் பெய்கிறது!... அவ்வளவுதான்!

[இளைஞர்களும் கிரிட்டோவும் சிரிக்கிறார்கள்... எக்ஸேந்திபி கோபத்தோடு உள்ளே போகிறாள்.]

★

காட்சி-2.

[அனிடஸ், மெலிடஸ், லைகன் மூவரும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.]

அனிடஸ் : குமுறும் எரிமலை! கொந்தளிக்கும் கடல்!... இவைகளைவிடப் பயங்கரமானவன் சாக்ரடீஸ்!... அறிவாயுதமாம்... அனைத்துலகும் அடிபணியும் அஸ்திரமாம்!... அந்த ஆயுதம் கிரேக்கத்திலே தயாராகுமானால், நாம் தலைதூக்கவே முடியாது மெலிடஸ்! என்ன சொல்கிறாய், லைகன்?...

லைகன் : நான் கல்லுக்குக் கடவுள் உருவம் தரும் சிற்பி!... ஒரு காலத்திலே இந்த சாக்ரடீசும் என்னைப் போல சிற்பிதான்! இப்போதோ அவன் சிந்தனை சிற்பியாக மாறிவிட்டான்... பரவாயில்லை... கல்லை கடவுளாக்கும் நானும், கற்பனை மூட்டைகளுக்குத் தெய்வீக மெருகு தரும் கவிஞனும் மெலிடசும், அரசியல் நிபுணனும் நீயும் ஒன்று சேர்ந்துவிட்டபிறகு... சாக்ரடீஸ், சமுத்திரத்துத் துரும்புதானே அனிடஸ்!...

மெலி : சபாஷ் லைகன், சபாஷ்! ... பொதுமக்கள் கழுதைகளாயிருந்தால்தான் நாம் தூக்கி வைக்கும் பொய் மூட்டைகளைச் சுமப்பார்கள்! குருடர்களாய் இருந்தால்தான் நாம் காட்டுகிற வழியிலே நடப்பார்கள்! நாம் கீறிய கோட்டைத் தாண்டாத கிரேக்க மக்களுக்கு, அந்தக் கிழவன் அறிவுக் கண் வழங்குவதற்குள் அவனை நாம் அழித்துவிட வேண்டும்...

[மூவரும், ஒரு முடிவோடு புறப்படுகிறார்கள்.]

★

காட்சி-3

[சந்தை வெளியிலே சாக்ரடீஸ் பேசிக் கொண்டிருக்கிறான்.]

சாக் : சந்தையிலே பொருள் வாங்கும்... விந்தை மனிதர்காள்! அங்கெல்லாம் கிடைக்காத அரும் பொருள், நானொன்று வைத்திருக்கிறேன். விலை மதிக்க வொண்ணா வைரம்!... ஆராய்ச்சி என்னும் ஆழ்கடலில் குளித்தெடுக்கும் ஒளிமுத்து! அங்காடிக் கடையிலே அகப்படாத பொருள்! அறிவு! அறிவு! இந்த அதிமதுரப் பொருளை வாங்க வாரீர்! வாரீர்!!

[கிரேக்கத்து சிப்பாய் வருகிறான்.]

சிப் : நிறுத்து உன் பிரசங்கத்தை!..

சாக் : நான் நிறுத்தினாலும் அதைத் தொடர்ந்து நடத்த என்தோழர்கள் பலர் இருக்கிறார்களே!

சிப் : தெகிடுதத்தம் பேசாதே! நீ வாலிபர்களைக் கெடுக்கிறாய்! நடுத்தெருவில் பைத்யம் போல் புலம்புகிறாய்!

சாக் : உன்னை, என்னிடம் அனுப்பியவர்களிடம் போய்ச் சொல்... ஆடு மேய்ந்து அழிந்து விடும் அருகம்புல் அல்ல, புத்துலகு சமைப்போரின் போதனை- என்பதை! கருத்தொளி, காட்டுக் குதிரையல்ல தம்பி, அதிகாரக் கடிவாள மிட்டதும் அடங்கி ஓடுங்கிவிட!...

சிப் : அதிகப் பிரசங்கியாரே! உமது பேச்சை நாளை நீதி மன்றம் கேட்க்கட்டும்! வாரும் என்னோடு, இப்போது!

(இழுக்கிறான், சாக்ரடீசை!)

கிரிட்டோ : இது என்ன அக்கிரமம்! எங்கு இழுத்துச் சொல்கிறாய், தள்ளாத வயதில் – எங்கள் அறிவுத் தங்கத்தை!... விடு வீரனே – விடு!...

சாக் : வேண்டாம் நண்பனே, வேண்டாம்... நான் எங்கே போகிறேன்? நீதிமன்றத்திற்குத்தானே! கொலைக்களத்திற்கு அல்லவே! ... என்னைப் போக விடு! கருத்திலே தெளிவும், கொள்கையிலே வலிவும் இருக்கும்வரை

விசாரணைக்கும் வழக்கிற்கும் விவேகிகள் பயப்படத் தேவையில்லை. போகிறேன். அறிவுப் பாதை காட்டுவோரை அழிவுப்பாதைக்கு வீரட்டும் அநியாயக்காரர்களை நேரடியாக சந்தித்துப் போர் தொடுக்கப்போகிறேன்.

(சிப்பாய், சாக்ரடீசை இழுத்துச் செல்கிறான்.)

●

காட்சி - 4.

நீதிமன்றம்

[ஐநூறு பேர் கொண்ட ஏதேனிய நீதிமன்றம் கூடியிருக்கிறது. மரத்தினால் செய்யப்பட்ட பெஞ்சுகளில் நீதிபதிகள் அமர்ந்திருக்கிறார்கள். ஒரு சில பலகைகள் பாயினால் மூடப்பட்டிருக்கின்றன. நீதிபதிகளையும், பொதுமக்களையும் இடையிலே அமைக்கப்பட்டுள்ள சிறுசிறு கம்புகள் பிரிக்கின்றன. மன்றத்தின் வலது புறத்திலே நீதிமன்றத் தலைவரின் ஆசனம் இருக்கிறது. அதன் பக்கத்திலே ஒரு ஆசனம். அதில்தான் இரண்டு கட்சிக் காரர்களும் பேசவேண்டியபோது வந்து பேச வேண்டும். இடது புறத்தில் தனித் தனியே உள்ள இரண்டு ஆசனங்களில் கட்சிக்காரர்களும் அவர்களின் சாட்சிகளும் காட்சி தருகிறார்கள் ('Hedge Log') என்ற பெட்டியிலேயுள்ள முத்திரை உடைக்கப்பட்டு, குற்றப் பத்திரிகைகள் கொட்டப்படுகின்றன. குற்றப் பத்திரிகைகளை குமாஸ்தா படிக்கிறான்.]

"பித்தன்ஸ் பேட்டைச் சேர்ந்த மெலிடியசின் குமாரன் மெலிடியஸ், அலோபீசில் உள்ள சோபரனிஸ்கோவின் குமாரன் சாக்ரடீஸ் மீது கீழ்க்கண்ட விதமாகக் குற்றம் சாட்டுகிறான். இந்த நாடும் இந்த அரசாங்கமும் ஒத்துக் கொண்ட கடவுள்களை சாக்ரடீஸ் ஒத்துக் கொள்வதில்லை. இளைஞர்களை உபதேசம் செய்து கெடுக்க முயலுகிறான். கெடுத்தும் வருகிறான். அவனுக்கு மரண தண்டனை அளிக்கவேண்டும்."

* * *

அனிடஸ், லிகன் இருவரும் மெலிடசைப் போலவே சாக்ரடீஸ்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

அனிடஸ் : சாக்ரடீஸ்! . . நாட்டில் நடமாடக்கூடாத ஒரு ஆத்மா! . . . ஜனநாயக அரசாங்கத்தைக் குறை கூறும் அந்த ஐந்து உடல் முழுதும் விஷங் கொண்டது! . . . கேட்டார் பிணிக்கும் சொற்களால், கேளாரும் வேட்ப மொழியும் வார்த்தைகளால், கேடு மலியும் கருத்துக்களை அள்ளி வழங்கி, அரசாங்கத்திற்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக, இளைஞர்களைத் தூண்டி விடும் இழிகுணக் கிழவன்!

[சாக்ரடீஸ் சிரிக்கிறான், கலகலவென்று]

நீதிமன்றத் தலைவர் : என்ன சிரிப்பு? என்ன காரணம்?

சாக்ரடீஸ் : ஒன்றுமில்லை தலைவ! . . . ஆத்திரத்திலே அனிடஸ் – தன்னை மறந்து, என்னைப் பார்த்து கிழவன் எனக் கேலிபுரிகிறார். அதை நினைத்தேன் – சிரித்தேன்! கடல்நுரை போல் நரை விழுந்துவிட்ட தலை, எனக்கும் – அனிடசுக்கும்! . . . இல்லையா சபையோர்களே! . . .

"கிரேக்க நாட்டு நீதிமன்றம், கூடைக் கணக்கிலே அவன்மீது குற்றங்களைக் கொட்டி கோப்பை நிறைய நஞ்சையும் நிறைத்து, பருகடா! இந்த உயிர் பருகும் பாயசத்தை, என்று உத்திரவிட்டிருக்கிறது!"

என்ன அனிடஸ்; உண்மைதானே?

மெலிடஸ் : சாக்ரடீஸ்! . . . வழக்கும் விசாரணையும் உங்கள் இருவரின் தலையைப் பற்றி அல்ல! . . அதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

சாக் : மிகவும் நன்றி மெலிடஸ்! . . . ஆனால் ஒன்று! . . . எண்சாண் உடம்பிற்குத் தலையே பிரதானம் போல் . . . இந்த வழக்கிற்கும் தலையே பிரதானம்! . . . என் தலையிலேயிருந்து சுடர் விட்டுக் கிளம்பும் அறிவு – அதை அழிக்க உன் தலையிலேயிருந்து புறப்படும் அர்த்தமற்ற கற்பனைகள் — அனிடசின் தலையிலேயிருந்து பீறிட்டெழும் அரசியல் ஆணவம் – இந்த மூன்றுக்கு மிடையே நடைபெறும் மும்முனைப் போராட்டம் – அதன் விளைவுதான் மெலிடஸ்; இந்த வழக்கு!

நீதி : சாக்ரடீஸ்; உம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு, நீர் சொல்லும் சமாதானமென்ன?

சாக் : என் சமாதானங்களைக் கேட்டு இளகாத சட்டங்கூட இரக்கம் காட்டலாம் – ஆனால் இந்தச் சபை எனக்காக இரங்குமா?

அனி : பார்த்தீர்களா; சட்டத்தையும் சபையையும் அவமதிக்கிறான். இப்படித்தான் இளைஞர்களெல்லாம் கெடுத்தான்!

சாக் : இளைஞர்களை, ஒரு கிழவன் எப்படியப்பா கெடுக்க முடியும்?... நானென்ன, வாலிபர்க்கு வலை வீசும் விலை மாதா?... பருவ விருந்தளிக்கும் பாவையா?...

மெலி : மாதரிடமும் இல்லாத மயக்கு மொழி–வாலிபர்க்கு வலைவீசும் வனிதையரும் பெற்றிடாத வசீகரச் சொல் அலங்காரம் – வார்த்தை ஜாலம்–அடுக்குத் தொடர் – இப்படிப் பல மாயங்கள் கற்றவர் நீர்!...

சாக் : மந்திரவாதி என்று கூடச் சொல்வாய்... அன்புள்ள இளைஞனே!... இளைஞர்களை நான் கெடுக்கிறேனே? இல்லை, அவர்களாக வந்து கெடுகிறார்களா?

மெலி : நீரே வலியச் சென்று கெடுக்கிறீர்!... சந்தை கூடும் இடங்களிலே, சந்து முனைகளிலே, சாலை யோரங்களிலே, நடுத் தெருக்களிலே, நாலுபேர் சேருகிற மர நிழல்களிலே உமது பிரசங்கம் நடைபெறுத நேரமே கிடையாது!

சாக்: ஏதன்ஸ் நகரத்திலே நான் ஒருவன் தான் இளைஞர்களைக் கெடுக்கிறேன்—இல்லையா?...

மெலி : ஆமாம்!

சாக் : நீ கெடுக்கவில்லை?

மெலி : இல்லை!

சாக் : அனிடஸ்?

மெலி : இல்லை!

சாக் : சிற்பி லைகன்?

மெலி : இல்லை!

சாக் : இந்த நீதிபதிகள்?

மெலி : இல்லை!


சாக்: யாருமே இளைஞர்களைக் கெடுக்கவில்லை; எல்லோரும் இளைஞர்களுக்கு நன்மையே செய்கிறார்கள், என்னைத் தவிர!...

மெலி : ஆமாம்—ஆமாம்!

சாக் : இவ்வளவு பேரும், ஏன்—ஏதன்ஸ் நகரமே இளைஞர்களைத் திருத்தும்போது, நான் ஒருவன் அவர்கள் பாதையைத் திருப்பிவிட முடியுமா?...

மெலி : ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்!...

சாக் : ஏன், இப்படியும் சொல்லலாமே...இருண்ட வீட்டுக்கு ஒரு ஒளி விளக்கு!...என்ன மெலிடஸ் திகைக்கிறாய்? அனிடசின் அரசியல் மேதாவிலாசத்தாலும், உன்னுடைய அளவுக்கு மீறிய கற்பனைக் கவிதைகளாலும் கவர முடி



யாத காளைகளை நான் கவருகிறேன் என்றால்; அந்தப் பெருமை எனக்கல்ல; என்னையும், ஏதன்ஸ் நகரத்தையும் வாழ்விக்கத் தகுந்த அந்தக் கொள்கைகளுக்கே...அந்தப் பெருமை! சபையோர்களே!...வாலிபர்கள் என்னைச் சுற்றி வானம்பாடிகள் போல் வட்டமிடக் காரணம், என்னுடைய வார்த்தை அலங்காரம் அல்ல! வளங் குறையாத கருத்துக்கள்–தரங் குறையாத கொள்கைகள்—இந்தத் தரணிக்குத் தேவையான தங்கம் நிகர் எண்ணங்கள்!...

அழகு மொழியால், அலங்கார அடுக்குகளால்—அரும்பு உள்ளங்களை மயக்குகிறேன் என்கிறார்களே; அவர்களைக் கேட்கிறேன்; அந்த மொழி எனக்கு மட்டும் சொந்த மல்லவே—அனிடசும், மெலிடசும் அதைப் பேசக் கூடாது என்று நான் தடை போட்டது கிடையாதே!—பேசிப் பார்க்கட்டுமே அவர்களும்—பாவம்; பேசித் தோற்றவர்கள்—மொழியிலே அழகு குறைந்ததால் அல்ல—எண்ணத்திலே இழுக்கு நிறைந்து விட்டதால்!—இருள் படிந்து விட்டதால்!

நாட்டிலே நீண்ட நாட்களாக சூழ்ந்திருக்கும் இருளை விலக்க முயற்சிக்கிறேன் குறுகிய காலத்தில்!—அதற்குப் பரிசு, சாக்ரடீஸ் தீமை செய்பவன்—விண்ணிலும் மண்ணிலும் என்ன இருக்கிறது என்று தேடிப் பார்க்கும் நாஸ்திகன்—பொய்களை உண்மையாக்கும் புரட்டன்–இப்படியெல்லாம் பட்டங்கள்! குற்றச் சாட்டுகள்! பரவாயில்லை! எழுபது வயதுக்கு மேல் முதன் முதலாகக் குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் எனக்கு எப்படியும் மரண தண்டனை அளித்துவிட வேண்டுமென்று மெலிடஸ்—அனிடஸ் போன்றவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்! இன்னும் சில வருடங்களில்–சில மாதங்களில்—அவர்களது ஆசை தானாகவே நிறைவேறி விடலாம்! அவ்வளவு கிழவனாகி விட்டேன் நான்! அதற்குள் அவசரப்பட்டு, சாக்ரடீசைக் கொன்றோம் என்ற அநியாயப் பழியை ஏன் தேடிக் கொள்ளுகிறார்களோ, தெரியவில்லை!

நீதி : சாக்ரடீஸ், பேச்சை நிறுத்தும்! மரண தண்டனை—சிறைவாசம்–நாடு கடத்தல்–அபராதம் வசூலித்தல்—இப்படிப் பல தண்டனைகள் உமக்குத் தரப்படலாம். அவைகளில் நீர் எதை விரும்புகிறீர்?

சாக் : நான் சாவதாக இருந்தால் ஏதன்ஸ் நகரத்திலே முப்பது பேர் கொண்ட சபையின் ஆட்சி நடைபெற்றதே–அதில் நான் ஒரு நிர்வாக அங்கத்தினனைப் பதவி வகித்து, ஆர்ஜீனே போர்க்களத்தில் மாண்ட வீரர்களின் சவங்களையும், உடைந்த போர்க் கப்பல்களையும் எடுத்து வராதக் குற்றத்திற்குத் தளபதிகள் விசாரணை செய்யப் பட்டபோது, அந்தச் சபையின் அநீதியைக் கண்டித்து வெளியேறினேனே, அன்றே கொல்லப்பட்டிருப்பேன்! அதைத் தொடர்ந்து, லீனன் என்பவனைக் கொலை செய்து வர என்னையும் மற்ற மூவரையும் சபை அனுப்பியபோது, அதை மறுத்து வீட்டுக்குப் போய்விட்டேன்; அப்படி மறுத்ததற்கே எனக்கு மரண தண்டனை கிடைத்திருக்கும் அப்போதே! நல்ல வேளை, அந்தச் சபை அப்போதே அழிந்தது; நான் தப்பினேன். கிரேக்கநாட்டு நீதிமன்றம் சாக்ரடீஸின் பிணத்தைக் காண வேண்டுமென்று விரும்பினால், அதற்கு நான் தடையாக இருக்க முடியாது! சிறைவாசம் அனுபவிக்கிறேன் எனக் கேட்கலாம்—அதிகாரிகளின் நிரந்தர அடிமையாக சிறையில் கிடப்பதைவிட செத்துமடிவது மேல்!

அபராதம் கட்டினால் விட்டு விடுவீர்கள்! ஆனால், அந்த அளவுக்கு நான் பணக்காரனை இருந்திருந்தால், அபராதங் கட்டக் கூடிய பண வசதி உள்ள அளவுக்குப் போதுமான குற்றங்களைச் செய்திருப்பேன்! நாடு கடத்தலை ஏற்கலாம்—வேறு நாட்டில் சுதந்திரமாகத் திரியலாம்—ஆனால், என்னுடைய கொள்கைகளை என்னுடைய சொந்த நாடே ஏற்க மறுக்கும்போது பிற நாடுகளில் வர வேற்பார்கள் என்று என்ன நிச்சயம்!—அதனால் எனதருமை ஏதன்ஸ் நகரத்துப் பெருமக்களே! நான் செய்த காரியங்களுக்குத் தண்டனையாக ஒலிம்பியாவில் நடக்கும் குதிரை ரதப் போட்டியில் ஜெயித்தவனுக்கு வீர மானியம் கொடுப்பது போல—எனக்கும் கொடுத்து, என்னை ஆனந்தமாக வாழ விடுங்கள்! என் இலட்சியப் பிரச்சாரத்திற்குத் தேவையான வசதிகளை இடைவிடாது செய்து தாருங்கள்! அதுதான் நீங்கள் எனக்கும், என் கொள்கைக்கும் காட்டுகிற மரியாதையாகும்!

[சபையோர் திகைப்பு]

நீதிபதி : அலட்சியமான பேச்சு! அவமதிப்பும்...!.., வாக்கெடுப்பு நடைபெறட்டும்! சாக்ரடீசுக்கு மரணமா? மன்னிப்பா?...என்று 'சங்கு'கள் மூலம் வாக்களியுங்கள்!

[வாதியிடம் உள்ள பலகையிலும், பிரதிவாதிக்கு நேரே உள்ள பலகையிலும், நீதி மன்றத்தினர், தங்கள் இஷ்டப்படி 'சங்கு'களை அடுக்குகிறார்கள். வாக்கெடுப்பு முடிகிறது. 'சங்கு'கள் எண்ணப் படுகின்றன. 'மரணம்' என்று 281 சங்குகளும், 'மன்னிப்பு' என்று 220 சங்குகளும் கணக்கிடப்படுகின்றன. சபை, சாக்ரடீசின் முகத்தைப் பார்க்கிறது. அவனது கண்களிலே புதிய ஒளி பிறக்கிறது.]

நீதிபதி : மன்னிக்கும்படி 220 வாக்குகள்! மரண தண்டனை அளிக்கும்படி 281 வாக்குகள்! வாக்கெடுப்பின்படி, சாக்ரடீசுக்கு விஷம்

தரப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்!

சாக்ரடீஸ்: ஏதன்ஸ் நகரத்து நீதிமன்றம், பெருமைக்குரிய தீர்ப்பை அளித்து மௌனப் புன்னகை புரிகிறது! உலக சரித்திரத்திலே இடம் பெறுகிற இந்த ஏதன்சுத் தீர்ப்புக்கு ஆளாகி விட்ட பெருமை முதன் முதலாக எனக்குக் கிடைத்திருக்கிறது! அறிவு விளக்கை கையிலே ஏந்து என்று கூறியதற்கு அழிவை பரிசாகத் தரும் புண்ய காரியத்தை நிறை வேற்றிவிட்டீர்கள்! 281—220!... முப்பத்தி யோரு வாக்குகள், இப்படித் திரும்பி விழுந்திருந்தால், சாக்ரடீஸ் காப்பாற்றப்பட்டிருக்கலாம்! அந்த வாக்குகளும் ஆயிரக்கணக்கான நாணயங்கள் செலவிடப்பட்டு வாங்கப் பட்டவை யென்பதைக் கூறாமலிருக்க முடியாது! கவலையில்லை! இந்த மன்றத்தின் முறைப்படிப் பேசி வாழ்வதைக் காட்டிலும், என் முறைப்படிப் பேசி சாவது எவ்வளவோமேன்மையானது!... எனக்குத் தெரியும்; ஒரு மனிதன்—எதுவும் செய்து, எதையும் பேசி, மன்னிப்புக் கேட்கத் தயாராயிருந்தால், இதுபோன்ற தண்டனைகளிலேயிருந்து நிச்சயம் மீளலாம்! களத்திலே எதிரியின் காலில் விழுகிற போர் வீரனாக மாறிவிட நான் நினைத்ததில்லை - அதனால் மரணத்தைப் பரிசாகப் பெற்றிருக்கிறேன். கனவு இல்லாத தூக்கத்தைப் போன்றது மரணம் என்றால், அந்த மரணத்திற்காக நான் ஏன் கவலைப்பட வேண்டும்! நீங்கள்தான் எதற்காகக் கவலைப் படுகிறீர்கள்? மரணத்திற்குப் பிறகு மறு உலகம் உண்டென்றால், அந்த உலகத்திலே எனக்கு முன் குடியேறியிருக்கும் ஹோமர், பிண்டார் போன்ற கவிஞர்களை சந்திக்கும் சந்தோஷத்தைப் பெறுவேன்! ஆனால் ஒன்று, அப்படி ஒரு உலகமிருந்தால், அந்த உலகத்திலும் என்னுடைய அறிவுப் பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டே யிருக்கும்! மனிதனுக்கு மறு ஜென்மம் உண்டென்றால், அந்த ஜென்மத்திலும் இந்தக் குற்றத்தை செய்தே தீருவேன்! செய்தே தீருவேன்!—என் சிந்தை, அணு, ஒவ்வொன்றும் தேன் பாய்ச்சும் இந்தக் குற்றத்தை, எங்கும், எப்போதும், இடமும் நேரமும் கிடைத்த போதெல்லாம் செய்து கொண்டேயிருப்பேன்! எனக்குத் தண்டனை அளித்த நண்பர்களே! நீங்கள் எதிர் காலத்துக்குப் பதில் சொல்லியாக வேண்டும்! எதிர் கால இளைஞர்கள் என்னைப் போல, இவ்வளவு அமைதியாக கேள்வி கேட்க மாட்டார்கள். அவர்களது கேள்விகளிலே அக்கினிப் பொறி கிளம்பும்—அனல், புனல், புயல், அத்தனையும் வீசும்—அவர்களை அமைதி வழியில் கட்டிக் காத்துவரும் நான் போன பிறகு, புறப்படப் போகும் புரட்சி எரிமலையின் முன்னே நிற்க முடியாமல், சுயநலப் புலிகளே! நீங்கள் எல்லாம் சுக்கு நூறாகப் போய் விடுவீர்கள்!...சரித்திரம் திரும்பும்! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!

[சாக்ரடீஸ் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறான்.]



காகிதப் பூக்கள்!...
புகைப் படம்: வி. குப்புராஜ், கொடுமுடி.

☆

காட்சி-5

சிறைச்சாலை

[சாக்ரடீஸ் காலிலே சங்கிலி பூட்டப்பட்டு, சிறிய இடத்திலே அங்குமிங்கும் உலவிக் கொண்டிருக்கிறான். கதவு திறக்கப் படுகிறது — கிரிட்டோ வருகிறான்.]

சாக்: கிரிட்டோ! என் அருமை நண்பா! வா வா... (வெளியே வந்து பார்த்து)...ஓ...அது யார்?..

கிரி: உன் மனைவி...குழந்தைகள்!...

[பெரிய குழந்தைகள் இருவரும், கைக் குழந்தையை ஏந்தியபடி எக்ஸேந்திபியும் உள்ளே வருகிறார்கள் கண்ணீர் வடித்தபடி...]

சாக்: எக்ஸேந்திபி!...

[அவள் அழுகிறாள்; குழந்தைகள் அழுகிறார்கள்—பச்சைக் குழந்தையும் வீரிட்டு அழுகிறது.]

சாக்: அன்புள்ளவளே!...பார்த்தாயா?...பயனற்ற தத்துவ விசாரணையில் காலத்தைக் கழிக்கிறேன்— தர்க்க வாதம் புரிந்து தொல்லைப் படுகிறேன்—என்றெல்லாம் கோபித்துக் கொண்டாயே; இப்போது பார், உன் கணவன் அகிலம் புகழும் வீரனாக, தேசம் புகழும் தியாகியாக மாறி விட்டான்!...எக்ஸ்டஸி! நீ பாக்கியசாலிதான்! படை பலம், பண பலம், அத்தனை பலத்தையும் எதிர்த்து நின்று, யாருக்கும் பணியாத பெருமையோடு, விழிகளை கடைசியாக மூடப் போகும் கர்ம வீரனுக்கு நீ மனைவி!...குழந்தைகளை பத்திரமாகப் பார்த்துக் கொள்! அவர்கள் பெரியவர்களாக மாறி, நேர்மை தவறி நடந்தால், நான் உங்களைத் திருத்த முயன்றது போல், நீங்களும் அவர்களைத் திருத்த முயலுங்கள்! போ...நேரமாகிறது!...காவலர்கள் கோபிப்பர்!...கிரிட்டோ, இவர்களை அனுப்பி வை!...

[கிரிட்டோ அவர்களை வெளியே அழைத்துச் செல்கிறான். பிறகு கிரிட்டோ மட்டும் உள்ளே வருகிறான்.]

சாக்: கிரிட்டோ! உனக்குத் தெரியுமல்லவா?.., மூப்பது நாள் சிறை வாழ்வு இன்றோடு முடிவடைகிறது! நீதி மன்றத்தின் தீர்ப்பின்படி...விஷம் சாப்பிட்டு சாகவேண்டிய நன்னாள் இன்றுதான்!

கிரி: சாக்ரடீஸ்!...தர்க்க வாதங்களால் அழிக்க முடியாத உன்னை, விஷம் அழிக்கப் போகிறது!...

சாக்: என்னையல்ல; என் உடலை!...நான் எப்போதும் வாழ்வேன்!...அகிலத்தில் அறிவின் ஜோதி அணையாத வரையில் என் பெயரும் அணையாது!

கிரிட்: ஒரு யோசனை நண்பா!...இன்னும் நேரமிருக்கிறது! என்னிடமோ மின்னும் தங்கமிருக்கிறது! காவலர்களை வசப்படுத்திக் கொண்டு எப்படியாவது தப்பி விட்டால்...?

சாக்: வெட்கப்படுகிறேன் கிரிட்டோ!...சாக்ரடீஸ் சாவுக்குப் பயந்தவனல்ல...நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளைப் பற்றி நான் சர்ச்சை செய்ததும், அபராதங் கட்டத் தயாராக இருப்பதாகக் கூறியதும், தேசப் பிரஷ்ட உத்திரவு பற்றி வியாக்யானம் கூறியதும், என் பிரச்சாரத்தின் நோக்கம்பற்றி பெரியதோர் பிரசங்கம் செய்ததும்—மரணத்திற்கு பயந்து அல்ல! இவ்வளவுக்கும் தயாராக இருந்தும், கிரேக்க நாட்டு நீதிமன்றம் வீணாக சாக்ரடீஸை அழித்து விடும் வெறிச் செயலில் ஈடுபட்டது என்பதை நிரூபிப்பதற்காகத்தான்! அதை வைத்து நான் சாவுக்கு அஞ்சுகிறேன் என்று கணக்கிட்டு விடாதே கிரிட்டோ!...பிளேட்டோ, கிரிட்டோ, அப்போலடோரஸ் முதலிய நண்பர்களையும், மனைவி மக்களையும், என் தருமை ஏதன்ஸ் நகரத்தையும் விட்டுப் பிரியும் நேரம் நெருங்கிக் கொண்டே யிருக்கிறது; உள்ளே எனக்காக விஷம் தயாராகிக் கொண்டிருக்கிறது! இன்னும் கால் நாழிகையில் காவலன் வந்து விடுவான், கடும் விஷத் தோடு!

கிரிட்: அருமை நண்பா! மலை குலைந்தாலும் மனங் குலையா மாவீர! உன் ஒளி வீசும் சுழற் கண்களை, துடிக்கும் அகன்ற புருவங்களை, தொகை தொகையாகப் பகை வரினும் துவளாது தத்துவ விளக்கம் கொட்டும் உணர்ச்சி மிக்க உதடுகளை இனி ஒரு சாக்ரடீஸ் உருவத்திலே நான் காணப் போகிறேனோ?

சாக்: அழாதே நண்பா! அதோ வந்து விட்டது அமுதம்! அறிவுப் படைக்கு இந்த அரசாங்கம் வைக்கும் விருந்து! தள்ளாத கிழவனுக்கு இந்தப் பொல்லாத நாடு தரும் பரிசு! அதோ வந்து விட்டது!

[காவலன் விஷக் கிண்ணத்துடன் வருகிறான்.]


சாக்: சிறைக் காவல! இதை என்ன செய்ய வேண்டும்? முறைகளைச் சொல்லு!

காவ: (சாக்ரடீசின் விலங்குகளை அவிழ்த்து விட்டு அழுதபடி) பெரியவரே! விஷத்தை முழுவதும் குடிக்க வேண்டும்...பிறகு இங்கு மங்கும் நடந்து கொண்டே யிருக்க வேண்டும்! கால்கள் மறத்துப் போகும் வரையிலே அப்படி நடக்க வேண்டும்...பிறகு உட்காரலாம்...கொஞ்சம் கொஞ்சமாக உடம்பு ஜில்லிட்டுக் கொண்டே வரும். பிறகு படுத்து விட்டால்...

சாக்: ஆனந்தமான நித்திரை! கனவு மங்கையாலும் கலைக்கமுடியாத நித்திரை!...காவல! கொடு இப்படி!

[விஷக் கிண்ணத்தை வாங்குகிறான்.]

கிரிட்: நண்பா!...சிறிது நேரம் பொறுத்துக்கூட



சாப்பிடலாம்! சிறைச்சாலையிலே அதற்கு அனுமதி உண்டு!

சாக்: கிரிட்டோ! உனக்கு மிகவும் அற்ப ஆசை! விஷத்தை இன்னும் இரண்டு நாழிகை கழித்து சாப்பிடுவதாக வைத்துக் கொள்! அதற்குள் திடீர் என்று இருதயம் வெடித்து நான் இறந்து விட்டால்....கிரேக்க நாட்டு நீதி மன்றத்தின் தண்டனையை எப்படி நிறைவேற்றுவது?...புதிய சாக்ரடீசா பிறந்து வருவான்? கூடாது; கூடாது...இப்போதே சாப்பிடுகிறேன்...

கிரிட்: நண்ப! கடைசியாக எனக்கு ஏதாவது சொல்லு!

சாக்: புதிதாக என்ன சொல்லப் போகிறேன்–"உன்னையே நீ அறிந்து கொள்!" எதையும் ஏன் எப்படி எதற்காக என்று கேள்! அம்படிக் கேட்டதால்தான் சிலை வடிக்கும் இந்த சிற்பி, சிந்தனைச்சிற்பியாக மாறினேன். "அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்–எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்!"– இதைத்தான் உனக்கும், இந்த உலகத்திற்கும் சொல்ல விரும்புகிறேன்.

கிரிட்: ஏதன்சின் எழுச்சி மிக்க சிங்கமே!...எங்கள் தங்கமே!...கிரேக்கப் பெரியாரே! எம்மையும் உம்மையும் இந்த விஷம் பிரிக்கப் போகிறதா?...அய்யகோ, நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே! சாக்ரடீஸ்...உனது சவத்தை எப்படி அடக்கம் செய்ய வேண்டும்?...

சாக்: புதைப்பதாயிருந்தால், இந்த நாட்டில் உலவும் பளுகு மூட்டைகளையும் என்னோடு போட்டுப் புதைத்து விடு!...எரிப்பதாயிருந்தால், ஏமாற்றுக்காரர்களின் சுவடிகளையும் என்னோடு சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கித் தண்ணீரில் கரைத்து விடு!...விடை கொடு. விஷம் அழைக்கிறது!...என் தேசத்துப் பெருமக்களிடம் விடை பெற்றுக் கொள்ளப் போகிறேன்...

எனதருமை ஏதன்சு நகரத்துப் பெருமகளே! இதோ, சாக்ரடீஸ் சந்தோஷமாக சாகப் போகிறான்!...கிரேக்க நாட்டு நீதி மன்றம், கூடைக் கணக்கிலே அவன்மீது குற்றங்களைக் கொட்டி, கோப்பை நிறைய நஞ்சையும் நிறைத்து, பருகடா இந்த உயிர் பருகும் பாயசத்தை என்று உத்திர விட்டிருக்கிறது!...விஷக் கோப்பையின் விளிம்பிலே, உபதேசங்களை உதிர்த்த சாக்ரடீசின் உதடுகள் பதியப் போகின்றன! இன்னும் ஓரிரு விநாடிகள்! அதன் பிறகு சாக்ரடீசின்—உடல், உயிர், எல்லாமே அதனதன் தொடர்பை அறுத்துக் கொண்டு, வாழ்க்கைத் தொடர் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடும்!—வருகிறேன் கிரேக்கமே!...வருகிறேன்!...எனதருமை ஏதன்ஸ் நகரமே, வருகிறேன்!...நான் ஆடியோடி ஆவேசமாகப் பேசுவதற்குத் துணை புரிந்த ஏதன்சு நகரத்து எழில் வீதிகளே! வீதியோரத்து மரநிழல்களே! வீட்டோரத்துத் திண்ணைகளே! உங்கள் அனைவரிடமிருந்தும் இந்தக் கிழவன் விடைபெறுகிறான்! பீடு நடையும் பெருமித நோக்கும் கொண்ட இளைஞர்களே! நாடு காக்கும் நல்ல தம்பிகளே! பேரன்பு கொண்டோரே! பெரியோரே! பெற்ற தாய்மாரே! நல் இளஞ் சிங்கங்காள்! உங்கள் அனைவருக்கும் சாக்ரடீசின் இறுதி வணக்கம் உரித்தாகுக! இந்தக் கிழவன், கிரேக்க இளைஞர்களைக் கெடுத்ததாக யாராவது உண்மையாக உளமார, நினைத்தால் அவர்கள் என்னை மன்னித்து விடட்டும்!—மன்னித்து விடட்டும்! வருகிறேன். வணக்கம். வணக்கம். சிந்திக்கத் தவறுதே! ஏ, ஜெகமே! சிந்திக்கத் தவறுதே! உன்னையே நீ அறிவாய்!... அறிவாய்!

[சாக்ரடீஸ் விஷத்தை சாப்பிட்டு முடிக்கிறான். கால்கள் தடுமாறுகிற வரையில் நடக்கிறான். பிறகு படுக்கிறான். உடல் ஜில்லிட்டுப் போகிறது! காவலன், போர்வையை இழுத்து சாக்ரடீசின் முகத்தை மூடுகிறான். சில வினாடிக்குப் பின், சாக்ரடீஸ் போர்வையை முகத்திலிருந்து விலக்கி]


சாக்: கிரிட்டோ! ஒன்று சொல்ல மறந்தேன்...பக்கத்து வீட்டு அங்கிளிப்பியசுக்கு ஒரு கோழிக் குஞ்சு கடன் கொடுக்க வேண்டும். அதை மறக்காமல் கொடுத்து விடு...!

[அத்துடன் கிரேக்கப் பெரியவரின் மூச்சு நின்றது. கிரிட்டோ அழுதான்--சின்னட் சென்று, கிரேக்கம் அவன் கல்லறையைக் கண்ணீரால் குளிப்பாட்டியது.]

★



மணிமகுடம்



"மாதாகோவில் உபதேசம்—மணி மகுட விசுவாசம் இவை இரண்டிற்கும் நான் செய்ய வேண்டிய கடமை, மற்றவற்றைவிட பெரிதென நான் மதிக்கிறேன். எனவே எனது மனதிற்கிசைந்தவனுக்கு மாலையிட மறுப்பதென முடிவு செய்துவிட்டேன்." கிளாரன்ஸ் ஹவுசிலிருந்து—ஆமாம், இங்கிலாந்து நாட்டு அரசி எலிசபெத்தின் இளைய மகள், மார்க்கரெட்டின் லண்டன் மாளிகையிலிருந்து சேதி வெளிவாகியது. சேதியவள் மார்க்கரெட். காதலுக்கும் கடமைக்கும் மத்தியில் போராடிய மாதுசிரோன்மணியின் மனமுருக்கும் வாசகங்கள் என்றனர் சிலர். லண்டன் நகரத் தாய்க்குலம், பித்துமனங் கொண்டவள், என்ன காரியம் செய்யத் துணிந்தாள—என கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட விம்மினர். கோமகனை குடிமகன மணப்பதாமே! திருச்சபையின் சம்மதம் என்னவாது? எனக் கெருக்கரித்த குருமார்கள் குதூகலப்பட்டனர்.

கடமைக்காக காதலைத் தியாகம் செய்த தீரவல்லி என்றனர் 'கடமை'யின காவலர்கள். காதலும் ஓர் கடமை தானே! அதை கருகிய மொட்டாக்கிய கருத்துக் குருடி என்றனர் காதலர்கள்.

பல மாதங்கள் நாட்டு மக்களின கவனதத்தைக் கவர்ந்ததும், சர்ச்சைகளுக்கு நீர் வார்த்ததுமான சௌந்தர்யமான காதல் நாடகத்தின் கடைசித் திரை விழுந்தது' எனறு திட்டிவிட்டு, பத்திரிகைகள, திடுக்கிடும சேதிகள் வரும் வேறு திக்கிலே திரும்பிக் கொணடன. நாடக ரசிகர்களும திரைவிழுந்து விட்டதால் வேறு வேலைகளுக்குச் சென்று விடடனர்.

'மார்க்கரெட் சமபவம்' நடைபெறறு இரணடரை மாதங்கள் ஓடி விட்டன. உலகம் இப்படிபபட்ட நாடகங்களை எத்தனையோ வற்றை கண்டிருக்கிறது; காணக்காத்திருக்கிறது இரண்டரை மாதங்களல்ல இருநூறு வருடங்களானாலும் ஒருவனுக்கு மட்டும் இவை 'சர்காவரம்' பெற்றவை. அவன் தான் சரித திரக்காரன். புதை பொருள், கல்வெட்டு, கண் வெட்டு, இறந்தவர், இருபபவர், எதிர் காலத்திலே வர இருபபவர்--எல்லோரும் அவனது சந்நிதானத்திலே வந்து சாட்சி கூறித்தான் ஆக வேணடும். சமுதாயத்தின் வளவு, நெளிவுகளுக்கு—சங்கடங்களுக்கு—சமருக்கு அவனது ஆய்வுக் கூடத்திலே தெளிவான பதில் கிடைக்கிறது. அந்த சரித்திரக்காரனின் கண்ணோட்டத்திலே மறைந்துள்ள வரலாற்று உண்மைகளை ஆராய முயற்சிக்கிறது, இக்கடடுரை.

திடீரென்று மணிமேகலை மாளுள் மார்க்கரெட், "மாதாகோவில் உபதேசம், மணி மகுட விசுவாசம" என்று சொல்லிக்கொண்டு. அவள் ஒன்றும் பத்து வயது பாபபா அல்ல. இருபத்தைந்து வயது நிரம்பிய எழில் மங்கை! அவளது உதாகுமாரனையும் பெற்றுத்தான் உயிரான வனத்தில் சந்தித்தவளல்ல. பதினேரு வருடங்களாக அவளது அன்பன், டவுன்சென்ட் பழகியிருக்கிறானும். நாட்டிய அரங்கங்களுக்கும், தேநீர் விருந்துகளுக்கும் அடிக்கடி அழைத்துச் செல்லுவானும்! காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி, மாலை மலருமாமே அந்நோய்! இன்னோனோ, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் அரும்பி மலர்ந்ததாம்! குமரன் தோன்றி குறுகை புரிந்தபோது, நாம் கோமகளாயிற்றே, அவன் குடிமகனாயிற்றே—அடுக்குமா இந்த

சரித்திர ஆராய்ச்சி



செல்லம்

K.A.மதியழகன்

அரசி, மணிமகுடத்தின் கௌரவம் என்னவது, மாதர் கோவில் சும்மா விடுமா என்று சிந்தித்தாளில்லை. அரும்பை, போதாக்கி மலராக்கினாள்! "மலர், ஆண்டவனின் பூஜைக்குரியது. அபலையாகிய நான் என் கூந்தலில் சொருக இருந்தேன். அபச்சாரம், அபச்சாரம்" என விளக்க முனைக்கிறாள்! அவளது விளக்கம், விநயமானதாகவோ, விவேக முடையதாகவோ இல்லை வித்தாரக்கள்ளியிவள் என சந்தேகிக்கும்படியே இருக்கிறது.

ஐந்து வயதினிலே, அறிவாப் பருவத்திலே, தாதிமார் தாலாட்ட, பக்கிங்காம் அரண்மனையிலே தவழ்ந்து கிடந்தாள் மார்க்கரெட் மங்கை. அப்போது, இவளது பெரியப்பன்—ஆதவன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜுக்கு அதிபன்—விண்ணுக்கோமகன்—கணவனே இட்சர் முந்தி மார்க்கரெட்டுக்கோ, அவளுடைய அந்தஸ்தின் ஆதிமந்தம் எல்லாம் இது தான்.

மாதாகோவில் உபதேசமாம்-அந்த மதிற்கோட்டையையும் தாக்கித் தரைமட்டமாக்கிய கொற்றவன் அவர்கள் குடும்பத்திலே இருந்திருக்கிறான். எட்டாம் ஹென்றி எனும் பெயராளன், அரசுக் கட்டிலில் ஏறினான். அரும்பு மீசை வாலிபன் ஹென்றி-அவனது அண்ணி, அரகான் நாட்டு அழகி காதரைன். தமையன் மாண்டான். அந்த தையலின் தளிர்மேனி உலர்ந்த சருகாகி விடவில்லை. தம்பிக்கு மைமல் ஊட்டினாள் விதவைக்கோலம் என்ற வேலியையும் தாண்டி வேல்விழியைப் பாய்ச்சினாள். விவாக சுபமுகூர்த்தத்திலே முடிந்தது. விவலிபநூலிலே இதற்கு ஆதாரமில்லையே என்று போப்பாண்டவர் கோபிக்கவில்லை. தம்பதிகளை ஆசீர்வதித்தார். அனுமதி தந்தார். காதலரின் வம்சம் தழைக்க—மணிமகுடத்திற்கு வாரிசாக அவள் வயிற்றில் புழு, பூச்சி ஒன்றும் தோன்றவில்லை. சோக பிம்பமானாள் மன்னன். சொர்ண பிம்பம் நாளிருக்கையில் சோர்வு ஏன் வேந்தே—என்றாள் ஓர் சுந்தரவல்லி. அந்தஜாலக்காரிதான் வேல்லக்காரி அன்னிவொலின். அவளை வீடுக்காரியாக்க வேந்தன் விரும்பினான். வழிகாதரைன் விவாக ரத்திலே தொங்கியிருந்தது. காதரைன் விவாகம் சாஸ்திர சமந்தமற்றது. விதவையின் திருமணத்தை, கிருஸ்துவ மார்க்கம் அனுமதிக்கவில்லை. அப்படி தீர்ப்பு அளியுங்கள், ஐயனே! என வேண்டினான் ஜகத்குரு போப்பாண்டவரை. ஜகத்குரு சங்கடமான நிலைமையில் தள்ளப்பட்டார்! ஸ்பெயின் நாட்டு மன்னன் ஐந்தாம் சார்லஸ் காதரைனுக்கு ஒன்று விட்ட அண்ணன் முறை, ஹென்றியோ இங்கிலாந்தின் மகுடபதி. போப்பாண்டவர் லோககுரு. இங்கிலாந்தும் ஸ்பெயினும் அதற்குள் அடக்கம். இறுதலைக் கொள்ளி எறும்பானார் போப்பாண்டவர். எந்த மன்னனின் விரோதத்தையும் சம்பாதிக்கிக்கொள்ள விரும்பவில்லை போப்

பரண்டவர். ஏழாம் கிளமண்ட் காலம் கடத்திக்கொண்டே போனார். காதற் பெண்ணின் கடைக்கண் பணி காற்றிலே விண்ணையும் சாடவைக்குமா மே! இந்த கர்த்தரின் காவலர் என்னவது! "ஐயா! பெரியவரே! ரோமாபுரிக்கும் இங்கிலாந்திற்கும் இனிச் சம்பந்தமில்லை. ஆங்கில மாதாகோவில்களுக்கு நானே அதிபன். உமது ஆணைக்குக் கட்டுப்பட்டதல்ல காண்டர்பரி தேவாலயம் எங்கள் தலைமை கிறிஸ்தவம்! இங்கிலாந்து காட்டின் மன்னன் இனி மதத்தலை வனையும் மிருப்பான்" என சட்ட மூலம் பிரகடனப்படுத்தினன். அன்றுமுதல் ரோமாபரியின் உரிமைக்கயிறு அறுபட்டது இன்றும் உறவு கிடையாது!

மார்க்கரெட்டம், எட்டாம் ஹென்றியும், எட்டாம் எட்வர்டும், எட்டாத கோட்டையல்ல எண்ணை எண்ணமல்ல, உன் இதய ராஜாவாக ஏற்றுக் கொள், ஏழையானால் என்ன? உன் இதயப் பேழையைத் திறந்தவன் அவன்தானே! என்று எடுத்துரைத்திருப்பர். அவளும் ஏறபுடைத்து என்று கருதியே, காதற் பயிரை வளர்த்திருப்பாள். விளக்கமுறைக்க வந்த மார்க்கரெட்டோ, மாதவியின் மகளாகிறாள். காரணமென்ன? "மணிமகுடத்தின மகத்துவம் அபாரமானது! கண்ணே மார்க்கரெட்! என் தங்கையாய் வந்துதித்த மாணிக்கமே, மரகதமே! அந்த கிரீடத்தின் ஜொலிப்பைப்பார்! அதன் மீது தூசு படலாமா? நமது கௌரவம், பெருமை, எல்லாவற்றின் உறைவிடமே இதுதானே! இதனைக் கெடுக்கலாமா?" என்று கெஞ்சினாளாம் அக்காள் அரசியார்.

"காதலென்ன, அக்கா, கவுனு, கால் சராயா, கண்ட படி மாற்றிக்கொள்ள? கவுனுக்கும் கால்சராயிக்கும்கூட அளவும் வகையும் உண்டே" என்று கேட்டிருக்கலாம்! ஆஸ்திரியநாட்டு ஆரணங்கு, பதினாறும் லூயி மன்னனின் பட்டத்தரசி மேரி அண்டாய்னெட் என்பவன் கூறினாளாமே மணிமகுடத்தை நான் தலையிலதான் சுமந்து கொள்ள முடியும்; என் இதயத்திலே அணிந்து கொள்ள முடியாதே என்று, அதைச்சொல்லி எனக்கும் மனமயக்கம் இல்லை அக்கா என்று கூறியிருக்கலாம்.

கூறவில்லையென்றால் காரணமென்ன? இவையாவது பழங்கதைகள். அவள் கண்ணெதிரே கண்ட காட்சிகளே அவள் கருத்தைத் துலங்கவைக்கவில்லை என்றால் பரிதாபத்துக்குரிய அந்த பாவையைப் பற்றி என்னசொல்வது? பட்ரீஷியபாட்டி என்று ஒருத்தி இருக்கிறாள். எழுபது வயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் இந்த மூதாட்டி இங்கிலாந்து ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவள். விக்டோரியா மகாராணியின் மூன்றாவது மைந்தன கன்னாட் கோமகனின் அருமந்த மகளதான பட்ரீஷியா. நாற் தாண்டுகளுக்கு முன் அவள் நீச்சலழகையும் மேத்திராணித்தையும் கண்டு களிக்க வண்டென பல வாலிபர்கள் வட்டமிட்டனர். அவள் தோளின் மீது, அவளுக்கு செல்லமான பஞ்சவர்ணக்கிளி தொத்திக் கிடக்க, தோகை மயிலென அவள் ஒயிலாகச் சென்ற காட்சியை இன்னும் சரகாத இழவர்கள் கதை கதையாய் வர்ணிக்கிறார்கள். பட்ரீஷியாவின் இதயப் பெட்டகத்தைத் திறக்க பலர் திறவு கோல் தேடினர். அது இன்னும் எவருக்கும் அகப்படவில்லை என்று பெருமையாகப் பேசப்படுகிறது. பெரிய இடத்துப் பிள்ளைகள் தோல்வியையே பெற்றுத் திரும்பினர். இந்த மலர்க்கொடியோ ஓர் மாலுமியை விரும்பினாள். தளபதி ராம்சே ஒல்லியாரை உயர முள்ள வாலிபன், வாலிபத் திற்கேற்ற வசீகரம். கன்னடர் நாட்டு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார் கன்னட் கோமகன். அவரின் மெய்க்காப்பாளனாக வந்தான் ராம்சே. அந்த மாலுமியை அவளது வாழ்க்கைத்தோணி யாகவே செலுத்த வரம் தந்தாள் பட்ரீஷியா. இந்த மொய் குழலும் அவளது மோஹனனும், இலண்டன் நகர நிலாச் சோறுகளிலே, நீச்சல் குளங்களிலே, நாட்டிய அரங்கங்களிலே அடிக்கடி தென்பட்டனர். பட்ரீஷியாவிற்கு வயது முப்பதாகியது. குடி மகனை மணக்கப் போகிறாள் பட்ரீஷியா என்றவதந்தி ஊரெங்கும் கிளம்பியது இரண்டு வருடங்கள் எத்தனையோ இடையூறுகள் அவளது முப்பதாவது வயதில் வெஸ்ட் மின்ஸ்டர் தேவாலயத்தில் திருமணம் நடைபெற்றது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் வந்திருந்து வாழ்த்தினர். வெளியே கூடியிருந்த மக்கள். இந்த ஜனநாயகத் தம்பதிகளை கரகோஷத்துடன் வரவேற்றனர் அவள் கணவன் பட்டாளத்தில் பெரும் பொறுப்புகளை ஏற்று பணி புரிந்தார் இன்றும் குதூகலமாய் வாழ்கின்றனர். பட்ரீஷியா, வண்ண ஓவியங்கள் தீட்டுவதில் திறமைசாலி. கண் காட்சிகளிலே அவள் சித்திரங்கள் இடம் பெறுகின்றன. இந்த பாட்டி, அடிக்கடி பக்கிங்காம் அரண்மனை வந்து போகிறாள். அவளுடன் மார்க்கரெட் படம் கூடப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்! படம்தான் பிடித்துக் கொண்டிருக்கிறாளே தவிர, பட்ரீஷியா பாட்டி போகிக்கும் பாடத்தை கடைப் பிடிக்க முடியாத காரிகையாகி விட்

டாள் மார்க்கரெட்! வேதனை! விசாரம்! வேறென்ன செய்வது!

நார்வே நாட்டு ராஜகுடும்பத்திலே ஆறு நூற்றாண்டுகளாக இப்படிப்பட்ட திருமணம் நடந்ததில்லை எனப் பேசிக் கொண்டனர் இரண்டாண்டுகளுக்கு முன்பு. நார்வே இளவரசி ராஹின்ஹில்ட் திருமணத்தின் போது நீலோற்பலம் போன்ற விழியுடையாள். சுருள் சுருளாக அமைந்துள்ள அவளது கேசங்கள் பிறை நெற்றிக்கு புதிய சோபையை உண்டு பண்ணியது. ஊராள்வோர் குடும்பத்திலே உதித்த ராஹின்ஹில்ட் அரண்மனைக் குச் சேவகம் செய்ய வந்த வாலிபனை வாழ்க்கைத் துணைவனாக ஏற்கத் துணிந்தாள். அரசனுக்கும் பணியாளனாக வந்து ராஜகுமாரிக்கு காதலனாகியவன் பெயர் லோரெண்ட்சென். சென்ற யுத்தத்தின் போது, நார்வே நாடு ஜெர்மனியர் வசம் சிக்கிச் சீரழிந்த போது, இவனது அசகாய சூரத்தனம் வெளிப்பட்டது. ஆற்றலைப் பாராட்டி பட்டம் வேண்டுமானால் அரண்மனைகள் கொடுக்குமே தவிர பட்டத்தரசியையா பரிசாகக் கொடுக்கும்? இளவரசி ராஹின்ஹில்ட்டுக்கு இவன் மேல உயிர் என்பது புரிந்து விட்டது. ஒரே இரண்டுள்ளத்தின உறவு தனை தூரம் என்னும் உளியால் வெட்டி னைத்தனர் வேந்தன் வீட்டார். லோரெண்ட்சென் நகரிலிருந்து அமெரிக்கா அனுப்பப்பட்டான். பிரிவு ஜோடிப் புருக்களை உருக்கி மது உண்மை. ஆனால் அவர்கள் காதல் கருகிவிடவில்லை. ராஹின்ஹில்ட் நார்வே நாட்டு மன்னன் ஹாகோனிடம் குறை உரைத்தாள மன்னன் மனம் இரங்கியது. 1953-ஆம் ஆண்டு நார்வே நாட்டுத் தலை நகருக்கு அருகிலுள்ள மாதா கோவிலில் அரச குடும்பத்த வளுக்கும் ஆண்டியெனச் சொல்லத்தக்கவனுக்கும் கடி மணம் நடந்தது. காதற் தம் பதிகளை திருமணத்திற்கு வந் திருந்த ஐரோப்பாவைச் சேர்ந்த பல்வேறு அரச குடும்பப் பிரமுகர்களும் வாழ்த்தினர். வாழ்த்துதலுக்குப் பிறகு வந்திருந்தோருக்கு மனோஹரமான விருந்தொன்று கொடுக்கப்பட்டது. மதுக்கோப்பைகளிலேயிருந்த திராட்சை ரசம் பாதி கூட தீரவில்லை. திடீரென்று லொரெண்ட்சென் தனது அருமை மனைவியுடன் வெளியே கிளம்பினான். காரிலே ஏற்றிக் கொண்டான். நார்வே நாட்டின் மலை முகடுகளை, வண்ண மலர் செறிந்த கணவாய்களை. கானற்றுக் கீதத்தை, கண் கவரும் பட்சி ஜாலங்களின் காட்சிகளை கர்ண்பித்துக் கொண்டே கடைசியாக ஓரண்மத்தின் மத்தியிலே ஓர் குடிசைக்கு வந்தான். குடிசை தடுக்குகளால் வேயப்பட்டிருந்தது. அங்கு பளிங்குத் தரையில்லை. பஞ்சணை மெத்தையில்லை. இரண்டு மூன்று கோரைப் பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. பலகைமாலான நாற்காலிகள் சில கிடந்தன. நார்வே நாட்டு இளவரசின் 'முதல் இரவு' இந்த அழகு மலையில் அமைந்த சிறு குடிலில் கழிந்தது. குடியானப் பெண்ணின் வாழ்க்கை முறையை ஒரே நாளில் காண்பித்தான். அவளுக்கும் அதிலே அபார வெறி இருந்தது. அவள் உள்ளம் நிறைந்தவன் அருகே இருக்கும்போது எந்த இருட் காடாய் இருந்தால் என்ன? ஒளி விளக்குண்டே அவளுக்கு! முப்பத்திரண்டு வயதுடைய லொரெண்ட்சென் இன்று அமெரிக்காவிலுள்ள ரியோடி ஜனிரோவில் தனது தந்தையின் கப்பல் கம்பெனியை நிர்வகிக்கிறான். பேதத்தைச் சுட்டெரித்த அந்த காதற் புருக்களுக்கு ஓர் ஆண்மகன் பிறந்திருக்கிறான். அவனுக்கு வயது ஒன்றரையாகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு நடை பெற்ற இந்த திருமணவைபவத்தில், இங்கிலாந்து நாட்டு அரசி எலிஜபெத்தின் பிரதிநிதியாக மார்க்கரெட் பிரசன்னமாயிருந்தாள். வெள்ளை கவுன் அணிந்து, கரத்திலே வண்ணப் பூங்குடை சுழல, கண்கள் கல்யாண மண்டபத்தில் இருந்தாலும், அவள் கருத்து தனது ஆசை நாயகனின் கீனையில் சுழல விவாகத்தைக்கண்டு களித்தாள். மணமக்களுக்குப் பரிசாக, ஜார்ஜ் மன்னர்கள் காலமுதல் அரண்மனையிலேயிருந்துவந்த வெள்ளியாலான மைக்கூடுகளையும், பேனைவக்கும் பேழைகளையும், அன்புடன் அளித்தாள் இந்த விசித்திர வல்லி. மற்றவருக்கு மைக் கூடும் பேனாவும் தந்தாளே தவிர, தனது வாழ்வுச் சித்திரத்தை வண்ணமாக வரைந்து கொள்ளும் வல்லமையை இழந்தாள். இவளுக்காக அழுவதா? சிரிப்பதா?

1916—ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் ஈஜிப்ட் நாட்டிலிருந்து இலண்டன் நகருக்கு ஓர் கப்பல் பயணம் செய்து கொண்டிருந்தது கப்பலில் எத்தனையோ யாத்ரீகர்கள். ஆனால் வாழ்வு யாத்திரையில் இணை பிரியாமல் செல்லும் இரண்டு துணைவர்கள் சந்தித்த களமாக அமைந்தது அந்தக் கப்பல்! பாக்தாத் நகரிலிருந்து விடுமுறையில் சென்று கொண்டிருந்தான் பிரிட்டிஷ்

ராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ரிச்சர்டு பிராண்ட்ராம் என்பவன் கல்ல உரம். தேகக்கட்டும் தேஜஸும் படைத்தவன். அதேகப்பலில் கண்ணைக் கவரும் கருப்புநிற அழகி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அழகிலே மட்டுமல்ல அவள் அரசி! அஸ்தஸ்தியிலும் அரசிதான்! கிரேக்க நாட்டு இளவரசி காதரைன், நாடு கடத்தப்பட்ட பிறகு இலண்டன் திரும்பிக்கொண்டிருந்தாள். போர் வீரன் தான்—! களமாயிருந்தால் கவசத்தால் தடுத்திருப்பான். பூங்கொடிபோல் புன்னகை அம்பை வீசியபோது அழிந்தான் போர்த் தளபதி. இவன் ஆங்கில நாட்டான். எங்கேயோ, குக்கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிக் கூடத்தின் வாத்தியார் பிள்ளை. நாமோ கிரேக்க மகுடபதியின் தங்கை. சரிதானே இந்த உறவுமுறை என்று யோசிக்கவில்லை காதரைன். காதல் தேவனிடம் தன்னை காணிக்கை ஆக்கினாள். பிறகு இலண்டன் வந்தாள். கிரேக்கம் போனாள். திருமண ஏற்பாடுகள் சீறின வேறின. திடீரென்று கிரேக்கமன்னன் அவளது அண்ணன் ஜார்ஜ் மாண்டு கிடந்தான். அவனுக்குப் பிறகு காடாள வந்த அவளது சகோதரன் பால் இவளின் திருமணத்தை இனிது நடத்தி வைத்தான்.

நாற்பத்து இரண்டு வயது டைய இந்த நாரிமணியை இலண்டன் மக்கள் இருபது ஆண்டுகளாக அறிவார்கள். இப்போதும் இலண்டனில் தான் போர் வீரனின் மனைவியாக வசிக்கிறாள். இருபது ஆண்டுகளுக்கு முன்பு கென்ட் கோமகளாக இவளது குடும்பத்தைச் சேர்ந்த மெரினு என்பவளை மணமுடித்தபோது அவளின் கல்யாண பரிசுகளோடு வந்தாள். ஆடிப்பாடித் திரிந்தாள் ஆரணங்கு. அவளது அழகு மார்பை, ஆகர்ஷித்தது. ஹாலிவுட்டும் அவளை விட்டுவிடவில்லை. சினிமாக் கலையின் நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள, இந்த சிங்காரி ஹாலிவுட் சென்றாள். வெள்ளி வீதியிலே பவனி வரச் செய்கிறோம்; உனது முகவிலாசம் பொன்னகரங்களை, வைர மேலைகளை, புகழ்க் கடலை உனக்கு உரிமையாக்கும் என்றனர். வேண்டாம் என்றாள். வேறு வேலைகளிலே ஈடுபட்டாள். வீரனையும் கைப்பிடித்தாள். காதரைன் திருமண ஐரோப்பிய அரச குடும்பங்களில் நடைபெற்ற சமீப காலத் திருமணங்களிலே மிகமுக்கியமானது. காரணம் காதரைன் கூண்டுக் கிளியாக இல்லை. பரந்த வானில் பறக்கும் வானம் பாடியானாள். மாளிகையிலே அடைபட்டுக் கிடக்கவில்லை. சுதந்திர வாழ்வை மேற்கொண்டாள். சகலருடனும் பழகினாள். மாளிகைக்கும் மண் குடிசைக்குமிடையே உள்ள பள்ளத்தைப் புரிந்தாள். மேடு பள்ளங்கள் தெளிவாகத் தெரிந்த எளிமை, அவளது அழகுக்கு அழகு செய்தது. ஹாலிவுட்டில் கதாநாயகியாக வேண்டிய காதரைன், யுத்த காலத்தில் நாடு கடத்தப்பட்டு தென் ஞப்பிரிக்காவில் வதிந்த சேத்தில், கேப்டவுனுக்கு வெளியே உள்ள தம்பானி கண் ஆஸ்பத்திரியில் ஒர் பெண் தொண்டராக பதிவு செய்துகொண்டு கண்ணிழந்த போர் வீரர்களுக்கு ஆறுதல் மொழி கூறி தாயபணி பல செய்தாள். இளவரசி என்ற தனது அடைமொழியைத் துறந்து சகோதரி கார்தரைன் என அழைத்துக் கொண்டான். கண் ஆஸ்பத்திரியிலேயுள்ள பல குருடர்கள் அவளது கனிவான அன்பை இன்னும் நினைவில் செதுக்கியுள்ளனர். காதரைனுக்கு ரிச்சர்டு என்ற ஓர் ஆண்மகன் உண்டு. அவனுக்கு ஏழு பிராயமாகிறது. கிரேக்க நாட்டு மணி மகுடத்திற்கு உரிமையாளர் பட்டியலிலே அவனது பெயர் நாலாவது இடத்திலே இருக்கிறது! மார் கண்டார்கள், மணி மகுடம் சிக்கித்திருந்தால், ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் பேரன், கிரேக்க நாட்டுக் கொற்றவனாலும் ஆகலாம்! அவன் அன்னை காதரைன், மார்க்கரெட்டுக்கு பழகியவள் மட்டுமல்ல. பந்துமாவாள். அவளது வாழ்வுகூட மார்க்காரட்டின் கண்களைத் திறக்கவில்லை என்றால் சொந்தமதி இல்லாதவளா? மந்தைக் கூட்டத்தினளா? காரணமென்ன?

மணிமகுட மயக்கம் என்றால் மணி மகுடத்திற்குச் சொந்தக்காரியுமல்லவே! எலிசபெத் ராணியின் பாலகன் வயது வரும்வரை ரீஜண்டாகமட்டுமே இவள் இருக்கலாம்! மணி மகுடங்கள் அதன் சீரையும் சிறப்பையும் இழந்து மக்கள் குரல் அந்த இடத்தை பிடித்துக்கொண்ட நாடுகளிலே வாழ்கிறோம் என்பதையுமா மறந்துவிட்டிருப்பாள். இவளுக்காவது மணி மகுடம் அரச குடும்பத்திலே வந்து அவதரித்ததாலே சொந்தம். தங்கள் வாள் வலியால் வையத்தை வளைத்தார் மணி மகுடம் என்ற குரலெழுப்பியபோது மனவருத்தமான முடிவு பெற்றனரே.

ஜூலியன் சீசர் ரோம் நாட்டு வீரன். தேம்ஸ் நதியைத் தினறடித்த தீரன். ரைன் நதியை ரத்தக்களரியாக்கினன். ரோமாபுரிக்கு கீர்த்தியையும் பொன்னையும் மலையெனக் குவித்தான்! அவனது பேராண்மை இன்னும் சாகாவரம் பெற்றது. 'கனவொன்று கண்டேன் கண்ணுளா. இனறு சென்று செல்லவேண்டாம் என்றுதான் கதறிச் சொன்னாள் மனைவி கல்பூர்னியா. சீசர் பயந்தான் என்ற அவசசொல் வேண்டாம் என்று அத் தாணிமண்டபம் சென்றான். அந்த மாவீரன் மணிமகுடத்தின்மீது பேராசை கொண்டு விட்டான் என்ற கருத்து, புருடஸ் என்ற அவனது ஆருயிர் நண்பன் உருவில் கட்டாரி கொண்டு வீழ்த்தி கல்லறைக்கு அனுப்பியது. அலெக்சாண்டர் மாசிடோனிய மன்னன் பிலிப்பின் மைந்தன். இந்த சினனஞ்சிறு பிள்ளைக்கு நாம் அடிபணிவதா என்று தான் முதலில் கேட்டனர். அவனது அபார ஆற்றல் கிரேக்கரின் அணிவகுப்பை அவன் தாளிலே சேர்த்தது. "சஜிப்ட் நாட்டிலே கிரேக்கப் படை—அலெக்சாண்ட்ரியா நகரம் நிர்மாணித்து விட்டான். பாபிலோனில் பவனி வருகிறான். பேர்ஷியமன்னன் டேரியர்சை அர்பலா களத்திலே தோற்கடித்துவிட்டான். பஞ்சாபை அவன்பாதத்தின்கீழ் கொண்டுவந்து விட்டான். கங்காவின் மடியிலே இன்னும் சில காடுகளில் படுத்துறங்குவான்" எனறுதான் உலகம் எக்களித்தது. அவனது துணைவர் அலெக்சாண்டரின் இறுமாப்புக்கு தூபம்போட மறுத்தனர்.

கார்சிகா நாட்டு வாலிபனும் நெபோலியன் என்னும் பெயரான்—டௌலான் முற்றுகையில் அவன் காட்டிய ஆற்றல்; அவனைத் தளபதி மாக்கியிருக்கிறது என்றனர். பிஞ்சில் பழுத்த பழமாயிருக்கிறானே. நாங்களெல்லாம் இவனுக்கு அடங்கி நடப்பதா என்றுதான் வயோதிக தளகர்த்தர்கள் மோசித்தனர். ஆனால் அவனே "ஆருயிர் தோழர்களே! பிரான்சு நாடு உங்களுக்கு கிறைய கடமைப் பட்டிருக்கிறது; நீங்கள் வீர தீர பராக்கிரமத்திற்கேற்ற பரிசில்களை நீங்கள் பெற வில்லை இனிதான் உலகின் மாகாகரங்களுக்கு அழைத்துச் செல்ல இருக்கினறேன். அங்கு உங்களுக்காக பொன்னும் புகழும் காத்துக்கிடக்கினறன" என்று கனல் கக்கப் பேசினன். களத்திலே புலியானன். அவன் கைகாட்டிய திசை செல்ல நாடு தயாராகியது. முடிவில்ஐரோப்பா கண்ட முழுதில் பாதி இவனுக்கு சொந்தம் என்றனர். குடிமக்களின் தலைவன் இந்த பெருகிலை பெற்றானே எனறாடும் மக்களும் மகிழ்ந்தனர். அவனை மணி மகுடத்திற்கு ஏணிபடியாக்கினன தனது பேராற்றலை. அவன் தம்பி ஜெரோமை பிரஷ்யா நாட்டு வேந்தனாக்கினன். லூயி போனபார்ட்டியை, ஹாலந்துக்கு அரசனாக்கினன். அண்ணன் ஜோசப் போனபார்ட்டியை ஸ்பெயினுக்கு மகுட பதியாக்கினன் - மைத்துனன் மூரட் எனபானை நேப்பிள்ஸ் நகருக்குத் தலைவனாக்கினன். அண்ணன் மகனை இதாலியின் வைசிராயாக்கினன இவ்வளவும் செய்துவிட்டு, மக்களின் குடியரசுக் கொள்கைகளை குடபைத் தொட்டியில் எறிந்துவிட்டு லூயி மன்னர்கள் போல் அரசுக்கட்டில் ஏற ஆயத்தம் செய்தான். வில்லோவு வாட்டர்லூ சண்டையில் தோற்றான். எல்பாத்தீவும். பிறகு செயிண்ட் ஹெலினவும் தான் கிடைத்தன ஆற்றலாளர்கள், தவறியதை சென்றபோதே இங்கிலை என்றால், அதற்காக மயக்கப்பட்டிருப்பாள் மார்க்ரெட் என்று சொல்லுவது சரியானதுதானா? பின வேறு காரணந்தான் என்ன? மார்க்கரெட்டுதான் சொல்லவேண்டும்! ஒன்று மட்டும் கமக்குத் தெரிகிறது. தனது துறவு குறித்து முடிவு உரைக்கு முன்லண்டன நகரிலேயுள்ள லாம்பெத் மாளிகையிலே மார்க்கரெட், காண்டர்பரி ஆர்ச் பிஷப்பை சந்தித்தாள். பிறகு அறிக்கை வெளி வந்தது. காண்டர்பரி என்ன சொல்லியிருக்கக் கூடும். "மகளே! சாஸ்திரம் மதமற்றது உன் திருமணம். நான் அனுமதிக்கப் போவதில்லை" எனபதைத் தவிர நடந்தது என்னவோ அதுதான் மராட்டியத்திலே சிவாஜி சமரிட்டு கிறுவிய சாம்ராஜ்யத்திற்கு மணி மகுடம் சூடிக் கொள்ள, கங்கைக் கரையிலே காசி கேஷத்திரத்திலே யிருந்தகாக பட்டர் "சத்திரபதி! சாஸ்திர சம்மதமற்றது உனது செயல்" என்றானே இன்று தேம்ஸ் நதிக் கரையில் உலவும் காண்டர்பரி கர்தபட்டப் கோடகோயிடுகிறார். மார்க்கரெட்டுகள் மண்டியிடுகின்றனர்.

பர்க்குகள், இகோபிட்டுகள். இளாட்ஸ்டன்கள் பாமர்ஸ்டன்கள் டிஸ்ரலிகள். சர்ச்சில்களின் ஜனநாயாக முழக்கத்திற்குப் பிறகும், இங்கிலாந்தில் பழமைக்கும், பக்திக்கும் போலி கௌரவத்திற்கும், பொல்லாத கொள்கைகளுக்கும், எவ்வளவு பிடிப்பிருக கிறது என்பதுதான் மார்க்கரெட் காதல் நாடகத்தில் எந்தப் பக்கத் தைப் புரட்டினாலும் காணக் கிடக்கும். பாடம், படிப்பினை!

எல்லோருக்கும் எமது..

பொங்கல் வாழ்த்துக்கள்

C.N. அண்ணாதுரை

கலிங்கராணி	3 0 0
ரோமாபுரி ராணிகள்	2 4 0
கம்பரசம்	1 8 0
கபோதிபுரக் காதல்	1 0 0
இலட்சிய வரலாறு	1 0 0
ஆரியமாயை	1 0 0
குமரிக் கோட்டம்	1 0 0
கற்பனைச் சித்திரம்	1 0 0
ஆறு கதைகள்	1 0 0
அறப்போர்	1 0 0
உலகப்பெரியார் காந்தி	1 0 0
தீ பரவட்டும்	1 0 0
பணத் தோட்டம்	1 0 0
சிறு கதைகள்	1 0 0
1858 – 1948	1 0 0
வர்ணாஸ்ரமம்	0 12 0
நிலையும் நினைப்பும்	0 12 0
நாம்	0 12 0
அவர்கள் சந்திப்பு	0 3 0

சி.பி. சிற்றரசு

சாக்கிய சிம்மன்	1 0 0
கொலம்பஸ்	1 0 0
கணவனல்ல	1 0 0

ஜி.டி. நாயுடு

நான்கண்ட உலகம்	1 0 0

தில்லை வில்லாளன்

கிளிக் கூண்டு	1 0 0

ப. வாணன்

ரஷ்ய இலக்கியம்	1 8 0

இரா. நெடுஞ்செழியன்

கலித்தொகை தரும் காதற் காட்சிகள்	2 4 0
மதமும்மூடநம்பிக்கையும்	1 0 0
பண்டைக்கிரேக்கம்	1 0 0
கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்	0 12 0

மு. கருணாநிதி

இரத்தக் கண்ணீர்	2 0 0
ஆறுமாதக் கடுங்காவல்	2 0 0
பழக்கூடை	1 0 0
நளாயினி	1 0 0
விடுதலைக்கிளர்ச்சி	1 0 0
நாடும் நாடகமும்	1 0 0
பரப்பிரம்மம்	1 0 0
முத்தாரம்	0 12 0
பூந்தோட்டம்	0 4 0

அரங்கண்ணல்

ரோம்	1 8 0
ரஸ்புடீன்	1 8 0
உடைந்த ஆசை	1 0 0
இதயகீதம்	0 12 0

K.A. மதியழகன்

நன்றி யாருக்கு	1 0 0
கவிழ்ந்த படகு	1 0 0
நந்தா விளக்கு	1 0 0
அறிவின்தூதர்கள்	0 12 0

இரா. செழியன்

ராஜாடி ராஜா	0 12 0
பொது அறிவு	0 8 0



S. XAVIER . TRICHY

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம், திருச்சி..





வீரமும் ஈரமும்

மில்லியேல், நீர்நிலைகளிலிருந்து எழும் நீராவி ஏது? மேகம் ஏது? மழை ஏது? என்ன ஆச்சரியம்! தாங்க முடியாத சூடே, தண்மைமிக்க நீருக்குக் காரண மாகயிருக்கிறது. பார்த்தீர்களா? வீரம்—ஈரம் இவைகள் இரண்டும் இரட்டைப் பிள்ளைகள்கூட அல்ல; ஒரு பிள்ளையின் இரண்டு விழிகள்! இதுபற்றி, இயற்கை சூரியனின் வழியாகச் சொல்லாமல் சொல் லும் பாடத்தை அனைவருக்கும் அடிக் கடி நினைவு கூற விரும்புகிறேன்.

வீரம்—வெல்லும் ஆற்றல்!

ஈரம்—இரங்கும் பண்பு!

இவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவைகள் போலத் தோன்றி னாலும், இயற்கையிலேயே, அவைகளுக் குள் எவ்வளவோ சம்மந்தங்கள் வாய்த் திருக்கின்றன; ஏன், ஒன்றைப் பொருத்தே மற்றொன்றும் வாய்க்கிறது என்று சொன் னாலும் பிழையில்லை!

வானத்துச் சூரியன்—மிகுந்த வெப்ப முடையது—விஞ்ஞானிகளைக்கூட இன்னும் மிரட்டி வருவது—சுறிப்பிட்ட தூரத்திற்கு மேலும் அதை நெருங்கினால், நெருங்கும் எதையும் விறாடிக் குள் சாம்பலாக்கி விடும் அளவுக்கு வெப்பம் வாய்ந்தது; அத்தனை வெப்ப முடைய சூரியன் தான், பூமியையே குளிர்விக்கிற மழை க்கு முழுமுதற் காரணமாக இருக்கிறது. அதனிடம் வெப்ப



மூள்ளவனல்தான், ஈரமுள்ளவனை யிருக்கமுடியும்—அவன்தான் ஈரநெஞ்சின னாகயிருக்கத் தகுதி பெற்றவன்—அவனிடம் தான் தியாகம் புரிவதற்குள்ள சமாச்சாரங் கள் இருக்கும்! அஞ்சி அஞ்சிச் சாகும் கோழை, ஈரநெஞ்சினனாகக் காணப்பட் டால் அவனை நம்பவேண்டாம்; அவனது நெஞ்சீரம், கோழைத்தனத்தின் மற்றொரு உருவம்தான் என்பதை உணர்ந்து கொள் ளுங்கள்.

பெரும்பாலும் அநேகருக்கு நெஞ்சிலே சந்தனம் பூசும்போது எல்லா இடமும் உடனே காய்ந்து விடுவதில்லை; நெஞ் சின் மத்திய பாகம் மட்டும் காயாமலி ருக்கிறது; தேகாதா ரத்தத்துவப்படி பார் க்கப் போனால், அப்ப டிக் காயாமலிருப்ப தற்குக் காரணமே, பெரும்பான்மையோ ரிடம் கொஞ்சங்

கொஞ்சமாவது நெஞ்சீரம் இருப்பதுதான் —என்றும் கருதுகிறேன்.

யாரோ ஒரு ஏழை மகன் அணிந்து கொள்ளுவதற்காகப் போதிய துணி வசதியில்லாத துயர நிலையில் இருப்பதைக் கண்டார்; அதற்காகத் தாம் இரங்கி தாம் அணிந்துவந்த ஆடம்பரமான துணிகளே, அவன் அந்நிலைக்கு வந்ததற்குள்ள காரணங்களில் ஒன்றுகயிருக்கும் என்று எண்ணி நொந்து, தனது அளவுசிய அணிகளை களைந்தெறிந்தார். நியாயமான தேவையை விட ஒருவன் அதிகமாக அனுபவிக்கிறான்



என்றால், அவன், எங்கோ ஒரு ஏழையை உற்பத்தி செய்து கொண்டிருப்பவனுவான் —என்று சொல்லிச் சொல்லி மனம் வருந்தினர். அவ்வளவு மாபெரும் ஈரநெஞ்சம் உடைய காந்தியாரால்தான், அவ்வளவு மாபெரும் வீரநெஞ்சுடன் ஒரு ஏகாதிபத்தியத்தையே எதிர்த்து, வெற்றியும் காண முடிந்தது.

அலெக்சாந்தர் போரசை ஜெயித்தார் — தோற்றவனை நோக்கி, "உன்னை எப்படிநடத்த வேண்டும்?" என்று கேட்டார். தோற்றவனை "என்னை ஒரு வீரனைக நடத்த வேண்டும்" என்று வீரமொழி பகன்றான். இப்படிப்பட்ட வீரனையே வென்ற வீரன் அலெக்சாந்தரின் வீரம் அனைத்தும் அப்போது ஈரமாகமாறியது. தோற்றவனைத் தேற்றி, அவன் துணை வைப் போற்றி, வெற்றி கொண்ட நாட்டையே தோற்றவனுக்குப் பரிசாக ஈந்தார்.

வீரமிருக்கும் இடத்தில்தான் ஈரமிருக்கும் என்பதற்கு எவ்வளவு பெரிய எடுத்துக் காட்டு இது!.....சரித்திரத்திலே, எந்தப் போர்க்களமும் காணுத ஒரு எழில் நிகழ்ச்சியல்லவா!




சரித்திரத்திலே எந்தப் போர்க் களமும் காணுத ஒரு எழில் நிகழ்ச்சி!...

கௌரவமோ, வசதியோ—எது போனாலும் போகட்டும்என்ற தைரியமுடைய பாரி மன்னனைல்தான், முல்லைக்குத் தேர் கொடுக்க முடியும்!

அரண்மனை வாழ்வு —அரசபோகம் — மக்கள் தொடர்பிலாறும் மகிழ்வு—அத்தனை இன்பங்களையும் துறந்து விடத் தைரியமுள்ள குமணனிடம்தான், தன் தலையை அரிந்து தமிழுக்காகத் தரும் அளவுக்கு, ஈரம் இருக்க முடியும்.

மந்திரவாதி ஆர்க்கிமிடிஸ்!



ஆர்க்கிமிடிஸ் விஞ்ஞானியென்று பலருக்குத் தெரியும். ஆனால் அவர் ஒரு மந்திரவாதியென்று வெகு சிலருக்கே தெரியும்!

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், இத்தாலியின் அருகிலுள்ள சிராகஸ் நாட்டில் ஆர்க்கிமிடிஸ் வாழ்ந்து வந்தார். சிராகஸ் மன்னனின் பேராதரவும் அவருக்கு இருந்தது. அவருடைய அரிய சாதனைகளைப் புரிந்துகொள்ள முடியாத மக்கள் அவரை மந்திரவாதி என்றே கருதினர். மக்களுக்குப் புரியாததுதானே மந்திரம்!


ஒரு சமயம் சிராகஸ் நாட்டை வேற்று நாட்டு வேந்தனுடைய கப்பற் படை முற்றுகையிட்டது. அக்காலத்துக் கப்பல்களெல்லாம் பாய்மரக் கப்பல்கள். முற்றுகை பல நாள் நீடித்தது. சிராகஸ் மன்னன் முற்றுகையை உடைக்கும் வழி காணமுடியாமல் ஆர்க்கிமிடிசுக்கு தகவல் அனுப்பினன்.

ஆர்க்கிமிடிஸ் எதிரிக் கப்பல்களை ஒரே நாளில் ஓடவைத்துவிடுவதாக உறுதி கூறினர். மறுநாள் காலை பலம் பொருந்திய லென்ஸ் கண்ணாடிகளை-பூதக் கண்ணாடிகளை-எடுத்துக் கொண்டு மதில் சுவரின்மேல் ஏறிக் கொண்டார். காலையில் சூரிய கிரணங்களை மேற்கிலுள்ள கப்பல்களின் பாய்மரங்கள் மீதும், மாலையில் சூரிய கிரணங்களை கிழக்கிலுள்ள கப்பல்களின் பாய்மரங்கள் மீதும் குவியும்படிச் செய்தார். உடனே, பாய் மரங்களில் கட்டியிருந்த துணிகள் திடீரென்று தீப்பிடித்து எரிந்தன. கப்பல்களெல்லாம் ஓட்டம் பிடித்தன. எதிரிகள் ஆர்க்கிமிடிஸை மந்திரவாதி என்றும், கப்பல்கள் திடீரென்று தீப் பிடித்து எரிந்தது 'குட்டிச் சாத்தான்' வேலை யென்றும் நம்பினர். முற்றுகை முறியடிக்கப் பட்டது. ஆனால், இப்பொழுது நமக்கெல்லாம் தெரியும், ஒரு காகிதத்தின்மீது பூதக் கண்ணாடியின் உதவியால் சூரிய கிரணங்களைக் குவியும்படிச் செய்தால் அக் காகிதம் தீப் பிடித்து எரியுமென்று!

பணக்காரர்களிடம் பெரும்பாலும் ஈர நெஞ்சைக் காணோமே. ஏன்? ஈர நெஞ்சிலே பணம் முழுவதும் செலவாகிவிட்டால், வரும் காலம் என்ன ஆவது—என்று அஞ்சும் கோழைகள் அவர்கள்!

ஐம்பது ரூபாய்க்கும் குறைவாக மாதச் சம்பளம் வாங்கும் ஏழைகளிடம் ஈரநெஞ்சம் இருப்பது ஏன்? அவர்கள் வருங்கால பயமற்ற வீரர்கள்! அநேக ஏழைகளின் குடும்பம் இந்த ஈரநெஞ்சிலே மிகமிக அல்லல் படுவதையும் கண்டிருக்கிறேன்—ஆயினும், ஈரநெஞ்சத்திலே யாவும் இழந்தவர்கள், வீரநெஞ்சத்திலே விருது பெறப் போகிறவர்கள் என்று எண்ணிச் சமாதானப் பட்டிருக்கிறேன்.

ஈரமில்லாதவன் வீரமாகப் பேசினாலும் நம்பக்கூடாது; வீரமில்லாதவன் ஈரமாகப் பேசினாலும் நம்பக்கூடாது. அவர்கள் விழி கண் தெருடர்கள்—கண் இருப்பதுபோலிருக்கும் பயன் இருக்காது; அதை மூடிவைக்கவும் ஒரு கூலங்—கிளாஸ் தேவை!



நியாயமான தேவையைவிட ஒருவன் அதிகமாக அனுபவிக்கிறான் என்றால், அவன் எங்கோ ஒரு ஏழையை உற்பத்தி செய்தவனாவான்.


"அடித்த கைகள்தான் அணைக்கும்!"

"கோபமிருக்கும் இடத்தில்தான் குணமிருக்கும்"

—இந்தப் பழமொழிகளோடு, "வீரமுள்ள இடத்தில்தான் ஈரம் உண்டு" என்ற பழமொழியையும் இணைத்துக் கொள்ள மாட்டீர்களா?

—✶—

துவைப்பவனும் துதிக்கிறான்!





அன்று மாலை,

வான மண்டலத்திலே முளைத்த நெருப்பு வட்ட நிலா ஜோதி மழை பொழிந்து கவிஞர் களின் கற்பனை தேரோட்டத்திற்கு ஆலவட்டம் வீசிக் கொண்டிருந்தது. வேட்டை நாயால் துரத்தப்பட்ட மான்குட்டியின் இதயத்தைப் போல, நட்சத்திரங்களின் சின்ன விழிகள் மூடி மூடித் திறந்து கொண்டிருந்தன. மாலைப் பொழுதின் மயக்கமும், சோலைவனக் கிளிக களின் சுந்தரக் கூச்சலும் என்னைக் கவர்ந்தது. பகலெல்லாம் ஜனக் கடலின் ஆரவாரத்திலே மூழ்கிக் கொண்டிருந்த நான் அமைதியை நாடி பாலாற்றின் கரையை நோக்கி நடந் தேன்.

எங்களூர்,-படி ஆழாக்கு புலவர்கள் நிறைந்த வியாபார ஸ்தலம். இயற்கை, இலக்கியம், கலை, பொழுதுபோக்கு என்பதெல்லாம் வெறும் சொற்கூட்டம்; வேலையற்றதுகளின் வெட்டிப் பேச்சு, என்பது அவர்களின் அசைக்க முடி யாத நம்பிக்கை!

கலை என்றால் கள்ளிக்கோட்டையா? நெல் லூரா? சரக்கு மார்க்கெட்டிற்குப் பிரி ய ப் படுமா? இருப்பு வைத்தால் பல்லைத் தட்டி விடாதே? இப்படி கேள்வி எழுப்பும் மண்டிக் கடை மகானுபாவர்கள் ஏராளம்.

தேய்ந்துபோன எடை குண்டு, வாரடை அடிக்கும் தராசு, அலாவுதீன் காலத்து படி-ஆழாக்கு, கையேடு-பேரேடு, அதிலே மூன்று ரகம்! விற்பனை வரி-வருமான வரி, கோர்ட்-வழக்கு, வக்கீல்-இதோடு அவர்கள் உலகம் முடிவடைகிறது.

பொழுதுபோக்கு என்று வாயெடுத்தால் போதும் 'சுடலையைக் காத்தவனும்-கடையைக் காத்தவனும் வீண்போக மாட்டார்கள்' என்று உப தேசிக்க ஆரம்பித்து விடு வார்கள். அ வ் வ ள வு உலக ஞானம்!

ரசிகன் கிளப்

எனவே விரல்விட்டு எண் ணக்கூடிய மிகச் சிலரே அந்த பாலாற்று வெண் மணற்பரப் பில் இயற்கையழகின் நிர்வா ணத்தை ரசித்துக் கொண்டி ருந்தார்கள்.

★

வழக்கமாக நான் உட்கா ரும் அந்த இடத்தை அன்று வேறொரு மனிதர் ஆக்ரமித் துக் கொண்டிருந்தார். கொஞ் சம் விலகி உட்காருவோம் என்று எண்ணி நடந்தேன். அருகில் சென்றதும் அந்த மனிதர் எங்கள் தெருவிற்கு புதிதாக குடிவந்திருக்கும் ஒரு 'பி. ஈ.', என்று தெரிந்துகொண்டேன். எனக்கு முன் என்னைத் தெரிந்துகொண்ட அவ ரும் 'வாங்க சார்' என் று ஆரம்பித்தார். உறவு பலப்பட்டுவிட்டது. நாமாக ஏன் விலகிப் போவது என்று நினைத்து லேசாக புன்முறுவல் காட்டியபடியே அவர் அருகில் போய் உட் கார்ந்தேன்.

புதிதாக குடி வந்தவர் என்றாலும்-இடையில் நான் அவரைப் பலமுறைப் பார்த்திருக்கி றேன். பேச்சுப் பழக்கம் கிடையாது. ஆனால் வழக்கத்திற்கு மாறுக அன்று அவர் முகத்தில் சோகம் கப்பிக்கொண்டிருந்ததை — அ ந் த ப் பௌர்ணமி நி ல வி ன் ஒளியிலே என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது.

ஏதாவது பேச்சைத் துவக்குவோம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தான் அந்த இனிமையான கீதம் காற்றிலே மிதந்துவந்து தெளிவாக எங்களுக்குக் கேட் டது.

சுட்டும் விழிச் சுடர்தான்—கண்ணம்மா,
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி —கண்ணம்மா,
வானக் கருமை கொல்லோ?
பட்டுக்கரு நீலப் புடவை—பதித்த நல்
வயிரம்,
நட்ட நடுநிசியில் தெரியும்-நட்சத்திரங்களடீ!
சோலை மலரொளியோ—உனது
சுந்தரப் புன்னகைதான்
வாலைக் குமரியடீ—கண்ணம்மா.....

எங்கோ ஒரு இன்ப வெளியில்-மோகத் தட் டிலே மிதந்து கொண்டி ருந்த நான் மீ ண் டு ம் மணற்பரப்பிற்கு இறங்கி வந்தேன். சிலைபோலஎன் எதிரே உட்கார்ந்திருந்த

அந்தநண்பரின் தத்துவம் நிழலாடும் கண்களில் முத்து முத்தாக கண்ணீர் அரும்பி இருந்தது.

மூன்றாவது முறையாக கண்ணீருக்குக் காரணம் கேட்டேன்.

'ஒன்றுமில்லே...பாட்டு...' என்று இழுத்தார்.

'ஆமாம் சார்—பாட்டிற்கு கள்ளோவிடப் போதை அதிகம். பாட்டிலே இதயத்தைப் பறிகொடுத்த ஒரு பல்லவ மன்னனே—பாடியே கொன்றுவிட்டார்களே பாவிகள்.....'என்று நான் ஆரம்பித்தேன்.

'போதை மட்டுமல்ல-இப்போதுகேட்டோமே ஒரு கீதம்-அது என் இதயத்திலே துயர பாரத்தைக் குவித்து விட்டது. செத்துப்போன சம்பவங்களோ என் நெஞ்சிலே சதிராட விட்டது — வேறென்றுமில்லே' என்று ஒரு பெருமூச்சு விட்டார்.

'தயவு செய்து புரியும்படிசொல்லுங்கள்' என்று கேட்டேன்.

விழிகளில் தேங்கியிருந்த கண்ணீரை வழித்து விட்டபடியே கதையை சொல்ல ஆரம்பித்தார்.

★

கல்லூரி யில் 'பி. ஈ.' பட்டத்தைப் பெற்றுக் கொண்டு உயிரற்ற இயந்திரங்களுடன் போராடும் இந்தத் தொழிலுக்கு வந்திருக்கிறேனே—இதற்கு இடையில்தான் என் தாய் ஊரான தாசிபுரத்திற்கு வந்திருந்தேன். ஆடம்பரமும் ஆரவாரமும் கூத்தாடும் சென்னை வாழ்க்கையைவிட அந்தக் கிராமத்தின் அமைதியான சூழ்நிலை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. என் பாட்டி வீட்டில் கழிக்கும் சிலமணி நேரங்களைத் தவிர — பெரும்பாலான நேரத்தை அதோ தெரிகிறதே அந்த அழகான தென்னந்தோப்பில்தான் கழிப்பது வழக்கம்.

அந்தத் தோப்பு ஊரிலே பெரிய மனிதராய் இருந்த ஒரு வட்டிக் கடைக்காரனுக்கு சொந்தமானது. அதிலே ஒரு அழகான சிறுகுடிசை; அந்தக்குடிசை இப்போதுஉங்கள்கண்களுக்குத் தெரியாது. என் கனவுகள் மண்மூடி விட்டதைப் போலவே, அந்தக் குடிசையும் தரையோடு தரையாகிவிட்டது. என் இதயத்தை சூன்ய வெளியாக்கி விட்டது சார், சூன்ய வெளியாக்கிவிட்டது!' என்று உணர்ச்சி பெருக்கெடுத்த குரலில் கூறினர்.

''ஆமாம்! அந்த கூனிப் போன குடிசையிலே ஒரு கூர்விழியாள் இருந்திருப்பாள், உங்கள் இதயத்திலே காதல் தழும்புகளை பதித்திருப்பாள், உள்ளத்தைப் பறிகொடுத்திருப்பீர்கள்—ஒய்யார கீதம் பாடி இருப்பாள், கடைசியில் உங்கள் காதல் காவியத்திற்கு வழக்கம் போல தோல்வி 'மங்களம்' பாடி இருக்கும்! இப்படித்தானே நீங்கள் சொல்லப் போகிறீர்கள்?' என்று படபடப்பாகக் கேட்டேன்

'அவசரப் படாதீர்கள் நண்பரே—இன்னும் கொஞ்ச நேரம் பொருமையாகக் கேளுங்கள். என் இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் பாக்கிக் கதையையும் கூறிவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு மீண்டும் ஆரம்பித்தார்.

'எழுத்தாளரல்லவா நீங்கள், எனவே உங்கள் பாணியிலேயே பேசுகிறேன்: காதல் ஒரு நாடக மேடை, எல்லோருமே அதில் வெற்றிபடைய முடியாது, ஒரு சிலருக்குத்தான் வேஷப் பொருத்தம் அமைந்து விடுகிறது—என்ற விஷயம் எனக்கு பாலபாடம். அதனால்தான் என் கல்லூரி வாழ்க்கையில்கூட நான் எப்பொழுதுமே சபலத்திற்கு அடிமையானது கிடையாது. சென்னையிலே எத்தனையோ ரக அழகிகளைப் பார்த்திருக்கிறேன். அத்தனை ரகமும் அஜந்தா ஓவியங்கள்! பேச்சையே கீதமாக்கிக் கொள்ளும் பருவக் கிளிகளிடமெல்லாம் பழகி இருக்கிறேன்.

அப்பொழுதெல்லாம் அசைந்து கொடுக்காத என் உள்ளம் குடிசையிலே வளர்ந்த அந்த

ஏழைக் குமரியின் காந்தப் பார்வைக்கு அடிமையாகி விட்டது.

சிறிது நேரத்திற்குமுன் கேட்டோமே ஒரு கீதம்—கீதமாஅது—அந்த கட்டழகியின் கவிதை வடிவம்! ஆமாம் நண்பரே, அவ் வளவு அழகி. அவள் சுட்டும் விழிச்சுடரும், சுந்தரப் புன்னகையும்தான் என்னைக் கவர்ந்து விட்டது. நான் அவளை விரும்பினேன்: அவளும் என்னை மனப்பூர்வமாக காதலித் தாள்.

எங்கள் சந்திப்பிலே ஒரு நாள், இன்று போலத்தான் அன்றும் பௌர்ணமி.

'ஏழையாயிற்றே நான்' என்றாள்.

'இதயமும் அவர்களுக்குத்தானே இருக் கிறது' என்றேன்.

"வாழ்க்கைப் போரிலே வழுக்கி விழுந்தவ ளாம் என் தாய், ஊர் பேசுகிறது இப்படி" என்று கண் கலங்கியபடியே கூறினாள்.

"என் விழிக்கு விருந்து நீ--உன் தாயல்ல!" என்று கூறியபடியே அவள் கண்ணீரைத் துடைத்து விட்டேன். இப்படி பல நாட்கள் எங்கள் சந்திப்பு நடந்தது.

அதற்கு பிறகெல்லாம்.....நான் பேசு வேன், அவள் சிரிப்பாள்! நான் சிரிப்பேன், அவள் பாடுவாள்! அந்த அளவிற்கு எங்களி டையே சொந்தம் வளர்ந்து விட்டது!

அதே நேரத்தில்,

ஊர் மக்களின் உதட்டசைவும், உருட்டுப் பார்வையும் எங்கள் பக்கம் திரும்பிற்று: என் பாட்டிக்கு இந்த செய்தி எட்டி விட்டதோ என்னவோ—என்னை சென்னைக்கு சீக்கிரத்தில் அனுப்பி விடுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தாள்.

எதைப்பற்றியும் நான் கவலைப்படவில்லை. என் சிந்தையிலே குடியேறியவளை என் வாழ்க் கைத் துணைவியாக்கிக் கொள்வது என்ற முடி விற்கு வந்து விட்டேன்:

இந்த என் முடிவை அவளிடம் தெரிவித்த போது, சந்தோஷத்தால் அவள் முகம் மலர்ந் தது. நாணம் அவள் கன்னங்களில் குங்குமச் சிவப்பாக குவிந்து விட்டது. சிலப்பதிகாரத்தில் "திங்களோ காணீர்!" என்று பாடினாரே அடிகள், அந்த திங்களை என் வாழ் நாளிலேயே அன்றுதான் முதல் தடவையாகப் பார்த்தேன்.

அன்று காலை சென்னையிலே இருந்து உடனே புறப்பட்டு வரும்படி ஒரு தந்தி வந் தது. பல மாதங்களை கிராமத்திலேயே கழித்து விட்ட செய்தியும் அன்றுதான் என் நினைவிற்கு வந்தது. ஒரு வாரத்திற்குள் திரும்பி வந்து விடுவதாக அவளிடம் உறுதி கூறிவிட்டு சென்னைக்குப் புறப்பட்டேன்.

தொழில் விஷயமாக என் தந்தை என்னை வேறு ஒரு ஊருக்கு அனுப்பி வைத்தார்: அவசர அவசரமாக அலுவல்களை முடித்துக் கொண்டு சென்னைக்கு திரும்பினேன்: எப்ப டியோ அதற்குள் இரண்டு வாரம் ஆகிவிட் டது. இன்னும் இரண்டு நாட்களில் கிராமத் திற்கு திரும்புவதென்றும்—என் எதிர்கால குடும்ப விளக்கையும்—அவள் தாயையும் சென்னைக்கு அழைத்து வருவதென்றும், என் விருப்பத்திற்கு தந்தை சம்மதித்தால் குடும்பத் தோடு வாழ்வது, இல்லையென்றால் தனிக் குடித்தனம் நடத்துவது என்ற முடிவிற்கு வந்து விட்டேன்: மறுநாள் புறப்படுவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தேன்:

தபால்காரன், ஒரு ரிஜிஸ்டர் கவரை என் னிடம் கொடுத்துவிட்டு நகர்ந்தான். கடிதத்தை பிரித்து அவசர அவசரமாகப் படித்தேன்.

"உங்களிடம் சொல்லக்கூடாது என்று நான் ஒரு ரகசியத்தை மறைத்து வைத்திருந் தேன்; அதுதான் இன்று என் உயிருக்கே எமனாகி விட்டது; அதற்காக என்னை தயவு செய்து மன்னித்துவிடுங்கள்: நானும்—என் தாயும் குடியிருந்தோமே அந்த இடம், வட்டிக் கடைபெரியமனிதர்ஒருவருக்கு சொந்தமானது: பெண்கள் விஷயத்திலே அந்தப் பாவி இந்திர னுக்கு அண்ணன்: அவனால் சீரழிக்கப்பட்ட கன்னியர்களுக்கு ஒரு பட்டியலே இருக்கிறது! கொஞ்ச நாட்களாகவே அந்த பயங்கர மிரு கத்தின் கழுகுப் பார்வை என்னை கவனித்துக் கொண்டிருந்தது: பலமுறை தோட்டத்தைப் பார்வையிடுபவன் போல வருவான்; பல்லைக் காட்டுவான், 'சீ, மானங்கெட்டவனே!" என்று மனதில் எண்ணிக்கொண்டு பேசாமல் இருந்து விடுவேன்: என் நேர்மையை திருட அவன் திட்டம் போட்டு வைத்திருந்த சமயத் தில்தான்—நம் உறவு ஏற்பட்டது: காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவன்—நீங் கள் சென்னைக்குப் போய் விட்ட செய்தியை எப்படியோ தெரிந்து கொண்டு நேற்று நள் ளிரவு வந்தான்: ஒரே குடிபோதை—காண்டா மிருகம் போல் என் மீது பாய்ந்தான்: பகலெல் லாம் பெரிய மனிதர் வேடம் போடும் அந்த பாதகன்—அன்றிரவு நாயினும் கீழாக நடந்து கொண்டான்: நான் கூச்சல் போட்டேன்; என் தாய் அலறி எழுந்து கூவினாள்: அந்த கொடியவன் போதை வெறியில் ஏதேதோ

உளறிக்கொண்டுஎன்னை நெருங்கினான்: என் சக்தியையெல்லாம் ஒன்றுகதிரட்டி, என்தாயும் நானுமாகசேர்ந்து அவனை குடிசையில் இருந்து வெளியே தள்ளி கதவை தாளிட்டுக் கொண்டோம். ஓநாயைப்போல எதையோ கூவிவிட்டு அங்கிருந்து போய்விட்டான்:

விடிந்ததும், எங்காவது வேறு இடத்திற்கு போய் விடுவது, என்ற முடிவுடன் படுத்துக் கொண்டேன். எனக்குப் பக்கத்திலேயே என் அம்மாவும் படுத்துக்கொண்டாள்.


நான் மீண்டும் அலறி எழுந்தபோது குடிசையின் நான்கு பக்கத்திலேயும் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது; அதற்குமேல் எப்படி நான் தப்பித்தேன், என்ன நடந்தது— ஒன்றுமே எனக்குத் தெரியாது, தீக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் கிடத்தப்பட்டிருக்கிறேன்.

சாவதற்கு முன்னால் உங்கள் முகத்தை ஒரு முறை பார்த்தால்தான் என் உயிர் சாந்தியடையும். நான் சொல்லிக்கொண்டு வந்ததை— நர்ஸ் அப்படியே இந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறார். இப்படிக்கு உங்கள் **தாரகை** கொடுத்துவைக்காத அபலை!' இந்த கையெழுத்தைக் கூட நர்ஸ் அம்மாளையே போடச் சொன்னேன்''

நண்பரே! என் இதயத்தை சுக்கு நூறாக கிழித்தெறிந்த அந்தக் கடிதம் என் கையிலே இருந்து விழுந்தது.

★

மருத்துவ மனையிலே என் இதய ஜோதி மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தாள். நெருப்பின் சிவப்புக் கரங்கள் என் தங்கத்தை



''ஒரு காலத்திலே இவர் ஒரு பெ...ரி...ய்...ய ஆசனப் புலி!''

பிராண்டி கோரமாக்கி வைத்திருந்தது. அந்தக் கொடுமையை சகிக்க முடியாமல், வாய்விட்டு அலறினேன்.

சிரித்துச் செழித்த அவள் சிங்கார முகத்தை மரண இருள் கப்பிக் கொண்டது. என் நெஞ்சத்தை சூறையாடிய அந்த காவியக் கண்கள் பஞ்சடைந்து விட்டன. என் உயிரணுக்களோடு ஊஞ்சலாட்டிய அந்த ஓவிய இமைகள் நீண்டதுயிலில் மூழ்கி விட்டன. என் காதல் சாம்ராஜ்யத்தின் ஒளிவிளக்கு அணைந்து விட்டது!'' என்று கதையை முடிக்கும் போது அவர் கண்களிலிருந்து சாரை சாரையாக கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

என் இதயம் குழம்பிற்று, கண்கள் கலங்கின.

''அதற்குப் பிறகு நீங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லையா?'' என்று கேட்டேன்.


''வளர்ந்தாலும் தேய்ந்தாலும், வானத்திலே ஒரு நிலவிற்குத்தான் இடம் உண்டு! என் சொந்தக்காரி—இதயக் கோயிலிலே உயிர் சித்திரமாகிவிட்ட அந்த உதயதாரகை! வேறொருத்தியை அங்கே அனுமதிக்க மாட்டாள்.'' அவர் குரலிலே அழுத்தம் கலந்திருந்தது.

சுடர் விட்டுக்கொண்டிருந்த அழகு நிலமேகச் சேற்றில் விழுந்து அணு அணுவாகச் செத்துக்கொண்டிருந்தது. பனி-குளிர்காற்று வேறு. 'புறப்படுவோமா' என்றேன்.

எண்ணங்களற்ற சூன்யப் பிரதேசத்தில் இருவருமாக சேர்ந்து நடந்தோம்.



பொங்கி



பொறுத்திருந்த காலமெல்லாம் போதும்; இன்று
புவியேங்கும் நமையறியப் பொங்கிச் செல்வோம்!
வெறுத்தொதுக்க வேண்டுவன விலக்கித் தள்ளி,
வேறுபடும் மக்களுக்கும் விளக்கம் சொல்லி,
அறுத்தெறிந்து தளைகளெலாம் அகன்று நீங்க,
ஆண்மையுடன் விரைந்தெழுந்து நமது தொண்டை
மறுத்தெதிர்க்கும் மதியிலிகள் மயங்கும் வண்ணம்
மானமுடன் வாழ்வதற்கே வழிகள் செய்வோம்!

சூத்திரர்கள் என்றபெயர் சூட்டப் பெற்றோம்;
சூழ்ச்சியினால் கபடத்தால் சூழப் பெற்றோம்;
ஆத்திரமும் கொள்ளாமல் அடிமைப் பட்டோம்;
ஆரியரின் தாசரென அடியைத் தொட்டோம்;
காத்திருந்தும் பயனொன்றுங் கண்டோ மில்லை!
கண்விழித்துத் தலைநிமிரும் காலம் இந்நாள்!
பூத்ததுநம் பூங்காவில் புரட்சிச் செந்தீ!
புல்லர்கள் ஆதிக்கம் பொசுங்கச் செய்வோம்!

உறங்கியதால் ஓர்காலம் உணர்ச்சி யற்றோம்;
ஓயாத துயரத்தால் உந்தப் பெற்றோம்;
மறந்துநமை யாரென்றும் அறியோம்; ஆனால்
மானமிகு திராவிடரின் இனமாய் வந்தோம்!
சிறந்தபெருங் குழவினராய்த் திரண்டு விட்டோம்!
சினமிகுந்த வேங்கைபோல் தீரம் பெற்றோம்!
விரைந்துவளர் நமையெதிர்த்து வெல்லும் ஆற்றல்
மேதினியில் எவர்க்குமில்லை, நமக்கேன் அச்சம்?

வஞ்சனையால் தந்திரத்தால் வாழ்வுக் கேற்ப
வசதியுடன் வகைதேடும் நரியின் பண்பும்-
நஞ்சுடைய காரணத்தால் மறைந்தே தீமை
நல்கிவரும் நாகமெனும் பாம்பின் பண்பும்-
கொஞ்சமும்தான் உழையாத சழுகின் பண்பும்-
கொள்கையிலே நிலையில்லா வேளவால் பண்பும்-
அஞ்சிமனம் மிகநடுங்கும் ஆமைப் பண்பும்—
அரிமாவின் பெரும்பண்பாய் மாறச் செய்வோம்!


எழுவோம் கருணைனந்தம்

கடுமைமிகப் பிறர்தன்னைக் கடிந்த போதும்
கவலையின்றிப் பொறுமையுறுங் கழுதைப் பண்பும்-
விடுதலையில் விருப்பின்றி பிறர்க்குக் கீழே
வேலைசெய்து வளர்ந்துவரும் நாயின் பண்பும்-
கொடுமைமிகும் கெடுதிதரும் குட்டைச் சேற்றில்
கொஞ்சிவிளை யாடுகின்ற பன்றிப் பண்பும்-
அடிமைநிலை யுணராத எருமைப் பண்பும்
அடியோடு மாறிடவே ஆக்கம் செய்வோம்!

மாறுபடும் புதுக்கருத்தின் மகிமை தன்னை
மனங்கொள்ளக் கூசுகின்ற ஆந்தைப் பண்பும்-
கூறுவதைக் கேளாமல் கோபங் கொண்டு
குரைத்திடுமோர் வேட்டைநாய்ப் பண்பும் - சற்றும்
மீறுகிலேன் முதியோர்கள் விதியை என்று
மேன்மையிலே வெறுப்படையும் கிளியின் பண்பும்-
தேறும்வகை யறியாவான் கோழிப் பண்பும்
சிந்தனையால் சிறப்படையச் செம்மை செய்வோம்!

ஊக்கமின்றி உட்கார்ந்தே உறங்கிச் சாகும்
உணர்வில்லாத் தேவாங்கு போன்ற மக்கள்-
நோக்கமின்றி நுண்ணியதல் அறிவும் இன்றி
நோயாளர் போலவுடல் நடுங்கும் மக்கள்-
மாக்களினுங் கீழ்ப்பட்டு மானம் போக
வாழ்ந்துவரும் வழியறியா ஏழை மக்கள்
ஆக்கமுற அறிவுபெற, எழுச்சி தோன்ற
ஆராய்ச்சி மிக்கவராய் ஆகச் செய்வோம்!

கற்றவரும் மற்றவரும் கலந்து வாரீர்!
கயமையுடன், பகைமையையும் கடிந்து நீக்கி,
உற்றபெருந் துயர்களெலாம் ஒழித்து, நாமும்
உலகத்து மனிதரைப்போல் உயர்ந்து வாழ,
வெற்றிமிகு நம்நாடு நமக்கே யாக,
வீரமுடன் போர்புரியும் வேளை பெற்றோம்!
கொற்றவர்தம் ஆக்கப் படைகள் கண்டும்
துணியாமல் அணிமுரசம் ஆர்த்தல் செய்வோம்!





மணிபுரிவோம் வாரீர்!

அணிமணிபூண்டு, பனிமொழிபேசி, நனிகாதல் வீசிடும் இல்லற மாதரும், அன்பும் அறனும் அணிகலனுய் கொண்டு–காதலும், களனும் பண்பாகக் கொண்டு வாழ்ந்த தமிழரின் மரபிலுதித்த மறவரும், யாழ் வெல்லுமா? குழல் வெல்லுமா?–எனும் போட்டியில், இவை இரண்டையும் வெல்லும் வெல்ல மல்லவா எம்மொழி–என்று கூறுமல் கூறும் பைந்தமிழ் பசலையினரும், இன்ன பிற வாழ்க்கை வழி நலன்களும், குண நலன்களும் இருந்தென்ன? திராவிடர் அடிமைகள்தானே!

போர் என்றுல் பாய்கின்ற புலிதான் இன்று தேசியச் சேற்றிலே சிக்குண்டு கிடக்கிறது. யார் நீ என்று கேட்டால், பார் என்று சொல்ல இலக்கியச். சுவடிகள், வழக்காட வரலாறுகள் ஏராளம் கொண்டவன் தான் இன்று 'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்று கூறும் பாரத புத்ரனுக மாறி இருக்கிருன். ஜெய பேரிகை கொட்டிய துண்டா என்றுல் கங்கையை, கடாரத்தைக் கடாவிப் பார்! கொடியை நாட்டியதுண்டா என்றுல் இமயத்தின் உச்சியைப் பார்! நாகரீகம் உண்டா என்றுல் மொகஞ்சதரோ, அரப்பா சொல்லும் கதையைக் கேள்! கலே உண்டா என்றுல் சித்தன்ன வாசல், மாமல்லபுரம் சொல்லும் வர்ணனையைக் கேள்! வாணிபம் உண்டா என்றுல் யவனம், கிரேக்கம், உண்டு சாட்சிக்கு! மொழி உண்டா என்றுல் 'சங்கம் வைத்து மொழி வளர்த்த தமிழ் நாடு' என்ற பேரே உண்டு என்று சரித்திரம் சொல்லும் பெருமை வாய்ந்தவன்தான் இன்று இந்தியா, இந்தியர் எனக்கூறும் இழி நிலைக்கு ஆளாகிக் கிடக்கிறுன்.

சோலைக் கனிகளைத் தின்று, காலை மாலைகளில் சுந்தரத் தமிழ் பேசி, அந்தரத்தில் ஆடித்திரியும் பைங்கிளி தந்திரத்தால் இந்தியா என்ற தங்கக் கூண்டிலடைக்கப் பட்டு, பாரதம் என்ற பழத்தைத் தின்று, இந்தி என்ற பாஷையைக் கற்கும் கொடுமை நிலை தான் இன்றுள்ள திராவிடனுக்கு.

வைரம் பாய்ந்த நெஞ்சமும், வையம் கலங்கும் வாளும் கொண்டு பகை புலத்தைச்சாடி, வாகை சூடி வாழ்ந்த திராவிடன் கேவலம், 'போரிட வந்தவனுக்கெல்லாம் தாசனுகிக் கிடந்த வடவருக்கு இன்று வாணிபத்திலே எடுபிடி, அரசியலிலே கொத்தடிமையாகிக் கிடக்கும் கோரம் சகிக்க வொண்ணுதது.

இந்த இழிவுக்கும், பழிக்கும் ஆளாகியுள்ள திராவிடனைப் பெற்றெடுத்த திராவிடம் அன்றும் சரி, இன்றும் சரி, காலடியிலே தங்கம்! கடலடியிலே முத்து! காட்டிலே அகில்! மலை முகட்டிலே மேகம்! களத்து மேட்டிலே நெற்குவியல்! காவினிலே காட்சி தரும் பூவண்ணம்! வாவியிலே மிதந்து வரும் அன்னம்! புலவன் பாவினிலே பழம் புகழ் மின்னும்! உழவன் நாவினிலே உதிக்கும் பண்! இன்ன பிற நிகழ்ச்சிகளே கவினுறும் காட்சிகளாகக் கொண்டு மாட்சிமையுடன் விளங்கி வரும் மண்தான். ஆனுல் இன்று வடநாட்டானின் ஏகபோக மிராசுக்கு ஆட்பட்ட சுரண்டல் பூமியாகிக் கிடக்கிறது.

வடக்கே வாழ்ந்திருந்த சாம்ராஜ்ய அதிபதிகளின் வெற்றிச் சங்கு இங்கு ஊதப்பட்டதில்லே. பிற தேயத்துக் குதிரைகளின் குளம்படி இங்கு கேட்டதில்லே.

புத்தாண்டு பூத்துவிட்டது. புவனம் புதுக் கோலம் பூண்டு விட்டது. கவன மெல்லாம் காரிகையருக்கு இல்லம் தேடி வரும் சுற்றத்தாருக்கு சுவைதரும் பொங்கல் அளிப்பதிலே, அவர் தம் துணைவர்களுக்கோ மனையாட்டியின் கைவண்ணமும் மெய் வண்ணமும் கண்டானந்திப் பதிலே, மழலை மொழியால் குழலைப் பழிக்கும் மைவிழிச்சியார்கள் நவ நவமான ஆடை அணிந்து, நறுவாடை வீசி, சிறு கைவீசி, குறு நடை பயின்று, முறுவலிப்பதிலே பொங்கலோ பொங்கல் என்று இத்தைத் திங்கள் மலருகிறது.

புதுப்புனல் ஆடி, புத்தாடை தேடி, பூச்சூடி, புள்ளிமான் போல் ஓடி, புள்ளினம்போல் பாடி, பூரிப்பு தவழும் முகமும், புன்னகை தவழும் உதடும், பொன் நகை தவழும் மேனியும் கொண்ட பூவையர் உல்லாசப் பொழுது போக்கை நாடிச் செல்லும் அணிவகுப்பு ஓர் அழகு ஊர்வலம்!

கனி சொட்டும் முகமும், அதை விலை கேட்கும் கண்களும், மலைபோன்ற தோள்களும், வலை வீசும் வாலிபமும் கொண்ட ஆடவர், தம் தோழர்களுக்கு பொங்கல் வணக்கம் செலுத்தும் பொற் காலம். எங்கு பார்க்கினும் எழிலின் ஜாலம், எவர் முகத்தினும் மகிழ்வின் கோலம் எனத்தக்க சீரும் சிறப்பும் பெற்ற திராவிடர் திருநாள் இது.

இளம்பரிதி

உலகை ஒரு குடைகீழ் ஆள வேண்டும் என்று நினைத்த ஆற்றலரசனின் கால்கள்கூட திராவிடத்தின் மண்ணை மிதித்ததில்லை. ஆனால் இவர்கள் யாராலும் வீழ்த்த முடியாத திராவிடத்தை, இரணகளம் ஏதுமில்லாமல், தேசியம் எனும் மூடு மந்திரத்தால் கொள்ளையிட்டு வாழ்கிறார்கள் வடவர்கள்.

அலைகடல் அடக்கி, மரக்கலம் செலுத்தி, மண்டிலம் போற்றும் புகழ் படைத்து, சரித்தத்தில் சாகாத வரி புனைந்து, வாழ்ந்து வீழ்ந்துபோன பரம்பரை தன்மீது ஏற்றப்பட்டிருக்கும் கறையைக் கழுவிவிட வேண்டாமா?

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பாராள்வோரின் பக்கம் நின்று, நோக்கமறிந்து போக்கினை மாற்றிக் கொள்ளும் அரசியல் வாழ்க்கையினைக் கொண்டோரல்லர்!

பணக்காரர்களுக்குப் பராக்குக் கூறி, பாத பூசை செய்து, பவிசு தேடி, பாட்டாளி உலகில் மோசு குலையாமல் காசு நாடிடும் பண்பினரல்லர்!

கட்டிலறைக் காவியும் தீட்டிவிட்டு, வெட்டிப்டேச்சில் வீரம் காட்டிவிட்டு, சட்டம் தேளாக மாறும் நேரத்தில் எட்டி நிற்போராக இருந்திடும் போக்கினரல்லர்.

மதுவும் கையுமாக, மாதும் பஞ்சணையுமாக, சூது வாதும் கொண்டோராக, சுரண்டலே லட்சியமாக, சுயநலமே உருவாக மாறி உழலும் நிலையினரல்லர்.

அறப்போர் என்றுல் குதித்திடுவோர், சிறை என்றுல் சிரித்திடுவோர், பட்டம் பதவி என்றுல் வெறுத்திடுவோர், திட்டம் தீர்மானம் என்றுல் செயலாற்றிடுவோர், கஷ்டம் நஷ்டம் என்றுல் ஏற்றிடுவோர், வெட்டிவா வென்றுல் கட்டி வருவோர், இன்னோரன்ன சிறப்பியல்புகள் கொண்டோர்தான் ஏராளம்.

ஆம்! இராயபுரத்துச் சிறுவர்களின் கட்சியிலே தோட்டக் கச்சேரி கிடையாது. தொண்டர்—தலைவர் என்ற பேதம் கிடையாது. தோழமையைத் தவிர வேறு உயர்வு கிடையாது. குடும்பப் பாசத்தைவிட வேறு உறவு கிடையாது. பத்திரிகை விளம்பரம் கிடையாது. பிரசார பலம் கிடையாது. கவர்னரின் கைலாகு கிடையாது. கனதனவான்களின் கடாட்சம் கிடையாது. ஆனால் பாட்டாளிகளின் பக்க பலம் உண்டு. பொதுமக்களின் செல்வாக்குண்டு. தென்னகத்தின் ஈடு இணையற்ற கட்சி என்ற பேரும் சீரும் உண்டு. இலட்சம் உறுப்பினர் கொண்ட கழகம் என்ற சர்க்காரின் குறிப்புண்டு. ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்களின் பட்டியல் உண்டு. ஒரே நாளில் ஐயாயிரம் பேரை சிறைக்கனுப்பும் சக்தி உண்டு. இந்த சக்தியை நல்ல முறையில் பயன் படுத்தும் அறிவாற்றல் நிரம்பிய அண்ணு உண்டு.

அண்ணு நில அதிபர்களுக்கும், ஆலை அரசர்களுக்கும் இடையிலே வாழ்ந்தவரல்ல; வறுமைக்கும் கொடுமைக்கும் இடையிலே உழன்றவர். பட்டம் பெற்றதும் வாட்டம் நீங்கிற்றென்று சர்க்கார் பணிமனைகளில் புகுந்தவரல்ல; கல்லூரியை விட்டதும் காலடியெடுத்து வைத்ததே பொது வாழ்வுதான். பொது வாழ்வை அவர் வெறும் பதவிக்காகவோ புகழுக்காகவோ பயன்படுத்தவில்லை; தன் பரம்பரையின் நல் வாழ்வுக்காக பயன்படுத்துகிறார். தனது எழுத்தை அவர் ஏழடுக்கு மாளிகைவாசிக்காக உருவாக்கிடவில்லை; ஏழையின் எழுச்சிக்கான எருவாக்குகிறார். அவர் தனது அறிவை, ஆற்றலை, நேரத்தை, உழைப்பை தனது சுக வாழ்வுக்காகவோ, அரசியல் சதுரங்க ஆட்டத்திற்காகவோ உபயோகப் படுத்தவில்லை; தனது தாயக விடுதலைக்காக உபயோகப் படுத்துகிறார்.

ஆம்! திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும் என்பதுதான் அவருடைய மூச்சும் பேச்சும். அதை மீட்டிடவும், காத்திடவுமே நாம், தியாகத் தழும்பேறிய உடலும், தீரமிக்க உள்ளமும், சிந்தனை ததும்பும் மனமும், செயல்வகை அனுபவமும், காலம் அறிந்து களம் அமைக்கும் அறிவும், வெற்றிபெற்றிடும் ஆற்றலும் கொண்ட அறிஞர் அண்ணுவைப் பெற்றுள்ளோம்.

நம்மை நாம் பலப்படுத்த, அணிவகுப்பை செம்மைப் படுத்த, படை பலத்தைப் பெருக்க, பார்டிவீடுகளை அமைக்க, பாசறைகளை நிறுவ, 'உறுப்பினராகச் சேருங்கள்' என்று நம் அருமைப் பொதுச் செயலாளர் அறிக்கை விட்டுள்ளார்.

இப்புத்தாண்டிலே நம் கழகம் வலிவும் பொலிவும் பெற முன்பிருந்த உறுப்பினர் எண்ணிக்கையைவிட, இத்தனை லட்சம் பேர் அதிகம் என்ற பூரிப்பு பொதுச் செயலாளருக்கு ஏற்பட உறுப்பினரைச் சேர்ப்போம். ஆலைகள் இருக்குமிடம் செல்லுவோம், முதலாளிகளை ஒழித்திட தொழிலாளிகளைச் சேர்ப்போம். வயல் ஓரங்களுக்குச் செல்லுவோம், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபடும் விவசாயிகளைச் சேர்ப்போம். சந்தைகளுக்குச் செல்லுவோம், கூலி தூக்கிடும் தோழர்களை உறுப்பினராக்குவோம். பாரவண்டி இழுப்போரிடம், பாதை ஓரத்திலே குடும்பம் நடத்துவோரிடம், பஞ்சை பராரிகளிடம் செல்லுவோம், அங்கத்தினராகுங்கள் என்று சொல்லுவோம். ஆண்களைவிட பெண்களை அதிகமாகச் சேர்ப்போம். கோலேந்திகள் அந்தப் படை வரிசையின் பட்டியலைக் கேட்டு குலை நடுக்கம் கொள்ளட்டும்! கோமான்கள் கொட்டம் அடங்கட்டும்! நாடு மீள – கேடுகள் மாள பணிபுரிவோம் வாரீர்! வாழ்க திராவிடம்! வளர்க தி. மு. கழகம்!!

★———❋———★

ஜனநாயகத்தைப் பற்றி சில வார்த்தைகள்!

கி.மனோகரன்
பி.ஏ.(ஆனர்ஸ்)

'ஜனநாயகம் வாழவில்லை' என்போரும், 'வாழுகிறது' என்று ஒங்கி அறைவோரும், 'வாழமுயற்சிக்கிறது' என்று நம்பிக்கையும் சோகமும் கலந்த குரலில் தனது ஆர்வத்தை வெளிக்காட்டுவோரும் இருக்கிறார்கள்.

'ஜனநாயகத்திற்கேற்ற மண் இது அல்ல; இங்கே அது வாழாது' என துணிந்து கூற முற்படும் தொகையினரையும் ஏராளம் பார்க்கலாம்.

ஜனநாயகம் நடைமுறைக்கு ஏற்ற அரசியல் கோட்பாடல்ல என்று கூறி அதை அகற்ற வேண்டுமென்று வாதிப்போர் கூட்டமும் இல்லாமலில்லை. சாய்வு நாற்காலியிலே அமர்ந்து, மூன்னே குதித்தோடும் பெரு வயிற்றைத் தடவிக்கொண்டு, மரத்துப்போன தனது கால்களுக்குச் சூடேற்றும் பணியை ஒரு சிலருக்குத் தந்துவிட்டு, ஜனநாயகத்தைப் பற்றி காரசாரமாக விவாதிப்போர் சிலராக விருந்தாலும், அவர்களே எல்லாமாக அமைந்து விளங்குவதையும், விரும்பாவிட்டாலும் பார்த்துத் தீர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக எங்கேயும் ஜனநாயகத்தைப் பற்றிய பேச்சுக்கள். மேடையிலே, மாடியிலே, கல்லூரிகளிலே, கட்டிலறைகளிலே, பட்டி தொட்டிகளிலே அவரவர் முறைக்கும் நிலைக்கும் ஏற்றவாறு, சுரம் ஏறியும் இறங்கியும் அவரவர் பெற்றிருக்கும் தெளிவை அளவிட்டுக் காட்டும் முறையில் பேசிடக் காண்கிறோம்.

அடிப்படை உரிமைகள், சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம், சம சந்தர்ப்பம், வயப்புகள், மக்கள் குரல்—இன்னும் இவைபோன்ற உள்ளக்களர்ச்சியூட்டும் வார்த்தைகள், புறப்படும் புத்தகங்களிலே, நயாகரா நீர் வீழ்ச்சியைப் போல பெருக்கெடுத்தோடும் பேச்சாளர் தம் பேச்சுக்களின் அகோமோதல்களிலே, கட்டறுத்தோடும் கவிதைகளிலே, உரை நடைகளிலே இடம் பெறுவதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக ஜனநாயகத்தைப் பற்றி பேசுவது அடிப்படை உரிமை என்று சிலரும், சந்தர்ப்பத்தின் தேவை எனப் பலரும், பேசியே தீருவது என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆட்சிப் பீடத்திலிருப்போர், "பேசித் தீர்த்தே விடுவது" என்று அவர்கள் எடுத்துக் கொண்ட சூளுரையின் முடிவில் ஜனநாயகம் படாதபாடு படுவதை அனுதாபத்தோடு நாடு கவனிக்காமலில்லை.

மாறிக் கொண்டிருக்கும் உடலில், விரைந்து மாறிக் கொண்டிருக்கும் எண்ணக் கோவைகளின் மத்தியில் நாம் நிற்கிறோம். கடந்த காலத்தின் செல்லரித்துப் போன நூற்றாண்டுகளிலிருந்து பிறவியெடுத்த புதுப் புது கொள்கைகள் மனித சமூகத்தின் தீர்ப்புக்காகக் காத்து நிற்கின்றன. இந்நேரத்தில் நாம் வாழும் நூற்றாண்டு ஜனநாயக நூற்றாண்டு என்றும் பேசிக் கொள்கிறோம். அப்படியானால் ஜனநாயகம் என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் கடமை பிரஜைகள் எல்லோருக்கும் உண்டு. தத்துவங்களைப் புரிந்து கொண்டால்தான் அதைக் கையாளுவோர் இழைக்கும் பிழைகளையும், அதன் பேரில் எவ்வளவு திறமையாக தன்னை அவர்கள் மறைத்துக் கொள்ள முயலுகிறார்கள் என்பதையும் உணர முடியும். ஒரு முறை உணர்ந்து விழித்துவிட்டால் விழிப்புணர்ச்சியின் பலனாக ஆட்சிக் குழுவின் முகமூடி கிழித்தெறியப் படவும், அவர்களின் அரசியல் "நிர்

வாண''த்தை உணரவும் முடியலாகும்.


ஜனநாயகம் (Democracy) என்ற வார்த்தை இரண்டு கிரேக்க வார்த்தைகளின் சங்கிலித் தொடராகும். (Demos) என்ற வார்த்தைக்கு மக்கள் என்றும், (Cratos) என்ற சொல்லுக்கு அதிகாரம் அல்லது ஆட்சி என்னும் பொருளாகும். இணைந்த இவ்விரு வார்த்தைகள் தரும் மக்களாட்சிக்குத் தோற்றுவாய் கிரேக்கம் என்பது வரலாறு. ஏதென்ஸ் நாட்டின் ஆட்சியமைப்பின் எழிலோவியமாகத் திகழ்ந்த ஜனநாயகம் வெற்றி பெற முடியவில்லை. கிளைஸ்தனீஸின் சீர்திருத்தச் சட்டங்களும், ஏதென்ஸின் பொற்காலத்தின் நற்காவலனாக விளங்கிய பெரிக்ளிஸின் (Pericles) ஆட்சி அமைப்பு முறைகளும் வாழ்ந்து சிறந்த ஜனநாயகப் பண்பை உலகிற்கு முழக்கிக் கொண்டிருக்கிறது. இந்நாளில் நிலவும் ஜனநாயகக் கொள்கைக்கும், அன்று அமுலிலிருந்த மக்களாட்சிப் பண்பிற்குமுள்ள வேறுபாடுகளை இங்கே உணர்தல் நன்றும்.

இன்றைய நாட்களிலே ஜனநாயக ஆட்சியின் வளர்ச்சிக்கும் முற்போக்கிற்கும் மிகத் தேவையான அம்சம் என்று கருதப்படுவது, கட்சிகள்—பலம் பொருந்திய எதிர் கட்சிகளாகும். இந்தக்கட்சி யமைப்பு முறைகளை கடந்த காலம் கண்டிருக்கவில்லை.

கடந்த காலத்தின் ஜனநாயகம் நேரடியானது. இன்றைய ஜனநாயகம் மறைமுகமானது; அல்லது பிரதிநிதித்துவம் பெற்ற ஒன்று.

அதிகாரப் பங்கீடு முறையும், தடுத்தலும், சமநிலைப் படுத்தலுமான நிர்வாக முறைகள் அன்றைய மக்களாட்சி முறையிலே யில்லாத முக்கியமான நெறிகளாகும்.

இன்றைய ஜனநாயக நாடுகள், தனி நபருக்காக—மனிதனுக்காக நிலவுகின்றன. நாட்டிற்காக தனி மனிதன் என்ற முறை அந்தக் கால குறிக்கோளாகும். விஞ்ஞான ரீதியாக அரசியல் கோட்பாடுகளை வகுத்துத் தொகுத்த முதல் கிரேக்க நாட்டின் அரசியல் மேதை அரிஸ்டாட்டல், நாடுதான் இறுதி முடிவென்றும், மக்கள் அந்த நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதற்குரிய வழிவகைகள் என்றும் அவர் குறிப்பிட்டு, நாட்டை மனித உடலாகப் பாவித்து, அதன் உறுப்புகளே மனிதர்கள் என்றும், நாடு அல்லது அரசு இன்றி தனி உறுப்புகள் முழுத்தன்மை பெறுவதில்லை என்றும் வாதாடினர். இந்தப் பிரச்சினையிலே நாம் இங்கே ஈடுபட வேண்டியதில்லை. தேவையானது, கடந்த கால கிரேக்கம், தனி மனிதனை விட நாட்டிற்கு பூரணத்துவமும் முக்கியத்துவமும் நல்கி அதன் அடிப்படையிலே உருவாகிய மக்களாட்சி முறைக்கு மாலையிட்டது என்பதுதான்.



"மக்களாட்சி என்பது, மக்களால் மக்களுக்காக நடத்தும் ஆட்சி" என்றார் லிங்கன்,

நிலவும் ஜனநாயகம் இந்தக் கருத்துக்களின் புதை சுழியிலே உருவெடுத்துப் பொலிவுறும் மணி மண்டபமாகும்!

16-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலம். ஐரோப்பாவெங்கும் புதிய ராஜரீகம் தனது காலை ஊன்றிக் கொண்டது. பாராளுமன்ற சட்ட முறைகள் பெரும் பாலும் செல்வாக் கிழந்தன. இங்கிலாந்தில், டியூடர் பாராளுமன்றம் முடியாட்சியின் துணை போடு ஒரு சில சட்டங்களை நிறைவேற்றிற்று. ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் நேரடி மக்களாட்சி முறை தோன்றி மறையும் மின்னலாகவு மிருந்தது.

17-ம் நூற்றாண்டு! ஐரோப்பிய நாடுகளில், வரம்புகடந்த மன்னராட்சி முறை கோலோச்சியது. லூயி பதினான்காம் மன்னனின் வழியிலே அக்கம் பக்க நாடுகள் விழிவைத்தன; நடை போட்டன.

ஸ்டுவர்ட் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்து பாராளுமன்றம் விரிவிதிப்பு முறை, சட்டமியற்றல் இவைகளிலே தனது திறமையை பூரணமாகக் காட்டியது.

18-ம் நூற்றாண்டுதான் ஜனநாயகத் தத்துவங்களுக்கு சிறப்புத் தேடித் தந்த நூற்றாண்டாகும். மான்டஸ்க்யூ, வால்டயர், ரூஸோ போன்ற சிந்தனைச் சிற்பிகளின் எழுத்துக் கருவூலங்கள் மக்களாட்சி முறைக்குப் பாதை செப்பனிட்டுத் தந்தன.

அமெரிக்க நாட்டு சுதந்திரப் போராட்டமும், பிரஞ்சுப் புரட்சியும் மக்களாட்சியின் தேவைகளைப் பகிரங்கப் படுத்தின. அரசியல் சட்டங்கள் எழுதப் படவைகளாகவே யிருக்க வேண்டும் என்றும், அதன் மூலம் வரையறுக்கப்பட்ட உரிமைகளின் மூலமே ஆட்சி முறை நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தையும் உருவகம் செய்தன. ஆட்சிப் பீடத்துள்ளோரின் அதிகாரம், பொதுவான சுதந்திரம், மனித உரிமைகள், ஏற்படுத்தப்பட்ட சர்க்கார்—இவைகளுக்கிடையே சச்சரவின்றி சுகமான உறவு முறை எழுதப்பட்ட சட்டங்களின் மூலமே முடியும் என்ற ஞானமும் உருவாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதி: முற்போக்

கான சீர்திருத்தங்கள், ஆட்சி முறையின் அடிப்படையாக அமைவதற்காக ஏற்பட்ட போராட்டங்களே சந்தித்தது. இங்கிலாந்து நாட்டின் தொழில் புரட்சி, மத்தியதர வர்க்கத்தினருக்கு வாக்குரிமையை வாங்கித் தந்ததோடுகூட, புதிய தோர் தொழில் வர்க்கத்தையும் உருவாக்கி, அந்த வர்க்கத்தினர் கோரிய அதிகமான—ஆனால் நியாயமான உரிமைகளின் மூலம் புதிய ஜனநாயகத்திற்கு திட்டவட்டமான சூழ்நிலையை உண்டாக்கியது.

கடந்த இரண்டு மாபெரும் உலகப் போராட்டங்கள் சட்ட பூர்வமான அரசுகளின் வாழ்விற்கும், முரண்பட்ட சக்திகளின் வீழ்ச்சிக்கும் ஆணி பிறப்பித்தன. ஒரு சில பகுதிகளிலே புதிய ஏகாதிபத்யங்களையும் உருவாக்கின. காலத்தின் விசைப் போக்கைத் தாக்குப்பிடிக்காத இவைகள் சுக்கு நூறுகச் சிதறி, சின்னு பின்னப் பட்டு, வளர்ந்து வரும் ஜனநாயக சக்தியின் அநுதாபக் கண்ணீரைக் கடைசியாகப் பெற்றுக்கொண்டு, மரியாதையோடு மறைந்து விட்டன.

ஆகவே இருபதாம் நூற்றாண்டு ஜனநாயக நூற்றாண்டு என்று கூறிக் கொள்வதிலே அர்த்தமும் பெருமையுமுண்டு. ஜனநாயக மேடையை நிரந்தரமாக நிலை நாட்டிக் கொள்வதற்காக, தூக்கு மேடையைத் தழுவியோர் எண்ணற்றோர். மக்கள் குரலே ஆண்டவன் குரல் என்ற கொள்கையை பாரறிய முழக்கி ஏனைய இயற்கைக்கும், நெறிமுறைக்கும், பகுத்தறிவிற்கும் அப்பாற்பட்ட தெய்வீக உரிமைக் கொள்கைகள் வழி விட்டே ஆகவேண்டும் என்றும் பேசி, தனது "நெடுவாழ்வின் பெரும் புகழைச் சாவில் நாட்டி"ச் சென்றவர்கள் தொகை ஏராளமாகும். சிறைக் கூடத்தின் தேய்ந்து போன கம்பிகளை எண்ணி எண்ணி, தனது வாழ்க்கையின் வசந்த காலத்தை சுவைக்க முடியாமல், வாழ்வின் மாலை நேரம் வரை குளிர் காலத்தைத் தழுவிக் கிடந்தவர்களின் தியாகம், மக்களாட்சியின் மலர்ச்சிக்கே எனில், அந்த ஆட்சி முறைக்கு அதன் பெயராலேயே இழுக்குத் தேடுவோர் யாராயினும் சரி, அவர்களைப் பச்சைத் துரோகிகள் என்றே வரலாறு பறை சாற்றும்.

* * *

வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படும் ஹெராடாட்டஸ், ஜனநாயகத்தை அறிமுகப் படுத்தும்போது,

"ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க அமைப்பு முறை. நாட்டின் சட்ட பூர்வமான அதிகாரம் ஒரு குறிப்பிட்ட வகுப்பின் அல்லது வகுப்புகளின் கரங்களுக்குத் தரப்படாமல் சமுதாயம் முழுமைக்கும் ஒப்புவிப்பதாகும்" என்றார். ஜனநாயகத்தைப் பற்றிய விளக்கவுரை விளம்புதற் கேற்ற தனிப் பெருந் திறமைசாலியான பிரைஸ் பிரபுவும் (Lord Bryce) இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தினர்.

"ஜனநாயக அரசாங்கம் என்பது ஒரு சமுதாயம்; அதில் மக்களே சக்தி வாய்ந்தவர்கள்" என்றார், ஐவர் பிரௌன்.

எல்லோரின் உள்ளத்தையும் கவரும் முறையில், எண்ணத்தைக் கிளறும் வகையில், ஜனநாயகத்திற்கு விளக்கந் தந்தார் லிங்கன். அவர் கூறினர், "மக்களாட்சி என்று கூறுவது, மக்களே, மக்களால் மக்களுக்காக நடத்தும் ஆட்சி" யென்று.

பேராசிரியர் சீலி ஒவ்வொரு வருக்கும் உள்ள பங்கை வெளிப் படுத்தும் வாய்ப்பை ஜனநாயக ஆட்சி முறை வழங்குகிறதென்றார்.

தரப்படும் அத்தனை விளக்கங்களும், மனிதனை, மனித உரிமையை, அவனுக்குள்ள நியாயமான அதிகாரத்தை, பங்கை, அந்தஸ்தை நிலை நாட்டுவதைப் பார்க்கிறோம். மனிதனே இறுதி முடிவு. ஆட்சிகளும், நாடுகளும் அவனது பூரணத்துவத்திற்கும், எண்ணங்கள், தேவைகள், விருப்பங்கள் இவைகளின் நிறை வேற்றுதலுக்கு முரிய வழிகள் அல்லது ஏஜென்டுகள் என்பதையும் ஜனநாயகம் வற்புறுத்துகிறது.

ஆட்சியாளர்கள் எடுக்கின்ற முடிவுகள், தொடுக்கின்ற சர்வ தேசீய விண்ணப்பங்கள்—இவைகளிலே மக்களின் எண்ணங்கள் தெளிவாகத் தெரிய வேண்டும். எவ்வளவுதான் திறமை சாலிகளானாலும் தனிப் பட்டவர்களின் கையிலே முழு அதிகாரத்தையும் ஒப்படைப்பது ஏதேச்சாதிகாரம் உருவாகத் துணை செய்யுமே தவிர ஜனநாயகம் வாழ வழி செய்யாது. சட்டங்களை உருவாக்குகிற அரசு, அதை உருவாக்கும் நேரத்தில், மக்களின் பிரதிநிதிகளுக்கு—அதன் மூலம் மக்களுக்கு கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

ஓட்டுரிமை என்பது மனித நாகரீகத்தின் வரலாற்றுழியிலே கண்டெடுத்த முத்தென்றால், அந்த முத்தை, ஜனநாயகம் மக்களுக்கு மகிழ்ச்சியோடளிப்பதாகத்தான் கருதவேண்டும். அது மட்டுமா? நாட்டிலே புரட்சியின் தேவையை குறைத்து, இல்லாமலே செய்ய முயலுகிறது. ஏனெனில், புரட்சிக்குரிய காரணங்களைக் கண்டறிந்த அரிஸ்டாட்டல் அதற்குரிய முக்கியமான காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டார், மக்கள் தமது சமத்துவத்தை நிலை நாட்டத் துடிக்கும் எல்லையற்ற விழைவு மிகுதி என்று. அந்த விழைவு எழத் தேவையில்லாத அளவு, ஜனநாயகம் சமத்துவத்தைப் பெரிதும் வலியுறுத்துகிறது. ஜனநாயகம் தனது உயிர் கொள்கைகளிலே ஒன்றாக அதைக் கருதுகிறது. அதன் வெற்றியேதான் ஜனநாயகத்தின் வெற்றியுமாகும். இம்மட்டோ?



1956

உலகமெனும் திருமடந்தைக் கெழிலூட்டும் மலைதழுவி,
உதித்துவிட்டான் செங்கதிரோன்! அவள்—
நீலத் துணியாடும்! நீள்கடல் அதன் பெயர்!
கோலப் பருவமயில் இதழ் கொத்தக்
குதித்துவிட்டான் கதிர்க் கோமான்....
புவனமெங்கும் புத்தொளிபார்!

ஓவியம்:

ஆர்ட் டைரக்டர் திரு. தோட்டா.

1926

சிறுகதைகள்

வெளியீடு : வ.உ.சி. நூலகம்

இந்நூலை வாங்கிப் படிக்கும் அன்பர்களுக்கு வேண்டுகோள்

1. இந்நூலை விலைக்கு வாங்கிப் படிக்கும் அன்பர்கள் இதனை மற்றவர்களுக்கு இரவல் கொடுக்கக் கூடாது.

2. இந்நூலை விலைக்கு வாங்கிப் படிக்கும் அன்பர்கள் இதனை மற்றவர்களுக்கு விற்கவோ அன்பளிப்பாகக் கொடுக்கவோ கூடாது.

3. இந்நூலை விலைக்கு வாங்கிப் படிக்கும் அன்பர்கள் இதனை மற்றவர்களுக்கு இரவல் கொடுத்தாலோ, விற்றாலோ, அன்பளிப்பாகக் கொடுத்தாலோ, இதன் பக்கங்களை நகல் எடுத்தாலோ, இதனை மின்னூலாக மாற்றினாலோ, இணையத்தில் பதிவேற்றினாலோ, இதன் அட்டைப் படத்தை மாற்றினாலோ, இதன் தலைப்பை மாற்றினாலோ, இதன் உள்ளடக்கத்தை மாற்றினாலோ, இதன் பதிப்புரிமையை மீறியவர்களாவர்.



மனிதனது அடிப்படை சுதந்திரங்களான எண்ணவுரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, கூடுமுரிமை, ஸ்தாபனவுரிமை, வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, வழிபடும் உரிமை. இவைபோன்ற எண்ணற்ற, உரிமைகளை ஜனநாயகம் கொண்டிருக்கிறது. இந்த உரிமைகளை ஒழித்துக் கட்டி விட்டு ஆணவ அரசுக் கட்டிலிலே அமர ஆசைப்படுவோர், தூக்கி யெறிப்படுவார்கள் என்பதை காலம் நிரூபித்துக்காட்டியாகி விட்டது.

எண்ணச் சுதந்திரம், எழுத்துரிமை, எடுத்துக் கூறும் உரிமைகளின்றி எந்த ஒரு மனிதனும் இந்த சமுதாய அமைப்பிலே தற்காப்போடு வாழ இயலாது. தனி மனிதனின் வாய்க்குப் பூட்டிட்டு, மயான அமைதி தவழும் இடத்திற்குத் துரத்துவதன் மூலம் அவன் ஊமையாக்கப் படுகிறான்; உணர்ச்சியற்ற கட்டையாகி ருன். அவனது விலையுயர்ந்த மனிதத் தன்மைகள், ஆட்சியாளர்களால் எடுக்கப்படும் முடிவுகளில் இடம் பெருமல் தூக்கி யெறியப்படுகின்றன. விளைவு, சமுதாயம் தனி நபர்களின் மணல் மேடாக மாறுகிறது. எப்போது ஒரு சர்க்கார், எந்தக் காரணமாவது காட்டி, அடிப்படை உரிமைகளைப் பின் வாங்கிக் கொள்ளுகிறதோ, அப்போதே அந்த நிர்வாகம் ஏதேச்சாதிகாரத்திலே தன்னை ஒன்று படுத்திற் றென்று பொருள்.

புத்திசாலித்தனமான ஒரு சர்க்கார், எதிர் கட்சித் தலைவர்களின், கட்சிகளின் பயமற்ற, பலனீட்டும் விமர்சனங்களிலிருந்து பெருமளவு கற்றுக் கொள்ளுகிறதே தவிர- முடியுமே ஒழிய-தன்னைச்சுற்றியிருக்கும் தனக்கு வேண்டிய சில குறிப்பிட்டவர்களின் புகழ் மாலைகளின்றே, துதிகளின்றே அல்ல.

சமுதாயத்தை சிறைக் கூடமாக மாற்றி— அஞ்சி நடுங்கும் மான்கூட்டங்களாக மக்களையும் மாற்றி கலை, மொழி, விஞ்ஞானம், கலாச்சாரம், கல்வி இவைகளைத் தனது எண்ணங்களை, கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் கருவிகளாகப் பயன் படுத்துவது ஏதேச்சாதிகாரிகளின் முழு நேர வேலையாகும்.

மனித சமூகம், கோரிக்கைகளின் வளர்ப்புப்பண்ணை என்றும் தேவைகளின் அமுத சுரபி என்றும். எனவே, அவர்களின் ஒரு கோரிக்கையை நிறைவேற்ற முயலுவது எண்ணற்ற கோரிக்கைகளை நிறைவேற்றத் தன்னை இழுத்து வரும் என்றும், மறுப்பின், புரட்சிப் பெரு வெள்ளப் பெருக்கின் கதவுகளை அது திறந்து விடுமென்றும் ஏதேச்சாதிகாரி

யார் முட்டாள்?

தாமஸ் ஆல்வா எடிசன்—கிராமபோன், மின்சார பல்ப், சினிமா போன்ற ஒப்பற்ற வாழ்க்கை சாதனங்களை மனித இனத்துக்குக் கொடுத்து உலகை இன்பப் பூங்காவாக்கிய அந்த விஞ்ஞானி—பொறுமைக்கும் அடக்கத்திற்தும இருப்பிடமாக இருந்தவர். அவர் ஒரு சமயம் ஒரு பரிசோதனையை மூவாயிரம் தடவை செய்து, மூவாயிரம் முறையும் தோல்வியடைந்தார். இதைத் தன் நண்பரிடம் ஒரு நாள் சொல்லிக் கொண்டிருந்தார். கேட்டுக் கொண்டிருந்த நண்பர் எடிசனைப் பார்த்து, ''நீங்கள் ஒரு முட்டாள்!'' என்றார்.



''ஏன்?'' என்றார் எடிசன்.

''வெற்றி பெற வழியிலலாத ஒரு சோதனையை மூவாயிரம் தடவை செய்து உங்களுடைய அரிய நேரத்தை வீணக்கி விட்டீர்களல்லவா?'' என்றார் நண்பர்.

''நீங்கள்தான் பெரிய முட்டாள்!'' என்றார் எடிசன். நண்பர் விழித்தார்.

எடிசன் சொன்னார்; ''அந்த நேரம் வீணாய் விட்டது என்று நீங்கள் கூறியது தவறு. நான் மூவாயிரம் முறை, மூவாயிரம் வகையில் அப்பரிசோதனையைச் செய்தேன். ஆனல் தோல்வியடைந்தேன்.

ஆகவே, இனி இந்தப் பரிசோதனையைச் செய்பவர்கள், இந்த மூவாயிரம் முறைகளில் செய்தால் வெற்றி பெறமுடியாது என்று தெரிந்து கொள்ளுவதால் அவர்களுடைய நேரம் காப்பாற்றப் படுகிறதல்லவா?''

நண்பருக்கு ஞானோதையம் ஏற்பட்டது! எடிசனின் அளவுகடந்த பொறுமையும் உழைப்புத் திறனும் எத்தகையது என்பதை இச்சம்பவம் நினைப்பூட்டுகிறது. ஆகவேதான் மேதைத்தன்மை என்பதுன்ன என்று கேட்ட பொழுது, 99 சதவிகிதம் உழைப்பும் ஒரு சதவிகிதம் ஊக்கமும் சேர்ந்ததுதான் அது-என்று விளக்கம் கூறினர்.

அஞ்சுகிறான். மக்கள்குரல் தன் காதில் விழாத வகையில், வழக்கம்போல, கானக் குரலெழுப்பும் கோகிலவாணிகளின் கலாபத்திலும், இன்னிசை முழக்கிலும். செம்பவள இதழ்ச் சேயிழையார்கள் தம் இதழ் ஒத்திட ஒலிகளிலும் இலயித்துக் கிடக்கிறார்கள். துப்பாக்கி முழக்கங்கள் அவனுக்குவாண வேடிக்கைகள்: அதன் மூலம் துளையுண்டு சிதறியோடும் தலைகள், மண்டை ஓடுகள், விலைதப் பொருட்களாகின்றன. மனிதர்கள் கிள்ளுக்கீரைகள், அல்லது சுக்கு நூறுக்கப்பட்ட கண்ணுடித் துண்டுகள், பழங்கந்தல்கள், அல்லது மண்ணோடு மண்ணுகத் தேய்ந்து விட்ட உருக்குலைந்த பழைய செருப்பாணிகளாக அவனுக்குத் தோற்றமளிக்கிறார்கள், மனித உயிர்களைவிட முழுந்துணிக்கு மதிப்பளிக்கும் விரிந்த இதயம் பெற்ற (?) கொடுங்கோன்மையாளன் ஜனநாயகப் பட்டுத் துணிகளால் தன்னை மறைத்துக் கொண்டு, வெறுக்கத் தகுந்த அரசியல் சாகசங்களிலே ஈடுபடுகிறான். இவ்வித கோட்பாடுகளின் ஆணிவேரில் கத்தி நீட்டுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஜனநாயகமே, நீ வாழி என்று வாழ்த்துவோம்.



"எத்தனை நாளைக்குத்தான் மூக்குக் கண்ணுடி வாங்காமல் இப்படி கண்ணுடி ஜாடியையே உபயோகிக்கப் போகிறீர்களோ !..."

மக்களே முழுவல்லமை வாய்ந்தவர்கள். கடைசி அதிகாரம் அவர்களிடமேதான், அவர்களின் தீர்ப்புகள்தான் நிலைத்தவை என்பது ஜனநாயக வாதமாகும். ஆகவே, ஒரு நாட்டிலே ஜனநாயகம் வாழ, வெற்றிபெற தேவையான பண்பாடுகள் எவை?

சுருங்கிய எல்லைக் கோடு—அளவிலே சிறுத்த நாடுகள், ஜனநாயகம் வாழ வகையான பூந்தோட்டம் என்கிறார்கள். உதாரணமாக, ஸ்விட்சர்லாந்தைக் காட்டுகிறார்கள். அளவில் மட்டும் சுருங்கியிருந்தால் போதுமா? இல்லை — மக்கள் பெருமளவு புத்திசாலிகளாகவும், அறிவுத் தெளிவு பெற்றவர்களாகவும், கடமையுணர்ச்சியின் காவலாளிகளாகவும், நாட்டை, அதன் பல்வேறு வகை முற்போக்கை எல்லாவற்றிற்கும் மேலானதாகக் கருதும் விரிந்த பண்பாடுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். தன் பெண்டு, தன் பிள்ளை, வீடு, சுற்றம் என்னும் கடுகத்தனை உள்ளல் ஜனநாயகத்தின் கூற்றமாகும்.

வலுமிக்க, ஆனல் உஷாரான பொதுஜன அபிப்பிராயம் தேவை. ஜனநாயகத்தின் எதிரிகளாக பிரைஸ் பிரபு பிரகடனப்படுத்துவது, சோம்பேறித்தனமும், இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்றிருந்துவிடும் அருவருக்கக் கூடிய கவலையின்மையுமாகும்! அதீதியைக் கண்டு குமுறி எழாமல், துடைத்திடும் மார்க்கந்தேடாமல், தன்னை ஒதுக்கி வாழ்வோர், கொடுங்கோன்மையாளர்களை விடக்கொடுமையானோர், அவர்கள் அதன் மூலம் ஆணவ ஆட்சிக்கு மறைமுகமாக உதவுகிறார்கள் என்றே பொருளாகும்.

அரசியல் மன்றங்களிலே மட்டுமன்றி, பொருள் துறை, சமூகத்துறை—இங்கேயும் ஜனநாயகம் தவிர்க்க முடியாததேவை. இங்கிலாந்து நாட்டின் தொழில் புரட்சியின் விளைவு இந்தத் தேவையை தெளிவாக நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

மக்கள், எந்தப் பிரச்சினையையும் ஆய்ந்து முடிவு கட்டி, தீர்ப்புரை தரும் திறமைமிக்கவர்களாக விளங்குதல் வேண்டும்.

ஜனநாயகத்தில், தனது பிரதிநிதியைத் தானே தேர்ந்தெடுக்கும் கட்டுப்பாடற்ற சுதந்திரம பிரஜைகளுக்கிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, எந்த நேரத்தில், சுருக்கமாக, பிரதிநிதி என்ற வார்த்தையின் பொருளுக்கு லாயக்கற்றவராக மாறுகிறாரோ, அந்நேரமே, அவரைத் திருப்பியழைக்கும் உரிமையை அந்தத் தொகுதி மக்கள் பெறவேண்டும் என்கிறார், ஸ்டாபோர்டு கிரிப்ஸ். இலத்தீன் அமெரிக்காவில், ஒரு சில நாடுகளிலும், ஓரளவு ஸ்விட்ஸர்லாந்திலும் இம்முறை அமுலிலிருப்பதைக் காணலாம்.

"தனக்குரியசர்க்காரைத் தேர்ந்தெடுக்கும் திறமையின் வெற்றியிலே ஜனநாயக வெற்றியிருக்கிறது" என்கிறார் அறிஞர் டர்பின்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் ஜனநாயகம் என்ற அரசியலமைப்பு ஒன்றே சாலச் சிறந்தது, குறைபாடே யற்றது

என்று நிரூபிப்பதல்ல. அது மூடியாத காரியம். ஏனெனில், ஜனநாயகம் எந்த அளவு காதலர்களைப் பெற்றிருக்கிறதோ, அந்த அளவு எதிரிகளையும் சம்பாதித்திருக்கிறது. எதிரிகள், ஜனநாயகத்தைப் பற்றி கூறுகின்ற வார்த்தைகளில் அடியோடு பொருளில்லை என்று கூறிவிட முடியாது. ஹென்றி மெயின், பேராசிரியர் லீக்கி, போன்றவர்களின் கண்டனக் கணைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஜனநாயகம் தாங்கியது. எனினும் சாகவில்லை!

அவர்களின் கருத்துக்கள் ஜனநாயக சர்க்கார் நிரந்தரமான தல்ல; அசைந்தாடும் அமைப்பென்றும், பலமற்ற அடிப்படையான தென்னும், எண்ணிக்கைக்கு மூக்கியத்துவம் தருகிறதே தவிர, தரத்திற்கோ, தன்மைக்கோ அல்ல வென்றும் பொறுப்பற்ற தன்மையின் நிலைக்களன் என்றும். சுதந்திரவுணர்வை இது வளர்த்து வருவதில்லை, சிறுபான்மையோரின் ஆசைகள், உயர் எண்ணங்கள், முனையிலேயே கிள்ளியெறியப் படுகின்றன, அல்லது வெந்து சாம்பலாகின்றன என்றும், அறியாமைக் குன்றுகளாக விருக்கும் மக்களின் கையில், நாட்டின் முக்யமான அதிகாரத்தை ஒப்புவிப்பது, விடுதலை பற்றிய கவலையற்றவர்களின் கையில், வலுவான ஒரு தலைவனை, தாள் பணிந்து நடக்கும் குணம் படைத்தோரின் கையில் ஒப்படைப்பது ஆகுமென்றும், அது தற்கொலைக்கொப்பான தென்றும் கூறுவதாகும். இத்துணை கண்டனங்களுக்கும் பதில், ஜனநாயகம் வெற்றி பெற தேவைப்படும் பண்புகள் நிரம்பி அமைவதிலேயிருக்கிறது.

திராவிடத்தின் தன்னிகரற்ற அரசியல் மேதை அறிஞர் அண்ணா அவர்கள்,

"ஏதேச்சாதிகாரம் காட்டுத் தீ என்றும், ஜனநாயகமோ ஒரு வீட்டு விளக்கு" என்றும் கூறுவதன் மூலம், ஜனநாயகத்தின் அமைதியான, அமைக்கப்பட்ட பாதை வழி நடை போடும் அதன் பண்புகளை தெளிவு படுத்துகிறார்.

ஜனநாயகத்தைப் பற்றிய இவ்வளவு ஆவேசமான கண்டனங்களை தெரிவித்தவர்கள் குறிப்பிட்ட பல கருத்துக்களிலே ஒன்று, மக்களாட்சியிலே, பாராளுமன்றம் அல்லது சட்ட சபைகள் வெறும் பேச்சுக் கடைகளாக மாறி விடுகின்றன என்பதாகும். வளருகின்ற பொறுப்புணர்ச்சி, இந்த சந்தேகத்தை நிச்சயம் நீக்கியே தீரும்.

பல அரசியல் கோட்பாடுகளை ஒப்பிட்டு நோக்க ஜனநாயகம் பெருமளவு குறை பாடற்ற கோட்பாடாக இலங்குதல் கண்கூடு. நடைமுறைக்கு சாத்யமானது என்பதை உணர்கிறோம். அதன் வெற்றியை எட்டிப் பிடிக்க, நிரம்ப விலை கொடுத்தாக வேண்டும் என்பதையும் அறிகிறோம் எனினும் பரவாயில்லை. மனிதத் தன்மைக்கு மதிப்புத் தேடி, வாழ்த்தும் இந்த வகையான கோட்பாட்டை கடிமணம் செய்து கொள்வதென்றே நாடுகள் பல துணிந்து மணமன்றமேறிவிட்டன.

எட்வாட் கார்பென்டர் கூறினார். "O! disrespectable democracy, I love you!" இதன் உள்ளார்த்த பொருள், எந்த இலட்சியத்தையும்விட உன்னிடம் குறைகள் குறைவு. எனவே காதலிக்கிறேன் என்பதன்றோ? மேலே குறிப்பிட்ட ஜனநாயக விளக்கத்தின் உரைகல்லில், இந்தியா கொண்டொழுகும் அரசியல் தத்துவங்களை உரசிப் பார்த்தால்; நாம் என்ன காண்போம்? ஜனநாயகப் பூந்தோட்டமா? அல்லது மக்களாட்சியின் கல்லறையா?

இந்தக் கேள்வி, வேறொரு விளக்கக் கட்டுரையைக் கோருகிறது. இன்னொரு முரசொலி வாயிலாக, இந்தக் கேள்விக்குப் பதிலோடு வாசகர்களைச் சந்திக்க முயலுகிறேன்.

★

அளவுக்கு மீறிய ஆர்வம்!

சார்லஸ் டார்வின் தான் பரிணமத் தத்துவத்தின் பிதா.

சிறு பையனாக இருந்த பொழுதே அவருக்கு வண்டுகள், பூச்சிகள் முதலியவைகளைப் பிடித்து, அவைகளின் உடல் கூறுபாடுகளையும் வாழ்க்கை முறைகளையும் அறிவதில் ஆர்வம் அதிகம்.

ஒரு சமயம் அவர் காட்டுக்குச் சென்று நிறைய வண்டுகளைப் பிடித்து, இரண்டு பைகளிலும் போட்டு நிரப்பிக் கொண்டார். இரண்டு கைகளிலும் இரண்டு வண்டுகள் இருந்தன. ஒரு புதுரக வண்டு பறந்து செல்வதைப் பார்த்தார் அதையும் பிடிக்க வேண்டும் என்று ஆர்வம்.



ஆனால் இரு கைகளிலும் வண்டுகள் இருக்கும் பொழுது அதை எப்படிப் பிடிப்பது? ஒரு யுக்தி செய்தார். ஒரு கையிலுள்ள வண்டைப் பற்களின் இடையில் வைத்துப் பற்களால் மெதுவாகப் பிடித்துக் கொண்டு பறக்கும் வண்டைப் பிடிக்கத் தாவினார். தாவிய வேகத்தில் பற்களிடையே இருந்த வண்டு கடிபட்டு, ஒரு பாதி வாயிலும் மறுபாதி வெளியிலும் விழுந்தது! அது, விஷமுடைய வண்டானதால் அவர் வாய் புண்ணாகி, புண் ஆறப் பல மாதங்களாகி விட்டன!

எப்படி, அவருடைய ஆர்வம்?



சமீபத்தில் சென்னைக்கு நேரு வந்தபோது போலீஸ் வளையங்களுக்கு அப்பால் கோட்டைமீது நின்று முழங்கியபோது குறிப்பிட்டார், "இமயம் முதல் குமரிவரை இந்தியா ஒரே நாடு! மொழி, மாகாணம், வகுப்புவாதம் முதலிய பிரிவினை சக்திகள் இந்த ஒற்றுமையைக் குலைக்க வேலை செய்கின்றன. அவைகளை நாம் எப்போதும் அலட்சியப் படுத்துவோம்" என்று முன்னுரை பகன்று, "பிரிவினைச் சக்திகளை பலங்கொண்ட மட்டும் எதிர்ப்போம்" என்று வேலூரில் பின்னுரை பகன்று டில்லிக்குப் பறந்தார்.

இந்தியா ஒரே நாடல்ல, ஒரே இனத்தவர் வாழும் நிலப்பரப்பு அல்ல என்பதை திட்டவட்டமாக தெரிந்த நேருவும், அவர்தம் தலைமையின் கீழ் உள்ள ஆதிபத்திய நோக்கங் கொண்ட மத்திய சர்க்காரும், 'மொழி வழி இனமும், இனம் வழி தனி நாட்டுரிமை'யும் வளரும் என்பதை உணர்ந்து, மொழிவழியாக இந்த நாடு பிரிவதை முளையிலேயே கிள்ளி யெறிய, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சி முறையான, 'ஒரே மொழி பேசுவோரைப் பிரித்தும், வெவ்வேறு மொழி பேசுவோரை இணைத்தும்' அமைக்கப் படும் மாகாண குழப்ப ஆட்சி முறைமையே இந்திய ஆதிபத்தியத்தை நிலைநாட்டவல்லது என்பதை உணர்ந்து, மொழி வழி நாட்டுரிமை உணர்ச்சியை அழிக்கச் செய்த சூதுத் திட்டங்களை, அவைகள் உருவான விதத்தை, அதற்கான ஆதாரங்களை நாட்டினர்க்கு நாம் இங்கு படைக்கிறோம்.

1927-ம் ஆண்டில் இந்திய சட்ட அமைப்புக் குழு அமைக்கப் பட்டதை ஒட்டி, காங்கிரஸ் ஒரு தீர்மானம் போட்டது:

"மொழிவழிப்படி மாகாணங்களைத் திருத்தி அமைக்கக் கூடிய சரியான காலம் வந்துவிட்டது. எனவே உடனே ஆந்திரா, உட்கல், சிந்து, கர்நாடகம் முதலிய வைகளாவது அமைத்திடுக. ஒரே மொழி பேசுவோரிடை ஒருமையும், கலாச்சாரமும், வழிமுறையும் தழைக்க, மொழிவழி மாநிலங்கட்கு சுய நிர்ணய உரிமையும் தரப்படவேண்டும்.

1927-ல் 'மொழி வழி மாநிலம்' என்ற அளவிலேகூட அல்ல; "சுய நிர்ணய உரிமையுடைய மொழி வழி மாநிலம்" என்று



இடி முழக்கம் செய்திருக்கிறது. இது மாத்திரமல்ல!

எந்த நேரு, ஜாதி வெறியோடும் வகுப்பு வாதத்தோடும் இணைத்து, "மொழி வெறி" என்று கூறி, மொழிவழி மாநிலம் இந்திய ஒருமைக்கே ஆபத்து, இதை தான் அனுமதிக்கவே முடியாது என்று கண்டித்துப் பேசுகிறாரோ, அதே நேருவால் 1928-ம் ஆண்டில் சர்வ கட்சி மாநாட்டில் அவர் தலைமையில் அமைந்த குழுவில் (நேரு கமிட்டியில்) கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது:

"ஒரு மாநிலம் தன்னிலையை வளர்த்துக் கொள்ள, தன் மொழியிலேயே அரசியலை நடத்த, கல்வி போதிக்க, மொழிவழி மாநிலமாக அமைய வேண்டியது மிகமிக அவசியமாகும். ஒன்றுக்கு மேற்பட்ட மொழியினர் கொண்டதாக மாநிலம் இருப்பின் தொல்லைகள் பல வளரும். பல மொழிகளில் அரசாங்க வேலையும், போதனை முறையும் இருக்க நேரிடும். அதனால் வேலையும் தொல்லையும் அதிகமாகும். எனவே மாநிலங்களை மொழி வழிப்படி அமைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. மொழிவழியால் தான், கலாச்சாரமும் பண்பாடும் அதைப் போற்றும் இலக்கியங்களும் அமைகின்றன. ஆகவே மொழி வழி அமைவதுதான் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு மிகமிகப் பயன்படும்."

"மேலும் மாநிலங்களை அமைப்பதில் மக்களின் விருப்பம், மொழி, பூகோளம், பொருளாதாரம், ஆட்சி வசதி இவைகளை கவனிக்க வேண்டுமென்று சொல்லப் பட்டாலும் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது **மக்களுடைய விருப்பமும், மொழி வழி ஒற்றுமையுமே.**"

இது மாத்திரமல்ல;

1937-ல் கல்கத்தா காங்கிரஸ் ஆந்திர, கர்நாடக மாநிலம் அமைய வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியது.

1938-ல் வார்தா காங்கிரஸ் செயற்குழு "ஆட்சி பீடத்தில் காங்கிரஸ் அமர்ந்தவுடன் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகியவைகளை முதலில் அமைக்கும்" எனக் கூறிற்று.

1945-46 தேர்தல் வந்தது! அப்போது மவுண்ட்பேட்டன் கவர்னர் ஜெனரலாக, நேரு



இடைக்கால அரசாங்கத் துணைத் தலைவராக அமர்ந்திருந்தார். அப்போதைய தேர்தல் உறுதி மொழியிலேயே, மொழி வழி நாடு என்ற முழக்கத்தின் சுருதி குறைய ஆரம்பித்தது.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இயன்ற வரையில் ஓரளவு மொழி வழிப்படி திருத்தி அமைக்க வேண்டியது அவசியந்தான் எனக் கூறினர்.

1947-ல் ராஜேந்திர பிரசாத் தலைமையில் கூடிய அரசியல் நிர்ணய சபை, மொழி வழிப்படி மாநிலம் அமையவேண்டும் என்ற மக்களின் உரிமைக்குரலை மறுக்க முடியாமல், அதை ஆராய்ந்து முடிவு செய்யப் போவதாகக் கூறி ஒரு "ஆய்வுக் குழு"வை நியமித்தனர்.

1947, நவம்பர் 27-ம் தேதி அரசியலமைப்புச் சபையில், இந்த "ஆய்வுக் குழு" செய்ய வேண்டிய காரியத்தின் நோக்கம் பற்றி பேசிய நேரு "முதலாவது இந்தியாவின் பாதுகாப்பும் ஒற்றுமையுமாகும். எனவே முதலாவதை முதலாவதாகக் கவனிக்க வேண்டும்.....மொழி வழிப்படி நாட்டைத் திருத்தி அமைப்பதை நோக்கமாகக் கொள்ளாமல் நாட்டின் ஒற்றுமையையும், பொருளாதார நிலைமைகளையும் கண்ணோட்டமாகக் கொண்டு, நாட்டின் நிலைமைகளை ஆராய்ந்து, ஆந்திர, கேரள, கர்நாடக, மகாராஷ்டிர மாநிலங்களை அமைப்பது சரியா, தவரு? இந்திய ஒற்றுமைக்கு உகந்ததா, அல்லவா?—என்பது பற்றி யோசனை கூறுக" என்று குறிப்பிட்டார்.

கண்ணே, மணியே, கட்டிக் கரும்பே என்று காதல் மொழி பேசினான். கன்னியின் மனதைக் கவர்ந்தான். உள்ளத்தில் புகுந்தான். உடலையும் தீண்டினான். கொஞ்சிக் குலாவிச் சென்ற காதலன், அவள் கையிலே குழந்தை என்றவுடனே தேள் கொட்டிய தெனத் துடித்து, பழைய வாக்குறுதியை மறைத்துப் பேசுவதை கதாசிரியர்கள் பல்லாயிர முறை சித்தரித்து கசிந்துருகுவதைப் பார்த்திருக்கிறோம். அத்தகைய "நவீன விசுவாமித்திரர்" பாகத்தில் அரசியல் மேடையில் நேரு நடிப்பதற்கேற்ற தகுதி அத்தனையும் உடையவராக இருப்பதை நாம் இன்று பார்க்கிறோம்.

தேசிய இயக்கம் "இந்திய உபகண்டத்தில் வாழும் பல மொழியினரின் கலாச்சார வளர்ச்சிக்கு, அரசியல் முன்னேற்றத்திற்கு, வழிவகை செய்யும் என்று எந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டதோ அதை மறைத்தும் திரித்தும் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஒரே மொழி பேசுகின்ற மக்கள் பல மாகாணங்களில் சிதறிக் கிடக்கும் நிலை தென்னாட்டில் தான். சுதந்தரம் பெற்றபோது ஓரிசா தவிர, இப்போது ஆந்திராவும் தவிர ஒரு மொழி பேசுவோர் அத்தனை பேரையும் தன்



னகத்தே கொண்டு துலங்கும் மாகாணம் தென்னாட்டில் இல்லை. தென்னாட்டார் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வட நாட்டார் குழு அமைந்தது. வேண்டுமென்றே அமைக்கப் பட்டது. அந்தக் குழுவினர் நால்வர்: அதாவது குழுவின் தலைவர்: எஸ். கே. தார். அவரோ அலகாபாத் நீதிபதி. மற்றொருவர் பன்னலால். அவர் டில்லி முன்னாள் உயர் அதிகாரியாம். வேறொருவர் ஜகத் நாராயணலால். இவரோ பீகார் மாகாணத்து அரசியல் வாதி என்று இந்திய தேசிய அரசாங்கம் கூறியது. குழுவின் செயலாளர்: பி. எஸ். பானர்ஜி.

இந்திய அரசாங்கம் எதை உள் நோக்கமாகக் கொண்டு இவர்களை நியமித்ததோ அதையே அப்படியே செய்துவிட்டனர்—ஏன்? அதை விட ஒருபடி மேலாகவே தங்கள் ஆய்வு முடிவுகளை வெளியிட்டனர்.

(1) மொழி வழி தென்னாடு பிரிந்தால் இந்தியாவின் ஐக்கியம் குலைந்துபோகும்.

(2) தென்னாட்டிலுள்ள பத்து கோடி திராவிட மக்களும் (விழித்தெழுந்து) உரிமை கேட்பர்.

(3) பிராமணரல்லாதார் ஆதிக்கம் தென்னாட்டில் அதிகமாகி குழப்ப நிலை ஏற்படும். மொழி வழியாக தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் என்று அமைந்தால், பார்ப்பனர் அல்லாதார் ஆதிக்கம் பெருகி, பார்ப்பனர் நிலை பரிதாபத்திற்கு உள்ளதாகி, குழப்ப நிலை ஏற்படும் எனக் கண்ணீர் விட்டுக் கசிந்துருகி இருக்கிறது, தார் கமிஷன்.

இதனால் தானே என்னவோ இன்றுங்கூட ஆச்சாரியார் மொழிவழிப்படி நாடுவேண்டாம்; தட்சிணப் பிரதேசம் அமைவதனைக் கதறுகிறார். ஊரிரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது என்ற முறையில் பல மொழியினரின் சச்சரவுகளுக்கிடையில், வேத மொழியினர் என்றுகூறி ஆங்கில மொழித் திறத்தால், தன் சாணக்கியக் கொடியை ஏற்றி, தென்னாட்டுத் திராவிடரை ஆட்டிப் படைக்கலாம் என்று கனவு காண்கிறாரோ என்னவோ, நாமறியோம்! என்னதான் இருந்த போதிலும், 'தார் கமிஷன்' உறுப்பினர்கள் 'தீர்க்க தரிசிகள்'! ஒருவேளை அப்போது ராஜகோபாலாச்சாரியார் மத்திய அரசாங்க உயர் பீடத்தில் அமரும் நிலையில் வலுப் பெற்று இருந்த காரணத்தால் அவரின் 'ஆத்மா' தார் கமிஷனில் வேலை செய்திருக்கலாம்! இந்த சின்ன விஷயத்திற்காக ஆச்சாரியாரை குறை கூறுவானேன்? மத்திய அரசாங்கமே அந்த வேலையை செய்யுமாறுதானே தார் கமிஷனுக்குக் கட்டளையிட்டது.

"சென்னை தமிழர்க்கு உரியது; பம்பாய் மராட்டியர்க்கு உரியது"—இந்த உண்மையை 'தார்' குழு மறைத்து, இரண்டு நகரங்களும் தனி ஆட்சியின் கீழ் இருக்க

வேண்டுமென்று கூறி, சென்னை மீது ஆந்திரரும், பம்பாய் மீது குஜராத்தியரும் உரிமை கொண்டாடச் செய்து, பிரதேச மக்களுக்குள் வம்பையும் வல்லடியையும் ஏற்படுத்தினர்.

ஆட்சி வசதிக்காக மொழி ஒருமையைப் பார்க்கவேண்டுமே யொழிய, ஒரே மொழி பேசுவோர் சேர்ந்து வாழ்வதற்காக, மாநிலங்களை திருத்துவதுகூடாது– என்றனர்.

தீர்த்திக்கும் தேஷக தார் கமிஷன் அறிக்கை மத்திய அரசாங்கத்திற்கு இருந்த போதிலும், தென்னாட்டிலுள்ள தேசிய காங்கிரஸ் கட்சியினருக்குக்கூட இந்த முடிவு பொறுக்க முடியா ஆத்திரத்தை விளைவித்தது. கிளர்ச்சிகள் வலுத்தன.

இதைக் கண்ட நேருவும், பட்டேலும், 1948–ல் ஜெய்பூரில் கூடிய காங்கிரஸில், தென்னாட்டு காங்கிரஸ் காரிய கமிட்டிகளின் கூக்குரலை நெறிக்க ஒரு குழு நியமித்தனர். அந்தக் குழுவில் வேறு யாருமில்லை. நேரு, பட்டேல் – இருவரும் இருந்தனர். மற்றொருவர் தென்னாட்டார். காரணம் அவர் அப்போதைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர்! அவர்தான் பட்டாபி சீதாராமையா.

இந்த மூவர் குழு தங்களுக்கு இருக்கும் செல்வாக்கு மூலம் மத்திய ஆட்சிபீடத்தின் நோக்கத்தை நிறை வேற்ற முயன்றனர்.

சுதந்திரத்திற்குமுன் 'காங்கிரஸ்' இயக்கம் செய்துள்ள தீர்மானங்களை எடுத்துக் காட்டுவதைக் கண்ட இந்த 'மூவர்க் குழு' அந்தத் தீர்மானம் உதவாக்கரை தீர்மானம் என்று தங்கள் ஆராய்ச்சி முடிவாகச் சொல்லினர்.

(1) சுதந்தரம் பெறுவதற்கு முன் காங்கிரஸ், மொழிவழிப் படி பிரிவதால் செயல் முறையில் ஏற்படும் தொல்லைகளையும், கேடுகளையும் உணராமல் அந்தக் கொள்கையை ஆதரித்தது.

(2) இப்போது தேவை இந்தியாவின் ஒற்றுமை, பலம், பொருளாதார வளர்ச்சி! மொழி வழி மாநிலம் இப்போதைக்கு நல்லதல்ல.

(3) மொழி ஒற்றுமைப் படுத்தும் சக்தியாலும் அது ஒரு மாபெரும் பிரிவினைச் சக்தி என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

(4) பழைய காங்கிரஸ் தீர்மானத்தை மிக மிக அவசியமும், கட்டாயமும் ஏற்பட்டால் தவிர செயல் படுத்தக் கூடாது.

இந்தத் தீர்மானங்களை வெளியிட்ட மூவர் குழுவின் தலைவர்



"அரசியல் மேடையில் 'நவீன விசுவாமித்திரர்' பாகத்தில் நேரு..."

நேரு. இதே நேருதான் ஒவ்வொரு மொழி இனங்களின் வளர்ச்சிக்கு மொழி வழி மாநிலம் அவசரத் தேவை–என்று 1928–லேயே முழக்கினர்.

அதைத் தொடர்ந்து ஆந்திரத்தில், மகாராட்டிரத்தில், கர்நாடகத்தில், கேரளத்தில் இந்தப் பிரிவினை உணர்ச்சி வளரத்தான் செய்தது. பாரதமாதாவின் புத்திரர் எந்த மாகாணத்தில் வாழ்ந்தாலென்ன என்று சொல்லிப் பார்த்தனர். "மொழிவெறி" எனச் சாடினர். ஆனாலும் கிளர்ச்சிகள் அடங்கிய பாடில்லை. காங்கிரஸ் மேலிடத்தார், பிரதேச காங்கிரஸ்காரர்களின் குரல்வளையை நெறிக்க முயற்சித்தனர்; நெறித்தனர்! 'கவனிப்போம்' என்று சொல்லிப் பார்த்தனர். எதுவும் மக்களைத் திருப்தி செய்யவில்லை.

ஆந்திரத்தில் பழம் பெரும் காங்கிரஸ்காரர் பிரகாசம் வேறு கட்சியில் சேர்ந்தார். ரங்கா புதிய கட்சி ஆரம்பித்தார், ஆனாலும் ஆந்திரம் பிரிய மத்திய அரசாங்கம் ஒப்பவில்லை.

ஆந்திரப் பிரிவினை 'ஆகாத காரியம்' 'போகாத ஊருக்கு வழி' என்று நேரு கூறி அடம்பிடித்தார். எனினும் அதே நேரு 1955–ம் ஆண்டு அக்டோபரில் ஆந்திர மாகாண 'அங்குரார்ப்பணம்' செய்தார்.

"மனந்திருந்தி, மொழி வழி உரிமை உணர்ச்சியை உணர்ந்தே அவ்வாறு செய்தார்" என்று கூறிடவாவது வழி வைத்தாரா என்றால், அதுதானில்லை.

பொட்டி சீராமுலுவின் பிணம் ஊர்வலம்வந்தது. மத்திய அரசாங்கத்துக்கு உரித்தான ரயில்வே நிலையங்களில் கலவரமும், கொள்ளையும், கிளர்ச்சியும் எழுச்சி முழக்கமும் ஆந்திரா வெங்கும் உச்ச நிலை அடைந்தது.

பின் தான் இந்தியப் படத்தில் ஆந்திராவின் எல்லைக் கோட்டை அவசர அவசரமாகக் கிழித்தார். எந்த நாவால் ஆந்திரப் பிரிவினை முழக்கத்தை இழித்தும் பழித்தும் பேசினரோ அதே நாவால் வாழ்த்தியும் வரவேற்றும் பாராட்டியும் பேசினர்.

அடக்குமுறை பொறுக்க மாட்டாது கோபம் கொண்ட மக்களின் கிளர்ச்சிக்கும் கலவரத்திற்கும் பின் அமைந்தது "ஆந்திரம்." இதே முறையை மற்ற வர்களும் பின்பற்றிடுவரையின் மத்திய அரசாங்கத்தின் நிலை என்னவாகும் என்பதை நினைத்து அஞ்சிய சர்க்கார், மற்றவர்களைத் திருப்திபடுத்துவதற்காக, தட்டிக் கேட்போருக்கு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டவும் அவசர அவியலாக ஒரு குழு நியமித்தனர்.

மக்கள் கேட்டதோ "மொழி வழி மாநிலம்"; அரசாங்கம்

அமைத்ததோ "மாநில சீரமைப்புக் குழு." தென்னாட்டார் பிரச்சினையைத் தீர்க்கும் குழுவிலே இருவர் வடநாட்டார்! ஒருவர் நேருவின் செல்லப்பிள்ளை. இந்த பஸில் அலி, குன்ஸ்ரூ, பணிக்கர் இரண்டாண்டுகள் ஆராய்ச்சி செய்ததெல்லாம் மொழிவழியாக நாட்டை திருத்தி அமைப்பது எப்படி என்பதல்ல.

இந்தியாவிலுள்ள பல்வேறு இனமொழியினரும் என்றென்றும் மத்திய ஆட்சி பலத்தின் கீழ் அழுத்தி வைக்கப்படுவதற்கான வழிவகைகள் என்ன என்பதுதான். அவர்கள் வார்த்தையின் படி இந்திய தேசிய ஒற்றுமை சங்கிலி அறுந்து விடாமல் இருக்க வழி என்ன என்பதுதான்.

மக்களோ மொழிவழியாக மாகாணங்களைப் பிரிக்கவேண்டுமென முழக்குகின்றனர். இந்த உணர்ச்சி வெள்ளத்தை அணை கட்டித்தடுக்க முடியாது என்பதை உணர்ந்த அவர்கள் பல்வேறு தந்திர முறைகளை தங்கள் அறிக்கையில் சொல்லிப் போந்தனர்.

எனினும் விசால ஆந்திரம் அமைவதை நிரந்தரமாக தடுக்க – தற்காலிகமாக ஒரு திட்டத்தைத் தீட்டினர். அது தான் துண்டாடப்பட்ட ஹைதராபாத்திலிருந்து பிரியும் 'தெலிங்கானா' விசால ஆந்திரத்தோடு இணையாது, அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பின் அமையும் தெலிங்கானா சட்டசபையில் மூன்றில் இரண்டு பங்கினர் விசால ஆந்திரத்தில் சேர விரும்பின் சேரலாம்–என்பதாகும். குழுவினரின் எண்ணம்–அதற்குள் மந்திரி நாற்காலியில் அமரும் பேற்றினுக்காக தவங்கிடக்கும் சிலர், தெலிங்கானா விசால ஆந்திராவுடன் சேராமல் தடுத்திடுவர் என்பதாக இருக்க வேண்டும்.

ஒரு லட்சம் சதுரமைல்களும் மூன்று கோடிக்கு மேற்பட்ட மக்களையுமுடைய 'விசால ஆந்திரம்' அமையுமானால் 'இந்திய ஒற்றுமை'க்கு பேராபத்து என்று குழு எண்ணியிருத்தல் வேண்டும்.

"ஒவ்வொரு பாஷைக்காரரும் கோறுகிறபடி தனிமாகாணத்தை ஏற்படுத்தினால், பின் தனி அரசுரிமையுள்ள ராஜ்ய ஸ்தாபனத்தைக் கோறுவர். பல நூற்றாண்டுகளுக்குப் பின் கிடைத்த தேசிய சுதந்தரத்தையும், தேசிய ஒற்றுமையையும் நாம் அடியோடு இழக்க நேரிடும்..."

(சுதேசமித்திரன்–29-11-55 பக்கம்–4)

மராட்டிய வாலிபனுக்கு குஜராத்திய குருட்டுப் பெண்ணை பஸில் அலி குழுவினராகிய புரோகிதர், பம்பாய் மாகாணம்



ஒரு பொட்டி சீராமுலுவின் பிணம் விழுந்தது; ஆந்திராவின் எல்லைக் கோடு அவசர அவசரமாகக் கிழிக்கப்பட்டது...

என்ற பழைய சம்பிரதாய அடிப்படையில் திருமணம் செய்து வைக்க முயற்சிப்பதற்குக் காரணம், ஒன்று மராட்டிய வாலிபனின் வாழ்வைப் பாழாக்க; மற்றொன்று குஜராத்திய பரம்பரையினர் பம்பாய் நகரத்தின்மீது உரிமை கொண்டாட.

இத்தகைய தகராறுகளை உருவாக்கி, பஸில் அலிக் குழு "இந்திய ஒற்றுமையை" பலப்படுத்துகிறது!

ஆனால் 6 கோடி பேர்கொண்ட உத்தரப் பிரதேசத்தை இரண்டாகச் செய்யவில்லை. காரணம் 200 கோடி ரூபாய் செலவில் உள்ள ராணுவத்தின் தலைமைப் பீடம் அங்குள்ளது! அது மாத்திரமல்ல; உத்தரப் பிரதேசத்தினர் மத்திய ஆட்சி பீடத்தின் 'சூத்ரதாரி'கள். இப்படியிருந்தும் இரண்டாகப் பிரித்து விடுவது இந்திய அரசாங்க பலத்திற்கு நல்லதென பணிக்கர் கருதியிருக்கிறார்.

ஆனால் பஞ்சாப் மொழி பேசுவோர் ஒன்றுக இணைந்து வாழும் உரிமையை குழுவினர் சிதைத்துள்ளனர். ரஞ்சித்சிங் பரம்பரையினர் தனியுரிமை கோரி விடுவரோ என்ற அச்சம்தான்.

"காயமே இது பொய்யடா! காற்றடைத்தப் பையடா" என்று கூறும் வேதாந்தி, லட்சக்கணக்கில் வருமானம் வரும் மடத்துக்கு அதிபதியாக இப்பதுபோல்,

உலகத்திற்கு ஜனநாயகம் போதிக்கும் நேரு, ஜனநாயகத்திற்கு அடிப்படைத் தேவையான ஒரு மொழி பேசுவோர் ஒன்றுக இணைந்து வாழும் உரிமைபைக்கூட உள் நாட்டில் மறுக்கிறார்.

தேசிய இயக்கத்தவர் நாடாள வந்த பிறகு அவசியமும் அவசரமுமான பல பிரச்சினைகள் அலட்சியத்துக்குரியதாயின. தொல்லை பல விளைவிக்கும் காஷ்மீர் பிரச்சினையும், தட்டிக் கழிக்கப்பட்ட அபல் நாட்டுப் பிரச்சினைகளையும், எதிர்ப்புக்கும் கேலிக்குமாளான இந்தி மொழி பிரச்சாரத்தையும், தானே எடுத்து, துன்பத்தை வலிய அணைத்துக்கொள்ளும் மத்திய சர்க்கார் மொழிவழி மாநிலப் பிரிவினையை சுதந்தரம் பெற்ற நாளாய் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தனர். ஏன்?

நாட்டை மொழி வழி திருத்தி அமைக்கும் அரசியல் உரிமை கொண்ட மத்திய சர்க்கார் கமிஷன்களை நியமித்து காலந்தள்ளுவது என்ற நிலை ஏழாண்டுகளாக நடைபெற்றதே! ஏன்?

சரித்திரத்தை சான்றுக் கழைத்து அன்று பிரிட்டிஷாரை "பிரித்தாளும் சூழ்ச்சி" என வாய் கிழியப் பேசி, மேடை அதிரக் கத்தினர். இன்றோ வீரிட்டெழும் சக்திகளை விலா எலும்பு நோக

அடிக்கின்றனரே, ஏன்? திராவிட மொழிகள் பேசுவோரிடை பூசலும், மோதலும், மனக் கசப்பும் ஏற்படக் காரணமாக இந்தப் பிரச்சினை பயன்படுத்தப் படுகிறதே, ஏன்?

சித்தூரிலே தமிழர்க்கும் ஆந்திரர்க்கும் மோதல்; தேவிகுளம், பீர்மேடு இவைகளை கேரளத்திற்குத் தந்தமையால் மலையாளிக்கும் தமிழர்க்கும் மோதல்; பெல்லாரியிலே கன்னடியர்க்கும் தெலுங்கர்க்கும் மோதல்; கொள்ளேகாலம் தாலுக்காவில் கன்னடியர்க்கும் தமிழர்க்கும் மோதல்; ஓரியர்க்கும் ஆந்திரர்க்கும் 'பர்லாக்கிமிடி' 'பாதப் பட்டணம்' முதலிய இடங்களில் மோதல்; குஜராத்தி கூட்டத்திற்கும் மகாராட்டிரருக்கும் பம்பாயில் மோதல். தென்னாட்டு மக்களிடையே மோதல் கண்டு மேல் தளத்தில் அதிகார அழகியின் அரவணைப்பில் உட்கார்ந்திருக்கும் ஆதிபத்தியம் கை கொட்டிச் சிரிக்கிறது. ''கவனிக்கிறோம்' என்று இறுமாந்து கூறுகிறது.

'அகில இந்தியா' 'நாம் அனைவரும் பாரதத் தாயின் புத்திரர்கள்' என்று மார்தட்டிப் பேசிய காலம் மலையேறி விட்டது. இந்திய உப கண்டத்தின் ஒவ்வோர் மொழியினரும் தங்கள் வாழ்வும் வளமும் பெருக, தங்களுக்கென ஒரு மாநில மாவது தேவை என்பதை உணரத் தலைப்பட்டு விட்டனர்.

அந்த மாநிலங்கட்கு தரப்பட்டுள்ள உரிமைகளை, இழைக்கப்படும் கேடுகளை, தென்னாட்டு மாநிலங்களை வட நாட்டு முதலாளித்துவக் கூட்டம் 'மார்க்



மும்மூர்த்திகளைக் கொண்ட பசுல் அலி குழு நாடெங்கும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது...

கெட்'டாகவும் டில்லி ஏகாதிபத்தியம் மாநிலங்களை 'எடுபிடி'களாகவும் வைத்திருக்கும் நிலையை உணர்ந்து, விழித்து, வீரிட்டெழ, இன்னும் எத்தனை நாட்களாகும்! அன்று 'தார்' கமிஷன் தென்னாட்டை மொழி வழியாகப் பிரித்தால் 'தனி நாட்டுரிமை' கேட்டு விடுவர் என்று எழுப்பிய அழுகுரல், இன்று 'பட்டீல்' பாடும் முகாரி, இவைகள் நடைமுறையில் வரத்தான் போகின்றன, என்பதற்கான அறிகுறிகள்தான், 'இந்திய தேசியம் ஒரு அவசரக் கற்பனை' என்பதை நிரூபிக்கும் நிகழ்ச்சிகள், நாட்டில் மொழி வழி முழக்கமாக, உருவெடுத்துள்ளன! வட நாட்டு அரசாங்கத்தால் அவல நிலைக்காளாகும் தென்னாட்டு மாநிலங்கள் 'ஐக்கிய முன்னணி' அமைக்க வேண்டிய நிலையை, வடநாடு ஏற்படுத்தாமல் போகாது! அந்த நாள்தான் 'திராவிடக் கூட்டரசு' அமையும் நாள்!

ஆட்டுக் கிடாக்கள் இரண்டிற்கு சண்டை மூட்டி விட்டு, சொட்டும் இரத்தத்தை நக்கி நக்கிக்குடித்ததாம், வஞ்சகம் நெஞ்சில் வழியும் ஒரு நரி! அந்த பஞ்ச தந்திரக் கதை காட்டும் பாதையில் நடக்கின்றனர் ஆட்சியாளர்கள்.

'நரிக் கூட்டம் நன்மை தராது' என்கிறோம் நாம்.

'பரிவு காட்டுங்கள்; நலிவு தீரும்' என்கின்றனர் பாரதப் புத்திரர்கள்.

''நரிக் கூட்டத்தின் பரிவு ஆட்டுக்கிடையின் சரிவு'' என்று நாம் எச்சரிக்கிறோம், தென்னாட்டுத் திராவிடத் தேசியத் தோழர்களை. இந்த உண்மையை உணராததால்தான் ''தென்னாடு வேட்டைக்காடு! வடநாடு வேட்டையாடுபவர் நாடு'' என்ற நிலை நீடித்து வருகிறது.

'புயலே வீசாதே' என்று கட்டளையிட்டு வெற்றி பெற்ற மாவீரன் எவனுமில்லை. மக்கள் எழுச்சியை எதிர்த்து நின்ற எதேச்சாதிகாரி எவனும் நீண்ட காலம் நிலைத்ததில்லை.

ஆம்! இங்கு ரோமாபுரி உருவாகிறது. ஆனால் அந்த ரோமாபுரி ஆதிக்க வெறியர்கட்கு ஏற்பட்ட முடிவு, நாளை இந்த ஜனநாயக எதேச்சாதிகாரிகட்கு ஏற்படக் கூடாது!

★

எதற்கு?



கலை என்ற பேரால் பல கண்மூடிக் கொள்கைகள்–இதிகாசங்கள் என்ற பேரால் நம் மேல் சுமத்தப் பட்டிருக்கின்றது நெடுங்காலமாக. மக்களுக்குப் பயன்தராத கலை எதையும் ஒப்புக் கொள்ளாமல் ஒதுக்கித் தள்ளி விட்டனர் மேல் நாட்டார். காரணம், அங்கே அறிவுக் கோட்டையின் கபாடக் கதவுகளை அரசாங்கமே திறந்து விட்டு விட்டது. நினைத்தவர் நினைத்ததை சிந்திக்கவும், சிந்தித்ததை வெளியிடவும், அதிலுள்ள குற்றங் குறைகளை மற்ற ஒரு சாரார் எடுத்துக்கூறவும், கண்டுபிடிக்கப்பட்ட அப்பிழைகளுக்கும் பின்னல் திருத்திக் கொள்ளவுமான வாய்ப்பும் வசதியும் அங்கே உண்டு.

ஆனல் இங்கே, அறிவு எவ்வளவு சுடர்விட்டு எரிந்தாலும், அந்த சுடரொளியில் ஆன்றோர்கள், இருடிகள், வேத வித்தகர்கள், தேவதூதுவர்கள் எனப்படுவோர் செப்பிய கருத்தேடுகளில்உள்ள கரைபடிந்த எண்ணங்களை எள்ளளவும் எண்ணிப் பாராமல், அப்படியே அதுவும் தூபதீப நைவேத்தியமிட்டு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அப்படி ஏற்றுக் கொள்ளாதவர்களை, வைதீக வெறி கொண்டு தாக்குவதும், அப்படியும் முடியாவிட்டால் வழக்குத் தொடுப்பதுமான நிலையையே இங்கே காண்கிறோம்.

இந்த உண்மையை வைத்துப் பார்க்கும்போது நமக்கு பல உண்மைகள் விளங்குகின்றன.

ஒன்று: மேற் சொன்ன இதிகாசங்களை எழுதியவர்களுடைய அறிவுக் கதிகமாக மற்றொருவனுடைய அறிவு தெரியக் கூடாதென்பது.

இரண்டு: பழமை செத்தால் அந்த கல்லறை மேல் பூத்து வரும் புதுமையால் பூதளம் புதியதோர் சமூக அமைப்பைக் கைக் கொள்ளும் என்பது.

மூன்று: இந்த நாட்டை ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் விட்டால், ஒரு சிலருக்கிருக்கும் உயர்வும் சோம்பேறி வாழ்க்கையும் போய்விடும் என்பது.

நான்கு: அறிவு விளக்கம் பெற்றால் ஆண்டவன் நிராகரிக்கப்படுவான் என்பது.

ஆகவே, மறுமலர்ச்சி எற்படாமலிருப்பதற்காகவே இதிகாசங்களைப் படிக்க மறுக்கும் இந்த நூற்றாண்டில், கம்பராமாயணத்தையும், பாரதத்தையும் கருத்துக்காக படிக்கா விட்டாலும் கலைக்காகவாவதுபடிக்கக் கூடாதா என்கின்றனர்.

ஆகவேதான் கலை எதற்கு என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வோம்.

கலை, கலைக்காகவா—கலை, மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காகவா–கலை, பல கருத்துக்களை அணிகலன்களாகக் கண்டு பிடித்துணர்வோர் உள்ளத்தை அளவும் சாதனமா—அல்லது சமூக மாறுதலைக் காட்டும் காலக் கண்ணாடியா–என்ற பகுதிகளை ஆராய்வோம்.

எப்படி நீரால் நீருக்கே நன்மையில்லையோ, எப்படி நிலத்தால் நிலத்துக்கே பயன் இல்லையோ அதைப் போலவே கலையால் கலைக்கே பயன் இல்லை!

நீரைக் கொண்டு நிலத்தைப் பயிர் செய்வதும், நீரில் குளித்து உடற் றாய்மை யடைவதும், நீரைக்குடித்து தாகவிடா



யைத் தீர்த்துக்கொள்வதும் நன்மையை பயப்பது என்பது மாத்திரமல்ல; இன்றியமையாதது என்ற ஆராய்ச்சியில் இறங்கும்போது, நீரும் நிலமும் தொடர்பு கொண்டாலன்றி எப்படி விளை பொருள்களைக் காண முடியாதோ, நீரும் உடலும் தொடர்பு கொண்டாலன்றி எப்படி உடலழுக்கைப் போக்கிக் கொள்ள முடியாதோ, நீரைக் குடித்தாலன்றி எப்படி தாகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாதோ, அதே போல் கலை மக்களுக்குப் பயன்படவில்லையானால் அதனால் கலைக்கு என்ன நன்மை?

பொதுவாகவே உலகத்தின் இயற்கை நியதி ஒன்றை ஒன்று தொட்டாலன்றி ஒரு விதப் பயனை, மாறுதலை, இன்பமை, இயற்கை சக்திகளை செயற்கையிலடைக்கும் தன்மையை ஏற்படுவதில்லை என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

எங்கேயோ காட்டில் நின்ற மரம், யாழின் உடலாகவும், நிலத்தின் அடிவாரத்தில் கிடைத்த இரும்பால் செய்த நரம்புகள் யாழின் தந்திகளாகவும் அமைத்து, அவைகளை நம் முடைய விரல்களால் தடவினாலன்றி நாதம் எழும்புவதில்லை. அந்த இன்பமான இசையை நாம் கேட்பதற்கு, மரம், இரும்பு, விரல்கள் ஆகிய மூன்றும் சேர்ந்து நமக்கு இன்பத்தை ஊட்டுகிறது. அதே போல் ஒரு கவிஞனுடைய கற்பனைகளை அவனே எழுதி, அவனே படித்து, அவனே அழித்து விட்டுப் போய் விட்டால் அதனால் மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படுவதில்லை அந்த கவிஞன் எழுதிய கவிதைகளை மக்கள் மன்றத்தின் முன் வைத்தாலன்றி, அது பெருமை நிறைந்த கவிதை என்றோ, சிறுமை நிறைந்த கவிதை என்றோ தீர்ப்பைப் பெறுவதில்லை. ஆகவே ஒன்றை யொன்று தொட்டாலன்றி பயன் காண முடியாதென்ற முடிவுக்கு வருகின்றோம்.

"மக்கள் மெய்த்தீண்ட லுடற்கின்பம்
சொற்கேட்டல் இன்பம்
செவிக்கு"

மக்களுடைய சொற்களைக் கேட்டால் செவிகளுக்கு மட்டுந்தான் இன்பம்; ஆனால் அவர்கள் உடலைத் தீண்டினால் உடலுக்கும் உள்ளத்திற்கும் இன்பம் என்றார் உலகப் பொது மறை தந்த பொய்யாப் பெருந்தகை வள்ளுவர். ஆகவே, கலை மக்கள் உள்ளத்தைத் தொட்டாலன்றி பயனற்றதாய், காட்டில் காய்ந்த நிலாவாக, கற்பாறையில் விதைத்த விதையாக, கடலில் பெய்த மழையாகப் போய்விடும்.

ஒவ்வொரு நாடும் கலையை வளர்த்து வெளியுலகுக்குக் காட்டவில்லையானால், கண்ணடி அறையிலிருந்து பேசுகின்றவனுடைய பேச்சை வெளியே இருப்பவர்கள் கேட்க முடியாமல் போய், அவன் வாயசைப்பதை மட்டிலும் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்ற நிலையேதான் ஏற்படக்கூடும்.

ஆகவே, கலை பொதுமக்களுக்கு மாத்திரம் பயன் படவில்லை. அரசர்களுக்கும், அவர்கள் ஆண்ட காலத்துக்கும், அவர்கள் வகுத்திருந்த அரசியல் முறைகளுக்கும் பயன் பட்டிருக்கிறது. உதய கால கவிஞர்கள் முதல் இன்றைய புரட்சிக் கவிஞர்கள் வரை, ஓவியப் புலவர்கள, சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள் ஆகியோரனைவருக்கும் மிகவும் பயன் பட்டிருக்கிறது கலை. ஒரு நாடு வீழ்வதற்கும், வாழ்வதற்கும் அந்நாட்டின் கலையே பயன்பட்டிருக்கிறது.

மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் பலவற்றினுள் ஒரே ஒரு நாடகம் இருந்தாலும், நாங்கள் எங்கள் நாகரீகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேம் என்று ஆங்கிலப் பெருமக்கள் சொல்வதும், தத்துவ ஞானி சாக்ரடீஸ் தந்த அறிய கொள்கைகள் அகிலத்தில் உயிரோடிருக்கும் வரை கிரேக்கத்தின் கீர்த்தி குன்றாது என்று ஏதன்ஸ் நாட்டார் எக்காளமிடுவதும், ரூஸோவின் ஜனநாயகக் கோட்பாடுகளும், வால்டேரின் எழுதுகோல் தந்த தன்மைமிக்கருத்துக்களும் இருக்கும் வரை ஒரு முடியரசாட்சியை தோன்ற முடியாது என்று பிரான்சு மக்கள் பெருமைப் படுவதும், அட்லாண்டிக் மாகடலும், அமெரிக்க நாடும் இருக்கும்வரை கடற் தந்தை கொலம்பஸ் பெயர் மறையாது என்று ஸ்பெயின் நாட்டு மக்கள் பூரிப்படைவதும், கங்கைக் கரையும் மனுநீதியும் இருக்கும் வரை எங்கள் வளம் குன்றாது என்று ஆரியர்கள் அகங்களிப்பதும், காவிரியின் வற்றாத நீர்வளமும், வள்ளுவன் அளித்த குறளும், வேறு எம்மொழியின் படையெடுப்பாலும் அழியாத தமிழ்மொழியும் இருக்கும் வரை தமிழர்கள் மேன்மை குன்றாது என தமிழ் மக்கள் தன்னம்பிக்கை கொள்வதும், கண்டியும் கதிர்காமமும் தொன்னூறு மன்னர்கள் வழி வழியே ஆண்ட அனுராதபுரமும் இருக்கும்வரை சிங்களதின் செல்வாக்குக் குறையாது என்று செப்புவதும் எதனால்? அவரவர்கள் முன்னோர்கள்—கண்டதை—கேட்டதை செய்ததை கலையுருவில் நமக்குக் காட்டியதாலன்றோ! கலை அழியாதிருக்க கல்லிலும், கட்டையிலும், மலையிலும் குகையிலும் குடைந்து வைத்தது எதனால்? மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்தாலல்லவா!

ஏன், ஒரு காலத்தில் கலையின் சின்னமாகவே கோயில்கள் விளங்கின என்கிறார்கள். ஆனால் அது இன்று கலைக்கு இருப்பிடமாயிருப்பதற்கு பதில் கவலைக்கு இருப்பிடமாய், காமக் களியாட்டங்களுக்கு இருப்பிடமாய், திருடர்கள், நயவஞ்சகர்கள், பொய்கூறுகிறவர்கள், புறங்கூறுபவர்கள் ஆகியோருக்குப் புகலிடமாயிருக்கின்றது.

கலை பொதுவானது. எந்தக் கலையையும் யாரும் எந்த நாட்டாரும் ரசிக்க வேண்டுமென்ற

நோக்கத்தாலேயே இதுவரை அது பரிமாறிக் கொள்ளப் பட்டிருக்கிறது. குறள் தமிழர்களுக்கு மட்டும் சொந்தமாயில்லாமல் பல மொழிகளிலே மொழி பெயர்த்திருப்பதற்குக் காரணம் மற்ற நாட்டார்க்கு அதன்மேலிருந்த ஆர்வத்தைக் காட்டுகின்ற தன்றோ! அதே போல் கலை மக்களுக்கு பொதுவாக பயன்படுகிற ஒரே காரணத்தால் உலகம் ஒரு நாளில் எவ்வளவு வேகமாகச் சுற்றுமோ அதைவிட வேகமாக உலகத்தை சுற்றிக் கொண்டிருக்கின்றது.

இந்தியாவில் எங்கேயோ ஒரு மூலையில் ஒலிபரப்பப் படுகிற கலையை அதே நேரத்தில் சிங்களத்தில் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இங்கிலாந்தில் பேசப்படுகின்ற அரசியல் கலையை அமெரிக்காவிலும், அமெரிக்காவில் பேசப்படுகிற பொருளியல் கலையை ஜெர்மனியிலும், ஜெர்மனியில் பேசப்படுகிற இராணுவக் கலையை ஜப்பானிலும், ஜப்பானில் பேசப்படுகிற தொழிலாதாரக் கலையை சீனத்திலும், சீனத்தில் பேசப்படுகிற சமூகக் கலையை ஜெகமெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது எதைக் காட்டுகிறது? கலை கலைக்காகவே என்பதையா?

கலை, கருத்திலிருந்து புறப்பட்டு கல்லில் புகுந்து கட்டையில் குடியேறி, கடலில் மிதந்து, கம்பியில் நுழைந்து, காற்றில் கலந்து, அணுக்கருவைத் தொட்டு, அணுவுக் கணுவைத் தாவி, இசையாய் ஆராய வெளியெங்கும் பிரயாணம் செய்துகொண்டிருக்கின்றது.

கலையை யாரும் திரும்பிப் பார்க்காமல், கலை கலைக்காகவே இருக்கட்டும்; அதற்கும் நமக்கும் என்ன தொடர்பு—என்று மக்கள் அதை அனுவசியமாக விட்டுவிட்டிருந்தால், இன்று நாம் நாடகத்தை, ஓவியத்தை, காவியத்தை கலை என்று சொல்லியிருக்க மாட்டோம். ஆகவே மக்களுக்குப் பயன்படுகிற கலையை வெகு கவலையோடு வளர்க்க வேண்டியவர்களாகிறோம்.

தெளிந்த அறிவின், நாகரிகத்தின், பண்பாட்டின், பழக்க வழக்கத்தின் அடிப்படை கலைதான். ஆகவே கலை மக்களுக்காகவேயன்றி கலை கலைக்காக அல்ல!

*

பொய்யுரைத்த கலீலியோ!

விஞ்ஞானத்தின் அரிச்சுவடி அறிந்தோரும் கலீலியோவை நன்கு அறிவர்!

கலீலியோ குடுகுடு கிழவராக இருந்தபோது குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி விசாரிக்கப் பட்டிருக்கிறார்.

சாட்டப்பட்ட குற்றமோ நூதனமானது. அவையாவன; ஒன்று—உலகம் உருண்டை என்று அவர் கூறியது; இரண்டு — சூரியன் நிலையாக இருப்பதாகவும் பூமிதான் சூரியனைச் சுற்றி வருவதாகவும் அவர் கண்டறிந்த உண்மை. இவ்விரண்டு கருத்துக்களும் பைபிளில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு முரண்பாடாக இருந்ததுதான் குற்றம்!



குற்றம் சாட்டியவர்கள் ரோம் நகரப் பாதிரியார்கள். வழக்கை விசாரணை செய்து தீர்ப்பளிக்க நியமிக்கப்பட்ட நீதிபதிகளும் அவர்களே! பின், தீர்ப்பு எப்படியிருக்கும்?

அவர்கள் ஒரு நிபந்தனை விதித்தனர், பைபிளின் மீது ஆணையிட்டு, மேற்கூறிய உண்மைகளை அவர் மறுத்து விட்டால், அவரை விடுதலை செய்து விடுவதாக. இல்லாவிட்டால் அவர் மரணத்தை ஏற்க வேண்டும்!


கலீலியோ உயிரைத் துறப்பதை விட உண்மையை நிலைநாட்டுவார் என்றுதான் வழக்கு மன்றத்தில் கூடியிருந்த அவருடைய மாணாக்கர்கள் எதிர்பார்த்தனர்!

ஆனால், கலீலியோவோ பைபிளின்மீது ஆணையிட்டு, உலகம் தட்டைதான், சூரியன்தான் பூமியைச் சுற்றி வருகிறது என்று ஒப்புக் கொண்டு விடுதலை பெற்றார்!

அவர் வெளியே வந்தவுடன் 'கோழைத்தனம்' என்று அவருடைய மாணாக்கர்கள் சிறினர். ஆனால் சிரித்துக்கொண்டே கலீலியோ சொன்னார்: "உங்களையும் என்னையும் பொறுத்தவரையில் உலகம் உருண்டைதான்! பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது. உண்மையைக் காணப் பயப்படும்முட்டாள்களுக்கு எப்பொழுதுமே உலகம் தட்டைதான்! நம்பமறுக்கும் ஐந்தாறு முட்டாள்களுக்காக, உண்மைகளைக் கண்டு,இயற்கையின் ரகசியங்களை அறிந்து கொல்லும் வாய்ப்பினை இழந்து நான் சாக வேண்டுமா?"

அவருடைய மாணாக்கர்கள் வெட்கித் தலை குனிந்தனர். ஆம், பாதிரிகளின் மடமைக்குக் கலீலியோ அன்று பலியாகியிருந்தால், அவர் பிறகு கண்ட எத்தனையோ உண்மைகள் நமக்குக் கிடைக்காமலே போயிருக்கும்!

போலிச் சோழர்கள்



தலைப்பைப் பார்த்ததும் வியப்புறுவீர்கள். ஆம், வியப்பைத் தரும் தலைப்புத்தான். தமது பழமையின் பெருமையை மறந்த இக்காலத் தமிழர்க்கு இத்தலைப்பு வியப்பைத் தருவதில் வியப்பொன்று மில்லை. தமிழகத்தில் அரசியல் முறை ஏற்பட்டதிலிருந்து, தமிழ் நாட்டின் குணபுலத்தைச் சீரும் சிறப்புடன் ஆண்டு வந்த, 'வாண் புகழ் மூவர்' என ஆசிரியர் தொல்காப்பியரால் சிறப்பித்துக் கூறப்பட்ட முடியுடை மூவேந்தருள் ஒருவரான செம்பியர் மரபினரா போலிச் சோழர்? தமிழர் பெருமை யறியாது, தமிழ் நாட்டின் மேல் படையெடுத்து வந்த மோரியராகிய வடவர் வெரிஇ வெங்கிட்டோடும்படி துரத்தியடித்த செருப்பாழி வென்ற இளஞ் சேட் சென்னி வழி வந்தோரா போலிச் சோழர்?—தமிழர் பெருமை கண்டு வடவர் அஞ்சும்படி பனி மலையில் புலி பொறித்த கரிகாலன் மரபினரா போலிச் சோழர்?—என்று வியப்போடு அயிர்ப்பும் கொள்ளத்தான் செய்யும் இத் தலைப்பு! இங்ஙனம் தமிழர் தங்ஙனம் மறந்தனர் பாவம்! அம்மறதியால் எழுந்ததே இத் தலைப்பு.

1070-ஆம் ஆண்டு, ஐந்தாம் மாத, ம்ஒருநாள் இரவு பத்து மணி இருக்கும். கங்கைகொண்ட சோழபுரத்தில், தன து விடுதியில், குலோத்துங்கன் ஏனை ஒருவகை முக வாட்டத்துடன் தனியாக உட்கார்ந்திருந்தான். அவன் வாழ்க்கையில் வெறுப்புத் தட்டியவன்போல் அவ்வளவு கவலையுடன் காணப்பட்டான். அவன் பித்தன்போல் வாய்க்குள் என்னென்னவோ முணுகிக் கொண்டிருந்தான். அப்போது ஒருவன் அங்கு வந்தான்.

''கருணாகரா! ஏன் இவ்வளவு நேரம்? உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டே இருந்து விட்டேன்; இன்னும் சாப்பிடக்கூட இல்லை. குருதேவர் என்ன சொன்னார்? மதுராந்தகன் வரவில்லை?''

''இளவரசே! குருதேவரே இங்கு வருகிறார்''

''அவரே இங்கு வருகிறாரா?''

''ஆம், மதுராந்தகன் அவருடன் வருகிறான். தமது வருகையை உனக்குத் தெரிவிக்கும்படி என்னை முன்னர் அனுப்பினர். ஏன் ஒரு வகையாய்.....?''

''ஒன்றுமில்லை. நான் இக்கங்கை கொண்ட சோழபுரத்திலேயே பிறந்தேன்; பிறந்ததிலிருந்து இங்கேயேதான் வளர்ந்து வருகின்றேன்; சோழ நாட்டு இளவரசன் போலவே இருந்து வருகிறேன். யாதொரு குறையும் இல்லை. எனினும், என் பாட்டனார் கால முதல் சோழர்கள் அருளாலேயே வாழ்ந்து வருகிறோம். வேங்கி நாடோ சோழர்க்குச் சொந்தமானது. அச் சோழர் கீழ்ச் சிற்றரசர்களாகத்தான் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். இத் தன் மானமற்ற அடிமை வாழ்வுதான் என் மனத்தை வாட்டுகிறது. நாம் கட்டிய மனக் கோட்டை இடிந்து தகர்ந்து விடும்போல் இருக்கிறது''

''இளவரசே! அக் குறைப்பை போக்கத்தானே இன்று கூடுகிறோம்! நம் குருதேவர் இருக்கையில் நமக்கு என் குறை? நாம் கட்டிய மனக் கோட்டையை அவர் ஒரு போதும் அழிந்தொழிந்து போக விடமாட்டார். அவரும் சேர்ந்து கட்டினதுதானே அது?''

''இல்லைகருணாகரா! காரியம் வேறுவகையாகப் போய் விட்டது. முதலில், என் காதற் கனியை-என் உயிரினும் பெரிதாக எண்ணி வரும் என் கண்மணி மதுராந்தகியை—எனக்குக் கொடுப்பதில்லையாம். எனது குலப்பகைவன் விக்கிரமாதித்தன் இல்லை, அவன் தம்பி சயசிம்மனுக்குக் கொடுக்கப் போகிறானும் மடயன்! அதன்பின் எனக்கு இங்கு என்ன வேலை? அப்புறம் நானெங்கே சோழ நாட்டுக்கு அரசனாவது? இரண்டாவது, எனது அம்மான் இறந்த



திலிருந்து நான் இங்கு இருப்பதையே அவன் விரும்பவில்லையாம். மதுராந்தகி சொன்னாள். இன்று அதிராசேந்திரன் பார்த்து வெளியில் நடவென்றால் என் நிலை என்னவது?''

''இளவரசே! அவ்வளவு நெஞ்சத் துணிவு அவனுக்கு ஒருபோதும் வராது. உன்னைச் சோழப் பேரரசனாக்குவது நம் குருதேவரின் கடமையாகும். அதற்காகவே அவர் உயிர் வாழ்கிறார். நானும் என் கடமையைச் செய்து வருகிறேன். மதுராந்தகனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இதுபற்றி நீ சிறிதும் ஐயுற வேண்டியதில்லை.''

குரு தேவரும் மதுராந்தகனும் வர, இருவரும் எழுந்து குருதேவரை வணங்கினர்.

குலோத்துங்கன் தன் எண்ணத்தை எடுத்துரைத்தான். அவர்,

''குலோத்துங்க! அது பற்றி நீ சிறிதும் கவலைப்படாதே. உன்னைச் சோழநாட்டுக்கு அரசனாக்கா விட்டால் என் பெயர் ஈசான சிவனா? சோழ நாடென்ன? தமிழக முழுமைக்கும் நீதானே தலைவன்! ஆரியச் சூழ்ச்சிக்கு மேற்பட்டதும் ஒன்றுண்டோ? எத்தனையோ தமிழ் முடி மன்னர்களைத் தம் அடிவருடச் செய்துள்ளனர் நம் முன்னோர். அன்னார் வழியில் வந்தவனல்லனோ நான்? ஆரியத்தை எதிர்த்த இரணியன், இரணியாக்கன், மாவலி, சூரபதுமன், நரகாசுரன் முதலிய பன்னூற்றுக் கணக்கான தமிழர் தலைவர்களை ஒழித்துக் கட்டி, அன்னார்க்கு அரக்கர், அசுரர் எனப் பெயர் சூட்டி, தமிழர்களே அவர்களைக் கொடியர் என்று வெறுக்கும்படி செய்ய வில்லையா? இராவணன் முதலிய தமிழர் தலைவர்கள் வெறுத்தழித்த கொலை வேள்வியை, அவர்கள் வழிவந்த தமிழரசர்கள் விரும்பிச் செய்து, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற சிறப்புப் பெயருடன் விளங்கும்படி செய்ய வில்லையா? தசரத ராம



னைக் கொண்டே ஆரிய ஆட்சியைத் தமிழகத்தில் நிலைநாட்ட முயன்றனர், அகத்தியர் முதலிய நம் முன்னோர். ஆனால் அது கைகூடாமற் போயிற்று. நமது முன்னோர்கள் அரும்பாடுபட்டுப் பயிர் செய்த ஆரிய நச்சு மரங்கள் தழைத்துப் பயன்தர வொட்டாமல் விழிப்புள்ள தமிழ்த் தலைவர்கள் அவ்வப் போது வெட்டி யெறிந்து வந்தனர். இனி அம்மரங்களை வெட்டாமலும், மேலும் உள்ள ஆரிய நச்சு மரம் செடி கொடிகளனைத்தையும் பயிர் செய்து, பயன்தரும்படியும் பாதுகாக்க, தமிழகத்தில் ஆரிய ஆட்சியை ஏற்படுத்தவே நான் உயிர் வாழ்ந்து வருகின்றேன். அதற்கேற்ற நல் வேளையும் நெருங்கி விட்டது.

''அரசிளங் குமர! சேர சோழ பாண்டியராகிய செந்தமிழ் வேந்தர் மூவரும் அன்று பனிமலையில் புலி விற் கெண்டை பொறித்து நம் முன்னோர்களை இழிவு படுத்திய செயலை நினைக்க நினைக்க என் நெஞ்சம் குமுறுகிறது. நல்ல குருதியோட்டமுள்ள எந்த ஒரு ஆரியன் நெஞ்சமும் குமுறத்தான் செய்யும். அன்று சுனக விசயர் முடித்தலையில் கண்ணகியின் படிமக்கல் ஏற்றிபகொடுமையை நினைத்துப் பார். ஏன், உன பாட்டனைப பலவாண்டுகள் சிறையிலடைத்துச் சிறுமைப்படுத்தவில்லையா? இவற்றிற்கெல்லாம் பழிக்குப் பழி வாங்கி நமது இன இழிவைப் போக்க வேண்டாமா? சோழர்கள் தாய் வழிச் சொந்தம் என்று எண்ணுதே. விக்கிரமாதித்தன எனன அயலானு? இதற்கு ஒரே வழி உன்னைத் தமிழ்நாட்டின் தனித் தலைவனுக்குவதே!''

''குருதேவ! உய்ந்தேன். தாங்களிருக்க எனக்கு என்ன குறை?''

''ஆரியச் செல்வ! எத்தனையோ மறத் தமிழர்களை எளிதில் ஒழித்துக் கட்டிய அவ்வாரிய மேலோர் வழிவந்த எனக்கு இந்த அதிராசேந்திரனை ஒழித்துக் கட்டுவதா மலை? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து விட்டேன். அவனுக்குப் பிறகு மதுராந்தகியை உனக்குக் கொடுக்க மறுப்பவர் யாவர்? அவள் உனது உடைமையானால் சோழர் முடி உன் காலடியில் வந்து விழுமன்றே?

''அதிரா சேந்திரன் இக் கொடிய நோயினின்றும் இனித் தப்ப முடியாது. இந்நோய் தீரக் கூகூர் இறைவன் திருமுன் தேவாரம் ஓத ஏற்பாடு செய்துள்ளானும். இரவு பகல் எந்நேரமும் ஓதினாலும் கூகூர் இறைவனால் இனி அவனைக் காப்பாற்ற முடியாது; அவ்வளவு கொடிய நோய்! நான் ஏற்பாடு செய்திருக்கும் உள்நாட்டுக் குழப்பம், அவன் விரைவில் ஒழிவதற்கும், நீ சோழப் பேரரசனவதற்குமே யாகும். கருணாகரனும் மதுராந்தகனும் அதற்கு வேண்டிய வெல்லாம் செய்து வருகிறார்கள். ஆகையால் நீ கவலைபின்றி இரு. நாங்கள் வருகிறோம்''

முதல் இராசராசன் காலத்திலிருந்து வடநாட்டிலிருந்து ஓர் ஆரியப் பிராமணனை அழைத்து வந்து அரச குருவாக்கிக் கொள்வதைச் சோழர்கள் வழக்கமாகக் கொண்டனர். அவ்வாறு சோழ அரச குருவானவரே ஈசான சிவனர். ஆனால், யாருக்குக் குருவானாரோ அம்மரபையே ஒழித்துக் கட்டித தமது இனத்தைத் தமிழ்நாட்டுக்குத் தலைமையாகத் தலைப்பட்டார். தமிழ்நாட்டில் ஆரியரைக் குடியேற்றுவதையும் ஆரியத்தை விதைப்பதையுமே தமது வாழ்க்கைப் பயனாகக் கொண்டவர். தமிழ் நாட்டை ஆரிய மயமாக்கக் காப்புக் கட்டிக் கொண்டு வேலை செய்தவர் என்று சுருக்கமாகக் கூறலாம்:

கருணாகரன் ஆரிய இனத்தைச் சேர்ந்த பல்லவ மரபினன்; கலிங்கப் போர் வென்ற கருணாகரத் தொண்டைமான் இவனே. மதுராந்தகனும் ஆரிய இனத்தினனே; நல்லூர் எனனும் ஊரினன்; குலோத்துங்கனால் 'பிரமாதி ராசன்' என்னும் பட்டம் கொடுத்துப் பெருமைப் படுத்தப் பட்டவன். இவாகளும் இன்னும் சில இரண்டகர்களும் சேர்ந்தே சோழவரசை ஒழிக்கச் சூழ்ச்சி செய்து வந்தனர். முடிவில் வெற்றியும் பெற்றனர்.

பம்பாய் மாநிலத்தின் தென் பகுதியில் உள்ள வாதாவியைத் தலைநகராகக் கொண்ட இரட்டபாடி நாட்டைச் சாளுக்கியர் என்போர் ஆண்டு வந்தனர். இவர் வட நாட்டிலிருந்து புதிதாகக் குடியேறிய ஆரிய வகுப்பினர். அவருள் இரண்டாம் புலிகேசியின் தம்பியான குப்த விஷ்ணு வர்த்தனன் என்பான், கிருஷ்ணை கோதாவிரியாறு கடகிடையே கீழ்க்கடலை யடுத்திருந்த வேங்கி நாட்டை வென்று அதற்கரசனனன். இவன் வழிந்தோர் கீழைச் சாளுக்கியர் எனவும், வாதாவிச் சாளுக்கியர் மேலைச் சாளுக்கியர் எனவும் பெயர் பெறறனர்.

இச் சாளுக்கியர்களுக்கும் சோழர்க்கும் அடிக்கடி போர் நடந்து வந்தது. 'மத்தளத்துக்கு இருபுறம் இடி' என்பதுபோல, அவ்விருவகைச் சாளுக்கியர்களும் சோழ நாட்டை இருமுனையிலும் தாக்கி வந்தனர். முதல் இராசராசச் சோழன் வேங்கியை வென்று விமலாதித்தன் என்னும் வேங்கி வேந்தனைப் பிடித்து வந்து சிறை வைத்தான். அவன் பல

ஆண்டுகள் சிறையிருந்தான். பின், இராசராசன் தன் மகள் குந்தவையை அவனுக்குக் கொடுத்து வேங்கியை ஆளச் செய்தான். இராசராசன் மகனுகிய கங்கை கொண்ட சோழன் என்னும் இராசேந்திர சோழன் தன் மகள் அம்மங்கை தேவி என்பாளை, தன் தங்கை குந்தவை—விமலாதித்தன் மகன் இராசராச நரேந்திரன் என்பானுக்குக் கொடுத்தான். இவ் வம்மங்கையின் மகனே மேற்கூறிய குலோத்துங்கன் என்பான். இவ்வாறு சோழர்கள் கீழைச் சாளுக்கியருக்குப் பெண் கொடுத்துத் தம் நாட்டின் ஒரு பக்கத்து இடியைத் தவிர்த்துக் கொண்டனர்.

கங்கை கொண்ட சோழன் மக்களில் முதல் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரனுக்குப் பின், வீரராசேந்திரன் ஆட்சிக்கு வந்தான். இவன் தன் மகளை மேலைச் சாளுக்கிய ஆறும் விக்கிரமாதித்தனுக்குக்கொடுத்து மற்றொரு புற இடியையும் நீக்கிக் கொண்டான்.

தமிழ் நாட்டில் அரசியல் முறை என்று ஏற்பட்டதோ, அன்று தொட்டுத் தமிழகத்தைச் சேர சோழ பாண்டியர் என்னும் செந்தமிழ் வேந்தர் மரபினரே ஆண்டு வந்தனர். இவர்கள் ஒருவர்க் கொருவர் ஒவ்வொரு காலில் பகை கொண்டு பொருதனரேனும், ஒருவர் மற்றவர் நாட்டைப் பிடித்து ஆளாமல் தத்தம் நாடுகளையே ஆண்டு வந்தனர். ஆனால், அத் தமிழ் மரபுக்கு மாறுக, முதல் இராசராசன், முதல் விரராசேந்திரன் ஈறுகவுள்ள சோழ மன்னர்கள், சேர பாண்டியரை வென்று தமிழ் நாடு முழுவதையும் தாங்களே ஆண்டு வந்தனர். 'வண் புகழ் மூவர், முடியுடைய மூவேந்தர்' என்ற முறையை இவர்கள் அழித்தனர். அச் சோழ மன்னர்கள் செய்த அத் தகாச் செயலே தமிழ் நாட்டில் தமிழ் அரச மரபு ஒழிந்ததற்குக் காரணமாகும்.

வீர ராசேந்திரனுக்கு அதி ராசேந்திரன என்ற ஒரே மகன். 1070-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வீரராசேந்திரன் இறக்கவே, அதிராசேந்திரன் சோழப் பேரரசனுனன். அவனுக்குப் பிள்ளை யில்லாததால், அவனை விரைவில் ஒழித்துச் சோழப் பேரரசைப் பெறவே குலோத்துங்கன் முதலிய நால்வரும் கூடிப் பேசினர்.

அம்மங்கை தேவி கருப்ப முற்றதிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திலேயே இருந்து வந்தாள். குலோத்துங்கன் சோழ அரச குமரன் போலவே வளர்ந்து வந்தான். வீரராசேந்திரன் குலோத்துங்கனை இளவரச நிலையிலேயே வளர்த்து வந்தான். அதாவது, தன் மகன் போலவே வளர்ந்து வந்தான் எனலாம். தனது அண்ணன் இரண்டாம் இராசேந்திரன் மகள் மதுராந்தகியைக் குலோத்துங்கனுக்குக் கொடுக்க முடிவு செய்திருந்தான். மதுராந்தகியும் குலோத்துங்கனும் காதலர்கள் போலவே பழகி வந்தனர். அதிராசேந்திரனும் இதை மறுக்கவில்லை.


ஆனால், தன்னை ஒழித்துச் சோழப் பேரரசனைச் சூழ்ச்சி செய்வதை அறிந்தபின் அவன் மதுராந்தகியைக் குலோத்துங்கனுக்குக் கொடுக்க விரும்பாததோடு, அவன் சோழ நாட்டில் இருப்பதையே வெறுத்தான். தன் மைத்துனன் தம்பிபாகிய சயசிம்மனுக்கு மதுராந்தகியைக் கொடுத்துத் தனக்கு வரவிருக்கும் கேட்டினைத் தடுக்க எண்ணினன். இது இயல்புதானே? ஆனால், கொடிய நோயால் வருந்திய அதிராசேந்திரன் உள் நாட்டுக் குழப்பத்தால் உண்டான கவலையால் உயிர் துறந்தான். குலோத்துங்கன் மதுராந்தகியை மணந்து கொண்டு சோழப் பேரரசனுனன். நாட்டுக்கு அரசனில்லாக் குறையையும், குலோத்துங்கன் இளவரசன் போலவே இருந்து வந்த பழக்கத்தையும் எண்ணி, அரசியல் அதிகாரிகளும் பெருமக்களும் அவன் சோழப் பேரரசனுகை உடன்பட்டனர் போலும்! 9-6-1070-உடன் சோழ நாட்டில் தமிழ் அரச மரபு ஒழிந்து ஆரிய அரச மரபு ஏற்பட்டது.

மதுராந்தகிதான் சோழ அரசுக் குரியவள். அவளுக்குத் தான் முடிசூட்டியிருக்கவேண்டும். அதுதான் அரசியல் முறை. அல்லி, மீனாட்சி முதலிய தமிழரசியரும், விக்டோரியா, எலிசபெத்து முதலிய ஆங்கில அரசியரும் நாடாண்டு வந்ததையும், அவர்கள் கணவன்மார் புதுமாப்பிள்ளைபோல இருந்து வந்ததையும் அறிக. ஆனால், அரசியல் முறைக்கு மாறுக, சூழ்ச்சித் திறத்தினால், அரசுக்குரிய மதுராந்தகியிருக்கக் குலோத்துங்கன் சோழப் பேரரசனுனன்.

1062-ல் குலோத்துங்கனது தந்தை இறந்தான். குலோத்துங்கன் வேங்கி வேந்தனுக முடிசூட்டப் பெற்றான். ஆனால், அவன் வேங்கியை ஆளவில்லை. சோழப் பேரரசனுகச் சூழ்ச்சி செய்து கொண்டு கங்கை கொண்ட சோழபுரத்திலேயே இருந்து வந்தான். வேங்கியை அவன் சிற்றப்பன் விசயாதித்தன் என்பவன் ஆண்டு வந்தான். முடிவில்வெற்றியும் பெற்றான்.

குலோத்துங்கனுக்குப் பிறகு, விக்கிரமன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம்

இராசராசன், இரண்டாம் இராஜாதிராசன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராசராசன், மூன்றும் இராசேந்திரன் ஆகிய ஆரிய அரசர்கள் 209 ஆண்டுகள் (070-1279) தமிழ் நாட்டில் ஆரிய நச்சு மரம் செடிகள் நன்கு வளர்ந்து பயன்தரப் பாதுகாப்பளித்து வந்தனர். அம் மரங்களில் ஒன்றே இராமாயணம்என்பது.



சரித்திரச் சாலையில்
நிறுத்திய மைல் கல்!
(வேலூர் கோட்டை)

புகைப் படம் : மதருஸ் போட்டோ ஹவுஸ், வேலூர்

பாரதமும் இராமாயணமும் ஆரியப் பாதுகாப்பு அரண்கள். சங்கப் புலவரிலொருவரான டெருந்தேவனார் என்பவர் பாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தனர். ஆனால், இராமாயணமோ கி. பி. 13-ம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் தலைகாட்ட முடியவில்லை. முதற் குலோத்துங்கன் காலம் முதல் மூன்றாங் குலோத்துங்கன் காலம்வரை (1070–1200) 130 ஆண்டுகள் ஆரிய ஆட்சியின் கீழ் அரும்பாடுபட்ட பின்னரே, மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் தான் தமிழில் மொழி பெயர்க்க முடிந்தது. காரணம், இராமாயணம் தமிழரின் பகைக்கதை; தமிழரால் அறவே வெறுக்கப் பட்டது. மூன்றாங் குலோத்துங்கன் குருவான ஈசுவர சிவனின் ஆரிய வெறியாலும், குலோத்துங்கனின் அதிகார வெறியாலுமே அது தமிழில் மொழிபெயர்க்கப் பயன்பட்டது. ஆரிய ஆட்சி தமிழ் நாட்டில் ஏற்படாதிருந்திருக்குமானால் இராமாயணம் ஒருக்காலும் தமிழாக்கப்பட்டிருக்காது; தமிழ் இலக்கிய மரபு இந்நிலையை அடைந்திருக்காது; தமிழர் வாழ்வு இவ்வாறு தாழ்ந்திருக்காது.

இப்போது விளங்கிற்றா தலைப்பின் பொருள்? சோழர் வரலாறு எழுதியுள்ள எல்லா ஆசிரியர்களும் முதற் குலோத்துங்கன் முதல் மூன்றும் இராசேந்திரன் ஈறுகிய எண்மரையும் 'சோழர்' என்றே எழுதியுள்ளனர். இராசகேசரி, பரகேசரி என்று சோழர்களோடு இவர்களைத் தொடர்பு படுத்தியும் உள்ளனர். இவர்களைச் சோழர் ஆட்சியைப் பேராட்சியாக்கிய சோழர்கள் எனப் புகழ்ந்தும் உள்ளனர். அவ்வாறு எழுதியதன் காரணம் நமக்குவிளங்கவில்லை.

எழுத்துப் போலியும் இலக்கணப் போலியும் கண்டவர் தமிழர். 'முகம் - முகன்' என ஓரெழுத்து நின்றவிடத்து வேறொரெழுத்து நின்று பொருள் வேறுபடாதது எழுத்துப் போலி. இல்முன்-'முன்றில்' எனச் சொல்நிலை மாறி அதே பொருள் படுவது இலக்கணப் போலி. ஆனால், குலோத்துங்கன் முதலியோரைச் 'சோழர்' என்றதில் அத்தகைய பொருள் அமையவில்லை. பட்டல்லாததை - பட்டுப் போலப் பார்ப்பதற்கு இருப்பதைப் போலிப் பட்டு எனவும், முத்தல்லாததை - முத்தைப் போன்ற வடிவுடையதைப் போலி முத்து எனவும் கூறுவது போல, சோழரல்லாத அவர்களை-சோழ நாட்டை ஆண்டமையால்-போலிச் சோழர் எனலே பொருந்தும். போலிப் பட்டை பட்டெனல் எங்ஙனம் பொருந்தாதோ, அங்ஙனமே, போலிச் சோழரைச் சோழரெனலும் பொருந்தாது. இது வரலாற்று மரபுக்கு மாறானது.

சோழர் வரலாற்றாசிரியர்கள் இனியேனும், குலோத்துங்கன் முதலிய எண்மரையும் 'சோழர்' என்று எழுதியிருப்பதைப் போலிச் சோழர் என்று திருத்தி வெளியிட்டு வரலாற்று மரபைத் தூய்மைப் படுத்துவார்களாக.

★



தமிழ்ப் படத்தின் இன்றைய நிலையைப் பார்க்கும்போது மிகவும் பயங்கரமாகவே யிருக்கிறது. ஒருபுறம் பத்திரிகைக் காரர்களின் 'படத்தின் தரம் உயரவில்லை. உயரவில்லை' என்ற முணுமுணுப்பு; இன்னொருபுறம், 'நல்லபடங்களுக்கு அரசாங்கம் தங்கப் பதக்கம் பரிசளிக்கும்' என்ற ஆசை வார்த்தை; மற்றொருபுறம், 'ஜாக்ரதை! எங்களுக்குப் பிடிக்காத கதைகளை படமெடுக்காதே' (விளக்கம்; தனிப்பட்ட இவர்களுக்கு மட்டும்தான் பிடிக்காத கதைகள்!) குறுக்கும் நெடுக்குமாக வெட்டி சின்னாபின்னப்படுத்தி விடுவோம்' என்ற சென்ஸார் போர்டார்களின் எக்களிப்பு; 'என்னடா இது, கொடுத்த காசுக்கு சிறிதும் திருப்தி கிடைக்கவில்லையே' என்ற பொதுமக்களின் ஏமாற்றம்; இவ்வளவுக்கும் இடையில் தமிழ்ப் படம் பெரும் அளவுகு வளர்ந்து கொண்டே போகிறது ஒன்று—இரண்டா? வருடம் ஐம்பது அறுபது வீதம் வெளிவர ஆரம்பித்து விட்டனவே! அதாவது வாரம் ஒரு படம். (இதைக் கண்டு மகிழ்ச்சி யொருபுறம் இருந்தாலும், கூடவே பயமும் தொத்திக்கொள்கிறது.)

இவைகளைத் தாங்குமா தமிழ் நாடு—இல்லை இந்த முதலாளிகள்தான் தாங்குவார்களா? ஏதோ ஒன்றிரண்டு தயாரிப்பாளர்கள் தப்பித்துக் கொள்ளலாம். மற்றவர்கள் கதி? ஒரு வாரம் படம் ஓடினால் போதும் என்ற அளவில் பணத்தைச்செலவுசெய்து, படத் தயாரிப்பாளர்கள் படம் எடுத்து முடித்தால்தான் தப்பித்துக் கொள்ளமுடியும். அப்படி எடுத்து வெளியிடப்படும் படத்தின் தரம் உயர்ந்ததாக இருக்க முடியுமா? சிந்தனைக்குரிய காரியம். முக்கியமான தென்னாட்டுப் பெரும் பட முதலாளிகள் இந்தப் படங்களுக்குத் தாவிச்செல்லும் காரணமே தமிழ்ப் படங்கள் எங்கே தங்களுக்கு நஷ்டத்தை வீளைவித்து விடுமோ என்கிற பயம்தான். ஒருவேளை இந்தி மார்க்கெட்; பெரிய மார்க்கெட்; அதிக லாபம் கிடைக்கும் என்பதாகவும் இருக்கலாம்.


மற்ற தயாரிப்பாளர்கள் ஏதோ சிறிது பணம் சேர்த்து படமெடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். படமும் வளர்ந்து விடுகிறது. கூடவே சந்தேகமும் தலைகாட்ட ஆரம்பித்து விடுகிறது. எப்படி எடுத்தால் ஜனங்களுக்குப் பிடிக்கும்: படம் நன்றாக ஓடும்; என்றஉடனே முடிவும் கட்டிக் கொள்கிறார்கள். இது செய்தால்தான் ஜனங்களுக்குப் பிடிக்கும்; இது செய்தால் பிடிக்காது என்பதையுப்—முதலில், தங்களுக்குப் பிடிக்கிறதா இல்லையா என்பதை அறவே மறந்துவிட்டு, பொது ஜனங்களுக்குப் பிடிக்கிறதா இல்லையா என்ற சர்ச்சையில் இறங்கி விடுகிறார்கள்.

கலைஞன் தனக்குள் நிர்மானப் படுத்திக் கொள்ள வேண்டும், நல்லது கெட்டது எது என்பதை—பிடித்தமானது பிடித்தமில்லாதது எது என்பதை. பிறகு அதை அதற்குரிய நம்பிக்கையுடனும், உண்மையுடனும் வேலைசெய்து உருவகப்படுத்தி வெளியிடவேண்டும். அப்போது அவனுக்குக் கண்டிப்பாக வெற்றி கிடைத்தே தீரும். அப்படியின்றி அவனுக்குப் பிடிக்காதவைகளை ஜனங்களுக்குப் பிடிக்கும் என்ற காரணத்தைச் சொல்லி, தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டால், ஜனங்களும் அவனை ஏமாற்றி விடுகிறார்கள். ஏமாற்றம் அடைந்த பிறகு, 'எனக்கு இதில் கொஞ்சமும் இஷ்டமில்லை—ஜனங்களுக்குப் பிடித்தமானது என்று கருதி எடுத்தேன்; தோல்வியடைந்துவிட்டது. நானென்ன செய்வது?' இந்த ஏக்கக் குரல் சகஜமாக வெளிவரும் படமாக்குவோனிடமிருந்து. இது கலைஞன் தன் பலஹீனத்தை மறைக்க சமாதானத்தைத் தேடியலையும் முயற்சியே தவிர வேறல்ல.

ஒரு பழமைவிரும்பி, புராண இதிகாசங்களில் நம்பிக்கையுடைய ஒருவன் (இது தலைமுறை தலைமுறையாக வந்த கோளாறு) படமெடுக்க ஆரம்பிக்கிறான். அவனுக்குப் பிடித்தமானது புராணக்கதை. அதை அவன் முழு நம்பிக்கையுடன் கொண்ட கருப்பொருளை சிதைக்காது உண்மையுடன் படமெடுத்து வெளியிடும் போது (இதி



லுள்ள பெரிய குழப்பம் என்ன வென்றால், பழைய இதிகாசக் குப் பைகளை அப்படி அப்படியே முழுக்க முழுக்க உண்மையாக நம்புகிறவர்கள் பக்கா ஆஸ்தீ கர்களிடையேகூட இருப்பார் களா என்ற சந்தேகம்) பக்த சிரோன்மணிகள் அந்தப் படத் தைப் பார்த்து மகிழ்ச்சி யடை கிறார்கள். 'எப்படித்தான் எடுத் திருக்கிறான் பார்ப்போமே' என மற்றவர்களும் போகிறார்கள். ஏனென்றால் தனக்குப் பிடிக்கி றதோ இல்லையோ, ஆக்கியோன் அவனுக்குப் பிடித்தமானவை களை ஒழுங்காக, கவர்ச்சிக ரமானதாக எடுத்திருக்கிறானே என்று போய்ப் பார்த்து திருப்தி யடைந்து திரும்புகிறார்கள்.



புராணக் கதைகளில் நம்பிக் கை இல்லாதவன் புராணப் பட மெடுக்கும்போது, அதில் தவ றான சம்பவங்கள் அவன் எண் ணப்படி புகுத்தப் படுகின்றன. (இது அவனை அறியாமலேகூட இருக்கலாம்) அவனுக்கும் புரா ணத்துக்கும்தான் வெகு தூர மாயிற்றே! இந்தப் படத்தைப் பார்க்கவருகிறார்கள் பக்தர்கள். படத்திலுள்ள மாற்றங்கள் அவர்களது நம்பிக்கைக்கு குழப் பம் விளைவிக்கும்போது ஏமா ற்றம் அடைகிறார்கள். வெறுப் படைகிறார்கள். படம் பார்க் கச் செல்வதை நிறுத்திக் கொ ள்கிறார்கள். படம் தோல்வி யடைகிறது.

அதுபோலத்தான் முன்னேற் றக் கருத்துக்களைக் கொண்ட கதையொன்றை எடுக்க முன் வரும் அதில் நம்பிக்கையுடைய ஒருவன், அக் கருத்துக்களில் முழு நம்பிக்கையுடனும், வெளி யிட எண்ணும் கருப் பொருளை அதற்குரிய உண்மையுட னும் உருவகப்படுத்தி, படத் தை வெளியிடும்போது, படம் நல்லவிதமாக அமைகிறது. அதை விட்டுவிட்டு அதை ஆக் குவோன் ஜனங்களுக்கு இன் னவை பிடிக்காதென்று அவனே முதலில் முடிவு கட்டி, பிறகு தான் முடிவு கட்டிய சிற் சில அபிப்பிராயங்களை மாற்றி யமைத்து வெளியிடுகிறான். அதாவது அவனையும் ஏமாற்றிக் கொண்டு மக்களையும் ஏமாற்று வதாகநினைத்துக்கொண்டு, அவ னது கருத்துக்களுக்கு உடன் பட்டவர்களும் இந்தப் படத் தைப் பார்த்து ஏமாந்து அதி ருப்தி அடைகிறார் கள். படம்தோல்வி அடைகிறது.

உடனே ஆரம்ப

இந்தி மார்க்கெட்டைப் பெரிதென எண்ணித் தாவும் பட முதலாளிகள்.....

மாகி விடுகிறது ஒரு புது சகாப்தம். ஏதோ நாலைந்து 'டப்பான் குத்து' பாட்டு, நடனம் என்ற பெயரால் ஒருசில கேலிக் கூத்தடிப்பு, காமிக் என்ற பெய ரால் அருவருப்படையும் வண் ணம் ஆண் பெண் கண்ணு மூச்சி விளையாட்டுகள்— இவை களை நிரப்பி ஒரு படம். இது தான் ஜனங்களுக்குப் பிடித்த மான படம்: இதைப் பார்த்து மக்கள் சகித்துக் கொள்ள வேண்டும்!

நல்ல கதைகளை எடுக்கவோ பயம்—(இல்லை; அதற்குரிய திற மையில்லாத தன்மைகூட இரு க்கலாம்) அந்த பயத்திலிருந்து பிறந்தவைகள்தான் இப்போது பத்திரிகைகளில் தினசரி காண ப்படும் புதுப் புது விளம்பரங் கள்! பழையபடி ராமாயண மகா பாரதக் கதைகள்! 'பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போ வார்—பதிவிரதைக் கின்னல் வரு ம். போகும்'' என்ற புரட்சிக்கவி ஞரின் பாடல்தான் இனிவுக்கு

வருகிறது. அவர் எழுதினதோ அனறு சினிமா ஆரம்ப காலத் தில். இன்று நாம் அந்த இடத் துக்கே திரும்பி வந்துவிட்டோ மா? இது மிகவும் பரிதாபப்பட வேண்டிய நிலையல்லவா? கதை களா இல்லை நாட்டில்? தினம் தினம் எவ்வளவு கதைகள் பத் திரிகைகளில், புத்தக வடிவில், வெளிவந்துகொண்டு இருக்கின் றன! இல்லை, தமிழ்நாடு என்ன சொர்க்க பூமியாகவா மாறிவிட்டது? மக்கள் எல்லாம் ஒரே சந்தோஷ மயக்கத்தில் மூழ்கிவிட்டார்கள்; எந்த வித உணர்ச்சி பாவங்களும் வெளி யிடக்கூடியசம்பவங்கள் நடை பெறவில்லை; அதனால் உள்ளத் தைத் தொடும் கதைகள் இவர் களிடையே இவர்களை வைத்து சிருஷ்டிக்க முடியாது; இது வ லோகத்திலும் அவதார புருஷர் களிடையிலும் நுழைந்தால் தான் உணர்ச்சி பாவங்களைக் கொட்டக் கூடிய சம்பவங்கள் நிறைந்த கதை கிடைக்கும்— என்று சொல்வதற்கு. உழைத் தும் உண்ண வகையற்றுக் கிடக்கும் ஏழை விவசாயி; அவன் உயிர்வாழ சமுதாயத்து டன் போராடும் போராட்டம்; வயிற்றுப் பாட்டுக்காக காலணு வுக்கு கற்பை விலைகூறும் சாலை யோர தமிழ்நாட்டுக் கண்ணகி களின் இன்றைய வரலாறு; ஆறுவது கணவன் கர்ணனுக் காக ஏங்கித் துடிக்கும் மாம்ப லத்து திரௌபதிகளின் மயக்க மொழிகள்; அது கண்டு உள்ள முருகும் தர்மப் பிரபுக்களின் அங்கலாய்ப்பு; குஷிக்காக பொழுது போக்குக்காக குடித் தருளும் மாம வீட்டு உல்லாசி யின் வெறியாட்டம்; வயிற்றுப் பசியை மறைக்க போதை யுண்டு மயங்கிக் கிடக்கும் பாதையோரக் கூலியின் குமு றல்—இதோ, கொடூரமான புய லால் (ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ 108 ராஜாஜி யின் பாஷையில் வேண்டுமா னாலும் சொல்லலாம், கடவுளின்

35606

ஈவிரக்கமற்ற செய்கையால்) தாக்குண்டு அவதிப்படும் தஞ்சை. ராமநாதபுர மாவட்டத்து மக்களின் சோகக்கதை;—இப்படி எவ்வளவோ சம்பவங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டு போக முடியுமே! இவைகளை சினிமாக் கதைகளுக்கு கருப்பொருளாக அமைக்க முடியாதா? கதைகளிலும், நாவல்களிலும், நாடகங்களிலும்தான் இவைகளை சொல்ல முடியுமா? சினிமாவில் எடுத்துச் சொன்னால் மக்கள் அவைகளைப் பார்க்க மாட்டார்களா? இச சம்பவங்களை வைத்து பின்னப்படும் நாவல்களையும் நாடகங்களையும் மக்கள் படித்து—பார்த்து முடிக்கும்போது சினிமாவை மட்டும் பார்த்து ரசிக்காமல் போய் விடுவார்களா?

சினிமா ஒரு புதிய கவர்ச்சி வர்ணமும் சுவரும் அவனுக்குக் கட்டுப்பாடுகளாயிருக்கின்றன. ஆகையினால் அவையில்லாமலே சுதந்திரம் எழுதவேண்டுமென்று நினைத்தால் எப்படியிருக்கும்? வர்ண ஜாலங்களினால்தான் ஓவியக் கலை சிறப்புப் பெறமுடியும்!

அதுபோல, சிற்பி தனது கற்களின் தன்மைகளையும், செதுக்கும் மரத்தின் தன்மைகளையும் கவனிக்கிறான். கவி, சொற்களின் ஓசை நயத்தையும், அடிகளின் அலங்கார அமைப்பையும் கவனிக்கிறான். இருந்தும் அவன்மீது திணிக்கப்பட்டிருக்கும் இந்தக் கட்டுப்பாடுகளே ஓர் கலைஞனுக்கு சம்பந்தமாகவும், சமானமாகவும் காட்சியளிக்கின்றன. அவைகள் அவனுடைய திறமையைப் பரிசோதிப்பவைகளாயும், மக்களுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பவைகளாகம் இருக்கின்றன. அவனுடைய செய்கைகளின் மதிப்பு அதாவது—தொழிலின் மதிப்பு. பாவங்களை வெளிப்படுத்தும் அவனுடைய கலையின் அழகினால் பெரிதுசெய்யப்பட்டு பிரகாசமடைந்து கொண்டே போகிறது. இப்படிக் கட்டுப்பாட்டுக்கும் தொழிலுக்கும் இடையே நடைபெறும் இந்தப் போராட்டத்தில் எல்லா கலைஞர்களுமே ஆனந்த மடைகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும், இது அவர்களுடைய சௌகரியத்துக்காகத்தான் என்பது! இதனால்தான் திறமைமிக்க எல்லா கலைஞர்களும், தாங்கள் தேர்ந்தெடுத்த கலாசாதனத்தை, அவர்களுக்கு முந்தியவர்கள் வகுத்துவிட்டுப் போன வரம்பை மீறி பெரிதுசெய்து, விரிவாக்கி வெற்றி பெற்று வருகிறார்கள். இவர்களால் அடிவானத்துக்கப்பால் மறைந்து கிடக்கும் புதுப் புது அழகுகள் எடுத்துக் காட்டப்பட்டு வருகின்றன. இந்தப் போராட்ட வாழ்வுகளின் முடிவு ஒன்றைச் சேர்ந்ததுதான் சமீபத்தில் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கும் சாந்தாராமின் ஜனக ஜனக் பாயல் பாஜே என்ற ஹிந்திப் படமும்.

நமது தமிழ் சினிமாக் கலையோ இனனும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது. ஆனாலும் மிகவும் குறுகிய காலத்தில் வேகமாகவே வளர்ந்து வந்திருக்கிறது. நாவலும் நாடகமும



"பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போவார்;
பதிவிரதைக் கின்னல் வரும்; போகும்..."

கரமான கலை. கதை மூலமாகவும் சம்பாஷணை மூலமாகவும் ஒரு விஷயத்தை விவரித்து, குறிப்பிட்ட கால வரம்புக்குள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி, அதைக் கண்டு களிப்போர் உணர்ந்து அனுபவிக்கும்படிச் செய்வதனால், சினிமாவும் நாவல் நாடகம் போன்ற கலைகளைச் சேர்ந்ததாகிறது. தனக்கே உரித்தான அதன் தனிப்பட்ட வெளிப்படுத்தும் சக்தியின் சௌகரியங்களினால் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி உணரும்படிச் செய்வதனால், சினிமா ஒரு புத்தம் புதிய கலை, தனித்தியங்கும் சுதந்திரமான கலை.

எல்லா கலைகளுமே அதனதனுடைய உருவங்களுக்கேற்ப இயற்கையாகவே தனித் தனித் தன்மைகளைப் பெற்றிருக்கின்றன. கலைஞனுக்கு—அதாவது இக் கலைகளை ஆக்குவோனுக்கு இந்தத் தன்மைகளே கட்டுப்பாடுகளாகவும் அமைந்திருக்கின்றன. ஒரு ஓவியன் இருக்கிறான்—வர்ணம் இல்லாது அவனால் சித்திரம் வரையமுடியாது.

இலக்கியமுந்தான் இதற்குப் போட்டி ஸ்தானத்தில் உட்கார்ந்திருப்பவை. அவைகளுக்கு ஈடாக, சமமாக, சினிமாவும் கொண்டுவரப்பட வேண்டும். அதற்காக சினிமா தன்னுடைய முறைகளை வளர்த்துத்தான் தீர வேண்டும்.

சினிமா பார்க்காதவர்களோ, பார்க்க விரும்பாதவர்களோ சமுதாயத்தில் இன்று இல்லையென்றே சொல்லலாம். புதுப் படம் எப்போது வரும்; எப்போது வரும்—என்று காத்துக் கொண்டிருப்பவர் கணக்கற்றவர்கள். இவர்களுக்காக படத்தை உருவாக்குகிறான் சினிமா கலைஞன். இதைவிட அவனுக்கு வேறு நல்ல காரணம் என்ன வேண்டும், உற்சாகமாக அவன்

வேலை செய்வதற்கு, ஆனல் முற்றுப்பெருத, பூர்ண வளர்ச்சியடையாத, வகுப்புப் பாகுபாடுகள் நிரம்பிய இன்றைய நாகரீக சமுதாயத்தில், பொது ஜனங்கள், உணர்ச்சிகளை வெளிப்படுத்த சாதாரண சம்பவங்களையோ செய்கைகளையோ ஆதரிக்கும் நிலையில்தான் இருப்பார்கள்.

அதனல் இந்த அளவில் இருந்தால் போதும் என்று சிக்கிரம் ஒத்துக் கொள்ளும் ஆட்களையே தன்னைச் சுற்றிலும் காண்கிறன் கலைஞன். ஆனல் திறமையிக்க ஒரு கலைஞனுடைய தொழில், வழி வகுத்துக் கொடுக்கும் தன்மையதாயிருக்க வேண்டும். முன்னேக்கி நடத்திச் செல்வதாயும், தூண்டி விடுவதாயும் இருக்கவேண்டும். அதற்காக மக்களின் எண்ணங்



தமிழ் நாடு என்ன மகிழ்ச்சி வெள்ளத்திலேயா மூழ்கிக் கிடக்கிறது...?

களையும் உணர்வுகளையும் சேகரித்து, அவற்றை தான் கையாளும் கலையின இயற்கையான தன்மைகளைக்கொண்டு தனது தாத்பரியத்துக்கு பங்கம் விளைவிக்காது மாற்றியமைத்துக் கொள்கிறன் கலைஞன்.

எப்போது கலைஞன் சினிமாவை இந்த அளவுக்குஉயர்த்தும் நிலைக்கு வருகிறனை, அப்போது அவன், படித்தவர்களுக்கும் பண்பட்டவர்களுக்கும் மாத்திரம் படமெடுக்க மாட்டான்.

அவனிடமிருந்து உருவாகி வெளிவரும் படம், அதைப் பார்த்து ரசிக்காத மக்களே இல்லை என்று புகழக்கூடிய அளவுக்குப் போற்றத் தக்கதாயிருக்கும்.

இந்த நிலையை அடைய நமது தமிழ்ப்படம் உயர வேண்டும் —வளர்ச்சியடைய வேண்டும். அடையுமா? நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

★



தென்னாட்டில் ஒரு பொதுவுடைமைப் பூங்கா!

தென்னகம் ஒரு புதிய பொதுவுடைமைப் பூங்காவாக மலர இருக்கிறது; மலர வேண்டும். திருவள்ளுவர் அதற்கான வித்தூன்றியுள்ளார். சங்க இலக்கியங்கள் அதற்கான உரம் திரட்டி வைத்துள்ளன. நம் கவிஞர் அதைக் கனவு கண்டுள்ளார்.

அதைப் பூங்காவாக ஆக்கும் பொறுப்புடையவர்கள் யார்? ஆர்வ அவாவுடையவர்கள் யார்? ஆற்றலுடையவர்கள், பண்புடையவர்கள் யார்?

பொதுவுடைமை என்கின்ற பெயரை ஒரு தனி உடைமையாக்கித் தமக்குத் தாமே அப்பெயரைச் சூட்டிக் கொண்டு ஆரிய அழுகல் முதலாளித்துவ அடிப்படையிலமைந்த அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினரா? பொதுவறமே புகன்ற வள்ளுவர் வழி வந்து, தமிழியக்கமும் தமிழின இயக்கமும் தன்மான இயக்கமும் நடத்தி, அவற்றின் மரபில் திராவிடநாடு கோரும் திராவிட இயக்கத்தினரா? மார்க்ஸீயத்தைக் கனபாடமும் சபாபாடமும் பண்ணி, மார்க்ஸீயத்துக்கு உரைபெழுதி, விளக்க எதிர் விளக்கச் சட்டங்களுண்டு பண்ணி, மார்க்ஸீய வழக்கறிஞராக விளங்கும் மார்க்ஸீய பண்டிதர்களா? மார்க்ஸீய சிந்தனை மரபிலே இயங்கி, புதிய மார்க்ஸ்களைத் தோற்றுவித்து, மார்க்ஸீயத்துக்கும் வள்ளுவருக்கும் மாண்பளிக்க இருக்கும் மாநில இயக்கத்தவரா?

இதைக் காலம் காட்டும்.

திராவிட இயக்கத்தின் பொதுவுடைமைக் குறிக்கோள், கோட்பாடு, திட்டம் ஆகியவற்றின் சில உருவரைக் கோடுகளாகக் கீழ் வருவனவற்றைக் கூறலாம்.

பன்மொழிப்புலவர் கா.அப்பாதுரை

புதிய சமுதாய அமைப்பு

முழு நிறைக் குடியாட்சியும், முழுநிறை சமதருமமும், முழுநிறை பொதுவுடைமையும், அவற்றையே குறிக்கோளாகவும் அடிப்படையாகவும் நடைமுறைக்கொள்கையாகவும் கொண்ட ஒரு சமுதாயத்திலேயே அமைய முடியும். அத்தகைய ஒரு சமுதாயத்தின் அடிப்படையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டை அமைக்க எண்ணுகிறது. சாதியை, சாதி உயர்வு தாழ்வை உடைய சமுதாயத்தின் மீதோ, சாதி உயர்வு தாழ்வுக் கோட்பாட்டையே நீதியாகக் கொண்ட சமுதாயத்தின் மீதோ, உழைப்பும் ஊதியமும்–அதாவது கடமையும் உரிமையும் எல்லோருக்கும் சரிசமமாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் இல்லாத சமுதாயத்தின்மீதோ திராவிட நாடு எழுப்பிலை திராவிடருக்கு எப்பயனும் இல்லை. திராவிட நாட்டுப் பிரிவினையும், திராவிட நாடென்ற தனிநாடும், தனியுரிமையும் கேட்பதற்குரிய அடிப்படைக் காரணங்களிலேயே இது முக்கியமான ஒரு காரணம்.

ஆனால் சாதியை, சாதி உயர்வு தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே இந்தியாவில் சமுதாயம் அமைக்கப் பட்டுள்ளது. அவ்வடிப்படையிலே நீதியும், மதச்சார்பான சுமிருதிகளும், அரசியல்



சார்பின் சட்டங்களும் இன்றளவும் அமைந்துள்ளன. இதுமட்டுமல்ல; அடிப்படை மனித உரிமை என்று கூறப்படும் மனித நீதியும் மனித உணர்ச்சியும்கூட இந்தியாவின் சூழலில் சாதியடிப்படையிலேயே அமைந்துள்ளது. இதற்கு ஒரு உதாரணம் கூறலாம். உயர் சாதியினன் ஒருவன் தாழ்ந்த சாதியினன் என்று கூறி ஒரு உரிமை பெற்றால், அது பெருந்தன்மையாகமட்டுமே தோன்றும். தாழ்ந்த சாதியான் உயர்ந்த சாதியினன் என்று கூறி அது பெற்றால், அவன் பொய்யனாகவும், ஏமாற்றுக்காரனாகவும் சமுதாயத்தில் தூற்றப்படுவதுடன், அடிக்கடி தோல், சதை, எலும்பில் அதன் தரம் பொறிக்கப்படவும், வழக்கு மன்றங்களில் தண்டிக்கப்படவும், ஆகிய மூவகைத் தண்டனைக்கு ஆளாவான்.

உண்மைக் குடியாட்சியையும் உண்மைச் சமதர்மத்தையும் உண்மைப் பொதுவுடைமையையும் அமைப்பதற்கு ஒரு பீடிகையாகவே திராவிட இயக்கம் இந்திய அரசியல் சட்டத்தையும், அதற்காதாரமான ஆரிய ஒழுக்க முறைபையும், அவற்றை இன்னும் மக்கள் உள்ளங்களிலே உழுது விதைத்துவரும் வேத புராண இதிகாசங்களையும், சமஸ்கிருத மொழி ஆதிக்கத்தையும் அதைக் காக்க உதவும் கம்பராமாயணம், பெரிய புராணம் முதலியவற்றையும், சாதி வருணசிரமங்களை ஆதரிக்குமளவில் பிற இலக்கியங்களின் செல்வாக்கையும் எதிர்த்துப் போரிட்டு வருகிறது.

இதற்கெதிராக, ஆரிய அடிப்படையில் ஆரியத் தலைவர்களின் பிடியில் உள்ள கம்யூனிஸ்டுகட்சி இவற்றை மறைமுகமாகவும் நேர்முகமாகவும் ஆதரித்து வருகிறது.

புதிய பொருளாதார அமைப்பு

திராவிட இயக்கம் ஆரியரை எதிர்க்கவில்லை; ஆரியத்தையே எதிர்க்கிறது. இது சொல்லணி உரையல்ல என்பதை ஆரியத்தை ஏற்கும் திராவிடரை அது எதிர்க்கத் தயங்காததாலும், ஆரியத்தைக் கைவிட எண்ணும் திராவிடரைப் போலவே அத்தகைய ஆரியரையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதாலும் காணலாம்.

முதலாளித்துவம், முதலாளிகள் என்ற வகையிலும் திராவிட இயக்கம் இதே மனப்பான்மையைக் காட்ட எண்ணுகிறது. அது முதலாளிகளை எதிர்க்க எண்ணவில்லை; முதலாளித்துவத்தையே எதிர்க்க எண்ணுகிறது. ஆனால் முதலாளிகளை எதிர்ப்பதே முதலாளித்துவத்தை எதிர்ப்பதென்றும், முதலாளித்துவ அரசியலை எதிர்ப்பதே பொதுவுடைமை அரசியலை அமைப்பதென்றும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி, ஏனைய கம்யூனிஸ்டுகள் கூட எண்ணி விடுகின்றனர்.

ஆரியத்தை எதிர்த்தொழிப்பதிலும் சரி, முதலாளித்துவத்தை எதிர்த்தொழிப்பதிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் கைக்கொண்டுள்ள கருவிகள் இரண்டே இரண்டுதான். ஒன்று அறிவுக் கருவி. மற்றொன்று அன்புக் கருவி. அறிவுக் கருவி மூலம், அது உழைப்பு, ஊதியம் இரண்டும் ஒத்திருக்க வேண்டும் என்ற கருத்தையும், அவை ஒத்திராமல் வேறுபடுமானால், அதனால் உழைப்பாளிகளுக்கு ஏற்படும் தீங்கு என்ன, ஊதியம் பெறுபவருக்கு ஏற்படும் தீங்கு என்ன, இருவருக்கும் தாயகமான இனத்துக்கு ஏற்படும் தீங்கு என்ன– என்ற விளக்கங்களை அது பரப்பும். திருவள்ளுவர் குறளின் பண்பும் இதுவகையில் தமிழருக்குச் சிறந்த உதவிபளிக்கும். ஆனால் வேத புராண சுமிருதிகளும், இவற்றின் நம்பிக்கையும் சிலவற்றைக் கெடுக்கும்.

முதலாளித்துவத் தொழிலாளர் நடத்தும் உரிமைப் போராட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் போரை அறப்போராக்கி, ஒரு புறம் தொழிலாளரிடம் கட்சிக் கொள்கை கடந்த ஒற்றுமையையும், மற்றொரு புறம் முதலாளிகள் மன மாற்றத்தையும் உண்டு பண்ணப் பாடுபடும். போராட்டக் காலத்தின் வெற்றியால், பெற்ற வெற்றியுடன் பிரச்சார வெற்றியாலும் தொழிலாளர்களுக்குக் கிடைத்த பலனை, அவர்கள் வாழ்கலையை வளமாக்க உதவும் ஆக்கத் திட்டங்களாக்கத் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும். இதில் அது தன் அறிவுப் படையை ஈடுபடுத்தும்.

போரின் வெற்றி உண்ணும் உணவு போன்றது. அமைதிக் கால வாழ்விலேயே அது செரிமானமாகி, உழைப்பாளர் உழைப்பாற்றலை ஒரு புறமும், போராட்ட ஆற்றலை மறு புறமும் வளர்க்கவேண்டும். இரண்டாவது நடவடிக்கையில்லாத போராட்டம் செரிமான ஆற்றலற்ற உணவு போலச் சமுதாயத்தில் நோயும் பிளவும் உண்டு பண்ணும். இன்றைய உலகத் தொழிலாளர் இயக்கங்கள் யாவும் இங்கிலையிலேயே உள்ளன.

முதலாளி தொழிலாளி போராட்டம், கொள்கை குறிக்கோள் போராட்டம்; மனிதருக்கு மனிதர் நடத்தும் போராட்டம். அதன் வெற்றி தொழிலாளர் நலனை மட்டும் குறிக்கோளாகக் கொண்டதல்ல. முதலாளிகளாகச் செயலாற்றும் மனிதரை உட்படுத்திய சமுதாய நலன் குறித்தேயாகும். தொழிலாளரும் முதலாளிகளும் இதனை நன்கு உணரும்படிச் செய்து பண்புடைய அறப்போராட்டம் நடத்துவதின் மூலம், திராவிட இயக்கம் தொழிலாளர் வாழ்விலும் பொருளியல் வாழ்விலும் சமுதாய வாழ்விலும் ஒருங்கே புத்தொளியை உண்டு பண்ண முடியும்.

புதிய அறிவியல் துறைகள்

இன்றைய அறிவியல்கள்— வரலாறு, சமுதாய இயல், பொருளியல், கலைகள் போன்ற வாழ்வியல் துறைகளும் சரி, இயல் நூல்களும் தொழில் துறைகளும் சரி, முதலாளித்துவத்துடன் வளர்ந்த வளர்ச்சிகள். மேலை நாட்டில் அறிவியல் மிகுதி

வளர்ச்சியடையாததன் காரணமே அது ஆரியம்–அதாவது அழுகல் முதலாளித்துவத்துடன் கட்டப்பட்டிருந்ததுதான். ஆரியம் அவ்வறிவை மந்திரவாதம், செப்படி வித்தை, கடவுள் மாயங்களுக்கே பயன்படுத்திற்று. மேலோட்டு அறிவியல் இதனைவிட உயர்தர முதலாளித்துவத்துடன் வளர்ந்ததனால், ஒரு படி உயர்வு அடைந்துள்ளது. ஆனால் அதுவும் மூன்று குறைகளை உடையது. அழிவு–ஆதாயம் இந்த இரண்டையும் குறிக்கோளாகக் கொண்டே அது அறிவியலை வளர்த்துப் போற்றுகிறது. நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பயன்படுவது போல அது ஆக்கத்துக்குப் பயன் படினும் அழிவே அதன் முக்கிய குறிக்கோள். இரண்டாவது, ஆதாயக் குறிக்கோள் இதை நன்கு விளங்கும். ஒருவர் ஆதாயம், மற்றவர் நட்டம், அதாவது போட்டி; ஒருவர் அல்லது ஒரு சிலர் ஆதாயம், பலர் நட்டம்; அதாவது சுரண்டல் என்ற அழிவு அடிப்படையிலேதான் அது சிந்திக்கிறது. ஒருவர்க்கு ஆதாயம் மற்றவர்க்கும் ஆதாயம். (அதாவது தீயுடன் சேர்ந்த தீ போல, காதல் போல) இருபுறமும் ஆதாயம் என்பதோ, எல்லார்க்கும் ஆதாயம்–தனி மனிதனுக்கும் ஆதாயம் என்பதோ இன்றைய முதலாளித்துவ அறிவியலின் சிந்தனைக்கு எட்டாத ஒன்று.



தவிர, அறிவியலின் அறிவையும் சமுதாய அறிவையும் சேர்த்தால், சமுதாய இயலின் அறிவு முதலாளியின் மனதை மாற்றி அவன் ஒத்துழைப்புப் பெற்றே முதலாளித்துவத்தை அழிப்பதாக மாறமுடியும். திராவிட முன்னேற்றக் கழகம் இத்துறையில் அறிவுப் படையை உண்டு பண்ணுவதுடன் அதனை அதில் ஈடுபடுத்திப் புதிய திராவிட நாட்டுச் சிற்பிகளை மட்டுமல்ல, புதிய சமுதாயச் சிற்பிகளை, புதிய உலகச் சிற்பிகளை உண்டு பண்ணப் பாடுபடும்.

புரட்சிகரமான சட்ட திட்டங்கள்

முதலாளித்துவ அடிப்படையான சட்டங்கள், திட்டங்கள் மட்டுமல்ல; நிலையங்கள், அறிவு மரபுகள், சிந்தனை மரபுகள் பல. புதிய பண்பாராய்ச்சித் துறை (Philosophy) அமைந்தாலல்லாமல் இவற்றின் வேர் கல்வி, புதிய சட்ட திட்டம், நிலையங்கள், அறிவு மரபுடன் அமைக்க முடியாது. உதாரணத்துக்கு நாணயத்தை எடுத்துக் கொள்ளலாம். முதலாளித்துவ அறிஞர் முதலாளித்துவ நலன் கருதித்தான் நாணயம் படைத்தனர். நாணயம் என்பது பொருளல்ல, சமுதாய மதிப்பு என்ற தத்துவத்தை அவர்கள் பயன்படுத்தினர். அதுபோல மார்க்ஸிய தத்துவத்தைப் புதியதாகப் பயன்படுத்தி, திராவிட அறிஞர் இன்றியமையாத் தேவைகளுக்கு வேறு நாணய வகை, நடுத்தரத் தேவைகளுக்கு உயர்தரத் தேவைகளுக்கு வேறுநாணயங்கள் ஏற்படுத்தி, சமதர்ம அரசியல்களாலும் எளிதில் கனவு காணமுடியாத சமதர்ம நிலையை உண்டு பண்ணிவிட முடியும்.

முதலாளித்துவம் தன் நன்மைக்காகத் திருட்டு, கொலை யாவற்றுக்கும் தண்டனைச் சட்டம் விதித்துள்ளது. மனிதன் அடிப்படைத் தேவைக்கு உட்பட்ட எல்லையில் கொடுக்கல் வாங்கலை சட்டப்படி செல்லாததாக்கல்—தேவைக்கு மேற்பட்டவற்றின் திருட்டு வகையில் சட்டப் பாதுகாப்பை இல்லாததாக்கல்—முதலிய புதிய கருத்துக்களையேனும் சிறிய அளவில் தொடர்வாராக்கி செய்ய அறிவுப் பண்புடையார் மாதிரி அரசுகள் நடத்திக் காட்டலாம்.

திராவிட இயக்கம் இத்தகைய சிந்தனைகளைத் தொடங்கி விட்டது. மேலை உலகுக்கு மார்க்ஸ் எப்படி புத்தொளி ஆயினரோ, கீழை உலகுக்கும் திராவிடம் அத்தகைய புத்தொளி படைத்து, திராவிடப் பூங்காவையே வருங்காலப் பொதுவுடைமை உலகின் நாற்றுப் பண்ணையாக ஆக்கப் பாடுபடும்.

இது கனவல்ல, நனவாகும் என்று திராவிட இயக்கத்தார் அறிவர்.

★

முன்றுவது பொங்கல்





பொங்கலுக்கு இன்னும் இரண்டு தினங்களே இருந்தன. சுமதியின் உள்ளத்தில் பெரும் சூன்யம்; இளம் பெண்ணின் இருதயத்தில் இருக்கக் கூடாத பயங்கரமான சூன்யம்...அவள் கண்ட ஆசைக் கனவுகள், சந்திரனோடு இன்பமாக அவள் வாழ நினைத்த அந்த லட்சிய வாழ்க்கை ...எல்லாம் இனி கலைந்துபோன வெறும் கற்பனை ஓவியங்கள்!

வாழ்க்கை யென்பது வைத்து விளையாட முடியாத, ஆனால் தொலைவில் தோன்றி இன்ப மூட்டி, தொட்டு மகிழ நினைக் கையில் எட்டாமலே நின்று மறைந்து போகும் வெறும் வான வில்தானா! நிலவு, தென்றல், நீரோடை, நீலவானம் இப்படி யாக இயற்கையன்னை கொட்டிக் கொடுத்திருக்கும் அத்தனை இன்பங்களும் சுமதியைப் பொறுத்தமட்டில் இனி அர்த்தமற்றவை; சுவை யில்லாதவை.

அவளுடைய கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர் அவளுடைய மேலாடையை நனைத்தது. ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தாள். கரும்பை வண்டியில் போட்டுக் கொண்டு, "கரும்பு வாங்கலையோ, கரும்பு" என்று ஒருவன் விற்றுக் கொண்டிருந்தான். குழந்தைகளெல்லாம் குதித்துக கொண்டு, பெற்றோர்களைக் கரும்பு வாங்கித் தரும்படி பிடிவாதம் பிடித்தனர்.

இளம் பெண் ஒருத்தி, ஒரு கரும்பை வாங்கித் துண்டுபோடச் சொல்லி, ஒரு துண்டினைச் சுவைத்தாள். அவள் முகம் சுளித்தது. "என்னய்யா கரும்புக் காரரே, கரும்பு பிரயோஜனமில்லை; உப்புக் கரிக்கிறது!" என்று அலுத்துக் கொண்டாள். கரும்புக்காரன் ஒரு ஏளனச் சிரிப்பு சிரித்தான். "ஏனம்மா, நீங்கள் எவ்வளவு காலமாகக் கரும்பு சாப்பிடுகிறீர்கள்? நுனிக் கரும்பில் ஏதம்மா சுவை? அடிக் கரும்பில் ஒரு துண்டு சுவைத்து விட்டுக் கூறுங்கள்!" என்றான் கரும்புக்காரன்.

நுனி கரிப்பதும், அடி சுவைப்பதும் கரும்பின் குணம். ஆனால், சிலருக்கு வாழ்க்கை எப்பொழுதுமே நுனிக் கரும்பாகவும் வேறு சிலருக்கு அடிக் கரும்பாகவும் அமைந்து விடுகிறதே, ஏன்? சுமதியைப் பொறுத்த மட்டில் அவளுடைய வாழ்க்கையில் இனி எப்பொழுதுமே நுனிக் கரும்பின் சுவைதானா? அவள் சிந்தனை சுழன்றது!

இளம் கிராமியத் தம்பதிகள் இருவர், சந்தையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தனர். கையிலே கரும்பு, மஞ்சள் கொத்து, வாழைப் பழம் - இப்படியாகப் பொங்கல் சரக்குகள்! புதுமணத் தம்பதிகள்! வழிநெடுக வேடிக்கை பார்த்துக் கொண்டே அவள் மெதுவாக நடந்து செல்லுகிறாள். மகிழ்வு பொங்கும் அவள் முக அழகில் சொக்கி அவனும் அவளுக்காக மெதுவாக நடக்கிறான். அவள் திடீரென்று கணவனைத் திரும்பிப் பார்க்கிறாள். கண்கள் நான்கும் ஒன்றிக் கலக்கின்றன. அவள் நாணித் தலை கவிழ்கிறாள். அவன் மகிழ்ச்சியோ இரட்டிப்பாகிறது!

எங்கும் எவருடைய உள்ளத்திலும் இன்பம் பொங்கிக்கொண்டிருந்தது. ஆனால் சுமதியின் உள்ளத்தில் பொங்கிடும் துன்பத்திற்கு முடிவேது? உள்ளத்தில் ஏக்கம் நிரம்பும்போது இன்பமான பழைய எண்ணங்களை எண்ணிப் பார்ப்பதைத் தவிர, இதயத்துக்கு வேறு ஆறுதல்...? அவள் நினைவுப் பாதையில் இரண்டு ஆண்டுகள் முன்னோக்கி நடந்தாள்.

2

அன்றும் பொங்கல் தினம்!

இன்றுள்ள சுமதிக்கும் அன்றிருந்த சுமதிக்கும் எவ்வளவு வித்தியாசம்!

ஒரு பெண் ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ. பட்டம் பெற்று, அதோடு அழகும் பொருளாதார அந்தஸ்தும் இருந்துவிட்டால், அப் பெண்ணின் பழக்க வழக்கங்கள் எப்படி இருக்கு மென்பதைச் சராசரி கற்பனை சக்தியுள்ளவர்களும் யூகித்துக்கொள்ளலாம். சுமதியின் பேச்சு, நடவடிக்கைகள் எல்லாமே ஆங்கில மோஸ்தர்தான். சுருக்கமாகச் சொல்லப் போனால், வீட்டுக் குள்ளேயே ஒரு குட்டி லண்டனைச் சிருஷ்டி செய்து கொண்டு வாழ்ந்தாள்!

ஆங்கில பாணியில் அவள் தமிழ்ப் பேசும் முறையே அலாதி!

காலிவிட்டுக் கழட்டாத 'ஸ்லிப்பர்' ஆதவனின் கிரணங்கள் முகத்தில் விழுந்து விளையாடினாலும் விழிக்க மறுக்கும் விழிகள், கொதிக்கும் கோடையிலும் வெந்நீரே பயன் படுத்தும் விநோதம், ஆங்கிலம் தெரியாதவர்கள் அசல் காட்டு மிராண்டிகள் என்ற ஊர்ஜிதமான நம்பிக்கை—இப்படிப் பல மிஸ். சுமதியின் குண நலங்கள்!

இரண்டாண்டுகளுக்கு முன் பொங்கல் தினத்தன்றுதான் டாக்டர் சந்திரன் சுமதிக்கு அறிமுகமானர். சுமதியின் இல்லத்திற்கு, பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக அவளுடைய தந்தையால் அழைக்கப் பட்டிருந்தார்.

"சுமதி, டாக்டர் சந்திரன் என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவரின் பிள்ளை. இப்பொழுது இவருக்கு அம்மா, அப்பா ஒருவரும் இல்லை. நம்முடைய ஊர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் டாக்டராக நியமிக்கப்பட்டு வந்திருக்கிறார்."—சந்திரனை சுமதிக்கு அறிமுகப் படுத்தி வைத்தார் அவளுடைய தந்தை.

அழகிய களங்கமற்ற முகம், லட்சிய ஒளி வீசும் கண்கள், இடர்வரினும் அஞ்சாது முடிக்கும் ஆற்றலை வெளிப்படுத்தும் பரந்த நெற்றி, மயக்கு உதடுகள், அதில் நெளியும் மந்தகாசச் சிரிப்பு, இத்தனைக்கும் அழகு செய்து நிற்கும் அறிவின் நிறைவை வெளிப்படுத்தும் அடக்கம்—சந்திரன் ஒரு லட்சிய மனிதராக காட்சியளித்தார். எளிமையைக் கண்டு எள்ளி நகையாடும் குணம் படைத்த சுமதி, இந்த வாலிபரின் எளிமையில் ஏதோ ஒன்று ஒளிந்து கொண்டு தன்னைக் கேலி செய்வதை உணர்ந்தாள்! எத்தனையோ வாலிபர்களிடம் பேசி, தன்னுடைய அறிவாற்றலால் அவர்களைத் திணற அடித்திருக்கிறாள். ஆனால் சந்திரனிடம் ஒரு வார்த்தைகளுக்கு



மேல் பேச அவளுக்குத் துணி வேற்பட வில்லை. அவளுக்கே அது வியப்பாக இருந்தது.

பொங்கல் உண்டவுடன், சற்று நேரம் அவளுடைய அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகலாமென்று சுமதி சந்திரனை அழைத்தாள். சந்திரன் அவள் அழைப்பைப் புறக்கணித்து விடக் கூடும் என்று ஏனோ பயந்தாள். ஆனால், அவர் அவள் அழைப்பை ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் மகிழ்ச்சியும் தெரிவித்தபோது அவளுக்கு உள்ள மெல்லாம் இனித்தது.

சந்திரன் அவள் அறைக்குள் நுழைந்தபோது, அறையில் எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா என்று ஒருமுறைபார்த்துக் கொண்டாள். அவர் திருப்திப்பட வேண்டு மென்பதில் அவளுக் கேன் அவ்வளவு அக்கரை? அவர் அமர்ந்தவுடன், அவர்முன் நாற்காலியில் நாணிக் கோணி அமர்ந்தாள். திடீரென்று இந்த நாணம் வந்து எப்படிக் குதித்தது? சுமதியின் மார்பு படபடத்தது. அவள் உடல் கனமற்றுத் தக்கைபோல் தென்பட்டது.

இருவரும் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார்கள். எப்படியாவது பேச்சைத் துவக்க வேண்டுமே!

"ஆஸ்பத்திரியில் வேலை செய்த நேரம் போக, மற்ற நேரத்தில் உங்களுக்குப் பொழுது எப்படிப் போகிறது?"—சுமதி ஒருவாறு பேச்சைத் துவக்கினாள்.

"டாக்டரைப் பொறுத்தவரையில் பொழுது போக்கும் நிலைக்கு இடமே யில்லை. பொழுதுதான் போதாது."

"தன்னலமற்ற சேவை செய்யும் மனப் பான்மை டாக்டருக்கு நிறைய வேண்டும்; இல்லையா?"

"அதுதான் இல்லை; எந்தத் தொழிலையும் ஒரு தொழிலாகச் செய்யும் வரையில் உருவான பலன் காணமுடியாது. நாம் தொழிலில் காட்டும் அக்கரைக் குறைவு சமுதாயத்தின் நலனையே பாதிக்கிறது என்ற தொண்டுணர்ச்சியோடு கடமையாற்ற வேண்டியதுதான் மனித அறம். ஆனால் டாக்டரைப் பொறுத்த மட்டில் அவர் தொழிலில் காட்டும் அலட்சிய மனோபாவத்தின் பலனை உடனே காணலாம்; அவ்வளவுதான்!"

வள வள வென்று பேசி உரையாடலை வேதனையாக்கும் வெறும் பேச்சாளர்களைக் கேட்டுச் சலித்த சுமதிக்கு டாக்டரின் பேச்சு வலுவூட்டும் 'டானிக்' காக இருந்தது. அவரைக் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது.

அறையில் மாட்டியிருந்த ஆங்கிலக் கவிஞர்களின் படங்களை ஒரு எடுத்த காரியத்தைத்தொடர்ந்து,

முறை சந்திரன் பார்த்தார். குறிப்பாக ஷெல்லியின் படத்தை ஊன்றிக் கவனித்தார். அவர்களின் பேச்சு ஷெல்லியின் பக்கம் திரும்பியது.

"தமிழ் நாட்டிலே ஒரு ஷெல்லி இருக்கிறாரே, உங்களுக்குத் தெரியுமா?" — அவர் அவளைக் கேட்டார்.

"பாரதியாரைத்தானே குறிப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"காலஞ் சென்ற கவியல்லவா பாரதி? தமிழ் நாட்டில் ஒரு ஷெல்லி இருக்கிறாரே என்றல்லவா கேட்டேன்!"

அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்!

அவர் தொடர்ந்தார்; "நீங்கள் குறிப்பிட்ட பாரதிக்கு ஒரு தாசன் இருக்கிறார். பெயரைப் பொறுத்த மட்டில்தான் தாசன். கவிதைகளைப் படித்தால் இவர் அவருக்கு தாசனல்ல; குருவாக வேயிருக்கும் தகுதி யுடையவர் என்றெல்லாம் தோன்றும். நீங்கள் பாரதிதாசனின் கவிதைகளைப் படித்ததில்லையே?"

அவள் இல்லை யென்று தலையசைத்தாள்!

"இது விளம்பரக் காலம்; விளம்பர சாதனங்களைக் கையில் வைத்திருப்பவர்கள் மேதைகளைப் பேதைகளாகவும், பேதைகளை மேதைகளாகவும் காட்ட முடியும். எத்தனையோ மேதைகள்—நம்மின மேதைகள்—நம்மிடையே உண்டு. மேல் நாடு இங்கர்சாலைக் காட்டினால் நாம் பெரியாரைக் காட்டலாம்; இதோ, உரை நடைக்குக் கவிதை மெருகு தீட்டிய கிப்பன் என்று ஆங்கிலேயர் பெருமைப் பட்டால், வளம் பெற்ற வசன நடையைப் பெற்றிராத ஒரு மொழிக்கு ஜீவனோடு மிளிரும் ஒரு புது நடையைக் கொடுத்த அண்ணா இதோ, என்று நாம் பெருமையடையலாம்; அவர்களுக்கு ஒரு ரஸ்ஸல் என்றால், நம்மிடையே திரு. வி. க. மறை மலை போன்ற எத்தனையோ ரஸ்ஸல்கள்...! நீங்கள் இவர்களுடைய நூல்களையெல்லாம் அவசியம் கற்றுத் தெளிய வேண்டும்."—டாக்டர் உணர்ச்சியோடு பேசினார்.

"டாக்டர், என் மனத்தை விசாலப் படுத்தி விட்டீர்கள்" என்றாள் குழைவோடு.

அன்று இருவரும் பிரிந்த போது நெடுநாள் பழகிய நண்பர்கள் போல் பிரிந்தார்கள்.

3

சந்திரனுடைய வருகைக்குப் பின் சுமதியினுடைய வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி தோன்றியது. ஆங்கில இலக்கியத்தில் சுழலவிட்ட விழிகளைத் தமிழ் இலக்கியத்திலும் மேயவிட்டாள்.



அவளிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களைப் பெற்றோர்களும் கவனிக்காமல் இல்லை.

டாக்டர் சந்திரன் அவருக்கு ஓய்வு ஏற்பட்ட போதெல்லாம் சுமதியிடம் வந்து பேசிக் கொண்டிருப்பார். அவரிடம் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருப்பது ஒரு பெரிய இலக்கியத்தைப் படிப்பது போன்றது என்ற உணர்ச்சி சுமதியிடம் வளர ஆரம்பித்தது. அவரிடம் பேசிக் கொண்டிருக்காத நேரமெல்லாம் வீண் பொழுதாக அவளுக்குப் பட்டது. அவர் தன்னோடு இருக்கும் பொழுது எல்லாம் இருப்பதாகவும், இல்லாத பொழுது எல்லாம் சூன்யமாகிவிட்டது போலவும் பிரமை தோன்றும் அவளுக்கு. தாயிடமும், தந்தையிடமும் அவளுக்கிருந்த அன்பில் கலந்திராத ஏதோ ஒன்று—ஒரு வகையான இன்ப வேதனை—சந்திரனுக்காக அவள் மனதில் அடிக்கடி தோன்றுவதை உணர்ந்தாள். திடீரென்று, எங்கிருந்தோ தன்னுடைய வாழ்க்கையில் வந்து புகுந்து விட்ட இந்த மனிதரிடம் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் பாசமும், பரிவும்...தன்னுடைய பெண்மை அவரையன்றி பூர்த்தியடைய முடியாத ஒரு நிலை வாழ்க்கையில் ஏற்பட்டு விட்டதை உணர்ந்தாள்.

ஒவ்வொரு பெண்ணும் வாழ்க்கையில் எத்தனையோ ஆண்களைச் சந்திக்கிறார்கள். அவர்களிடம் பேசுகிறார்கள்; பழகுகிறார்கள். ஆனால் இந்த ஆடவர் உலகத்திலிருந்து வேறுபட்டு ஒருவர் மட்டும் தென்படுகிறார். அவருடைய உருவம், குரல்—ஏன், அவருடைய ஒவ்வொரு சிறு செய்கையும்கூட மனதில் அப்படியே பதிந்து விடுகிறது. அவரிடம் காணப்படும் சிறு சிறு குறைகள் கூட அவருக்கு அழகு செய்வதாகத் தோன்றுகிறது. அவர் மகிழ்ந்தால் மகிழ்ச்சியும், மனம் வருந்தினால் வேதனையும் தோன்றுகிறது. அவர் அப்பெண்ணின் வாழ்க்கைக் கொடி, பற்றிப் படரும் கொம்பாகவே ஆகி விடுகிறார். சுமதியின் நிலையும் சந்திரனைப் பொறுத்த வரையில் அப்படித்தான் இருந்தது.

ஒரு நாள் சந்திரன் சுமதியை அவருடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார். உள்ளத்தில் பக்திமேலிட அவருடைய இல்லத்தில் நுழைந்தாள். தூய்மை தனியாட்சி செய்த அவருடைய அறையில் மோன நிலையில் இருக்கும் புத்தரின் சிலை, அந்த இடத்தில் ஞான ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. அச்சிலையின் இரு பக்கங்களிலும் சுவரில் பெரியார், அண்ணாவின் உருவப் படங்கள் அழகுற மாட்டப்பட்டிருந்தன. சிலைக்கு எதிரில் அருளொழுகும் கண்களோடு அண்ணல் காந்தியின் படமும் இருந்தது. பர்னர்ட் ஷா, ரஸ்ஸல் போன்ற மேனாட்டு அறிஞர்

களின் படங்களும் ஆங்காங்கே இருந்தன.

அந்த அறைக்கு அடுத்தாற் போல் இருந்த அறையில் டாக்டர் சந்திரனின் நூல் நிலையம் இருந்தது. அங்கிருந்த புத்தகங்களைப் பார்த்த சுமதி பிரமித்துப் போனாள். "டாக்டர், இந்த அறிவுச் செல்வம் அத்தனையும் என்னிடமிருந்து ஒளித்துத் தானே வைத்திருந்தீர்கள்?" — சுமதி உரிமையோடு அவரிடம் கேட்டாள்.

"பெரும்பாலும் எனக்கு நண்பர்கள் அதிகம் கிடையாது. நண்பர்கள் அதிகமாகி விட்டால் நேரம் நமக்குச் சொந்தமாக இருக்காது. ஆகவே, என் இருப்பிடம் நாடி ஒருவருமே வருவதில்லை. ஆனால், இது வரையில் உங்களை அழைத்துக் கொண்டு வந்து என் இருப்பிடத்தைக் காட்டாதது எனக்குக் குறையாகவே இருந்தது. உங்களுக்கு அளிக்க வேண்டிய உரிமையை அளிக்கத் தவறியதாக என் மனம் உணர்ந்தது. உங்களை இங்கே இன்று அழைத்து வந்து விட்டேன்!"

சுமதியின் முகம் மலர்ச்சியால் மலர்ந்து, கண்களில் நீர் திரையிட்டது! டாக்டர் அவருடைய இல்லத்தை மட்டுமல்ல, உள்ளத்தையே திறந்து காட்டியதாக எண்ணி சுமதி குதூகலித்தாள்.

"இந்த உரிமையை எனக்களித்த நீங்கள், இனிமேல் என்னை 'நீ' என்றே அழைக்க வேண்டும். 'நீங்கள்' என்று அழைக்கக்கூடாது. என்ன, தெரிகிறதா?"

அவள் கொஞ்சினாள். அவர் மெய் மறந்து நின்றார்.

"சுமதி!" — அவருடைய இதய தாபம் முழுவதும் அந்த மூன்றெழுத்துக்களில் எதிரொலித்தது!

இருவரையும் இடையே நின்று பிரித்த தூரம் திடீரென்று விலகியது!

இப்பொழுது காலம் வெகு வேகமாக ஓடியது!

"நேரமாகி விட்டது. நீ உன் வீட்டுக்குப் போக வேண்டாமா, சுமதி?"

"இது, யார் வீடு?" — அவள் சிரித்தாள். அவரும் சேர்ந்து சிரித்தார்!

4

ஓராண்டு உருண்டது!

சந்திரனுடைய வாழ்க்கையும் சுமதியுடைய வாழ்க்கையும் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்து விட்டன. டாக்டருடைய வைத்திய வேலைகளிலெல்லாம் சுமதி இப்பொழுது பங்கு கொண்டு உழைத்தாள்.

இரண்டாவது பொங்கலும்



வந்து விட்டது; சுமதி, அவரைச் சந்தித்த அந்த முதல் பொங்கலை எண்ணிப் பார்த்தாள்; கரும்பினும் இனித்தது அந்த நினைவு.

சுமதியின் வீட்டில்தான் இந்தப் பொங்கலையும் டாக்டர் சந்திரன் கொண்டாடினார். ஆனால் அவருடைய முகத்தில் வழக்கமான மகிழ்ச்சிக் குறியில்லை!

"டாக்டர், ஏன் சோர்ந்து காணப்படுகிறீர்கள்? ஆஸ்பத்திரியில் வேலை அதிகமோ?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை!... உயிருக்குயிரான ஒன்றைப் பிரிவதென்றால்... இதோ, இந்த உத்தரவைப் படித்துப் பார்!" — அவளிடம் ஒரு கடிதத்தை நீட்டினார்.

அவள் படித்தாள். நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின.

"கொரியாவுக்கா போகப் போகிறீர்கள், டாக்டர்?"

"ஆம்...!"

"அங்கு போக விருப்பமில்லை என்று இன்றே தெரிவித்து விடுங்கள்."

"என் சம்மதம் பெற்ற பிறகுதான் என்னை அங்கு போகும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள்!"

"நாசம் நர்த்தனம் செய்யும் கொரியாவில் போய் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அதை இங்கேயே உங்கள் மக்களுக்குச் செய்யுங்கள்."

"இங்கு 'பணி' புரிய எல்லா டாக்டர்களும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் கொரியாவுக்குப் போக யாரும் இஷ்டப்படவில்லை!"

"அதிலென்ன தவறு? மரண மாளிகையில் யார்தான் விருப்பத்தோடு நுழைவார்கள்?" — அவள் உரிமையோடும் கோபத்தோடும் கேட்டாள்.

"மரணத்தைக் கண்டு பயந்து சாகிற மனிதன் லட்சிய சேவைக்குலாயக்கில்லாதவன். காலரா, பிளேக், டைபாய்டு போன்ற பயங்கரமான நோய்களோடு தினசரி பழகுகின்ற டாக்டரை மரணம் எப்பொழுதும் நிழல் போலத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. தங்கச் சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளரை ஒவ்வொரு வினாடியும் மரணம் பயமுறுத்திக் கொண்டுதான் இருக்கிறது. அதற்காக அவர்கள் வேலை செய்ய மறுத்து விட்டால்..... சுமதி! லட்சிய மனிதன் சாவிலே வாழ்வு காண்கிறான். வாழும்பொழுது அஞ்சி யஞ்சி செத்துக் கொண்டிருப்பதில்லை... இயற்கையின் நியதியே அப்படித்தான். ஒவ்வொரு குழந்தை பிறக்கும்பொழுதும் தாய் ஒரு முறை செத்துப்பிழைக்கிறாள். சாவிலிருந்துதான் வாழ்வு பிறக்கிறது!"

"டாக்டர், நீங்கள் இப்பொழுது உங்களுக்காக மட்டும் வாழவில்லை. உங்கள் வாழ்க்கையோடு ஒரு பெண்ணின் வாழ்க்கையும் பிணைந்திருக்கிறது" —அவள் உணர்ச்சியோடு பேசினாள்.

"சுமதி, நீயுமா மற்ற பெண்களைப் போல் பேசுவது? கொரிய போர்க் களத்தில் சேவை செய்கிறவர்களெல்லாம் இறந்து போகிறார்கள் என்ற பொருள்? அதிலும் நான் போரிடச் செல்லவில்லை. வைத்திய உதவிக்காகத்தானே செல்லுகிறேன். அங்கு இருக்கப் போவதும் சுமார் ஒன்பது மாத காலந்தான். மறுபொங்கலன்று உன்னைப் பார்க்க ஓடோடியும் வந்து விடுவேன்."

அவள் சமாதானம் அடையவில்லை. "நீங்கள் எனக்களித்திருக்கும் உரிமையின் பேரால் கேட்கிறேன்; கொரியாவுக்கு நீங்கள் போகக் கூடாது இது என் கட்டளை; அன்புக் கட்டளை!" —சுமதி, பிடிவாதமாகப் பேசினாள்!

சந்திரன் முகத்தில் ஒரு புன்முறுவல் தோன்றி மறைந்தது!

"நாளை மறுதினம் நான் புறப்படுகிறேன் சுமதி... அதற்குள் ஆர அமர சிந்தித்து அன்போடு விடை கொடு. நான் என்னுடைய அன்பும் ஆசியும்தான். எனக்கு மகிழ்ச்சியோடு விடை கொடு, சுமதி!"

"உங்களுக்கு என்மீதிருக்கும் அன்பு உண்மையானால், உங்கள் பிரயாணத்தை நீங்கள் ரத்து செய்தாக வேண்டும்..."—அன்பைப் பரிசோதிக்க அவள் விஷப் பரீட்சை செய்தாள்!

"உன் மீது எனக்கிருக்கும் அன்பு என் லட்சியத்தின்மீது எனக்கிருக்கும் அன்பைப் போல் தூய்மையானது."

"டாக்டர், முடிவாகக் கேட்கிறேன்; நீங்கள் போகத்தான் போகிறீர்களா?"

அவர் பேசவில்லை!

"பேசுங்கள் டாக்டர்...பேசுங்கள்!"

"நான் பேசி முடித்து விட்டேன். இனிப் பேச ஒன்றுமில்லை."

"நீங்கள், உண்மையிலேயே உங்கள் வாழ்க்கையில் நான் பங்கு பெறப் போகிறவள் என்று எண்ணியிருந்தால், கொரியாவுக்குப் போக சம்மதமளிக்குமுன் என்னிடம் ஏன் அதைப் பற்றிக் குறிப்பிடவில்லை?"

"நான் உன்னிடம் அதைப் பற்றி சொல்லாதது சரி என்பதை உன் பேச்சே ஊர்ஜிதம் செய்கிறது. அப்பொழுதும் இதே நெருக்கடியைத்தான் உண்டாக்கி இருப்பாய்!"

"நீங்கள் செய்தது துரோகம்!" - அந்தக் கடைசிச்சொல் அவர் இதயத்தை சுருக்கென்று தைத்தது.

"சுமதி, மற்ற பெண்களைப் போல் நீ இருக்க மாட்டாய் என்றுதான் நினைத்தேன்..."

"போதும் டாக்டர், உங்கள் உபதேசம்! எல்லா ஆண்களையும்போல் நம்பிய பெண்களை நட்டாற்றில் விட மாட்டீர்கள் என்றுதான் நானும் நினைத்தேன்..."

"சுமதி, நாளை மறுதினம் நான் புறப்படுவது நிச்சயம். முடிந்தால் மீண்டும் வந்து உன்னைப் பார்க்கிறேன். நீ வந்து என்னைப் பார்க்க விரும்பினாலும் தடையில்லை!"— கண்டிப்பான குரலில் இதைக் கூறிவிட்டு டாக்டர்சந்திரன் வெளியேறினார்.

சுமதியின் தலை சுழன்றது. படுக்கையில் போய்ப் படுத்து விக்கி விக்கி அழுதாள். அவள் படித்த இலக்கியம் எதுவும் அவளுக்கு ஆறுதலளிக்கவில்லை.

5

சுமதி கண் விழித்த பொழுது இரவு வெகு நேரமாகியிருந்தது. இரவு உணவும் அவள் அருந்தவில்லை. மாலை நடந்தவைகளெல்லாம் வெறும் கனவு போலத் தோன்றின. நிகழக் கூடாத ஒரு பயங்கரமான நிகழ்ச்சி நிகழ்ந்து விட்டதைப் போல் உணர்ந்தாள். இனி ஒட்ட முடியாத அளவில் டாக்டருடன் அவளுக்குள்ள உறவு முறிந்து விட்டதா? வாழ்க்கையில் ஏற்பட்ட சிறு சலனம்தானே இந்த ஓராண்டு நிகழ்ச்சிகளும்...

இவ்வளவு அன்போடு பழகியவர் அவருடைய வாழ்க்கையின் முக்கியமான சம்பவத்தை அவளிடமிருந்து ஏன் ஒளிக்க வேண்டும்...? கடைசியில், அவளுடைய யோசனையை அப்படியே ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அதைப் பற்றி சிந்திப்பதாகக்கூட ஏன் ஒரு ஆறுதல் வார்த்தை சொல்லவில்லை. ஆண்களே சுயநலம் படைத்த ஒரு ஜாதி. பெண்களோடு கொஞ்சுவார்கள்; குலவுவார்கள்; பெண்களுக்கு அளிக்க வேண்டிய உரிமையை அளிக்க மட்டும் அவர்களுக்கு மனம் வருவதே இல்லை...

தன்னுடைய உணர்ச்சிகளோடு ஓராண்டு காலமாக அவரை விளையாட விட்டதே தவறு. அவர்தான் எல்லா ஆண்களையும் போல் நடந்து கொண்டாரென்றால் அவளும் எல்லாப் பெண்களையும் போல் அவரிடம் நம்பிக்கை வைத்தல்லவா





ஏமாந்து விட்டாள்...அவளுடைய பெண்மையின் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள அவர் போகுமுன் அவரை மீண்டும் சந்திப்பதில்லையென்று முடிவு செய்தாள்...

இரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து டாக்டரை வழியனுப்ப சுமதி மறுத்த போது அவள் தந்தையே அவளைக் கடிந்து கொண்டார். "உன் மீது அவர் வைத்த அன்பிற்கு நீ காட்டும் நன்றி இதுதானா?"—சுமதி பதில் பேசவில்லை!

"நான்போய் அவரை அழைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போகிறேன்; நீயும் வந்து விடு," என்று கூறிவிட்டு அவளுடைய பதிலுக்குக் காத்திருக்காமலே வெளியேறினர்.

சுமதிக்கு மன நிம்மதியில்லை. சுவையில்லாமல் மேஜையின் மீது கிடந்த ஒரு புத்தகத்தைத் திறந்தாள். அது பாரதிதாசனின் 'பாண்டியன் பரிசு!' அதனுடைய முகப்புக் காகிதத்தில் சந்திரன் கையால் எழுதப்பட்ட கவிஞரின் நான்கு வரிகள் அவள் கண்களில் பட்டன:

எனை ஈன்ற தந்தைக்கும்
தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ் நாடு
தனக்கும் என்னுல்
தினையளவு நலமேனும்
கிடைக்கு மென்றுல்
செத்தொழியும் நாள்
எனக்குத் திருநாளாகும்.

இந்த வரிகளைப் படித்தவுடன் அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிப் புத்தகத்தை நனைத்தது. அவள் மனத்திரையிலிருந்து கலைக்க விரும்பிய சந்திரனின் உருவம் அந்த எழுத்துக் கூட்டத்திடையே தோன்றி அவளைப் பார்த்து சிரித்தது.

6

இரயில்வே ஸ்டேஷனுக்கு வழியனுப்ப சுமதி வருவாள் என்று சந்திரன் எதிர்பார்க்கவேயில்லை. முரண்பாடுகளின் கூட்டுச் சரக்குத்தானே பெண்? ஆனலும் அவள் வந்திருந்தது அவருக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. வழியனுப்பப் பல பிரமுகர்களும் உத்தியோகஸ்தர்களும் வந்திருந்ததால் சுமதியும் சந்திரனும்தனிமையில் பேச சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

இரயில் புறப்பட சில நிமிடங்களே யிருந்தன. சுமதியின் நெஞ்சு நெகிழ்ந்தது. பீறிட்டுக் கொண்டுவரும் அழுகையை அடக்கிக் கொள்ள உதடுகளைக் கடித்துக் கொண்டாள். விசில் ஊதி பச்சை விளக்கும் காட்டப்பட்டது. ரயிலில் ஏறி கைகூப்பி எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டார் சந்திரன். அவர் முகம் சலனமற்றுப் பிரகாசித்தது. ரயில் நகரப் போகிறது; கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு சுமதிமுன்னே சென்றாள். சந்திரன் அவளை அன்போடும் அனுதாபத்தோடும் பார்த்தார்.

அவள், அவர் அருகில் நெருங்கி குரல் தழுதழுக்க, "என்னை மறந்துவிட மாட்டீர்களே?" என்றாள்.

"இதென்ன அசட்டுக் கேள்வி சுமதி! உயிரை உடல் எப்படி மறக்கும்?"—இதைக் கூறிவிட்டு, "நீ வரமாட்டாய் என்று என் அறிவு கூறினலும், எப்படியும் வந்து விடுவாய் என்று என் மனம் கூறியது. இதோ என் அன்பளிப்பு!" என்று ஒட்டப்பட்ட 'கவர்' ஒன்றை அவள் கையில் கொடுத்தார். என்ன ஒற்றுமை! அவரிடமும் அவளும் அதே மாதிரி 'கவர்' ஒன்றைக் கொடுத்தாள்.

இரயில் ஊதிக் கொண்டு புறப்பட்டது., சற்று நேரத்துக் கெல்லாம் சுமதியின் உள்ளத்தைத் திருடிய கள்வனை வெகு தூரத்துக்கு அப்பால் ரயில் சுமந்து சென்று கொண்டிருந்தது.

வீடு சென்ற சுமதி ஆவலோடு கவரைப் பிரித்துப் பார்த்தாள். உள்ளே சந்திரனின் 'போட்டோ' இருந்தது. அதன்பின் கீழ்க்கண்ட வரிகள் எழுதப்பட்டிருந்தன.

கண்ணின் கடைப் பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு
மாமலையும் ஓர் கடுகாம்.

இந்தப் பிச்சையைத்தானே அவள் அவருக்கு அளிக்க மறுத்தாள். இதைப் படித்தவுடன் அவளுக்கு அனுதாபம் மட்டுமல்ல; ஆச்சரியமும் ஏற்பட்டது. அவருக்கு அவள் கொடுத்த கவரிலும் கடைவிழியில் நிலவு செய்து கடைப் பார்வை காட்டும் அவளுடைய 'போட்டோ' இருந்தது. அதன்பின் கீழ்க்கண்ட வரிகளை எழுதியிருந்தாள்:

கொத்தடிமையாகிக்
குறைபடும் நாட்டுக்கு
மெத்த துணையாகி
இவன் மேன்மையடைக!

அவளுக்கு இப்பொழுதுதான் திருப்தி ஏற்பட்டது. அவர் கேட்ட 'கடைப் பார்வை'யைக் காட்டி 'மேன்மையடைக' என்று ஆசி அளித்து விட்டாள். இனி மாமலியும் அவருக்கு ஓர் கடுகு தானே?

7

சந்திரன் கொரியா சென்ற பிறகு தவறாமல் சுமதிக்குக் கடிதம் எழுதி வந்தார். கொரிய மக்களின் விநோதமான பழக்க வழக்கங்கள் பற்றியும், தென் கொரியாவில் சிங்-மன்-ரீயின் சீரழிவு ஆட்சியில் மக்கள் படும் அல்லல் களைப் பற்றியும் எழுதுவார். ஒரு முறை எழுதியிருந்தார்; "கொரியாவிற்கு வந்திருக்கும் இந்திய வீரர்கள் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடியதைப் பற்றி பத்திரிகைகளில் படித்திருப்பாய். தீபாவளி இந்திய மக்களின் தேசீயப் பண்டிகையென்று இந்திய அரசாங்கம் கொரிய மக்களிடம் பிரச்சாரம் செய்து வருகின்றது. தீபாவளிக்கு அடிப்படையான புராணக் கதையினையும், உழைப்பின் உயர்வை உணர்த்தும் தமிழர் திருநாளான பொங்கல் பற்றியும் கொரியர்களிடம் கூறினேன். அவர்கள் படிப்படியாகத் தமிழ்க் கலாச்சாரத்தைப் புரிந்து பாராட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்."


கடிதங்கள் மூலமாகவே எட்டு மாதங்கள் அவர்களுடைய காதல் வாழ்வு நடந்தது!

இன்னும் ஒரே மாதம்! பிறகு அவரும் அவளும் எத்தனையோ இளம் உள்ளங்கள் பொறுமைப் படும்படியாக வாழ்க்கை நடத்தப் போகிறார்கள்!

காலம் நகர்ந்தது. 'இன்னும் இரண்டே வாரம். நான் உன்னிடம் பறந்து வந்து விடுவேன்!' —அவர் எழுதியிருந்தார்.

நாட்கள் கழிந்தன. 'அப்பாடா, இன்னும் இரண்டே நாட்கள்...' அவள் உள்ளம் மகிழ்ச்சிக் கூத்தாடியது!

"... ... ...!"



நாளை வருகிறார்; நாழிகை நகர மறுத்தது. மணிக்கொரு அலங்காரம்! வாய் ஏதோ பாட்டொன்றை முணு முணுத்துக் கொண்டே யிருந்தது.

இன்று அவள் வாழ்வில் ஓர் இன்ப நாள்! அவர் வரப்போகிறார்!

பால்கனியில் நின்றபடி, கண்கள் பூத்துப் போக வழிமேல் விழி வைத்து அவர் வரவு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர் வரவில்லை. தந்தி வந்தது. இனி எப்பொழுதுமே அவர் அவளைப் பார்க்க வரவே மாட்டார் என்று தந்தி அறிவித்தது— அவர் கொரிய வீரர்களால் சுட்டுக் கொல்லப் பட்டார்!

அவள் பிரக்ஞையற்று மரமெனச் சாய்ந்தாள்!

அதன்பின் மூன்று மாதங்கள் கழிந்தன. அவர் செத்து விட்டார்; அவள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்!

அந்த லட்சிய மனிதர் செத்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்! அவளோ, வாழ்ந்து கொண்டே சாகிறாள்!!

8

இரண்டு ஆண்டுகள் சுகதுக்கங்களின் நினைவிலேயே மீண்டும் வாழ்ந்த பின், சுமதி தன்னுடைய சுய நினைவை அடைந்தாள். தெருவில் நடக்கும் பொங்கல் ஆர வாரங்கள் மீண்டும் அவளுடைய காதுகளில் விழுந்தன.

முதல் பொங்கலன்று சந்திரனுக்கு அறிமுகமானாள்! இரண்டாம் பொங்கலன்று அவரோடு ஊடி, கடைசியில் அன்போடு விடை கொடுத்தனுப்பினாள்! இதோ, மூன்றும் பொங்கலுக்கு இன்னும் இரண்டே நாட்கள்! ஆனால் அவள் உள்ளத்திலோ இனி என்றுமே இன்பம் பொங்க முடியாத நிலை!

வாழ்க்கையை, மணல் விடுநிறம் காட்டி மறையும் வான வில்-கானல் நீர்-கனவு-மாயை என்றெல்லாம் உருவகப்படுத்திய பெரியோர்கள், வாழ்க்கையைப் பற்றி எவ்வளவு உணர்ந்து கூறியிருக்கிறார்கள்!-அவள் இப்படி நினைத்தாள். சிந்தனை செயலற்று விடும்போது தோன்றுவதுதானே வேதாந்தம்?

'காலிங் பெல்' கணகணவென்று ஒலித்து அவளுடைய கவனத்தை இழுத்தது. கன்னங்களில் தாரையிட்டிருந்த கண்ணீர்க் கறையைத் துடைத்து விட்டுக் கொண்டே யாரென்று பார்க்க கீழே சென்றாள். அங்கு ஒரு பஞ்சாபி நின்று கொண்டிருந்தார்.

"நீங்கள்தானே, மிஸ் சுமதி?"

"ஆமாம், நான்தான்! உட்காருங்கள்"

பஞ்சாபி அமர்ந்தார். அவர் முன் அவளும் அமர்ந்தாள்.

"நான் டாக்டர் சந்திரனோடு கொரியாவில் வேலை செய்தவன்.. தங்கமான மனிதரம்மா...!"

அவள் மௌனமாக இருந்தாள்.

"கொரியப் போர்க் களத்திலேயே அவரைப் போல் தன்னலமற்ற சேவை செய்தவர் ஒருவருமில்லை...கடமை, கடமை என்று தான் சதா ஜபித்துக் கொண்டிருப்பார்."

"உங்கள் பெயர்...?"—ஆவலோடு அவள் கேட்டாள்.

"பகதூர் சிங்...! அடிக்கடி உங்கள் போட்டோவைக் காட்டி, உங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்...இந்த வருஷம் பொங்கலுக்கூட உங்களோடு கழிக்கப் போவதாக சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தார். அந்தப் பாவி தென் கொரியர்கள் அவரைக் கம்யூனிஸ்ட் அனுதாபி என்று நினைத்து சுட்டுக் கொன்று விட்டார்கள்."

அவள் கண்கள் கண்ணீரால் நிரம்பின. பஞ்சாபி தொடர்ந்தார்:

"பொங்கல் பண்டிகையைப் பற்றி பெருமையாகப் பேசுவார். அதிலும் அவருடைய வாழ்க்கையில் பொங்கல் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று அடிக்கடி கூறுவார். பொங்கலன்றுதானே நீங்கள் அவருக்கு அறிமுகம் ஆனீர்களாம்...?"

அவளால் பொங்கி வரும் துக்கத்தை அடக்க முடிய வில்லை; அழுதே விட்டாள்!

"அம்மா சுமதி, நீ துக்கம் கொண்டாடியது போதும்! அந்தக் கருப்பு உடையைக் களைந்து விட்டு, வேறு உடை உடுத்திக் கொள்ளம்மா!" என்று கூறிக் கொண்டே சுமதியின் தந்தை உள்ளே நுழைந்தார்.

அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்!


"சந்திரன் இறக்கவில்லை; இன்று வருகிறாராம்! இதோ பார் இந்தத் தந்தியை!"—அவர் விஷயத்தை விளக்கினர்.

சுமதி தந்தியைப் படித்தாள்—அவளுடைய இதயத்தின் தந்திகள் இன்ப நாதம் எழுப்பின!

"யாரம்மா இந்தப் பஞ்சாபி?" சுமதி தந்தையின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே பகதூர் சிங்கைப் பார்த்து, "ஏனய்யா, டாக்டர் சந்திரன் இறந்து போனதாகக் கூறினீர்களே!" என்றாள்.

"உண்மைதான், டாக்டர் சந்திரன் கொரியாவில் இறந்து போயிருக்காவிட்டால் தமிழ் நாட்டில் பகதூர் சிங்காக அவதாரம் எடுத்திருக்க முடியாதே!" என்று கூறிக் கொண்டே தாடியை நீக்கி விட்டு, பகதூர் சிங் சந்திரனாகக் காட்சியளித்தார்!

சுமதி, டாக்டர் சந்திரனுடைய கரங்களில் மகிழ்ச்சிப் பெருக்கால் துவண்டு விழுந்தாள் – தந்தை அருகில் இருப்பதையும் மறந்து!



அவர்களுடைய எதிர்பாராத இன்பத்திற்கு இடையூறாக இருக்க இஷ்டப்படாமல் சந்திரனுடைய கதையைக் கேட்க இருந்த ஆவலையும் அடக்கிக் கொண்டு அவர் அந்த இடத்தை விட்டுப் போய் விட்டார்!

9

அன்று டாக்டர் சந்திரனின் வருகைக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் வகையில் சுமதியின் இல்லத்தில் விருந்தொன்று நடந்தது. கொரியாவில் தன்னுடைய அனுபவங்களை, வந்திருந்த விருந்தினருக்கு விருந்தாக்கிக் கொண்டிருந்தார் சந்திரன்.

"நான் கம்யூனிஸ்ட் அனுதாபி என எண்ணித் தென் கொரியர்கள் என்னைக் கொல்லத் திட்டமிட்டார்கள். நான் ஒரு நாள் காரில் சென்று கொண்டிருந்த பொழுது என்னைக் கொல்வதற்காக அவர்கள் சுட்ட குண்டு என் கார் டிரைவரைக் கொன்று விட்டது. வைத்திய சின்னங்கள் பொறித்த என் அங்கியை அவனுக்குப் போட்டு, இறந்து போனது டாக்டர் சந்திரன் என்று அவர்களை நம்பச் செய்து விட்டு நான் மெதுவாகக் கார் டிரைவரின் உடையில் தப்பித் தலை மறைவானேன். நான் தப்பியதை எப்படியோ அறிந்து கொண்ட அவர்கள் மீண்டும் என்னை வேட்டையாடத் திட்டமிட்டார்கள். ஆகவே, நான் பகதூர்சிங்காக மாறி, அவர்களிடமிருந்து தப்பி, காட்டு வழியெல்லாம் கடந்து, இந்தியக் கப்பலொன்றின் உதவியால் இந்தியா வந்து சேர்ந்தேன். நான் இறந்து போனதாக நம்பிய இந்திய அரசாங்கம் நான் கொடுத்திருந்த சுமதியின் விலாசத்திற்கு என் மரணத்தை அறிவித்து விட்டார்கள்."

உணவையும் மறந்து டாக்டரின் கதையை சுவாரசியமாக, இடையிடையே கேள்விகளுடன் அனைவரும் கேட்டார்கள்.

அவர் எப்படித் தப்பித்து வந்தால் என்ன? அவர் வந்து விட்டார்!

மறுநாள் மூன்றாவது பொங்கல் வந்தது! முதல் பொங்கலை விட, இந்த மூன்றாவது பொங்கல் சுமதிக்கும் டாக்டருக்கும் அதிகமாக இனித்திருக்கும் என்று நான் சொல்வானேன்?

★———❋———★



தாயகமே விழாக்கோலம் பூண்டுள்ளது இன்று !

நேற்றில்லாத பொலிவும் பூரிப்பும் இன்று காண்கின்றோம் !..... நிச்சயம் நாளை நில்லாத தெனினும் இன்று பூரிப்பு பொங்குகிறது !

புத்தாடை உடுத்திய சிற்றிடையாள், 'பூத்த புது மலரை' தன் இடுக்கில் ஏந்தியவாறே, கரும்பைக் கசந்திடச் செய்யும் தன் அத்தானைப் பார்த்ததும், புன்னகை பொங்க பாகுமொழி பேசும் பாலகனைக் காட்டி, அவனின் குறும்புச் செயலை சொல்லி, ஆசை அலை மோதிட தன் தங்கக்கட்டியை கட்டி முத்தமிட, அவளின் மதனன் தன் தாடையைத் தடவியவாறே 'ஏக்கம்' பொங்கும் கண்களோடு எதிரில் உள்ள ஏந்திழையாளை நோக்கி " அந்த வேளையும் வந்திடாதோ, அன்பின் முத்திரையை தந்திடாயோ " என்று கேட்கா மல் கேட்டிடும் காட்சிகளைக் காண்கிறோம் இல்லங்களில் இன்று !

குறும்பு மொழி பேசிடும் மனித குல அரும்புகளின் கையிலே கரும்பும், அதைவிட இனிக்கும் மழலையை வாயிலும் கொண்டு விளையாடுவதைக் காண்கிறோம் இன்று !

ஆடை அலங்காரத்தைக்காட்டி ஆணழகன் விமர்சனம் வேண்டிடும் அணங்கு, அவளின் புதுத் தோற்றத்தையும், பூவை அவளின் பவழ அதரத்திலே ஊஞ்சலாடிடும் புன்னகையையும் மாறி மாறி பார்த்து ரசித்து விட்டு,

" மாத்துக் குறையாத பொன் நகை
மாதுன் அதரத்தில் தவழும்
புன்னகை "

என்று பேசி மகிழும் காதற் புருக்களைக் காணலாம் இன்று !

ஆதவனைத் துயிலெழுப்ப திருப்பள்ளி யெழுச்சி பாடிடும் சேவல் எழுமுன் தான் எழுந்து, வாசற் படியின் அருகே நின்று தன் கணவன் வரும் வண்டி ஓசை கேட்காதோ, என காத்துக் கிடந்து, வீசும் தென்றலிலே மிதந்து வரும் ஓசை கேட்டதும், புள்ளிமான்போல் துள்ளி ஓடி, பொய்க் கோபத்தைப் போர்த்திக் கொண்டு மறைந்து நிற்கும் மங்கை நல்லாள், தன் மணாளனைக் கண்டதும், " அத்தான் " என்றழைத்து அவனைப் பித்தனாக்கி, பின் நீராட அழைத்துச் சென்று இன்பத்தை வேரோடு சுவைத்திடும் இளங் காதலர்களைக் கண்ட இல்லத்தில் உள்ளவர்கள் உள்ளமெல்லாம் களிப்புப் பொங்க காண்கிறோம் இன்று !

கதிரை அறுத்து, களத்திலே அடித்து, பின் உரலிலே இட்டு, உமியைப் போக்கி, அதன்பின் அமுதோடு சேர்த்து, அடுப்பிலே ஏற்றி, அமுது பொங்கும்போது சிங்கார பட்டுடுத்திய சின்னஞ் சிறு சிட்டுகள் " பொங்கலோ பொங்கல் " எனக் கூவிட, பின் பானையை இறக்கி, பந்தி பரிமாறி உண்டு களித்திடுவர் இன்று !

கரும்பைத் தேடிச் செல்லும் சிறுவன்—அவனின் மழலை மொழி கேட்க அலைந்திடும் தாய்—அவனின் மதுர மொழி கேட்க அலைந்திடும் கணவன் ! இவர்களையும் காணலாம் இன்று !

திருமணக்கோலம் கலையாத தம்பதிகளுக்கு மட்டுமல்ல; மணக் கோலம் தாண்டி மக்களை ஈன்று குடும்பம் நடத்தும் நடுத்தர வயதினருக்கும் இன்று மகிழ்ச்சி பொங்குகிறது !

தொட்டிலிட்டு தாலாட்டும் தன் தங்கத் தகட்டின் புன்னகையைக் கண்டு பூரிக்கும் தாயைப் போல, புதுப்பானையில் புத்தரிசி போடு சேர்ந்து பொங்கும் பாலைக் கண்டதும் பெரியோர்களும் களிப்பு பொங்க காட்சி தருகின்றனர் இன்று !

இன்று !..... நேற்றில்லாத விழாக் கோலத்தைக் கொண்டு வந்து விட்டது ! மறைந்து கிடந்த மகிழ்ச்சியினை பொங்கச் செய்கிறது ! கருகிப்போன களிப்பினை மலரச் செய்கிறது ! வாடிய வதனங்களிலேபுத்துணர்ச்சியையும், தேய்ந்துபோன உடல்களிலே புது தெம்பினையும், மறந்துபோன இதழ்களிலே புன்னகையையும் கொண்டு வருகிறது !

இன்று !...நேற்று இல்லாதும் நாளை நில்லாததுமான மகிழ்ச்சியினைக காண்கிறோம் !

இன்று !...அந்த அற்புத இன்பம் எங்கிருந்தோ ஓடி வருகிறது—எப்படியோ ஓடி விடுகிறது ! வானவில் போல அழகாகத் தோன்றுகிறது—மறைகிறது!

செந்நெல் !
செங்கரும்பு !
பொன்னகை !
புன்னகை !
புத்தாடை !

இவ்வளவையும் கண்டு மகிழ்வோரைக் காண்கிறோம் ! ஆனால் இவ்வளவையும் யாரிடம் காண்கிறோம் ? வசதி பெற்றவர்கள்

வீடுகளிலே காண்கிறோம்! நடுத்தர குடும்பங்களிலேகூட காண முடிகிறது ஓரளவிற்கு!

ஆனால் இல்லாதார் இல்லங்களிலே!.....வறுமையின் வலையிலே சிக்குண்டோர் குடிசைகளிலே!...பசியோடு போராடப் பிறந்து, முடிவிலே தோற்றுப் போகும் ஏழைகளின் இருப்பிடங்களிலே!...அந்தப் பொலிவு பொங்கவில்லை!

வயலே தன் வீடாக்கிக் கொண்டவன், வறுமையை தன் செல்வமாக்கிக் கொண்டவன் வாழ்விலே நேற்று மில்லை...இன்று மில்லை... நாளையுமில்லை!

மிட்டாதார்கள், மிராசுதார்கள், பட்டயக்காரர்கள், பண்ணையர்கள், ஜமீன்தார்கள், சுவான்தார்கள், ஆகியோர்கள் பிறந்த நாட்டில்தான் பிறந்தார்கள்—

தம்பிரான்கள் பேசும் தமிழைத்தான் பேசுகிறார்கள்—

ஆதீன கர்த்தர்களும், ஆஸ்தீகர்களும் காட்டும் தெய்வங்களைத்தான் கொண்டாடுகிறார்கள்—

இருப்பினும் பஞ்சைகள் வாழ்வில் கொஞ்சமும் மாற்றம் காணோம்!

பஞ்சத்தை அறியாத பச்சிளங் குழந்தைகள் பக்கத்துவீட்டு பாலகர்கள் அணிந்துள்ள ஆடையைக் காட்டி அழும்போதும், செல்வந்தர்கள் வீட்டில் எழும்பும் 'பொங்கலோ பொங்கல்' என்ற பேரொலியைக் கேட்டு காரணம் கேட்கும் போதும், மணமான நாள் முதல் நடைப் பிணமாக காலந்தள்ளி வரும் மனைவி பெருமூச்செறியும்போதும், மணமாகாத காரணத்தால் இளமையின் இன்ப நினைவுகளைக் கனவு கண்டு கொண்டு கொம்பில்லா கொடி போல துவண்டு கிடக்கும் மகளைக் காணும்போதும், அவர்களின் நிலை என்ன ஆகும்? அவர்களின் இல்லங்களிலே பாலா பொங்கும்?

இன்று கண்ணீர் தானே பொங்கும்!

நாட்டின் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி மற்றொரு பக்கத்தில் கண்ணீர்! ஒரு பக்கத்தில் மலர் தோட்டம்—மற்றோர்புறம் சோகக் குகை இங்கே மணக்காடு - அங்கே பிணக்காடு! இந்த நிலை மாற வேண்டாமா?

சமுதாயத்தின் சவங்களாகக் கிடக்கும் அவர்களுக்கு புத்

ப.உ.சண்முகம்

துணர்ச்சி ஊட்ட வேண்டாமா? பசிபால் பலவந்தமாக சவக் குழிக்கு இழுத்துச் செல்லப்படும் அவர்கள் கரத்தில் பூட்டப்பட்டுள்ள ஏழ்மை எனும் விலங்கை உடைத்தெறிய வேண்டாமா? தொல்லையின் எல்லையிலே, வறுமையின் முள் தொட்டிலிலே ஊஞ்சலாட்டப்படும் அவர்கள், உரிமைக்கும், உயிர்க்கும் கதறுகிறார்கள்! நமனால் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள்! அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா?

ஏழைகளின் அழு குரல்கள் நல்லோர் செவிகளில் விழாத வாறு சீமான்களின் சிரிப்பொலி அடக்கி விடுகிறது போலும்!

வறுமையைக் கண்ணீரால் கழுவ முயலும் அவர்களின் துயரம் குறையாதவாறு சமுதாய அமைப்புகள் ஏற்பட்டு விட்டன போலும்!

வயிற்றிலே பசியையும், கண்களிலேநீர்குளத்தையும்கொண்டு மனமில்லையே ஆயினும் வேறு மார்க்கம் இல்லா காரணத்தால் மரணத்தை ஏற்கும் அத்திக்கற்றோர் குமுறலை அடக்கிடும் சக்தி மனிதர்களுக்கில்லை போலும்! மண் குழிக்குத்தான் உண்டு போலும்! வபதோடு ஒட்டி வரும் மரணம் வெகு தொலைவில் இருந்தும், வறுமைபால் விரட்டப்பட்டு விரைந்து சென்று சவக் குழியில் படுத்துக் கொள்ளும் அந்தப் பஞ்சைகளுக்கு அமைதியை அளிக்க எவராலும் இயலவில்லை போலும்!...எரி நெருப்புக்குத்தான் உண்டு போலும்!

நல்லவர்கள் இதயத்திலே இக் கேள்வி ஆழப் பதிந்தது! கோழைகள் போல் கண்ணீர் வடிப்பதோடு நின்றுர்களில்லை! வறுமையின் வேலியிலே அடைபட்டோரை விடுவிக்க வகுத்

தனர் திட்டம்!.. இல்லை; விரதம் பூண்டனர்!

உண்ணு விரதமல்ல!...

அது தேசியத்தார்களின் மூலதனம்! நாட்டை நமதாக்கி நல்லாட்சி நிறுவி, முதலைகள் வாழும் குட்டைகளை அழித்து, சமதர்மத் தோட்டம் அமைத்திட பூண்டிட்டனர் விரதம்!

இதற்கு 'ஜன சக்தி'யைத் தேடி அலையாதீர்! 'இன சக்தி'யைத் திரட்டுங்கள் போதும்!

அதோ, தி.மு.க.வின் முரசொலி கேட்கிறது! வாருங்கள்! இரு வர்ணக் கொடியை ஏந்தி கிளம்புகிறது திராவிடப் பெரும் படை!

வெற்றி கொட்டுவோம்!
வறுமையை ஒட்டுவோம்!!
கண்ணீரைத் துடைத்திடுவோம்!!!


கண்ணியத்தை நிலை நிறுத்திடுவோம்!!!!

★

அமெரிக்கா, பிரிட்டிஷ் நாடுகளில் வெளியாகும் தங்களுக்குத் தேவையான எந்தப் பத்திரிகைகளுக்கும் தயவுசெய்து சந்தா விவரத்திற்கும் மற்ற விபரங்களுக்கும் உடனே எழுதுங்கள்.

அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள்:

சேலம் அட்வர்டைசிங் சர்வீஸ்,
குகை, சேலம்.



புதுக் கணக்குப் போடுங்கள்!

பேராசிரியர்
கு. அன்பழகன் M.A

இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு வட்டாரங்களும் வெள்ளையரின் அரசியல் தந்திரத்திற்கு ஆட்பட்டு அடிமைப் பட்டதைப் போலத்தான் தமிழ் நிலமும் அடிமைப்பட்டது. ஆங்கிலேயரின் ஆதிக்கம் ஏற்படுமுன் தென்னாடு, சிறப்பாகத் தமிழகம் தனி உரிமையோடு தனி யாட்சியில்தான் இருந்தது.

தென்னாட்டின் எல்லைக்குள் இருந்த பல்வேறு அரசுகளுக்கிடையில் ஆதிக்கப் போட்டி ஏற்பட்ட வெவ்வேறு காலங்களிலும், தமிழகம், தமிழர் அல்லாதார் ஆட்சிக்கும் உட்பட நேர்ந்துள்ளது உண்மைதான் யெனினும் எந்தக் காலத்திலும் வட நாட்டவரின் நேரடியான ஆட்சிக்கு உட்பட்டதில்லை. தென்னாட்டை வடநாடு ஒருபோதும் வென்று அடிமைப் படுத்தியதுமில்லை.

கைபர், போலன் கணவாய் களைத் தாண்டி நுழைந்து, சிந்து நதிக் கரைகளிலே, பாஞ்சால மண்ணிலே சீறிப் போரிட்ட வெளி நாட்டுப் பெரும் படைகளோ, அவற்றின் தீரமிக்கத் தலைவர்களான செங்கிஸ்கான், அலெக்சாண்டர், கோரி, கஜினி, பாபர் முதலியோர்களோ, விந்தியத்திற்குத் தெற்கே அடிவைத்ததுமில்லை.

வடநாட்டிலே பேரரசுகளை நிலைநாட்டி ஆண்ட ஹர்ஷன், கனிஷ்கன், அசோகன், அக்பர், அவுரங்கசீப் போன்றவரும், தென்னாட்டை வென்றதில்லை. அசோகரின் தூபியும் காஞ்சிக்குத் தெற்கே நிலை நாட்டப் பட்டதில்லை. வீரமிக்க சத்ரபதி சிவாஜியும் தெற்கை நோக்கியதில்லை.

ஹர்ஷன்—தெற்கை வெல்லக் கருதினான். விந்தியத்திற்குத் தெற்கே அவன் படை நுழைந்தது. ஆனால் சாளுக்கிய மன்னன் புலிகேசியின் படை, நுழைந்த படையை விரட்டியடித்தது. ஆம், அப்படிப்பட்ட ஆற்றல் மிக்க புலிகேசியும் தெற்கிலுள்ள தமிழகத்தை வெல்லக்கூடவில்லை. மாறாக அவனது தலைநகரமாகிய 'கல்யாணி'யிலேயே அவனைத் தோற்கடித்தான், நரசிம்ம பல்லவ மல்லனது படைத் தலைவனாகிய பரஞ்ஜோதி. பரஞ்ஜோதியின் படை, கல்யாணி நகரையே தீக்கு இரையாக்கி—வெற்றி ஆரவாரம் செய்திருப்பதாக அறிகிறோம்!

இமயத்தில் புலிக்கொடி பொறித்த கரிகால் வளவன், ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியன், கனக விசயரைக் கல் சுமந்து வரச் செய்த சேரன் செங்குட்டுவன், ஈழம் கொண்ட இராசராசன், கடாரம் வென்ற இராசேந்திரன், கங்கைகொண்ட சோழன்—முதலான மன்னர் பலரும், வடக்கை வென்ற செய்தி உண்டே தவிர்த்து—வடக்கு, தெற்கை வென்ற செய்தி வரலாற்றிலேயே இல்லை. ஆனால், இன்று வடக்கு, தெற்கை வாள் ஏந்தாமலே, படை திரட்டாமலே, 'போர்' என்று முழங்காமலே வெற்றி கொண்டு விட்ட நிலையைக் காண்கிறோம்! ஏனோ இந்த இழி நிலை?

வெள்ளையர் ஆதிக்கத்தை வடவர் மட்டுந்தான் எதிர்த்தனரா? விடுதலைப் போரில் தென்னாடு பங்கு கொள்ள வில்லையா? அதனால்தான் 'தெற்கு' வாழ்வுக்கு உரிமை பெறவில்லை என்று எவரேனும் கூற முடியுமா?

உண்மையில், வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து அவர்கட்கு இடந்தர மறுத்துப் போரிட்டதில், வடநாட்டிற்குத் தென்னாடு பின்னிடவில்லை. வடநாட்டில் பாதுஷாக்களும், ஜான்சி ராணியும் என்றால், தென்னாட்டில் திப்பு சுல்தானும், வீரபாண்டியன் கடடபொம்மனும் இறுதி வரை எதிர்த்துப் போரிடத்தவறவில்லை.

வெள்ளையரிடமிருந்து விடுதலை பெறத் தொடுக்கப்பட்ட நெடு நாள் போரிலும் வடநாடு செய்த தியாகத்தைத் தென்னாடு செய்ய வில்லை என்று கூறவியலாது.

வடக்கே பகவத்சிங் எனில் தெற்கே திருப்பூர் குமரன்; வடக்கே லோகமான்ய பாலகங்காதர திலகர் எனில் தெற்கே கப்பலோட்டி, செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்; வடக்கே லாலா லஜபதிராய், பிபின் சந்திர பாலர் எனில் தெற்கே வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய சிவா முதலியார்; வடக்கே கவிஞர் தாகூர் எனில் தெற்கே தேசியக்

கவிஞர் பாரதியார்; வடக்கே சர்தார் படேல் எனில் தெற்கே சத்திய மூர்த்தி; வடக்கே இராசேந்திர பிரசாத் எனில் தெற்கே ஓமந்தூர் இராமசாமி; வடக்கே ஆச்சார்ய கிருபாலனி எனில் தெற்கே டாக்டர் வரதராசலு; வடக்கே மோதிலால் எனில் தெற்கே சீனிவாசய்யங்கார்; வடக்கே சுபாஷ்போஸ் எனில் தெற்கே ஈரோட்டு இராமசாமி; வடக்கே நேரு எனில் தெற்கே ஆச்சாரியார்; வடக்கே அபுல்கலாம் ஆசாத் எனில் தெற்கே காமராஜர்; வடக்கே தேபர் எனில் தெற்கே கக்கன்; வடக்கே உலகைத் திருத்திய உத்தமர் காந்தியடிகள் எனில் தெற்கே அறவழி வளர்த்த அண்ணல் திரு.வி.க.–இவ்வாறு எண்ணினால் வடக்குக்கு ஈடாகத் தெற்கும் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ளது விளங்கும்.

தோன்றிய தியாகிகளின் பட்டியலையும் சேர்த்துப் பார்த்தால் திராவிடத்தின் பங்கு–தெற்கின் தியாகம் எவ்வளவு சிறப்புடையது என்பது விளங்கும்.

வடநாட்டுத் தலைவர்களின் பேரும் புகழும் பெரிதாயிற்றே என்றும் சிலர் கூறலாம். அதற்கும் காரணங்கள் பல. தென்னாட்டில் மக்களிடையே நிலவிய சாதீயஉணர்ச்சியும், பார்ப்பனீய ஆதிக்கமும், தென்னாட்டுத் தலைவர்களின் தியாகத்தைச் சிறப்பித்துக் காட்டுவதற்குப் பதில், மறைத்து மங்கவும் செய்தன. தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் புகழ் நிலைபெறவே நெடுங்காலம் கழிந்தது எனில், மற்றவர்கள் 'புகழ்' ஒளி மங்கியதில் வியப்பென்ன?

தென்னாட்டுத் திலகங்கட்கு, இங்கேயே 'ஒளி' நிலவாத

தொடர்பு–வடக்கிற்கும் தெற்கிற்கும் ஏற்படலாயிற்று.

மேலும், ஆட்சி பீடமான 'டில்லி' வடக்கே அமைந்தது; இந்தியக் கலைப் பண்பாட்டை–நாகரிகத்தைப் புலப்படுத்துவது 'வடமொழியே' (சமஸ்கிருதம்) என்று மேல் நாட்டார் கருதியது; இந்தியாவின் மக்களுள் 'இந்தி மொழியே' அதிக எண்ணிக்கை உள்ள மக்களால் பேசப்படும் மொழியாகக் காணப்பட்டது; பெரும் ஆலைத் தொழிற்சாலைகளும் வடநாட்டு முதலாளிகளே முதலில் தோற்றுவித்தது; காந்தி அடிகள் காங்கிரசின் தலைவராக அமைந்தது; வாரிசும் அங்கேயே பிறந்தது ஆகிய அனைத்தும் சேர்ந்து 'வடக்கின்' செல்வாக்கை மிகுதியும் வளர்த்து விட்டன. அதனால் வடநாட்டுத் தலைவர்களின் புகழும் ஓங்கலாயிற்று.

★ தேசியத்தைப் பின்பற்றியது தெற்கு; சுதேசியப் போர்வையில் சுரண்டல் நடத்தியது வடக்கு. 'தியாகம்' என்று நம்பி தெற்கு குருதியைக் கொட்டியது; 'தாகம்' என்று கூறி வடக்கு அதையே பருகியது. தெற்கு குடிசைக் காடு ஆயிற்று; வடக்கு ஆலை அரசு ஆயிற்று.....!

இந்தத் தென்னாட்டுத் தலைவர்களின் தகுதியும், திறமையும், தொண்டும், நோக்கமும், வடநாட்டுத் தலைவர்கள் கொண்டிருந்ததைவிட எவ்விதத்திலும் தாழ்ந்தனவாகா என்பதும் தெளிவாகும்.

ஆனால் வடக்கே மேலும் பலரைக் குறிப்பிடலாமே என்று எண்ணலாம். ஆம், குறிப்பிடலாம்! ஆனால் வடநாட்டு மக்கள் தொகையும் தென்னாட்டினரைப் போல் இரண்டு மடங்கு (அதற்குச் சிறிது மேலும்) ஆகும் என்பதை எண்ணின் அது பெரிதல்ல என்பது விளங்கும். மேலும் 'தெற்கில்' என்று நான் குறிப்பிட்டுள்ள அவ்வளவு பேரும் தமிழ் நாட்டில் மட்டுமே தோன்றியவர்கள். இனி ஆந்திரம், கன்னடம், கேரளம், (முன்னால் ஹைதராபாத், மைசூர், திருவாங்கூர், கொச்சின் உட்பட) ஆகியவற்றில்

போது 'வடக்கே' எப்படி 'ஒளி' வீசும்? நிலவிய அந்த மங்கிய ஒளியைத்தான் வடவர் போற்றுவார்களா? இன வெறியில் மூழ்கித் திளைத்து, தம்மினத் தோன்றல்களையே நாளும் கண்டு, அவர்களது பெருமையும் புகழும் ஓங்குவதில் பெருமிதம் கொண்டவர்கள், 'வேறு இனத்தவரை'ப் பற்றி எண்ணவும் இடமில்லையன்றே? எனவேதான், டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் — தென்னாட்டுத் தலைவர்களைப் போற்றவுமில்லை; அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பவுமில்லை.

ஆண்டை வீட்டுக் குழந்தையின் படந்தான் வேலையாள் வீட்டில் இருக்குமே தவிர, வேலையாளின் குழந்தையின் படம் ஆண்டை வீட்டில் இருப்பதுண்டோ? அரசியல் விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த போதுதான் அது போன்ற ஒரு

ஆதிக்கப் பீடத்தினரும், அவர்களிடம் இறங்கி வந்து பேசலாயினர். 'சூழ் நிலை' அவ்வாறு வடவரை உயர்த்தியது.

எனவே, வடநாடு போற்றுதல் காரணத்தால், தென்னாட்டுத் தலைவர்கள் செய்த தியாகம் குறைவு என்றோ, வெளியுலகப் புகழும் பாராட்டும் கிடைக்காத காரணத்தால், தென்னாடு விடுதலைப் போரில் செலுத்திய பங்கு குறைவு என்றோ எவரும் கூற முடியாது.

நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் நடத்திய விடுதலைப் படையிலும் தென்னாட்டுத் தியாகிகள் பங்கு கொண்டுள்ளனர்.

உப்பு எடுக்கும் அறப்போர் எனினும், கள்ளுக் கடை மறியல் ஆனாலும், பல்லாயிரக் கணக்கான தென்னாட்டவரும் பங்கு கொண்டுள்ளனர். தடியடியையும், துப்பாக்கித் துளைத்தலையும்,

சிறைப்படுதலையும், செக்கிழுத்தலையும், சொத்து, சுகம் இழத்தலையும், மனைவி மக்கள் துறத்தலையும், நாடு கடத்தலையும், நடுங்கும் துயரத்தையும் தென்னாடு தாங்கிக் கொள்ளத்தான் செய்தது.

உலகப் பெரும் போரில், நீதியும் நியாயமும் நிலைக்க இந்தியப் படையில் ஏராளமாகச் சேர்ந்து போராடிய பெருமையும் தென்னாட்டிற்கு உண்டு.

1942, ஆகஸ்டுப் போராட்டத்திலும், தந்திக் கம்பியை அறுக்கவோ, தண்டவாளத்தைப் பெயர்க்கவோ தென்னாடு தயங்கவில்லை. தெற்கிலும் 'தூக்கு மேடை' சிலரை அழைக்கத்தான் செய்தது. தெற்கு பெற்ற தியாகத் தழும்பும் சிறிதல்ல, சில காலத்தில் மறைவதுமல்ல.

விடுதலைப் போரில் தென்னாட்டில் வாழ்விழந்து வதைந்தோர் பலர். சையற்றுக் கண்ணீர் சிந்தியவர் கோடி. வெள்ளையர் வெளியேறிய பின்பே உள்ளத்திலே எரிந்த உரிமைத்தீ அடங்கப் பெற்று அமைதி கண்டவர் மிகப் பலர்.

அது மட்டுமன்று; வடக்கு, தெற்கு என்ற வேறுபாட்டிற்குக் காரணமான இன உணர்ச்சியை வடவர்கள் மட்டுமன்றி வடநாட்டுத் தலைவர்களே கொண்டிருந்ததை அறிந்துங்கூட (அறிந்தவர்கள் வ. உ. சிதம்பரனார், எஸ். சீனிவாச ஐயங்கார், சத்திய மூர்த்தி முதலியோர்) தமது விடுதலை வேட்கையால், வடநாட்டுத் தலைவர்களே பெரும்பாலும் கட்டளை இடுபவர்களாக இருந்த போதுங்கூட, தென்னாட்டார் அவர்களோடு தோளோடு தோள் இணைத்து நின்று உரிமைப் போர் நிகழ்த்தியுள்ளனர்.

நாட்டு நலத்திற்கான உழைப்பிலும் தென்னாடு பின் தங்கவில்லை. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தது தென்னாடே. குடிசைத் தொழில்,



வடக்கு ஆலை அரசு ஆயிற்று.....

கதர் உற்பத்தி, தக்ளி நூற்றல், இவைகளில் முதலிடம் பெற்றுத் தேசீயத் தொண்டை வளர்த்ததும் தெற்கு. வெளி நாட்டு ஆலைத் துணியைக்(கொளுத்திக்) கைவிட்டு, வெளி நாட்டுப் பொருள்களை வாங்க மறுத்தவரும் தென்னாட்டார்.

ஆலைத் தொழில்களிலும்.இயந்திரப் பெருக்கத்திலும் முனைந்து நின்று குடிசைத் தொழிலையே நசிக்கச் செய்தது வடநாடு. 'கதர்' உற்பத்தி ஓங்கவில்லை வடக்கே. வெளி நாட்டுக் கருவிகளும் இயந்திரங்களும் ஏராளமாக வாவழைக்கலாயினர் வடநாட்டார். தமது ஆலைகளிலே தயாரித்த ஏராளமான பொருளுக்கும், தமக்கு வணிக உரிமை கிடைத்துள்ள வெளி நாட்டுப் பொருளுக்கும் 'தென்னாட்டை'ச் சந்தையாக்கினர் வட நாட்டு வணிகர்.

ஆம், தேசியத்தைப் பின் பற்றியது தெற்கு; சுதேசியப் போர்வையில் சுரண்டல் நடத்தியது வடக்கு. 'தியாகம்' என்று நம்பி தெற்கு குருதியைக் கொட்டியது; 'தாகம்' என்று கூறி வடக்கு அதையே பருகியது. தெற்கு குடிசைக் காடு ஆயிற்று; வடக்கு ஆலை அரசு ஆயிற்று.

ஆனால், தியாக உணர்ச்சியில் மூழ்கிய தெற்கு இதை உணரவில்லை. மாறாக,வடக்கு வளர்வதைக் கண்டு, புதிய புதிய ஆலைகள் எழுவதைக் கண்டு, நாளும் வளரும் சேயைக் காணும் தாயெனப் பெருமையும் கொள்ளலாயிற்று. "மேலைத் திசையினில் வளரும் தொழில்கலெல்லாம் மெத்த வளர்கிறது நம் பாரதத்தில்! வளரட்டும் ஆலைகள்! வளம் ஓங்கட்டும் பாரதம்!" என்றே எண்ணினர் தென்னாட்டார். வாத்து முட்டையையும் அடை காத்த கோழியாயினர் தென்னாட்டார்!

வடக்கும் - உதட்டளவிலே இனிக்கப் பேசி, உடல் உரசலைப் பொறுத்துக் கொண்டு அடிமடியிலே கை வைக்கும் கள்ளியைப் போல், ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணுங்கருத்தாய் தன் வாணிப வேட்டைக்கு, சுரண்டல் முறைக்கு இடையூறு இல்லாத வகையில் தெற்குடன் குழைவதாயிற்று.

மற்றும், தென்னாடு வடநாட்டிற்கு நேரடியாகவே செய்த உதவிகளும் பல. வடக்கே குவெட்டா பூகம்பம், அஸ்ஸாம் அழிவு, பஞ்சாப் வெள்ளம், இந்து-முஸல்மான் கலகம்— என்று எதிர்பாராது ஏற்பட்ட ஒவ்வொரு பேராபத்தின் போதும், தமக்கே வந்துற்றதாகக் கொண்டு துன்பத்திற்கு ஆளான மக்களுக்குப் பெரும் பொருள் திரட்டி அனுப்பியுள்ளது.

தென்னாட்டில் கிடைக்கக் கூடிய கனிப் பொருள்களை (நிலக்கரி, இரும்பு போன்றவை) வெட்டியெடுக்கும் உரிமையை டில்லி அரசு கைக்கொள்ள இடந்தருகிறது தென்னாடு. தென்னாட்டில், சிமண்ட், சோடா ஆஷ், அலுமினியம் போன்ற பல்வேறு தொழிற்சாலைகளை நடத்தும் உரிமையும் வடநாட்டு முதலாளிகளுக்கு வழங்கப் படுவதைத் தென்னாடு தடுக்கவில்லை. பஞ்சாப், சிந்து, வங்காளம் ஆகிய வடநாடுகளிலிருந்து வரும் அகதி

கள் குடியேற இடங் தந்து, தொழில் செய்யப் பொருள் உதவி, வளம்பெற வழிசெய்து தரவும் தென்னாடு தயங்க வில்லை. தாய் தன்சையிலே கிண்ணிப் பிச்சை எடுக்க, மகன் குடந்தையிலே கோதானம் கொடுத்த கதைபோல, இன்றும் தென்னாடு தாராள மாகத்தான் நடந்து கொள்கிறது.

வெள்ளையரை வெளியேற்றுவதற்காக மட்டுமன்றி, வட நாட்டாருக்கு உதவுவதற்காகவும், ஒரே தேசம் என்ற நம்பிக்கையாலும் தென்னாடு ஏற்றுக் கொண்டுள்ள இழப்பு ஏராளம்! ஏராளம்! தியாகம் அல்ல, ஏமாற்றம் பெரிது! மிகப் பெரிது!

ஆனால் வடநாடு தென்னாட்டிற்குச் சாதித்த நன்மைகள்யாவை? தென்னாட்டிற்கு, இந்த "தேசியம்" தந்த பலன்கள் யாவை? தென்னாட்டுத் தலைவர்களைத் தான் போற்றவில்லை; மக்களையேனும் வாழச் செய்ததா? வாழவிட்டதா வடநாடு?

தென்னாட்டில் மூன்றாண்டுகட்கு முன்னர் கோரப் புயல் வீசியதை யாரும் மறந்திருக்க வியலாது. (அதன் கொடுமையினின்றும் மக்கள் மீள்வதற்கு முன்னால்தான், மறுபடியும் இவ்வாண்டு கொடும் புயலும் கடுமழையும் தமிழர்களைத் தவித்துத் தத்தளித்து மடியச் செய்து விட்டதே!) அந்தப் புயலின் கொடுமைக்குத் தமிழ்நாடு ஆளான போது, வடநாட்டில் ஒரு மூலையில் வெள்ளம் என்றால் ஓடி உதவும் மத்திய அரசு திரும்பியும் பார்க்கவில்லை. வட நாட்டவர் எவரும் கவலைப்படவில்லை; கவலைப் படுவதாகக் கண் துடைக்கவும் முன் வரவில்லை. இத்தடவையும் மத்திய அரசு-கண்டனத்தைத் தவிர்க்க, கடமையை ஓரளவு செய்கிறதேயன்றி, உண்மையான பற்றினால், கவலையால் அல்ல. வடவர்கள் இன்றுங் கூடத் திரும்பிப் பார்க்க வில்லை.

தென்னாட்டில் உணவுப் பொருளுக்குப் பஞ்சம் ஏற்பட்ட போதும் வடக்குகவனிக்கவில்லை. வட நாட்டினின்றும் வாங்கப்பட்ட அரிசி, சர்க்கரை போன்ற பொருள்சட்கு ஒன்றுக்கு இரண்டாக விலை பெற்றுக் கொண்டனர். வெளி நாடுகளில் அதை விட மலிவாக 'அரிசி' விற்கத் தயாராகத்தான் இருந்தனர். ஆனால் டில்லி ஆட்சி பீடம் அவர்களிடமிருந்து அரிசி வாங்க அனுமதி அளிக்கவில்லை. அதனால் தென்னாட்டிற்குக் கோடிக் கணக்கான ரூபாய் இழப்பு. அதே சமயத்தில்தான் வட நாட்டு அமைச்சர் ஒருவர், புண்ணாக்கை உண்ணலாமே என்று ஆலோசனை கூறினார். மக்களோ தழை, வேர், கிழங்கு இவற்றைத் தின்னும் கொடுமைக்கு ஆளாகியிருந்தனர்; மடிந்தவர்களும் மிகப் பலர்.



...தெற்கு குடிசைக் காடு ஆயிற்று!

தென்னாட்டுக் கைத்தறி நெசவாளர்-பல லட்சம் பேர் நூல் இன்றி, வேலையின்றி, பிழைப்பின்றி அலைந்து நொந்தனர். நாடெங்கும் அவர்களது வேதனைக் குரல்! மரணச் செய்தி வராத நாளில்லை. அவர்களது துயர் துடைப்பதில் 'டில்லி' காட்டிய அலட்சியம் அளவிடக் கூடியதன்று. இன்றளவும், ஏழை நெசவாளர் பிழைப்பு கெடாமல் இருக்க, ஆலைகள், வேட்டியும் புடவையும் நெசவு செய்வதைத் தடுக்கவும் முன் வரவில்லை.

தென்னாட்டார் குடியேறியுள்ள வெளிநாடுகள் பல. அவற்றில் இறைக்கப்படும் கொடுமைகளைக் களைவதில் 'டில்லி' ஈடுபடவில்லை. தென்னாப்பிரிக்கா, கேட்டால், மடகாஸ்கர், சுமத்ரா, கோவா, இந்தோ சீனா, பர்மா, மலேயா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் பாடுபட்டு உழைத்து வயிறு வளர்க்கச் சென்ற தமிழர் படும் துன்பம் அளவிடற்பாற்றன்று. தாயகத்தில் உறையும் தமது குடும்பத்தாருக்குப் பொருள் அனுப்பவும் பல நாடுகளில் தடை. சிலவற்றில், அங்கு வாழவே உரிமை மறுக்கப்படுகிறது.

இலங்கையில் குடியேறியுள்ள தென்னாட்டார் இன்று குடியுரிமை மறுக்கப்பட்டு விரட்டப்படுகின்றனர். திரும்பி வரும் அவர்களது வாழ்வுக்கும் வழி செய்யப்படவில்லை. வெளி நாடு செல்லும்போது இருந்த சிறு நம்பிக்கையையும் இழந்து விட்டுத்தான் தாயகம் திரும்புகின்றனர். அவர்களது "அவலக் குரல்" கேட்கப்படவில்லை. தென்னாட்டு அதிகாரிகளுக்கு நாதியுமில்லை டில்லியில். டில்லியில் மட்டுந்தானே? அதன் ஆதிக்கத்தில் உள்ள அரசு பீடங்களிலேயே நாதியில்லை.

தென்னாட்டில் வறுமை மிகுதி. ஒரு விவசாயக் குடும்பத்தின் சராசரி வருமானம், இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிகக் குறைவு. பொதுவாகவே தென்னாட்டவரின் வருமானத்தைப் போல், வட நாட்டவரின் வருமானம் ஏறத்தாழ இரண்டு மடங்காக இருக்கின்றது. இந்நிலையில் நாட்டை வளப்படுத்த என்று தீட்டப்படும் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஓர வஞ்சனையாக வடக்கிற்கே பெரும் பொருளைச் செலவிடுவனவாக உள்ளன. தென்னாட்டிற்கு நியாயமாக உரியதும் வடக்கிற்கே சேருகிறது.

கிருஷ்ணலீலைக்கு மறுப்பு!

1940-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி ஜி. டி. நாயுடு அவர்கள் அமெரிக்காவில் சிகாகோ நகரில் இருந்தார். அங்கு ஒரு ஓட்டலில் தங்கி இருந்தார். அந்த ஓட்டலில் புத்தாண்டுக் கொண்டாட்டம் குடி, கூத்தோடு நடந்தது. ஜி. டி. நாயுடு பார்வையாளராக மட்டுமே அதில் கலந்து கொண்டார்; குடி, கூத்தில் கலந்துகொள்ளவில்லை. இரவு, அவர் படுக்கைக்குப் போன பின், கதவைத் தட்டும் ஓசை கேட்டு கதவைத் திறந்தார்.



நான்கு அழகிய பெண்மணிகள் உள்ளே நுழைந்து, அவர் மீது விழுந்து சேஷ்டைகளை ஆரம்பித்து விட்டார்கள்! நாயுடுவின் நிலை தர்ம சங்கடமாகிவிட்டது. அந்தப் பெண்களோ குடி வெறியில் இருந்தார்கள்! அவர்களை மெதுவாக வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினார். அவர்களோ விடாப் பிடியாக உள்ளே நுழைந்து, குடிவெறியில் மயங்கி அங்கங்கே அப்படியே தூங்கி விட்டனர். நாயுடு இந்த அதிசயத்தைப் பார்த்து இரவு முழுவதும் விழித்துக் கொண்டே யிருந்தார். காலையில் எழுந்தவுடன் அந்தப் பெண்கள் தங்கள் நடத்தைக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டு வெளியேறினர்.

மக்கள் தொகையின்படி கவனித்தால், திட்டச் செலவுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு தென்னாட்டுக்குச் செலவழிக்கப் படவேண்டும். ஏற்கனவே புறக்கணிக்கப்பட்டதற்காக, இப்பொழுது நியாயம் வழங்குவது எனிலோ—தொகையில் இரண்டில் ஒரு பங்கும், (பாதி) அதற்கு மேலும் ஒதுக்க வேண்டும். ஆனால் ஒதுக்கியதோ, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 7-ல் 1-பங்கும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 5-ல் 1-பங்குந்தான். தென்னாட்டிற்கு உரிய பங்கே வழங்கப்படவில்லை எனில், முன்னர் புறக்கணிக்கப்பட்டதற்காக இப்பொழுது அதிகப் பங்கு கிடைக்குமென்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?

தென்னாட்டிலோ வேலையற்றோர் தொகை பெருகி நிற்கிறது. அவர்களுள் படித்தவர்களும், தொழில் கற்றவர்களும் பலர். அவர்களெல்லாம் வாழ்வுக்கு வழி காண வேண்டுமெனில், தொழிற்சாலைகள் பல தோன்ற வேண்டும். 'டில்லி' அரசு தென்னாட்டைக் கவனிக்க வில்லை. "வட நாடோ" போட்டி உணர்ச்சியுடன் தொழில் நிலையங்களைக் கைப்பற்றுகிறது. இந்நிலையில் தென்னாட்டவருக்குப் பிழைக்கும் வழி எங்கே?

ஆலை இல்லை, வேலை இல்லை, தொழில்இல்லை, ஊதியம் இல்லை, உண்ண வழியில்லை, வாழும் வழி ஏதும் இல்லை—என்று எண்ணி ஏங்குகின்றனர், தென்னாட்டு மக்கள்.

ஆனால் ... மார்வாரி, குஜராத்தி, சிந்தி, பார்சி முதலியோர் தென்னாட்டவரைச் சுரண்டி வளம் பெறுகின்றனர்.

வட நாட்டினின்றும் அகதிகளாக வருவோரும் ஐந்தாறு ஆண்டுகளில் பெருஞ் செல்வர்களாகின்றனர்.

பெரும் பெரும் பொதுநலத் திட்டங்கள் (பலகோடி பொருட் செலவில்) நிறைவேறுகின்றன.

ஆலைகளும், தொழிற்சாலைகளும், ஆராய்ச்சி நிலையங்களும் பெருகி வடக்கு வளம் பெறுகின்றது.

காஷ்மீரமும், நேப்பாளமும், இராசபுதனப் பாலை வனமும், அஸ்ஸாம் காடும்—பேருதவிகள் பெறுகின்றன.

"இந்தி" கையிலே கோலேந்தி அரியாசனம் ஏறியுள்ளது.

"டில்லி" புதுப் பொலிவு பெற்றுத் திகழ்கிறது.

டில்லி லண்டனாகி, பெர்லின் ஆகிறது. அகமதாபாத் லங்காஷையர் ஆகிறது. பம்பாய் நியூயார்க் ஆகிறது.


ஆம் இதுவே ஒரு நூற்றாண்டுக்கும் உட்பட்ட கால அளவில்-வெள்ளையர் புகுந்துவெளியேறிய நிகழ்ச்சிகளின் பயனும் – தென்னாடும் வட நாடும் இணைந்து நிற்கும் அமைப்பின் பலாபலன்களாகும்.

வடக்கும், தெற்கும், மேற்கை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நின்றதன் விளைவுதான் இன்று வடக்கு மேடாகித் தெற்கு கீழாகி உள்ள நிலை.

"அரசியல் விடுதலை" என்னும் இலாபத்தைக் கருதி நடத்திய கூட்டு வாணிபத்தில் ஏமாந்து விட்டதன் விளைவுதான் இன்றைய தென்னாட்டின் தாழ்வு தேய்ந்த நிலை.

அடுத்த வீட்டு அலமுவை அவள் கொண்டுவரச் சொல்லி, தான் உமி கொண்டு வந்து, இரண்டையும் கலந்து, அவளை ஊதச் சொல்லி, தான் தின்று பழகிய அகிலாண்டத்திற்கு, அலமுதான் உயிர் நட்பாம். அது போலத்தான் உள்ளது, இன்று வடநாடு தென்னாட்டோடு கொண்டுள்ள உறவு, ஒற்றுமை எல்லாம். ஆனால், ஏமாற்றம், இழப்பு, ஏக்கம், துயரம், தொல்லை யாவும் தென்னாட்டுக்குத்தான்! இன்னும் ஏன் இந்த நிலை? பொங்கல் வந்ததன்றோ? புத்தாண்டும் பிறப்பதன்றோ? புத்தாண்டு பிறந்ததும் புதுக்கணக்கு போடுவதுண்டல்லவா? ஆம்-இன்மீற புதுக்கணக்குப் போடுங்கள் அரசியலில்! திராவிடநாடு திராவிடருக்காக உறுதி கொள்ளுங்கள்! ஃ

அரங்கில் நாம்



சென்ற ஆண்டு பேரூரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில், தி. மு. கழக தோழர்கள் தொழிற் சங்கங்களில் நேரடியாகக் கலந்து பணியாற்ற வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

நாம் தொழிற் சங்க இயக்கத்திற்கு புதியவர்களல்ல. முதன் முதல் இந்திய உப கண்டத்திலேயே, தொழிற் சங்க இயக்கத்தை தலைமை தாங்கிய பெருமை நம் திராவிட இயக்கத்தின் பரம்பரையினருக்கே உரியதாகும்.

பத்து லட்சம் ரயில்வே தொழிலாளர்களைக் கொண்ட இந்திய உப கண்டத்தில் முதன் முதலில் 1918-ம் ஆண்டுநாகையில்தான் ரயில்வே தொழிலாளர்களுக்கென்று தொழிற் சங்கம் அமைக்கப்பட்டது. அந்த நாளில் அந்த சங்கத்தை தலைமை தாங்கி நடத்துகின்ற பொறுப்பை ஏற்றவர் நம் திராவிட பரம்பரையிலே உதித்த ரங்கோன் பக்கிரிசாமி (பிள்ளை) என்பவர்தான்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றது அந்த நாட்டின் ரயில்வே. அத்தகைய போக்கு வரத்து ஸ்தாபனத்தின் அதிபர்களாய் அன்று வீற்றிருந்தவர்கள் வெள்ளைக்கார முதலாளிகள். குறைந்த முதலீட்டில், தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி, அவர்களை வாட்டி வதைத்து, கொள்ளை லாபம் அடித்து வந்த வெள்ளை முதலாளிகளை தட்டிக் கேட்க தொழிலாளர்கள் எழுப்பிய முதல் முரசொலிதான் நாகையில் அவர்கள் ஆரம்பித்துக் கொண்ட தொழிற் சங்கம்!

இன்றைக்கு யார் யாரோ தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறோம் என கர்ஜனை புரிந்து, தொழிலாளரின் உழைப்பிலே தாங்கள் தலைவர்களாகவும், சுகபோகிகளாகவும் உலவுகின்றார்களே, அதுபோல அல்ல அன்றையதினம் தொழிலாளர் தலைவர்களின் நிலை.

அன்றைய தினம் ரயில்வே தொழிற் சங்கத்தின் தலைவராக இருந்த திரு.பக்கிரிசாமி (பிள்ளை) அவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் உண்மை ஊழியராவார். தொழிலாளர்களின் உழைப்பிலே தனது வாழ்க்கையை நடத்த வேண்டிய அவசியமில்லாத பெரிய தனவான் குடும்பத்தைச் சேர்ந்தவர். தன்னுடைய சொத்து சுகங்களின் பெரும் பகுதியினை தொழிலாளர்களின் நலனுக்காகவே அர்ப்பணித்து அன்றைய தினம் தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தைக் கட்டி வளர்த்த உண்மைத் தலைவர்.

அன்றைக்கிருந்த வெள்ளைக்கார நிர்வாகம் தொழிலாளர்களின் நலனில் அக்கறையற்று அவர்களின் உழைப்பினை உறிஞ்சுவதிலே மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்து, தனது சுரண்டல் இயந்திரத்தை முழு வேகத்துடன் சுழல விட்டுக் கொண்டிருந்தது. அத்தகைய பலம் பொருந்திய ஒரு சுரண்டல் நிர்வாகத்தை எதிர்த்து, கட்டுப்பாடான முறையில், பல போராட்டங்களை நடத்தி, தொழிலாளர்களின் உள்ளன்பையும், ஒற்றுமை உணர்ச்சியையும் வளர்த்து, தொழிலாளர்களின் கலங்கரை விளக்காக தொழிற் சங்கம் பணியாற்றியது. அன்றைய தினம், ரயில்வே தொழிற் சங்க போராட்ட அரங்கிலே பெரும் பங்கினை ஏற்று சலியாது பணியாற்றிய தலைவர்கள்தான் சிந்தனை சிற்பி சிங்காரவேலு, திரு. வி. கலியாண சுந்தரனார், டாக்டர் வரதராஜலுநாயுடு, பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோர். அவர்களின்பெரும் பணியால் ரயில்வே தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியும், சுயமரியாதை மணமும் வீச ஆரம்பித்தது. எந்தத் தொழிலாளியின் கரத்திலேயும் "குடியரசு" இதழ் மணம் பரப்பித் தவழ தயங்கியதில்லை.

கடமை வழி நின்று பணியாற்றும் நல்ல தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற்ற தென்

பொன்மலை பராங்குசம்

னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம், சுமார் 2500 சதுர மைல் பரப்பளவிலுள்ள தென்னிந்திய ரயில்வே முழுவதிலும் உள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களையும் ஒன்று படுத்தி, பலஇடங்களிலும் கிளைகள் ஏற்படுத்தி, பலமிக்க தொரு தொழிற் சங்கமாக உருவாக்கியது. இத்தகைய மாபெரும் ஒன்றுபட்ட சக்தியை, சுரண்டல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட வெள்ளை முதலாளித்துவம் எப்படி கண் குளிரக் கண்டு கொண்டிருக்க முடியும்?

எனவே, தொழிலாளரின் அணிவகுப்பை சிதறடிக்கத் திட்டம் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்ட அந்த நிர்வாகம் "ஆள் குறைப்பு" என்ற ஒரு சதித் திட்டத்தை உருவாக்கியது.

அதன் பலனாக, கொதித் தெழுந்த தொழிலாளர்களின் உரிமை யுணர்ச்சி, 1928-ம் ஆண்டில் மாபெரும் வேலை நிறுத்தமாக உருவெடுத்தது. அந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் தான் இந்த நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் உண்மை நிலைமையை ஓரளவுக்கு உணர முடிந்தது. அன்றைக்கு பெரிய அரசியல் கட்சி என்று கருதப் பட்ட காங்கிரஸ் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும் அந்தப் போராட்டத்தை ஆதரிக்காமல் பின் தங்கின. ஆனால் சுயமரியாதை இயக்கமும், அதன் தலைவர்களும் தான் அந்தப் போராட்டத்திற்கு பேராதரவு தந்து பக்க பலமாக அணிவகுத்து நின்றனர்.

அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியவர்கள் திரு. சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார், சுரேந்திரநாத் ஆர்யா, கிருஷ்ணசாமி பிள்ளை, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, எஸ். வி. லிங்கம், பெரியார் ஈ. வெ. ரா. போன்றவர்கள். வேலை நிறுத்தத்தை ஆதரித்து எழுதிய குற்றத்திற்காக குடியரசு இதழுக்கு சர்க்காரால் ரூ. 2000 ஜாமீன் கேட்கப்பட்டு, பெரியார் அவர்கள்மீதும் வழக்கு தொடரப்பட்டது.

அன்றைய தினம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தலை சிறந்த தினசரியான "திராவிடன்" பத்திரிகை வேலை நிறுத்தத்தை ஆதரித்தும், வெள்ளையர் நிர்வாகத்தின் அட்டூழியத்தைத் தாக்கியும் 18 தலையங்கங்கள் தீட்டியது. அதோடு, அதன் ஆசிரியரான திரு. ஜே. எஸ். கண்ணப்பர், ரயில்வே ஜெனரல் மானேஜராக இருந்த சர். பி. ராஜரா என்ற வெள்ளைக்கார அதிகாரியை பேட்டி கண்டு தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்திற்கு தலைவணங்கி ஆவன செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

போராட்டம் இரண்டு மாத காலம் கட்டுப்பாடான நிலைமை




யில் நடைபெற்றது. எங்கும் ரயில் ஓடவில்லை. எப்படியும் திரண்டெழுந்துள்ள தொழிலாளரின் ஒன்றுபட்ட சக்தியை சிதறடித்தேயாக வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்த ஆங்கில ஏகாதிபத்திபமும் நிர்வாகத்திற்கு உடந்தையாக அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டது. அதன் பலனாக திரு. சிங்கார வேலர், முகுந்தலால் சர்க்கார் முதலிய பல தலைவர்கள்மீது பல சதி வழக்குகள் தயாரிக்கப் பட்டு, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. துரைத்தனத்தாரின் துப்பாக்கிகள் முழங்கின. 144, 144-ஏ சட்டப்பிரிவுகள் தங்கள் கோரவாயைப் பிளந்து கொண்டு தொழிலாளரை ஆட்கொள்ள அலைந்தன.

அன்றைக்கு, பனக்கால் அரசரை முதல் அமைச்சராகக் கொண்ட மாபெரும் அரசாங்கம், தொழிலாளர் தலைவர்களை வீடு தேடி செய்து நாட்டிலே அமைதியை நிலைநாட்ட ஏற்பாடு செய்தது. தொழிலாளரின் அந்த முதல் முயற்சத்தில் சுயமரியாதை இயக்கத்தின் தலைவர்களும் தொண்டர்களும் ஊர் ஊராகச் சென்று மக்களின் பேராதரவை தொழிலாளர்களுக்காகத் திரட்டப் பாடுபட்டது கொஞ்சமல்ல.

ரயில்வே தொழிலாளர்களின் போராட்டங்கள் என்பதுமட்டுமல்ல; தொழிலாளர்களின் போராட்ட மென்றாலே, அது யாரால் நடத்தப் படுகிறது என்பது பற்றி கவலைகொள்ளாது, அது தொழிலாளர்களின் உரிமைக்காக நடத்தப்படுகிறதா என்பதை மட்டுமே கருத்தில் கொண்டு, ஒவ்வொரு போராட்டத்திலும் தொழிலாளர் சக்திக்கு உறுதுணையாக நிற்பதே திராவிட இயக்கத்தின் பரம்பரை பண்பாகும்.

1946-ம்ஆண்டு சென்னையில் நடைபெற்ற பி. அண்டு ஸி. மில் தொழிலாளர் போராட்டத்திலும் திராவிடர் இயக்கம் தன்னலமின்றி பங்கேற்று அதற்கு பக்க பலமாகப் பணிபாற்றியிருக்கிறது. அது போலவே, 1946-ம் ஆண்டு தென்னிந்திய ரயில்வேயில் நடைபெற்ற வேலைநிறுத்தம். கம்யூனிஸ்டுகளின் தலைமையின் கீழுள்ள லேபர் யூனியனால் மேற்கொள்ளப்பட்டபோதும், கம்யூனிஸ்டுகளைக் குழி தோண்டிப் புதைக்க அருமையானதோர் வாய்ப்பு இதுதான்-என குள்ள நரிக் குணத்தோடு, அரசாங்கத்தின் உறுதுணையாக நிற்கவில்லை. மாறாக தலைமை யாருடையது என்பது பற்றி கவலை கொள்ளாமல் தொழிலாளரின் நலன் ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு, அந்தப் போராட்டத்திலும் திராவிடர் இயக்கம் உரிய பங்கினை, ஏன் - முழு அளவிலேயே பணிபாற்றி, பல அடக்கு முறைகளையும், தொல்லைகளையும் ஏற்றுக் கொண்டது.



அன்றைக்கு ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்த ஆந்திர கேசரி பிரகாசம் மலபார் போலீசை கட்டவிழ்த்துவிட்டு, தொழிலாளர்களை நாய்களைப்போல் வேட்டையாடச் செய்தார். எங்கும் பீதி, தொழிற்சாலை பக்கம் நடமாடுகிற தொழிலாளி தொலைபேசியின்றி வீடு திரும்ப முடியாத நிலைமை.

வீட்டிலிருந்து வெளியே செல்லுகின்ற தொழிலாளி, திரும்பி வந்து தன் அன்பு மனைவியையும் அருமைக் குழந்தையையும் காண்பானோ என்பதேசந்தேகம். கண்ட கண்ட இடங்களில் குண்டாந்தடியடி, அடக்குமுறை, துப்பாக்கிப் பிரயோகம்! அதன் பலனாக பொன்மலையில் 5 பேர்பலி; நூற்றுக் கணக்கான தோழர்கள் மீது சதி வழக்குகள். இத்தனையும் காங்கிரஸ் சர்க்காரின் அன்புப் பரிசுகள். இதனை எதிர்த்து தொழிலாளரின் சார்பாக வாதிடுவது, தேசியத்திற்கு துரோகமான செயல் என்று கருதிக் கொண்டிருந்த பெரும் பெரும் ஏடுகளும் இருக்கத்தான் செய்தன. ஆனால் திராவிட இயக்கத் தலைவர்களும், அதன் ஏடுகளான "விடுதலை" "திராவிடநாடு" போன்ற இதழ்களும் தான் தொழிலாளர்களுக்குப் பக்க பலமாக நின்று பெரும் பணியாற்றின என்பதை யார்தான் மறுக்க முடியும்? எனவே நாம் தொழிற் சங்க இயக்கத்திற்கு புதியவர்களும் அல்ல; தொழிற் சங்க இயக்கத்தை வழி நடத்திச் செல்ல இயலாதவர்களும் அல்ல. ஆனாலும் இதுவரையிலும் நமக்கென ஓர் தொழிற் சங்கத்தை அமைத்து, தொழிற் சங்க அரங்கத்திலே போட்டி மனப்பான்மையை வளர்த்து, தொழிற்சங்க முகாமை பிளவுபடுத்த எண்ணியதில்லை. ஆனால் இன்றைய நிலைமையில் நாம், நமக்கென ஓர் தொழிற் சங்கத்தை அமைத்து ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப் பட்டிருக்கிறோம். காரணம், நாம் தீண்டினாலே தீட்டு ஏற்பட்டு விடும் என்று சொல்லுகின்ற தொழிற் சங்க சனாதனிகள் ஒரு பக்கம்— நம்முடைய அடிப்படைக் கொள்கையான சமுதாய சீர்திருத்தம் தேவையில்லை; வெறும் பொருளாதார மாற்றமே "சர்வரோக நிவாரணி" என்று பறைசாற்றி, தங்கள் கட்சி ஆதிக்கத்தை வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்ட அரசியல் சூதாடிகள் மற்றொரு பக்கம்— இவர்களுக் கிடையில் நாம். எனவேதான் நாம் நமது பணியினைச் செய்ய தொழிலாளர்களுக்கான நல்ல தொரு அமைப்பினை, புதுமையும் பொலிவும் கொண்ட பலமான தோர் தொழிற் சங்க இயக்கத்தினை ஏற்படுத்தியாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப் பட்டுள்ளோம்.

நாம் இப்படி தொழிற் சங்க நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவதைக் காண ஒரு சில தொழிலாளர்களின் நிரந்தரத் தலைவர்களுக்கு நம்மீது காய்ச்சல் ஏற்பட்டு, அது ஜன்னியாகவும் மாறிக் கொண்டே வருகிறது. இதுவரையில் தொழிற் சங்கங்களில் தாங்கள் அனுபவித்து வந்த ஏக போக மிராசு பாத்யதை எங்கே வீழ்ந்து படுமோ, எங்கே விழிப்புணர்ச்சி பெற்று தொழிலாளர்கள் தங்கள் பாசறையிலிருந்து பகுத்தறிவுப் பாசறையாம், தி. மு. கழக தொழிற் சங்கத்திற்கு அணி வகுத்துச் சென்று விடுவார்களோ என்ற ஏக்கம் சில பலரை குலை நடுங்க வைக்கிறது. நாம் அதற்காக என்ன செய்ய முடியும்? நாம் எடுத்துக் கொண்டிருக்கும் பணி மகத்தானது. நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்புகள் இந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய சிறப்பு வாய்ந்தவை. நாம் இதுவரையிலே எடுத்துக் கொண்ட முயற்சிகளில் தோல்வி கண்டதில்லை. துவண்டது மில்லை. 'வெற்றி! வெற்றி' என்றே முழங்கியிருக்கிறோம். அந்த முழக்கம் பட்டி தொட்டி எல்லாம் பரவ, ஒவ்வொரு தொழிலாளியின் உள்ளத்திலும் ஊடுருவி இன்ப அலைகளை எழுப்ப இந்தப் பொங்கல் புதுநாளில் உறுதி எடுத்துக் கொள்வோமாக.


வாழ்க தொழிலாளர் இயக்கம்!

★

சீட்டுப் போட்டனர்!

ஆர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற இரு அமெரிக்க சகோதரர்கள்தான் கனமான ஒரு இயந்திரத்தைக் காற்றில் பறக்க வைத்தார்கள்.

1903-ம் வருடம், டிசம்பர் மாதம் கிட்டிஹாக் என்ற நகரத்தில் 'கிளைடர்' என்ற அவர்களுடைய கருவியில் பறக்கும் பரிசோதனை செய்ய முயன்றனர். அவர்களுடைய பரிசோதனை வெறும் விளம்பரத்தை என்று மக்கள் கருதினர். ஐந்து பேரே வேடிக்கை பார்க்க வந்தனர். இரண்டு



சகோதரர்களில் யார் முதலில் அந்த இயந்திரத்தில் ஏறிப் பறப்பது என்ற பிரச்சினைக் கிளம்பியது. இருவரும் முன்வந்தனர் — சரித்திரத்தில் இடம்பெறப் போகும் சம்பவமல்லவா அது? ஆனால் ஒருவர் மட்டுமே அதில் பறக்க முடியும். விஷயத்தை முடிவு செய்ய சீட்டுப் போட்டுப் பார்த்தனர்! ஆலிவர் பறப்பதென்று சீட்டு விழுந்தது!

ஆனால் முடிவில் பறந்த தூரமோ 20 அடி; பறந்த காலம் 12 செகண்டு. ஆனால் மனிதன் புவி ஈர்ப்புச் சக்தியை எதிர்த்து வானில் பறந்தது அதுவே முதல் தடவை!



அர்த்தப் புன்னகை!

கே. ஜி. இராதாமணாளன்

சிக்முகளூர் அன்று மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தது. வீதிகளில் கட்டப்பட்டிருந்த தோரணங்கள், காற்றோடு விளையாடிக் கொண்டிருந்தன. பட்டுச் சேலைகள் அணிந்தும், பரிமள மலர்கள் சூடியும் பாவையர்—தெருக்களில் நடமாடிக் கொண்டிருந்தனர். கண் விருந்துண்டும், கலகலவென்று சிரித்தும் காளையர், வானத்திற்கும் வையத்திற்கும் இடையே மிதந்து கொண்டிருந்தனர்.

மாலையின் பொன்னிறம் மங்கியது—இரவின் கருமை நிழல் உலகைக் கவ்வத் தொடங்கியது மணத் தம்பதிகளின் ஊர்வலத்தைக் காண வேண்டும் என்ற ஆசையாலும் ஆர்வத்தாலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திரங்கள் எட்டிப் பார்க்கத் தொடங்கின.

வரிசை வரிசையாக ஒளி விளக்குகள்! மங்கள வாத்தியங்கள்! அழகாக அலங்கரிக்கப்பட்ட முத்துப் பல்லக்கு! அந்தப் பல்லக்கில், வாழ்க்கைப் பூஞ்சோலையினுள் புதிய தாய் நுழைந்த இரு இன்பப் புருக்கள்!

மெதுவாக ஊர்வலம் நகர்ந்து வந்தது. அரண்மனையின் உப்பரிகையில் நின்றிருந்த அலிகார் கீழே குனிந்து பார்த்தான். மணமகள் கோசலாவின் அழகொளியோடு போட்டிபோட முடியாமல், மணிவிளக்குகளின் பிரகாசம் மங்கின!

"ஆகா! இவள் என்ன அழகு! என்ன அழகு!"

அலிகாரின் மனம் குதித்தது. காய்ந்து போன தன் கன உதடுகளை நாக்கினால் ஈரமாக்கிக் கொண்டான்.

"உசேன்! உசேன்!" என்று அழைத்ததும் அவன் பக்கத்தில் ஒருவன் வந்து நின்றான்.

"பாரடா கீழே! பஞ்ச வர்ணக் கிளியடா, பஞ்ச வர்ணக் கிளி!"

அலிகார் பெருமூச்சு விட்டான்—பல்லக்கு அரண்மனையைக் கடந்து சென்று விட்டதும்! அந்தப் பல்லக்கின் முன்னும் பின்னும் திரள் திரளாக மகளிர் சென்று கொண்டிருந்தனர். சாதாரண உடையணிந்து, உசேனையும் உடன் அழைத்துக் கொண்டு அலிகார் கூட்டத்தினுள் புகுந்து விட்டான். உசேன் அவனது மனக் காப்பாளன்! அதாவது, அவனது மனதைச் சஞ்சலம் அண்டாதபடி பார்த்துக் கொள்வதும், உள்ளப் பசிக்கு உடலுக்குடன் உணவு கொண்டு வந்து தருவதும், உசேனின பிரதான வேலை!

ஊர்வலத்துடனே அலிகாரும் மெதுவாக நடந்துசென்றான் கோசலாவின் சிவந்த கன்னங்களைக் காணக் காண, அவனது உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த நெருப்புப் பொறி, காட்டுத் தீயாகக் கொக்கரித்து எழுந்தது.

அன்றிரவு அவன் உணவை மறந்தான் — இளங்கொடியாளின் இதழ்த் தேனைப் பருக, உமிழ்நீர் கசிந்து கொண்டிருந்த அவன் வாய், பச்சைத் தண்ணீரையும் அருந்த மறுத்துவிட்டது! மலர் மேனியாளின் அணைப்பிலே குளிர்ச்சி பெற எண்ணிய அவன் உடல், கட்டிலில் சாய்ந்ததும் சூடுண்ட புழுப் போலத் துடிதுடித்தது.

2

அலிகார், திப்பு சுல்தானின் தோழன். வாலிபப் பருவம், வசீகர முகம், திரண்ட தோள், அச்சத்தின் நிழல் படாத உள்ளம், அரசியல் நுணுக்கங்களை ஆராய்ந்துகூறும் அறிவுத்திறம்—அனைத்தும் அவனிடம் அமைந்திருந்தன.

ஆனால் ஒரே ஒரு குறை—மன்னிக்க முடியாத குறை! அழகிய மங்கை மலர்களைக் கசக்கி நுகர்வதில், அடங்காத வெறி யுணர்ச்சிக் கொண்டவன் அவன்!

திப்புவிற்காக அலிகார் படை பல நடத்திச் சென்றிருக்கிறான். போர்க்களத்தில் எதிரிகளின் இரத்தச் சேற்றில் முளைத்த



செல்லப்பன்

வெற்றிச் செந்தாமரையைக் கொண்டு வந்து திப்புவின் மணிமுடியில் சூட்டியிருக்கிறான். ஆகவே அவன் செய்த அட்டூழியங்களைக் கண்டு திப்பு வினால் மனம் நோக முடிந்ததே அன்றி, அவனைக் கண்டிக்க முடியவில்லை. அவனால் வாழ்விழந்த வனிதையர் ஏராளம்! பாலிவனமாகிவிட்ட குடும்பங்கள் பலப்பல! ஒரு சமயம், மக்களின் வாய் அவனது வீரத்தையும் பெற்ற வெற்றிகளையும் பேசி மகிழும்! மறு சமயம், அவர்களது உள்ளம், அவனது இழி செயல்களை எண்ணி இரத்தக் கண்ணீர் சிந்தும்!

திப்பு சுல்தான் அரசாண்ட மைசூருக்கும், அதற்கு வடக்கே இருந்த சாம்பூர் ராஜ்யத்திற்கும் போர் மூண்டது. வீரன் அலிகார், போக்களத்தில் எதிரிகளைத் தாக்கி, அவர்களின் உயிர்களைப் போக்கி வெற்றிக் கொடியை நாட்டினான். மன்னர், மனம் மகிழ்ந்தார். அலிகாரின் தோள் வலிமையைப் பாராட்டினார்.

அலிகாரின் ஆற்றலைப் பாராட்டியதோடு, தன்னுடைய ஒரு பகுதிக்கும் அவனை இராஜப் பிரதிநிதியாக நியமித்தார். அலிகார், பிரதிநிதியான பிரதேசத்தின் தலைநகரான சிக்முகளூருக்கு குதிரைப் படையும், யானை வரிசையும் முன்னும் பின்னும் வர, ஆடம்பரத்தோடும் ஆணவத்தோடும் வந்து சேர்ந்தான். அவனைக் குறித்து அவ்வூர் மக்கள் முன்பே கேள்விப் பட்டிருந்ததினால், அச்சமும் துக்கமும் அடைந்தனர்.

அவ்வூருக்கு வந்த சில மாதங்களுக்குப் பிறகுதான், மணமகள் கோசலா ஊர்வலமாக பல்லக்கில் செல்வதைக் கண்டான்.

அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. அந்தப் பேரழகியை அடையாவிட்டால், உயிர் வாழ்ந்து என்ன பயன்—

உயர் பதவிவகித்து என்ன பயன் — என்றெண்ணி ஏங்கினான். அவன் உள்ளத்தில் பற்பல ஆசைகள் தோன்றி மறைந்தன! கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தான்.

3

மறுநாள் பொழுது புலர்ந்தது. மணமகன் சோமப்பாவின் வீட்டின் முன்பு ஒரு போர் வீரன் வந்து நின்றான். பழைய புகழ் வாய்ந்த குடும்பத்தில் பிறந்த சோமப்பா, செல்வச் சீமானும் பெரிய வியாபாரியும் ஆவான்.

போர் வீரன் தந்த அரசமுத்திரையிட்ட கடிதத்தைப் படிக்கும்பொழுது, சோமப்பாவின் நெற்றியில் வியர்வை அரும்பி ஆரம்பித்தது. கவலையின் குறிகள் அவன் முகத்தில் தோன்றின.

அறையினுள் சென்று, தன் இளம் மனைவி கோசலாவிடம் செய்தியைக் கூறினான். அவளது கண்கள் கலங்கின. மனைவியிடம் விடை பெற்றுக் கொண்டு, அலிகாரின் அரண்மனைக்குச் சென்றான்.



இராஜப் பிரதிநிதியைக் கண்டதும், பயத்தால் சோமப்பாவின் உள்ளம் சுருங்கியது. கைகால்கள் சிறிது நடுக்க முற்றன.

''பாஜி வம்சத்தில் பிறந்த சோமப்பா நீர்தானே?'' என்று அலிகார் கேட்டான். ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தபடி.

''ஆமாம் பிரபு!'' என்று சோமப்பா பயபக்தியோடு பதிலளித்தான்.

''எமது திப்பு மன்னரின் ஆட்சியைக் கவிழ்க்க, ஆங்கிலேயரோடு கூடிச் சதி செய்யும் கூட்டத்தில் நீரும் சேர்ந்திருக்கிறீராமே?''

''அபாண்டம் பிரபு, அபாண்டம் இது!''

''ஆதாரத்தோடுதான் பேசுகிறேன்!''

இதைக் கேட்டதும், சோமப்பாவின தலையில் இடி விழுந்தது போலிருந்தது. ''அய்யோ! இதென்ன பொய்க் குற்றச் சாட்டு!'' என்று உள்ளமும் உடலும் நடுங்க நின்றிருந்தான். கோபத்தால் அலிகாரின் கண்கள் சிவந்தன.

''ஏன் தயங்குகிறீர்?..... உண்மைதானே?''

''இது உண்மையில்லை பிரபு, உண்மையில்லை!''

''அப்படியா? நீரே இந்தக் கடிதத்தைப் படித்துப் பாரும்!''

கடிதத்தை உதறும் கைகளால் வாங்கி, கலங்கிய கண்களால் வாசித்தான்.

''சோமப்பா! மறைக்காதீர்! கடிதம் என்ன சொல்லுகிறது? சதிக் கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்ல நீர் என்று இன்னமும் சாதிக்கத் துணிகிறீரா?''

''அய்யோ, இது யாரோ வேண்டுமென்றே எழுதியிருக்கிறார்கள்! இந்தக் கடிதத்திற்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது!''



''அதெல்லாம் எனக்குத் தெரியாது! சிக்முகளூரில் பாஜி வம்சத்தைச் சேர்ந்த சோமப்பா நீர் ஒருவர்தான்! ஆகையால் இக்கடிதம் உமக்குத்தான் எழுதப் பட்டிருக்கிறது! நீர் குற்றவாளியல்ல என்று நிரூபிக்கும் வரை, உம்மைச் சிறையில் அடைத்து வைக்க உத்தரவிடுகிறேன்! நீர் நிரபராதி என்று தெரிந்தால், விட்டு விடுவேன்! குற்றம் செய்ததாக உறுதியாகி விட்டால், உமது உடல் தூக்கு மரத்திலே தொங்கும்!'' என்று ஆவேசத்தோடு கூறிவிட்டு அலிகார் ஆசனத்தை விட்டு எழுந்து சென்றான். சோமப்பாவின் தலை சுற்றியது. அப்படியே மயக்கமாகத் தரையில் சாய்ந்து விட்டான்.

இச் செய்தியைக் கேள்விப் பட்டதும் ஊராரும், சோமப்பாவின் குடும்பத்தாரும், மனைவியும் கண் கலங்கினர். நேற்று இரவு வரை இன்பத் தென்றல் வீசிக் கொண்டிருந்த இடத்தில், திடீரென்று பயங்கரமான துன்பப் புயல் வீசத் தொடங்கியது.

கோசலா போர் வீரர்கள் தோன்றிய வம்சத்தில் பிறந்தவள். ஆகவே அவள் உள்ளத்தில் வீரமும் தீரமும் நிறைந்திருந்ததில், ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆசைக் கணவன் அக்கிரமமாகக் கைது செய்யப் பட்டான் என்பதை எண்ண எண்ண, அந்தத் துடியிடையாளின் உள்ளத்தில் துயரமும், அதைவிட அதிகமாக ஆத்திரமும் ஆவேசமும் பொங்கியெழுந்தன.

''வண்டி தயாராகட்டும்!'' என்று கணவரைத் துடைத்துக் கொண்டு, கோபக் குரலில் கட்டளையிட்டாள்.

பயந்த அவளது சுற்றத்தார் கோசலா என்ன செய்யப் போகிறாள் என்பது புரியாமல் திகைத்தனர்.

''இராஜப் பிரதிநிதியைக் கண்டு இது அடுக்குமா? அக்கிரமம் அல்லவா?—என்று நானே நேரில் கேட்கப் போகிறேன்!''

இவ்வாறு மூடு வண்டியை நோக்கி நடந்து கொண்டே கோசலா கூறியதைக் கேட்டதும், உற்றார் உறவினர் திடுக்கிட்டனர். ''வேண்டாம் இந்த விபரீதம்!'' என்று தடுத்துப் பார்த்தனர்; பயனில்லை!

தன்னைக் காண வந்த தங்க மேனியாளுக்கு, அலிகார் சுலபத்தில் பேட்டி தந்தான்.

ஒரு புறமாக ஒதுங்கி நின்று கோசலா பேச ஆரம்பித்தாள்.

''என் கணவர் ஒரு தவறும் செய்யாதவர்! விரோதத்தினால் யாரோ அவர்மீது வீண் பழி சுமத்தியிருக்கிறார்கள்!''

''வீண் பழியை நம்புபவன் நானல்ல! தக்க ஆதாரத்தோடு தான் அவரைக் கைது செய்திருக்கிறேன்!...அவரொரு இராஜ துரோகி!...''

''அவர் தந்தையும், என் தந்தையும், மன்னரிடம் மட்டற்ற மரியாதையும் பக்தியும் கொண்டவர்களாக இருக்கும்போது, இவர் மட்டும் எப்படி இராஜ துரோகியாக இருக்க முடியும்?''

''ஆதாரங்களைக் கையில் வைத்துக் கொண்டுதான் நான் பேசுகிறேன்! அவரொரு இராஜ துரோகிதான்!''

''ஒரு பாவமும் அவர் அறியாதவர்...''

''இருக்கலாம்!''

''அவரை விடுவிக்க மார்க்கமே கிடையாதா?''

''ஏன் கிடையாது! உண்டு!... நாளை மாலை இங்கு வா; உனக்கு வேண்டிய உதவியை நான் செய்கிறேன்!''

பிறகு கோசலா நேரே சிறைச்சாலைக்குச் சென்று, தன் கணவனைக் கண்டாள். ஆசைக்கினியவனை அந்த நிலையில் கண்டதும், அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

''தாங்கள் இராஜ துரோகியா?''

''இல்லை கோசலா, இல்லை!''

''கோசலா! நான் மைசூரிலிருந்தபோது, ஒரு தரம் திப்பு சுல்தானுக்கு ஒரு சிறு உதவி செய்தேன்! அதற்கு அடையாளமாக எனக்கொரு தங்கப் பதக்கத்தை அரசர் தந்திருக்கிறார்! அந்தப் பதக்கத்தைக் காட்டினால் போதும், உடனே உனக்கு யாரும் உதவியளிப்பார்கள்!''

''அப்படியானால், இப்பொழுதே அதை நான் செய்கிறேன்!''

''கோசலா! என் கண்ணே! அந்தப் பொல்லாதவனின் எதிரில் நீ செல்லாதே!...எனக்குப் பயமாகவே இருக்கிறது!''

''ஆபத்து நேரத்தில் வேறு வழியேது? வீர மரபில் பிறந்த எனக்கு – என்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாதா? கண்ணீர் விடாதீர்கள்! கவலைப் படாதீர்கள்!''

4

கதிரவன் பொன்னெளி வீசும் மாலை நேரம்! அலிகார் நன்றாக அழகாக உடையணிந்து, அழுகிய உள்ளத்தின் துர்நாற்றத்தை மறைப்பதற்காக, உடலில் வாசனைத் தைலங்களைத் தடவிக் கொண்டிருந்தான்.

அரண்மனையினுள் அடியெடுத்து வைத்தாள், கோசலா! அந்த அன்ன நடையாளை ஆவலோடு வரவேற்றான், அலிகார்!

''வா, கோசலா!'' என்றான் புன்னகையோடு. அவன் கண்களில் காமக் கனல் வீசத் தொடங்கியது. வெறி பிடித்தவனைப்போல அவன் முகம் பயங்கரமாக மாறிக் கொண்டிருந்தது. அவனது புது நிலையைக் கண்ட கோசலா, சிறிது பயந்தாள்.

''உன் கணவனைக் காப்பாற்ற வேண்டும் அல்லவா?''

''ஆமாம்! அதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன்!''

''நீ மனம் வைத்தால் போதும்; உன் கணவன் அடுத்த நொடியே விடுதலையடைய முடியும்!''

''எனக்குப் புரியவில்லையே!''



"இந்த அலிகாரின் மனம் இன்னமும் உனக்குப் புரிய வில்லேயா, கண்ணே!"

திடுக்கிட்டு அவள் நிமிர்ந்து பார்த்தாள்! அவனது உதட்டிலே புன்னகை! பயங்கரமான புன்னகை!

அந்தப் புன்னகையைக் கண்டதுமே, அவனது தீய எண்ணம் அவளுக்குப் புரிந்து விட்டது உள்ளம் பதை பதைத்தது! உடல் வெட வெடத்தது!

நடு நடுங்கும் அந்த நங்கை நல்லாளின் பொன் நிறக் கையை, அக் காமுகன் பற்றினான். உதறிக் கொண்டு ஓட ஆரம்பித்தாள். பசி கொண்ட புலிப்போல் பாய்ந்தான் மான் விழியாள் சிக்குண்டாள். "அய்யோ!" என்று அலறினாள்; கதறினாள்.

"அடுக்குமா இந்த அநீதி? அய்யோ, வேண்டாம்!"

"அக்கிரமம் இது! தொடாதீர் என்னை!"

"கற்புக் கரசிகள் தோன்றிய குலத்தில் தோன்றியவள் நான்—விபரீதம் வேண்டாம். விட்டு விடுங்கள் என்னை!"

"அய்யோ; இதென்ன..."

"ஆண்டவனே! உனக்குக் கண்ணில்லேயா—இந்த அக்கிரமம் உனக்குத் தெரியவில்லேயா?"

கட்டிலின் மீது அவள் கெஞ்சினாள். அந்தப் பிதற்றல மொழிக் கெல்லாமா, அவன் செவி மடுப்பான்? செவி மடுக்க இயலுமா அவனால், சிந்தையில் செந்தணல் கொழுந்து விட்டெரியும்போது? அத் தீயில் அந்த பொன்மலர் கருகியது! அன்றிரவு அவள் கற்பை மட்டுமல்ல; தன் கணவனையும் இழந்தாள்! சோமப் பாவின் பிணம் தூக்கு மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது!

மறு நாள் கோசலா, மயக்கம் தெளிந்து எழுந்தாள். ஒரு முறை தன் உடலைப் பார்த்தாள்; கண்ணீர் அவள் பார்வையை மறைத்து விட்டது! ஆத்திரமும் அவமானமும் அவள் உடலைக் கவ்விக் கசக்கின!

கணவன் தூக்கிலிடப் பட்டான் என்ற செய்தியைக்கேட்டதும், சொல்லொணாத் துக்கத்தில் ஆழ்ந்தாள்.

இரண்டு நாட்கள் சென்றன. வாழ்வை இரத்தக் காடாக்கி விட்ட வஞ்சகனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற உறுதி அதிகமாயிற்று. கணவன் சொன்ன தங்கப் பதக்கத்தை எடுத்துக் கொண்டு, மூடு வண்டியில் நேரே திப்பு வைப் பார்க்கப் புறப்பட்டாள்.

திப்புவைக் கண்டதும் மிதமிஞ்சிய துயரினால் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தாள்! மூர்ச்சை தெளிந்ததும், மன்னரிடம் தன் சோக வரலாற்றைச் சொல்லி அழுதாள்.

அதைக் கேட்டதும் திப்பு சுல்தானுக்குக் கோபமும் சோகமும் மேலிட்டன. அலிகாரையும், அவனது அக்கிரமத்திற்கு உதவியாக இருக்கும் உதேசனையும் உடனே அழைத்து வரும்படி கட்டளை பிறப்பித்தார்.

5

தந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த திப்புவின் கண்களில் தீப்பொறி பறந்தது!

பயத்தோடு தலை குனிந்தபடி அலிகார் நின்றிருந்தான்! அவன் அருகே உதேசன், வியர்க்க வியர்க்க உயிரை விட்டுக் கொண்டிருந்தான்! ஒரு பக்கமாக நீர் வழியும் கண்களோடு ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருந்தாள், கோசலா.

"அலிகார்! கோசலா சொல்வது உண்மையா?"

அலிகார் பதில் கூறவும் இல்லை; குனிந்த தலையை நிமிர்த்தவும் இல்லை.

"உதேசன்! நீயாகிலும் உண்மையைச் சொல், கோசலா கூறுவதெல்லாம் நிசம்தானே?"

"பாதுஷா! எனக்கொன்றுமே தெரியாது!"

"துரோகியே, என்னிடமா பொய் பேசுகிறாய்?..... யார் அங்கே.. இவனைப் பிடித்து கம்பத்தில் கட்டுங்கள்!...ஒரு கொரடாவைக் கொண்டு வா!....."

ஆத்திரத்தோடு பேசிக் கொண்டே, ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்தார் மன்னர்.

உதேசனைக் கம்பத்தில் கட்டி விட்டுப் பலமாக அடித்தார்கள்!

"உண்மை பாதுஷா, உண்மை! கோசலா கூறுவது அவ்வளவும் உண்மை!" என்று கதறினான், உதேசன்.

திப்புவின் கண்களில் நீர்த் துளிகள் தோன்றின. அங்கே நீண்ட மௌனம் நிலவியது.

"கோசலா! நீயே சொல், அலிகாருக்கு என்ன தண்டனை தரலாம்?"

"அது தங்களின் விருப்பம்! எனக்கு அனுமதி கொடுங்கள்!"

"எதற்கு?"

"உடன் கட்டை ஏற!"

"அது கூடாது கோசலா, கூடாது!"

திப்பு மன்னர் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவரைப் போலத் திரும்பவும் கோசலாவிடம் பேச ஆரம்பித்தார்.

"கோசலா! உனக்குக் கேடு செய்தவனை நீயே தண்டிக்க வேண்டும்! அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது!..."

"சொல்லுங்கள், பாதுஷா!"

"என் சொல்லைத் தட்டமாட்டாயே?"

"இந்தச் சந்தேகம் எழுந்ததே என் துர்ப்பாக்கியத்தின் விளைவுதான், பாதுஷா!"

"நீ அலிகாரை மணந்து கொள்ள வேண்டும்!"

"என்ன பாதுஷா, என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம்; கோசலா! நீ அலிகாரின் மனைவியாக வேண்டும்! தட்டாதே என சொல்லி!"

"அநியாயம் பாதுஷா; இது பெருத்த அநியாயம்! திப்பு சுல்தானா இப்படிப் பேசுகிறார்? என் காதுகளையே என்னால் நம்ப முடிய வில்லையே!"

"கோசலா! என் கருத்து இப்பொழுது உனக்குப் புரியாது!" என்று திப்பு சுல்தான் கூறிவிட்டு, அலிகாரைப்பார்த்து புன்னகை செய்தார்.

காவலனின் அந்தப் புன்னகையைக் கண்டதும், காமுகனின் உள்ளத்திலிருந்த அச்சம் பறந்தது—ஆனந்தம் பொங்கியது!

"முடியாது! முடியாது! மணஞ் செய்து கொள்ள முடியாது!" என்று கோசலா கதறினாள்! ஆனால்...

6

கமகமவென்று மணம்வீசிய கட்டிலறை அழகிய முறையில் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மல்லிகை ரோஜா மலர்கள் தூவப்பட்ட மஞ்சம். அந்த மஞ்சத்தின் மீது, உள்ளத்தில் உவகை கொப்பளிக்க, கண்களில் புத்தொளி வீச, பருவக் கொக்கரிப்பால் நரம்புகள் துடிதுடிக்க, மனைவி கோசலாவின் வருகையை எதிர்நோக்கி அலிகார் உட்கார்ந்திருந்தான்.

அழகிய ஆடை அணிகள் பூண்டு தலைகுனிந்த வண்ணம் உள்ளே வந்தாள், அழகி கோசலா! கதவுத் தாளிடப் பட்டது! இன்னும் சிறிது நேரத்தில் எழிலரசி அவளே இசைந்து தரும் இன்பத்தேனை பருகப் போகிறோம் என்பதை எண்ணியதும், அவன் மனம் மகிழ்ச்சியால் கூத்தாடியது.

தயங்கி நின்ற தாமரை முகத்தாளின் அருகே, தாகத்தோடு அவன் நெருங்கினான்.

"கண்ணே! இன்னுமா கவலை! இதோ.....இதோ..... இப்படிப் பார்!" என்று கூறிக் கொண்டே, வேல் விழியாளை அணைக்க முயன்றான்.

கண்களில் கனல் பறக்க அவள் நோக்கினாள்!

"கண்ணே!" என்று அவளது வலைக் கரத்தைப் பற்றி, "இன்பமே! இன்னுயிரே!" என்று அவளது கொடியிடையில் கையை வளைத்தான்! இடையில் மறைத்து வைத்திருந்த உடைவாளை உருவினாள் ஆவேசத்தோடு பாய்ச்சினாள், அவன் மார்பில்!

"இதென்ன விபரீதம்? இதென்ன விபரீதம், கோசலா?" என்று கதறிக் கொண்டே, தரையில் சாய்ந்தான். அந்தக் காமுகனின் உடலிலிருந்து குபீர் குபீர் என்று இரத்தம் பீறிட்டுக் கொண்டு வெளியே வந்தது.

"மாண்டான், மங்கையரின் வைரி! தூயமணியான் திப்புவின் ஆட்சியை மாசுபடுத்திய துர்த்தன் தொலைந்தான்!" என்று பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டே கூறி, தன் மார்பிற்கு நேரே வாளைத் திருப்பிப் பிடித்தாள்! வீரத்தின் ஒளியால் அவள் கண்கள் பிரகாசித்தன! ஐயோ! அவ்வளவு தான்; சாய்ந்து விட்டாள்! அவள் மார்பிலிருந்து குருதி அருவி வெளியே குதித்தோடி வந்தது! கட்டிலறை இரத்தக் காடாயிற்று! அந்த இரத்த வெள்ளத்தில் இரு உடல்கள் மிதந்து கொண்டிருந்தன!

7

காலை வெகு நேரமாகியும், அந்தக் கட்டிலறைத் திறக்கப் படாதலினால், திப்புவும் அவரது மந்திரியும் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

அந்த அறை முழுவதும் இரத்த மயமாக இருப்பதையும், உறைந்த இரத்தத்தில் புதுமணத் தம்பதிகளின் உடல்கள் உருண்டு கிடப்பதைப் பார்த்து மந்திரி திடுக்கிட்டுத் திகைத்து நின்று விட்டார்! திப்புவின் முகத்தில் மட்டும், புன்னகை அரும்பிப் பூத்தது!

அந்தப் புன்னகையைக் கண்டதும், அதன் பொருளைப் புரிந்து கொள்ள முடியாமல், மந்திரி திணறினார்.

"கோசலாவின் திருமணம் இதற்காகத்தான் நிகழ்ந்தது! இப்படி நடக்க வேண்டும் என்பதற்காகத் தான், நான் நடத்தி வைத்தேன்!" என்றார் திப்பு, மகிழ்ச்சி கலந்த பெருமிதமான குரலில்!

★

விஷப் பரீட்சை!

★

சிறு பையனாக இருந்த பொழுது ஒரு நாள் எடிஸன் விஞ்ஞானப் புத்தக மொன்றில் படித்தார்: "காற்றை விட இலேசான வாயுக்களை பலூன்களில் அடைத்தால் அவை மேலே கிளம்பிப் பறக்கும்." புத்தகத்தின் இன்னொரு பகுதியில் படித்தார்; ஏதோ ஒரு உப்பையும் அமிலத்தையும் ஒன்றாகக் கலந்தால் இலேசான வாயு கிடைக்குமென்று! உடனே எடிஸன் ஒரு முடிவுக்கு வந்து விட்டார், பொருள்களைப் பறக்க வைக்கலாமென்று!



ஓடோடியும் தன் நண்பனை அழைத்து வந்தார். அந்தக் குறிப்பிட்ட உப்பையும் அமிலத்தையும் அவன் வாயிலே கொட்டி விழுங்கச் சொல்லி விட்டு அவன் மேலே கிளம்பிப் பறக்கிறானா என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்!

பையன் பறக்க வில்லை; மயக்கத்தால் பூமியிலே படுத்து விட்டான்! அவன் பிழைக்கும் பாடு பெரும் பாடாகி விட்டது.

தமிழன் கட்டிய தண்ணீர்த் தேக்கம்!

அணைகளின் பெயர்.	மன்னவன் பெயர்.	காலம் (நூற்றாண்டில்)
கல்லணை ...	கரிகாலன் ...	4
மகேந்திரத் தடாகம் ...	மகேந்திர வர்மன் ...	7
பரமேஸ்வரத் தடாகம் ...	பரமேஸ்வர வர்மன் ...	7
திரையனேரி ...	திரையன் ...	6
வயிரமேகத் தடாகம் ...	வயிரமேக பல்லவன் ...	8
மார்ப்பிடுகு ஏரி ...	வயிரமேக பல்லவன் ...	8
குடிமல்லம் ஏரி ...	தண்டிக்கிரம வர்மன் ...	8
வலியனேரி ...	நந்தி வர்மன் ...	8
காவேரிப்பாக்கம் ஏரி ...	நந்தி வர்மன் ...	8
தர்மபுரி ஏரி ...	மகேந்திர பல்லவன் ...	9
உக்கல் ஏரி ...	கம்ப வர்மன் ...	9
மருதாடு ...	விஜய நிருப துங்கன் ...	9
புலனேரி ...	மாறன் சடையன் ...	...
மாரனேரி ...	மாறன் ...	8
பராக்ரம கல்லணை ...	ஜடாவர்ம ஸ்ரீவல்லபன் ...	11
கிழவன் ஏரி ...	நெடுமாறன் ஸ்ரீவல்லபன் ...	8
சோழவாரிதி ...	பராந்தகச் சோழன் ...	10
சோடியம்பாக்கம் ஏரி ...	அருஞ்சயன் ...	10
நங்காவரம் ஏரி ...	அருஞ்சயன் ...	10
வீராணம் ஏரி ...	வீரநாராயணன் ...	10
உய்யக்கொண்டான் ...	ராஜ ராஜ சோழன் ...	10
பாகூர் ஏரி ...	ராஜ ராஜ சோழன் ...	10
சோழ கங்கா ...	ராஜேந்திர சோழன் ...	...
பெரிய வாய்க்கால் ...	ராஜ ராஜ சோழன் ...	10

பொறி இயல் வல்லவன் நம் பாட்டன்!

தென்னவன் காதை

குறுந்தாடி, குள்ளத்தாடி, நெடுந்தாடி, வெள்ளைத்தாடி
இப்படிப் பல் தாடியுடனே.....
புராண அங்காடி விரித்துப் புளிக்கும் பழங்காடி சுவைத்துப்
போதையேறிக் கூத்தாடும் பூசுராகள் கூட்டம்...
மாசு, மரு, அற்றிருந்த மண்டிலத்தின் ஓரம்
மாடுகளை, ஆடுகளை, மனிதர்களை வெட்டிப் பிண
மேடுகளை வேள்விக்கென குவித்துவந்த வேளை!
ஆரியரின் படையெடுப்பால்...இலவே...
இடை நெளிவால்—கடை விழியால்—இருடிகளின்
இன்பரச ஞானத்தால்—இருண்டுவிட்ட தென்புலத்தில்
ஏற்றிவிட்ட விளக்கு போல்
எழுந்து நின்றான இலங்கை வேந்தன்!
அவன் சரிதம் சொல்வதென்றால்...தசையெல்லாம்
ஆடுதய்யோ! திசையெட்டும் புகழ் சேர்த்த
தென்னிலங்கைக் கோமான், திராவிடரின் மூதாதை!
பழத்தமிழின் பால் **பற்றுதலை** வைத்தநம்பாட்டன்.

★

கண்ணுக்குள் பாவை போல் இலங்கைத் தீவு.
கருவிழிதான் ஆழ் கடல்கள்! தமிழ்
மண்ணுக்குப் புகழ் தந்த பெருவீரன்.
உருவில் சிங்கம், உள்ளம் தங்கம்! யாழ்ப்
பாணனுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டான்—மலைத் தமிழன்!
அவன் துணைவி, வண்டமரும் பூங் குழலாள்
மண்டோதரி—மாதர் குல மாணிக்கம்—எதிர் வீணை மீட்டும்
பேச்சுக்காரி!...இராவணனின் யாழோசை
தோற்ப தெல்லாம்...பத்தினியின் பள்ளியறைக்
கனி மொழியின் முன்னேதான்!
இமைக கதவு உண்டே எழில் விழியைக் காப்பதற்கு;
அப்படித்தான்—இலங்கைக்கு இராவணன்!
அவனுக்கு அவள்!
காடுகளில் நமதெல்லைக் கோடுகளில் ஆரியர்கள்,
கடவுளுக்குப் பலிதேடும் வேலை, ஆகாது





கொடுமையென உருவினுன் கொடுவாளே!
பர்ணசாலே அழைப்புக்கள் முத்தமிட்டன
அவன் தானே, அந்தப்
பருவ மங்கையரின் சிரிப்போ பிளந்த பாளே!
அட, தொடுவேனே ஆரியத்தேனே என
எதிர்ப்புக் குரல் கொடுத்தான் அந்தக் காளே!....
நரிகள் உள்ள காடெல்லாம், நயவஞ்சகர்
உலவும்
நாடெல்லாம் காவல்! காவல்! அந்தப் படைகளுக்கு
இராவணன், காலம் காட்டும் சேவல்! சேவல்!

★

தமிழரசி முத்து நகை இராவணனின் தங்கை,
தண்டகாரண்யத் தவசிகளே எதிர்த்து ஊதி
விட்டாள் சங்கை!
வேங்கையெனக் கிளம்பிவிட்டாள் வீரர்குல
மங்கை,
வேத மோதிகளின் விழிகளிலே வழிந்திடுதே
கங்கை!
துரோகத்தால் சூழ்ச்சியினுல் தமிழர்களேத்
தோற்கடிப்பதன்றித் தோள் வலியால்
ஆகா தெனக் கண்டு விட்டதாலே
சின்னவனும் இலக்குவனும் சீதையெனும்
மனையாளும்
பின் தொடரப் புறப்பட்டான் இராமனெனும்
மன்னன்.
தம்பிக்குக் கேடிழைத்து முடிசூட முனைந்து
நம்பிக்கைத் துரோகியென நாடெல்லாம் இகழக்
காடேகி விட்டவன் அந்த ராமன் எனும் கயவன்.
அவன் ஒரு நாள்,
காட்டோரம் திரியும்போது, கரும்பனைய
முத்துநகை
கூளப்பினுல் தூங்குகின்ருள் கனிமரச்
சோலையோரம்.
காமத்தால் கருத்திழந்த கடனவன்,
கமலமலர்க் கண்மூடித் தூங்குகின்ற தூயவளே
துன்மார்க்கத்தால் கெடுத்திடவே—தம்பி
துணையோடு அருகே போனன்.
காவலுக்குக் கைகாரி சீதாதேவி!
காவலின்றித் தூங்கிவிட்ட முத்துநகை,
கற்புக் கனல் காக்கக் கொதித்தெழுந்தாள்....



கனி மரம் போல் தனியொருத்தி—இருமந்தி!
என் செய்வாள்?
கற்புக்கு விலையாகக் கரமிழந்தாள்! மூக்கிழந்
தாள்! முத்துநகை கொட்டுகின்ற பல்இழந்தாள்!
அம்மவோ, முலையிழந்தாள்—ஆயினும் கற்பு
நிலையிழந்தாள் இல்லை!
தலையிழந்து போயினும் மானங் காக்கும் தமிழச்சி,
இராவணனின் தங்கச்சி!

★

சூதறியாச் சோதரியைச் சூர்ப்பநகை ஆக்கிவிட்ட
காதெரியும் செய்தி கேட்டான்—
கண்ணிலே புண் பெற்றதுபோல் காட்சிதந்தான்.
கடலாளும் புவி வேந்தன் முத்துநகை
அண்ணனன்றே ?
படர் உறவு இல்லாவிடில்தான் என்ன ?
இலங்கைக்கு அவளோர் பிரஜையன்றே?
எழுந்து விட்டான் பழிவாங்க—காலை
இளம்பரிதி போல் கண்களிலே சிவப்பு தேக்கி!
வேந்தன் வரும் செய்தி கேட்டு விழியழிந்து
சீதாதேவி,
பாந்தமுள்ள மானென்று வேண்டுமென்று பார்த்
தாவை விரட்டி விட்டாள்!
"அண்ணனில்லா நேரத்தில் அண்ணிக்கு வலை
வீசும் நினைப்போ தம்பீ?
முன்னவன் பின் ஓடு நீயும்—எனத் துரத்தித்,
தென்னவன் வருகைக்குக் காத்திருந்தாள்.
தீ பறக்கும் கண்ணுடனே தேர்போல வரும் வீரன்
தேன்மொழி கொட்டிச் சீதை தெருவாசல்
வருதல் கண்டான்
'மூத்தவனும் இளையவனும் ஓடிவிட்டார்-எனக்கு
ஏற்றவன் நீ வந்து விட்டாய்-என்னை உனக்குத்
தந்துவிட்டேன் எனத் தழுவினாள்,
இராவணனின் தடந் தோளில்,
படர் முல்லை போலப் பைந்தொடி சீதாதேவி!
என்னுயிர்த் தங்கைக்கு இடையூறு விளைத்த
வனின் மனைவி நீ!
உன்னுடலைக் காக்கைக்கும், கழுகிற்கும்,
காமங் கொள் கரடிக்கும் அளிப்பதல்லால்—
கரம் படவும் விடமாட்டேன், கப்பலிலே
ஏறென்றான்.



மானத்தைக் கப்பலிலே ஏற்றிவிட்ட
மரபினிலே வந்தவனின் துணைவி, என் உடல்,
தானத்தை ஏற்றிடுக என உரைத்தபடி—
உரம் பெற்ற அவன் மார்பில் சாய்ந்திடவே
—எப்படியும்,
வரம் பெறுவேன் என நினைத்து—
கலம் ஏறி நின்ருள், பீடுநடைச் சிங்கம்பின்,
ஒரு பெண் நரி போல்!

★

"சிறையெடுத்துப் போன சீதா தேவிதனை—
சிங்கா தனத்திலேற்றிப் பட்டத்து ராணியாக்கிடு
வான்,
சீதைக்கோர் செல்வனுதித்தால்
இலங்கைச் செங் கோலில் அவனுக்கும் பங்கு,
பன நுங்கு போலப் பார்ப்பனர்க்கோர் தேசம்—
பாடுபடாமல் வருவதென்ருல்...
பதினுயிரம் சீதை போனுல்தானென்ன தோசம்!"
இப்படி ஆரியர்கள் நினைத்தபடி நடக்காமல்,
செப்படி வித்தைக்காரி சீதைக்கு சிறைச்சாலை
ஏற்பாடு செய்துவிட்டான் இலங்கைக்கோமான்!

வேதமென்றும், வேள்வியென்றும்,
விளம்புகின்ற கூட்டந் தன்னை...
விறகொடித்து வருதல் போல்
விலா எலும்பொடித்து வருக என்ருன்!
வெற்றி வேந்தனுக்கோர் தம்பி வீடணன்.....
வேங்கை மரத்துப் புல்லுருவி,
அண்ணனைச் சாய்த்து விட்டு அரசாளக் காத்தி-
ருப்போன்,
அனுமன் எனும் ஐந்தாம்படை யொன்றின்
கையினிலே
அக்கினிக்கோல் எடுத்துத் தந்து,
அழித்திடுக இலங்கைமா நகரையென்ருன்....
தென்னிலங்கைச் சீமையெங்கும் தீக்காடு
பிணக்காடு!
குணக்கேடன் வீடணனின் ஒத்துழைப்பால்—
குலம் வளர வழி கண்டார், குள்ளநரி
ஆரியர்கள்!
தமையனும் வாலியெனும் தமிழ் வீரன் தன்னைத்
தாய்பைகளின் சூழ்ச்சியினல் கொன்றுவிட்ட
கொடியன்.



சுயமரியாதையை விலை கேட்கும் சுக்ரீவன்
என்போன்—
கண் சுழற்றும் ஆரியரின் காலடியில் வீழ்ந்தான்.

★

தம்பியிடம் நம்பிக்கை வைத்திருந்த தங்கம்,
தரணியெலாம் நடுநடுங்க ஆண்டுவந்த சிங்கம்,
கடல்அலைமேல் எதிரிகளின் படைகள் வரக்கண்டு,
உடன் பிறப்பே, விபீஷணு! உடன் இளம்பு
என்றான்!

படமெடுக்கும் பாம்போடு விளையாட்டு வேண்டாம்-
கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கிடுவாய்
அண்ணு
உடன் சென்று சரணடைவோம் வந்திடுக
என்றே, மதுக்
குடங்காட்டும் ஆரியருக்குப் புகழ்பாடி நின்றான்-
தம்பியின்-


குரங்காட்டம் கண்டுவிட்ட தென்னவனும்-கண்கள்
குளங்காட்ட, "குலங்கெடுக்க வந்தவனே!
கோடரியின் பிடியே!....கொடிய உன் நாக்கை
அறுத்தெறியாமல் இருந்ததற்கு நன்றி சொல்லி
நடந்திடுக" என நடந்தான் களம் நோக்கி...!

★

ஒரு கருவில் ஊறிவிட்ட உத்தமனும்—சிந்தனை
உறக்கத்தில் வல்லவனும், எழில்—
கும்பகர்ணனெனும் தம்பி, அண்ணன்
இடையினிலே இருக்கின்ற உடை வாளைப் போலப்
படை மோதும் இடம் நோக்கிப் பின் தொடர்ந்
தான் பாய்ந்து!
கடைக் குட்டி தம்பியவன் எதிர்வந்து நின்றான்,
ஜடை கட்டி வாழுகின்ற ஆரியரை ஜெயிக்கப்
படை திரட்டிப் பயனில்லை-பாழாகும் என்றான்!
துரோகக் கடை கட்டி வாழுகின்ற தம்பியல்லநான்,
நாசத்தின் பிறப்பிடமே, நடைகட்டு என்றே
மடையுடைத்த வெள்ளம்போல் சீறிவிட்டுச்
சென்றான்,

★

"என்னருமை வீரர்களே! ஏற்றங் கொள்
தோழர்களே!
இன்றிந்தத் தென்னிலங்கை ஆண்டிருக்கும்
இராவணன் நான்—



இழிதொழிலோர்—பண்பிழந்தோர்—எத்திப்
பிழைப்போர்—
அவரை நத்திக் கிடப்போர்,
அனைவரையும் அரை நொடியில் அழித்துவிடப்
போர்க்கோலம் பூண்டு விட்டேன்!
புலிகொர் நண்பர்களே!
பொல்லாத புரோகிதர்கள், படை இல்லாதவர்
என்றிருந்தேன்!
பாவையரைப் பாசறையாய் ஆக்கிக் கொண்டு
தேவையுள்ள படைகளெல்லாம் குவித்து விட்டார்.
கோவை இதழ், கொய்யாக் கன்னம்,
போர்வை உடல் கொண்டுவிட்ட இளங் குமரி
களால்,
இனத்திலுள்ள மன்னரெல்லாம்
இருடிகள்பால் சாய்ந்து விட்டார்!
முழு நிலவு முகங் காட்டி, முனிவர்களின்
பெண்டாட்டி,
முடி மன்னர்களை வாட்டி விட்டார்—தமிழ்க்
கொடி பறந்த கோட்டை யெல்லாம்
மடியேந்தும்ஆரியர்க்கு மடங்களாய்ப் போனதம்போ!

அருமைத் தம்பிக்குத் தீமை சூழ்ந்து
ஆரண்யம் ஒடிவந்த இராமன்,
எருமைக்குமில்லாத தடித்த தோலன்
இழி சுக்ரீவன் இவனுக்குத் தோழன்,
அண்ணனுக்கு மரணம் தந்தோன்!
இன்னொருவன், அனுமன் எனும் துரோகியுடன்
இலங்கைக்குத் தீ வைத்த எந்தன் தம்பி!
இவர்கள் எல்லாம் எதிர்க்கின்றார் என்ன
என்றால்,
இதிலேதோ மர்மம் இருக்கத்தான் வேண்டு
மன்றோ?
நான்,
சிதைக்கோர் மகன் தந்து, இலங்கைச் செங்கோலும்
அந்த மகனுக்கே தந்துவிட வேண்டுமென்று—
தீப்பந்தனைய நிபந்தனைகள் போடுகின்றார்,
நீய இராமனது கூட்டத்தார்!
பூப்பந்தனைய பொன் மகளாம்—என் துணைவி
பாப்புனையும் புலவர்க்கும் கிட்டாத பைந் தமிழாம்—
கோப் பெருந்தேவியவள், குளிர் நிலா! வைரக்
கட்டி!



அந்த யாழ் மீட்டும் பாணனுக்கு, சீதையெனும்
பாழ்பட்ட வீணை ஏன்? சிறிது
நாள்பட்டே நம் நாடும் ஆரியர்களின்
தாள் தொட்டு வணங்குதற்கு வழி திறவேன்!
விழி மூலம் வீரத்தைக் காட்டுகின்ற வீரர்காள்!
மொழி மீது ஆணை தந்து புறப்படுவீர்—
முள்ளம் பன்றிகளைப் பழி தீர்த்துத் திரும்பிடு
வோம்!''

என முரசறைந்தான், முதுகுன்றத் தோளுடை
யோன்!

அது கேட்டு அணிவருமே ஆர்ப்பரித்தார்!...
கொலை மணக்கும் போர்க்களத்தில்
இரு தரப்புப் படைகளுமே ரத்தங் கொட்டும்!
தலை கொறுங்கிச் செத்தவரும், குடல் கிழிந்து
போனவரும்

தமிழினத்தார்—ஒரு குலத்தார்!
மலையோரம், மரத்தோரம் மறைந்திருந்து
எலி போலப் போரிட்டான் எதிரி ராமன்!
அம்புவியில் கண்டதில்லை இந்த முறை—
அம்புவில்லை யெடடா என்று

கும்பகர்ணன் கொதித்தெழுந்தான்!...அது கண்டு
குதித்தோடும் ராமன் தன்னை, கோழையே திரும்பு
என்றான்! கரும்பே உயிரென்று களிறு போல்
முழங்கி நின்றான்!

முடிக்கவில்லை அவன் பேச்சை!...முதுகுப் புறத்
தினிலே, சரமாரி பொழிந்து விட்டான் சண்டாள
இலக்குவனும்

ஆனையெனச் சாய்ந்துவிட்ட அன்புத் தம்பிதனை
சேனைதனை நடத்தி வந்த செந்தமிழன் கண்டு
விட்டான்!

சிந்தையெலாம் அணுவெல்லாம் தழல் பறக்கப்
பூனைகளே!...நில்லுங்கள் எனச் சொல்லிப்
பூட்டி விட்டான்...போர்க் கணையை!
குளிர் மேகம் கொட்டுகின்ற மழைதானே?
கோடையிலே அதிர்கின்றன இடிதானே? எனப்
புயல் வேகம்—புது வேகம் கொண்டு விட்டான்!
வேல்பட்ட புலி போல—விடுபட்ட கணைபோல—
அணை கெட்ட வெள்ளம் போல—ஆயிரம்
வாள்பட்ட மார்புடையான், போரிட்டான்!...
கால்பட்ட பிடரியுடன்கயவர்களும் மறைந்துபோனார்



ஒழிந்ததடா பகையென்று, நகை முழக்கம்
செய்துவிட்டுத் திரும்புகின்ற வழிதனிலே
ஒளிந்திருந்து ஆரியர்கள் ஓரம்பு வீசி விட்டார்.
மார்பினிலே பட்ட கணை வெட்டித் தள்ளி,
யாரடா கோழையென்று வாள் ஓங்கித் திரும்பி
—விட்டான்!

ஓடுதற்கு வழியின்றிச் சிக்கிவிட்ட இராமன் கூட்டம்
தேடுதற்கும் தசையின்றிப் பஞ்சாய்ப் போகும்!...
கன்னலடா எந்தன் நாடு, அதை
இன்னலிலே மாட்டிவிட்ட உங்களுக்கு-இந்த
வாள்வீச்சு மின்னலடா எனக்கூறிச்சுழற்றிவிட்டான்
சூருவளி தனையும் சூழ்ந்தெதிர்க்கும்
கீர்த்தி பெற்றோன்!

இனி நிலைமை மோசமென்று, ஆரியக்
கனி சுவைக்கும் வீடணன் கண்டு விட்டான்!
ஈட்டியொன்று அவன் கையில்!...எறிந்து
விட்டான் அண்ணனது முதுகின் பக்கம்!
மறைந்திருந்து பறந்து வந்த அந்த ஈட்டி-அவன்
மலைப்பாறை முதுகினிலே, ஊடுருவி, மார்பகத்
—தில் தலை நீட்டிக்
—கண்ணீர் கொட்டும்!

இமயமலை சாய்வது போல், இராவணனும்
வீழ்ந்து விட்டான்!
"எனைக் கொன்றவன் என் தம்பி,
பனைமரத் தோளுடையான்—கையிலே
பார்ப்பனரின் தாளுடையான்—
உயிர் பிழைக்க மருந்துண்டு!—ஆலை எந்தன்
உடன் பிறப்பு ஒளிந்திருந்து
போரிட்டான் எனக் கேட்டுச் சாகின்றேன்"
இது கேட்டுச் செத்தது போல் ஆகிவிட்டார்
இலங்கை மாந்தர்!

★





யாரோ ஒரு பெரிய மனிதன்!—என்றே நம்பினேம், நானும் என் நண்பர்களும். அவனுடைய உடை, நடை, அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி, அதன் மூலம் அவன் எங்கோ ஏறெடுத்துப் பார்த்த பார்வை யெல்லாம் பணக்காரன், என்றே காட்டிற்று! 'பஸ்' ஏறுவதற்காக, இத்தனை நேரமும் 'தவம்' இருந்தவர்கள்கூட, அந்த 'கனவான்' ஏற இடம் கொடுத்து ஒதுங்கிக் கொண்டனர். 'அறிவகம்' செல்லக் கிளம்பிய நாங்களும் எப்படியோ, ஏறிக் கொண்டோம்! சென்டிரல் ஸ்டேஷனைத் தாண்டிடும் வேளையில், பாராயிருக்கும் போலீஸ்காரர், கை காட்டாத தால் பஸ் நிற்க வேண்டியதா யிற்று—''சார்! சார்!!'' என்று ஒருவர் கூச்சலிட்டார். ''விடாதீர்கள், அவனை! விடாதீர்கள்!!'' என்று கூவினர். திரும்பிப் பார்த்தோம். கனவான்! பஸ்ஸை விட்டு வேகமாக இறங்கி, மூர்மார்க்கெட் பக்கம் நடையைக் கட்டலானர். சப்தம் போட்டவரும், விடவில்லை! அவரும் இறங்கி, பின்னாலேயே ஓடினர் - ''விடாதீர்கள்! பிடியுங்கள்!!'' என்று கூவியபடி. அதைக் கண்ட, ஒரு போலீஸ்காரர், அந்தப் 'பெரிய மனிதரை' பிடித்துக் கொண்டார். அதற்குள் பஸ் புறப்பட்டு விட்டது.

* * *

''என்ன நடந்ததாம்?''

''அவருடைய பையிலிருந்த 'மணிபர்ஸை' ஜேப்படி செய்து விட்டானும், சார்!''

''யார்? அவரா!''

''அவராவது —அவன் என்று சொல்லுங்கள். ஆளைப் பார்த்தீர்களல்லவா? எப்படியிருக்கிறான்—திருடன், என்று சொல்ல முடியுமா, அவனை?'

''ஆச்சரியமாயிருக்கிறதே!''


''ஆச்சரியம் என்ன, இதில்? எவனெவன், மற்றவர்கள் சொத்தைக் கொள்ளையடிக்க எண்ணுகிறானே, அவனெல்லாம் இப்படித் தானே வெளி வேஷம் போட்டுக் கொண்டுத் திரிகிறார்கள் சமூகத்தில்...''

''நல்ல வேளை! போலீஸ் கையில் சிக்கி விட்டான்...''

''ஆமாம்! ஆனால், அவனைப் போல எத்தனை பேர், எத்திப் பிழைத்துக் கொண்டும், ஏமாற்றி வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள்—நாட்டில்! அவர்களை, எந்தப் போலீஸ் பிடித்துக் கொண்டு வருகிறது? போங்க, சார்! என்னமோ, அவன் ஒருவன் சிக்கி விட்டான்!!''

* * *

எத்திப் பிழைப்பவன்! ஏமாற்றுபவன்!!—இவர்களில், எத்தனை பேரை, எத்தகைய உருவங்களில் ஒவ்வொரு நாளும் சந்திக்கிறோம் நாம். அதோ, காரில் பறந்து செல்லுகிறார் கரிமுகன் ஆலை முதலாளி, காத்தப்ப செட்டியார்! அவரைப் பற்றி, கனபாடி கணபதி சர்மாவைக் கேளுங்கள்—'தர்மவான்—தயாளர்—பெரிய கோயிலுக்கே கும்பாபிஷேகம் செய்து வைத்தவரோன்னே!' என்பார். கனகா இருக்கிறாளே, ஊர்க் கோடியில்—அவளைக் கேளுங்கள், "பாவி! படுபாவி!! அவன் பிள்ளை குட்டி நல்லா இருக்குமா? உழைச்சு ஓடாப் போனார், என் புருசன்! ஒரு நாள் சம்பளம் கூட்டிக் கொடுக்கும்படிக் கேட்டாங்களாம். தொழிலாளிங்க வயிற்றிலே மண்ணைப் போட்டுட்டு, அவுங்களையும் கொண்டு போய் ஜெயில்லே மூடிட்டான்யா, அந்தப் பணக்காரன்!" என்பாள். இதோ வருகிறாரே, கனஜோராக மிராசுதார் மித்ரபேத முதலியார்! அவரைக் கண்டால், ஊர் மிரளும்—கோடிக் கணக்கில் ரூபாய் இருப்பதால் அவரை ஈஸ்வரனுகவே ஆக்கி 'கோடீஸ்வரன்' என்றழைப்பார்கள்—அவருடைய 'வள்ளல்', புளியமிலாறு அடிகளுக்கு இரையான குடியானவர்களைக் கேட்டால் தெரியும்! ஊரைக் கொள்ளையடித்து கள்ள மார்க்கெட்டில் பணம் குவித்த பணநாதர்—கிட்டி கூட்டி வட்டி வாங்கும் கிஷின் சந்த் சேட்—இப்படி, எத்தனை பேரைப் பார்க்கிறோம், தினசரி. அவர்களில் ஒவ்வொருவரும், எவ்விதம் உயரப் பறானர்கள், உயர்ந்த அந்தஸ்து பெற்றார்கள், என்கிற உண்மைகளை உணராதவரும் உண்டோ? எனினும், என்ன சொல்லுகிறது உலகம்! எப்படி, காரில் ஏற வந்தவனின் வெளி வேஷம் கண்டு நாங்கள் மயங்கினோமோ, அது போல—அவர் கோயில் கட்டிக் கொடுத்த குளைர்—குபேரனைப்போல வீடு இருக்கிறது இவருக்கு-கார்கள் ஏழெட்டும், உண்டு, அந்தக் கனவானுக்கு!—தர்மவான், அத்தயாளர்- வியாழக்கிழமைதோறும் பசுவுக்கு அகத்திக்கீரை வைப்பவர் இந்த சேட்—என்று இப்படிப் பேசுகிறார்கள். ஏனெனில், அவர்களுடைய பணமும் வேஷமும், பல்லிளிக்கச் செய்து விடுகிறது! முதுகு கெலும்பு அற்றவர்களும், சமூகத்தின் சரிதம் அறியாதவர்களும், அவர்களுடைய பேச்சுக்கு மிரண்டும், பணத்துக்கு மயங்கியும், சரணடைந்து விடுகிறார்கள். எனினும், உண்மை எப்போதுமா, இருட்டாக இருந்து விட முடியும்? ஒரு நாளைக்கு, தீர்ப்பு வழங்கும் வேளை வரத்தானே செய்யும்! 'அய்யய்யோ, திருடி விட்டான்', என்று பஸ்லில் பறி கொடுத்தவர் கூவியது போல, தமது உரிமைகளையும் பறி கொடுத்தே வரும் மக்கள் ஒரு நாளைக்குக் கூறத்தான் செய்வார்கள். அப்போது, என்ன நடக்கும்? நீதி என்கிற போலீஸ்காரன், நெஞ்சியிரக்க மற்ற பணக்காரர்களைப் பிடித்துத் தண்டிக்கத்தான் செய்வான் !!



காரும்,
காட்சியும்!

புகைப்படங்கள்;—

பெருங்குன்றூர் கிழார்—சங்க காலத்துப் புலவர்களுள் ஒருவர்! அவர் ஒரு நாள் விடியற் காலையில், புற்று ஒன்றினைக் கண்டார். வழியில் சிதைந்து கிடந்தது, அப்புற்று. அதனருகே, ஒரு பாம்பு உடல் கிழிந்து செத்து, துண்டம் துண்டமாகக் கிடந்தது.

என்ன காரணம்? கறையான் புற்றெடுக்க கருநாகம் குடி புகுந்தது எனும் பழமொழிதான் உங்களுக்குத் தெரியுமே! எவ் வளவோ கஷ்டப்பட்டு, கறை யான்கள் அந்தப் புற்றினை யண்டாக்கின. கோபுரம் போன்ற அதைக் கண்ட பாம்பு ஒன்று, ஒதுங்க வந்தது. பிறகு இருப்பிடமாகக் கொள்ள லாயிற்று! சிதல்களால், பாம் பினை எதிர்த்து விரட்ட முடி யுமோ? எனவே, நடுங்கின! காலம் வரட்டும் என்று காத் திருக்கலாயின. உழைத்து வாழும் உழைப்பாளி, முத லாளியைக் கண்டு மிரளு வதைப் போல ஒதுங்கிக் கிடந் தன. முயற்சி, ஒரு கூட்டத்தி னுடையது! பயனே, யாரோ ஒருவனுக்கு!! சமயம் வரும், சமயம் வரும் என்று காத் திருந்தன. அந்தச் சமயமும் வந்தது—ஓரிரவில், அவ் வழியே கரடியொன்று வந்தது! கரடிக்கு, புற்றுச் சோறு என் றால் மிகவும் பிடித்தமான உண வல்லவா? அதனால், தன் னுடைய கூரிய நகங்களை புற்றுக்குள் செலுத்தித் தோண்டி! புற்றுச் சோறுக்குப் பதில், கூரிய நகங்களில் பாம்பு சிக்கி யது. என்ன செய்ய முடியும்? கரடி, பிறாண்டியது உணவைத் தேடி! பாம்பு சிதைந்து செத் தது!! குருதி படிந்த நகங்களில் சிக்கி வந்த பாம்புத் துண்டங் களை வீசியெறிந்து விட்டு, உணவைப் பெற்றுக் கொண்டு போய் விட்டது கரடி.

"ஈயற் புற்றத்து ஈர்ம் புறத்தி றுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளு கிர் கதுவலின்
பாம்பு மதன் அழியும் பாணாட்கங்கும்."

ஆறறிவுள்ள மனிதர்களல்ல, புலவர் பெருமானின் கதா பாத்திரங்கள்! ஆயினும், வெகு அழகாகச் சித்தரிக் கிறார்—பகட்டான பாம்புக்குக் கிடைத்திட்ட பாடத்தை!!

புகட்டியது, ஒரு கரடி.


பொதுவுடைமைக் கொள் கையினை 'கரடி' என்று வர் ணிப்போரும் உண்டு.

இரண்டிற்குமுள்ள ஒற்று மையினைக் காட்டி, எங்கள் புல வர் முன்பே 'மார்க்ஸ் சித்தாந் தத்தை'க் கண்டு பிடித்து விட் டார் எனக் கூறவில்லை நாம்! அக்கிரமத்தை காப்பதிலுள்ள ஆர்வமும் ஆசையும் அனறு தொட்டு இருந்து வருகிறது! ஆனால், பயந்து நடுங்குவோர் பல்லிளிக்க வேண்டியிருக் கிறது—'திருடன்! திருடன்!!' என்று கூச்சலிட்டவன், பறி கொடுத்ததைப் பெறுகிறான்!

ரஷ்யாவும், சீனவும், இப்படி எச்சரிக்கை கொண்டவர் களின் கூடாரம் ஆகி விட்டது.

நாமே, ஏமாளியாகவே இருக்கிறோம்! ஏமாந்த வண் ணமே இருக்கிறோம்!! கறை யான் புற்றெடுக்க, கருநாகங் கள் புகுந்து அட்டகாசம் செய்துகொண்டே உள்ளன.

★



"கட்டு மரம கடடிக்கிட்டு
கயிறு வலை எடுத்துக்கிட்டு—
கடல் மீமலே போறவனே!"

டி. பி. எஸ். சுந்தரநாதன், மாயூரம்.



அவன்

நான் கடலில் செல்லும் கலம் செலுத்துபவன். கலத்தை ஓட்டுகிறேன். கடும் புயல் வீசுகிறது. அதோ கற்பாறை தெரிகிறது. கணநேரத்தில் கலம் அதில் மோதி சிதறி கடலுக்குள் மூழ்கி விடுகிறதோ என்னவோ—யார் கண்டார்கள்? என் கரங்கள் நடுங்குகின்றன. என் குரல் ஒடுங்கிப் போகிறது. என் உடனிருப்பவர்கள் இங்குமங்கும் ஓடி அலுத்து விட்டனர். சிலையாகி விட்டனர். அசையக் கூடசக்தியின்றி, சாவு வரும் திசை நோக்கி நிற்கின்றனர். ஐயையோ! இதோ, சில நிமிடத் துளிகளுக்குள் எங்கள் இன்னுயிரை இழக்கப் போகிறோம் என்று ஏங்குகின்றனர். நானும்தான் தவிக்கிறேன். உயிரை இழப்பதற்காக நான் வரும்தவில்லை. இந்த உயிரை, ஒருத்தியிடம் ஏன் ஒப்படைத்தேன் என்று வருந்துகிறேன்.

இந்தத் தடவை ஓய்வு பெற்று ஊர் சென்றேன். சென்ற இடத்தில் சேல்விழியாள் அவளைக் கண்டேன். காதல் கொண்டேன். கருத்தறிவித்தேன். மனம் ஒருமித்தாள். பெற்றோரை அணுகினேன். முதலில் முணுமுணுத்தனர். அவளின் பெற்றோரும் அப்படியே முதலில் மறுத்தனர். சாதியென்றனர்; சமூக கட்டுப்பாடு என்றனர். பிறகோ, எங்கள் மனவுறுதி அவர்களை இணங்க வைத்தது. ஒப்பினர். நாங்கள் காதல் முறிவிலிருந்து தப்பினோம். இன்பக் கப்பலானாள் அவள். அந்தக் காதல் கலம் ஓட்டும் மாலுமியானேன் நான்.

மாதங்கள் மூன்று, மணம் முடிந்து—என் ஓய்வு நாட்கள் முடிந்து, வேலைக்குத் திரும்ப வேண்டி வந்தது. பெற்றோர்கள், மணந்து மனதாலே இன்பம் நுகர்ந்த எங்களை, இணைந்து உடற் சுகமும் காண நாள் வைத்தனர். அந்த முதல் இரவும் வந்தது

அழதா—என் செல்லக் கிளியின் பெயர் அதுதான். அவள் அன்று பகலெல்லாம் புள்ளிமான் போல் துள்ளித் துள்ளித் திரிந்தாள். அவள் என் முன் வந்து மறையும் பொழுதெல்லாம் என் உள்ளமே என்னை விட்டுப் பிரிந்திடுவது போல் தெரியும். என்னையறியாமலே, என் நெஞ்சை அமுக்திப் பிடித்துக் கொள்வேன் நான்.

இரவும் வந்தது. எங்கள் ஆசைக்கதவு திறந்தது. இன்பவெள்ளம் பாய்ந்தது. மூழ்கினோம். திணறினோம். இருந்தாலும் இடைவேளை தரவில்லை. பின்னிக் கிடந்தோம், பிரிந்திட மனமின்றி. கன்னித் தமிழில் என் காதலி கேட்டாள்; அந்தக் கேள்வி என் காதுகளில், இந்த அலை இரைச்சலைத் தாண்டிக் கொண்டு கேட்கிறது.

"நாதா, இந்த இன்பம் என்றும் எனக்குச் சொந்தமாக இருக்குமா?"

"ஏன், கண்ணே இருக்காது?"

"நாளைக்கே எனக்கு கிடைக்காது என்று உங்கள் வேலை திரும்பும் உத்திரவே கூறுகிறது."

"ஆறு மாதத்திற்குப் பிறகு வருவேன். உன்னை

அழைத்துக் கொண்டே செல்வேன்''

''அப்படியா... அன்பே...''

அவள் கொஞ்சு மொழியால், மிஞ்சும் இன்பத்தை மேலும் கொஞ்சம் அதிகரிக்கச் செய்தாள். பொழுது விடியும் நேரம் என்பதைக் காட்டுவது போல் கோழி கூவிற்று. அந்தக் கோழியின் கழுத்தை நெறித்து விட லாமா என்றிருந்தது எனக்கு—சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரம் டண், டண் என நான்கு மணி அடித்தது. அந்த இருட்டில் எழுந்து சென்றாள் என் அன்புச் சிலையாள். திரும்பி வந்தாள். எங்கு சென்று வந்தாய் என்று கேட்டேன். கடிகாரத்தின் சின்ன முள்ளையும், பெரிய முள்ளையும் திருப்பி ஒன்றில் வைத்து விட்டேன் என்றாள். நான் சிரித்தேன். அவளும் சிரித்துக் கொண்டாள்.

''காலையில் புறப்படுகிறேன் கண்ணே. நீ கண் கலங்காமல் எனக்கு விடை தர வேண்டும்''

''முயற்சிக்கிறேன்''

''முயற்சியில் தோற்று விடப் போகிறாய்—ஆகவே இப்பொழுதிருந்தே மனதிற்குப் பயிற்சி தந்துவிடு''

''பயிற்சி தருகிறேன். ஆனால் என் மண்டு மனதிற்கு எதுவும் சட்டென்று வருவதில்லை''

''வரும்—உன் திட மனதிற்கு நிறைய உண்டு. நான் அறிவேன்''

''சரி சரி, ஊருக்குச் செல்லும் பொழுது எனக்கு என்ன தந்துவிட்டுப் போகப் போகிறீர்கள்?''

''சில்லரையாகத் தரவா—மொத்தமாகத் தரவா?''

''உங்கள் பிரியம்''

''சரி, எண்ணிக் கொள்''

''.....உம்...போதும், போதும். உதடு பிய்ந்து விடப் போகிறது''

''கண்ணே, நீ எனக்கு என்ன பரிசாகத் தரப் போகிறாய்?''

''தருகிறேன். கொஞ்ச நேரம் காத்திருங்கள்''-அவள் விளக்கை ஏற்றினாள். அவள் தோழி ஒருத்தி திருமணத்தின் நினைவாகத் தந்த **'வாழ்க்கை'** என்ற புத்தகத்தை எடுத்து வந்தாள். அதில் எழுதியிருந்த வரிகளை சிகப்பு மையினால் கோடிட்டிருந்தாள். அதைப் படித்துக் காண்பித்தாள். **பெண்ணின் வாழ்க்கையில் காதல் ஒரு புத்தகம்; ஆணின் வாழ்க்கையில் அது ஒரு அத்தியாயம்.** இந்த வரிகளை மறந்துவிட வேண்டாம் என்று என்னைக் கேட்டுக் கொண்டாள். அந்த புத்தகத்தை எனக்குப் பரிசாகத் தந்தாள்.

அந்த வாழ்க்கை புத்தகத்தை, என் துணிப் பெட்டியில் மட்டுமல்ல, இதயப் பெட்டியிலும் வைத்தேன். காலை மலர்ந்தது. எல்லோரும் கண் மலர்ந்தனர். ஆனால் என் அழுதாவோ, கண்ணீர் மல்கினாள். ஆறுதல் கூறி, விடைபெற்று வெளியேறினேன்.

கலத்திற்கு வந்தேன். இதோ புயலுக்குப் பலியாகப் போகிறேன். என் கண்மணியாள் கூறிய வாசகம் மெய்யாகப் போகிறது. காதல் என் வாழ்வில் ஒரு அத்தியாயமாகப் போய் விடப் போகிறது. அழுதாவோ, காலமெலாம்,



என்னை நினைந்து, என்னோடு இணைந்து சுகம கண்ட அந்த முதல் இரவை எண்ணி ஏங்கிடப போகிறாள். அவள் வாழ்க்கைப் புத்தகத்தில் காதல் ஒரு அத்தியாயமாக முடியாது. ஆம், சமூகம் அப்படி சட்டமிட்டிருக்கிறது. அவள் வேறொருவனை மணந்திட முடியாது. மணந்திடக் கூடாது.

கலம் ஓடுகிறது. புயல் அலைகளை ஏவுகிறது. அலையோ, கலத்தினுள் பாய்கிறது. நான் என்னிடத்தை விட்டு எழுந்தேன். என் பெட்டியைத் திறந்தேன். அவள் தந்த ஏட்டை எடுத்தேன். அதில் அவள் காட்டிய வரிகளின் கீழே என் கையெழுத்திட்டேன். தண்ணீரில் நனையாத உரையிட்டு. அதனுள் ஒரு துண்டுக கடிதத்தில, "என் அன்பு மனைவிக்கு, காதல் உன் வாழ்வில் ஒரு அத்தியாயம் ஆகட்டும். அதுவே புத்தகமாகி, என்னை நிந்தனைகாளாக்க வேண்டாம். **கண்ணன்**— வருகிறேன். அவன் காப்பாற்றுவான்—கணவன் **அழகப்பன்**" என்று எழுதி வைத்தான். அவனுக்கு உற்ற தோழன் கண்ணனிடம் அதனைத் தந்து கடலிலிருந்து தப்பும் மிதக்கும் படகில ஏற்றிவிட்டான். தான் கடலில குதித்தான். அவன் வாழ்வு முடிந்தது. கலமும் பாறையில மோதி சிதறுண்டது. எங்கும் அலையின் இரைச்சல்—கடல் கொந்தளிப்பு!

★

அவள்

என்னை அவர் பார்த்தார். அவரை நான் பார்த்தேன். கண நேரப் பார்வை, காலமெலாம் உறவு கொள்ளும் ஆசையை உண்டாக்கிற்று. அவர் கெரிவித்தார். நான் மறுக்கவில்லை. பெற்றோரிடம் கண்ணீரையும், புனகையையும் காட்டி சம்மதம் பெற்றேன்.

இருவரும் மணந்தோம். ஒரு நாள் இன்பம்—மறு நாளே பிரிவு. அவர் கலம் செலுத்த கடல் சென்றார். நானே, துணையற்றவளானேன். என் பெற்றோரும் கொள்ளை நோயில மாண்டனர். அவர் பெற்றோரும் இறந்தனர். குறிப்பிட்ட காலத்தில் அவர் வரவில்லை. பிறகோ, அவர் சென்ற கலம் திரும்பவே இல்லை என்ற செய்தி கிடைத்தது.

என் கண்ணாளர், அன்று இரவு எனைப் பிரிந்து செல்கையில, நான் 'வாழ்க்கை' என்ற ஏட்டைக் கொடுத்தேன். அதில் ஒரு வரியைக் குறித்துக் கொடுத்தேன். அந்த வரி என் அளவில் மெய்யாகி விட்டது. காதல் என் வாழ்க்கைப் புத்தகமாகி விட்டது. இனி, என் வாழ்வு முழுவதும் அவர் நினைவால் வாடிச் சாக வேண்டியதுதான்.

அவர் நலம் விசாரித்தேன். அவர் பற்றிய எந்தக் குறிப்பும் தெரியவில்லை. அவர் இறந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது.

நான் இனி உயிர் வாழ்வது சரியில்லை என்று முடிவு செய்தேன். உயிரைப் போக்க வழி தேடிக் கொண்டிருந்தேன்.

ஆனால் ஊரில ஒரு மருந்து வியாபாரி; அவன அழகன். வாலிபன். பெயர் **மருதவாணன்**. அவன் மட்டும் எனை வட்டமிட்டான். எனக்கு அவன் வருவதிலும், பேசுவதிலும் வம்பிருக்கிறது என்பது தெரியும். ஆனாலும் அவன் உதவி வேண்டுமே! அதற்காக அவனோடு பேசினேன். சிரித்தேன். அவனோ, தன் படபடப்பு மறைத்து பெற்று விட்டதாக நினைத்துக் கொண்டான். தேன் குடித்த மந்தி போல் நடந்து கொண்டான். நான் அவன் கடைக்குச் சென்றேன். அவனோடு பேசிக் கொண்டே, அவன் கடை முழுவதும் பார்த்தேன். 'விஷம்' என்று எழுதியிருந்த பாட்டிலைப் பார்த்தேன். அதனருகில் சென்று, அவனிடம் குடிக்க நீர் கேட்டேன். அவன உள்ளே சென்றான். அங்கிருந்த புத்தகத்தில் ஒரு தாளைக் கிழித்து, கொஞ்சம் அதில் கொட்டி மடித்துக் கொண்டேன். தண்ணீரோடு அவன் வந்தான். தாகம் அடங்கி விட்டது என்று கூறிவிட்டேன். என் தாகம் அடங்கவில்லையே என்று கூறுவதுபோல் அவன் பார்த்தான். நாளை வாருங்கள் என்று கூறிவிட்டு வீடு சென்றேன்.

என் வீட்டு வாயிலில் ஒரு வாலிபன் அமர்ந்திருந்தான். அவன் யாரென்று என்னால் கண்டு கொள்ள முடிந்தது. அவன் என் கணவரின் ஆருயிர் நண்பன் கண்ணன். அவனைக் கண்டதும், கண்ணீரை மழைபோல் பொழிந்தேன். அவன ஆறுதல் கூறினான். என் கண்ணாளர்ட மிருந்து கொண்டு வந்த உரையிட்ட புத்தகத்தைத் தந்தான். பெற்றுக்கொண்டு உள்ளே சென்றேன்.

என் தனியறையில் அதனைப் பிரித்தேன். நான் தந்த பரிசுப் புத்தகம்! அதில் நான் குறிப்பிட்ட வரிகளுக்கு

கீழே அவர் கையெழுத்து. அதோடு தண்டுக் கடிதம். இவைகளைப் பார்த்ததும் மேலும் என் கண்கள் உடைப்பெடுத்த ஏரி களாயின.

பிறகு மெதுவாக மருத வாணன் கடையிலிருந்து கொண்டு வந்த விஷப் பொட்டலத்தை எடுத்தேன். பிரித்தேன். அந்தப் பொட்ட லம் மடிக்க உபயோகப்பட் டிருந்த கடிதத்திலிருந்த ஒரு வரியை என் கண்கள் படித் தன: நீ வாழ வேண்டியவள். வாழ உனக்கு உரிமையளிக் கப்பட்டிருக்கிறதே தவிர, சாக அல்ல-இதைப் படித்த தும் என் கண்களில் ஒளி பொங்கியது.

அப்பொழுது வெளியிலி ருந்து வந்த கண்ணன் மெது வாக என் அருகில் வந்தான்.

"கடல் உன் வாழ்வில் இந்தக் களங்கத்தை ஏற் படுத்தி விட்டது"

"களங்கம். போக்கக் கூடியதல்ல"

"அதற்காக காலமெலாம் கலங்கிப் படன்?"

"காலமெல்லாம் என்று நீட்டுவானேன்? காலம் சுருங்கிவிட்டது. கடை சி நிமிடம் நெருங்கிக் கொண் டிருக்கிறது"

"செல்வது புரிய வில்லையே"

"புரியும், சிறிது நேரம் சென்றால்"

பக்கத்திலிருந்த விஷத் தை திரும்பி சன் வாயினுள் கொட்டிக் கொண்டாள். கண்ணன் தடுக்கத் துடித் தான். ஆனாலும், அவள் நினைத்ததை முடித்து விட் டாள். மருதவாணனும் அப் பொழுது வந்தான். ஒரு நிமி டத்தில் நடந்ததை உணர்ந்து கொண்டான். ஒரு சொட்டுக் கண்ணீரோடு வெளியேறி னான்.

கண்ணன் அலறினான்— துடித்தான்.

"அன்புள்ள சகோதரி அமுதா—உனக்கு அண்ண னாக இருந்து உன்னைக் காப் பாற்ற வந்தேன். ஆனால் நீயோ, யார் துணையும் வேண்டாமென்று பிரிந்து விட்டாய்" என்றான்.

அமுதா ஒரு புன்முறுவல் பூத்தாள், சாய்ந்தாள். அவள் எதிரில் அந்த 'வாழ்க்கை'ப் புத்தகம் கிடந்தது. அந்த வரிகளை எல்லோரும் படிக் கும் அளவில் பளிச்சென்று தெரிந்தது: பெண்ணின் வாழ்க்கையில் காதல் ஒரு புத் தகம். ஆணின் வாழ்க்கை யில் அது ஒரு அத்தியாயம். இந்த வரிகளைப் படித்து விட்டு, சிரிப்பது போலிருந்த தது அவளது புன்முறுவல். ★



இந்தோனேசியாவின் கலையும் பண்பாடும்!

செல்வம்



அண்மையில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் குடிசைத் தொழில் முறைகளை ஆராயச் சென்றிருந்த பொழுது, இந்தோனேசியக் குடியரசின் பல பாகங்களைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு செல்வதற்கு முன்பு சிங்கப்பூர், பாங்காக், சைகோன், ஹாங்காங், டோக்கியோ ஆகிய சில நகரங்களில் நான் தங்கி, அவைகளின் தனித்தனி சிறப்புகளைக் கண்டிருந்ததால், இந்தோனேசிய நகரங்கள் மேற்கூறிய நகரங்களுக்கு எப்படி ஒப்பாகும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது. சிங்கப்பூரைப் போல செல்வத்திலும், ஐரோப்பிய நாகரிகத்திலும் சிறந்த நகரம் ஆசியாவிலேயே கிடையாது என்று பலர் சொல்வதின் உண்மை எனக்கு ஒருவாறு புலனுகியிருந்தது. தாய்லாந்தின் தலைநகரான பாங்காக், ஐக்கிய நாடுகள் சங்கத்தின் (யு. என். ஒ.) கிழக்கத்தியஅலுவலகத்தின் இருப்பிடமாய் இருப்பதாலும், பௌத்த, இந்திய, ஜைன முறையில் அமைந்த கட்டிடங்கள் மிகுந்திருப்பதாலும், அமெரிக்கர்கள் அள்ளி வீசும் பொருளாதார உதவியாலும், இந்நகரம் சியாங்கே ஷேக் காலத்திலிருந்த சீன நாட்டு கான்டேன் மாதிரி ஒரு பக்கம் தாங்கொணவறுமை மிக்க மக்களும், மற்றொரு பக்கம் ஆடம்பர வாழ்க்கையின் எல்லையைக் காண விரும்புகிறவர்களும் கொண்டதாயிருக்கிறது. சுதந்திர இந்தோனேசிய நகரங்கள் இப்படி அன்னியர் கொள்ளையிடும் நாடாக இருக்காது என்று எனக்குத் தோன்றிற்று. அது போலவே வாணிப செல்வாக்கும், துறைமுக அழகும், 'ஆசியாவின் மாணிக்கம்' என்று கூறப்படும் சிறப்பும், கம்யூனிஸ்ட் சீனர்களும், பணக்கார அமெரிக்க முதலாளிகளும், ஆங்கிலேய அதிகார வர்க்கத்தினரும் அன்னியோன்னியமாகப் பழகும் உலகத்தின் ஒரே பகுதியான ஹாங்காங்கின் தனிப் பெருமையையும் வேறெங்கும் நிச்சயமாகக் காண முடியாது என்றும் எனக்குத் தோன்றிற்று.

ஆகவே நான் இந்தோனேசியாவில் இந்த அதிசயங்களைக் காண முடியுமென்று நம்பவில்லை. ஆனல் அழகையும், கைவேலைப்பாட்டையும், உழைப்பையும் விரும்பும் ஜப்பானிய மக்களைப் போல் இந்தோனேசிய மக்களின் கலையும் பண்பும் அமைந்திருக்கும் என்று நினைத்தேன். இந்த எண்ணங்கள் மாறி மாறி நான் மணிலாவிலிருந்து இந்தோனேசிய தலைநகரத்திலுள்ள 'கெமஜொரான்' விமான நிலையத்திற்கு வந்து சேரும் வரை எழுந்தன.

பேராசிரியர்
வேதகிரி சண்முகசுந்தரம்
தியாகராயர் கல்லூரி பொருளாதாரத் துறைத் தலைவர்.

இந்தோனேசியக் குடியரசு முப்பதாயிரம் தீவுகளைக் கொண்டது. இதன் நிலப் பரப்பு ஏழு லட்சம் சதுர மைல்கள். இங்கு ஜாவா, சுமத்ரா, போர்னியோ ஆகிய மூன்று பெரிய தீவுகளும், செலிபஸ், பிளோரஸ். திமோர், மொலோகஸ், பாலி, லம்பொக், சும்பா ஆகிய ஏழு சிறிய தீவுகளும் முக்கியமானவை. இந்த நாட்டின் மக்கள் தொகை சுமார் ஏழரை கோடி. அதாவது தமிழ் நாட்டின் இன்றைய மக்கள் தொகையைவிட ஒன்றரை மடங்கு. இந்த நாட்டு மக்கள் தமிழ் நாட்டின் பழங்கால மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் அநேகர் முகமதியர்கள். ஆனாலும் இவர்கள் பழக்க வழக்கங்கள், தோற்றம் அனேத்தும் நமக்குப் புதிதாக இல்லை. கலையைப் பொறுத்த வரையில் பாலி, ஜாவா, சுமத்ரா ஆகிய மூன்றும் மிகவும் முக்கியமான தீவுகள். நகரங்களுள் ஜாகார்த்தா மிகப் பெரிது. அதனுடைய மக்கள் தொகை சென்னை நகரத்தின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கு. அதனுடைய வீதிகளும் கட்டிடங்களும் ஒரு வகையில் ஹாலந்து நாட்டின் அமைப்பை ஒட்டி இருக்கிறது என்று கூறுகிறார்கள். இருந்தாலும் முன்னூறு ஆண்டுகளாக ஆட்சி செய்த டச்சுக்காரர்கள் எவ்வளவு அக்கறையில்லாமல் நாட்டைக் கண்காணித்தார்கள் என்பதற்கு இந்நகரமே ஓர் எடுத்துக் காட்டு. பல பாகங்களில் நடந்து செல்வதற்கும் தகுதியற்ற வீதிகளைக் காண்கிறோம். நூற்றுக்குத் தொண்ணூற்றிரண்டு பேர்கள் டச்சு ஆட்சியின்போது எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் சுதந்திரமடைந்த இந்நாடு டச்சுக்காரர்களுடைய ஆக்கிரமிப்புக்கு இன்னும் இலக்காகத்தான் இருக்கிறது. இன்னிலையில் இந்தியாவை விட்டுச் சென்ற ஆங்கிலேயர்களைப் போல எந்த முறையிலும் டச்சுக்காரர்கள் நியாயமாக நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. இங்குள்ள சீனர்களில் அநேகர் சியாங்கே ஷேக் நண்பர்கள். இந்த நாட்டின் பண்படாத அரசியலைப் பற்றியோ, சுலபமாக முன்னேற்றமடைய முடியாமல் திணறும் பொருளாதாரத்தைப் பற்றியோ பேசுவதை விட, இந்நாட்டின் கலையையும் பண்பையும் சிறப்பித்துச் சிறிது கூறலாம்.

முதலாவது, பாலி நாட்டின் நடனங்கள் உலகத்திலேயே பெயர் பெற்றிருப்பதால் இதைப் பற்றி ஒரு சில உண்மைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பத்திரிகைகளிலும், படக் காட்சிகளிலும் அரை நிர்வாண பாலி நாட்டு நடன அழகிகளைக் காண்கிறோம். டோக்கியோ நடன சாலைகளிலும், ஹாங்காங், சிங்கப்பூர் ஹோட்டல்



திமோரீஸ் நாட்டு நடன உடைகள் மூங்கிலால் செய்த கிரீடங்களுடன்...



லும், இதில் பங்கு கொள்பவர் களும் காண்பவர்களும் பொது வாக இந்து மதச் சார்பற்றவர் கள். ஆகவே இந்த நடனங் கள் ஆதியில் மத சம்மந்த முள்ளதாகத் தோன்றி, இப் பொழுது இவை பல மதத்தின ருக்கும் பொதுவான கலையாக மாறியிருக்கிறது.

இதைத் தவிர மத்திய ஜாவாவிலுள்ள 'சிரிம்பி', மத் திய சுமதராவிலுள்ள 'மினுங்க பாவா' நடனக்காரர்களும் மிக வேலைப்பாடமைந்த இந்தோ னேசிய பல வர்ண 'பதாக்'


நடனங்கள் தமிழகத்திலிருந்து, ஏழாவது, எட்டாவது நூற் றாண்டுகளில் வந்த தஞ்சாவூர் நட்டுவக்காரர்கள் பரப்பிய கலை யாகும். மேற்கு ஜாவாவி லுள்ள தியோரிஸ் டேண்கள் மேளமடித்துக் கொண்டு ஆடும் நடனங்கள் நம் நாட்டு கிராமங் களில் அறுவடையின் போது ஆடும் குறவர் நடனங்கள் போல் இருக்கின்றன. நாக ரிகமடைந்த இந்தோனேசியர் கள் ஐரோப்பிய நடனத்தி லேயே அதிகப் பற்றுடையவர் களாகத் தோன்றுகிறார்கள்.



இந்நாட்டு மக்களின் கைத் திறன் அவர்கள் மூங்கிலி லிருந்து செய்யும் பைகளிலும், பாய்களிலும் மிளிருகிறது. நாடு முழுதும் பலவகை மூங் கில் தோட்டங்கள் நிறைந் திருக்கின்றன. நல்ல கன மான மூங்கில்களிலிருந்து சமையல் செய்யும் பாத்திரங் களும் செய்கிறார்கள். இக் கைத்தொழில்கள் அனைத்தி லும் பெண்களே அதிகப் பங் கெடுத்துக் கொள்வது குறிப் பிடத்தக்கது. ஆனால் பொது வாக இம்மக்கள் ஜப்பானியர்

களிலும் பலவித நடனங்களைக் கண்ட உல்லாசப்பிரயாணிகள் பாலி நாட்டுக்கு பத்திரிகை களில் கண்டிருந்த புது வித நடனங்களைப் பார்க்கச் செல் கிறார்கள். ஆனால் அன்னியர் கள் அங்கு காணும் உண்மை என்ன வென்றால், பாலி நாட்டு கவர்ச்சிமிக்க நடனப் பெண் கள் ஆங்கிலேய நாட்டு நாட் டியக்காரர்களைவிட மிக அதிக மாகவே உடை உடுத்துகிறார் கள் என்பது. இந்தியாவிலா வது மலையாள நாட்டில் ஒரு பகுதியினர் இன்றும் பழைய பாலி நாட்டினரைப் போல உடை உடுத்துகின்றனர். பாலி நாட்டின் இந்த மாறுதலுக்குக் காரணம், புதிய அரசாங்கம், அன்னியர்கள் பாலியர்களைக் கேலி செய்வது தெரிந்து கொண்டதே. பாலி நடனத்

உடைகளை அணிந்து நட மாடும் பொழுது நம் நாட்டு பரத நாட்டியத்தைப் போல் தோன்றுகிறது. இவர்களே



பாலி, ஜாவா, சுமத்திரா முதலிய இடங்களில் சில மரக் கைத்தொழில் செதுக்கல்கள்!

தைப் பற்றி இன்னும் ஒரு விசித்திர உண்மை. அனேக மாக எல்லா நடனங்களிலும் இந்து மத இதிகாச பாத்திரங் கள் கொண்டதாக இருந்தா

தென் கிழக்காசியாவில் மிக அதிகமான உடைகளை உடுத்தி ஆடுபவர்கள். தென் சுமத்ராவில், குறிப்பாக 'பெலம் பாங்க' எனற இடத்தில் ஆடும்



சுமத்திராவிலுள்ள பெலாம்பாங்கில் எட்டாம் நூற்றாண்டு தஞ்சாவூர் நடனக்கலை—இந்தோனேஷிய உடையில்!

கலைப் போல அவ்வளவு சுறுசுறுப்பானவர்கள் அல்ல. மரவேலைப்பாடு இந்நாட்டிற்குத் தனிச் சிறப்பளிக்கிறது. அழகாகச் செதுக்கப்பட்ட 'டொராஜா' மர வீடுகள் மத்திய செலிபஸ் தீவுகளில் அதிகமாகக் காணப்படுகிறது. பாலி நாட்டு மரக் குதிரைகள், மூங்கில் விளக்குகள், பொம்மைகள், மரத் தட்டுகள், பொம்மலாட்டக் கருவிகள், மற்றைய மரச் சாமான்கள் உலகப் பிரசித்தி பெற்றவை.

மர வேலையில் சிறந்திருப்பது போலவே உலோகக் கைத்தொழில்களிலும் இந்நாடு சிறப்படைந்திருக்கிறது. தமிழகத்து மக்கள் இந்நாடு வந்த பிறகுதான் இக் கைத்தொழில்கள் வேரூன்றின. ஆகவே, இந்தியாவில்—குறிப்பாக தஞ்சை, திண்டுக்கல், நாகப்பட்டினம், மதுரை ஆகிய இடங்களில் செய்யும் பித்தளை, மற்றும் உலோக வேலைப்பாடுகளை விடச் சிறந்ததாகக் கூற முடியாது. இருந்தாலும் சுமார் 3000 மைல்களுக்கப்பால் உள்ள இந்தோனேசியத் தீவுகளில் தமிழக கைத்தொழில் மேன்மையின் பிரதிபிம்பத்தைக் காணும்போது நாம் பெருமிதமடையாமல் இருக்க முடியாது. தந்த வேலைப்பாடுகளும் இங்கு அதிகமாக உண்டு. அஞல் மைசூர், திருவிதாங்கூர் போன்ற இடங்களிலுள்ள நேர்த்தியான வேலைப்பாட்டைக் காண முடியாது. பொன், வெள்ளி நகைகள் அதிகமாக பாலி, ஜாவாத் தீவுகளிலும் அணியப்படுகின்றன. மாதுரீஸ் என்ற இடத்திலுள்ள வங்கிகளும், மற்றைய தோடுகளும், தஞ்சை வேலைப்பாட்டைப் பின்பற்றியது. மற்றும் சிற்பம், கட்டிடம் முதலிய கலைகள் பழங்காலந்தொட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. பொகூர் என்ற ஒரு சிறு நகரத்தில் 275 ஏகர் நிலப் பரப்புடைய ஒரு பெரும் பூங்காவில் இடையிடையே இருக்கும் சிறு கட்டிடங்கள் பல்லவ விஜய நகர கட்டிட வேலைப்பாட்டை ஒத்திருக்கின்றன. இந்நகரம் இந்தோனேசியாவிலேயே மிக அழகானதும், இந்தோனேசிய ஜனாதிபதியின் விடுமுறை உறைவிடமாகவும் இருக்கிறது. பாண்டுங் நகரத்தில் புதிய முறைப்படி கட்டப்பட்ட அநேக நகரங்கள் இருக்கின்றன. இங்கு வாழும் மக்கள் சீனர்களும், ஐரோப்பியர்களும் ஆவர். இந்தோனேசியத் தலைநகரான ஜகார்த்தாவை விட பாண்டுங் மிகவும் நேர்த்தியான நகர அமைப்பு உடையது. இங்குதான் பெரிய நவீன ஹோட்டல்கள் இருப்பதால், ஆப்பிரிக்க — ஆசிய மாநாடு இங்கு நடைபெற்றது. என்னுடைய சுற்றுப் பிரயாணத்தில் கடைசியாகக் கண்ட இந்தோனேசியாவை விட்டு வரும்போது அந்நாட்டில பொதுத் தேர்தல். ஆகையால எங்கு பார்த்தாலும், 'மர்தீகா' 'மாதீகா'—அல்லது 'சுதந்திரம்' ''சுதந்திரம்'' என்ற பேசசு இருந்தாலும், அந்நாட்டு அரசியலோ, வேறு நான் கண்ட பொருளியலோ, சில நாட்கள் என் மனதில் இடம் கொள்ளவே யில்லை. நான் அந்நாட்டு கலிமாந்தான் என்ற விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூரிலுள்ள கல்லாங் நிலையம் வரும் இரண்டு மணியளவும் என் உள்ளம் அனேத்தையும் கவர்ந்தது 5000 அடி உயரத்திலிருந்து கண்ட காட்சி. இப்போதுதான் பருவம் எய்திய இயற்கை வனப்பு மிக்க ஆசிய என்ற ஆரணங்குக்கு, அழகுக்கு அழகு செய்வதுபோல் அமையும் பல்லாயிரம் இந்தோனேசியத் தீவுகள் பளிங்கு மிக்க முத்து மாலை—வனப்பின் பிம்பம்!

இரவில் கதிரவன்

விட்டு விட்டு ஒலித்து அடங்கிய கடிகாரத்தின் மணியொலிகள் யாரோ ஜலதரங்க இசையை மீட்டியதைப்போல் உணர்வை உண்டாக்கின. ஒன்று-இரண்டு-மூன்று-நான்கு-ஐந்து! தூங்கிக் கொண்டிருந்த உடலில் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்த என் மனம் எண்ணி முடித்திருந்தது. அறையில் நிறைந்திருந்த இருள், திறந்த என் கண்களைக் குருடாக்கியிருந்த போதிலும் சுவரில் இருந்த கடிகாரத்தில் இப்போது என்ன மணி என்று எனக்குத் தெரிந்து விட்டது. குருடனுக்குக் கண்கள் உண்டு-நம்பிக்கையும் காதும் தான் அவன் புதிய கண்கள்! ஒரு நாடகத்தில் கேட்ட இந்த மொழிகள் என் நினைவைத் தொட்டு மறைந்தன. காற்றிலிருந்த குளிர் அதன் ஊசிப் பற்களால் என் முகத்தைக் கவ்வியது. படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்து நின்று, நடந்து சென்று, ஜன்னல் கதவை மூடிவிட்டு, நடந்து வந்து உட்கார்ந்து படுப்பதை விட...சரிந்து கிடந்த போர்வையை எடுத்துச் சரியாகப் போர்த்திக் கொண்டேன்—தலைவரையில் இழுத்து மூடிப் போர்த்திக் கொண்டேன். 'தூங்கும் பொழுது முகத்தை மூடுதல் தீங்கைத் தரும்' என்ற விஞ்ஞான மொழி சிந்தையில் தோன்றிச் சிரித்து மறைந்தது. 'கொக்கரக்கோ' என்று விட்டு விட்டு அலறியது எங்கோ ஒரு கோழி! கதிரவன் வருகைக்குக் கட்டணம் வாங்காமலே கட்டியங்கூறும் இந்தமுட்டாள் கோழி...கடிகாரத்தின் 'டக்டிக்'—'பாய்லரில்' தண்ணீரை வெந்நீராக்கிக் கொண்டிருந்த எரி நெருப்பின் கூச்சல்—கூடைக்குள் எங்கோ தொலைவில் எவர் வீட்டிலோ அடைபட்டிருக்கும் கோழியின் அந்தக் கூக்குரல்—இன்னும் ஒரு மணி நேரத்தில் நிலையத்தில் வந்து நிற்க இருக்கும் புகை வண்டியைப் பற்றிய நினைவு... இவையெல்லாம் நான் இழுத்து அணைத்தத் தூக்கத்தின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளத் தொடங்கின. அதற்குள்...மின்சார விளக்கின் பொத்தான் கீழ் நோக்கித் தள்ளப் பெற்ற ஒலி...அறையில் நிறைந்திருந்த இருள் அப்படியே பறந்து விட்டது—என் உடலை மூடியிருந்த போர்வை முழுதும் பறிபோய் விட்டது—என் தோளைப் பிடித்து யாரோ உலுக்கினார்கள். எனக்குக் கோபம் கோபமாக வந்தது. வளையல்கள் கலகல வென ஒலித்தன. என் கோபம் சற்று அடங்கியது.

'யார் அது?'

'பேய்-பூதம்—பிசாசு!'—கலகலச் சிரிப்பொலியுடன் வந்தது இந்தப் பதில்.

'பெண்ணே அப்படிச் சொன்னது சரிதான். அதை இப்போதுதான் உணர்கிறேன்.'

'யார் அப்படிச் சொன்னது பெண்ணே?'

'முற்றும் துறந்தவர்!'

'அவருடைய தாயும் ஒரு பெண்தானே—அல்ல அல்ல; அவர் வாக்குப்படி ஒருபேய்! பேய்க்குப் பிள்ளையாகப் பிறந்த அவரும் ஒரு பேய்தானே? நான் ஒரு பேய் என்றால், என் வர்க்கத்தைச் சேர்ந்த என் மாமியின் பிள்ளையாகிய நீங்களும்...'

'நிறுத்து! சுலோ; நான் உன்னைச் சொல்லவில்லை!'-எழுந்து உட்காருவதற்குள் சுலோ என் அருகில் அமர்ந்தாள். சிரித்த வண்ணம் பேச்சைத் தொடர்ந்தாள்.

'பெண்ணைப் பேய் என்றது சரிதான் என்று நீங்கள்தானே சொன்னீர்கள். என்னைச் சொல்லவில்லை என்கிறீர்களே, நான் உங்கள் பார்வைக்குப் பெண்ணல்லவா?'

'இல்லை—ஒருக்காலும் இல்லை—'

'என்ன?!'

'நீ பெண் அல்ல—என்னுடைய கண்!'

புகை வண்டி நிலையத்தை அடைந்த பிறகுதான் உணர்ந்தேன். அந்த நேரத்தில் சுலோ என்னை எழுப்பிவிட்டால், எழுந்து குளித்து உடையணிந்து வந்து சேர்வதற்குள் வண்டி நிலையத்தை விட்டுக் கிளம்பியிருந்திருக்கும். நிலையத்தில் முன்பே வந்து நின்று கொண்டிருந்தது புகை வண்டி. டிக்கட் பெறுமிடத்திற்குப் பாய்ந்து சென்று, வளைந்து நின்று கட்டணத்தை நீட்டிய வண்ணம் 'தஞ்சாவூர்' என்று விரைவாகக் கத்தினேன். 'ஒரு தஞ்சாவூரா; இரண்டா?' என

நா. பாண்டுரங்கன் எம்.ஏ

டிக்கட் விற்பவர் கேட்டார். சிலையின் வாயிலிருந்து குரல் வெளிவந்தால் எப்படி இருக்குமோ அது போல அவ்வளவு அமைதியுடன் இருந்தது அவர் கேள்வி. இராஜராஜ சோழன் அங்கு வந்து நின்றிருந்தால், 'நம்மிடம் ஒரு தஞ்சைதான் இருந்தது; இவரிடம் பல தஞ்சைகள் இருக்கும் போலிருக்கிறதே—அதுவும் விற்பனைக்கு!' என்று நினைத்து வியப்பால் வாயடைத்துப் போயிருப்பான் என்றே எனக்குத் தோன்றியது. 'எல்லோரும் ஏறியாயிற்று? இதோ நான் கிளம்புகிறேன்!' என்று சொல்லுவது போல் புகை வண்டி அலறியது. 'சார், சீக்கிரம்!'—என் படபடப்பு இரக்கத்துடன் டிக்கட் கொடுப்பவரிடம் கூவியது. ஆமை வேகத்தில் டிக்கட்டை எடுத்துத் தேதியிட்டு, நத்தை வேகத்தில் கொடுத்தார். நான் அதை எடுத்துக் கொண்டு வண்டியிலேற மான் வேகத்தில் விரைந்தேன்—சிங்கார மான் என்று நினைக்க வேண்டாம், சீமான்! வண்டியில் ஜன்னலுக்கு அருகில் உள்ள இடத்தில் அமர்ந்தேன். என் படபடப்பு நடந்து, அமைதி நடமிடத் தொடங்கியது என் மனத்தில். 'அடடே! இதென்ன, கும்பகோணத்துக்கு யோகம் தான் போலிருக்கிறதே!'—ஜன்னல் வழியாகக் கழுத்தை நீட்டி வெளியே பார்த்து விட்டு உள்ளே வந்தவாறு ஒருவர் சொன்னார். 'மகாமகம் வருகிற தல்லவா, அதனால்தான் இந்த மாற்றம், ஏற்றம்! எல்லாம்—நிலையத்துக்குத்தான், மக்களின் மனநிலைக்கு அல்ல!'—ஆர்வத்துடன் கிளம்பி அலுப்புடன் முடிந்தது இந்தப் பதில். எனக்குப் பக்கத்திலிருந்து இந்தப் பதில் வந்தது. நீலச் சட்டை யணிந்திருந்த அந்த இளைஞரின் மீது என் பார்வை சென்றது. என் இமைகள் தாமாகவே ஒரு கணம் மூடிக் கொண்டன. நீலச் சட்டையணிந்த சிங்காரத்தின் பரிதாபமான முகம் என் மன அரங்கில் தோன்றியது. அவன் வாய் பேசிக் கொண்டிருந்தது. அவன் கடிதத்தில் எனக்கு எழுதியிருந்தவாக்கியங்களையே அவன் வாய் பேசிக் கொண்டிருந்தது. 'சூரியன் சுழலாமலே இருந்திருந்தால், இந்த உலகம் அதிலிருந்து சிதறித் தோன்றுமலே இருந்திருக்கும். இந்த உலகம் தோன்றுமலே இருந்திருந்தால், எந்த வகைத் தொல்லையும் மனிதர்களுக்கு இல்லாமலே போயிருக்கும். நண்பா, ஏன் இந்த உலகம்? ஏன் இந்தத் தொல்லை? ...உன் கடிதத்தைப் படித்து முடித்தபோது உண்மையில் எனக்கு ஆறுதல் ஏற்பட்டது. அந்த ஆறுதல் நிலவாக நிலைத்திருக்கவில்லை, மின்னலாக மறைந்து விட்டது. இருள் இன்னும் கடுமையாகி விட்டது.



இயற்கையை மனிதன் வென்று வருகிறான் என்று நீ குறிப்பிட்டிருந்தாய். எனக்குப் புலப்படுவது இதுதான். முடிவில் இயற்கையை மனிதன் வெல்ல இயலாது. ஏனெனில் மனிதனே இயற்கையில் ஒரு பகுதிதானே. ஒவ்வொரு கணம் கழிவதும் ஒவ்வொரு நூற்றாண்டு கழிவது போல் உணர்கிறேன். இதை நான் இனியும் தாங்கிக் கொள்ள இயலாது. புயலில்—வெள்ளத்தில் என் குழந்தை போன இடத்துக்கு, என் தாய் போன இடத்துக்கு, என் மனைவி போன இடத்துக்கு நானும் போக முடிவு செய்து விட்டேன். தற்கொலை, கோழையின் செயல் என்பாய். சாவைக் கண்டு அஞ்சி ஓடுபவன்தான் கோழை—நான் சாவை அணைத்துக் கொள்ளப் போகிறேன்!'... கட கடவென்று ஒலி கிளப்பிய வண்ணம் போர்ட்டர் சாமான்கள் ஏற்றிய வண்டியைத் தள்ளிக் கொண்டிருந்தான். நாளிதழ்களின் பெயர்களை வரிசையாகக் கத்திக் கொண்டே சிறுவன் ஒருவன் ஓடிக் கொண்டிருந்தான். நிலையத் தலைவர் பாதி விரித்த பச்சைக் கொடியை அசைத்த வண்ணம் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தார். வண்டி நகர்ந்தது. மக்களின் இரைச்சல் குறையத் தொடங்கிற்று. 'இட்லி-வடை-காபி!' என்று அப்பொழுதும் ஒருவர் கூவிக் கொண்டிருந்தார். உடல் முழுதும் துணியால் போர்த்திக் கொண்டிருந்த ஒரு கிழவர் நகரும் வண்டியின் அருகில் ஓடி வந்த வண்ணம் அடுத்த பக்கத்து ஜன்னலுக்கருகில் வெளியே தலையை நீட்டிக் கொண்டிருந்த வாலிபரிடம் சொல்லிய வண்ணமிருந்தார்.

'தம்பி, கடுதாசி போட மறந்துடாதே-அம்மாவை வருத்தப்பட வேண்டாம் என்று சொல். ஊறுகாய் கவனம்!...'—கிழவர் நின்று விட்டார். வண்டி விரைவாகச் செல்லத் தொடங்கியது. விளக்குக் கம்பம் பின்னே ஓடியது. கை காட்டி அதைத் தொடர்ந்தது. மாதளம் வீதி 'ரயில்வே கேட்' மறைந்தது. அரசன் ஆற்றுப் பாலம் பின்னே சென்றது. வண்டி ஓடிக் கொண்டிருந்தது. 'சாவைக் கண்டு அஞ்சி ஓடுபவன் கோழை; சாவைக் கண்டு அஞ்சி ஓடுபவன் கோழை!' சிங்காரத்தின் இந்த வாக்கியம் என் மனதில் சுழன்று கொண்டிருந்தது. உண்மை போலத் தோன்றும் இந்த வாக்கியத்தின் பொருள்! இதை எண்ணியதும் புன்னகை அரும்பியது. எதிரே புன்னகை முகத்தோடு இருந்தவர் என் புன்னகையைக் கண்டதும், திடுக்கிட்டுச் சிந்தனை முகம் கொண்டவரானார். காரணமில்லாமல் சிரிக்கிறானே எதிரே இருப்பவன் என்று எண்ணிக் கலக்கமடையத் தொடங்கிய அவரின் முகத்தில், மீண்டும்

புன்னகையை வரவழைப்பதற்காக 'அதோ பாருங்கள்!' என்று வானத்தை நோக்கிக் கையை நீட்டிக் கூறினேன். சற்றுத் தலையை முன்னே அசைத்து வெளியே நோக்கினார். நீலவானத்தில் வெள்ளைக் கொக்குகளின் வரிசை, ஆங்கில எழுத்து 'வி' உருவத்தில் பறந்து சென்று கொண்டிருந்தது. அந்தக் காட்சியில் தன்னையே இழந்தவராய் பல்லெல்லாம் தெரியக் காட்டிச் சிரித்தார் அவர்.

"அடடே, எவ்வளவு அழகு!...வெற்றி—யாருக்கு?" என்று கேட்கவில்லை; அவரே சொல்லிக் கொண்டார். 'முயற்சியுடையவர்க்கு!' என்று நான் சொல்லி விட்டுப் புன்னகை புரிந்தேன். இப்போது என் புன்னகை அவர் முகத்திலிருந்த புன்னகையைவிட மலரச் செய்தது!

"சாவைக் கண்டு அஞ்சி ஓடுபவன் கோழையா? இல்லை. சாவைக் கண்டு அஞ்சி ஓடுபவன் மனிதன். சாவைக் கண்டு அணைக்கச் செல்பவன் மனிதன் அல்லன. வாழ்வைக் கண்டு அஞ்சி ஓடுபவன் கோழை. வாழ்வுடன் போரிடுபவன் வீரன். சிங்காரத்துக்கு நான் இதைச் சொல்ல; அவன் இந்த உலகில் இன்னமும் இருப்பானே? அல்லது..."—வண்டி நின்றதால் என் சிந்தனை தடைப்பட்டது. "அதற்குள் தாராசுரம் வந்து விட்டதா, அடடே!" என்றார் எதிரே இருந்த ஒரு பெரியவர். வைரக் கடுக்கன அணிந்திருந்த அவரின் தலையில் பாதி நரை கலந்திருந்தது. 'அதற்குள் என்ன—வரவேண்டிய நேரத்தில்தான் வந்திருக்கிறது' என்று எனக்குப் பக்கத்தில் இருந்த நீலச் சட்டை இளைஞர் கூறினார். நான் நிலையத்தின் பக்கம் பார்வையைச் செலுத்தினேன். வண்டியிலிருந்து இரண்டு மூன்று பேரே இறங்கினர். ஏழெட்டுப் பேரே வண்டியில் ஏறினர். வண்டிக்கு வெளியே விரைவாக நொண்டிய வண்ணம் வந்து கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரன், திடீரென்று திரும்பி தண்டவாளத்தில் இறங்கி வண்டியின் இடை வெளியில் புகுந்து மறைந்தான். டிக்கட் ஆய்வாளர் வண்டியின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குப் போய்க் கொண்டிருந்தார். பார்வை வேறுபக்கம் சென்றது; நிலையத்துக்கு வெளியே சற்றே தொலைவில் மரங்களுக் கிடையில் சோழன் கட்டிய ஆலயத்தின் கோபுரமும் மதிற் சுவரும் தெரிந்தன. அந்த ஆலயத்திலுள்ள ஆண்டவனைப் பற்றி எண்ணினேன். பாழ்நிலை படரத் தொடங்கியிருக்கும் அந்த ஆலயம் அங்குள்ள ஆண்டவனுக்கு வாழ்வளிக்கா விட்டாலும் ஆண்ட சோழ மன்னனின் புகழைப் பற்றிய நினைவுக்காவது வாழ்வளிக்கிறதே என்று நினைக்கத் தொடங்கினேன். 'அந்த சிறந்த ஈட்சத்திரம் நடித்துள்ள படங்களே இரண்டும்! ஆனால், ஒரு படத்துக்கு நிறையக் கூட்டம் போகிறது; இன்னொரு படத்துக்குக் கூட்டமே சேர்வதில்லை. ஆண்டவன் ஒருவர்தான் என்றாலும் ஆலயங்களின் விஷயமும் அப்படித்தானே இருக்கிறது; ஓர் ஆலயத்தில் கூட்டத்தைச் சமாளிக்கப் போலீஸ் தேவைப் படுகிறது. இன்னொரு ஆலயத்தில் அடைந்துள்ள வெளவால்களை விரட்டுவதற்குக் கூட ஆள் வருவதில்லை!"—நீலச் சட்டை இளைஞர் அமைதியாகக் கூறிக் கொண்டிருந்தார். அவருடைய பார்வையும் அந்த ஆலயத்தின் பக்கமே நிலைத்திருந்தது. எதிரே இருந்த பெரியவர் பெருமூச்சு விட்டார். ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பாட்டி 'சிவ சிவ' என்று சொல்லி தன் கையால் கன்னத்திலடித்துக் கொண்டார்கள். வண்டி கிளம்பியது; குளிர்ந்த காற்று தன் வன்மையைக் காட்டக் குதித்தோடி வந்தது.



கிழக்கு வானம் இரத்தவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. இரவு மங்கையின் கழுத்தை அறுத்ததால் பெருகிப் பரவிய இரத்தமா; அல்லது கதிரவன் பிறந்ததால் வழிந்த இரத்தமா? ...சிங்காரம் இறந்திருந்தால் அவனை எழுப்ப இயலாது. அவன் உயிருடன் இருந்தால் மீண்டும் அவனைப் பிறக்க வைக்க இயலும். அந்த எண்ணத்துடன்தான் நான் சென்று கொண்டிருந்தேன். அவன் எனக்கு அனுப்பிய இறுதிக்கடிதத்தில், அனுப்பிய ஊரின் முத்திரையில் தஞ்சை என்றுதான் இருந்தது அவனுடைய ஒன்று விட்ட சிறிய தந்தையின் ஊரும் தஞ்சைதான். ஆனால் அவனுடைய சிறிய தந்தையால் அவனுக்கு எந்த வகை ஆறுதலும் உதவியும் கிடைக்காது. என்றாலும் அவன் வெள்ளத்துக்குப் பிறகு—தாய், மனைவி, குழந்தை இவர்களைப் பலி கொடுத்து அநாதையான பிறகு—தஞ்சை செல்வதாகத்தான் எனக்குக் கடிதம் எழுதினான். அவன் கொடுத்திருந்த முகவரிக்கு இருபது ரூபாய் சென்னையிலிருந்து மணியார்டர் செய்திருந்தேன். வெள்ளத்தின் தாக்குதலால் அவனுடைய நிலையை அவன் முதல் கடிதத்தின் வழியாக அறிந்ததும், சிங்காரத்தின் ஊரை நோக்கி ஓடி வந்தேன்.

அவனைச் சந்திக்கவே இயல வில்லை; மீண்டும் சென்னை திரும்பிய பிறகு அவனுடைய கடிதத்தைச் சந்தித்தேன். என்னுடன் வந்து ஒரு நிங்கள் இருந்தால் அவன் உள்ளத்தின் புண் சிறிதாவது ஆறும் என்று கருதிய அவனை உடனே புறப்பட்டுச் சென்னை வருமாறு பணித்துப் பணமனுப்பினேன். பணம் பெற்றுக் கொண்ட பதில் சீட்டும் வந்தது. அதற்குள் அவனுடைய இரண்டாவது கடிதமும் வந்தது. அவனுடைய வாழ்வின் இறுதியை முடிவு செய்திருந்த இறுதிக் கடிதமாக அது இருந்தது. விடுமுறையில் நான் குடந்தை வந்த பிறகுதான் அவன் கடிதம் சென்னை முகவரியிலிருந்து திரும்ப அனுப்பப் பெற்று எனக்குக் கிடைத்தது. என் கைக்கு அந்தக் கடிதம் கிடைத்தபோது இரவு. அந்தக் கடிதத்தைப் பிரித்து பார்த்தபோது சிங்காரத்தைச் சுற்றிலும் பயங்கர இரவு! கூட்டத்தில் சென்று கொண்டிருக்கும்போது, பையிலிருக்கும் நம் பணப்பையில் பாதுகாப்பு எண்ணம் சென்று கொண்டிருக்கும்போதே பணப்பை பறி கொடுக்கப் பெற்றால் எந்த மனநிலை எழுமோ அந்த நிலையில்தான் இருந்தேன். சிங்காரத்தின் இறுதிக் கடிதத்தைப் பார்த்தபோது! பணம் போனால் வேறு பெறலாம்; ஆனால் சிங்காரம் போனால்...''சாமிநாதா! நீதான் அப்பா துணை!''—குரல் கேட்டுத் திரும்பினேன். ஓரத்தில் இருந்த அந்தப் பாட்டி வெளியே பார்த்தவாறு கையெடுத்துக் கும்பிட்டு வேண்டிக் கொண்டார்கள், சுவாமிமலையில் வண்டி நிற்கிறது என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். ''தஞ்சை மாவட்டத்தில் மலையில்லாக் குறையைப் போக்குவதற்குத்தான் இந்தச் சுவாமிமலை!''—நீலச் சட்டை இளைஞர் சிரித்தவாறே சொன்னார். 'சுப்பன் ஊரல்லவா?' என்று சொல்லிவிட்டுப் பெரிய வரும் சிரித்த முகத்தினரானார். 'எந்தச் சுப்பன்—சமையற்காரசுப்பன்தானே?'—இளைஞர் கேட்டார். 'அப்பனுக்கே பிரணவப் பொருள் அருளிய சுப்பன் ஊர் இது.'—பெருமிதத்தோடு கூறினர் பெரியவர். இளைஞர் சிரித்தார். 'காலம் கெட்டு விட்டது—யாரை எண்ணி நொந்து என்ன பயன்? ம்ம்...'-சொல்லி விட்டுப் பெரியவர் பெருமூச்சு விட்டார். புதிதாக வந்து உட்கார்ந்த ஒருவர் கருத்தில் பெரியவரோடு சேர்ந்து கொண்டார். 'என்ன அப்படி மெதுவாகச் சொல்லுகிறீர்கள்? காலம் கெட்டு விட்டதய்யா, மிகவும் காலம் கெட்டு விட்டது!'-புதியவர் நாற்பது வயதானவராகக் காணப்பட்டார். அவருடைய



மேல்வரிசைப் பற்களில் ஒன்று கூட இல்லாமலிருந்தது அவர் பேசும்போது தெரிந்தது. வண்டி கிளம்பியது. நீலச் சட்டை இளைஞரும் பேச்சைக் கிளப்பினர். காலம் கெட்டு வருவது உண்மைதான். ஆனால் எந்தக் காலம்? கெட்டுப் போன காலம் கெட்டு வருவது உண்மைதான்!'—நீலச் சட்டை இளைஞரின் இந்தப் பேச்சு, புதியவரைத் தாக்கியதுபோல் இருந்தது. அவர் கோபத்தைக் கேலியாக மாற்றிய வண்ணம் 'ஆமாம், ஆமாம். இதோ பாருங்கள—இல்லாமலா மகாமகத்துக்கு இந்த ஆண்டு இருபது லட்சம்மக்களை எதிர்பார்க்கிறார்கள்?' என்று கூறிக்கொண்டே நாளிதழைப் பிரித்து ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டியவாறு, இளைஞரிடம் அதை நீட்டினார்-புதியவர். பெரியவர் மகிழ்ச்சியால் கனைத்தார்; கண் சிமிட்டினார்; களுக்கெனச் சிரித்தார். 'மகாமகத்தன்று மகாமகக் குளத்தில் நீராடினால் பாவம் நீங்கும் என்பது நம்பிக்கை அந்த நம்பிக்கை, இவ்வளவு பேர் அங்கு கூடுவதை எண்ணினால் இம்மியளவும் குறையவில்லை என்றுதானே பொருள்?' என்று புதியவர் கூறி முடிப்பதற்குள் இளைஞர் தொடங்கினர்; 'அந்த இருபது லட்சம் பேரும் உண்மையில் அஞ்சா நெஞ்சினர் தாம்-அவர்கள் நம் எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவர்களே' என்றார் இளைஞர். பெரியவரும் புதியவரும் இளைஞரின் பேச்சு புகழ்ச்சியா, இகழ்ச்சியா என்று எதுவும் தெரிந்து கொள்ளாததால்குழம்பிய முகம் கொண்டனர். இளைஞர் மேலே என்ன சொல்லுகிறார் என்று ஆவலுடன் நோக்கினர். 'எத்தனையோ கோடி மக்களில், குளத்தில் நீராட வரும் இந்த இருபது லட்சம் பேராவது தாங்கள் பாவம் செய்தோம் என்று ஒப்புக் கொண்டு வருகிறார்களே; அவர்கள் உண்மையிலேயே பாராட்டுக் குரியவர்களே!'—இளைஞர் புன்னகை புரிந்தார்! இளைஞரின் கரத்திலிருந்த நாளிதழை நான் பெற்று அதில் என் பார்வையைச் செலுத்தினேன். புழுக்கத்தைப் போக்குவதற்காக விசிறியை எடுக்க, அதிலிருந்து தேள் கொட்டினால் உடல் எப்படித் துடிக்குமோ அதுபோல் என் உள்ளம் துடித்தது 'வெள்ளத்தால் அநாதையான வாலிபர் உள்ளம் உடைந்ததால் தற்கொலை...கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு தொங்கினர். அவர் பையிலிருந்த கடிதத்தில் காணப்பெற்ற வாக்கியங்கள் இவை! 'நிலங்காக இருந்தால் இந்த அதிர்ச்சியால் கலங்காது இருந்திருக்கலாம். ஆனால் மனிதனாக இருந்ததற்காக நான் மகிழ்ச்சியே அடைந்

தேன். தற்கொலை மனிதன் கையில் இருக்கிறது-விலங்கின் கையில் அது இல்லையல்லவா? என் பிறப்புக்கு நான் காரண மல்ல; அதுபோல் அமைவாது, என் இறப்புக்கு நானே காரண மாக இருக்க முடிந்ததே!'- செய்தியை மீண்டும் மீண்டும் படித்தேன். தூக்கிட்டுக் கொண்ட அந்த ஆளின் பெயர், மற்ற விவரங்கள் தெரிய வில்லை என்று செய்தி கூறியது.

சிங்காரத்தைத் தவிர வேறு யார்? மூக்கு, வாய் இவற்றின் வழியே இரத்தம் வழிந்த நிலை யில் கயிற்றில் தொங்கும் சிங் காரத்தின் உருவம் மூடிய என் கண் முன்னே நின்றது புகை வண்டி ஒவென்று இரக்கத் துடன் அழுகுரலைக் கிளப் பியது; ஓடிக் கொண்டிருந்த வண்டியின் சக்கரங்கள் பிணப் பறை கொட்டின. வயிற்று வலியால் அடிக்கடி துடிப்பவர் கள் சில வேளைகளில் தற் கொலை செய்து கொள்ள முயல் வதையும் தற்கொலையே செய்து கொள்வதையும் பற்றிக் கேள் விப் பட்டிருக்கிறேன். வயிற்று வலி அடங்கிய பிறகு, தற் கொலை செய்து கொள்ள முயன்றவர் தம் செய்கைக்கு வருந்தி வெட்கப் படுவதை அறிந்திருக்கிறேன். உடலில் ஏற்படும் பொறுக்க இயலாத வலியால் இது நிகழ்வது போலவே, உள்ளத்தில் ஏற் படும் பொறுக்க இயலாத வலி யாலும் இது நிகழ்கிறது. உடற் துன்பத்தை மருந்து ஆற்ற முடியாமற் போலலும் போக லாம்; ஆனால் உள்ளத்தின் துன் பத்தைக்காலம் நிச்சயம் ஆற்றி விடும். அதை எண்ணியே சிங்காரத்தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை என் பார்வையில் வைத்திருக்க முயன்றேன். ஆனால் அஞ்சியது நிகழ்ந்துவிட் டது!...வண்டி வேறு தண்ட வாளத்துக்கு மாறிக் கொண் டிருந்தது. கண்ணுக்கு முன்னே விரிந்து எண்ணத் துக்கு மலர்ச்சியையும் மகிழ்ச் சியையும் உண்டாக்கிக்கொண் டிருந்த பச்சை வயல்கள் என் பார்வையை விட்டு மறைந்து போய் விட்டன; என் உள்ளத்தில் துன்ப உணர்வு நிறையத் தொடங் கியது. பயணம் செய்பவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருந் தனர். ரஷ்யத் தலைவர்களின் வருகை—அமெரிக்காவின் அடி வயிற்றுக் கலக்கம்—குன்றக் குடி அடிகளின் ஒழுக்கம்— தேவிகுளம் பீர் மேடு—புயல் கொடுமை—ரஷ்ய மொழிக்கும் சமஸ்கிருதத்திற்கும் உள்ள ஒற் றுமை—சம்பா விளைச்சல்— ராஜமால்ட் ஓவல்டின் போட்டி ...எங்கெங்கோ போக வேண் டியவர்கள்—என்னென்னவோ குறிக்கோள் கொண்டவர்கள்— ஏதேதோ பேசிக் கொண்டிருந் தனர்.

வண்டி நின்றது—சுந்தர பெருமாள் கோவில்! வண்டி யில் ஏறினர் சிலர். இறங்கினர் சிலர் வண்டியில் ஏறி இறங் கினர் சிலர். வண்டியிலிருந்து இறங்கி ஏறினர் சிலர். பச் சைக் கொடி அசைந்ததைக் கண்டு பயந்து கூக்குரலிட்டு இழுத்து நகர்ந்து ஓடத் தொடங்கியது வண்டி. சிங் காரத்தின் செயலை நினைத்ததும் அவன் மீது கோபம் கோப மாகப் பொங்கி எழுந்தது என்



மனம். அவனுடைய பிறப்புக்கு அவன் காரணமாக அமையவில்லை என்பது அவனுக்குத் தெரிந்திருக்கிறது. அவன் இறப்புக்கு மட்டும் அவன் எப்படிக் காரணமாக அமையலாம்? தற்கொலை செய்து கொள்ளுபவனின் தவறு இதை எண்ணுவதால் விளைகிறது. பிறப்பு, தானே வருவது. இறப்பும் அவ்வாறே அமைதல் வேண்டும். இது இயற்கையின் வழி. இந்த வழியின் குறுக்கே நிற்பது அறமாகாது. அவன் உண்டாக்காத உயிரை அவன் அழிப்பதற்கு அவனுக்கு உரிமை ஏது? அப்படியானால் பெற்றெடுக்கும் பிள்ளையின் உயிர் மீது பெற்றோருக்கு உரிமை உண்டா? அதுவும் இல்லை. கன்று பசுவினுடையதுதான் என்றாலும் கன்றின் உரிமை பசுவுக்கல்ல. பசுவின் சொந்தக் காரனுக்கே அல்லவா? உயிரின் சொந்தக் காரன் யார்? இயற்கையே உயிரின் சொந்தக்காரன். மனிதன் இயற்கையின் உடைமை! தந்திக் கம்பங்கள் ஓடிக் கொண்டிருந்தன. பச்சை வயல்கள் பின்னே நடந்து கொண்டிருந்தன. வண்டியிலிருந்து வெளி வந்த புகை மேகங்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவை விரிந்து கரைந்து மறைந்து கொண்டிருந்தன. அடுத்து நான் செய்ய வேண்டியது என்ன? என் மனம் கேட்டுக் கொண்டிருந்தது. 'வருவது என்ன ஊர்?' பெரியவர் கேட்டார் "ஊர் எப்போதும் வராது. ஊருக்குத்தான் நாம் வருகிறோம்." நீலச் சட்டை இளைஞர் சொல்லிவிட்டுச் சிரித்தார். மேல் வரிசைப் பல் இல்லாதவர் சிரித்துவிட்டுச் சொன்னார் "ஊருக்குக்கூட நாம் வரவில்லை. நாம் உட்கார்ந்திருக்கும் வண்டி வருகிறது!" பெரியவர் இந்தப் பதிலால் வெற்றிப் புன்னகை புரிந்துவிட்டு, நீலச் சட்டை இளைஞர் மீது ஏளனப் பார்வையை வீசினார். "சுவாமி மலைக்கு வந்துவிட்டு, சுந்தர பெருமாள் கோவிலிலும் நின்று விட்டு வந்தால் மனிதன் அடுத்து அடைவது என்ன? அவன் பாபம் அடியோடு நாசம் தான்!....."—சொல்லிவிட்டுப் பொக்கைவாயர் சிரித்தார். புரியாததால் பெரியவர் விழித்தார். 'அடுத்தது பாபநாசம்' என்றூர் பொக்கையர். வண்டி நின்றது. பெரியவர் வெளியே பார்த்துக் கொண்டே "இந்த ஊர் பாபநாசமா?" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டார்; "பெரியவர்களின் அறிவே அறிவு" என்று வியந்தார். "எந்தப் பெரியவர்கள்?"—நீலச் சட்டை இளைஞர் தொடங்கினர். "ஊருக்குப் பெயர் வைத்தப் பெரியவர்கள்"—பொக்கை வாயர் முடித்தார்; நீலச் சட்டை இளைஞர் தொடர்ந்தார். "சுவாமி மலைக்கு வந்துவிட்டு, சுந்தர பெருமாள் கோவிலிலும் நின்று விட்டு வந்தால் மனிதன் அடைவது 'பாபநாசம்' தான். அதற்குப் பிறகு?.....பண்டாரவாடையில் அவன் நிற்க வேண்டி இருக்கிறது. அதனால் அடுத்து ஐயம் பேட்டைக்கு அல்லவா வர வேண்டும் அவன்! ஐயம் என்றால் பிச்சை—பிச்சை பெறக் கூடிய இடம் ஐயம்பேட்டை! பெயரை கொண்டு பார்த்தால் 'பாபநாசம்' பெறுபவன்



பிச்சை பெறும் பேட்டைக்கும் வர வேண்டியிருக்கிறதே--பெரியவர்களின் அறிவே அறிவு!" நீலச் சட்டை இளைஞர் முடித்தார். பொக்கைவாயர் தான் கொண்டு வந்திருந்த பொருள்களில் எதையோ தேடத் தொடங்கினர். பெரியவர் முகத்தைச் சுளித்து விட்டுப் பிறகு மலர்ச்சியை வர வழைத்துக்கொண்டு கேட்டார்; "இதுதான் பாபநாசம்... குற்றலமும் இங்கேதானே?" நீலச் சட்டை இளைஞர் தலையை அசைத்த வண்ணம் "ஆமாம், இதுதான் பாபநாசம்.....மாய வரத்துக்கு அருகில் குற்றாலம் இருக்கிறது." என்று சொல்லி விட்டுச் சிரித்தார். "ஒரு முறை இங்கே இறங்கி நீர் வீழ்ச்சியில் குளிக்க வேண்டும்..."—பெரியவர் தொடர்ந்தார். என் உள்ளத்திலிருந்து கிளம்பிய சிரிப்பு உதடுகளை விலக்கி விட்டு வெளியே தலை நீட்டியது. பொக்கைவாயர் உட்பட சிலர் கடகடவென்று சிரித்தனர். "நீர் வீழ்ச்சி உள்ள பாபநாசம் நெல்லை மாவட்டத்தில் இருக்கிறது. அது திருக்குற்றாலம் பாபநாசம். இது நெல் மாவட்டத்தில் இருக்கும் பாபநாசம்" -நீலச் சட்டை இளைஞர் கூறினார். அதைத் தொடர்ந்து பேச்சு வளர்ந்தது. நெல் வளர்ச்சியுள்ள பாபநாசத்தை எண்ணியபோது திடீரென்று ஓர் ஐயம் எழுந்தது. நாளிதழில் நான் கண்ட செய்தி சிங்காரத்தைக் குறிப்பிடுவது என்று நான் ஏன் முடிவுகட்ட வேண்டும்? தூக்கிட்டுக் கொண்டவன் கடிதத்தில் காணப்பெற்ற வாக்கியக் கருத்தை அதே அமைப்பில் சிங்காரத்தைத்தவிர வேறு யாரும் எழுத இயலாதா? வள்ளுவர் நிலவைப் பற்றி எண்ணும் கருத்தையே ஷேக்ஸ்பியரும் எண்ணுவதில்லையா? போலீசாரிடம் சென்று தூக்கிட்டுக் கொண்டவன் எழுதி வைத்திருந்த அந்தக் கடிதத்தைப் பெற்றுப் பார்த்தால் உண்மை புரிந்துவிடும். பண்டார வாடையைக் கடந்து ஐயம் பேட்டையை விட்டு கடந்து வண்டி ஓடிக்கொண்டிருந்தது. ஒரு தாமரைக் குளத்தில் படர்ந்து அடர்ந்து கிடந்தத் தாமரை இலைகள் அவ்வளவும் காற்றில் அசைந்தன. நகரும் வாத்துப் பண்ணை நினைவுக்கு வந்தது. பச்சை வயலுக்கு நடுவே திட்டில் வளர்ந்திருந்தத் தென்னை மரங்கள்—தீவையும் தீவைச் சுற்றியுள்ள நீலக்கடலையும் நினைவுபடுத்தின. நாலு பக்கமும் தண்ணீரே தென்படும் நடுக்கடலில் கரையை எண்ணிச் சிறகடிக்கும் தனியான பறவையைப்போல என் மனம் தவித்தது. ஒரு பகுதியிலிருந்து வண்டியின் மறு பகுதிக்கு வந்து கொண்டிருந்த ஒருவர் பையை ஒரு கையிலிருந்து மறு கைக்கு மாற்றிக் கொண்டே குழந்தைகள் இருந்ததைக் கண்டு "பிஸ்கட்— முந்திரிப் பருப்பு—சாக்லட்" என்று கூவினர். ஓடிக்கொண்டிருந்தத் தந்திக் கம்பங்களிலேயே குழந்தைகள் கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்தன. ஒரு வாலிபர் பிஸ்கட் வாங்கினர். ஒரு வயோதிகர் சாக்லட் விலையை விசாரித்தார். நடுத்தர வயதுள்ள இருவர் முந்திரிப் பருப்பு வாங்கி சுவைக்கத் தொடங்கினர். காந்தி லண்டன்—சேர்ந்தார்—கை கூப்பித் தொழுவீர்! காந்தி லண்டன் சேர்ந்தார் கை கூப்பித் தொழுவீர்—தொழுவீர்—தொழுவீர்....." பாடிப்பாடி கம்மிப்போன, ஆனால் கவர்ச்சியான குரலில் பிச்சைக்காரன் பாடினான். அவன் பாட்டு வண்டியிலிருந்தவர்களின் பேச்சை அவன் பக்கமே திருப்பிவிட்டது. பொக்கைவாயர் கடகட வென்று உடல் குலுங்கச் சிரித்தார். பெரியவர் பல்லெல்லாம் வெளியில் தெரியச் சிரித்தார். நீலச் சட்டை இளைஞர் புன்னகை புரிந்தார். நான் அந்தப் பிச்சைக்காரனின் முகத்தைப் பார்த்துவிட்டு வெளியே நோக்கினேன். தாராபுரத்தில் வண்டியில் நுழைந்த அதே பிச்சைக்காரன்தான். ஆனால் அவனுடைய இமைகள் இப்போது மூடிய நிலையிலிருந்தன. "சினிமா வந்து சீரழியும் இந்தக் காலத்தில் இவன் எந்தக் காலத்துப் பாட்டுப் பாடுகிறான் பார்த்தீர்களா?"-பொக்கைவாயர் தொடங்கினர். "காலம் புரியவில்லை. கண் தெரியவில்லை—குருடன்!" என்றார் பெரியவர். "குருடனா? நல்ல கதை போங்கள்!...கேட்கும் வரையில் அவன் குருடன். நீட்டிக் கொடுத்த பிறகு கொடுத்தவன் குருடன்!" என்றார் பொக்கைவாயர். அவர் சொல்லி முடித்ததும் நீலச் சட்டை இளைஞர் விரைவாகப் பையில் கையைவிட்டு ஓரணா எடுத்துப் பிச்சைக்காரனின் கையில் வைத்துவிட்டுப் பொக்கைவாயரைப் பார்த்தார். "அடே, என்னய்யா இது—அவன் குருடனல்ல ஐயா—வேஷம் போடுகிறான். இவன் இந்த வண்டியில் ஏறி இந்த இடத்துக்கு வந்து இப்படி நம்மிடம் கை நீட்டுகிறானே இதிலிருந்தே தெரியவில்லையா—அதனால்தான் சொன்னேன்!" என்று பரிவோடு கூறினர் பொக்கைவாயர். "தெரிகிறது. பிச்சை எடுப்பது மானக் குறைவான செயல். இந்தப் பிச்சைக்காரனுக்கும் அது தெரிகிறது. அந்த இழிதொழிலைச் செய்யும் போது அவனுக்கே பொறுக்கவில்லை—கண்ணை மூடிக்கொள்கிறான்! காசு கிடைத்ததும் அந்தக் காசு செலவாகும் வரையில் பிச்சை எடுக்கும் இழிதொழில் செய்ய வேண்டாம் என்று மகிழ்ச்சி பிறக்கிறது. கண்ணைத் திறந்து கொள்ளுகிறான்!"—நீலச்சட்டை இளைஞர் சொல்லி முடித்தார். என் புன்னகையை அவருக்குப் பரிசாக வழங்கினேன்.

பசுபதி கோவிலில் வண்டி நின்றது. நிலையம் எனக்கு வலது புறத்தில் இருந்தது. நிலையத்துக்கு அருகே நிலையத்தைவிட உயர்ந்த பரந்த மணல் மேடு தெரிந்தது. அதில் யாரோ ஒருவர் துணியை விரித்து அதில் உறங்கிய நிலையிலிருந்தார். அந்த மணல் குன்று!...வண்டியிலிருந்தவர்களின் பேச்சு அந்த மணல் குன்றின்மீதே சென்றது. "காள

மேகம்—கவிகாளமேகம் இருந்தாரே, அவர் ஒரு முறை இந்த ஊர் மக்கள்மீது கடுஞ்சினம் கொண்டார். வசை பாடினார். மண் மாரி பொழிந்தது. ஊரே மண்ணில் மூழ்கிப் புதைந்து அழிந்தது. அந்த மண் மேட்டில் எஞ்சிய பகுதிதான் இதோ கண் முன்னே தெரிவது!" என்று சொல்லிச் சுட்டிக் காட்டினார். நீலச் சட்டை இளைஞரைப் பார்த்தேன். அவர் சிந்தனை செய்வதுபோல் தெரிந்தது. பேச்சைத் தொடர்ந்தார்.

"காளமேகம் எங்கே கடுஞ்சினம் கொண்டார் என்று சொன்னீர்கள்?" — நீலச் சட்டை இளைஞர் கேட்டார்.

"இந்த ஊரில்தான் ஐயா!"

"குதூகலம் வந்தால் வாழ்த்துவது — கோபம் வந்தால் வசை பாடுவது..."

"அவர் தொழில் ஐயா! அவர் தொழில் அது. அந்த அந்த இடத்தில் அப்படி அப்படியே பாடுவதுதானே கவியின் வழக்கம்!"

"இந்த ஊரைப் பற்றித் தானே பாடினார்?"

"ஆமாம்!"

"இந்த ஊரில் தானே பாடினார்?"

"ஆமாம் ஐயா, ஆமாம்! உங்களுக்கெல்லாம் அதில் நம்பிக்கையில்லாமல் இருக்கலாம்."

"பாவம் காளமேகத்தை எண்ணினால் வருத்தமாக இருக்கிறது."

"ஏன் அப்படி?"

"கடுஞ்சினம் கொண்டார். வசை பாடினார். ஊரையே மண் மூடியது உடனே!"

"தவறு செய்தால் தண்டனை பெற வேண்டியதுதானே?"

"யார் தவறு செய்தவர் என்கிறீர்கள்?"


"ஊர் மக்கள்!"

"இல்லை ஐயா! இல்லை...காள மேகம்தான் தவறு செய்துவிட்டார். பாவம்!"

"என்ன? காளமேகமா? தவறு செய்தாரா?..."

"வசை பாடியதும் உடனே ஊர் மண்ணில் மூடியதே. காள மேகமும் இங்கேதானே புதையுண்டு போயிருப்பார்? அதை எண்ணித்தான் வருந்துகிறேன்!"

காலம் ஓடிக் கொண்டிருந்தது. வண்டி நின்று கொண்டே இருந்தது. என் மனம் துடித்த வண்ணம் இருந்தது; சிங்காரம் இந்த உலகில் இருக்கிறானா அல்லது...வண்டி, பின் பக்கம் சென்று வேறு தண்டவாளத்தில் வந்து நின்றது. சிறிது நேரத்தில் இன்னொரு வண்டி வந்து நின்றது. எங்கள் வண்டி புறப்படும் என்று எண்ணினேன். ஆனால் வந்த வண்டியே புறப்படத் தொடங்கியது.



வண்டி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடந்தது. நகரும் வண்டியிலிருந்து மேலே ஒருவர் விரைவாக இறங்கி என்னிடம் ஓடிவந்தார். அந்த விரைவிலும் அவர் சிரித்த முகத்துடனேயே வழக்கம்போல் இருந்தார். "பெருமாள்!" என்று வியப்புடன் நான் கூறினேன்! "உங்களுக்குத்தான் இது. விளக்கம் பிறகு". என்று கூறி என்னிடம் ஒரு கடிதத்தை வீசிவிட்டு, ஓட்ட ஓட்டமாகத் திரும்பிச் சென்று, போய்க்கொண்டிருந்த வண்டியில் நண்பர் பெருமாள் ஏறிக்கொண்டார். நான் எதிர் பாராத நிகழ்ச்சி இது. கடிதம் உறையாக இருந்தது. பிரித்துக் கடிதத்தை எடுத்தேன். கீழே இறங்கிப்போயிருந்த பொக்கை வாயார் குழாயடியிலிருந்து அப்பொழுதுதான் திரும்பி ஏறினார் வண்டியில். "ஏமாற்றம் இல்லை. தண்ணீர் கிடைத்தது" என்றார். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. பொக்கைவாயரின் வாயில் மேல் வரிசைப் பற்கள் வரிசையாக அழகுடன் நிறைந்து இருந்தன. அவர் முகம்கூடச் சிறிது அழகாக மாறியிருந்தது. "பல்லைப் பையிலேயே வைத்திருந்தேன். இப்பொழுதுதான் தண்ணீர் கிடைத்தது, கழுவிப் பொருத்திக் கொண்டேன்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். கடிதத்தைப் பார்த்தேன். ரோஜா நிறத் தாளில் பச்சை மையினால் பெரிது பெரிதாக எழுதியிருந்தான். சிங்காரம் என்று இருந்தது. "சிங்காரம்! நீ இன்னும் இருக்கிறாயா..." என் உள்ளம் துடித்தது. கடிதத்தின் முதல் வரியை நோக்கினேன்.

"சிங்காரம் இறந்து விட்டான். வாழ்க புதிய சிங்காரம்!..."

கடிதத்தின் நடுப் பகுதியைப் பார்த்தேன்.

"காரிருள் பரவிக் கிடந்தது என்னைச் சுற்றி. என் வாழ்வின் இருளாலல்ல, உலகின் இருளைத்தான் சொல்லுகிறேன். என் இதயம் நடுங்கவில்லை. ஆனால் எதிரே வானத்தில் இருந்த விண்மீன்கள் நடுங்கிக் கொண்டிருந்தன! தண்டவாளத்தின் அருகிலேயே நடந்து சென்றேன். வண்டி வருவது தொலைவில் தெரிந்தது அதன் விளக்கொளியால்! இருளைக் கிழித்துக் கொண்டு ஒளி வந்து கொண்டிருந்தது. நான் வாழ்வைக் கிழித்துக் கொண்டு சாவின் பாதையில் நடந்து கொண்டிருந்தேன். ஆள் உயரத்தில் கற்றுழைச் செடிகள் வளர்ந்திருந்தன. அவைகளுக்கு இடையில் மறைந்திருந்து,

இதுதான்


நாயோடும் காக்கை
யோடும் உணவைப்
பங்கிட்டுக்கொண்டு..
நாளெல்லாம் மாட்டைப்போல்
பொதி சுமந்து...
வயிற்றுப் பிழைப்புக்
காகக் கடலையோடு
கள்ளச் சாராயம் விற்று..
ஒரு சொட்டுத்
தண்ணீருக்காக
ஒரு மணிநேரம்
காத்து நின்று..
நடைபாதையிலே
குடும்பம் நடத்திக்
கொண்டு....

சென்னை!


தேகாரோக்யமற்ற இடத்தில்
தேநீர் விருந்து நடத்தி...
காசுக்கு வழியின்றி
'காட்டன்' விளையாடி...
அயர்வு போக்க கிடைத்த
இடங்களிலெல்லாம்
'கட்டை'யைச் சாய்த்து...
கினடி ராஜ பவனம்
ஆதரவற்ற நிலையில் ஆயிர
மாயிரவர் வாழும் சென்னை
யில் தான்.....
ஆண்டொன்றுக்கு
பத்துலட்சம் வாங்கும்
"ஏழை" கவர்னர் துரையும்
வாழ்கிறார்!
செல்லப்பன்

வண்டி ஓடும்போது எஞ்சினுக்கு முன்னே தண்டவாளத்தில் பாய்ந்து விடுவது என்று முடிவு கட்டினேன். கற்றுழைச் செடிகளுக்கிடையில் மறைந்து கொண்டேன். சர சரவென்று ஏதோ ஓடியது. சிறிது பயந்து வெளியே வர அடியெடுத்துவைத்தேன். கால்கனின் செயலைக் கண்டு என் கருத்து சிரித்தது. வண்டியின் ஓசை கேட்கத் தொடங்கியது. சக்கரங்களின் இரைச்சல் பெரிதாகிக் கொண்டே இருந்தது. உலர்ந்துபோன என் உதடுகளை நாக்கால் தடவி ஈரமாக்க முயன்றேன். நாக்கில் ஈரமில்லை. இன்னும் சிறிது நேரத்தில் நான் இருக்கப் போவதில்லை. எண்ணினேன். என் குழந்தை—என் தாய்...என் மனைவி...மூடிய என் விழிகளுக்கு முன்னே அவர்களின் முகங்கள் ஓடி மறைந்தன. வண்டி மிக அருகில் வந்து கொண்டிருந்தது. கண்களை மூடிக்கொண்டேன். கருத்துக்கு வலிவூட்டினேன். திடீரென்று ஓர் அழு குரல்—பெண்ணின் அழு குரல்-தாயின் அழுகுரல்...ஓடினேன், தண்டவாளத்திலே பாய்ந்த இளைஞனை ஒரு தாய் பிடித்து இழுத்து அலறினாள்...நான் ஓடி நின்றேன். தற்கொலை செய்து கொள்ள முயன்ற இளைஞனைப் பிடித்து வன்மையுடன் இழுத்தேன். என் தாய்போல் தோற்றத்தில் இருந்த அந்த மூதாட்டியும் அந்த இளைஞனைப் பிடித்து இழுத்தாள். நாங்கள் இருவரும் கற்றுழைச் செடிகளுக்கு மறுபக்கத்தில் அவனை அழைத்து வந்தோம். 'கடகட தட தட' வென்ற பேரிரைச்சலுடன் வண்டி எங்களுக்கு அருகில் ஓடியது. அதையே பார்த்துக் கொண்டு நின்றோம். வண்டி வெகு தொலைவில் சென்று விட்டது. சாவும் தான்!.....அந்த மூதாட்டி முன்னே, அவளுக்குப்பின் அந்த இளைஞன், அவனுக்கும் பின்னே நான்—அந்த மூதாட்டி நடந்த வழியில் நடக்கத் தொடங்கினோம். உள்ளம் உடைந்த தால் உயிரைப் போக்கிக் கொள்ளக் கிளம்பிய அந்த இளைஞனின் வரலாறு...அது ஒரு கதை; அதை நான் பிறகு சொல்லுகிறேன். ஆனால் அந்த மூதாட்டி சொன்ன அவள் வரலாறு...தன்னுடைய மூன்று குழந்தைகளையும் ஒரே நாளில் ஒரே இடத்தில் தன்னுடைய குடிசை பற்றி எரிந்தபோது இழந்தாள். சில நாட்களில் அவளுடைய கணவன் கூலிக்காகத் தென்னைமரம் ஏறித் தேங்காய் பறிக்கையில் உச்சி மரத்திலிருந்து கால் தவறிக் கீழே விழுந்து மாண்டான். அநாதையானாள். ஆனாலும் அவள் இறக்கவில்லை. எவரோ பெற்ற பிள்ளைக்கு அவள் தாயானாள். அந்தப் பிள்ளை தான், இப்போது தண்டவாளத்தில் படுத்து உயிர்விட வந்த அந்த இளைஞன்—அவளுடைய குடிசைக்கு அருகே வந்து கொண்டிருந்தோம். வானத்தில் ஒரு நட்சத்திரம் பேரொளியுடன் விளங்கி அறுந்து வீழும் தோற்றத்தில் நடுங்கிக் கொண்டிருந்தது. 'அது என்ன நட்சத்திரம்?' கேட்டேன். 'விடி வெள்ளி முளைத்து விட்டதே 'அதுதான் விடி வெள்ளி' என்றாள் கிழவி. 'ஆமாம்' என்றான் இளைஞன். ஆம் என்றது என் உள்ளம்—அக மகிழ்ந்தேன்!..."தலையைத் தூக்கிப் பார்த்தேன். வண்டி நாட்டிய மங்கையைப் போல் வளைந்தது. திட்டை, வடவார் இரண்டு நிலையங்களையும் கடந்து வண்டி ஓடிக் கொண்டிருந்தது. கடிதத்தின் கடைசிப் பக்கத்தின் கடைசிப் பகுதியை நோக்கினேன். "நண்பா! என் வாழ்வில் இருந்தது இரவு. அந்த மூதாட்டியின் கதையைக்கேட்டதும் நிலவு கிளம்பியது என் பாய் நீ! அல்ல அல்ல, நிலவு இருளைத்தான் போக்கும்—இரவைப் போக்காது. தற்கொலை செய்து கொள்ளச் சென்ற நான் தற்கொலையைத் தடுத்தேன். நிலவு இரவில் தோன்றும்போது வரவேற்கிறது இரவு. கதிரவன் தோன்றும் போது, இருள் அல்ல, இரவே ஓடி விடுகிறது. என் இரவில் கதிரவனே தோன்றினான். பகலில் என்னைப் பார்த்த போது நான் புதியவனாக இருந்தேன்!" வண்டி மகிழ்ச்சியினால் கூச்சலிட்டுக் கூவியது. அதன் மகிழ்ச்சிக்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரிந்து விட்டது. தஞ்சைச் சந்திப்பு வந்து விட்டது!

★

இசை: இன்பமானது—உணர்ச்சியூட்டுவது, இவ் விரண்டும் இசை பற்றி எல் லோராலும் சொல்லப்படும் இருவகைப் பிரிவுகள். எனி னும் இசை என்பது என்ன? எப்படியுடையது என்பதை நினைவிற்குக் கொண்டு வர வேண்டும். இசை என்ற சொல்லின் பொருள் அசைந் தாடுகையில், சுரம் என்பது குரல், (ச) துத்தம் (ரி) கைக் கிளை (க) உழை (ம) இளி (ப) விளரி (த) தாரம் (நி) எனப் படுவது. இதுபலரால் மலைப் பாகக் கருதப்பட்டுவருவது. மேலே குறிப்பிட்ட ஏழு வகையான துத்தம்—கைக் கிளை என்று சொல்லப்பட்ட ஒரு சொற்கூளையுமே சுரங்க ளாகப் பாடலாம். ஆனால் அதில் ஓசை நயம் இராது. ஏழுவகைப் பொருள்களைக் கொண்டு ஒரு உருவமாக்கி னால் அது இராகம் என்று வழங்கிவருவது. இராகம் என் பதற் குச் சரியான பொருள் ஆசை. எனவே தான் 'ஆசைக்கோர் அள வில்லை' என்ற பழமொழி யினைப்போல் இராகம் பாடு வதற்கும் எல்லை இல்லாத தன்மை இருந்து வருகிறது. இராகம் பாடுகையில் ஒலிக் கும் உட்பொருள் ஆனந்தம் என்பது. எத்தன்மையில் பாடினாலும் ஆனந்தம் என்று எவ்வகையிலும் ஒலிக்கும். காரணம் ஆசை இருக்குமிடத்தில் ஆனந்தம் இருந்தே தீரும். ஆசைக்குத் தக்கப்படி யூகித்துப் பார்க்க வேண்டும்.

ஒலியும், ஓசையும் உறவாடு வகையில் பல பேதங்களை உணர்கிறோம். இவ்விரண் டும் 'பிரதனு முப்பத்தைந்து' (3)என்ற தகப்பனுட் பிறந்த குழந்தைகள். தாய் ஒலிவடி வும், தந்தை ஓசை வடிவும் பெற்றனர். எனவே சிறு தகப்பகினுகிய வழக்கத்தி லுள்ள (3:) மூப்பத்தைந் தைச் சிந்திக்கவும் முன்னைய தைச் சிந்திக்கவும் உரியதைப் பின்பற்றவும் செய்வதே இசை வெள்ளத்தின் பயன்.

சுரக்கூடும், சண்டைக் கூடும், அலங்காரக்கூடும், கீதக்கூடும், சிறு வர்ணக் கூடும், பெருவர்ணக்கூடும், கீர்த்தனைக்கூடும், தேவாரக் கூடும், திருவாசகக்கூடும், திருப்புகழ்க்கூடும், திருவாய் மொழிக்கூடும், திரு அருட் பாக்கூடும், திருவேத நாயகக் கூடும், சிந்துக்கூடும், பதக் கூடும், இவைபோல் வன அனைத்தும் குரல் (ச) துத்தம் (ரி) கைக்கிளை (க) உழை (ம) இளி (ப) விளரி (த) தாரம் (நி) இவ்வேழு பொருள்களால் அமைக்கப்பட்டவையே தான்.

'ரக்தி' என்பது இசை இலக்கணத்துள் மிகவும் கடுமையான சாதனையை யுடையது. இது பாட முடி யாத ஒன்று எனச் சொல்ல லாம். ஆனால் சிலரால் பாட வும் இசைக்கவும் முடியும். அந்தச் சிலரில் இசை வேளாள இனத்தார் மட் டுமே ரக்தியின் உருவ அமைப்பை தற்போது செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் ரக்தியை



நாதசுர வித்வான்கள் பலரும் கையாளுவார்கள். பாட வேண்டுமென்றால் ரக்திக் குப் பதம் அமைத்து விட லாம். பாடுகையில் ஓசை நயம் இல்லாமலும் பதங்கள் ஒன்றுடன் ஒன்று சண்டை யிட்டுக் கொள்வதுபோல வுமேயிருக்கும். இங்கு (சுதி) தாய் இசைக்கு இலக்கணம் (லயம்) தந்தை என்ற தாளத் திற்கு இலக்கணமும் இரண்டுமாகிய தாயும் தந் தையும் சண்டையிட்டுக் கொண்டால் பிள்ளைகளின் நிலை எப்படியோ அத் தன்மையுடையது ரக்தியைப் பாடக் கேட்டால்.

அக்ராணி அளவில் உள்ள நேர் கீழைத் தன்மை யுள் ஒரு சிறு துளைப்பு இடம் பெற்றதுதான் மாத் திரை என்று சொல்லப்படு வது. ஒரு இலட்சம் தாமரை இதழ்களின் மேலே ஊசி யைக் குத்தினால் அது கீழே தெரியும் அளவில் உள்ள ஒரு உருவே மாத்திரையின் சிறு துளிபாகம்.

மாத்திரைகாலம்: சட் காலம், விளமகாலம், மத்யம காலம், துரிதகாலம்; முப் பிரிவின் நேர்திஸ்ரகாலம்; இவ்வனைத்தும் திஸ்ரம், சது ஸ்வரம், கண்டம், மிஸ்ரம், சங்கிரணம். இவ் வைந்தால் ஒவ்வொன்றிற்கும் நடை யாகச் சொல்லப்பட்டவை யாகும்.

திஸ்ரம் (3) நீர், நெருப்பு, காற்று, (அப்பு, தேயு, வாயு,) அப்பு, $5\times7=35$. தேயு, வாயு; சதுஸ்ரம் (4) யுகங்கள்; கண்டம் (5) பஞ்சபூதங்கள்; மிஸ்ரம் (7) உலோகங்கள்; சங்கிரணம் (9) நவத்துவாரங்கள்.

எனவே இந்த ஐந்தை—ஐந்தில் ஒன்றை நடை ஒன்றுக்கு ஏழுவகைத் தாள மாகப் பிரித்து ஐந்து நடை களுக்கும் இலக்கணமாக, திஸ்ர நடையில் 7. சதுஸ்ர நடையில் 7. கண்ட நடை யில் 7. மிஸ்ர நடையில் 7. சங்கிரண நடையில் 7. கணக்கின்படி $5\times7=35$.

இவை நீங்கலாகப் பிரதனை (35) முப்பத்தைந்தின் விளக் கமும் ஷாடவ ஔடவ மும் ஔடவ ஷாடவமும் தொடரும். ★

போன் நெ. 111. தந்தி: "வள்ளி விலாஸ்"



உத்திரவாதமுள்ள தங்கம், வெள்ளி நகைகள்கிடைக்கும்

M.V. பாவாடை செட்டியார் சன்ஸ்.

43, 44, லாரன்ஸ் ரோடு, திருப்பாப்புலியூர், கடலூர். N.T.




தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன்அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய்?—நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்—கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும் !
மலைவாழை அல்லவோ கல்வி?—நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

படியாத பெண்ணை யிருந்தால்,—கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு— என்
கண்ணல்ல அண்டை வீட்டுப் பெண்களோடு!
கடிதாய் இருக்குமிப் போது!—கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு,—பெண்
கல்விபெண் கல்வி என் கின்றதன் போடு!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

மேகலா பிக்சர்ஸ் தயாரிக்கும் 'ரங்கோன் ராதா'வில் பானுமதி, பேபி உமா.


தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போஎன்று சொன்றுள் உன் அன்னை!
சிலை போல ஏனங்கு நின்றாய்?– நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?


மலைவாழை அல்லவோ கல்வி? நீ
வாயார உண்ணுவாய் போளன் புதல்வி!
படியாத பெண்ணு யிருந்தால்,
கேலி பண்ணுவார் என்ன இவ்வூரார் தெரிந்தால்!


கடிகாரம் ஏறுமுன் ஏறு!
என் கண்ணல்லை?
அண்டைவீட்டுப் பெண்களோடு!

போட்டிக்கதைகள்

ஆயிரத்து நூறு கதைகள் முரசொலி நடத்திய இச் சிறுகதைப் போட்டியில் கலந்துகொண்டன.

'இன்லண்ட் கவரி'ல் எழுதப்பட்ட சிறு கதைகள் முதல், எண்பது பக்கங்களில் எழுதப்பட்ட பெருங் கதைகள்வரை நம் அலுவலகத்தை முற்றுகையிட்டன. இதில் பெரும்பாலோர் மேல்நாட்டுக் கதைகளில் வரும் பெயர்களை மாற்றியும், வெற்றியடைந்த திரைப்படங்களில் வந்துள்ள நிகழ்ச்சிகளை வைத்துமே எழுதியுள்ளனர்.

பரிசுபெரும் கதை பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன. பிரசுரத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள் இனி தொடர்ந்து வார இதழில் பிரசுரிக்கப்படும்.

சிறுகதைப் போட்டியில் கலந்துகொண்டு ஆர்வம் காட்டிய அத்தனைத் தோழர்களுக்கும் எம் நன்றி.

முதல் பரிசு : ரூபாய் 100

துறவு — முகிலன், குடந்தை

(தெளிவான முக்வரியைத் தெரிவிக்க வேண்டுகிறோம்)

இரண்டாவது பரிசு: ரூபாய் 75

நீறு பூத்த நெருப்பு — தில்லை மறைமுதல்வன்


72, மாலை கட்டித் தெரு, சிதம்பரம்

மூன்றாவது பரிசு: ரூபாய் 50

அன்பின் ரகசியம் — சந்தனத்தேவன்

24-ஏ, திருமலைசாமி புரம், திண்டுக்கல்

[பரிசுத் தொகை 20-1-56 அன்று உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்]



இருபத்திரண்டு வயதிருக்கும்; வாலிபன் ஒருவன். ஒரு தனியார் மருத்துவ விடுதிக்குள் நுழைந்தான்; டாக்டரின் எதிரில் நாற்காலியில் உட்கார்ந்தான்; தன் வலது கையை டாக்டரின் கண்ணுக்கு நேராக நீட்டி, "சார். இந்த இடத்தில் நேற்று நெருப்பு பட்டு விட்டது. ஆனல் சுடவில்லே" என்று மணிக்கட்டுக்கு மேற்புற மிருந்த ஒரு வட்டமான கட்டியைக் காண்பித்தான்.

டாக்டர் அந்த இடத்தில் ஒரு ஊசியால் குத்தி உணர்வு இருக்கிறதாஎன்று பார்த்தார். "வலிக்கவில்லே", என்றன் வாலிபன். "நாக்கை நீட்டுங்கள்" என்றார் டாக்டர். பரிசோதித்தார். "இந்த வடு எத்தனே நாட்களாக இருக்கிறது?" —இது டாக்டரின் கேள்வி.

"எப்பொழுது உண்டாயிற்று என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லே. ஆனல் ஏறத்தாழ ஒரு மாதமாக இதை நான் கவனித்து வருகிறேன்." —இது வாலிபனின் பதில்.

"சார்; உங்களுடைய பெயரென்ன?"

"தரணி"

"திருமணம் ஆகிவிட்டதா?"

"நடந்து ஒரு வாரந்தான் முடிந்திருக்கிறது."

"உங்களுடைய வீட்டில், அதாவது பெற்றேரில் யாருக்காவது ஏதாவது நோயுண்டா?"

"ஏன் இதையெல்லாம் கேட்கிறீர்கள்?"

"என்னுடைய பரிசோதனேக்குப் பக்கபலமாக இருக்குமே என்றுதான்."

"என்னுடைய தந்தைக்கு..."

"தந்தைக்கு...?"

"பெரு நோய் சார்..."

"உங்களுடைய தந்தைதான் இதற்குக் காரணம்" என்றார் டாக்டர் அமைதியாக. இந்த அமைதியான குற்றச் சாட்டு தரணியின் நெஞ்சில் ஒரு புயலைக் கிளப்பி விட்டது.

"சார். என்னுடைய இந்த நோய்...?" என்று முடிக்காமல் விட்ட தரணியின் கேள்விக்கு டாக்டர் தரும் பதிலில்தான் அவனுடைய எதிர்காலம் தொத்திக் கொண்டிருந்தது.

"தம்பி! பயப்பட வேண்டிய தில்லே. லெப்ரசியை, பிகினிங் ஸ்டேஜிலேயே க்யூர் பண்ணிடலாம்" என்று டாக்டர் தரணியின் வாழ்க்கையை நிர்ணயிக்கக் கூடிய அந்தப் பெரு நோயைக் கூறி அதற்குச் சமாதானமும் சொன்னர். ஆனல் தரணியின் குமுறும் நெஞ்சில் ஒரு வாரத்துக்கு முன் நடைபெற்ற கோலாகலத் திருமண விழாவையும், குத்துவிளக்கு போன்ற தங்கத்தையும் கொண்டு வந்து நிறுத்தியது டாக்டரின் பதில்.

"ஐயோ! தங்கம்!" என்று அலறிக்கொண்டு வீடு நோக்கி ஓடினன் தரணி.

தந்தையிடம் நேரே சென்றன். "அப்பா! நாளேக்கு நடக்க இருக்கிறதே அந்த 'இன்னொரு கல்யாணம்' அது வேண்டாம்பா." என்றன். "ஏற்பாடெல்லாம் செய்தாச்சு. இப்போ போய் வேண்டான்னு என்ன செய்யமுடியும்? உனக்கு விருப்பம் இல்லேங்கிறத்துக்காக ஒத்திப்போட முடியாது. தயாராயிரு." என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். முதல் இரவு — வாழ்விலோர் வசந்தம்—வேண்டாம் என்றன் தரணி. தந்தையோ கட்டளேயிட்டார்.

அடுத்த நாள்—எண்ண மலர்களேயெல்லாம் தொடுத்து எழில் கொழிக்கும் மாலேயாக்கினுள் தங்கம். அங்கையில் ஆவின்பால் —அவள் நெஞ்சில் இன்பப் பால்; தட்டில் பழவகை—தணியாத இன்பக் கனவுகள் பலவகை; கழுத்தில் ஆரம்— கண்ணில் ஆவல்; "கிடைக்குமோ வேறோர் கிழமை! படைக்கத்தான் கூடுமோ?" இதுபோன்ற எண்ணம். அடக்க முடியாத ஆவல்— நடக்கும் போதே அந்த இன்பம் கிடைத்தது போன்ற கிளர்ச்சி. உட்சென்றுள் — புது உலகத்தைக் காண—கண்டவர்களெல்லாம் காணுதவர்க்குப் புகன்ற அந்தப் புது உலகத்தைக் காண—அவளுக்குப் புகிய உலகமாகவே போய்விட்டது.

சுடர்விடும்முகத்தைக்காணேம்; சொல்லாமல் சொல்லும் பார்வையைக் காணேம்; பொல்லாப் பெண்ணே என்ற போலிக் கோபத்தைக் காணேம். எல்லாம் கனவுதானு? அணிலேப் போல் தாவி அணேப்பான். கனியைப் போல் கன்னத்தைக் கோதுவான். ஆனல் நாண வேண்டும்; நயனத்தால் ஊட வேண்டும்; பிறகு..... அந்தச் செயலே நினேக்கு முன் இன்பச்சுவை ஊற்றெடுத்து இதயத்தை நினேத்துவிட்டது, அறைக்குள்

நுழையும் முன்பே! ஆனால்... நுழைந்த பின்பு.....நினைத்த தெல்லாம் கானல் நீர்.

'அப்பால் நிற்பானேன்? அருகில் வா' என்று அழைக்கவில்லை; அணைக்கவில்லை. 'இப்படி உட்கார் தங்கம்' என்றான். சொல்லில் உயிரில்லை. எப்படி இருக்கும் அவளுக்கு? பெரிய பீடிகையுடன் பேச்சைத் துவங்கினான்.

''பணக்காரர்கள் புத்திசாலிகள். எனக்குப் பெண் கொடுக்க மாட்டேன் என்ற அவர்கள் முன்யோசனைக்காரர்கள். உன்னையே மணந்து கொள்வேன் என்று நான் பிடிவாதம் செய்து உனக்குப் பிழை செய்தேன். உடலும் உடலும் கூடும் இன்பத்தை விட, உயிரும் உயிரும் கூடும் இன்பம், பலன் இரண்டும் பெரிதல்லவா? தங்கம், நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும்.''

''எதற்கு அத்தான்?''

''நான் சொல்லப் போவதற்கு நீ கட்டுப்படுவதாக சத்தியம் வேண்டும்.''

''திருமண விழா—ஒரு ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் ஒன்றிப் போவதற்கு ஆணை எடுத்துக் கொள்ளக் கொண்டாடப்படும் கோலாகல விழாதானே அது? நமக்கு ஒரு வாரத்துக்கு முன்பே தான் முடிந்து விட்டதே! இன்று அந்த ஆணையை நடைமுறைக்குக் கொண்டு வரும் முதல் நாள்.''

இந்தப் பதில் தரணியின் நெஞ்சில் வைர வாளாக அறுத்தது; நெறிஞ்சி முள்ளாகக் குத்தியது. தவித்தான், எப்படி தன் நிலைமையைத் தங்கத்திடம் கூறுவது என்று.

''ஆம். நடைமுறைக்குக் கொண்டுவரும் முதல் நாள். இந்த நல்ல நாளிலேயே உனக்கு முதல் யோசனை. எங்கே சத்தியம் செய்து கொடு''

''சத்தியமாகச் சொல்கிறேன் அத்தான்.நீங்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்லுக்கும் நான் கட்டுப் படுகிறேன்; கீழ்ப்படிந்து நடக்கிறேன்.''

''இன்று முதல் என்னை நீயும், உன்னை நானும்..... தீண்டக் கூடாது'' தேள் கொட்டியது தங்கத்தின் இதயத்தில். அந்த நஞ்சு உடலெல்லாம் பாய்ந்தது. தடுமாறினாள். மூளைக்கு ஏறியது. தலை சுற்றியது. ''அத்தான்'' இதுதான் அவள் உயிரின் உயர்ப் பிலிருந்து, வெளி வந்த ஒரே சொல்.

''அப்படி (அத்தான் என்று) உதட்டால் உள்ளத்தால் உறவு கொண்டு, ஆனால் உடலால் மட்டும் வேண்டாம்.''

மீண்டும், ''அத்தான்.''

''சந்தியம் செய்கிறேன், தீண்டாதே! தங்கம், நான் என் தந்தையின் வாரிசு. அவருடைய பிள்ளை நான். அவரின் எதிர்காலச் சின்னம். ஆம். அவருடைய பெருநோயின் வருங்காலப் பிரதிநிதி. தங்கம்! ஒரு வாரத்துக்கு முன்பே இப்படித் தெரிந்திருந்



தால் உன்னை மணந்து கொள்ளத் துடித்திருக்க மாட்டேன். நேற்றுதான் தெரிந்தது. மன்னித்து விடு தங்கம். உன் வாழ்வைப் பாழாக்கி விட்டேன். எனக்கு சந்ததி வேண்டாம். அவை தோன்றி இந்த உலகத்தில் துயர்ப்பட்டுத் துடிக்க வேண்டாம். உனக்குச் சந்ததி வேண்டும். உயர்ந்த வாழ்வு நீ வாழ வேண்டும். எனவே நீ உனக்கு விருப்பமான இளைஞனை மணந்து இன்பமாக வாழ். மனப்பூர்வமாகச்சொல்கிறேன்.''

''அத்தான். மறு முறை அந்த வார்த்தை உங்கள் வாயிலிருந்து

முதல் பரிசுக்கதை

வரக்கூடாது. நான் சுய நலக்காரி அல்ல. கொடுத்து எடுத்துக் கொள்வதில் தான் இன்பம்; இல்லறத்தின் தத்துவமும் அது தான். எனவே உங்கள் இன்பம் என் இன்பம்! உயிரையும், உயிரையும் இணைத்து வாழ்வோம். விவாக விடுதலை என்று மறு முறையும் கூறி என் நெஞ்சில் வேல் பாய்ச்ச வேண்டாம்.''

''தங்கம்! உன் எண்ணம் என் எண்ணம், உன் இன்பம் என் இன்பம்.''—புதியதோர் உலகத்தைக் கண்டாள் தங்கம்; அதிசயமான மங்கையைக் கண்டான் தரணி.

இளந் தம்பதிகளின் நன்மையைக் கருதித் தனிக்குடித்தனம் வைத்தனர் பெற்றோர். அவர்கள் எண்ணிய நன்மை வேறு. தம்பதிகளுக்குக் கிடைத்த நன்மை வேறு.

பஞ்சுக்கும் நெருப்புக்கும் பகை, தங்கத்துக்கும் தரணிக்கும் இது தெரியுமோ என்னவோ? திண்ணிய மனம் இருக்கும்போது தீமை என்ன நேர்ந்து விடும் என நினைத்தார்கள் போலும்! தனிக் குடித்தனம் அவர்களிடையே உள்ள தடைக்கு ஒரு அரண் என்று எண்ணியிருப்பார்கள். ஆனால் அதுவே ஒரு 'அரம்' என்பதை அவர்கள் எங்கே எதிர் பார்த்திருப்பார்கள்!

தங்கத்துக்குக் கடுமையான உத்தரவு போட்டிருந்தான் தரணி. அவன் புழங்கும் பொருள் எதையும் அவள் தொடக்கூடாது. ஒரு நாள் அவள் சோப்பு ஆகி விட்டது, கணவனின் சோப்பைப் போட்டுக் குளித்ததற்காகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டாள். அவன் துண்டை எடுத்துத் துவட்டிக் கொண்டதற்காக வெகுண்டு பேசினான். அவன் குளித்துப் போட்டிருந்த துணியை அவள் துவைத்ததற்காக கோபாவேசம் கொண்டான். இதுபோல் நித்தம் நிகழ்ச்சிகள்.

ஒரு நாள் வீதி வழியே தரணி சென்று கொண்டிருந்தான்; காப்பி அருந்த மனம் துண்டியது; ஓட்டலுக்குள் நுழைந்தான்; மேனேஜர் அவனை உற்றுப் பார்த்தார். ''சார்! படிக்கத் தெரியும்ல! வெளியிலே மாட்டி

இருக்கிற போர்டைப் பார்த்து விட்டுப் பிறகு உள்ளே வாங்க.'' தரணியின் உடலில் மின்சாரம் தாக்கியது. செயலற்று அங்கேயே நின்றான். ''ஏன் சார்! படிக்கத் தெரியாதா? அதோ, கண்ணுடி இருக்கு- முகத்தையாவது பாருங்க'' நெருப்பில் பழுத்த வேல் நெஞ்சில் பாய்ந்தது; அவன் உடலெல்லாம் அழுதது வியர்வை சிந்தி. அவன் உயிரெல்லாம் தொழுதது உடலை நோக்கி, என்னைப் பிரித்து விடு உன்னிட மிருந்து என்று. ஓட்டலை விட்டு வெளியேறினான் தரணி.

இன்னொரு நாள் வீதியில் சென்று கொண்டிருந்தான். காலில் சாணியை மிதித்துக் கொண்டான். பக்கத்துக் குழாயில் கழுவிக் கொண்டு நகர்ந்தான். ஒரு சிறு குழந்தை தன் தாயிடம் அந்தக்குழாயைச் சுட்டிக் காட்டி ''அம்மா! அன்னி—(தண்ணீர்)—என்றது. அந்த அன்னை 'அது ஆ! அன்னி (நன்னீர் அல்ல) அதோ; வா, பக்கத்துக் குழாயிலே குடிக்கலாம்'' என்றாள். தரணி அதில் கால் கழுவியதையும், அவன் நெருங்கி வந்ததும் அவனை நோக்கி விட்டும்தான் அப்படிக் கூறினாள் அந்தத் தாய். இதெல்லாம் அவன் நெஞ்சத்தைப் புண்ணாக்கினாலும், அவன் நிலைமையை, அதாவது சந்ததி உண்டாக்கி அவர்களும் இப்படி ஊராரால், உணர்ச்சி புண்ணாக்கப் படும் போது, சங்கடப்பட்டுத் தன்னைச் சபிக்க வேண்டாம் அல்லவா? தன் தந்தை செய்த தவறை இவன் மீண்டும் தான் செய்ய விரும்ப வில்லை.

இது போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அவன் வெளிக் கிளம்புவது அரிது. தனக் கென்ற தனி அறையிலேயே அடைந்து கிடந்தான். என்றாலும் நோயின் சின்னம் அதிகமாக தென்பட வில்லை. உடம்பில் மினு மினுப்பு; தசையில் தடிப்பு; முகத்தில் கொஞ்சம் ஊதல் — இவ்வளவு தான்.

இதற்குத்தான் அவள் இவ்வளவு புண்படுத்தலையும் பொருத்துக் கொள்ள வேண்டி இருந்தது.

தனது அறையில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். புரளும்போது கட்டிலில் இருந்த ஆணி ஒன்று காலில் கிழித்து விட்டது. 'ஆ' என்று அலறிவிட்டான். இதைக் கேட்டு ஓடோடி வந்தாள் தங்கம். பஞ்சும், தண்ணீரும், பென்சாயின் மருந்தும் கொண்டு வந்தாள். பஞ்சைத் தண்ணீரில் நனைத்து வழிந்து கொண்டிருந்த ரத்தத்தைத் துடைக்கப் போனாள். ''இப்படிக் கொடு தங்கம்'' என்றான். அவள், ''இது நான் செய்யக் கூடாதா?'' — ஏக்கத்தோடு கேட்டாள். ''என்னால் முடியாத போது'' என்று தீர்மானமாகச் சொன்னான். தங்கத்திற்கு அழுகை பொங்கிவந்தது; வார்த்தைகள் வழிந்தன. ''உங்கள் மனைவி என்று வேறு எதற்குத் தான் உயிரோடிருக்க வேண்டும்? அத்தான்! ஓடிவரும் அன்பு நீரை சத்திய அணைகட்டித் தடுத்தீர்கள். அந்த அன்பு, உங்கள் உடலுக்காவது பணிசெய்து பயன் அடையும் படிச் செய்யுங்கள். அல்லது அதைக் கடலுக்கே ஓடவிடுங்கள்.''—திடுக்கிட்டுக் கேட்டாள். ''நீ என்ன சொல்கிறாய் தங்கம்?'' தீர்மானமாகச் சொன்னாள், ''நான் சாகவேண்டும்.'' தீனமாகக் கேட்டான், ''என் கதி?'' ''எனக்குக் கொஞ்சம் சுதந்திரம் கொடுங்கள். ஆத்மாவின் பசிக்குச் சிறிது பிச்சை இடுங்கள்'' என்று கெஞ்சினாள். தரணியின் விழிகளில் நீர் துளித்தது. தங்கம் கணவனின் புண்ணுக்கு மருந்துகட்டி, நெஞ்சோடு சிரித்துக் கொண்டாள்; பெருமைப் பட்டாள்.

இத்தனை நாளும் தங்கத்தின் நெஞ்சில் வழிந்து கொண்டிருந்த ரத்தம் துடைக்கப் பட்டது; ஆனால் தரணியின் நெஞ்சில்...?

இந்த நிகழ்ச்சி நடந்த அன்று மத்தியானம் சாப்பிடும்போது தங்கம் அன்பும், ஆசையும் ஒழுக, ''அத்தான்'' என்றாள். ''தங்கம்'' என்றான் பரிதாபத்தோடு. ''நீங்களும், நானும்.....'' -தங்கம் தயங்கினாள். தரணி சந்தேகப் பட்டான். ''ஒரு நாள் கூட...'' என்று தொடர்ந்தாள். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது; முகம் வெளிறிப் போய் விட்டது. ''சேர்ந்து...'' என்று நீட்டினாள். அவனுக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது. அவள் தயங்கித் தயங்கிச் சொல்வதைப்பார்த்தால் ஏதோ... இப்படி அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே தங்கம் முடித்தாள். ''சினிமாவுக்குப் போனது கிடையாது. இன்றைக்காவது...'' தரணி நெஞ்சைத் தடவிக் கொண்டான்; நிம்மதி அடைந்தான். அவன் எதிர்பார்த்தது வேறு. அதனால், ''நான் ஏன்? —துணைக்கு வேலைக்காரியை...''

''என்னோடு, இதற்குக்கூட நீங்கள் வரக் கூடாதா?'' —தங்கத்



தின் கண்கள் முத்துக்களை உதிர்த்தன. அவன் மனம் இளகியது. சரி என்று ஒத்துக் கொண்டான்.

வண்டிக்காரன் டிக்கட் வாங்கி வந்து கொடுக்க இருவரும் முதல் வகுப்பில் உட்கார்ந்திருந்தனர்.



படம் காட்ட சில விநாடிகளுக்கு முன் டிக்கட் கிழிப்பவர் தரணியைக் கூப்பிட்டு ரகசியமாக ஏதோ சொன்னார். வெளிறிய முகத்துடன், "தங்கம்! நீ இங்கேயே இரு! மேனேஜரைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றான் தரணி. படம் ஓடத்தொடங்கியது. கால் மணியும் கடந்து விட்டது. ஆனால் அவன் இன்னும் திரும்பவில்லை. அந்த ஆளை அழைத்துக் காரணம் கேட்டாள். அவன் தயங்கினான். வற்புறுத்தவே அவளிடம் ஏதோ சொன்னான். அதைக்கேட்டு வெந்நீரில் இட்ட எலுமிச்சம் பழம்போல் அவளது முகம் வெளிறி விட்டது; மூடிய உலைபோல் உள்ளம் கொதித்தது; வாடிய கொடி போல் அவமானத்தால் துவண்டு விட்டது. காரணம்? அவனை, தரணியை, அவளது கணவனைக் கொட்டகைக்குள் அனுமதிக்கக் கூடாதாம். 'அவர் எங்கே?' என்று நெஞ்சில் வலித்ததுபோல் கேட்டாள். 'அப்போதே வெளியே போய் விட்டார்' என்றார் அந்த ஆள்.

தங்கம் சந்தேகப் பட்டாள். அவமானம் தாங்காமல் தற்கொலை..... இதற்குமேல் அவளால் எண்ண முடிய வில்லை. டாக்சி எடுத்துக் கொண்டு வீட்டுக்கு விரைந்தாள்.

தெருக் கதவு திறந்திருந்தது; உள்ளே நுழைந்தாள்; தரணியின் அறைக் கதவு தாளிடப் பட்டிருந்தது. தங்கம் கதவை இடித்தாள். அவளின் நெஞ்சக் கதவு படபட வென அடித்துக் கொண்டது. 'அத்தான்' என்று கத்தினாள். கதவு திறக்கப்பட்டது. அபாயம் ஒன்று மில்லை. தரணியேதான் திறந்தான். 'அத்தான்' என்று அவன் காலில் விழுந்தாள். மன்னித்து விடுங்கள் என்று காலைப் பற்றிக் கொண்டாள். 'பைத்தியம்' என்று அவளைத் தூக்கி தேற்றினான்.

தங்கம் தரணியின் உடலைத் தொட்டுப் பணிவிடை செய்யத் துவங்கிய நாளிலிருந்து அவளுடைய போக்கில் மாற்றங் காணப் பட்டது. அவள் உள்ளத்தில் ஒரு கிளு கிளுப்பு; உடலில் ஒரு மினு மினுப்பு; நடையில் நளினம்; முகத்தில் முறுவல்; இவை எப்போதும் தென்பட்டன. இந்த மாற்றங்கள் அவர்களது சத்திய உறவிலேயும் ஒரு மாற்றம் செய்து விட்டால், சந்ததியும் ஏற்பட்டு விட்டால்..... இந்த எண்ணம் தரணியை மிகவும் வாட்டியது. ஏனவே தற்காப்பாக சில நாட்களாகத் திண்ணையில் படுக்கத் தொடங்கினான்.

பந்துக்கு அளவுக்கு மேல் காற்றடித்தால் அது வெடித்து விடும். கடிகாரத்துக்கு நிறைய சாவி கொடுத்தால் மெயின் ஸ்பிரிங் ஒடிந்து விடும். உணர்வை தேக்கத் தேக்க அது ஒரு நாள் பொங்கியே வழியும், உள்ளே தங்க வகை யில்லாததால்.

தங்கம் உள்ளே படுத்திருப்பாள். பாதி உடல்தான் படுக்கையில் கிடப்பதாக அவளுக்குத் தோன்றும்; உயிர் சிறகடிக்கும்; உடலில் சூடேறும்.

தரணி திண்ணையில் படுத்திருப்பான். அவன் ஆவி தானே எழுந்து சென்று உள்ளே வட்டமிட்டுக் கொண்டிருக்கும். தன்னை அறியாமல் உடல் எழும்பும்; உயிர் துடிக்கும். என்ன செய்வது?

ஒரு நாள் இரவு..... வழக்கம் போல் திண்ணையில் படுத்திருந்தான். அதாவது புரண்டு புரண்டு இனம் புரியாத எழுச்சியால், தூக்கம் வராமல் ஏது செய்வ தென்றும் புரியாமல் படுக்கையில் கிடந்தான். தெருக்கதவு மெதுவாகத் திறக்கப் படுவது தெரிந்தது. ஆம், தங்கம். அவள் தான் திறந்தாள். இந்த நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வர வேண்டிய காரணம்? கண்ணை, கட்டாயப் படுத்தி மூடச் செய்தான். ஆனால் ஆவி உணர்வை எழுப்பி, காரணம் காண தனது கண்ணை கூர்மையாக்கிக் கொண்டது. மனம், திறந்து பார்க்குமாறு கண்ணைக் கெஞ்சியது; பேசுமாறு நாவிடம் மன்றாடியது.

"அத்தான்"— குழலில் இழைந்து வருவதுபோல எவ்வளவு மதுரமாக இருந்தது அந்த அழைப்பு! அதில்தான் எவ்வளவு ஆவல் தேங்கிக் கிடக்கிறது! ஏங்கிக் கிடந்த இள நெஞ்சமல்லவா? நெருப்புக்குப் பக்கத்தில் இருக்கும் பஞ்சல்லவா? தரணியின் நெஞ்சு பேசு பேசு என்று அடித்தது; வேறோர் எண்ணம் தொண்டையை அடைத்தது.

அவன் பேசவில்லை; ஆனால் உணர்வு உள்ளே பேசிக்கொண்டிருந்தது. ஆசை தாளவில்லை அவளுக்கு; அத்தான்மீது தளிர்க் கரத்தால் தடவினாள். மௌனமாக ரசித்தான். புதிய அனுபவம்-

மலர் மீது தென்றல் தழுவுவது போல் இருந்தது. அந்த ஸ்பரிசத்துக்கு எத்தனை சக்தி! முனிவர் எல்லாம் மோக வலையில் வீழ்ந்தனர் என்று கதைகள் சொல்கிறதே அதன் காரணம் புரிந்து கொண்டான் தரணி. மரக்கட்டைகளா அவர்கள்?

புரண்டவன் எதுவும் புரியாதவன் போல, "யாரது?"? என்று மெல்லிய குரலில் அதட்டினான். அவளது உடல் நடுங்கிவிட்டது; வாய் அசைவற்றது. அவளது நிலைமையை உணர்ந்த தரணி, தன்னுடைய செயலுக்கு வருந்தி அவளைத் தேற்றுவது போல "யார்?...தங்கம்!" என்றான் வியப்படைந்தவன் போல்.

'நான்தான்' என்றாள். அதில் உணர்வு குறைந்திருந்தது காணப்பட்டது.

"ஏன், தங்கம்?" என்று காரணம் அறியாதவன் போல் கேட்டான். அவனுக்கா தெரியாது!

"வெளியில் நல்ல பனி. உங்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது..." என்று முன்கூட்டியே தயாரித்திருந்த காரணத்தைச் சொன்னாள். 'உள்ளே வாருங்கள்' என்பது அதில் தொக்கி நின்றது.

"இத்தனை நாட்களாகப் பழக்கப் பட்டுவிட்டது. கம்பளிப் போர்வையும் இருக்கிறது. பனி என்னை ஒன்றும் செய்து விடாது" என்றான். இதை ஒப்புக் குத்தான் சொன்னான். உள்மனம் 'ஏனடா இப்படிச் சொன்னாய்' என்று கன்னத்தில் அறைந்தது.

தயாரித்திருந்த ஒரு காரணமும் வீணாகி விட்டது. வேறு காரணம் அகப்படாமல் அதைத் தேடிக் கொண்டு மௌனத்தில் ஆழ்ந்தாள்.

உள்ளே போகத் துடித்தான். ஆனால், முன்னே பரவாயில்லையென்று சொல்லிவிட்டு இப்போது வருகிறேன் என்றால் சுயமரியாதைக்கு இழுக்கு. மறுபடியும் அதே காரணத்தையாவது கூறி அழைக்கமாட்டாளா?

"வேலைக்காரி இல்லை; வீட்டுக்குப் போய்விட்டாள். உள்ளே தனியாகப் படுத்துக் கொள்ள எனக்குப் பயமாக இருக்கிறது" என்று சாமர்த்தியமாகச் சொன்னாள். தன் சமயோசித புத்தியையும் அதற்குக் காரணமாயிருந்த வேலைக்காரியையும் மனதுக்குள்ளேயே வாழ்த்திக்கொண்டாள். தரணியின் உள் மனம் வீட்டுக்குப் போன வேலைக்காரி 'வாழ்க, வாழ்க' என்று கூவியது. இனி முதல் அழைப்புக்குச் சொன்ன முட்டாள்தனமான பதிலை சொல்லக் கூடாது என்ற முடிவுக்கு வந்தவனுய் படுக்கையை விட்டு எழுந்திருந்தான். எங்கே மீண்டும் படுக்கையில் படுத்து வீடு வாலை என்ற சந்தேகத்தால் அவசரமாகப் பாயைச் சுருட்டினாள் தங்கம்.

இருவரும் உள்ளே சென்றனர். தரணிதான் தெருக் கதவைத் தாளிட்டான். தன்னுடைய அறைக்கருகில் வந்ததும் 'நான் இங்கேயே படுத்துக் கொள்கிறேன்' என்றான். 'அட! பழைய பைத்தியக்காரத் தனமே' என்று சபித்ததுமனம்.



இருவரும் ஒருவர் உள்ளத்தை ஒருவர் புரிந்து கொண்டுதான் பேசினர். ஏன்? நேரடியாகச் சொன்னால் என்ன?—சொன்னால் என்ன? சுவைக்குமா? அல்லது நாணமும், நாகரிகமும், மனிதப் பண்பும் அதற்கு இடங் கொடுக்குமா?

"உங்கள் அறைமுழுதும் கொசுவுக்காக பிளிட் (flit) மருந்து தெளித்திருக்கிறேன். நாற்றம் அடிக்கும். படுக்க முடியாது" என்று பொய் சொன்னாள். வாழ்வில் இந்த ஒரு பொய்தான் அவள் சொன்னது, வாழ்வில் ஒன்றை எதிர்பார்த்து, ஏங்கி! அவனுக்கும் புரியும் அது பொய் என்று. பனிக் காலத்தில் கொசு ஏது? அதுவுந் தவிர நாற்றமும் அறையிலிருந்து வெளி வரவில்லை.

திண்ணையிலிருந்து கொண்டு வரப்பட்ட படுக்கை ஒரு மூக்காலியில் உட்கார்ந்து கொண்டது.

தூங்கும்போது எரியக் கூடிய சிறிய ஊதா நிற மின்சார விளக்கும் அணைக்கப் பட்டது.

இருவரும் படுத்தனர்—ஒரு படுக்கையில்—ஒருவர் மீது ஒருவர் படாவண்ணம்! சில விநாடிகள் மௌனம். கடல் போன்ற இன்பத்தை எதிர் பார்ப்பவர்கள், அந்த எதிர்கால மகிழ்ச்சிப் பெருக்கால் பேச்சற்றுக் கிடந்தனர். இருவரும் 'கொஞ்சம்' நகர்ந்து (நெருங்கிப்) படுத்தனர்-சில விநாடிகள் சென்றன. கையை வருடினான். அவள் மீது கையை வைத்தான். பிறகு கழுத்தருகில், கன்னத்தருகில், கன்னத்திலேயே கையை வைத்தான்—தடவினான்—தண்ணீரைத் தொடுவது போன்ற குளிர்ச்சி; வெல்வெட்டைத் தடவுவது போன்ற மென்மை! சிறிது நேரத்துக் கெல்லாம் 'இச்' என்ற சத்தம்—இரண்டு கேட்டது.

அப்போது அந்த அமைதியான நேரத்தில் எங்கோ தூரத்தில் இருந்து அழுதக் கதறும் ஒரு பெருநோய் பிடித்த ஆணின் குரல் கேட்டது. அடுத்து, காலும் கையும் குறுகிய அந்த மனிதன் அவன் கண்முன் தோன்றினான். அந்த நோயாளியின் துன்பங்களும், அவனை உலகம் நடத்திய இழிந்த முறைகளும் அவன் கண் முன் தோன்றின. அவள் கன்னத்திலிருந்த தன் கரத்தைத் வெடுக்கென்று எடுத்துக் கொண்டான். எழுந்தான்.

"தங்கம்! பெரிய தவறு செய்ய இருந்தேன். என் தந்தையின் சில விநாடித் தவறுக்காக நான் இந்த உலகத்தில் படும் அவதி போதும். உன்னை இந்த கதிக்கு நான் ஆளாக்கிய பாபம் போதும். உலகத்தால் வெறுக்கப் படுவது என்னோடு ஒழியட்டும்; ஏக்கத்தால் தவிப்பது உன்னோடு இருக்கட்டும். இன்னும் பரம்பரைகளை உற்பத்திசெய்து இந்தப் பாபங்களுக்கு ஆளாக்க வேண்டாம். என் தந்தை செய்த தவறை நானும் செய்ய மாட்டேன்" என்று ஆவேசம் வந்தவன்போல் பட பட என்று பேசினான்.

விளக்கு போடப்பட்டது. படுக்கை எடுக்கப்பட்டது. கதவுதிறக்கப்பட்டது. திண்ணைக்கு ஓடினான்!

தங்கச் சிலை பேசாமல் நின்றது. ★



கதவை யாரோ படபட வென்று தட்டினார்கள். தூக்கம் வராமல் கண்களை மட்டும் மூடிய படிபடுத்திருந்த நான், அது யாராயிருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தேன். அதற்குள் என் மனைவி எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

"யாரது?"

"நான் தான்"—அது குமாரசாமியின் குரல்.

உள்ளே வந்த என் மனைவி விளக்கைப் போட்டு விட்டு என் அருகே வந்தாள். நான் தூங்குவதுபோல பாசாங்கு செய்தபடி படுத்திருந்தேன். அவள் என் முகத்தருகே குனிந்து, "தூங்குகிறீர்களா?" என்று கேட்டபடி, தோளைப் பிடித்து அசைத்தாள். அப்போது அவள் மூச்சும், வாசனை நிறைந்த கூந்தல் சுருளும் என் கன்னத்தில் இழைந்தன.

சட்டென்று கண்களைத்திறந்து, கைகளால் அவள் கழுத்தை வளைத்தேன். அப்போது கோபத்தில் அவள் முகம் கோணியது. ஆனால் அதிலும் ஒரு அழகு இருந்தது.

"போதும் உங்கள் விளையாட்டு ...உங்கள் நண்பர் வந்திருக்கிறார்."

அவள் போய்விட்டாள். சுவையான காவியத்தை கெடுத்த நண்பனின் மீது எரிச்சலாக வந்தது. அதற்குள் அவனே உள்ளே வந்து, எதுவும் பேசாமல் அமர்ந்தான்.

விளக்கு வெளிச்சத்தில் அவன் முகத்தைப் பார்த்தேன். வழக்கத்துக்கு மாறுக அவன் முகம் இருண்டிருந்தது. அவன் எதைப் பற்றியோ தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் கவனமில்லாத அவன் பார்வை தெளிவாக்கிற்று.

"என்ன குமார்?" என்றேன்.

"சீக்கிரம் கிளம்பு. சிறிதுதூரம் போய் வரலாம்" என்றான். ஆச்சரியமாக இருந்தது.

"இந்த இரவிலா?" என்று இழுத்தேன்.

"ஆமாம்"

என் மனைவியிடம் கதவை தாழிடச் சொல்லிவிட்டு அவனோடு கிளம்பினேன்.

வெளியே இருள் போர்த்திருந்தது. ஊர் அடங்கி, தெருக்களில் அமைதி படிந்திருந்தது. தெரு விளக்குகள் புராதன சின்னங்களைப்போல நின்று கொண்டிருந்தன. குளிர் கோர்த்த பனிக் காற்று உடலுக்குள்ளும் இறங்கிற்று.

"எவ்வளவு தூரம் போக வேண்டும்?" என்றேன்.

"நமது வழக்கமான இடத்துக்கு" என்று சுருக்கமாக பதில் கூறினான்.

ஊருக்கு வெளியே ஒரு பெரிய மைதானமிருந்தது. அதை ஒட்டி ஒரு ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையின் மேடான பகுதியில் அமர்ந்து நாங்கள் இருவரும் எவ்வளவோ பேசியிருக்கிறோம். அந்த இடத்தை நோக்கி இருவரும் நடந்து சென்றோம்.

வழி நெடுக அவன் எதுவும் பேசாமல் நடந்து வந்தான். ஏன் இப்படி திடீரென்று புகிர் போல மாறி விட்டான்? அவனுக்கு என்ன நேர்ந்திருக்கும்? என் மனம் அவன் நெஞ்சைத் தொட்டுப் பார்க்க முயன்றது...

இரண்டாவது பரிசுக் கதை

அவன் இன்னமும் எனக்கு நெருங்கிய நண்பனாகத்தான் இருந்தான். அன்று போலவே இன்றும் பழகினோம். ஆனால் நான் தான் மாறிவிட்டேன். அவன் அன்று போலத்தான் இன்றும் இருக்கிறான்...

அப்போது நாங்கள் இருவரும் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தோம். அனுபவமின்மையும், அவசரமும் நிறைந்த பருவம். அந்த நாட்களில் நாங்கள் இருவரும் இலட்சியவாதிகளாக விளங்கினோம். குமாரசாமி என்னைவிட தீவிரம். கல்லூரி அதிகாரிகள் அவனை பயங்கரமான புரட்சிவாதியாக கணக்குப் போட்டு வைத்திருந்தனர். ஏனெனில், எதாவது செய்யவேண்டுமென்று எப்போது பார்த்தாலும் துடித்தபடி இருப்பான். கல்லூரியில் ஒரு குறை தென்பட்டாலும் போதும், மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தி விடுவான். அவன் போன பிறகுதான் கல்லூரியில் அமைதி நிலவியது. ஆனால் அந்த அமைதி, அடித்துப் போட்ட பாம்பைப் போலத்தான் இருந்தது. அவனால் கல்லூரியில்சலசலப்பிருந்தாலும், அதில் ஏதோ ஒரு உயிர்த் தன்மையும் இருந்தது.

படிப்பு முடிந்ததும் அவன் திருநெல்வேலிக்கு அருகே இருந்த தன் சொந்த ஊருக்குப் போய் விட்டான். கொஞ்சங் கொஞ்சமாக எங்களிடையே இருந்த தொடர்பும் விட்டுப் போயிற்று.

எனக்கு நல்ல வேலை கிடைத்தது. அழகான மனைவி ஒருத்தியும் வந்தாள். பருவ நெகிழ்ச்சியில் அவளைச் சுற்றிக் கிடந்தேன். அவள் மடியில் தலை வைத்து தூங்கியபடி நாட்களை நகர்த்தினேன். அவள் கனவுகளை மலர்விக்க முடிந்ததை எல்லாம் செய்தேன்; முடியாததையும் செய்ய முயன்றேன். அவளுடைய அழகிலும் சாகசத்திலும் என்னிடமிருந்த இலட்சியம் தீப்பட்ட மலராகிவிட்டது. அவள் என்னை புது மாதிரியாக சிருஷ்டித்து விட்டாள்.

ஒரு நாள் குமாரசாமிக்கு திருமணமென்று அழைப்பு வந்தது. எனக்கு வியப்பு தாங்கவில்லை.



ஏனெனில், திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று அவன் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான். அப்போது என் உடல் நிலை சரியாக இல்லை. வாழ்த்து மட்டும் அனுப்பினேன்.

சில நாட்களுக்குப் பின்னர், வழக்கு சம்பந்தமாக அவனைக் கைது செய்திருப்பதாக பத்திரிக்கையில் படித்தேன். அதற்குப் பின் அவனைப்பற்றிய செய்திகள் அடிக்கடி பத்திரிக்கைகளில் வந்தன.

திடீரென்று ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் அவன் என் எதிரில் வந்து நின்றான். முதலில் எனக்கு யாரென்றே புரியவில்லை. நாற்பது வயதானவன் போல கிழடுதட்டு, ஒட்டி உலர்ந்து போயிருந்தான்.

படிப்பு முடிந்த பிறகு நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னான். தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபட்டு பெரிய புரட்சிவாதியாகி விட்டான்; இரண்டு, மூன்றுமுறைகள் சிறை சென்றான்-அனுபவங்களைக் கதைபோலக் கூறினான்.

"இதோ, இந்தக் கால்களைப் பார்" என்று ஒரு நாள் காட்டினான். முழங்காலுக்கு கீழே, நடு எலும்பில், கோடு கோடாக காய்த்துப் போயிருந்தது.

"என்ன இது?" என்று கேட்டேன்.

"ஒரு சதி வழக்கு சம்பந்தமாக என்னை இப்படி விசாரித்தார்கள். இரும்புக் கழியினால், எலும்பில், சதை பிய்ந்து ரத்தம் ஒழுகும்வரை அடித்தார்கள். அவர்கள் பாஷையில் இதற்குப் பெயர் 'ஜலதரங்கம்' வாசிப்பதாம். பிறகு அவர்களே மருந்து போட்டார்கள். விசித்திரமான மனிதர்கள்."

அவன் கொஞ்சங்கூட வேதனையின்றி சொன்னதுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது!

கடந்த ஆறு மாதங்களாக அவன் இங்கேயே தங்கிவிட்டான். எப்போது வருவான், எங்கே போகிறான், என்ன செய்கிறான் என்று சொல்லமுடியாது. ஊரைப் பற்றியும், அவன் மனைவியைப் பற்றியும் கேட்டால் உடனே எழுந்து போய்விடுவான்...

அதற்குள் நாங்கள் இருவரும் ஊரைத் தாண்டி வந்துவிட்டோம். வானத்தின் மங்கிய ஒளி மைதானத்தில் தங்கி இருந்தது. ஆற்றங்கரை மேட்டில் வந்தமர்ந்தோம். எதிரே ஆற்றில் சலனமில்லை. இருட்டில் ஆற்று நீர் கருப்பாகத் தெரிந்தது.

குமாரசாமி பெருமூச்சு விட்டான்.

"என்ன குமார்?" என்றேன்.

"அவளிடமிருந்து நேற்று கடிதம் வந்தது" என்றான்.

"உன் மனைவியிடமிருந்தா?"

"ஆமாம்" அவன் குரல் உடைந்து ஒலித்தது.

சிறிது நேரம் இருவரிடையேயும் மௌனம் நிலவியது. பிறகு அவன் பேச ஆரம்பித்தான்.

"உனக்கு எல்லாவற்றையும் சொல்ல வேண்டுமென்றுதான் அழைத்து வந்தேன். நேற்று அவள் கடிதம் வந்ததிலிருந்து எனக்கு எதுவும் ஓடவில்லை. இரவு முழுதும் தூக்கமில்லை. ஆகையிலிருந்தே உனக்கு எல்லாவற்றையும் சொல்லுகிறேன்.

"படிப்பு முடிந்து ஊருக்குப் போனேனல்லவா? அங்கே என்னால் சும்மா இருக்க முடியவில்லை. உனக்குத்தான் என்னைப்பற்றி தெரியுமே! ஊர்ஊராக அலைந்தேன். எல்லாம் இயக்க வேலைகளுக்காக. மற்றவர்களைப்போல கல்யாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்த வேண்டும் என்ற தூண்டுதலே ஏற்படவில்லை. கட்சி வாழ்விலே எல்வளவோ தன்பங்கள்! நாடோடி வாழ்க்கைபோலத்தான். பட்டினிக் கிடக்கவும் நேரிடும். பதுங்கி வாழும் சமயங்களும் உண்டு. சித்திரவதைகளுக்கு கணக்கில்லை. அது பயங்கரமான வாழ்க்கை. அதிலிருந்து என்னால் மீள முடியவில்லை. அதை நான் விரும்பவும் இல்லை.

"ஆனால் என் பெற்றோர்களுக்கு இது பிடிக்கவில்லை. இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லைதான். தந்தை என்னுடன் பேசுவதில்லை. என்னைப்பற்றி அவரிடம் யாராவது விசாரித்தால் "என் மகன் எப்

போதோ செத்து விட்டானே'' என்று தயங்காது சொல்லுவார். அந்த அளவுக்கு அவர் மனம் வெறுத்துவிட்டது அவர்வாழ்வில் நொடித்துப் போனவர். என்னுல் குடும்பம் பழையபடி செழிக்கும் என்று கனவு கண்டார். அது வெறுங் கனவாகவே போய்விட்டது.

''என் தாயோ...பாவம்! உடலிலுள்ள சக்தியையெல்லாம் கண்ணீராகவே செலவழித்தாள். அவள் கண்ணீரைக் காணும் போதெல்லாம் என் உள்ளம் மெழுகைப்போல இளக ஆரம்பித்துவிடும். ஆனல் முழுதும் இளகுவதற்குள் நான் விலகிக் கொள்வேன்.

''வீட்டிலிருந்த தொல்லேயும் நிம்மதி இன்மையும், மேலும் மேலும் என்னே இயக்க வேலேகளில் இழுத்துவிட்டன. அத்திப் பூத்தது போல எப்போதாவது வீட்டுக்குப் போவேன். அப்படி ஒரு முறை போயிருந்தபோது, ஒரு நாள் இரவு நான் எதனலோ விழித்துக் கொண்டேன். என் தாய் என் காலடியில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள். அப்போது என் நிலேயைச் சொல்ல வார்த்தைகள் கிடையாது. கண்ணீருக் கிடையே அவள் எத்தனேயோ புத்திமதிகள் சொன்னுள். அதில் ஒன்றும் தவறில்லே. சாதாரணமாக ஒரு தாய் எதிர்பார்க்கக்கூடிய ஆசைகள் தான். ஆனல் என் நிலேயோ, நாட்டின் நிலேயோ அவளுக்குத் தெரியாது. அவள் பழைய பரம்பரையில் வந்தவள். தலேமுறை தலேமுறையாக பாதுகாக்கப்பட்ட இருட்டு உலகத்தில் குடியிருப்பவள்.

''கடைசியில் அவள் என்னே திருமணம் செய்து கொள்ளச் சொன்னுள். மறுத்தேன். அவள் விடவில்லே. ''இந்த என்னுடைய ஒரு ஆசையையாவது பூர்த்தி செய்யக்கூடாதா'' என்று கெஞ்சினுள். நீயே யோசித்துப் பார்; பெற்ற தாய் அப்படி காலேப் பிடித்துக் கெஞ்சும்போது என்ன செய்ய முடியும்? வேறு வழியின்றி ஒப்புக்கொண்டேன்.

''பிறகு எனக்குத் திருமணம் நடந்தது. என்னதான் கொள்கையில் ஊறிக் கிடந்தாலும் அந்த உணர்ச்சி எல்லோருக்கும் பொதுவானதுதானே. மணம் நடந்த அன்று நான் புது மனிதனகை இருந்தேன். தாலி கட்டும்போது தான் நான் என் வாழ்வில் ஒரு பெண்ணின் பக்கத்தில் அத்தனே உணர்ச்சியோடு அமர்ந்திருந்தேன்! அவள் அழகியா இல்லேயா என்பது எனக்குத் தெரியாது. ஆனல் ஒரு பெண் எனக்காக, என்னேடு ஆயுள் முழுதும் வாழ வந்திருக்கிருள் என்பது மட்டும் என்னே ஒரு இன்பம் புரியாத ஆனந்தச் சுழிப்பில் அமுத்திற்று. மணம் நடந்த இரண்டாம் நாள் இரவு...''

குமாரசாமி பேசுவதை நிறுத்தினுன். சிறிது நேரம் பேசுவதற்குள் அவன் களேத்துவிட்டான்.

''மேலே என்ன நடந்தது?'' என்று தூண்டினேன்.

''அந்த இரவு மிகவும் விசித்திரமானது. நான் முதன் முதலாக ஒரு இள வயதுப் பெண்ணேடு தனித்திருந்தேன். பொதுவாக எல்லோருக்கும் அந்த சந்தர்ப்பத்தில் கூச்சமிருக்கும்; எனக்கு அந்தக் கூச்சம் அளவுக்கு மீறி இருந்தது. அவள் நீண்ட நேரம் நின்று கொண்டே இருந்தாள். நான் கட்சிப் புத்தகம் ஒன்றை புரட்டிக் கொண்டிருந்தேன். வேடிக்கையாக இல்லேயா இது? பிறகு அவள் சுவரில் சாய்ந்தபடி அழுதாள். நான் எழுந்துசென்று என், அழுகிறுய்?' என்றேன். அவள் எனது பைத்தியக்காரத்தனமான கேள்வியைக் கேட்டு என்ன நினேத்தாளோ? அதெல்லாம் புரியாத பச்சைக் குழந்தையல்ல நான். ஆனல் அது ஏதோ எனக்கு சம்பந்தமில்லாத விஷயம் போலத் தோன்றியது...

''என் மடியில் முகம் புதைத்து அவள் நீண்ட நேரம் அழுதாள். எதற்காக என்று எனக்குத் தெரியவில்லே. பிறகு ஏதேதோ பேசினேம். அதெல்லாம் இப்போது நினேவிலில்லே. அன்றிரவு நான் ஒரு புதுவித இனிமையை உணர்ந்தேன்...

''அன்றிரவு இரண்டு மணி இருக்கும். அப்போது தான் நாங்கள் இருவரும் கண்ணயர்ந்திருந்தோம். யாரோ என்னேக் கூப்பிட்டார்கள். எழுந்து சென்று பார்த்தேன். இயக்கத் தோழர்



இருவர் நின்றிருந்தனர். சதி வழக்கு ஒன்று சம்பந்தமாக என்னைக் கைது செய்ய உத்தரவு வந்திருப்பதாகக் கூறினர். வீட்டில் எவரிடமும் சொல்லாமல் உடனே தலைமறைவாகி விட்டேன்.

"ஆனால் சந்தர்ப்ப வசமாக சில நாட்களுக்குப்பின் சிக்கிக் கொண்டேன். சிறை வாசம் முடிந்ததும் வீட்டுக்குச் சென்றேன். ஒருவரும் முகம் கொடுத்து பேசவில்லை. அவள் கூடத்தான்! மாறுக அவள் என் மீது வசை மாறி பொழிந்தாள். அழுகைக் கிடையே ஆத்திரத்தைக் கொட்டினாள். அப்போதுதான் எனக்கு என் தாயின் மீது முதன் முதலாக வெறுப்பேற்பட்டது.

"வீட்டில் எனக்கு நிம்மதி இல்லை. பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. அப்போது உன் நினைவு வந்தது. உடனே கிளம்பி இங்கு வந்துவிட்டேன். பிறகு தான் கொஞ்சம் ஆறுதல் கிடைத்தது. குடும்பத்தை மறக்க இயக்க வேலைகளில் என்னை நானே ஒப்படைத்து விட்டேன். இலட்சியம் எனக்கு போதைப் பொருளாகக் கூட பயன்பட்டது. ஆனால் நேற்று அவள் கடிதம் வந்தது முதல்..."

அவன் பேசுவதை நிறுத்தி விட்டு வானத்தை அண்ணாந்து பார்த்தான். வானம் காலியாக இருந்தது. இருளில் அவன் முகத்தின் உணர்ச்சி பாவங்களை என்னால் கவனிக்க முடியவில்லை. அவன் தன் பையிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் கொடுத்தான். அதை விரித்துப் பார்த்தேன். போகிய வெளிச்சமில்லாததால் எழுத்துக்கள் சரியாக தெரியவில்லை. உடனே அவன் தீப்பெட்டியை எடுத்து ஒவ்வொரு குச்சியாக கிழித்து வெளிச்சம் காட்டினான். அந்த மங்கிய ஒளியில் கடிதத்தைப் படித்தேன். முதல் வரியிலேயே அவள் தன் ஆத்திரத்தைக் கொட்டி இருந்தாள்...

"...நான் என் தாய் வீட்டிலிருக்கும்போது எவ்வளவோ கஷ்டப்பட்டேன். அப்போதெல்லாம் கல்லில் வடித்த கடவுளுக்கு கல்லாலேயே இதயமும் அமைந்து விட்டதோ என்று நினைத்துக் கொள்வேன். ஆனால் உங்கள் இதயந்தான் கல்லாகி விட்டதுபோல இப்போது தோன்றுகிறது.

"குழந்தை பிறந்ததுபற்றி கடிதம் எழுதினேன். வருவீர்கள் என்று நினைத்தேன். வரவில்லை! எனக்காகவும் குழந்தைக்காகவும் வரவேண்டாம். உங்களைப் பெற்றவர்களே, அவர்களுக்காகவாவது வரக்கூடாதா? உங்கள் தாய் இருமி இருமி மெலிந்து கொண்டிருக்கிறார்கள். தந்தையோ கடன் தொல்லை தாங்காமல் வீட்டினுள்ளே அடங்கிக் கிடக்கிறார்கள். ஒரு வேளை பட்டினி இப்போது எனக்கு பழக்கமாகி விட்டது.

"இதெல்லாம் உங்களிடம் சொல்லி என்ன பயன்? உங்களுக்கு வேறு எத்தனையோ முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. நாடு நாடு என்று சதா நேரமும் அலைகிறீர்கள். நாங்களும் அந்த நாட்டில் தான் இருக்கிறோம். அது உங்களுக்கு தென்படவில்லையா? உங்களை மணந்த போது, இனி என் வாழ்வில் சுகம் கிடைக்கும் என்று நினைத்தேன். ஆனால் அந்த சுகம் போய் விட்டது..."



அதற்கு மேல் என்னால் படிக்க முடியவில்லை. குமாரின் முகத்தைப் பார்த்தேன். அவன் கண்களில் நீர் வழிந்தது. அதற்குள் அவன் கையில் எரிந்து கொண்டிருந்த தீக்குச்சி அணைந்தது. பழையபடி இருள் சூழ்ந்தது. மழைபெய்து விட்டது போல ஒரு அமைதி நிலவியது.

"குழந்தை எப்போது பிறந்தது?" என்று கேட்டேன்.

"தெரியாது. அந்தக் கடிதம் எனக்குக் கிடைக்கவில்லை" என்றான்.

கையில் பட்ட ஒரு சிறு கல்லை எடுத்து ஆற்றில் வீசினேன். தண்ணீரில் அது விழுந்தபோது 'களக்' என்று ஓசை கேட்டது. அதன் எதிரொலி போல குமாரின் தொண்டைக் குழியில் 'களக்' கென்று ஒரு தேய்ந்த சப்தம் கிளப்பியது. அது என்ன நெஞ்சின் விம்மலா?...

"இப்போது நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். ஆமாம். நாளை காலை நான் ஊருக்கு போகப்போகிறேன்" என்றான் திடீரென்று.

என்னால் நம்ப முடிய வில்லை!

"உண்மையாகவா?" என்று கேட்டேன்.

"ஆமாம். நிச்சயமாக! பெற்ற வர்களையும் வாழ்க்கைப் பட்ட வளையும் காலடியில் போட்டு மிதித்துக் கொண்டு இலட்சியம், இலட்சியம் என்று கூவிக்கொண்டிருந்தேன். இனி என்னால் அது முடியாது. பட்டுப்போன அவர்களின் ஆசைகளை மீண்டும் குளிர் விக்க வேண்டும். அவர்களின் கண்ணீர்ப் பெருக்கை நிறுத்த வேண்டும்.....' அவன் குரல் அழுத்தமாக இருந்தது.

நான் எதுவும் பேசமுடியாத குழப்பத்தில் அமர்ந்திருந்தேன்.

சிறிது நேரம் கழித்து "இனி சொல்ல எதுவுமில்லை. நீ வீட்டுக்குப் போ" என்றான்.

"நீ வரவில்லையா?"

"இல்லை. எனக்கு இப்போது தனிமை வேண்டும். இந்த வாழ்க்கைக்கு ஒரு முழுக்கு போட்டாயிற்று. எதிர் கால வாழ்வு பற்றி நிறைய யோசிக்க வேண்டியிருக்கிறது..."

நான் அவனிடம் கடிதத்தை திருப்பிக் கொடுத்தேன். அவன் வாங்கிக்கொள்ள வில்லை.

"நீயே அதை வைத்திரு. அது என்னிடமிருந்தால் கனமான பாறை மார்புக்கூட்டில் இருப்பது போல நெஞ்சு வலிக்கிறது..." என்றான்.

நான் பதில் பேசாமல் அந்த கடிதத்தோடு வீட்டுக்கு வந்தேன். என் மனதில் குமாரைப் பற்றிய சிந்தனைகள் நிறைந்திருந்தன.

இரண்டு நாட்கள் சென்றன. குமார் ஊருக்கு போய்விட்டான் என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் மூன்றும் நாள் அவன் என்னைத் தேடிக் கொண்டு வந்தான்.

"உன்னிடம் ஒரு விஷயம் சொல்லி விட்டுப் போகலாமென்று வந்தேன்" என்றான்.

"என்ன? நீ இன்னும் போகவில்லையா?" என்று படபடப்போடு கேட்டேன்.

இல்லை என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினான்.

"நான் அங்கே போகப் போவதில்லை" என்றான் நிதானமாக.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது!

"பின் எங்கே போகப் போகிறாய்?"

"ஆந்திரா பக்கம் போகிறேன். எப்போது திரும்பி வருவேன் என்று சொல்லமுடியாது"

"என்ன விஷயம்?"

"வழக்கமான வேலைதான்!"

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் நான் அசந்துபோய் சிறிது நேரம் ஊமையாகிவிட்டேன்.

"அன்றிரவு நீ சொன்னதெல்லாம்..."

"....."

அவன் பதில் பேசாமல் தலை குனிந்தான்.

"உன்னை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை" என்றேன். அவன் புரிந்த மாதிரியும் இருந்தான். புரியாத மாதிரியும் இருந்தான்!

"என்னால் ஒரே நேரத்தில் இரண்டு பாதைகளில் நடந்து போக முடியாது, புரட்சி வாதிக்கு குடும்பப் பாசம் கூடாது."

"குடும்பம் இலட்சியத்துக்கு விரோதியல்ல..."

"இருக்கலாம். ஆனால் என் வாழ்க்கையில் இலட்சியமும் குடும்பமும் இணைந்து போக முடியாது."

"ஏன்?"

"ஏனோ தெரியாது. ஆனால் அது மட்டும் நிச்சயம். அது மாற்ற முடியாத நிலைக்கு வந்தாகிவிட்டது. வேறு வழியில்லை. ஏதாவது ஒன்றை தியாகம் செய்ய வேண்டியதுதான்..."

"தியாகம் என்றால் இதுவா அர்த்தம்?"

"அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. என் நெஞ்சிலுள்ள நெருப்பை அவர்களின் கண்ணீர் அணைத்து விடாது. என்னையே நான் அந்த நெருப்பில் வேகவைத்த பிறகுதான் அது அணையும். அது வரை..."

தொடர்ந்து அவன் பேசினான்-

"அவர்களைப் பற்றி பேச்சை எடுக்காதே. ஒரு வேளை என் மனம் மீண்டும் அன்றிரவைப் போலத் துவண்டாலும் துவண்டு விடும். அதை நான் விரும்பவில்லை. இதெல்லாம் சத்திய சோதனை. உனக்கு நேரமிருந்தால் ஒரு முறை ஊருக்குப்போய் அவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுவா, அவ்வளவுதான்..."

பதிலேக்கூட எதிர்பாராமல் அவன் போய்விட்டான். எனக்கு தலை சுழல்வது போலிருந்தது.

அவன் கொள்கைகள் சரியோ தவறோ, அவன் வழி முறைகள் நல்லவையோ கெட்டவையோ,



அது வேறு விஷயம். ஆனால் அவனுக்கு ஒரு இலட்சியம் இருக்கிறது. அதற்காக தியாகம் செய்யும் வலிமையும் இருக்கிறது.

'வாழ்க்கை என்பது வேள்வி' என்று எங்கோ படித்த சொற்கள் என் நினைவுக்கு வந்தன. அது உண்மைதான். குமாரின் வாழ்க்கை வேள்வியாகத் தான் இருக்கிறது. அதனால்தான் அவன் நெஞ்சில் அணையா நெருப்பு கொழுந்து விடுகிறது. ஏனெனில் நெருப்பின்றி வேள்வி நடத்த முடியாது. தனது மனைவியின் சுகத்தையும், பெற்றோரின் நம்பிக்கைகளையும் அவன் தனது வாழ்க்கை வேள்வியில் தாரை வார்க்கத் தயங்கவில்லை.

அன்றிரவு, அவன் மனைவியின் கடிதம், அவன் நெஞ்சிலிருந்த நெருப்பை அனைத்துவிட்டதாக நினைத்தேன். ஆனால் அணையவில்லை. அப்போது நீறு பூத்த நெருப்பாகத்தான் இருந்தது. வெறும் சாம்பல்தான் மூடியிருந்தது. இப்போது இலட்சிய வெறி அந்த சாம்பலை ஊதி எறிந்துவிட்டது. பழையபடி தீப்பொறி கிளம்புகிறது.

ஆனால் என்னைப்போன்றவர்களின் வாழ்க்கை வேள்வித்தீயாக இருப்பதில்லை. அது மயானமாகத்தான் காட்சியளிக்கிறது. நானும் ஒரு காலத்தில் இலட்சிய வாதியாக இருந்தேன். இப்பொழுது அதன் அடையாளமாக உள்ளத்தில் சாம்பல் மேடு குவிந்து கிடக்கிறது. அந்த சாம்பல் மேட்டில் எத்தனையோ ஆசைக் கள்ளிகள் மண்டிக்கிடக்கின்றன. சம்பாதிக்க வேண்டும், மனைவியை தங்க நகைகளாலும் பட்டுப் புடவைகளாலும் அலங்கரிக்க வேண்டும், குழந்தைகளைப் பெற்று படிக்க வைக்க வேண்டும், அவர்கள் பெரியவர்களாகி கை நிறைய சம்பாதிப்பதைக் கண்டு கண்குளிர வேண்டும், கடைசியில் ஒரு நாள் பாடையிலே போகவேண்டும்...

சே! எனக்கு என் மீதே வெறுப்பேற்பட்டது! ஆண்டாண்டு காலமாக நடந்து நடந்து தேய்ந்துபோன அதே பாதையில் செக்கு மாடுபோல நடந்து போகிறேன். நான் குடி கொண்டுள்ள சமூகத்தில் இருக்கும் நரகங்களைப் பற்றி கவலைப்படாமல், வடித் தெடுத்த சுயநலத்தை வழித் துணையாகக் கொண்டு, சொர்க்கத்தை நோக்கி யாத்திரை போகிறேன். என் வாழ்வில் கேட்பது இசையல்ல; வெறும் யந்திர சத்தம்! உள்ளத்தை மலரவிடாமல் மங்கடித்து விடும் யந்திர சத்தம்! ஆனால் குமாரின் வாழ்வில் கேட்பது 'கோரஸ்' பாட்டு! கொடுமைகளைப் பொசுக்கும் வேள்வித் தீயை வளர்க்க பாடப்படும் புரட்சிப் பாட்டு!...

இத்தகைய நினைவுகளால் அன்றிரவு முழுதும் எனக்கு தூக்கமே வரவில்லை. ஆனால் என் மனைவி தனது பட்டுபோன்ற வழவழப்பான மெல்லிய கரங்களால் என் கழுத்தை அணைத்தபடி நிம்மதியாகத் தூங்கினாள். என் நெஞ்சில் இலட்சிய நெருப்பு கிளம்பாதிருக்க அவள் தனது உடல் நெருப்பை உபயோகிப்பதுபோல எனக்குத் தோன்றியது! ★



அன்பின் ரகசியம்

சந்தனத்தேவன்

மூன்றுவது பரிசுக் கதை

மணமான புதிது; புதுமோகம் என்பார்களே, அதில் திளைத்திருந்த வேளையில் என்னைத் திடுக்கிடவைத்தது - அந்த உத்திரவு! "காமனூருக்கு 'புக்கிங் கிளார்'க்காகப் போகவேண்டிய சுந்திரம் உடல் நிலை குணமில்லாது நீண்டகால லீவில் இருப்பதால், அவருக்குப் பதிலாக உடனடியாகப் புறப்பட்டுச் செல்லவும்-சுந்திரம் அங்கு வந்து சேரும் வரை உமக்கு அங்குதான் வேலை"-இவ்வாறு உத்திரவில் கட்டளை தொனித்தது. வேறு வழியில்லை! எவராலும் பிடிக்கமுடியாதென்று நேற்றுவரை காதுகுளிர கேட்டு வந்த இளமனைவியிடம் பிரியா விடைபெற்றேன்.

ரயில் காமனூரை அடையும் போது கிழக்கு வெளுத்து விட்டது. என்னைமட்டும் அனுதையாக இறக்கிவிட்டு வண்டியும் நகர்ந்தது. இந்தச் சின்னஞ் சிறு ஸ்டேஷனில் கோட்டும் சூட்டுமாக இறங்கிய என்னை வண்டியிலிருந்த பிரயாணிகள் வெறிக்க வெறிக்கப் பார்த்தனர்.

வண்டி எல்லையைத் தாண்டிய பிறகு, என்னை எதிர் நோக்கி வந்தார், காமனூர் ஸ்டேஷன் மாஸ்டர். அவருக்கு வயது நாற்பதை தாண்டியிருக்கும்; நெற்றியிலே பளிச்சிட்ட வெண்ணீற்றுப் பூச்சும், ஜீவி முடித்திருந்த குடுமியும் வைதிகம் விட்டுப்போன "ஹாரப்பா— மொஹஞ்சோதாரோ" வாக காட்சி தந்தன. மரியாதை கருதி வணங்கினேன். அவரும் என்னைப் புரிந்து கொண்டவர் போல "எங்கே, ஈரோட்டிலிருந்துதானே!" என்று அகமும் முகமும் மலரக் கேட்டார்.

"ஆமாம், சார்?"

"ரொம்ப நல்லதாய்ப் போச்சு. ஒருவாரத்திற்கு முன்பே வருவாயென்று எதிர்பார்த்தேன்! எப்படியோ வந்து சேர்ந்தாயே, அதுவே போதும்!"

"ஒரு வாரமா? நேற்று தானே எனக்கு உத்திரவு கிடைத்தது சார்!"

"அப்படியா! இந்த ஊரிலே தான் தந்தித் தொடர்பு கிடையாதே! அதனலே எனக்குமட்டும் மூன் கூட்டியே கடிதமூலமாக தெரியப் படுத்தியிருக்கிறார்களோ என்னமோ! அதனல் என்ன? எல்லாம் மங்களமாக முடிந்தால் சரி!" என்றார்.

கீழே கிடந்த படுக்கையையும் பெட்டியையும் தூக்க முயன்ற போது, இதுவரையில் ஸ்டேஷன் மாஸ்டரும் நானும் பேசிக் கொண்டிருந்ததை உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்த 'பாயின்ட்ஸ்—மென்' ஓடோடியும் வந்து, என்னிடமிருந்த சுமைகளைப் பறித்துக்கொண்டு முன் நடந்தான். இங்கு நடப்பவையனைத்தும் எனக்கு விசித்திரமாகவே இருந்தது. மானிட சமுதாயத்தை விட்டு இன்னும் அன்பும் அருளும், மனிதாபிமானமும் மரியாதையும் ஓடி விடவில்லையென எண்ணிக் கொண்டு "ஸ்டேஷன் அறையில் கொண்டுபோய் வை"—என்று உத்திரவிட்டேன். "எதற்கு ஸ்டேஷன் அறை? வீடு கடல் போலக் கிடக்கிறது; நம் வீட்டு திண்ணைக்கு கொண்டு போ"—நான் பேரட்ட உத்திரவை தள்ளுபடி செய்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

பிரயாணக் களைப்பு தீர, குளித்தால் நலமெனத் தோன்றியது. என் முகக் குறிப்பில் அனைத்தையும் புரிந்து கொண்டவர்போல, "என்ன யோசனை! குளிக்கத் தானே—வீட்டிலே வெந்நீர் காய்கிறது; வாபோகலாம்"—என்றார்.

எனக்கு தூக்கி வாரிப் போட்டது.மற்ற இடங்களில் பற்றுக் குறையாக இருக்கும் அன்புள்ளம் இங்கு மட்டும் மலிந்து கிடப்பானேன்? நான் யாரோ? அவர் யாரோ? உறவோ, பழக்கமோ இல்லாத என்மீது, இவரேன் இப்படி அன்பு மலர்களைத் தூவவேண்டும்? ஒன்றுமே விளங்கவில்லை. என்னமோ,ஏதோவென்று பின் தொடர்ந்தேன்.

வீடும் நெருங்கியது. ஜன்னல் இடுக்கில் யாரோ உன்னிப்பாக கவனிப்பது தெரிந்தது. தலையை தாழ்த்திக்கொண்டு நிலத்தை பார்த்து நடந்தேன்.

"மாமா! எப்ப மாமா வந்தேள்?"—கும்மாளம் போட்டுக் கொண்டு ஓடிவந்த அம்பிப் பயல் என் கைகளைப் பிடித்துக் கொண்டான். பார்த்தவர்கள், பழகியவர்கள்கூட, சமயம் வாய்க்கும் போது பராமுகமாகப் போவதை அனுபவித்திருந்த எனக்கு, மூன்பின் அறியாத பையன் உறவு முறை கொண்டாடியது திகைப்பில் ஆழ்த்தியது.

"இவன்தான் கடைக்குட்டி! படுசுட்டின்னு, டேய் மணி! மாமாவை தொந்திரவு செய்யாதேடா"-ஒரே சமயத்தில் அறிமுகமும் அதட்டலும் செய்தார்.

அலுப்பு தீர குளித்தேன்; இருந்த குளிருக்கு வெந்நீர் வெகு இதமாக இருந்தது.

"ஸ்நானம் ஆச்சோ?"—குளித்துவிட்டு ஸ்டேஷனுக்கு புறப்படத் தயாராயிருந்த என்னை வழிமறித்தார். எவ்வளவோ சொல்லியும் விட்டாரில்லை, காலை உணவு அங்கேதான். "யார் வீடு? என்ன கூச்சம் வேண்டிக் கிடக்கிறது? எத்தனை நாளைக்கு இப்படி முடியும்?"—இந்த விதமாக புரியாத கேள்விகளைப் போட்டு, என்னை அன்புக் கயிற்றால் கட்டி விட்டார். எது எப்படியோ, நெய் யொழுகும் உப்புமாவும், சுகந்த மணம் கமழும் காப்பியும்

எனக்கு உண்ணக் கொடுத்து வைத்திருந்தது!

ஸ்டேஷனுக்கு வந்ததும் வராத துமே மெள்ள பேச்சைத் துவக்கினர்.

"போன யுத்தம்நடந்த சமயம்; குளித்தலையில் இருந்தேன். ஏதோ பகவத் புண்ணியத்தால் தினமும் இரண்டு மூன்று 'வாகன்' வெற்றிலை பாம்பேக்குப் போகும்; விறகும் வெண்ணெய்யும் இடையிடையே வரும்; மாதம் நூறு ரூபாய்க்கு அட்டியில்லை. காலட்சேபம் ஒருமாதிரியா ஓடியது. என் வீட்டுக்காரியோ கொஞ்சம் கெட்டி; 'தாம்—தீம்'னு போகிற பழக்கமில்லை; வரவு செலவு கொடுக்கல் வாங்கல் எல்லாமே அவள்தான். அதனாலே ஏதோ மிச்சம் பிடிக்க முடிந்தது. ஊரை விட்டு மாற்றியபோது, இருப்பிலே இரண்டாயிரம் இருந்தது. குளித்தலை பக்கம் நஞ்சைக் காட்டை வாங்கியிருந்தோம். மங்களத்திற்கு நாலு பவுனில் சங்கிலி—இதுதான் ரயிலுக்கு வந்து சம்பாதித்தது. பூர்வீகச் சொத்தோ யாரும் பொறுமைப்படும் அளவிற்கு இல்லை; ஏதோ கொஞ்சம் விட்டுப் போயிருந்தார்கள். நான் படித்தேன்; தங்கைகளைக் கட்டிக் கொடுத்தேன். இதில் அடிப்பட்டுப் போனது அந்தச் சொத்தும்.

"ஏதோ பிரமாதமாக எதிர் பார்க்கக் கூடாது. நம்பியதற்கு ஏதும் மோசமிருக்காது" என்று முற்றுப்புள்ளி வைத்தார். குடும்ப அந்தஸ்து, வரவு செலவு பற்றி இவரிடம் யார் கேட்டது? அதுவும் என்னிடம் இதையெல்லாம் ஏன் சொல்ல வேண்டும்? சரி சரி, மனிதனுக்கு புதுமாதிரியான வியாதி போலிருக்கிறது; சுய விளம்பரப் பிரியர் என்று நினைத்துக் கொண்டு, பேசியதற்கெல்லாம் தலையசைத்தேன். இதற்கிடையில் அம்பிப் பயல் ஓடிவந்து, "மாமா, அக்கா ஏதாவது நாவல் இருந்தா வாங்கிட்டு வரச் சொன்னு" என்றான். இந்தப் பண்பாடே எனக்குப் புதிதாக இருந்தது. முகத்தில் நாணம் மேலிட்டு, என்ன செய்வ தென்று தெரியாமல் 'திருதிரு' வென விழித்தேன்.


"டேய் மணி! என்னடா நாவல் வேண்டிக்கிடக்கு; ஏதாவது பக்திப் புத்தகங்களை வாங்கிப் படிப்பாளா?"—பையனை செல்வமாகக் கண்டித்தார்.

"சின்னப் பையன் தானே!" இவ்வாறு நான் சமாளித்தேன். "சின்னப் பையனு? போகப் போகத் தெரியும், பாரும்!" என்றார். போகப் போகவா? மனிதன் அடிக்கடி பேசும் போதெல்லாம் சொல்கிறாரே; இதன் அர்த்தமென்ன? அவருக்கு என்ன தெரிந்ததோ என்னமோ, எனக்கு மட்டும் இந்தத் திடீர் அன்புக்கெல்லாம் ஏதோ விபரீதம் காத்திருப்பதாகத் தெரிந்தது!

"அப்பா, சாப்பாடு தயார்! அம்மா சொல்லச் சொன்னு" என்ற செய்தி, அம்பியின் வாயிலாக வந்தது.

"சரி, வேலை கிடக்கட்டும்; சாப்பிடக் கிளம்பு"—என்னை துரிதப் படுத்தினார்.

"வேண்டாம் சார்! ஹோட்டல்லே சாப்பிட்டுக் கொள்கிறேன். நீங்க....."



"நல்ல வேலையைக் கெடுத்தாய் போ! நாமெல்லாம் அங்கே போவது அழகா? கண்டபையன்கள் நுழைகிற இடம், ஆசாரம் அனுஷ்டானம் என்னவது? சேச்சே, அனுச்சாரம் பிடித்த இடத்திலே சாப்பிடுவதாவது? இங்கே பாரு, நீ வருவதற்கு முன்னாலேயேதான் தீர்மானிச் சுட்டேன். அமர்க்களமா சாப்பாடு செய்து போட முடியல்லேனும் ஏதோ உள்ளதைச் சமைத்துப் போடுவா. கூச்சப் பட்டு பிரயோஜன மில்லை; யார் வீட்டிலே சாப்பிடுறே; இதிலென்ன சங்கோஜம் வேண்டிக் கிடக்கு" இப்படியாக அவர் அன்புள்ளத்தை நிறந்து காட்டினார்.

வாய் பேசாது எழுந்தேன்; என்ன தங்கமான மனிதர்; என்ன குணம்—இப்படியாக வாயாற வாழ்த்தினேன். பகல் சாப்பாடு வடை பாயசத்தோடு ஏக அமர்க்களந்தான்! சுருக்கமாக சொல்லப் போனால், புது மாப்பிள்ளைக்கு இருக்கும் வரவேற்பும் ஆடம்பரமும் இருந்தது.

அன்றைய கணக்குகளை சரி பார்த்து முடித்துவிட்டு, ஆபிசிற்கு அனுப்பவேண்டிய கடிதங்களை ரகவாரியாக பிரித்துக் கொண்டிருந்தேன்.

"முன்னால் அனுப்பி பழக்க மிருக்கோ?"—என்னை அணுகி வந்தார் ஸ்டேஷன் மாஸ்டர் மணி ஐயர்.

"ஓ! இருக்கே!" என்றேன்.

"கையெழுத்து முத்து முத்தா இருக்கே; மங்களம் எழுத்தும் இதே மாதிரிதான்"—மேஜையிலிருந்த 'மெமோ'வை எடுத்துப் பார்த்தார்.

"என்னது! உமக்கு இரண்டு பெயரா?"—கண்கள் ஆச்சரியத்தை உமிழ்ந்து தத்தளிந்தன.

"இல்லையே சார்! எனக்கு ஒரே பெயர் தானே!"

"உன் பெயர் சுந்திரமில்லையா? சுகவனம்னு போட்டிருக்கே!"

"என் பெயர் சுகவனந்தான், சார்! சுந்திரம், இங்கே 'பர்மெனண்டா' வரவேண்டியவர். உடம்புகுணமில்லாது இருக்கிறார். அவருக்காக, தற்காலிகமாக என்னை அனுப்பியிருக்கிறார்கள்"

"அப்படியா? எனக்கு ஆபிஸிலிருந்து கடிதமெதுவும் இல்லையே!" என்னிடமிருந்த உத்திரவை எடுத்துக்காட்டினேன்.

"அதனாலென்ன! 'கவர்' தவறிப் போயிருக்கலாம். அதுசரி, உன் கோத்திரமென்ன?"

"கோத்திரமா? போங்க சார்!" புதுப் பெண்ணைப்போல் நாணிக் கொண்டேன்.

"என்னப்பா, நவநாகரீகப் பிள்ளையா இருக்கே; இந்தக் காலத்திலே ஜாதியைச் சொல்லாம மறைப்பதே 'பாஷ்'னுயிடுச்சு; சும்மா சொல்லு"

"நான் உங்களவா இல்லே சார்!" தீர்மானமாகச் சொல்லி முடித்தேன்.

"அப்படியா?" மனிதன் இடிந்து போனார். தலையில் வைத்த கையை எடுக்கவேயில்லை.

"நம்ப முடியலையே! எங்க பையன்னு நினைச்சேன். சென்னை முதலியாரோ?"—'எங்க' கொஞ்சம் இறங்கி வந்தது.

"இல்லை!" என்றேன்.

"திருநெல்வேலி சைவமோ!"—அடுத்தபடி!

"இல்லை!" என்றேன்.

"நாட்டுக் கோட்டை செட்டியாரோ!'—கேட்டார்.

"இல்லை சார்!" அலுப்பாக இருந்தது எனக்கு.

"என்னப்பா இது! என்ன ஜாதீன்னு தான் சொல்லேன் தவியாகத் தவித்தார்.

"எந்த ஜாதியா யிருந்தா என்ன சார்! நான் வேலை செய்ய வந்திருக்கிறேன்" இதைச் சொன்னதும் அவர் முகத்தில் ஈயாடவில்லை. முகம் கறுத்து சிறுத்தது. அன்பிருந்த இடமா அது!

கொஞ்ச நேரத்தில் வெகு தடபுடலாக அவரது திண்ணையில் குடியேறியிருந்த பெட்டியும் படுக்கையும் என்னைத் தேடி வந்தன. அன்று இரவு 'சாப்பிட்டாயா?' என்று கேட்க நாதியில்லை. அன்றுதான் அவர் கடைசியாகப் பேசியது. ஊரை விட்டுப் புறப்படும் வரை, என்னோடு பேசவேயில்லை. இந்தத் திடீர் மாறுதலுக்கு காரணம் புரியாமல் தவித்தேன் நான்.

இப்படியாக ஒரு மாதம் போனது; வரவேண்டிய சுந்திரமும் கடைசியாக வந்து சேர்ந்தான். எனக்கு நடந்தமாதிரியே, வந்ததும் வரவேற்பும் விருந்தும் ஏக அமர்க்களப்பட்டது. புறப்படும் சமயத்தில் சுந்திரத்திடம் நடந்தவையனைத்தும்கூறினேன். அவனே விழுந்து விழுந்து சிரித்தான்.

"அடப்பாவி! இரண்டு வேளைச் சாப்பாட்டையும் சாப்பிட்டது மல்லாது அவர் கட்டியிருந்த கோட்டையையும் இடித்து தகர்த்து விட்டாயே!" என்றான்.

"என்னது, என்மீது பழியைப் போடுகிறாயா!" என்றேன்.

"அடப்பாவி! இந்த ஊருக்கு நான் வரப்போவது தெரிந்ததுமே, என் குலம், கோத்திரம், பூர்வீகம் இவற்றையெல்லாம் ஆள் மூலமாக விசாரித்திருக்கிறார். அதன் பிறகு என் ஜாதகத்தைக் கேட்டு எனக்கே கடிதம் எழுதினார். நானும் நேரில் வரும்போது பேசிக் கொள்ளலாமென்று எழுதியிருந்தேன். தற்செயலாக, எனக்குப் பதிலாக நீ வரவே, நீதான் நானென்று எண்ணிக் கொண்டு, இவ்வளவு மாப்பிள்ளை உபச்சாரமும் நடந்திருக்கிறது" என்றான்.

பேசிக் கொண்டிருக்கும் போதே, காலையில் அவர் வீட்டுக்குப் போன பெட்டியும் படுக்கையும், சுந்திரத்தைத் தேடி வந்தன.

"என்ன சுந்திரம்! உனக்கும் இந்தக் கதிதானா?" என்றேன்.

"ஆமாம்!"—தலையை ஆட்டினான் சுந்திரம்!

"சார்! உங்க மகளை மணம் செய்து கொள்ள எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. தாராளமாக இந்த வீட்டிலேயே செய்து கொள்ளத் தயார். ஆனால், ஒரேயொரு நிபந்தனை! அதாவது, எனக்கு இருபத்தெட்டு, இருபத்தாறு வயதில் கலியாணமாகாத இரு சகோதரிகள் உண்டு. அவர்களுக்கு தக்க வரனைத் தாங்கள் தேடித் தந்தால், நாளைக்கே நான் தயார்" என்றானும் சுந்திரம்!

பெட்டியும் படுக்கையும் ஏன் திரும்பி வராது? ★



கூறப்பு ரோஜா!

"பாசம் மிகுந்தவளே!

வாசப் புது மலர் போல மணம் வீசிக்கொண்டு வாழ்கிறாள் என்நேசத்தை கொள்ளை கொண்டவள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறாயே, அந்த மாலாதான் இதை எழுதுகிறாள், தன் கண்ணீரால்! சுகத்தை இழந்து—சோகத்தின் இருப்பிடமாய் வாழ்கிறேன் என்பதை நீ நம்பமாட்டாய். மனம் நிறைந்த மணாளனோடு காதல் கானம் பாடி—வாழ்க்கை வானில் வட்டமிட்டுக்கொண்டிருப்பேன் - நித்தம் நித்தம் முத்த மழை பொழிவார்—சத்தம் இல்லாமல் நான் திருப்பித் தருவேன்-என கனவு கண்டு கொண்டிருக்கிறாயே, அவள்தான் இன்று முத்து முத்தாக கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள். நீ நம்பமாட்டாயடி, என் சோகக் கதையை கேட்டால்! எதிர்பார்த்திருக்க மாட்டாய், உன் தோழி வாழ்க்கையில் தோல்வி யுற்றதை! நான் ஏமாற்றப்பட்டதை—வஞ்சிக்கப்பட்டதை - நீயும் கேள்! வேறு யாரிடத்தில் என் சோகக் கதையை கூறப் போகிறேன். உன்னிடத்திலே சொல்வதாலே என் சோகச் சுமை சிறிது குறையுமல்லவா? கலா! என் இதயம் கவர்ந்தவளே! கேள்; தூள் தூளாகி விட்ட என் துயரக் கதையை!

'மாலா, மாலா'வென்று அகமும் முகமும் மலர அழைப்பாயே, அவளுக்கு இன்று என்ன பெயர் தெரியுமா? வாழா வெட்டி! வாழாவெட்டியாம் நான். இந்தப் பொல்லாத உலகம் சூட்டிய சொகுசான பெயர். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள எனக்கு 'பேசும் பிணங்கள்' கொடுத்த செல்லப் பெயர்! கண் நிறைந்த கணவனோடு பண்பாடும் குயில்போல் குடும்பத்தை நடத்த வேண்டும் என்று விண்ணேக்கி வளர்ந்திருந்த என் ஆசையெல்லாம் நிராசையாகி விட்டது! தோகை மயில்போல் வகை வகையாக களி நடனம் புரிவோம்-இன்பபுரி போவோம்-என்றெல்லாம் எண்ணி எண்ணி கற்பனை உலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்த நான் இன்று சஞ்சலத்தின் வடிவமாகிவிட்டேன். சந்தோஷம் எனக்கு அந்தியாகிவிட்டது. என் வாழ்வெல்லாம் இருள்தானு? விடிவெள்ளி தோன்றுமா?

கண் நிறைந்தவனைத்தான் நான் கணவனாக கைப்பிடித்தேன். மனம் நிறைந்த மணவாளன் தான்—என் மனக் கோயிலிலிருக்கும் அத்தெய்வம்தான்—என்னைக் காலால் உதைத்து, சீரழித்துவிட்டது என் சிங்கார வாழ்வை.

அலை அலையாக சுருண்டுள்ள அவர் கேசத்தைக் காணும்தோறும் ஆசை அலை மோதும். அவரின் புன்னகை ஒன்று போதுமடி இவ் வையகத்தில் வாழ்வதற்கு! கன்னல் மொழியில் அவர் கவிதை படிக்கும்போது உடலெல்லாம் புல்லரிக்கும். நீதான் என் திருமணத்திற்கு வரவில்லையே! 'மணமக்கள் வாழ்க' என தந்தி மூலமாய் வாழ்த்திவிட்டாயே! நீ அவரைப் பார்த்திருந்தால் 'மாலா, நீ அதிர்ஷ்டசாலியடி' என்று என்னைக் கேலி செய்து என் உயிரை வாங்கியிருப்பாய். அத்தகைய அழகின் வடிவம் அவர். ஆனால் அகத்தில்தான் அழகு இல்லை; அன்பு இல்லை; ஒரு பெண்ணின் உள்ளத்தை புரிந்து கொள்ளும் பண்பு இல்லை!

முதல் இரவு! ஒரு பருவ மங்கையின் வாழ்வில் வீசும் வசந்தம். உனக்குத்தான் தெரியுமேடி! முதல் இரவின் இரகசியம் எல்லாம் நீ அறிந்ததுதானே! அந்த முதல் இரவன்று இன்பத்தை எதிர் பார்த்திருந்த எனக்குக்கிடைத்தது துன்பம்தான்! நான் அறையிலே நுழைந்தபோது அவர் ஏதோ எழுதிக்கொண்



டிருந்தார். அதோடு நான் வந்ததை அவர் அறிந்ததாகவே தெரியவில்லை. என் கண்கள் அவர் மேல் பதிந்திருந்தன. ஆனால் அவரின் விழிகள் என் பக்கம் திரும்பவே இல்லை. வெட்கம் வேறு என்னை பேசா மடந்தையாக்கிவிட்டது. நான் நின்று நின்று, என் கால்களெல்லாம் வலி எடுக்க ஆரம்பித்தது. ஆனால் அள்ளி அணைத்துக்கொள்ள வேண்டிய அவர்—என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. என்ன தான் எழுதிக்கொண்டிருக்கிறார் என்று பார்க்க அவரின் முதுகுப்புறம் போனேன். ஆசை என்னை உந்தித் தள்ள என் கனவுக் கண்கள் அவரின் எழுத்துக் கோர்வையில் பாய்ந்தன. அவர் டைரி எழுதிக்கொண்டிருந்தார். "இன்று எனக்குத் தேன் நிலவு! நினைக்கும் போதே இன்பம் துள்ளும் இரவு! ஆனால் துன்பமும், துயரமும்தான் என் மனதில் நிறைந்திருக்கிறது. வானிலே வெண்ணிலா! ஆனால் என் வாழ்க்கை வானிலோ கறுப்பு நிலா! வையகத்திற்கெல்லாம் நிலவு ஒளி தந்துகொண்டிருக்கிறது. என் வாழ்வு நிலவோ இருளைப் பாய்ச்சுகிறது. வையகத்துக்கு வெள்ளை இரவு! என் வாழ்வுக்கு கறுப்பு இரவு! அந்தி வானத்து சிகப்பைப் போன்ற ரோஜாவை அடைய விரும்பினேன். ஆனால் எனக்குக் கிடைத்ததோ கறுப்பு ரோஜா! வானவில்லின் வர்ணஜாலங்கள் நிரம்பிய எழிலரசிகள் ஏராளம் உண்டு இந்த நீண்ட வையகத்தில். ஆனால் எனக்கு வாய்த்தது கருமேத்தின் உருவம். இந்நிலையில் எப்படி சுவைக்க முடியும் முதல் இரவின் இன்பத்தை? என் இதயத்தை தொட்ட நிலவு எட்டாத உயரத்திலே இருக்கிறது. பட்டுபோன்ற மேனி—மின் வெட்டு கண்கள்—பார்த்த நேரத்திலே பரவசப்படுத்தும் கட்டுடல்-இன்பம் ஊரும் இதழ்கள்—கன்னித் தமிழ் சுவையை அளிக்கும் கன்னங்கள்—அத்தனையும் நிரம்பிய பத்தரைமாற்று தங்கம் எங்கே? நிலக்கரி நிறம் கொண்ட இவள் எங்கே? அவளோ சிகப்பு ரோஜா! இவளோ கறுப்பு ரோஜா! என் வாழ்க்கையே பாழாகி விட்டது! காலமெல்லாம் இவளுடன் - அவலட்சணத்தின் ஏகப் பிரதிநிதியுடன் கழிக்க வேண்டுமாம்...! என் மனதிலே இவளுக்கு இடம் இல்லை—என் இல்லத்து ராணியாகும் தகுதி இவளுக்கு இல்லை—ஏன், என் வீட்டு வேலைக்காரியாகக்கூட இருக்கலாயக்கில்லை....."

இதைப் படிக்கப் படிக்க என் இதயம் துடித்தது. அங்கமெல்லாம் பதறியது. துக்கம் என் தொண்டையை அடைத்தது. விழிகள் குளமாயின. இரண்டு சொட்டுக் கண்ணீர் அவர் எழுதிக் கொண்டிருந்த டைரிமீது விழுந்தன! அவர் திரும்பிப் பார்த்தார். நான் முகத்தை மூடிக்கொண்டு கோவெனக் கதறினேன். தேனருவியில் அமுதம் பருகலாமென எண்ணியிருந்த எனக்கு தணலைத் தழுவும் நிலை ஏற்பட்டு விட்டது.

"சனியனே! ஏன் அழுகிறாய்?" என்றார்.

மாலா! கலாப மயிலே! கோல நிலவே! வா; கனிரசம் பருகுவோம்! இன்பக் காவியம் தீட்டுவோம்! கன்னங்களிலே ஓவியம் வரைவோம்! கனிமொழியாளே! கனி இதழ் தந்திடு! பனிப் பார்வையை வீசிடு!—என் றெல்லாம் அழைக்கவேண்டியவர் 'சனியனே!' என்று அழைத்தால் என் மனம் எந்நிலையில் இருக்கும்? சுக்கல் சுக்கலாக உடைந்தது என் உள்ளம்—வெள்ளம் பெருக்கெடுத்தது என் விழிகளில். அவரின் பொற்பாதங்களில் என் தலையை புதைத்துக் கொண்டு 'என்னை ஏன் இப்படி அழைக்கின்றீர்கள்?' என்று விக்கிக் கொண்டே கேட்டேன். "உன்னை வேறு எப்படி அழைப்பது—கருநாகம் போன்ற உன்னை பூங்கொடி என்று அழைக்க முடியுமா? அடுப்புக்கரி போன்ற உன்னை கோமேதகமே என்று கூப்பிட முடியும்?" என்று கூறி கால்களை இழுத்துக் கொண்டார்.

"கறுப்பாகப் பிறந்தது என் குற்றமா?" என்றேன், ஆத்திரத்தை எல்லாம் என் நெஞ்சிலே தேக்கி!

"இல்லை! ஆனால் என் கை பிடித்ததுதான் குற்றம்."

"நீங்கள் விரும்பித்தானே என்னை உங்கள் மனைவியாக வரித்துக் கொண்டீர்கள்?"

"இல்லை—என் பெற்றோர்கள் விருப்பத்திற்காக - அவர்கள் மனம் நோகாமலிருக்க! அதற்குப் பழி—உன்னைப் பழி வாங்குவதுதான்"

"அவர்கள் செய்த தவறுக்கு எனக்குத் தண்டனையா?"

"ஆமாம்!"

"உங்களுக்கு இதயமே இல்லையா?"

"இருக்கிறது!"

"அதிலே சிறிது இடம்-எனக்கு பிச்சைக் கொடுங்கள்..."

"அது வேறு ஒருவருக்கு சொந்தம்—அதை நான் தானம் கொடுக்க உரிமை இல்லை!"

"பின் என் கதி?"

"இதே கதிதான்!"

இதைக் கூறிவிட்டு அவர் படுக்கையிலே புதைந்து கொண்டார். நான் கண்ணீரால் அவரின் பாதங்களை நனைத்தேன். அவர் காலால் என் முகத்தில் உதைத்தார். முகத்தில் மட்டுமா? என் உள்ளத்தில் கூடத்தான்!

மறு நாள் ஊருக்குப் போய் விட்டார். வருவார், வந்து என்னை அழைத்துச் செல்வார் என்று எண்ணி யிருந்தேன். ஆனால் அவர் வரவே இல்லை. வருவார், வந்து எனக்கு வாழ்வு அளிப்பார் என்று ஏங்கி ஏங்கி ஏமாந்தேன். என் கண்ணீரும் வற்றி விட்டது. என் உடலும் சருகாகி விட்டது. ஆனால் அவர் வரவே இல்லை. சோகப் பதுமையாகி விட்டேன்; நாட்கள் தேயத் தேய, அவர் வருவார் என்ற நம்பிக்கையும் தேய்ந்து விட்டது. கலியாணம் ஆகியும் நான் கன்னிப் பெண்ணைகதுன்பத்தின் உறைவிடமாக வாழ்கிறேன். இந்த மாநிலத்துக்கு என் நிலை எங்கே புரிகிறது? கை கொட்டி சிரிக்கிறது என்னைக் கண்டு! கணவனோடு வாழவில்லையாம் நான்! வாழாவெட்டியாம்! வையகத்தில் வாழ வேண்டுமென்று ஒவ்வொரு விநாடியும் விரும்புகிறேன். என் உடலின் ஒவ்வொரு அணுவும் விரும்புகிறது. ஆனால் வாழ்வு அளிக்கும் தெய்வம்தான் கருணைகாட்டவில்லை. பராமுகமாய் இருக்கிறார் அந்த பரமாத்மா! அழகு - முகத்தில்லல்ல; அகத்தில்தானிருக்கிறது என்பதை அவர் அறியும் நாள் எந்நாளோ? சிகப்பு ரோஜாவுக்கு மட்டுமல்ல – வண்ணம் இல்லா கருப்பு ரோஜாவுக்கும் மணம் உண்டு என்பதை அவர் உணர்வாரா?


உன்

மாலா.''

மாலாவின் கடிதம் என் நெஞ்சத்தை நெருப்பாக எரித்தது. மாலாவின் மணவாளன் பரந்தாமன் இத்தகைய இரக்க மற்ற இதயம் படைத்தவர் என்று இதுவரை எனக்குத் தெரியவில்லை.

கடந்து போன காலத்தில்— நடந்து போன நிகழ்ச்சிகளை எல்லாம் மறந்து விட்டு, தொட்டுத் தாலி கட்டிய தையலுடன் வாழ்க்கைப் பாதையில் கை கோர்த்து கொண்டிருப்பார் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அவர் உள்ளத்தில்— துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில் ஏற்பட்ட கள்ளமில்லா காதல் இன்னமும் பசுமையாக இருப்பதை அறிய நான் திடுக்கிட்டேன். அந்தக் காதல் தீ இன்னமும் அவரை எரித்துக் கொண்டிருப்பதை அறிய என் இதயம் அழுதது. மாலா என் ஆருயிர் தோழி! இளமைப் பருவத்தில் ஒடி ஆடியவர்கள். நான் பருவத்தின் படிகளிலே காலெடுத்து வைத்தபோது அவளைப் பிரிந்தேன். கடிதங்களிலேதான் நாங்கள் சந்தித்துக் கொண்டிருந்தோமே தவிர நேரில் சந்திக்கும் வாய்ப்பே கிடைக்கவில்லை. கணவனோடு அணு அளவும் சஞ்சலமில்லா வெண் பனி போல் சந்தோஷ சாகரத்தில் நீந்திக் கொண்டிருப்பாள் என்று மகிழ்ந்திருந்த எனக்கு மாலாவின் கடிதம்—கடிதமாவது? இதயத் துடிப்பின் வேதனைக்கீதம்–என் நெஞ்சத்தை நெகிழச் செய்தது பரந்தாமன் மேல் எனக்குக் கோபம் கோபமாக வந்தது.

மாலாவுக்குத் தெரியாது பரந்தாமன் மனதில் குடி கொண்டிருக்கும் கோமளவல்லி நான் என்பது. கல்லூரி வாழ்வில் நான் அவரை சந்தித்தேன். பருவத்தின் பூரிப்பில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தஎனக்



கும், அழகின் உருவமாகிய அவருக்கும் அன்பு அரும்பியது. பின் காலம் செல்லச் செல்ல காதலாக மலர்ந்தது. காவியத்திலும், ஓவியத்திலும், கற்பனையிலும், கனவிலும் நேரத்தைக் கழிக்கும் பருவம் அல்லவா எங்களுக்கு? எங்கள் இதயத்தில் காதல் உதித்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைதான். கற்பனைகளிலும், கனவுகளிலும் ஆனந்த பள்ளுபாடி காலத்தை தள்ளிக் கொண்டிருந்தோம். காலமெல்லாம் இணை பிரியாமல் வாழலாமென்று கோட்டைகள் பல கட்டினோம். காலம் என்ற குருவளியில் எங்கள் கோட்டை தகர்ந்தது. காதலர்களுக்கு ஏற்படுகின்ற வழக்கமான முடிவுதான் எங்களுக்கும் ஏற்பட்டது. கல்லூரியிலிருந்து பிரிந்தோம். நான் கலியாணம் செய்து கொண்டு புக்ககம் புகுந்தேன். நான் மாலை சூட்டிய மணவாளன் தன் அன்புக் கரங்களால் என் இதயத்திலிருந்த உருவத்தை அழித்து விட்டு, என் இதய சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டார். பரந்தாமனும் மணம் புரிந்து கொண்டார் என்றறிந்து மகிழ்ந்திருந்தேன். ஆனால் இன்று மாலாவின் வேதனைக் குரலைக் கேட்க கேட்க, என் நெஞ்சு சென்தணலில் விழுந்தது. பட்டுப்போன அவ்விருவரின வாழ்வும் மீண்டும் துளிக்க வேண்டுமே! மாலாவும், பரந்தாமனும் கை கோர்த்துக் கொண்டு இன்ப புரிக்குப் போகும் காட்சியைக் காண எள் உள்ளம் விரும்பியது! மாலாவுக்கு வாழ்வு அளிக்கும்படி பரந்தாமனை கெஞ்சிக் கேட்டுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு அவரை உடனே புறப்பட்டு வரும்படி தந்தி அடித்தேன்.

மறுநாள் காலை அவர் வந்தார். மகிழ்ச்சி அவர் வதனத்தில் வட்டமிட, கண்கள் ஆசை கனை வெளியிட; அவர் 'கலா!' என்றார்.

''வாருங்கள்'' என் றேன் நான்.

'என்னே என்று மில்லாமல், இன்று அவசர மாய் வர வழைத்த காரணம்...? விருந்து ஏதாவது ஏற்பாடு செய்திருக் கிறாயா?''

''ஆமாம்!''

''வயிற்றுக்கா? உள்ளத் திற்கா?!?

''வயிற்றுக்கு விருந்தும், உள் ளத்துக்கு மருந்தும் தடவப் போகிறேன்.''

''கலா!'' என்று அவர் இழுப்பதற்கும், 'கலா' என்று என் அன்புக் கணவர் அழைப்ப தற்கும் சரியாக இருந்தது.

நான் என் நாதனிருப்பிடம் சென்றேன். பரந்தாமனும் என்னைத் தொடர்ந்தார். என் கணவரைக் கண்டதும் பரந் தாமன் திடுக்கிட்டார். ஆச்ச ரியமும் வெறுப்பும் அவரின் வதனத்தை முற்றுகை இட் டன. அவரின் கண்களிலே கேள்விக் குறி! நான் அவரை என் கணவருக்கு அறிமுகப் படுத்தினேன்.

நடுப் பகல் உணவுக்குப் பின் மீண்டும் எங்கள் உரையாடல் ஆரம்பமாயிற்று.

''கலா, உன் கணவர்...?''

''ஆமாம்; விபத்தில் இரண்டு கால்களையும் இழந்தவர்.''

''கலா, உன் கதி இப்படியா ஆக வேண்டும்?''

''ஏன்? கால் இழந்தவர் என்றாலும் அவரின் இதயம் வைரக் குன்று...''

''நீ அவரை மணந்து கொண் டதற்கு வருந்துவதில்லையா!'

''வருத்தமே? ஏன்? கணவ னுக்கு பணி செய்வதுதானே பெண்ணின் அணிகலன்!''

''உன் முகத்திலுள்ள சுருக் கங்கள்—கவலையின் ரேகைகள் அல்லவா?''

''இல்லை! காலத்தின் கோடு கள்?''

''உனக்கு கவலையே இல் லையா?''

''என் கணவர் மனம் நோகா மல் நான் அவருக்கு பணி புரிய வேண்டும் என்ற ஒரே கவலை தான் எனக்கு!''

''கலா! நம் காதல் ஈடேறி யிருந்தால்...?''

''இளமைப் பருவத்து காதல் கனவு போல! சிலருக்குத்தான் பலிக்கும்! பலருக்கு தோல்வி தான்!''

''கலா! அழகு கொழிக்கும் மலர் சோலையில், கூவும் குயிலும்—ஆடும் மயிலும் நிரம் பிய நந்தவனத்தில், நாம் ஆடிய தையும், பாடியதையும் மறந்து விட்டாயா?''

''காலமும், கடமையும் அதை மறக்கும்படிச் செய்து விட்டன...''

''கலா, அழித்தெழுதா சித் திரம் போல் பதிந்து விட்ட உன் அழகுத் திருமேனி என் இதயத் திலிருந்து இன்னமும் நீங்க வில்லை...!''

''பிரயாணத்தில் சந்திக்கின்ற வர்களைப் போல் நாம் சந்தித் தோம். பின் பிரிந்தோம். நீங் கள் ஒரு பாதையிலும், நான் வேறு பாதையிலும் வாழ்க் கையை துவங்கி விட்டோம். நடந்தவைகளை மறந்து இனி நடக்க வேண்டியவைகளைப் பற்றி சிந்திப்பதுதானே நம் கடமை! நிகழ்ந்த நிகழ்ச்சி கள் எல்லாம் உதிர்ந்த சருகு கள்! அதை நினைத்து நினைத்து கண்ணீர் வடிப்பதில் பலன் என்ன? அழுது அழுது புரண் டாலும் மாண்ட நாட்கள் திரும் பியா வரப் போகிறது?''

''உன் இருதயம் இரும்பா...?''

''ஆமாம்; கடமை என்ற இரும்புக் கவசத்தால் என் இத யத்தை போர்த்தி யிருக்கின் றேன்''

''கடமை! எது கடமை?... முடவருக்கு மாலையிட்டதா?''

''அவர் முடவராக இருக்க லாம்...ஆனால் அவரின் இதயம் இன்பத்தின் சுரங்கம்—அன்பின் பிறப்பிடம்.''

''நீயோ அழகு தெய்வம்! அவரோ அங்கத்தை இழந் தவர்!''

''அழகு முகத்திலல்ல! அகத்தில் இருக்க வேண்டும்!''

''கலா...!''

''உடலழகு காலையில் அரும் பாகி, பகலெல்லாம் போதாகி, மாலையில் மணம் வீசி மடிந்து விடும் மலரைப் போல! ஆனால் உள்ளத்தின் அழகு கருகிய மலரானாலும் வீசிக் கொண்டே இருக்கும் மணம் போல! மேனியழகு வர்ண ஜாலம் காட்டி மறைந்து விடும் வான வில்! ஆனால் அகத்தின் அழகு என்றும் ஒளி வீசும் ஆதவன்!''

''கலா!...''

''உங்கள் கலாப மயில் மாலா கறுப்புதான்; ஆனால் அவள் வெள்ளை உள்ளம் படைத்த வள். அவன் கறுப்பு ரோஜா தான்; ஆனால் மணத்தில் மனோ ரஞ்சிதம்!''

''கலா! என் சகோதரி! என் கண்களைத் திறந்து விட்டாய். காரிருளிலே நடந்து கொண் டிருந்த என்னை வெளிச்சத்திற்கு அழைத்து வந்து விட்டாய். எலும்புகளையும், தசைகளையும் மறைக்கும் சதையின் வண்ணத் திலே என் இதயத்தை பறி கொடுத்திருந்த எனக்கு, அழகு உள்ளத்திலே உதிக்கும் ஊற்று என்று உணர்த்தி விட்டாய். உனக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்!''

''அழுது அழுது முகமெல் லாம் வீங்க, புழுப் போல புழுதியிலே புரளும் மாலாவுக்கு வாழ்வு அளியுங்கள்—அதுதான் நீங்கள் எனக்கு செய்யும் கை மாறு—உதவி—எல்லாம்!''

''இன்னமும் சந்தேகமா? அந்த கறுப்பு ரோஜாதான் இனி என் இருதய ரோஜா!'' என்று கூறிக் கொண்டே அவர் வெளியே ஓடினார். மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டது என் விழிகளில்! அதிலே அந்த கறுப்பு ரோஜா இதழ் விரித்து சிரித்தது!

விரைவில் வருகிறது!


ஜய ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ்

அளிக்கும்

மூன்று பெண்கள்











நடிகர்கள்

T.S. பாலையா, மனோகர், துரைராஜ்
T.N. சிவதானு, அசோகன், பிரண்டு-
ராமசாமி, P.K. சரஸ்வதி, கிரிஜா
M.N. ராஜம், அங்கமுத்து மற்றும் பலர்

கதை-வசனம் – **P.K. ரங்கசாமி**, B.A

பாடல் :– உடுமலை நாராயண கவி
தஞ்சை ராமையாதாஸ், கம்பதாசன்
சிவம். ஸ்வாமி

டைரக்ஷன் :– **பிரகாஷ்** : கேமரா – **வீரபாகு**

விபரங்களுக்கு – ஜயஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ், 19, தாண்டவராயன் தெரு, சென்னை. 14.

உரிமையாளர் : கோல்டன் பிலிம்ஸ், மதராஸ்–17.
மதராஸ், வடஆற்காடு, தென்னற்காடு, செங்கல்பட்டு, திருச்சி, சேலம், கோயமுத்தூர், மைசூர், கேரளா விநியோகஸ்தர்கள் : கோல்டன் பிலிம்ஸ்.
தூர கீழ பிராந்தியம் : பஜாஜ் பிரதர்ஸ், பம்பாய்.

சிறுகதை

கருணை



"திருக்குவளை கிராமத்திற்கே இந்தக் கலியாணம் மிக மிகப் புதிது! பழமையிலே ஊறிப்போனவர்கள் ஏராளம் இங்கே! அறிவுப் பாதையிலே நடைபோட வேண்டுமென்ற ஆசை ஒருபக்கம் இழுத்தாலும் இறந்த காலக் கொள்கைகளை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் அதிகம் நிறைந்த அழகான சிற்றூர்! அடிக்கடி ஒலித்துக் கொண்டிருக்கும் ஆலயத்து மணிவான் முட்டும் கோபுரம்— எதிரே சிங்காரத் திருக்குளம்— கரையிலே தென்னைகளும், திண்ணையுள்ள வீடுகளும்— தென்றலுக்கு ஏற்றவகையில்

தெற்கு நோக்கி அமைந்த 'அக்கிரகாரம்!' —இப்படியெல்லாம் கலை அழகோடு ஆரியக் களையும் நிறைந்திருக்கும் ஊரிலேதான் இந்தப் புதுமையான திருமணத்தை நான் செய்து கொள்ளப்போகிறேன். நண்பா! சென்னையிலேயிருந்து இந்த ஊர் அதிக தூரம்தான்! ஆயினும் நாமிருவரும் மிகவும் நெருங்கியவர்களாயிற்றே! எப்படியும் அலுவலகத்தில் 'லீவு' பெற்றுக்கொண்டு நீ வந்தே தீரவேண்டும்—இது அன்பின் ஆணை!" என்று கடிதத்தை முடித்திருந்தான் ரத்தினம். கோகுலுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நாலைந்து வருடங்களாக எந்தத் திருமண விழாக்களுக்கும் அவன் போனதே கிடையாது.

மகிழ்ச்சி பொங்கிடும் அந்தவிழாக்களிலே, தான் போய் சோகத்தின் உருவமாக உட்கார்ந்திருக்க அவனுக்கு விருப்பமில்லை. திருமண இதழ்களைக் கண்டே, 'திக்பிரமை'



கொண்டவன்போல் உட்கார்ந் திருக்கும் அவனுக்கு- திரும ணத்தையும் நேரில் பார்த்து விட்டால் எப்படியிருக்கும்? அவனுக்கு நடைபெற்ற திரு மணம்—அப்போது முழங்கிய மேள ஒலி! மணமேடையில் இருந்தவாறே மனைவியிடம் காட்டிய குறும்பு! அவள் அதை ரசித்து மகிழ்ந்த மென்மை! தொடர்ந்து துவங்கிய இன்ப புரிப் பயணம்-பின்னர் வந்த அன்புச் சின்னம்!—தேனுக் கும் கற்கண்டுக்கு மிடையே அவன்! திடீரென வாழ்விலே விசிவிட்ட புயல்! நீங்காத நித்திரைக்கு ஆளாகிவிட்ட அவன் துணைவி! அம்மாவை யிழந்த அருமை மகன்! இந்த நிகழ்ச்சிகளும், காட்சிகளும் அவன் மனக் கண் முன்னே படையெடுத்து வரும். அதற் காகவே திருமணங்களுக்குப் போகிற வேலையை நிறுத்திக் கொண்டான். இப்போதோ தட்டமுடியாத அழைப்பு வந்துவிட்டது. ரத்தினமும் அவனும் இணைபிரியாத நண்பர் கள். அவன் மணத்திற்குப் போகவில்லை யென்றால்..... கோகுலுக்கு அதை நினைக்கவும் இயலவில்லை. இரண்டொரு நாட்கள் குழப்பத்திற்குப் பிறகு, ரத்தினத்தின் கலியா ணத்திற்குப் போவது என்று முடிவு செய்தான்.

* * *

ரத்தினத்தின் திருமணம் புதுமை முறையிலே நடை பெற்றது. அந்த வட்டாரத்தி லேயே மிகப் புதிய கல்யாணம் என்று அவன் கோகுலுக்கு எழுதியிருந்தது உண்மைதான்! ஊர் மக்கள் எல்லாம்-அழைப் பில்லாதவர்கள்கூட அந்த அதி சயக் கல்யாணத்தைப் பார்க் கக் கூடி யிருந்தார்கள்.

புரோகிதர்—ஓமகுண்டம்—அம்மி—அரசாணி—எதற்கும் வேலையில்லாமல் வந்திருப் போரின் அன்பை சாட்சியாக வைத்து அறிவுமுறையிலே திரு மணம் நடைபெற்றது. கோகுல், மாப்பிள்ளைக் கோலத் திலே தன் நண்பனைக் கண் டான். அடக்கிவைத்திருந்த துக்கம் அணையுடைத்துக் கிளம்ப முயன்றது. சமாளித் துக் கொண்டான். நண்பனது வாழ்க்கை யொப்பந்த விழா! அதிலே தான் இப்படி நடந்து கொள்வது சரியல்லவென்று அவ னுக்குத் தெரியாமல் இல்லை! தலைவரின் முன்னுரைக்குப் பிறகு அனைவரின் வாழ்த்துரை களோடு, மணமகனும் மண மகளும் மாலை சூட்டிக் கொண் டார்கள். கோகுலின் திருமணம் இப்படி நடக்கவில்லை.

அக்கினி, அருந்ததி சாட்சி யாக நடைபெற்றது. அந்தத் தெய்வீகத் திருமணத்தையும்—தன் மனைவியின் உயிரைப் பிடித் துக் கொள்ளத் திராணியற்ற அந்த தெய்வங்களையும் நினைத்துக் கொண்டான். அவ னுகவே சிரித்துக் கொண் டான். திருமணம் முடிந்து, விருந்து முதலிய நிகழ்ச்சிகளும் நல்ல முறையில் நடந்தேறின. கோகுல், நண்பனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்னைக் குத் திரும்ப ஆயத்தமானான். விடை யளித்து வழி அனுப்பும் போது, ரத்தினம் அவனைப் பார்த்து—"கோகுல்! எத்தனை நாளைக்கு இப்படியே இருந்து விட எண்ணுகிறாய்? சென்றதை மறந்து விட்டு, இன்னொரு திரு மணத்தை ஏற்பாடு செய்! நீ என்ன, இப்போது கிழவனைகவா ஆகிவிட்டாய்!" என்று உப தேசம் செய்ய ஆரம்பித்தான்!

"கிழவனைகவும் ஆகி விட வில்லை. கல்யாணமே இனி வேண்டா மெனும் ஞானியாக வும் மாறிவிடவில்லை. ஆனால்... குழந்தை குமார் இருக்கிறான்... வரப்போகும் புதிய தாயார், அவனுக்கு ஒரு 'கிரகண'மாகி விட்டால் என்னப்பா செய் வது?" என்றபடி கண்ணீர் வடித்தான் கோகுல். நீண்ட நேரம் உரையாடலுக்குப் பிறகு எந்த முடிவுமில்லாமலே இரு வரும் பிரிந்தனர்.

★

திருக்குவளைக்கு அருகே ஆறுமைலுக்கு அப்பால் அம்மனூர் சென்றால் புகை வண்டியில் செல்ல வசதியா யிருக்கும் என்றுகூறி, கோகுலே ஒரு இரட்டை மாட்டு வண்டி யிலேற்றி விட்டிருந்தான் ரத்தி னம். ரயில் வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகவே ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந் தான் கோகுல். வந்த வண்டிக் காரனும் திரும்பிப் போய்விட் டான். அந்தச் சிறிய ரயிலடி யில் பேச்சுத் துணைக்குக்கூட அவனுக்கு ஆள் கிடைக்க வில்லை. அங்கு மிங்கும் உலா விக் கொண்டேயிருந்தான். தனி மையின் தோழனை சிகரெட் டையாவது தேடுவோமென்று பக்கத்திலே விசாரித்தான். "அதோ!" என்று கை காட்டி விட்டுப் போனார்கள் ஊர்க்காரர் கள்.

இருட்டிலே 'மினுக் மினுக்' என்று வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்கும் அந்தச் சிறிய கடையை நோக்கி அவன் போனான். கடை யிருந்தது; ஆனால் வியாபாரம் செய்யும் ஆள் யாரையுங் காணோம். ஒரு சிறிய வீட்டுத் திண்ணை யிலே அந்தக் கடை இருந்த காரணத்தால், கடைக்காரர் உள்ளே யிருப்பார் என்று நினைத்து, "யார் கடையிலே?" என்று கூப்பிட்டுப் பார்த்தான்.

"யாரது...என்ன வேணும்?" என்று கேட்டபடி ஒரு அழ கான யுவதி வெளியேவந்தாள். மங்கலான வெளிச்சத்திலும் அவள் முகத்தை அவனால் பார்க்க முடிந்தது. அப்படிப் பார்ப்பது முறையல்ல என்ற திடீர் உபதேசம் அவன் உள் ளத்திலே கிளம்பவே, "சிக ரெட் வேணும்!" என்று தயங் கிய குரலில் கேட்டான். அவள் சிகரெட்டைத் தேட ஆரம்பித் தாள்.

தேடுவதற்காக அவள் எடுத் துக் கொண்ட முயற்சியின் போது, அவளது தேகத்திலே ஏற்பட்ட லாவகமான வளைவு

களை அவனால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பட்டணத்துப் பெண்கள் நட்டுவனார் வைத்துப் பாடம் கேட்டும் கற்றுக் கொள்ளாத அபிநய அசைவுகளை அவள் இயற்கையாகவே பெற்றிருந்தாள். அதைக் காணும் கோகுலுக்கு அதிசயமாகவே இருந்தது. மங்கை, சிகரெட்டைத் தேடி எடுத்தாக வில்லை, அதற்குள் உள்ளே பயங்கரமான இருமல் சத்தம் கேட்டது. அவள் சிறிது தயங்கி உள்ளே திரும்பினாள். மீண்டும் இருமல் பலமாகக் கேட்டது. சிகரெட்டைத் தேட அவளால் இயலவில்லை. கோகுலைப் பார்த்து "தயவு செய்து நீங்களே சிகரெட்டைத் தேடி எடுத்துக் கொண்டு, காசைப் பெட்டியிலே போட்டு விடுங்கள்!" என்று கூறிவிட்டு அவன் பதிலுக்கும் காத்திராமல் உள்ளே ஓடிவிட்டாள். கோகுல் ஆச்சரியத்தால் மரம்போல் நின்று விட்டான். மேல் நாடுகளிலே இது போன்ற முறையைக் கேள்விப் பட்டிருக்கிறான் அவன். தினசரிப் பத்திரிகையும் ஒரு காசுக் கிண்ணமும் சாலையோரத்திலே வைக்கப் பட்டிருக்குமாம். தேவையானவர்கள் காசைப் போட்டுவிட்டு பத்திரிகையை எடுத்துப் போவார்களாம். இங்கே நம் நாட்டில், பூட்டப்பட்டுபுதைக்கப்பட்ட சாமி உண்டியல்களையே பெயர்க்காமல் இருந்தால் போதாதா? பட்டணவாசிகளும் கற்றுக் கொள்ளாத நாகரிகத்தை இந்தப் பட்டிக்காட்டு மங்கை எப்படித்தான் ஆசிரியரின்றிக் கற்றுக் கொண்டாளோ, தெரியவில்லை என்று சிந்தித்தபடி நின்றான் கோகுல். கையிலிருந்த ஒரு ரூபாய் நாணயத்தைப் பெட்டியிலே போட்டு விட்டு, ஒரு ஒடிந்துபோன சிகரெட்டைத் தேடி எடுத்து அதை அந்தச் சிறு விளக்கிலே பற்றவைத்தபடி திரும்பினான் ரயிலடி நோக்கி! அவன் ஒரு அடிகூட எடுத்து வைத்திருக்க மாட்டான். அதற்குள் அந்தக் குடிசைக்குள்ளிருந்து "அய்யோ! அப்பா! அப்பா!" என்ற சப்தம் வந்தது. சப்தம் போட்டது அவளாகத்தான் இருக்க வேண்டும். அவள் குரல்தான் அது! கோகுல் தன்னை மறந்த வனாய் உள்ளே ஓடினான்.

வயதான கிழவர்; படுக்கையிலே பிரக்ஞையற்றுக் கிடக்கிறார். அவர் மார்பிலே தலையைச் சாய்த்துக் கொண்டு அந்தப் பெண் அலறுகிறாள். "ஓகோ செத்து விட்டார் போலும்!" என நினைத்து கோகுல் அருகே போனான். அவளோ, "அய்யோ அப்பா! அப்பா!" என அலறிக் கொண்டே யிருந்தாள். கோகுல் கிழவரின் முகத்திலே கையை வைத்துப் பார்த்தான். அவர் சாகவில்லை யென்பதைப் புரிந்து கொண்டான். உடனே அவளைப் பார்த்து, "பயப்படாதேயம்மா! உன் அப்பா சாகவில்லை, மயக்கம்தான்!" என்று ஆறுதல் கூறினான். அவளுக்குச் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. தந்தையைத் தொட்டுப் பார்த்தாள். அவன் கூறியது உண்மைதான்!

"அய்யா! கொஞ்ச நேரம் அப்பாவைப் பார்த்துக் கொள்ளுங்கள்... நான் ஒரே ஓட்டமாக ஓடி, வைத்தியரை அழைத்து வந்து விடுகிறேன்."



என்று கெஞ்சினாள் அவள். கோகுல் முடியாது என்று சொல்ல முடியுமா? மிக மிக நெருக்கடியான சூழ்நிலை!... ரயில் நிலையத்திலே ரயில் வரப் போகிறது என அறிவிக்கும் மணி ஒலிப்பது அவன் காதிலே விழுந்தது. இருந்தாலும் அவளுடைய பரிதாபகரமான வேண்டுகோளை அவனால் மறுக்க முடியவில்லை. சரியென்று தலையசைத்தான். அவள் ஓடினாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் வைத்தியருடன் ஓடி வந்தாள். வைத்தியர் கிழவருக்கு ஏதேதோ சிகிச்சைகள் செய்து, மயக்கத்தைத் தெளிவித்தார். கிழவரும் மெதுவாகக் கண் விழித்து, "கோமதி!" என அழைத்தார். அவளும் 'அப்பா' எனத் தாவினாள். கிழவரின் படுக்கையிடம்! "கோமதி!" கோகுலின் உதடுகள் அந்தப்பெயரை உச்சரித்துப் பார்த்துக் கொண்டன. வைத்தியர் போய் விட்டார். கோமதி, நன்றியொழுகும் கண்களால் கோகுலைப் பார்த்தாள். கோகுல் அந்த ஏழைக் குடும்பத்தின் இளஞ்சிட்டை இருதய பூர்வமாக வாழ்த்தி விட்டு "நான் வருகிறேனம்மா!" என்றான். படுக்கையிலிருந்த தந்தை, "யார் கோமதி அது?" என்று ஈனசுரத்தில் கேட்டார். "யாரோ வழிப்போக்கு அப்பா! ரொம்ப நல்லவர்! நான் வைத்தியரை அழைத்து வரும் வரையில் அவர்தான் உங்களுக்குக் காவல் இருந்தார்!" என்று கூறிக் கொண்டே, கோமதி, கோகுலுக்கு மீண்டும் பார்வையினால் நன்றி செலுத்தினாள். விசாரித்து விட்ட பிறகு கிழவரிடம் பேசாமல் போகக் கூடாதே யென்ற நினைவில், கோகுல் அவரிடம் "என்ன பெரியவரே! எப்படி யிருக்கிறது உடம்பு?" என்று கேட்டான். "எப்படி யிருக்கு? இப்பவா கொஞ்ச நாழியான்னு தான் இருக்கு!"

"பயப்படாதிங்க: சரியாப் போய் விடும். ரயிலுக்கு நேரமாவுது-நான் வர்ரேன்!"

இதைக் கூறிவிட்டு, கோமதியையும் பார்த்தபடி அவன் வெளியே வந்தான். ரயிலை எப்படியும் பிடித்து விட வேண்டுமென்று, ரயில் நிலையத்தை அங்கிருந்தபடியே நோக்கினான். அப்போதுதான் ரயில், நிலையத்தை விட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. இனி ரயிலைப் பிடிப்பது முடியாது என்ற ஏமாற்றத்தோடு திகைத்து நின்றான். கடையோரத்தில் அவள் நின்று கொண்டு, "எங்களால் தான் உங்களுக்கு இப்படி ஆகி விட்டது!" என்று அனுதாபம் தெரிவித்தாள். கோகுலுக்கு, ரயில் தவறியதுகூட மறந்து விட்டது. அந்த அனுதாபச் சொற்கள் அவன் இருதயத்தை ஊடுருவிப் பாய்ந்தன.

"பரவாயில்லை, அதனால் என்ன...வருகிறேன்!" என்று கூறி விட்டு பதிலை எதிர்பார்த்தான்.

"ஏன் இங்கு திண்ணையிலேயே படுங்களேன். காலையிலேதானே ரயில்!" என்றாள் அவள்.

"காலை ரயிலில் போயும் பிரயோசனமில்லை. மாயவரத்திலே மதராஸ் மெயிலைப்பிடிக்க வேண்டுமானால்-நாளை இரவு ரயிலில்தான் போயாக வேண்டும். காலையில் போனால் எங்காவது காத்திருக்க வேண்டியதுதான்!" என்றபடி கோகுல், திண்ணையில் வந்து உட்கார்ந்தான்.

உள்ளேயிருந்து இருமல் ஒலி கேட்கவே, கோமதி ஓடினாள். கோகுலும் பின்னால் சென்று கவனித்தான். கிழவர், கோகுலைப் பார்த்து, "நீ போகவில்லையா தம்பி?" என்று பரிவோடு கேட்டார். "அவருக்கு நம்மாலே ரயில் தவறிப் போய்விட்டதப்பா! இனிமேல் நாளை ரயில்தான் பாவம்!" என்றாள் கோமதி! "அப்படியா? அய்யோ பாவம்-" என்று அருகே உட்காரச் சொன்னார் அவனை!

★

கோகுலுக்கும் தூக்கம் வரவில்லை. கிழவர் இருமிக் கொண்டே, அவனைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டார். கோமதியை நினைத்தால் தான் தனக்கு பயமாக இருக்கிறதென்றும், ஓநாய்களுக்கு இடையே மான் குட்டியை வைத்து காப்பாற்றுவது போல அவளைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறதென்றும் சொல்லி அழுதார். "தாயை இழந்த கோமதியை இத்தனை நாள் பாதுகாப்பாக வளர்த்து விட்டேன். போதுமான அளவுக்குப் படிக்கவும் வைத்து விட்டேன். அவளை ஒரு நல்ல பையன் கையிலே பிடித்துக் கொடுக்காமல் போறேனே: அதுதான் எனக்குக் கவலை!" என்று கண்ணீர் வடித்தார்.

வெகு நேரத்திற்குப் பிறகு, கோகுல் திண்ணையிலே போய் படுத்துக் கொண்டான். தூக்கமே வரவில்லை அவனுக்கு! ஏதேதோ எண்ணச் சுழற்சிகள்! குழந்தை குமார்-கோமதி ...இருவரும் மாறி மாறி அவன் கண்முன்னே வரவேண்டிய காரணம் என்ன? விடியற்காலையில்தான் தூக்கம் அவன் கண்களைத் தழுவ ஆரம்பித்தது.

ஆனால் திடீரென்று கேட்ட கோமதியின் அலறல் அவனைத் திடுக்கிட்டு எழச் செய்தது. கதவைத் தட்டினான். கதவைத் திறந்துவிட்டு, "அப்பா! அப்பா!" எனக் கதறினாள். கோகுல், கிழவரிடம் ஓடிப் பார்த்தான், உடல் ஜில்லிட்டுப் போயிற்று. கிழவர் போய்விட்டார். எதிர்பாராத ஒரு சுமை கோகுலுக்கு! நல்லவேளை, ரயில் மாலையில்தானே! கிழவரை அடக்கம் செய்ய வேண்டிய காரியங்களை கவனித்தான். அவனது பேருதவியுடன் கோமதியின் தந்தை அடக்கம் செய்யப்பட்டார். ஊர் மக்கள் சிலர் வந்து, கோமதிக்கு நேராக ஒப்பாரி வைத்து விட்டுப் போய்விட்டனர். தந்தையின் பிரிவால் கோமதி, தணற்புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இருந்த ஒரே ஒரு துணை—அதுவும் போய்விட்டது!

இரவு வந்தது! திண்ணையிலேயே பொழுதெல்லாம் உட்கார்ந்திருந்த கோகுல், எழுந்து உள்ளேவந்தான். கோமதி அழுது கொண்டிருப்பதைப் பார்த்தான். "கோமதி!" என்றான் குரல் கம்மிய நிலையில்!

அப்போதுதான் அவளுக்குக் கோகுலைப் பற்றிய நினைவு வந்தது. "அய்யோ, யாரோ ஒரு பரோபகாரி, இவ்வளவு உதவிகள் செய்திருக்கிறார். அவருக்கு ஒரு வேளை சாப்பாடுகூடப்போட வில்லை! சாப்பிடுகிறீர்களா என்றும் கேட்கவில்லையே" என அவள் மனச்சாட்சி பேசிற்று. எழுந்து நின்றாள், கண்ணீர் வடித்தபடி! "நான் வரட்டுமா கோமதி?"—கோகுல் முடிக்க வில்லை; அதற்குள் அவன் கால்களிலே விழுந்து விட்டாள் அவள்!

"இன்னும் இரண்டு நாளைக்கு இருங்கள்—எனக்கு சிறு ஆறுதலாகவாவது இருக்கும்!"

கோகுல், மௌனமாகி விட்டான். அசைவற்றுப் போனான். திருக்குவளை நண்பன் ரத்தினம் தாறு தடவை சொன்னான், இரண்டு நாள் இருந்து விட்டுப் போ என்று! அதைக் கேட்க வில்லை; மறுத்துவிட்டான். இப்போது அசைவற்று நிற்கிறான். அவன்யார்?எங்கிருந்து வந்தான்? கொதிக்கும் நெருப்புக் குண்டத்தின் ஓரத்திலே தூக்கி எறியப்பட்டவன் அவன்...அதே நெருப்பு ஜுவலிக்கருகில், கருகிக் கொண்டிருக்கும் மலராகக் கோமதியிருந்தாள். சந்தர்ப்பம்-இப்படி ஒரு சூழ்நிலையைப் படைப்பித்து கைதட்டி ஆரவாரம் செய்தது. அவன் கண் எதிரே குழந்தை குமார் வந்து வந்து போனான்.

"ஏன், பேசாமலிருக்கிறீர்கள் ...நீங்கள் நேற்று இரவு முதல் செய்த உதவிகள் பெரிதல்ல... அனுதையாகப் போய்விட்ட எனக்கு...எனக்கு...எனக்கு..."

கோமதி விக்கி விக்கி அழுதாளே தவிர, பேச்சை முடிக்க வில்லை. சாகப்போகும் நேரத்தில் தன் அருமை மகளைப்பற்றி அந்தக் கிழவர் கூறிய வார்த்தைகள் அவன் நெஞ்சைக் குடைந்து கொண்டே யிருந்தன.

"அழாதே கோமதி! நான் இரண்டு நாட்கள் இருக்கிறேன்" என்று அவளைத் தூக்கி நிறுத்தினான். வழிந்து கொண்டேயிருந்த கண்ணீரைத் துடைத்தான். அப்போது அவன் கைகள் நடுங்கின ...கண் எதிரே குமார் வந்து நின்று, "அப்பா!" என்று கூப்பிடுவதுபோல் இருந்தது...

★

சென்னையிலே, கோகுல் வீட்டு மெத்தையிலே குமார் தூங்கிக் கொண்டிருக்கிறான்...

கனவு! குழந்தையின் கனவு எதுவாக இருக்கும்? எந்த அப்பாவியை அடித்து, யாரை மோசம் செய்து, லட்சாதிபதியாகலாம் என்று கனவு காணப்போகிறதா? அல்லது பதவி தேடுவதற்காக எப்படியெப்படிக் கொள்கைகளைக் காற்றிலே பறக்க விடலாம், யார் யாரைக் 'காக்கா' பிடிக்கலாம் என்று கனவு காணப் போகிறதா? குழந்தையின் கனவுகள் மூள்ளிலே இருக்கும் ரோஜாவை பறிப்பது போலிருக்குமே தவிர, தேன் பூச்சிகளை அழித்துவிட்டு, தேனடையை எடுத்துக் கசக்கிப் பிழிவதைப் போலிருக்காது!

அதுவும் தாயை இழந்த ஒரு குழந்தையின் கனவு எப்படியிருக்கும்? மிகமிக மென்மையான கனவு! ரோஜாவைப் பறிப்பது போலக்கூட இல்லாமல், ரோஜா மலரே, குழந்தையின் கன்னத்தில் வந்து விழுந்திடுவது போன்ற கனவு! ஆம், குமாரின் தாயார் அவனைத் தூக்கி முத்தமிட்டு மார்போடணைத்துக் கொஞ்சுகிறாள்... 'ஆராரோ' பாடுகிறாள் ..அவனை தூங்க மறுக்கிறான்...காலை நேரம் ...தலைவாரி, உடையலங்காரம் செய்து அவனைப் பள்ளிக்கூடம் அனுப்புகிறாள். அவன் போகும் போது பின்னழகைப் பார்த்தபடி வாயிற்படியிலேயே நிற்கிறாள்... பள்ளியிலிருந்து திரும்பி வருகிறான் ... எதிர்கொண்டழைத்து, உச்சி முகர்ந்து முத்தமிட்டு விளையாட அழைத்துச் செல்கிறாள்...

குமார் விழித்துக் கொள்கிறான். கனவு! தாயாரைக் காணவில்லை! ரோஜா மறைந்து விட்டது. படுக்கை முழுவதும் முள்ளாகக் குத்துகிறது! பிஞ்சுமனம்! அரும்பு உள்ளம்! 'அம்மா! அம்மா'! என அலறுகிறது.

சுவற்றிலே தாயின்படம்! ஆம்! படமாகிவிட்டாள் அவன் தாயார், அந்தப் படத்தை எடுத்து மார்போடு அணைத்துக் கொள்கிறான், கண்ணீர்! பசுந்தரையிலேயிருந்து ஊற்றெடுத்துக் கிளம்பி வரும் அருவி! படத்தை அணைத்தபடி படுக்கையில் சாய்கிறான். 'மறுபடியும் அம்மா கனவிலே வரமாட்டாளா' என்ற ஆசையோடு கண்ணை மூடிக் கொள்கிறான். தூங்கி விடுகிறான். விடிந்து விடுகிறது. வேலைக்காரனும் வேலைக்காரியும் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டார்கள். பிள்ளை, அம்மாவை நினைத்து நினைத்து ஏங்கிவிடும் போலிருக்கிறதே யென்று தூங்கும் அரும்பின் கையிலேயிருந்த அம்மா படத்தை மெதுவாக எடுத்து ஒளித்து விட்டார்கள். குமார் எழுந்தான். கையிலேயிருந்த அம்மா எங்கே? விழித்தான்! யார் தூக்கிக் கொண்டு போயிருப்பார்கள்? ஒரு வேளை கனவு உலகத்தில் போட்டு விட்டு வந்துவிட்டோமா? இப்படி நினைத்தான்! பரவாவில்லை—இன்றிரவு, கனவுலோகத்துக்குப் போகும்போது எடுத்துக் கொள்ளலாம்—இப்படி ஆறுதல் அந்தக் குழந்தைக்கு!

★

அம்மனூரில் இரண்டொரு நாட்கள் கழிந்துவிட்டன, கோகுலுக்கு! கோமதியும், தந்தையின்

பிரிவை கோகுலின் உறவால் ஒரு வாறு ஆற்றிக் கொண்டாள். எதையோ எண்ணி ஏங்கியவாறு கடையிலே அமர்ந்து வியாபாரத் தைக் கவனிக்கும் கோமதியின் முகத்திலே அவன் கற்பனை செய்ய முடியாத அழகையும், அந்த அழகிலே மறைந்துகிடக்கும் அமைதியையும், அந்த அமைதி யோடு குழைந்து நிற்கும் அன்பை யும் அவன் ரசித்துக் கொண்டே யிருந்தான். கடைக்குத் தின் பண் டங்கள் வாங்க வருகிற குழந்தை களுக்கு அவள் காட்டுகிற அன்பை அவன் உன்னிப்பாகக் கவனித்தான். வரண்ட தலை யோடு வரும் குழந்தைகளுக்கு எண்ணெய் தடவி சீவி விடுவாள்; நன்றாகப் படிக்க வேண்டும் என்று உபதேசம் செய்து அனுப் புவாள். இதெல்லாம் கோமதி யின் பால் கோகுலுக்குப் புதிய அபிப்பிராயத்தை வளர்த்தது. அதோடு, கோமதி தனியாக இருந்தால், அந்த ஊரிலே திரிகிற ரௌடிக் கும்பல் அவளைச் சும்மா விடாது என்பதையும் புரிந்து கொண்டான்.



வாலிபன்! அதனால்! காதல் பொங்குகிறது.

தகப்பன்! அதனால்! குழந்தை குமார் எதிரே நிற்கிறான்.

நல்ல மனிதன்! அதனால்! ஒரு அபலையைக் காப்பாற்ற வேண்டுமென்ற கடமையுணர்ச்சி எழுகிறது.

கடைசியில் கடமை உணர்ச்சி யின் பெயரால் காதல் வென்று விடுகிறது! அவனுக்கு ஒரே நம் பிக்கை, குமாரின் தராசு சாய்ந்து விடாது என்பதுதான்! காதலின் வெற்றிக்கு அந்த நம்பிக்கையும் ஒரு காரணமே! கடைக்கு வரும் குழந்தைகளிடம் கோமதி காட் டிய பாசம், குமாரைப் பற்றிய பயத் திரையை கோகுலுக்கு விலக்கிவிட்டது!

கிழவர் செத்துவிட்ட துக்கம் விசாரிக்க, அயலூரில் இருந்து ஒரு பாட்டி வந்திருந்தாள். கோமதிக்கு அவள் தூரத்துஉறவு. அவள் கேட்டாள் "இந்தப் பிள்ளை யாண்டான்யார்"? என்று கோகு லைக் காட்டி!

"தூரத்து உறவு பாட்டி! அண் ணன் முறை!"

என்று சொல்லி விடலாமோ என எண்ணினாள் கோமதி! ஏனோ அப்படிச் சொல்ல அவள் மனம் இடந்தரவில்லை.

"பட்டணத்திலே யிருந்து வந் திருக்கிறார். எங்க அத்தைமகன்!" என்று கோமதி, பாட்டியிடம் சொல்லியதை, திண்ணையிலிருந்த படியே கோகுல் கேட்டு, தனக் குத்தானேமகிழ்ந்துகொண்டான். பாட்டி ஊருக்குப் போய்விட் டாள்! "**அத்தை மகன்**", கோகு லுக்கு அந்த வார்த்தைகள் எத் தனையோ இன்பக் கதைகளைச் சொல்லத் துவங்கின. கோமதி யும் கோகுலும் சேர்ந்து சென் னைக்குப் புறப்படுகிற வரையிலே அந்தக் கதைகள் நீண்டன. கோகுல், அவளுக்கு அத்தை மக னாகவே ஆகிவிடத் தீர்மானித்து விட்டான். தனியாகவந்த கோகுல் கோமதியுடன் சென்னைப் பய ணத்தைத் துவங்கினன். இருவ ரின் வாழ்க்கைப் பயணமும் ஆரம்பமாயிற்று!

★

இருவரும் வண்டியிலிருந்து இறங்குவதை வேலைக்காரனும் வேலைக்காரியும் பார்த்துவிட்டு ஒருவர் முகத்தை ஒருவர் வியந்து நோக்கிக் கொண்டனர். கோம தியை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான் கோகுல்! அவர்களுக்கு உள்ளூர மகிழ்ச்சி தான்! "**குமார் எங்கே?**" என்று கேட்டபடி கோகுல் உள்ளே நுழைந்தான். "இப்பத்தான் பள் ளிக்கூடம் போச்சு!" என்றாள் வேலைக்காரி.....சுவற்றிலே மாட் டப்பட்டிருக்கும் தன் மூத்த மனைவியின் படத்தை அண்ணாந்து பார்த்தான் கோகுல்! அங்கே படமில்லை! தூக்கி வாரிப் போட் டது அவனுக்கு!

"படம் என்ன ஆயிற்று?"

வேலைக்காரன் சொன்னான்; "குழந்தை படத்தைப் பார்த்துப் பார்த்து அழுவது அதிகமாயிடுச் சுங்க! அதனால் அதை மறைச்சு விட்டேங்க!" என்று!

கோகுலின் கண்களில்நீர் ததும் பிற்று! "என்ன படம்" என்று கேட்டாள் கோமதி. "உங்க அக்கா படம்!" என்றான் அவன். வேலைக்காரனிடம் கேட்டு அந்தப் படத்தை வாங்கிப் பார்த்தாள் கோமதி. அவள் கண்களும் கலங் கின. "பூவோடும் பொட்டோடும், மஞ்சளோடும் மாங்கல்யத்தோ டும் போய்ட்டாங்க எங்க அம் மணி!" என்று அழுதாள் வேலைக் காரி!

"நீங்க வந்திருக்கீங்க தாயே! நீங்களும் மகாலட்சுமி மாதிரி இருக்கிங்க.....எங்க சின்ன ஐ மானை...அய்யாவோட செல்லக் குழந்தையை...எங்க அம்மணி யோட வயிற்றிலே வந்த வைரத் தை.....ஒரு குறைவும் இல்லாம காப்பாத்துங்க அம்மா!"—

என்று கோகுல் கூற வேண்டி யதை வேலைக்காரனே கூறி முடித்தான். கோமதியிடம் விடை பெற்றுக் கொண்டு, கோகுல், பத்திரிகை அலுவலகத்திற்குப் புறப்பட்டான்,

★

அன்றைய தினம் ஆசிரியர் கோகுல் எழுதிய கட்டுரைகள் அத்தனையும் சுவை மிகுந்தவை! தலையங்கம் புது முறுக்கோடு காணப்பட்டது! நண்பர்கள் கார ணம் விசாரிக்க ஆரம்பித்தனர். காரணத்தைக் கேட்டு அனைவ

ருமே மகிழ்ந்தனர். ஆசிரியர் அறைக்கு ஏறிச் செல்ல வேண்டிய ஐம்பது மாடிப்படிகளையும் அன்றைய தினம் அவன் அனாயாசமாகக் கடந்தான். வாழ்க்கையின் முதல் படியிலே வழுக்கி விழுந்து, விழுந்த இடத்திலே குமார் என்னும் கோமேதகக் கல்லை எடுத்த பிறகு இத்தனை நாள் கழித்து இப்போதுதானே அடுத்த படியில் கால் வைக்கத் துணிந்திருந்திருன். முதல்தாரத்துக் குழந்தை யிருக்கும்போது இரண்டாந்தாரமாக ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்வது, சரியா தவரு என்ற கேள்விகளைத் தன் நண்பர்களிட மெல்லாம் கேட்டான். அவரவர்களின் அனுபவங்களை யெல்லாம் பொறுக்கிச் சேர்த்தான். அதில் அவனுக்குச் சாதகமான பதிலும் கிடைத்தது பாதகமான பதிலும் கிடைத்தது.

★

பள்ளிக்கூடத்திலே குழந்தை குமார் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான். எதைச் சிந்திக்கப் போகிறான்; அவன் தகப்பனைப்போல அகில உலக யுத்தத்தைப் பற்றி என்ன தலையங்கம் எழுதலாமென்று? அல்லது அவனது பள்ளி ஆசிரியரைப் போல சம்பள உயர்வுக்கிளர்ச்சி வெற்றி பெறுமா என்று? அவன் சிந்தனை முழுதும் தாயாரைப் பற்றியதுதான்!

விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் அவனைப் பார்த்துக் கேலி புரிந்தார்கள்.

"பாருடா, கௌதம புத்தர்—சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறார்" என்று அன்றைக்குப் படித்த பாடத்தை ஒப்புவித்தான் ஒரு குறும்புக்கார இளைஞன். கௌதம புத்தர் என்றாலே என்னவென்று தெரியாத பிஞ்சு குமார்! அவன் படிக்கும் வகுப்பே வேறு!

பள்ளி முடிந்து, பசங்கள் அனைவரும் கூட்டங் கூட்டமாகக் கும்மாளம் அடித்தபடி வீடு நோக்கி ஓடுகிறார்கள். குமார் மட்டும் தன்னந் தனியாக வந்து கொண்டிருக்கிறான். வீட்டுக்குத் திரும்பும் குழந்தைகளை அவர்களது தாய்கள் வாயிலில் நின்று எதிர்கொண்டழைத்துத் தூக்கி முத்தமிடுகிறார்கள். குமார் அவைகளை கவனிக்கிறான். அந்த அரும்பின் நடையிலே ஒரு தளர்ச்சி! கண்களிலே கலக்கம்! இருதயத்திலே புயல்! தாங்குமா அந்த இளந்தங்கம் அந்தக் கொடு நெருப்பை! உருகி ஓடிற்று! "தனக்கு ஒரு அம்மா இருந்தால் தன்னையும் இப்படித் தூக்கி முத்தமிட்டு எதிர்கொண்டு அழைப்பார்களே!"

இப்படித்தான் விம்மியது போலும், அந்தப் பிறை நிலவு!

எல்லாப்பிள்ளைகளும் அவரவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். குமார் மட்டும் வீடு நோக்கி வந்துகொண்டிருக்கிறான். அதோ, அவன் வீடு! வீட்டு வாயிலிலே யார் அந்தப் புது உருவம்? ஒரு வேளை; அம்மாவா?... வாயிற் படியிலே அடியெடுத்து வைத்த அவனை வாரி அணைத்துத் தூக்கினாள் கோமதி! எதிர்பாராத ஒரு உணர்ச்சி குமாரின் உள்ளத்தை



செ.

உலுக்கிவிட்டது போலும்? அவன் கண்கள் தாரை தாரையாக நீரைப் பொழிந்தன. கோமதிக்கு நடுக்கம் பிறந்தது. தன்னைக் குமார் ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கருதினாள். அவள் உள்ளம் போர்க்களமாயிற்று! அரும்பு பொதிய விழாச் செடி இந்தக் குடும்பம்! அதன் வேரிலே ஊற்றப்படும் வெண்ணீராகத்தான் ஆகிவிட்டோமோ எனப் பயந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் குமாரின் உடல் கொதிக்க ஆரம்பித்தது. கோமதி அழுதே விட்டாள். அலுவலகத்திலிருந்து குழந்தைக்குத் தின்பண்டங்கள் வாங்கி வந்த கோகுல், இந்தக் காட்சியைப் பார்த்துக் கலங்கினான். "அம்மா பாருடா கண்ணு!" என்று கோமதியைக் காட்டினான்.

"எனக்குப் பொய் அம்மா வேணும்! நிஜ அம்மாதான் வேணும்!" என்று புலம்பினான் குமார். அந்த வார்த்தைகள் வெடி மருந்துச் சாலையில் கிளம்பும் தீப்பொறிகள் போல இருந்தன கோமதிக்கு! குமாரின் காய்ச்சல் அதிகமாயிற்று. கோமதிக்குக் குழந்தையுடன் இணை பிரியாதிருக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பம், குழந்தைக்கும் அவளுக்கும் தணியாத பாசத்தை தோற்றுவிக்க உதவிற்று. ஆபத்து நேரங்களில் தான் நட்பு, காதல், பாசம் இவைகளின் 'மீட்டரே' அதிகமாகிறது-ஏன்; சில இடங்களில் ஆரம்பமாகிறது என்றுகூடச் சொல்லலாம்-அதற்கு உதாரணந்தானே; கோகுல், கோமதி இருவரின் காதல்! குமார், சிறிது சிறிதாக உடல் நலம் பெற்றான். அவன் உடல் நலம் பெற்று எழும்போது கோமதியை அம்மா என்று வாயார அழைக்கும் புதிய குமாராக இருந்தான். கோமதிக்குக் கொண்டாட்டம் தாங்கவில்லை. கோகுல்கூட சலித்துக்கொள்கிற அளவுக்கு அவள் குழந்தையைப் பராமரிக்க ஆரம்பித்துவிட்டாள். குமாருக்கு ஒரு அம்மா கிடைத்து விட்டாள். பள்ளிக்கூடம் அனுப்ப, பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது எதிர்கொண்டழைக்க, ஒரு அருமையான அம்மா கிடைத்துவிட்டாள்! இப்போது, குமார் பள்ளிக்கூடத்தில் பால புத்தரைப் போல் உட்கார்ந்திருப்பதில்லை... வீரநெப்போலியனைப் போல் விஷமங்கள் செய்கிறான்.

வீடு திரும்பும்போது, சிறுவர்களை அவர்கள் தாயார் உபசரித்து வரவேற்பதை இப்போதெல்லாம் குமார், வெகு அலட்சியத்தோடு பார்த்துவிட்டு கம்பீரமாக நடக்கிறான்.

முன்பெல்லாம் குமார் ஒரு இலை; ஒரு மொட்டு-இப்போது இரு இலை; ஒரு மொட்டாக ஆகிவிட்டான்!

★

இரவு வெகுநேரம் வரையில் கோமதியின் வருகைக்காக கோகுல் விழித்திருக்க வேண்டியிருந்தது, படுக்கையறையில்! காரணம், குமாரும் கதை சொல்லி—பாட்டுப் பாடி தூங்கவைத்துவிட்டுத்தான் அவள் கோகுலிடம் வருவாள்—கோகுலுக்கு அதில் கொஞ்சம் வருத்தங்கூட! ஆனாலும், வீட்டிலே குமாருடன் விளையாடுவதற்கு ஒரு பாப்பா வரப் போவதாக வேலைக்காரனும் வேலைக்காரியும் குமாரிடம் அடிக்கடி அறிவித்து வந்தார்கள்.

அந்தப் பாப்பா எங்கிருந்து வரும்? எப்படி வரும்? அது எப்படி இருக்கும்? என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தான் குமார்.

ஒருநாள், கோகுல் அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே தங்கி விட்டான். கோமதிக்கு அன்று பிரசவ வேதனை அதிகமாகிவிட்டது குமாருக்கு ஒன்றும் புரியவில்லை. "அம்மா ஏன் இப்படிக் கத்துகிறது?"—அப்பாவைக் கேட்டான். வேலைக்காரர்களைக் கேட்டான். பெரிய சாக்ரடீசாக இருந்தால்தான் என்ன; குழந்தையின் தர்க்கவாதக் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட முடியுமா என்ன? குமாருக்கு செயல் மூலம் பதில் சொல்லி, கோமதி, ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். குமார் எதிர்பார்த்திருந்த பாப்பா வந்து விட்டது.

"அம்மா, அம்மா! பாப்பாவை என்னோட பள்ளிக்கூடம் அழைச்சிகிட்டு போகலாமா?"

குமாரை முத்தமிட்டுக் கொண்டே கோமதி, "இப்போது வேண்டாண்டா ராஜா!" என்று தழுவிக்கொண்டாள். அந்த அன்பு ஸ்பரிசத்திலே அந்த அரும்பு மெய்மறந்து போயிற்று.

★

ஒருவருக்கொருவர் சமமாக பலமும், வளமும் இருக்கும் போதே பொருமை உணர்ச்சி தலை காட்டுகிற இந்த உலகில், குமாரை விடத் தன் குழந்தை பலஹீனமாகவும், வளமற்றும் இருப்பதைக்காணும் கோமதிக்கு அதுபோன்ற பொருமைக் கனல் அவளையுமறியாமல் மூண்டதில் ஆச்சரியமில்லைதான்!

★

பாப்பா பிறந்தது முதல், அதற்கு நீங்காத நோய்தான்! அதைக் கவனிப்பதிலேயே அவளுக்கு நேரம் முழுவதும் செலவாயிற்று! தன் குழந்தையின் நோய் நீங்க கோகுல் நல்ல டாக்டரிடம் காட்டவில்லை என்ற வருத்தம் வேறு அவளுக்கு! **"என் குழந்தைன்னு உங்களுக்கு தள்ளுபடி!"** என்று ஒருநாள் அவள் கோபமாகப் பேசிவிட்டாள் கணவனிடம்! **"என் குழந்தை"** இந்த வேறுபாடான வார்த்தை கோகுல் உள்ளத்திலே சம்மட்டி அடிபோல விழுந்தது; பெண்கள் தனக்கொரு குழந்தை பிறக்கும் வரையில்தான் மற்ற குழந்தைகளிடம் அன்பாக இருக்கிறார்கள். அப்படி அன்பாக இருந்தால்தான் தனக்குக் குழந்தை பிறக்கும் என்ற பழைய நம்பிக்கைதான் அதற்குக்கூட காரணம் போலும்! எல்லாக் குழந்தைகளிடமும் எப்போதும் அன்பாயிருக்கவேண்டும் என்ற புதிய எண்ணம் பெண்கள் உள்ளத்திலே வளராதா?

இப்படிப் பெண்கள் சமுதாயத்தைப் பற்றியே மொத்தமாக ஒரு கணக்குப் போட்டுக் கொண்டு சிந்தனையிலாழ்ந்தான் கோகுல்! என் குழந்தை—உன் குழந்தை எனப்பிரித்துப் பேசுகிற அளவுக்கு வந்துவிடுவாள் கோமதி என அவன் நினைக்கத்தானில்லை! அம்மனூர் கோமதி எங்கேயோ போய்விட்டாளே; அம்மா—ஸ்தானத்தில் வைத்துக் குமார் மகிழ்ந்த அந்தக் கோமதி ஏன்

மறைந்து விட்டாள்?—கோகுல், குமுறும் கடலானான்! பாப்பா வந்துவிட்டதால், குமாரிடம் கோமதி காட்டுகிற அன்பு குறைந்திருக்கத் தேவை யில்லை தான்! ஆனாலும் பாப்பாவின் உடல் நிலை கோமதியை அந்த நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது!

★

ஒருநாள், படுத்திருந்த பாப்பாவை, குமார் மிகவும் சிரமப்பட்டு தூக்கிக் கொண்டு தெருப் பக்கம் போனான். அதைப் பார்த்த கோமதிக்குக் கோபம் வந்துவிட்டது—"டே மூதேவி—ஏண்டா குழந்தையைத் தூக்கிகிட்டுப் போயி கொல்லப் போறே!" என்று அலறியபடி குழந்தையைப் பிடுங்கிக் கொண்டு உள்ளே வந்ததை பல கணி வழியே பார்த்தான்." ஏதோ தப்பு செய்துவிட்டோம் போலிருக்கிறது, அதுதான் அம்மா திட்டுகிறார்கள்!" என்று குமார் நினைத்துக் கொண்டு, இளம் வாய் சிரிப்பைக் காட்ட, இருவழியும் நீரைக்கொட்ட அப்படியே நின்று விட்டான். 'மூதேவி' என்பதற்குப் பொருள் அந்த மொட்டுக்கு என்ன தெரியும்?

★

கோமதிக்குத் தன் குழந்தையைப் பற்றிய ஏக்கம் அதிகமாகி விட்டது—நாளுக்கு நாள் அது உடல் மெலிவதை அவளால் சகிக்க முடியவில்லை. ஒருநாள் குழந்தைக்கு கடுமையான காய்ச்சல் கண்டது. மனங்கொதித்த கோமதி, நல்ல டாக்டர் யாரையாவது அழைத்து வரக்கூடாதா என்று கணவனைக் கடிந்து கொண்டிருக்கிறாள். அப்போது எதிரே, ஒரு டாக்டர் வந்து நிற்கிறார்.

"யார் சார் உங்களைக் கூப்பிட்டு வந்தது?" என்று வியப்போடு கேட்கிறான் கோகுல்.

"இதோ, இவன்தான்!" என்று குமாரைக் காட்டுகிறார் டாக்டர்!

உடனே, கோகுல் மகனை அள்ளி எடுத்து அணைத்து முத்தமாரி பொழிகிறான்.

ஆனால், குமார் எதிர்பார்த்தபடி அவன் அம்மாவிடமிருந்து ஒரு முத்தத் துளி கூட கிடைக்கவில்லை! காரணம் என்ன? குமார் யோசித்தான்...இளம் நெஞ்சம், இது போன்ற பெரிய யோசனையில் ஈடுபடலாமா? "எனக்கு நிஜ அம்மா இல்லே இது போலி அம்மா, பொம்மை அம்மா!" இப்படி ஒரு முடிவுதான் அவன் மனதில் உதயமாகியிருக்க வேண்டும்—புத்தகங்களை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போய்விட்டான். வேலைக்காரி, அவனை வழி அனுப்பி வைத்தாள். குழந்தையைப் பரிசோதித்த டாக்டர், மருந்து கொடுத்துவிட்டு "கொஞ்சம் ஆபத்தான நோய்தான் பனிக்காற்று படாமல் கவனித்துக் கொள்ளுங்கள் பார்ப்போம் பிறகு!" என்று சொல்லிப் போய் விட்டார். கோமதியின் துயரம் பன்மடங்காயிற்று! 'இது வரையில் சரியாகக் கவனிக்காதால் இப்படியாகி விட்டது என் குழந்தை' என்று கணவரிடம் சீறினாள். அவன் குழம்பியிருந்தான். தாழை மடலை மேலே யிருந்து தடவினால் முள் குத்தாது —எதிர்ப்புறமிருந்து தடவினால் கை, ரணமாகிவிடும்! கோகுல், கோமதியிடம் எதிர் நீச்சல் போட்டு, இருதயத்தை இன்னும் ரணமாக்கிக் கொள்ள விரும்பவில்லை! ஒரு சாதாரண பெண்ணுக்குரிய மனக்குமுறல் அது. அதைத் தனது அமைதியினாலேயே அடக்கிவிட முடியுமென நம்பியிருந்தான் அவன்.

★

பள்ளிக்கூடம் முடிந்து குமார் வீடு திரும்பினான். கொஞ்ச நாட்களாக வேலைக்காரிதான் அவனை எதிர் வந்து அழைத்துப் போகிறாள். இரவு உணவுக்குப் பிறகு அனைவரும் படுக்கைக்குப் போயினர். கோமதியும், குழந்தையும் ஒரு படுக்கையில்! கோகுல் நாற்காலியில் படுத்தபடி தூங்கினான். தூங்காமல் புரண்டு கொண்டிருந்த குமார், மெதுவாக எழுந்தான். அறையின் மூலைகளை யெல்லாம் தேடினான். என்ன தேடுகிறான், இந்த இருட்டில்? அறையில் அவன் தேடியது கிடைக்கவில்லை. வீட்டின் கீழ்ப்பக்கம் போனான் மெதுவாக! அங்கும் தேடினான். உயரமான பீரோ! அதன்மீது ஒரு நாற்காலியைப் போட்டு ஏறினான். ஆ! அதோ அவன் தேடியது கிடைத்து விட்டது. அவனது அம்மா படம்! அதை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். படுக்கைக்கு வந்தான் படத்தோடு! அம்மா படத்தின் பக்கத்திலே படுத்துக் கொண்டான். "அந்தக் கட்டிலிலே பாப்பாவும் அதன் அம்மாவும் இங்கே, இந்தக் கட்டிலிலே அம்மாவும்! நானும் என்- அய்யோ!" இப்படி ஒரு வித்தியாச விஷத்தை அந்த அரும்

வாசக நண்பர்கள் அனைவருக்கும் பொங்கல்
வாழ்த்துக்கள் உரியனவாகுக!

★

கோ. கிருஷ்ணராஜ்

பத்திரிக்கை - புத்தக விற்பனை

காந்தி வீதி புதுச்சேரி

புதுச்சேரியில் சகலவிதமான தின, வார, மாத ஏடுகள், புத்தகங்கள் கிடைக்குமிடம்.

பின் உள்ளத்திலே தெளிப்பதற்குக் காரணமாயிருந்தது கோமதிதான்!

இல்லே! இல்லே! நோய் வடிவான அவள் பிள்ளேதான்!

கோமதியின் அருகே கிடந்த பாப்பா அழுதது—கோமதி நன்றுகத் தூங்கிக் கொண்டிருந்தாள். பலநாள் கண் விழித்த களேப்பு அவளுக்கு! குமார் எழுந்து பார்த்தான். ஜன்னல் எல்லாம் மூடிக் கிடந்தது.

"பாப்பாவுக்குக் காற்றில்லே; அதனல் அழுகிறது!"-இது அவன் எண்ணம். ஜன்னல் கதவுகளே நன்றுகத் திறந்து விட்டான். ஜிலு ஜிலு வென பனிக் காற்று வீச ஆரம்பித்தது. பாப்பாவும் அந்தக் குளிர்காற்று பட்டதும் மௌனமாக ஆகிவிட்டது. குமாரும், தான் நினேத்தது சரிதான் என்ற மகிழ்ச்சியில் பாப்பாவைத் தட்டிக் கொடுத்துவிட்டு, தன் படுக்கைக்குப் போனன். குழந்தைக்கு பனி கூடாது என டாக்டார் எச்சரித்தது அவனுக்கு என்ன தெரியும்? தூங்கி விட்டான். அனேவரும் ஆழ்ந்து தூங்கினர். விடியற்காலே! கோமதி விழித்துப் பார்த்தாள்! ஜன்னல் திறந்திருந்தது.

"அய்யோ! யார் ஜன்னலேத் திறந்தது?" என்று கத்தினுள். கோகுல் திடுக்கிட்டெழுந்தான்.

"நான்தாம்மா, பாப்பாவுக்குக் காற்று வேணும்னு திறந்தேன்" என்று கூறியபடி எழுந்தோடி வந்தான் குமார்,

கோமதி, குழந்தையைத் தொட்டுப் பார்த்தாள். குழந்தை விரைத்து கிடந்தது. அது இறந்து அதிக நேரமாகிறது! — முதலில் ஒருமுறை அழுததே; அப்போதே அது போய் விட்டது! ஆனல் பழி, குமாரின் தலேயிலே விழுந்தது! அங்கிருந்த ஒரு கூஜாவை எடுத்துக் குமாரின் மீது வீசி எரிந்தாள் கோமதி! அய்யோ 'அம்மா' என அலறினன் குமார்! கூஜா குறி தவறி—அவன் படுக்கையில் இருந்த அம்மா படத்தின்மீது விழுந்து, படம் தூள் தூளாகப் போயிற்று. குமார் படத்தை எடுத்து முகத்தில் ஒத்திக்கொண்டு அழுதான். உடைந்த கண்ணுடித் துண்டுகள், அவன் அழகுமுகமெங்கும் கீறி, ரத்தம் கசிந்தது—கோகுலுக்கு எதை நினேத்து அழுவது என்று புரியவில்லே.

★

குமார் இரண்டு மூன்று நாட்களாக சரியாக சாப்பிடவேயில்லே. பாப்பாவைக் குழியிலே வைத்துப் புதைத்ததற்கு அவனல்லவா காரணமாம்! அய்யோ, அப்பா பாப்பாவை நினேத்து அழுது கொண்டேயிருக்கிருளே; அதற்கும் அவன்தானே காரணம்! கோகுல் எவ்வளவோ முயன்றும் அவனே சமாதானப்படுத்த முடியவில்லே.

"குழந்தை போய்விட்டது--அழுவதால் வரப்போகிறதா கோமதி? குமாரை சமாதானப் படுத்து! அவன் அப்படியே ஏங்கிவிட்டான்!" என்று தழுதழுத்த குரலிலே கோகுல், அவனிடம் வேண்டிக்கொண்டான். பயனில்லே.



கோகுல் மனப்புயலேத் தணிக்கும் மார்க்கம் தெரியாமல் தத்தளித்தான். குமாரைக் கூப்பிட்டு சாப்பிட வற்புறுத்தினன். அவன் மறுத்தான். மனேவியின் மீதுள்ள ஆத்திரத்தை குழந்தைமீதுகாட்ட வேண்டுமென்ற முறைப்படி, குமாரின் கன்னத்திலே கோகுல் ஓங்கி ஒரு அறை கொடுத்தவிட்டு, விர்ரெனப் பறந்துவிட்டான், அலுவலத்திற்கு!

"அப்பா ஏன் என்னே அடிக்க வேண்டும்?" விடை காண முடியவில்லே அந்தப் பச்சைப் பாலகனுல்! பேசாமல் எழுந்து பள்ளிக்கூடம் போய்விட்டான்.

★

பத்திரிகை ஆபீசில் கோகுலுக்கு வேலே ஓடவில்லே. மாலே ஆறுமணி ஆகியும் நினேத்த கட்டுரையை எழுதி முடிக்க இயலவில்லே. மன நிம்மதியல்லவா எழுத்தாளனுக்கு முக்கிய மூலதனம்; தொட்டுத் தொட்டு வளர்த்த தன் அருமைச் செல்வத்தை அறைந்து விட்டதை நினேத்து நினேத்து வெம்பினன். அவன் முதல் மனேவி, அவனேதேடி வந்து காலேப்பிடித்துக் கொண்டு அழுது, 'இனிமேலாவது நம் செல்வத்தை இப்படி அடிக்காதீர்கள்!" என்று கெஞ்சுவதுபோலிருந்தது! போனில் மணி அடித்தது—பேசினன்—"குமார், பள்ளிக்கூடத்திற்குப் போனவன் திரும்பவேயில்லே! பள்ளிக்கூடத்திலும் இல்லே!" என்று வேலேக்காரன் தகவல் கொடுத்தான். கோகுலுக்குத் தலே சுழன்றது. அறையை விட்டு வெளியே ஓடிவந்தான். "குமார்!" என்று கத்தியபடி மாடிப்படியிலே கால் வைத்தான். உலகமே இரண்டு விட்டது போன்ற உணர்ச்சி! கண்களிலே பயங்கரமான சூழற்சி, கோகுல் கால் தவறியது! கடகடவெனப் படிகளிலே உருண்டான். மாடிப்படி முழுவதும் ரத்த வெள்ளம்!

★

ஆஸ்பத்திரியிலே, கவலேக்கிடமான நிலேமையிலே கோகுல்! இதைக் கேட்ட கோமதி அலறித் துடித்துக் கொண்டு ஓடிவந்தாள்.

அவளையாரும் உள்ளே அனுமதிக்கவில்லை. வெளியிலேயே உட்காரவைத்து விட்டார்கள். பிரக்ஞையே வரவில்லை. இன்னும் பத்து நிமிடத்தில் பிரக்ஞை வந்தால்தான் பிழைப்பான்—இல்லாவிட்டால் பிழைக்கமாட்டான் இப்படித் தகவல் தரப்பட்டது அவளுக்கு! தன்னாலேயே, தன்னுடைய நடத்தையினாலேயே தன் கணவனுக்கு ஆபத்து வந்து விட்டது என்பதை உணர்ந்தாள்.

அவளையறியாமல், கணவன் மீது அவளுக்குள்ள அன்பு புதுப்பிக்கப்பட்டது!

அவள் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகேயுள்ள மரத்திலேயிருந்து தழைகள் உதிர்ந்தன. அது கண்டு அலறினாள். அந்த மரக்கிளையில் அமர்ந்திருந்த இரு புறுக்களில் ஒரு புறு எழுந்து பறந்தது!—அதைப் பார்த்து ஓவென சப்தமிட்டாள்! அந்த நேரத்திலே, தன்னை அடித்ததற்குக் காரணம் கேட்க, அப்பாவின் ஆபீசுக்குப் போய், அங்கே சேதி கேள்விப்பட்டு, ஆபீஸ் பியூன் உதவியோடு ஆஸ்பத்திரிக்கு வந்த குமார், அம்மா அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து அவளிடம் ஓடி வந்தான்.

"குமார்! அப்பா ஏமாற்றிவிடுவார் போலிருக்கடா!" என்று அவனை அணைத்துக்கொண்டு வீறிட்டுக் கதறினாள் கோமதி!

"அழாதேம்மா!"-என்று அவள் கண்களைத் தன் கொழுந்துக் கைகளால் துடைத்தான் அந்த அரும்பு!

"யாரடா ராஜா நமக்கு இனி மேல் ஆதரவு?" என்று விம்மினாள். அவள் மனக் கண் முன்னே, அம்மனூர் குடிசையில் கோகுலின் காலைப் பிடித்துக் கொண்டு ஆதரவு கோரிய அந்தக் காட்சி தோன்றி மறைந்தது.

"பயப்படாதேம்மா!... நான் பெரியவனாகி, உன்னைக் காப்பாத்துவேன்-பயப்படாதேம்மா!" என்று அவளது முகவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு குமார், தேம்பி அழுதான்.

அந்தப் பசலையின் ஆதரவு மொழி, அவள் குறுகிப்போன இருதயத்தை விசாலமாக்கிவிட்டது! தாய்மை உணர்ச்சி, பிள்ளையைப் பெற்றுல்தான் வரவேண்டுமா? அல்லது தன் வயிற்றில் பிறந்த பிள்ளையிடம் தான் காட்டப்பட வேண்டுமா? தாய்மை உணர்ச்சி, பெண் குலத்தின் சொத்தாயிற்றே! அந்த உணர்ச்சி கோமதியின் உள்ளத்திலேயிருந்து பிறிட்டுக் கிளம்பி, குமாரைத் தழுவிக் கொண்டது!

இருவரும் கன்னத்தோடு கன்னம் ஒட்டிக்கொண்டனர். அம்மாவின் படத்திலேயுள்ள கண்ணுடித் துண்டுகள் கிழித்த கீறலின் தழும்புகளை கோமதியின் கண்ணீர் கழுவிக் கொண்டிருந்தது!

நர்ஸ் ஓடிவந்தாள்! கோமதி, திடுக்கிட்டாள்!

கோகுல் பிழைத்துவிட்டான் என்ற இன்பச் சேதி கிடைத்தது!

குமாரும், கோமதியும் உள்ளே ஓடினார்கள்! கோகுல், கோமதியின் இடுப்பிலேயுள்ள குமாரைக் கண்டான். உண்மையாகவே இப்போது அவன் பிழைத்துவிட்டான்.

அரும்பைப் பாதுகாக்கும் இரு இலைகளும் உதிர்ந்து விடுமோ என்ற நிலை இருந்தது—இப்போது, மீண்டும் இரு இலை, ஒரு மொட்டு; ஆகிவிட்டது! இந்தப் புதிய ஆரம்பம், இனி... இரு இலை இரு மொட்டு என்று ஆவதற்கான இன்ப ஆரம்பமாகவும் இருந்தது!

★

'திராவிட நாடு' துணையாசிரியர்

அரங்கண்ணல் தரும் சரிதக் கதை!

வெண்ணிலா

படிக்கத் தெவிட்டாத அரிய சித்திரம்.

விரைவில் கிடைக்கும்

★

வெளிவந்துவிட்டது!

புழுதி மேடு

(அரங்கண்ணல்)

விலை 1-4-0 கழிவு 25%

அன்புப் பதிப்பகம்

பொறையார் :: தஞ்சை

லியனர்டோ-டாவின்ஸி!

அவனுள்ளம் ஓர் அன்புப் பெட்டகம்; அவன் சிந்தை ஓர் அறிவொளி வீசும்பகலவன்; அவன் குவித்துவைத்த எண்ணக் குவியல்கள் புகழ்தரும் விஞ்ஞான மண்டலத்தில் விட்டு மின்னி ஒளிதரும் தாரகைகள்; அவன் ஓர் செயல் வீரன்! அழகான தோற்றம்; பொலிவுமுகம்; அகன்ற விழிகள்; பொன்னிறக் கூந்தல்; திண்மையான தோள்கள்; அகன்ற மார்பு; குதிரைகளின் லாடத்தை, ஈயத்துண்டை வளைப்பது போன்று இருகரங்களாலேயே வளைத்துக் காட்டிடும் உரமேறிய கரங்கள்; எதையும் செய்து முடிக்கும் திறமை-மங்காத மனோதிடம் – அதற்கேற்ற நல்ல அறிவு—சரள சுபாவம்! இத்தனையும்–அவனுக்கிருந்தது!

இத்தாலிக்கு அவன் சொந்தம். பிளாரன்ஸ் நகரின் சிறு கிராமமாம் 'வின்ஸி' யிலே அவன் பிறந்தான்; பிளாரன்ஸ் அவனை வளர்த்தது! அதன் ஒழுங்குள்ள பிரஜையவன்—பெயர் லியனர்டோ! கி. பி. 1452—அப்போது சாதாரண ஆண்டு; ஆனால் இப்போதோ அது அந்த அறிவுமேதையின் ஆண்டாக மதித்துப் போற்றப் படுகிறது! அவன் தந்தை பத்திரங்கள் எழுதுபவர். அவனை இளமை முதல் ஓவியப்பித்தும், பாட்டுப் பித்தும் கொண்டலைந்தவன்!

ஓவியம் தீட்டினான் இளமையிலே. தந்தை கண்டார்; அவரின் நண்பரிடம் காட்டினார். நண்பரோ வியந்தார்! அவர் ஓர் ஓவியக்காரர்; கைதேர்ந்த சிற்பியுங்கூட. ஓவியப் பள்ளியே வைத்திருந்தவர். லியனர்டோ அவரின்மாணவனாகி விட்டான். 7-ஆண்டுகள் ஓவிய சிற்பக்கலை பயின்றான். இருபதாவது ஆண்டிலே பிளாரன்ஸ் நகரின் புகழான ஓவியக்காரர்களில் இவன் சிறந்தவன்என்ற பெரும் புகழையும் பெற்று விட்டான்! பெற்றுவிட்டா னென்பதும் அவ்வளவு பொருத்த மல்ல; அந்த பெரும் புகழ்கள் இவனைத் தேடி வந்தது! அதுதான் பொருத்தம்!!

ஓவியம் — சிற்பம் — அதிலே அவன் கை தேர்ந்தவன். ஆனாலும் இவ்விரு கலைகளோடு திருப்தி கொள்ள வில்லையவன்; வேறுபல கலைகளைக் கற்பதற்கு விரும்பினான் எனில் தன்னைச் சூழ்ந்ததைப் பற்றியும் ஆராய்ந்தறியும் மேதைத்தனம் பெற விரும்பினான்! ஆகவே ஓய்வு நேரங்களிலே எண்ணங்களை ஒன்று சேர்த்தான்!

பாலங்கள் கட்டுவது; வாய்க்கால்கள் வெட்டுவது; பீரங்கிகள் செய்வது, நகர்களை சுகாதார வசதிகளுடன் திருத்தியமைப்பது; ஆகாய விமானம் காண்பதுபோன்ற ஒவ்வொரு துறைக்கும் விஞ்ஞானரீதியான மார்க்கம் மட்டுமல்ல; ஓர் நிலையான இயந்திர சாதனமும் கண்டாக வேண்டுமென்று அவன் துடிதுடித்தான்! அந்த ஆர்வம் அவன் வாழ்வு குலைந்து வீழ்ந்து மறையும் வரையில் கூட அவனை விட்டகலவேயில்லை! தனது திறமைக்கும், வசதிக்கும் அதிகமான தொல்லைகளை வாரித் தலையில் போட்டுக் கொண்டோமே என்றவன் எண்ணவில்லை. வசதியாவது? நாடாள்பவன் எவனாகிலும் கிடைப்பான் என்ற நம்பிக்கையை அவன் வைத்திருந்தான். அந்த நம்பிக்கையும் வீண்போகவில்லை!

பிளாரன்ஸ் மன்னரிடம் இந்த நோக்கு கொண்டே பணியாற்றக் கிளம்பிப்போனான். இரண்டாண்டுகள் சேவை செய்தான்! இதற்குள் வேறு ஒரு அழைப்பு இவனைத் தேடிவந்தது. மிலான் கோமகனிடமிருந்து இவனுக்கு அழைப்பு வந்தது. மூப்பதாவது வயதிலே, மிலான் அரண்மனையிலே காலடி எடுத்துவைத்தான் லியனர்டோ!

அந்த நேரம் இத்தாலி அகில இத்தாலியாக இருந்த நேரம். படைகொண்டவன் நாடாண்டான்! இதனால் இதாலி சிதறிப் போயிருந்தது. சிறு சிறுபகுதி—சிறுசிறு மன்னன்-இப்படி நடந்தது ராஜ்யபாரமங்கே! ஆகவே கலையுலகிலேயும் போட்டி! அவனவன் நாட்டை அழகு நாடாக்க விரும்பினான். எனவே கலைவளரும் வாய்ப்பு அங்கே ஏற்பட்டது. அனைவரும் ஆர்வங் கொண்டிருந்தனர். இந்த நேரத்திலேதான் லியனர்டோ மிலான் அரண்மனை நுழைந்தான்.

மிலான் மன்னன் இவனுக்கு வேலை தரு முன்னே இவன் தகுதியைப் பற்றி வினவியிருந்தான். இவனின் திறமை எந்தெந்த ரூபத்தில், எதையெல்லாம் செய்து முடிக்க வல்லதாயிருந்ததெனக் கேட்டான். அதற்குப் பதில் தீட்டிய லியனர்டோ தன் திறமையை—தான் செய்து முடியுமென்று எண்ணிய காரியங்களின் பட்டியல்களை மன்னனுக்குத் தந்திருந்தான். அதிலே அவன் குறிப்பிடுவதைப் பாருங்கள். மென்மையான பாலங்களையும்—திண்மையான பாலங்களையும் கட்டுவேன்—எதிரிகளை வீழ்த்தும் வண்ணம் அவைகளைச் சமைப்பேன். அவர்களை அழிக்கவும் அதிலே சாதனங்கள் உண்டாக்குவேன்.

போரின் போது, மலைகளின் மீதும், பாறைகளின் மீதும் கட்டப்பட்ட பெரும் கோட்டைகளானாலும் அதைத் தகர்த்தெறிய மார்க்கம் உண்டாக்குவேன், பீரங்கிகள் செய்வேன், ஓடும் வண்டியில் அதைப் பொறுத்துவேன் — எதிரிகளின் மேல் கற்களையும் நெருப்பையும் பயங்கரமாக அள்ளி வீசும் சாதனம் காண்பேன்—குறிப்பிட்ட ஓரிடத்திற்கு பூமிக்குள்ளேயே சுரங்கப்பாதை சமைக்க எனக்குத் தெரியும் — அந்த இடத்திலே ஒரு ஆறு ஓடுவதானாலும், பெரிய பள்ளங்களிருப்பதானாலும் சரி: பாகமில்லை.

கவசவண்டிகள் செய்வேன்: அதிலே பீரங்கிகளைப் பொறுத்தி அதைப் பாதுகாப்பாக எதிரிகளின் மத்தியிலேயிருந்து வெற்றியுடன் கொண்டுவரவும் வழி வகை செய்வேன்.

என்று பல்வேறு சாதானங்களைப் பற்றியும், இவைகளை மிலான் மன்னன் நினைத்த இடத்தில் செய்து காட்டவும் தயாராக இருக்கின்றதாகவும் எழுதிபிருந்தான் லியனர்டோ! எனவே லியனர்டோ உடனே வேலைக்கு அமர்த்தப்பட்டான். மிலான் மன்னன் முதலில் அவனை தன் மூதாதையின் சிலையொன்றை அது குதிரையின் மீது பொருந்தப் பட்டிருப்பதைப் போன்று செய்யச் சொன்னன் — லியனர்டோவும் மற்ற பணிகளில் தனி திறமையைக் காட்டிய வண்ணம் இந்தச் சிலையையும் செய்து முடித்தான். இதைத் திருப்திகரமாகச் செய்து முடிக்க அவனுக்கு சரியாகப் பத்து ஆண்டுகள் பிடித்தன.

முதலில் செய்தது அவனுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை—பிறகு செய்தான்: பரிபூரண வெற்றி பெற்றான். அது வரை எவருமே செய்திராத அளவுக்குப் பெருஞ் சிலையை செய்து முடித்து மகத்தான தோர் வெற்றியும் புகழும் பெற்றான் லியனர்டோ! சிலையின் உயரம் 27 அடி என்றால் அதன் அமைப்பு இப்போதிருப்பதை போன்ற சாதனங்களில்லாத சமயத்தில் அதுவும் கி.பி 1493–ல் எப்படி போற்றப் பட்டிருக்கு மென்று எண்ணிப் பாருங்கள்! எனவே மன்னனின் அன்பிற்குப் பாத்திரமானான், லியனர்டோ. அதன் பிறகு பல அருமையான வேலைகளைச் செய்தான் லியனர்டோ. அவனுடைய போற்றக்கூடிய ஓவியப் பணி பல இருந்தாலும் அவன் இதாலிய மடாலயத்தின் போஜன அறையின் சுவர்களிலே தீட்டியிருக்கும் 'கடைசி இராப் போஜனம்' என்ற ஓவியம், ஓவிய உலகத்திலேயே மிக உயர்ந்ததாக மதித்து இன்றும் போற்றப்படுகிறது இந்த அரும் பணியை கி. பி. 1494 துவக்கி சுமார் 4 ஆண்டுகள் வரையில் செய்திருக்கிறான் லியனர்டோ என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் எவ்வளவு கடினமிருக்கும் அந்தப் பணியிலென்று!

இவ்வளவு புகழ் வாய்ந்த ஓவியனை-நல்ல பல்கலை மேதையை—மிலான் நகரம் தொடர்ந்து தன் வயற்றிலே வைத்துக் கொள்ள கொடுத்து வைக்கவில்லை மிலானிலே போர் மூண்டு நேரூந்தது மிலான் வீழ்ந்தது. அவன் வடித்தெடுத்த சிலை தூள் தூளாகியது. போருக்கு முன்னம் அவனே துரதிஷ்ட வசமாக மிலானின் கரையை பிரிந்து போகும் துர்பாக்கிய நிலை ஏற்பட்டது.

எனவே கி. பி. 1499-ல் வெனீஸ் நகர் போனான் லியனர்டோ. அங்கே மேலும் சில கலைகளைக் கற்றுத் தேற ஆசை கொண்டான்—கணிதமும்—கோண வகைகளும், பூதத்துவமும், பௌதீகத் தத்துவமும் கண்டறிய ஆவல் கொண்டான். வெற்றியும் பெற்றான்.

மீண்டும் அரசபீடம் அவனை அழைத்தது. மற்றொரு மன்னனிடட் வேலைக்குச் சென்றான்-அதன் பயனாய் மத்திய இத்தாலியிலே அவன் சுற்றுப் பிரயாணம் செய்தான். 'துறைமுகம் கட்டவும், நீர்ப் பாசன வசதிகள் அமைக்கவும் அவன் பல்வேறு அமைப்பு ஆங்காங்கே மேற்கொண்டு நாட்டின் புனரமைப்பிலே அவன் ஈடுபட்டிருந்தான். நாட்டின் எல்லைப் படமொன்றையும் தீட்டினான். அதன் பிறகுதான் ஓவியக் கலையிலே மற்றொரு பெரும் புகழ் அவனைத் தேடி வந்தது. 'லிஸ்ஸா சிமோட்டி' என்பவளின் ஓவியத்தை மிகச் சிறப்பாகத் தீட்டி புகழ் பெற்றான் லியனர்டோ... இந்த அருமையான வேலைப்பாடுதான் அவனைப் பிற்காலத்தில் பிரெஞ்சு நாட்டின் அரண்மனைக்கே குடிபுகச் செய்தது.

லிஸ்ஸா சிமோட்டியின் படம் அனைவரையும் கவர்ந்தது. பிரெஞ்சு மன்னன் முதலாம் பிரான்ஸிஸ், என்பவளை அது வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அந்தப் படத்தை அவள் விலை கொடுத்தே வாங்கி விட்டாள். அந்த அருமையான படம் இன்றும் பிரெஞ்சு நாட்டின் அரண்மனையிலே வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்ல; அந்தப் படத்தை எழுதிய லியனர்டோவையும் அந்த பிரெஞ்சு மன்னன் தன்னுடனே அழைத்துப் போய் விட்டான்.

அறுபது வயதுக்கு மேலான லியனர்டோவுக்கு பிரெஞ்சு நாட்டின் அரண்மனையிலே ஓய்வும் உல்லாசமும் கிடைத்தது என்றாலும் அவன் சிந்தை மட்டும் செயலற்றே இருக்கவில்லை. மனவளம் நிறைந்த பிரெஞ்சு மன்னனுக்கு ஓர் மாளிகை சமைப்பதிலும், பிரெஞ்சு நாட்டின் இரு பெரும் நதிகளை ஒன்றாக இணைக்கக் கால்வாயொன்றை வெட்டவும், அவன் மும்முரமாக திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான். ஆனால் அந்தப் பணி நிறைவேறவில்லை. அதற்குள் அந்த

ஓவியர்: பாலு சகோதரர்கள்.

இலட்சிய மேதை இறந்து போய் விட்டான்!

எந்த பிரெஞ்சு மன்னனுக்காக மாளிகை காண திட்ட மிட்டானோ, எந்த நாட்டுப் பிரஜைகளின் நலனுக்காக வாய்க்கால் வெட்ட திட்டமிட்டானோ அதே நாட்டில், அந்த மன்னனின் கண்ணிரைத் தன் கலைப் பணிக்குக் காணிக்கையாகப் பெற்று, அவன் அரண்மனையிலேயே, அதுவும் அவனெதிரிலேயே-அவன் அகன்ற மார்பகத்திலே தனது மடியும் உடலைப் பொதித்து வைத்துக் கொண்டு, அவனின் அணைப்பிலேயே உயிரை விட்டு ஓவியர் பரம்பரைக்கே அழியாததோர் களங்கரை விளக்கமாகி விட்டான் லியனர்டோ,

ஓவியம், சிற்பம், பொறியியல் கணிதம், பௌதீகம், சங்கீதம் ஆகிய பல்வேறு துறைகளிலே விற்பன்னராகி செயற்கரிய பல வேறு நூதனங்களைச் செய்து காட்டிய அந்த அதி மேதைக்கு பிரெஞ்சு மன்னன் தலை வணங்கினான்—அவனின் அழியாத ஓவியங்களாம் 'கடைசி இராப் போஜனமும்' 'மோஸ்ஸா சீமாட்டியும்', ஓவியக் கலைக்கே பொலிவு தரும் வான விளக்குகளென்று அந்த மன்னன் கண்ணீர் விட்டான். அகில இத்தாலியும் அழுதது அவன் பிரிவாற்றுமையினால்!... ஆனால் அந்த நல்லறிஞரோ முடி மன்னர்களையும், அவர் களாண்ட பெரு நாட்டையும் துயரத்திலாழ்த்தி விட்டுக் கல்லறையிலே சென்று மீளா நித்திரையிலே ஆழ்ந்து விட்டான்.

அவன் மட்டும் இன்னும் கொஞ்ச நாள் உயிருடனிருந்திருந்தால் அவன் செய்து வைத்திருந்த 'மாதிரி' ஏரோப்பிளேன் மக்களுக்குப் பயன் படும் வானவூர்தியாகி வீருக்கும்! இன்று வானவூர்தி கண்டு பிடித்ததாக போற்றப்படும் 'ரைட் சகோதரர்களுக்கு' அந்தப் பெரும் சிரமமுமில்லாமல், 16-வது நூற்றாண்டின் துவக்கத்திலேயே லியனர்டோவின் விமானம் பறந்திருக்கும். அந்த அதிமேதை தனது திறமையை பல்வேறு துறைகளிலே ஏக காலத்திலே செலுத்தியதால் அவன் நல்ல ஓய்வும் வசதியும் பெற முடியாமற் போய் விட்டது மிகவும் துரதிஷ்டம்தான்!

கி. பி. 1519-ம் ஆண்டு அந்தப் பல்கலை மேதை தனது மீளாத நித்திரையில் ஆழ்ந்து விட்டான். ஆனால் அவன் புகழோ இன்றும் குன்றாத இளமையாய் நம் மிடையே பவனி வருகிறது.

வாழ்க லியனர்டோவின் புகழ்!

வளர்க ஓவியக் கலை !!

*

தந்தி : சாவரன் போன் : 7

கியாரண்டியுள்ள
வெள்ளிப் பாத்திரங்கள், பவுன் தங்க நகைகளுக்கும், அசல் ரெங்கோன் கமலங்கள் பதித்த அழகிய ஆபரணங்களுக்கும்
சிறந்த இடம்

தங்க மாளிகை

மோதி ஸ்ரீராமுலு செட்டி & சன்ஸ்,

பேரியகடைவீதி, திருச்சிராப்பள்ளி.

N.B.—ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் நகைகள் செய்து கொடுக்கப்படும்.

மெத்தை தலையணைகள் மற்றும் அன்றாட உபயோகத்திற்கான பனியன், குடை, முதலியவைகளுக்கு ஒரு முறை வருகை தாருங்கள்

அ. வெ. குமரசாமி சன்ஸ்,

(A. V. K. SONS)

58, பெரிய கடை வீதி, திருச்சி.

எங்கள் வாடிக்கைகாரர்களுக்கும் நண்பர்களுக்கும் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்,



பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

எமது வணிகர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மங்களகரமான

பொங்கல் வாழ்த்து

வெண் சங்கு சீயக்காய் தூள்

குணத்திலும், மணத்திலும் சிறந்தது

செல்வம் ராணி ஊதுபத்திகள் மணத்தில் சிறந்தது

தயாரிப்பவர்; வெண் சங்கு சீயக்காய் தூள் பாக்டரி,

செல்வம் பரிமளச்சாலை, 3037-38 டபிர்குளம் ரோடு, தஞ்சாவூர்.



ஆபரணங்களுக்கு அழகு அளித்து

மதிப்புத் தருவது



மெஜஸ்டிக் வைரங்கள்

வைரம் போல் ஜொலிக்கும் தன்மையுடையது

Prop: A. பாபு சாகிப், தயாரிப்பாளர்;

பாக்டரி: 1. மதுரை ரோடு, திருச்சி. "மெஜஸ்டிக் டைமண்ட் ஓர்க்ஸ்"

,, 2. புது ஊரோடு திருச்சி. பெரிய கடை வீதி, திருச்சிராப்பள்ளி. S. India

---

The Asiatic Government Security Life & General Assurance Company Limited.

Regd. Office: "PRITHVI BUILDINGS," Kempegowda Road, BANGALORE CITY.

Paid-up Capital.....Rs. 10 Lakhs

Total Assets Exceed ....."..Rs. 103 Lakhs

Transacts

LIFE, FIRE, MARINE, MOTOR

and

ALL OTHER CLASSES OF INSURANCE BUSINESS

Central Office:

"PRITHVI BUILDINGS"

364-366 Netaji Road. MADRAS-1.

ASIATIC AFFORDS ABSOLUTE ASSURANCE

35606

சலவைக்கு சிறந்தது



தயாரிப்பவர்

நம் நாடு சோப் ஒர்க்ஸ். லால்குடி

மினரல் ஆர்ட்ஸ், லால்குடி.

அன்பர்களுக்கு வாழ்த்துக்கள்!

உயர்தரப் போட்டோக்களுக்கு

ராஜா போட்டோ

★— ஸ்டூடியோ —★

★

(ராஜா டாக்கீஸ் கீழ்புரம்)

கும்பகோணம்

★

நேயர்களுக்கு

எங்கள் பொங்கல்

வாழ்த்துக்கள்

★

புரு மார்க் வைரங்கள்



பெரியமஜார் திருச்சி

வாடிக்கைக்காரர்களுக்கு நம் பொங்கள் வாழ்த்துகள்!

தி சீனியர் ஆட்டோ டீசல் ஸ்டோர்



எஃகு வேலைப்பாடுகள் உட்பட, "டீசல் கன்வர்ஷன் கிட்டுகள்" உற்பத்தி செய்யப்படும்.

மற்றும் எல்லா விதமான "பவுன்டரி" வேலைகளும் ஏற்று உடனடியாகக் கவனிக்கப்படும்.


அணுகுக: முகவரி மாற்றம்

2-6 வாலர் ரோடு,

மவுண்ட்ரோடு, சென்னை-2

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம்.
4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6.

தயாராகிறது; தமிழ் விருந்து!



மொழிகள் குல முதல்வியாம்
தமிழன்னைக்குச் சூட்டும் முத்தாரம்!



புலி-வில்-கயல்
கொடி கண்டோர் புகழ் பொறித்திடும் சிலப்பதிகாரம்!

பூம்புகார்

மு.கருணாநிதி ~ சிவாஜி கணேசன் ~ கிருஷ்ணன் பஞ்சு
இந்த மூவருடன்




ஏ.வி.எம் தரும்

எழிலோவியம்

AVM
புரொடக்ஷன்ஸ்

G.H.RAO

திரைவானில் ஒரு தீபச்சுடர்–
தெவிட்டாத கலைவிருந்து!

கமால் பிரதர்ஸ் லிமிடெட் அளிக்கும்

கருணாநிதியின்

புதையல்

முரசொலியில் பல்லாயிரவர் படித்து மகிழ்ந்த தொடர்கதை

டைரக்ஷன்
கிருஷ்ணன் பஞ்சு

இசையமைப்பு
விசுவநாதன் ராமமூர்த்தி

கமால் பிரதர்ஸ் லிமிடெட் - 92, சர் தியாகராய ரோடு, சென்னை-17

KAMAL BROTHERS

Wrapper Printed at Shanti Press, Madras-1